ரோக நிதானம்

DIGITIZED

N08

12-0126

A. M. D. G.

# ஞானசீவியம்.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS.

DIGITIZED

Nihil obstat: L. BESSE, s.j., cens. dep.

Imprimatur:

+ JOANNES-MARIA, s.j.,

*Ep. Trichinopolit.*

# ஞானசீவியம்.

"பிரதான மந்திரங்களின் வியாக்கியானங்கள்" என்னும் புஸ்தகத்திலே, நாம் இரட்சணியம் அடைவதற்கு விசுவசிக்கவேண்டிய சத்தியங்களையும், அநுசரிக்கவேண்டிய தேவகட்டளைகளையும், விவரித்திருக்கிறோம். மோக்ஷத்தில் சேரத்தக்கதாக, நம்முடைய ஆத்துமத்திலிருக்கவேண்டிய இஷ்டப்பிரசாதமாகிய ஞானசீவியத்தைப்பற்றி சில விசேஷங்கள் இப்போது வெளிப்படுத்துவோம்.

முதல் முதலாவது, பாவம் ஒன்று மாத்திரம் ஞானசீவியத்துக்கு விக்கினமாகுமென்றும், இந்த மேலான சீவியத்தை அளிப்பதற்கும் அதிகரிப்பிக்கிறதற்கும் சேசுநாதர் சுவாமி தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தியிருக்கிறாரென்றும் விளக்கிக்காட்டக்கடவோம்.

## முதல் பிரிவு.

## பாவத்தின் பேரில்.

தேவகட்டளைகளை மீறுகிறதே பாவமென்னப்படும். அது ஜென்மப் பாவம், கர்மப் பாவம், ஆக இருவகையாகும்.

1. ஜென்மப்பாவமாகிறதென்ன?

ஆதித்தகப்பன் தேவ கட்டளையை மீறினதினாலே அவருடைய சந்ததியாரான சகல மனிதர்களுக்கும் ஜென்மத்தின் வழியாய் உண்டாகும் தோஷமே ஜென்மப்பாவம்.

தேவமாதா மாத்திரம் இத்தோஷமின்றி உற்பவிக்கும் வரம் அடைந்தாள்.

(“பிரதான மந்திரங்களின் வியாக்கியானங்கள்” என்னும் புஸ்தகத்தைக் காண்க.)

1. ஜென்மப்பாவத்தின் பேரிலுள்ள விசுவாசப் போதனைகள் என்ன?

ஜென்மப்பாவத்தினால் சகல மனுஷரும் ஆதித்தகப்பனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சுபாவத்துக்கு மேலான வரங்களை இழந்து போனார்களென்றும், அவருடைய பாவ தோஷத்துடன் உற்பவிக்கிறார்களென்றும், விசுவசிக்கவேண்டியது. இது வேத சத்தியமாம்.

(க) அர்ச். சின்னப்பர் சொல்லுவதாவது: “ஒரே மனிதனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும், இவ்வுலகத்தில் எப்படி பிரவேசித்ததோ, அப்படியே அந்த ஒரு மனிதனாலே சகலரும் பாவிகளானபடியினாலே, சாவும் சகல மனிதருக்குள்ளும் பாய்ந்தது.... ஆகையால் ஒருவனுடைய குற்றத்தினாலே சகல மனிதர் பேரிலும்



ஆக்கினைத் தீர்ப்பு உண்டானதுபோல, ஒருவருடைய நீதியினாலே சகல மனிதருக்கும் உயிர் தரும் நீதி உண்டாகின்றது.” (உரோ. V. 12. 18.)

(உ) திரிதேந்தீன் பொதுச்சங்கம் தெளிவாய் வெளிப்படுத்தும் திருச்சபையின் பாரம்பரைப் போதகமும் இதுவே.

ஜென்மப் பாவம் “சகலருடைய ஆத்துமத்தையும் மாசுப்படுத்துகிறது என்றும், ஜென்மத்தின் மூலமாய் சகலரையும் தொடர்ந்து வருகிற ஆதாமின் பாவம் ஒவ்வொருவனுடைய சொந்தப் பாவமாயிருக்கிறது” என்றும், திருச்சங்கம் போதிக்கிறது.

(ங) ஜென்மப்பாவத்தோடிருக்கும் ஒவ்வொருவனுடைய ஆத்துமத்திலும் ஓர் மெய்யான பாவம் உண்டு. ஏனெனில் சகலரும் சாபத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஆனால் மெய்யான பாவ தோஷம் ஒருவனுக்கில்லாவிட்டால், அவன் சாபத்துக்கு உட்பட்டிருப்பதெப்படி?

மேலும் சேசுநாதர் சுவாமி நமக்காக அடைந்தருளிய நீதியானது ஒவ்வொருவருக்குள்ளும் இருப்பதுபோல, இந்த பாவத்தின் தோஷமும் ஒவ்வொரு மனிதனுடைய ஆத்துமத்துக்குள் மெய்யாகவே இருக்கிறது. அந்த நீதியானது

சகல மனிதருக்கும் வெளியரங்கமாய்ச் சாட்டப்படுகிறதென்று சொல்லுவது ஒவ்வாது. ஒவ்வொருவனுடைய ஆத்துமத்தினுள்ளிருந்து, அதை அலங்கரிக்கிறது. இதுபோலவே ஜென்மப்பாவமும் சகல மனிதருக்கும் வெளியரங்கமாய்ச் சாட்டப்படுகிறதென்று சொல்லாமல், ஒவ்வொருவனுடைய ஆத்துமத்திற்குள்ளிருந்து, அதை மாசுப்படுத்துகிறதென்று சொல்லவேண்டியது. ஆதித்தகப்பனிடத்தில் மனுஷ சுபாவமெல்லாம் பழுதுபட்டதினால், ஒவ்வொரு மனுஷனும் இந்தக் கேட்டுக்குள்ளாகிறான்.

2. ஜென்மப்பாவம் எப்பேர்ப்பட்டதென்று நாம் கண்டுபிடிக்கக்கூடுமோ?

ஜென்மப் பாவத்தின் தன்மையைச் சார்ந்த விஷயங்கள் நமது புத்திக்கெட்டாத ஓர் பரம இரகசியமாகும். இந்த பாவம் எப்படிப் பரம்புகிறதென்றும், சர்வேசுரன் நியமித்திருந்த சுபாவத்துக்கு மேலான ஒழுங்கை ஆதித்தகப்பனுடைய பாவத்தினிமித்தம் அழித்துப்போடுவதற்குள்ள முகாந்தரமென்னவென்றும் கண்டுபிடிப்பது மனுஷனால் கூடாத காரியம். ஆயினும் சத்தியம் தவறாத திருச்சபையானது இதை நமக்குப் போதிப்பதால், இந்தப் பாவம் உண்டென்று உறுதியான மனதுடன் விசுவசிக்



கிறதுமன்றி, சர்வேசுரன் அளவற்ற நீதிபரனாயிருப்பதால் இதுவிஷயத்தில் அவர் மனிதருக்கு யாதொரு அநியாயமும் செய்யவில்லையென்று மனோகிடாரிக்கத்துடன் ஒத்துக்கொள்ளுகின்றோம்.

3. ஆதித்தகப்பனின் பாவத்துக்கும், நம்மைக் கறைப்படுத்துகிற ஜென்மப் பாவத்துக்குமுள்ள வித்தியாசமென்ன?

ஆதித்தகப்பன் அந்தப்பாவத்தை மனம்பொருந்திக் கட்டிக்கொண்டதால், அது அவருக்குக் கர்மப்பாவம். நாமோவெனில் அப்பாவத்தை மனம்பொருந்திக் கட்டிக்கொள்ளாததால், அது நமக்குக் கர்மப் பாவமாகாது. ஆனால் எப்படி நஞ்சுள்ள ஊற்றிலிருந்து நஞ்சுள்ள நதி உற்பத்தியாகிறதோ, அப்படியே ஜென்மப்பாவமும் ஆதாமிடத்தினின்று புறப்பட்டு, அவருடைய சந்ததியாராகிய நம்மெல்லோரையும் கறைப்படுத்துகிறது.

(க) நம்முடைய மனசின்றி எப்படி நமக்குப் பாவ தோஷம் உண்டாகக்கூடும்? நமது மனசின்றி ஓர் கர்மப்பாவத்தின் தோஷம் நமக்கு வரமுடியாது என்பது மெய்யே. ஆனால் ஓர் பாவமான அல்லது இழிவான அந்தஸ்து நாம் அறியாமலே, நமக்கு உண்டாகக்கூடும். நமக்குப்

பொறுப்பாளியும் நமது தலைவனுமாயிருக்கிற ஒருவனுடைய மனதில் நமது மனதும் சாதாரண உத்தேசப்படி ஓர் விதமாய் அடங்கியிருந்தால், அவனுக்கு உண்டாகிற அவமானமும் நஷ்டமும், நம்மையும் சாரும்.

(உ) அப்படியே தகப்பனுடைய தோஷம் பிள்ளைகளுக்கும் வருகிறதை இப்பூவுலகில் நாள்தோறும் பார்த்து வருகிறோம். தகப்பனின் கெட்ட வாடிக்கைகள், பொல்லாத வியாதி, தரித்திரம், நஷ்டம் முதலியவைகள் குற்றமில்லாத பிள்ளைகளையும் நிர்ப்பாக்கியவான்களாக்கும். ஓர் குடும்பத்தின் தலைவன் மகா அவமான பாதகம் செய்து இராஜ துரோகங்கட்டிக்கொண்டால், அவனுடைய சொத்துக்களையெல்லாம் இராஜன் எடுத்துக்கொண்டு அவனைக்கொன்றுபோடவே, குற்றமற்ற அவனுடைய பிள்ளைகள் சொத்துக்களை நஷ்டம் அடைவதுமல்லாமல், தங்கள் தகப்பனுக்கு வந்த நிந்தை அவமானங்களுக்கும் துன்பங்களுக்கும் பங்காளிகளாகிறார்கள். இந்த இரண்டு காரியங்களிலும் பிள்ளைகள் தங்கள் நிர்ப்பாக்கிய ஸ்திதியைப்பற்றிப் புலம்பினாலும், தகப்பனின் நிர்ப்பாக்கியம் தங்களுக்கும் வந்தது அநீதியென்று சொல்லமாட்டார்கள்.



(௩) சர்வ அதிகாரமுள்ள இராஜனானவன் தீர்மானிக்கிறதுக்கெல்லாம் பிரஜைகளும் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இராஜாவின் சித்தம் பிரஜைகளின் சித்தம். அவன் சண்டை செய்யக்கோரினால், பிரஜைகளும் அவனோடு அதைக் கோரினாப்போலாகிறது. அவன் யுத்தத்தில் தோல்வையடைந்தால், அவனுடைய பிரஜைகளும் அவமான கேட்டுக்கும் அடிமைத்தனத்துக்கும் உள்ளாகிறது அநியாயம் என்று சொல்பவர்களில்லை. பிரஜைகளுக்கும் அவர்களின் தலைவனாகிற இராஜாவுக்கும் இருக்கிற சம்பந்தத்தினிமித்தம், அவர்களும் சண்டையின் இலாப நஷ்டத்துக்கு உள்ளாகுவது கிரமமே. ஆனதால் ஜெயம் அடைந்தோர்கள் தோற்றுப் போனவர்களைத் தண்டித்தால், இதில் அநீதியாதொன்றுமில்லை.

(௪) இப்பேர்ப்பட்ட ஒருமைப்பாடுகளெல்லாம் ஆதித் தகப்பனுக்கும் அவர் சந்ததியாருக்கும் இருக்க வேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருந்தார். ஆதாமுடைய பிரமாணிக்கத்தால் சுபாவத்துக்கு மேலான அந்தஸ்து சகல மனிதருக்கும் வரவேண்டியதாயிருந்தது.

அவர் பிரமாணிக்கமாயிருந்திருந்தால், அவருடைய சந்ததியாரெல்லோரும் தேவ இஷ்டப்

பிரசாதத்தோடு பிறந்து, அவருக்கு அளிக்கப்
பட்ட சகல மேலான வரங்களுக்கும் பங்கா
ளிகளாயிருந்திருப்பார்கள். தாங்களே யாதொ
ரு கர்மப்பாவங் கட்டிக்கொள்ளாவிட்டால்,
மோக்ஷத்தை இழந்திருக்கமாட்டார்கள். இந்
தக் கர்மப்பாவங்களும் அவைகளைக் கட்டிக்
கொண்டவர்களைச் சார்ந்திருக்குமேயொழிய,
அவர்களுடைய பிள்ளைகளைச் சார்ந்திராது.
ஆனால் ஆதாம் மனுக்குல முழுவதுக்கும் தலை
மையானபடியால், அவர் சர்வேசுரன் கொடு
த்த விசேஷகட்டளையை மீறி நடந்தது சகல
மனிதருக்கும் சேதமாய் முடிந்தது. தயாளமு
ள்ள சர்வேசுரன் இலவசமாய்க் கொடுத்த மே
லான வரங்கள் நமது சுபாவத்துக்கு அவசர
மில்லாததால், ஆதாமின் பாவத்துக்குத் தண்ட
னையாக இந்த மேலான வரங்களை எடுத்துக்
கொண்டு, நமது சுபாவத்துக்குரியவைகளை எப்
போதும்போல் விட்டுவிட்டதில் எள்ளளவேனு
ம் அநியாயமென்பதில்லை.

(௭) ஆதாமின் பாவத்தினால், நாம் மேலான
வரங்களை இழந்துபோனதுமல்லாமல், தாய் வயி
ற்றிலே உற்பவிக்கும்போதே, பாவத்தோடு உற்
பவித்து, சர்வேசுரனுக்கு அருவருப்பை உண்டாக்கு



கிறோம்:—முந்த முந்த சர்வேசுரன் நம்மைத் தம
து மகா அருமைப்புத்திரர்களாகவும், மோக்ஷத்
துக்குச் சுதந்தரவாளிகளாகவும் தெரிந்துகொண்
டார். ஆனால் நமது ஆதித்தகப்பனைக் கோ
பித்துத் தள்ளினபோதே, அவருடைய சந்த
தியாராகிய நம்மையும் கோபித்துத் தள்ளி
விட்டார். ஆதலால் அர்ச். சின்னப்பர் சொல்
லுமாப்போலே, " நாம் கோபாக்கினைக்குப் பா
த்திரமான பிள்ளைகளாய்ப் பிறக்கிறோம்." இஷ்
டப்பிரசாதத்தை இழந்து, சர்வேசுரனுடைய
கண்முன்பாக, மரித்த பிரேதங்கள்போல, பாவ
த்தோடு ஜென்மிக்கிறோம். ஆதாமுக்குக் கொ
டுக்கப்பட்ட இஷ்டப்பிரசாதமும் மேலான சீவி
யமும் அவருக்காக மாத்திரமல்ல, நமக்காகவு
மே அளிக்கப்பட்டன. ஆதலால் ஆதித்தகப்
பனிமித்தம் அந்த மேலான சீவியத்தை எடு
த்துக்கொண்டதில், அநந்த நீதியுள்ள சர்வேசு
ரன் நமக்கு யாதேனும் அநியாயம் செய்யவில்
லையென்று கண்கூடாகப் புலப்படுகின்றது.

(௮) ஆதித்தகப்பனுக்கு இடப்பட்ட சாபத்
துக்கு நாமும் எப்படிப் பங்காளிகளாயிருக்கிறோம்
என்று அறியும்பொருட்டு, சர்வேசுரன் எப்படி
ஜென்மப்பாவத்தை மன்னித்துக்கொள்ளுகிறா
ரென்றும் ஆராய்ந்து பார்க்கக்கடவோம்.

ஜென்மப்பாவத்துக்குரிய தண்டனையும் பொறுத்தலும் வேறே, கர்மப்பாவத்துக்குரிய தண்டனையும் பொறுத்தலும் வேறே. நாம் மனம் பொருந்தி சர்வேசுரனுடைய கட்டளையை மீறினால், பொறுத்தல் அடையும்படி மனஸ்தாபப்படுவது அவசியம். ஜென்மப்பாவத்தினால் நமது மனது சர்வேசுரனை விட்டு அகன்றுபோகிறதில்லை. அதினாலே மனஸ்தாபப்படுகிறதும் தேவை இல்லை. அப்படியே புத்திவிபரம் அறியாத சிறு குழந்தைகளுக்கு ஜென்மப்பாவதோஷமிருந்ததுபோலவே, அவைகளுக்குத் தெரியாமல் ஞானஸ்நானத்தின் வழியாய்ப் பொறுக்கப்படுகிறது. புத்தி விபரம் அறிந்தவன் யாதொரு கர்மப்பாவமும் இல்லாதிருப்பானாகில், ஞானஸ்நானம் பெறும்போது, அவனுக்கு மனஸ்தாபம் அவசரமில்லை; விசுவாசமே போதும்.

(எ) நாம் யாதொன்றும் செய்யாமலே, சேசுநாதர் சுவாமி நம்மை மீட்டிரட்சித்திருக்கிறார். இதிப்படியிருக்க, ஆதித்தகப்பனின் பாவம் நமக்குக் கேடாய் வந்ததைப்பற்றி ஆச்சரியப்படுவானேன்? அளவில்லாத இரக்கம் நிறைந்த சர்வேசுரன் தமது சொந்த குமாரனையே மனுக்குலத்தின் தலைவராக நியமிக்கச் சித்தமானார். ஆதாமின் பாவத்தால் நாம் சாவுக்குப் பாத்திர



மானதுபோல, நமது ஆண்டவரின் அளவில்லாத பேறுபலன்களினிமித்தம், மேலான சீவியத்தைத் திரும்பவும் அடைந்துகொள்ளுகிறோம். ஜென்மப்பாவம் பொறுக்கப்படுவதற்கும், சிறு குழந்தைகள் யாதொரு முயற்சியும் செய்யாமலே ஞானஸ்நானத்தின் வழியாய் இஷ்டப்பிரசாதத்தை அடைந்துகொள்ளுவதற்கும், சேசுநாதர்சுவாமியின் பேறுபலன்களே காரணமாகும்.

4. ஜென்மப்பாவமும் அதினால் வந்த பொல்லாப்புகளும் இரண்டும் ஒன்றுதானென எண்ணலாகாது. ஞானஸ்நானமானது ஜென்மப்பாவ தோஷத்தைத் தீர்த்துப்போடுகிறதினாலே, அந்தப் பாவம் முழுதும் நம்மை விட்டு நீங்கிப்போகிறது. ஆயினும் துர் ஆசாபாசங்கள் ஞானஸ்நானத்துக்குப் பின்னும் நம்முடைய சுபாவத்திலிருக்கின்றன. ஆகையால், ஜென்மப்பாவமானது துர் ஆசாபாசத்தில்தான் அடங்கியிருக்கிறது என்று பிதற்றின பதிதர் மோசம் போனார்கள் என்று தெளிவாய்த் துலங்குகிறது. இந்தப் பிரகாரமே ஜென்மப்பாவமானது சாவிலாகிலும், நமது இலௌகீக துன்பங்களிலாகிலும் அடங்கியிருக்கிறதில்லை என்பதும் பரிஷ்காரமே. ஏனெனில் ஞானஸ்நானத்தினாலே இவை

கள் நம்மைவிட்டு நீங்கிப்போகிறதில்லை. சர்வேசுரன் மேலான [illegible] வரங்களையும் உரிமைகளையும் நமக்கு அளிக்கும்போது, நம்மைத் துர் ஆசாபாசங்களினின்றும் சாவினின்றும் மீட்கிறதில்லை. இந்த இரண்டு வரங்களும் நமது மனுஷசுபாவத்துக்கும் நமது ஆத்தும இரட்சணியத்துக்கும் தேவையில்லை.

ஜென்மப்பாவத்தினிமித்தம் நமது சுபாவத்துக்குரிய தத்துவங்கள் அழிந்துபோகவுமில்லை, அவைகளின் வல்லமை குறைந்துபோகவுமில்லை. நமது புத்தியினால் சர்வேசுரனை அறியவும், மனதினால் அவரை நேசிக்கவும் கூடுமாயிருக்கிறோம். ஆயினும் சர்வேசுரன் மனிதனுக்காக முதல் முதல் நியமித்திருந்த உன்னத அந்தஸ்தைச் சீர்தூக்கிப் பார்த்தோமாயின், நமது தத்துவங்களின் வல்லமை ஒருவாறு குறைந்துபோனதென்று சொல்லவேண்டியிருக்கும். ஏனென்றால் அவர் எண்ணத்தின்பிரகாரம், நமது தத்துவங்கள் உன்னத மேலான வரங்களைக் கொண்டு விசேஷ பலன் அடையவேண்டியிருந்தது. துர் ஆசாபாசங்கள் சத்தியத்தை மறைத்துத் தின்மையை நன்மைபோல் மயக்கிக்காட்டுகிறது. ஜென்மப்பாவத்தினாலுண்டான கேடானபடியால், இந்தப் பாவத்தினாலே நமது புத்தி



யின்தெளிவு குறைந்துபோனதென்று சொல்லத்தகும்.

மனதும் பற்பல தப்பறைகளினால் இழுக்கப்பட, மேலாங்கிஷத்துக்கும் கீழாங்கிஷத்துக்கும் இராப்போர் உண்டாகிறது. துர் ஆசாபாசங்கள் மனிதனை இகலோக நிச்ச நிலையில்லாத சந்தோஷங்களைத் தேடும்படி தூண்டுவதினால், மனச்சுவாதீனமும் ஒருவாறு கெடுக்கப்படுகின்றது. இந்தத் துர்க்குண நஷ்டங்களையெல்லாம் வென்று, ஜென்மப்பாவத்தினால் நாம் இழந்துபோன சுபாவத்துக்கு மேலான ஒழுங்கை முதல் விசை அடையவும், பாவத்தினால் அதை இழந்திருந்தால் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் ஒவ்வொரு க்ஷணமும் சர்வேசுரன் நமக்கு மகாபலமான வரப்பிரசாதங்களை அளித்து வருகிறார்.

II. கர்மப்பாவமாகிறதேன்ன?

புத்தி விபரம் அறிந்த பிற்பாடு, அவனவன் மனது பொருந்திச் செய்கிற பாவம், கர்மப்பாவம் என்னப்படும்:—"கர்மம்" என்றால் கிரியை அல்லது செய்கையென்று அர்த்தம். ஆகையினால், ஜென்மப்பாவம் ஆதித்தகப்பனுடைய குற்றத்தினாலும், கர்மப்பாவம் நமது சொந்தக் குற்றத்தினாலும் வருகிறது.

சாவான பாவம், அற்பப்பாவம், ஆக இரண்டு வகைக் கர்மப்பாவமுண்டு.

### 1. சாவான பாவமாகிறதென்ன?

கனமான காரியத்தில், முழு அறிவோடும், கவனத்தோடும், சம்மதத்தோடும், தேவ கட்டளையை மீறினால், சாவான பாவமாகிறது.

(க) இந்தப் பாவம் ஆத்துமத்துக்கு ஞானச்சாவு வருவிக்கிறதினால், சாவானபாவமென்று சொல்லப்படும். ஆத்துமத்துக்குச் சுபாவ உயிரும், சுபாவத்திற்கு மேலான உயிரும், ஆகிய இரண்டு வகை உயிருண்டு. சர்வேசுரன் ஆத்துமத்தை அழியாத வஸ்துவாய் உண்டாக்கினதினாலே, அது ஒருபோதும் தன் சுபாவமான உயிரை இழந்து சாகமாட்டாது. சாவான பாவத்தால் இந்தச் சுபாவமான உயிர் அழிகிறதில்லை.

(உ) சாவான பாவத்தினால் வருகிற பொல்லாப்பென்ன? ஆத்துமத்திலேயுள்ள சுபாவத்துக்கு மேலான உயிராகிய இஷ்டப்பிரசாதமும், முன் செய்த புண்ணியங்களினால் அடைந்த பேறுபலன்களும், சாவான பாவத்தால் அழிந்து போகிறது. ஆகையால் இந்தப் பாவத்தோடிருக்கிற ஆத்துமம் மோட்ச சம்பாவனைக்குரிய யாதொரு



மேலான புண்ணியக்கிரியையும் செய்ய ஏதுவில்லாமல், செத்தாற்போலாகி, நரகத்திற்குப் பாத்திரமாகிறது.

(ங) சாவானபாவம் எவ்வளவோ அக்கிரமமும் அவலட்சணமுமான தோஷம்!

யாதொரு குற்றத்தின் கனத்தைச் சரிவரக் கண்டுபிடிக்கும்படி, குற்றம் செய்தவன் எவ்வளவு நீச அந்தஸ்திலுள்ளவனென்றும், அவமானப்பட்டவன் எவ்வளவு மேலான அந்தஸ்திலுள்ளவனென்றும், கவனித்துப் பார்க்கவேண்டும். ஒரு பிச்சைக்காரன் தன்னைப்போலொத்த வேறொரு பிச்சைக்காரனையாவது, இராஜாவையாவது அடித்து நிந்தித்தால், ஆளுக்குத் தக்காப்போல் குற்றமும் அதிகக் கனமானதாகுமல்லவோ? மனுஷன் பாவங்கட்டிக்கொள்ளும்போது, அளவில்லாத சகல நன்மைத்தனமும் நிறைந்த சர்வேசுரனுக்குத் தானே அவமானம் வருவிக்கிறதினாலே, பாவமும் அளவில்லாத அக்கிரமம் பொருந்திய பாதகமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். தேவமாதாவும் சகல சம்மனசுக்கள் அர்ச்சியசிஷ்டவர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து பிரயாசப்பட்டபோதிலும், ஓரே ஒரு பாவத்தை முதலாய்ப் பரிகரிக்க முடியாது. மனுஷ சுபாவத்தை எடுத்த சுதனாகிய சர்வே

சூரன் ஒருவரோ பாவத்துக்குத் தக்க பரிகாரம் செய்யக்கூடியவர்.

சாவான பாவத்தின் அக்கிரமமும் அவலட்சணமும் எதில் அடங்கியிருக்கிறதென்றால், மனுஷன் தனது ஏக க[illegible]ரிய சகல இலட்சண நன்மைக்கும் நிறைந்த சர்வே[illegible]ரனைப் புறக்கணித்துத் தள்ளி, மட்டும் குறைவுமுள்ள சிருஷ்டிகளைத் தனது கதியாகத் தெரிந்துகொள்வதில் அடங்கியிருக்கிறது.

(௪) கிரியையினாலே மாத்திரமல்ல, நினைவினாலும் ஆசையினாலும், வாக்கினாலும், தன் கடமைகளை அநுசரியாததினாலும், சாவானபாவங் கட்டிக்கொள்ளக்கூடுமென்று நன்றாய்க் கவனிக்கக்கடவோம். அசுசியான நினைவுக்கும் ஆசைகளுக்கும் மனம் பொருந்தி இடங்கொடுக்கும்போதெல்லாம், சாவானபாவமாகும். யாதொரு தகப்பன் தன் மகன் கெட்டுப்போகிறதை அறிந்திருந்தும், தன்னால் கூடியமட்டும் அவனுடைய நடக்கையைச் சீர்திருத்தப் பிரயாசப்படாவிட்டால், தகப்பனும் சாவானபாவம் கட்டிக்கொள்ளுவான்.

2. சா[illegible] பாவத்துக்கு வேண்டியதென்ன?

சாவான பாவத்துக்கு மூன்று காரியங்கள் அவசரம்.—பாவத்துக்குரிய காரியம் கனமான



காரியமாயிருக்கவேண்டியது.—புத்தியானது அந்தக் காரியம் விலக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்து அதைக் கவனிக்கவேண்டியது.—மனது அதற்கு முழுதும் சம்மதிக்கவேண்டியது.

பாவிநாசீ[illegible]னமாயிருப்பதைப்பற்றி.

[illegible]பாவமாகிறதற்கு நாம் மீறுகிற கற்பனையானது தன்னிலேயென்கிலும், அதைச் சேர்ந்த விசேஷ முகாந்தரத்திலேயென்கிலும் கனமானதாயிருக்கவேண்டும். தேவ இலட்சணங்களுக்கு நிந்தையான தூஷணம், தேவயாராதனை முதலியவைகளும்; மனுஷ சுபாவத்துக்கு ஒவ்வாத மோகம், தற்கொலை முதலியவைகளும்; பூசைகாணுதல், ஒருசந்தி அநுசரித்தல், வருஷத்துக்கு ஒரு தடவையாகிலும் பாவசங்கீர்த்தனம் செய்தல், இது முதலிய முக்கியமான கட்டளைகளை மீறுவதும், புறத்தியார் ஆத்துமசரீரத்துக்குப் பெரிய மோசம் வருவிப்பதும், கனமான காரியமாகும். ஒ[illegible]றுவிலே எது சாவானபாவமென்று அறிவதற்கு, வேதசாஸ்திரிகளின் படிப்பினையையும், பத்தியுள்ள விசுவாசிகளினுடைய அபிப்பிராயத்தையும் கவனிக்கவேண்டியது.

(௧) பொய்யாணை, மோகம், தேவதூஷணம், முதலியவைகளில் அற்பக்காரியமென்

பது இல்லாததினாலே, இந்தப் பாவங்களைப் போதும் சாவான பாவமாகும். சில காரியங்கள் பற்பல சமயத்துக்கும், காலத்துக்கும், [illegible] தியுள்ள ஜனங்களின் பொது அபிப்பிராயத்துக்கும் [illegible] சாவான பாவ[illegible] அற்ப பாவமாயிருக்கலாம். நூறு ரூபாய் களவாடு கிறது எந்தத் தேசத்திலும் சாவான பாவமாகிறதற்குப்போதும்; கால் ரூபாய் திருடுகிறது அற்பப்பாவம். சில தேசங்களில் அவ்வளவு செல்வாக்கில்லாததினாலே, அங்கே ஐந்து ரூபாய் களவு செய்கிறது சாவானபாவத்துக்குப் போதுமாயிருக்கும். வேறு தேசங்களில் பத்து, இருபது ரூபாய் சாவான பாவத்துக்கு அவசரமான தொகையாகும்.

(உ) பாவத்தின் விசேஷங்களையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது:—

அரை ரூபாய் திருடுகிறது தன்னிலே அற்பப்பாவமானாலும், ஒருவன் தன் குடும்ப சம்ரட்சணைக்கு அரை ரூபாய் மாத்திரம் வைத்திருந்தால், இதைத் திருடிவிடுவதினாலே, அவனும் அவனுடைய பிள்ளைகளும் மிகவும் கஷ்டப்படவேண்டியிருப்பதினிமித்தம், அந்த அரை ரூபாய் திருடுகிறது சாவான பாவமாகும்:— இப்படியே ஒரு மனுஷனைக் கண்டிருந்தும், அவ



னைக்காணவில்லை என்கிறது தன்னிலே அற்பப் பாவமாயினும், இந்தப் பொய்யினாலே மற்றொருவனுக்குப் பெருங்கேடு விளைவித்தால், இந்த விசேஷ முகாந்தரத்தைப்பற்றி இந்தப்பொய் கனமான பாவமாகும்.

[illegible]கேதுவிசை: பாதொன்று சாவான பாவமோ அற்பப் பாவமோ என்று தீர்மானிப்பது வெகு வருத்தமாயிருப்பதினால், பாவசங்கீர்த்தனம் செய்யும்போது, குருவானவரிடம் தன் மனதுக்குள் இருப்பதெல்லாம் தெரிந்தமட்டும் வெளிப்படுத்தி, அவரே தீர்மானம் செய்யும்படி கேட்பது உத்தமம்.

[illegible] புத்தியைக்கொண்டு அறிந்து கவனிப்பதைப் பற்றி?

நான் செய்கிறது தகாத காரியம், அது சர்வேசுரனால் விலக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்திருப்பதும் அவசியம். உள்ளத்தில் நடப்பதை ஆராயாமல், வெளிக்குத் தோன்றுவதை மாத்திரம் கவனிப்பது மனுஷனுடைய சுபாவம். அப்படியே யாதொருவன் தேச சட்டத்தை அறியாமல் அதை மீறினால், அதற்கும் அவனைத் தண்டிக்கிறது வழக்கம். சர்வேசுரனோ, அப்படியல்ல. அவர் அளவில்லாத ஞானமும்

இரக்கமுள்ளவராகையால், தமக்குப் பொருந்தாத காரியமென்று அறிந்து குற்றம் செய்கிறவர்களை மாத்திரம் தண்டிக்கிறார். இப்படியே, வெள்ளிக்கிழமையென்று தெரியாமல் மாமிசம் சாப்பிடுகிறவன் அற்பப்பாவமுங் கட்டிக்கொள்ளுகிறதில்லை.—கோவில் பணமென்று அறியாமல் ஒருவன் நூறு ரூபாய் திருடினால், அவன் ஒரே ஒரு சாவான பாவந்தான் கட்டிக்கொள்ளுகிறான். கோவில் பணமென்று அறிந்து, நூறு ரூபாய் களவு செய்தால், இரண்டு சாவான பாவமாகும்.

5. மனது பாவத்துக்குச் சம்மதிக்கிறதைப் பற்றி:—

சாவான பாவத்துக்கு, வேதகற்பனையை மனம் பொருந்தி மீறுகிறது அவசரம். சம்மதமின்றிப் பாவமுமில்லை, புண்ணியமுமில்லை. எவ்வளவு பொல்லாத உணர்ச்சிகள் எழும்பினபோதிலும், அவைகளுக்குக் கொஞ்சமேனும் சம்மதிக்காவிட்டால், புண்ணிய பேறுபலன்களை அடைகிறோமேயல்லாமல், யாதொரு அற்பப் பாவமுதலாய்க் கட்டிக்கொள்ளுகிறதில்லை. பூரணசம்மதமில்லாவிட்டால், சாவானபாவமுமிராது. மட்டற்ற தயையுள்ள சர்வேசுரன், நம்மை விட்டு அகன்றுபோய், நம்மை நிந்தித்



து அவமதிக்க விரும்பாத மனிதனை நித்திய நரகத்தில் தள்ளமாட்டார்.

(௧) அரைத் தூக்கமாயிருக்கும்போதாவது, வேறொரு விஷயத்தின் மேலே கவனமாயிருக்கும்போதாவது, ஒருவன் பாவமான காரியம் செய்யும்படி நேரிட்டால், அது சாவான பாவமாகுமா? நடந்த விஷயத்தை அவன் அறிந்தவுடனே, அதை வெறுத்துத் துக்கப்பட்டால், அவன் பாவத்துக்குப் பூரணமாய்ச் சம்மதிக்கவில்லை என்பதற்கு இது அத்தாட்சியாகும். முழுக் கவனமில்லாதபோது முழுச்சம்மதமுமிராது.

ஆனால் பூரண சம்மதத்துக்கும் கவனத்துக்கும் வெகு நேரம் வேண்டியதில்லை. கெடுதலான விஷயம் என்று கவனித்து, முழுதும் சம்மதித்த க்ஷணத்திலேதானே பாவமும் கட்டிக்கொள்ளப்படுகிறது. சில சமயங்களிலே, கால் மணிநேரமுதலாய் கெட்ட ரூபிகரமும் நினைவுகளும் நமது புத்தியிலே இருக்கலாம். கவனித்தபின் அவைகளுக்குச் சம்மதிக்காமல் உடனே தள்ளிப்போட்டால், அற்பப்பாவமுமில்லை. பாவம் உண்டோ இல்லையோவென்று சுலுவாய் அறிகிறதற்கு, நடந்த மற்ற விஷயங்களையெல்லாம் கவனியாமல் மனம்பொருந்தி

பாவத்துக்குச் சம்மதித்தேனோ இல்லையோ என்று சோதித்துப் பார்ப்பது போதும்.

(௨) எப்போது பாவத்தை விளைவிக்கக்கூடிய ஒரு காரியத்துக்கு மனப்பொருந்தி சம்மதிக்கிறயோ, அப்பொழுதே பாவம் உண்டாகிறது. தன் எதிராளியைக் கொல்லும்படி ஆகாரத்தில் நஞ்சைக் கலந்துவைத்தால், அவன் சாப்பிடாவிட்டாலும், சாவான பாவமே. ஒருவன் துர்க்கிரியை ஒன்றை நிறைவேற்றவேணுமென்று தீர்மானித்தபின், அதைப்பற்றி மனஸ்தாபப்பட்டு, அந்தக் கிரியையைச் செய்யாமல்விட்டபோதிலும், பாவசங்கீர்த்தனத்தில் மேலே சொன்ன தீர்மானத்தை வெளிப்படுத்தவேண்டியது. ஒருவன் யாதொரு வீட்டுக்குப் போனதினாலே அந்தக் கடவை சாவான பாவங் கட்டிக்கொண்டதாக அநுபவ சித்தியினாலே அறிந்திருந்தும், அந்த வீட்டுக்கு அவசரமின்றிப் போனால் சாவான பாவமாகும். ஏனெனில் வேணுமென்று தன்னைப் பாவசமயத்துக்கு உள்ளாக்குவதே பாவமாகும்.

(௩) தூங்கும்போது, அறிவும் மனச் சுயாதீனமும் இல்லாததினாலே, தூக்கத்தில் சம்மதிக்கிறதொன்றும் பாவமாகாதென்பது மெய்யே. ஆனால் தூங்குமுன், ஒருவன் யாதொரு பாவத்



துக்குச் சம்மதித்து, அந்த ஆசையைத் தள்ளாமலிருந்தால், நித்திரையில் பாவத்துக்குச் சம்மதிப்பதும் பாவமே. ஏனெனில் அவன் முன் சம்மதித்தது, பின்னால் கட்டிக்கொண்ட பாவத்துக்குக் காரணமாயிருக்கிறது.

(௪) எவ்வளவுக்குத் தீமை செய்யக் கருத்தும் மனதும் உண்டோ, அவ்வளவுக்குப் பாவமும் அதிக பெரிதாயிருக்கும். அப்படியே, ஒருவன் நாலைந்து கட்டு வைக்கோலில் நெருப்பு வைத்து, மற்றொருவனுக்குச் சொற்ப நஷ்டமாத்திரம் வருவிக்க ஆசித்தால், இந்த நெருப்பினால் தற்செயலாய் வீடு முழுதும் நெருப்புப் பிடித்து வெந்துபோனபோதிலும், அற்பப்பாவமே. ஏனெனில் வீடும் நெருப்புப் பிடிக்கவேணுமென்று அவன் அற்பமேனும் நினைக்கவில்லை. ஆனால், யாதொருவன் தன் பகையாளியின் வீடு வெந்துபோகவேணுமென்று நெருப்பு வைத்தால், ஊரார் ஓடிவந்து நெருப்பை அவித்துப்போட்டாலும், நெருப்பு வைத்தவன் கனமான நஷ்டம் வருவிக்க எண்ணங்கொண்டிருந்ததால், சாவான பாவம் கட்டிக்கொள்ளுவான். ஆயினும் அவன் உத்தேசித்திருந்த[illegible]ெல்லாப்பு நேரிடாததால் அவனுக்கு உத்தரிக்க அவசரமில்லை.

(௭) புறத்தியார் செய்யும் பொல்லாப்புக்கு நாம் மனப்பொருந்தி காரணமாயிருந்தால், அந்தப் பாவத்துக்கு உத்திரவாதிகளாகிறோம். மனுஷன் தன்னுடைய துர்க்கிரியைகளுக்காகமாத்திரமல்ல, அவைகளினால் என்னென்ன பொல்லாப்புகளுண்டாகக்கூடுமென்று பொதுவிதமாய் அறிந்திருக்கிறானோ, அவைகளுக்கும் உத்திரவாதியாயிருக்கிறான். ஆகையினாலே, மற்றொருவனைக்கொண்டு ஒரு பாவமான கிரியை செய்விக்கிறது, தான்தானே செய்வதுபோலாகும்.

புறத்தியார் பாவம் கட்டிக்கொள்ளுகிறதற்கு நாம் எவ்வளவுக்கு உடந்தையாயிருந்திருப்போமோ, அவ்வளவுக்கு அவர்களுடைய பாவங்களுக்காக நாம் சர்வேசுரனுடைய நீதி ஆசனத்தின் முன்பாக கண்டிப்பான கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும். பாவம் செய்யும்படி உதவிசெய்தல், கட்டளை கொடுத்தல், துர்ப்புத்தி சொல்லல், திருட்டு உடமைகளை ஒளித்தல், அவைகளைப் பங்கிட்டுக் கொள்வது, இது முதலிய அக்கிரமங்களைச் செய்கிறவர்கள் புறத்தியாருடைய பாவங்களுக்குப் பங்காளிகளாகிறார்கள்.

ஒரு ஊருக்குப் பிரதான மனுஷனாயிருப்பவன் தான் சண்டைகுழப்பம் உண்டாக்குவதி



னால், மற்ற ஜனங்கள் பொய்ப்பிரியாதுகள் செய்து, அநேக அக்கிரம பாவங்களைக் கட்டிக்கொள்ளுவார்களென்றும், குருவானவரின் கட்டளைகளை மீறி அவரை நிந்தித்துத் தூஷணித்து அவமானப்படுத்துவார்களென்றும், ஞாயிற்றுக்கிழமைப் பூசை காணாமல், கள்ளக்கலியாணங்கள் முடித்து, இப்பேர்ப்பட்ட பற்பல தோஷதுரோகங்களைக் கட்டிக்கொள்ளுவார்களென்றும் அவன் ஏற்கனவே கண்டிருப்பானாகில், இத்தனை கணக்கற்ற பாவங்களும் அவன் தலைமேல் சுமருவதுமல்லாமல், இவைகளை மனம் பொருந்தி ஏற்றுக்கொண்டபடியால், மோசம் செய்த மற்ற ஜனங்களோடே அவனும் சகல நஷ்டத்துக்கும் பரிகாரம் செய்யவேண்டியது.

(௮) பயமும் பலவந்தமும்.—இவ்விரண்டு காரணங்களினால், பாவத்தின் கனமும் தோஷமும் குறைபடுகிறதுமன்றி, நமது புத்தி மெய்யாகவே முழுதும் மயங்கிப்போயிருந்தால், மனச்சுயாதீனம் இல்லாதிருப்பதினால், நாம் சிறிதும் பாவம் கட்டிக்கொள்ளுகிறதில்லை. புத்தி எவ்வளவுக்கு மயங்கிக் கலங்கிப்போகிறதோ, அவ்வளவுக்குக் குற்றமுங் குறையும். முழு அறிவும் முழு மனசுமில்லாமல், ஒரு காரியம் சாவான பாவமாகாது.

நியாயத்துக்கு ஒவ்வாததும், சர்வேசுரனுடைய கட்டளைகளுக்கு விரோதமுமான தேவதூஷணம், அஞ்ஞானக் காரியம், வேதத்தை மறுத்தல், முதலிய பாவங்களைச் சாவுக்குப் பயந்து முதலாய் ஒருக்காலும் செய்யலாகாது. ஆனால் பூசை காணுதல், சுத்தபோசனம் ஒருசந்தி அநுசரித்தல், முதலிய திருச்சபைக் கட்டளைகளை நிறைவேற்றுவதினாலே பெரிய பொல்லாப்பு நேரிடுகிறதாயிருந்தால், திருச்சபை அவைகளை அநுசரியாதிருக்க உத்தரவு அளிக்கிறது. ஆகையால் அப்பேர்ப்பட்ட சமயங்களிலே அவைகளை அநுசரிக்கக் கடமையில்லை. ஆயினும் யாதொருவன் சத்தியவேதத்தைப் பகைத்து, அதின் கட்டளைகளுக்கு நிந்தை வருவிக்கும் எண்ணத்தோடு ஒரு கிறீஸ்துவனைப் பார்த்து அவைகளை அநுசரிக்காதே என்று கற்பித்தால், சாவுக்கு அஞ்சிமுதலாய் திருச்சபைக் கட்டளைகளை மீறக்கூடாது.

(எ) அற்பப்பாவத்துக்குக் காரியம் அற்பமானதாயிருப்பதுமன்றி, அறிவும், சம்மதமும் கூட அவசரமாய் வேண்டியது. மேலும் சாவான பாவத்துக்கு அவசரமாயிருப்பதாக மேலே எடுத்துரைத்த மூன்று காரியங்களில் யாதொரு குறையிருக்கும்போது, அற்பப்பாவமாகும்.



6. அற்பப்பாவமாகிறதென்ன?

சொற்பக்காரியத்தில் தேவகற்பனையை மீறுவது அற்பப்பாவமாகும். அற்பப்பாவம் நம்மை உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் பாத்திரவான்களாக்குகின்றது. ஆயினும் கனமான காரியங்களில், பெரிய பாவமென்று அறியாமலாவது, சரியாய்க் கவனிக்காமலாவது, பூரண சம்மதமில்லாமலாவது, யாதொரு தேவ கட்டளையை மீறினால், அது அற்பப்பாவமாகுமே யொழிய சாவான பாவமாகமாட்டாது. சிலவேளை யாதொரு குற்றமுமிருக்காது.

(க) சாவான பாவத்தின் சுபாவத்துக்கும், அற்பப்பாவத்தின் சுபாவத்துக்குமுள்ள வித்தியாசமென்ன?

சாவான பாவம் கட்டிக்கொள்ளுகிறவன் தேவ சிநேகத்தைச் சிறிதும் மதிக்காமல், தேவ கோபத்தைப் பிறக்கணித்து, சர்வேசுரனுக்கு நிந்தையும் அவமானமும் வருவிக்கின்றான். அற்பப்பாவம் கட்டிக்கொள்ளுகிறவனோவென்றால் சர்வேசுரனுடைய நேசத்தை இழந்துவிடத் துணியாதிருந்தாலும், அவரை மனநோகப்பண்ணப் பின்வாங்காதிருக்கிறான்.

(உ) ஆகையால், சாவான பாவத்தால் சர்வேசுரனுக்கு முழுதும் சத்துராதிகளாகி, நமது

கடைசி முடிவை இழந்துவிடுகிறோம். அற்பப் பாவத்தினால் சர்வேசுரனை முழுதும் எதிர்க்கா விட்டாலும், நம்முடைய கடைசி முடிவை அடைவதற்கு உதவியான வழிபாடுகளைச் சரியாய் அநுசரிக்கிறதில்லை.

### 7. அற்பப்பாவத்தினால் வருகிற பொல்லாப் பென்ன?

ஆத்துமத்தின் ஞான உயிராகிய இஷ்டப்பிரசாதத்தை அற்பப்பாவம் போக்குகிறதுமில்லை, குறைக்கிறதுமில்லை. இலேசான தப்பிதத்தினால் இரண்டு மனிதருக்குள்ளிருக்கிற அன்னியோன்னிய சிநேகம் பிரிந்து பகை உண்டாகிறதில்லை. ஆனால் அற்பப்பாவங்களைக் கட்டிக்கொள்ளுவதினால், பத்தி உருக்கமும், ஞான சுறுசுறுப்பும், புண்ணியத்தின்பேரிலுள்ள பிரியமும் வரவரக் குறைந்துபோகும்.

(க) அன்றியும் அற்பப்பாவத்தினாலே சர்வேசுரனை அடிக்கடி மனநோகப் பண்ணுகிறதினால், சோதனைகளை ஜெயிக்கிறதற்கும், சுகிர்த கிரியைகளைச் செய்கிறதற்கும், நமக்கு அகத்தியமாய் வேண்டிய அநுக்கிரகப்பிரசாதமென்கிற தேவ உதவியும் குறைந்துபோகும். கடைசியாய், திரளான வரப்பிரசாதங்களைப் பெறு



கிறதற்கு அற்பப்பாவங்கள் தடையாயிருக்கிறபடியினாலே, நமது ஆசாபாசங்கள் மேற்கொண்டு, நாம் சாவானபாவத்தில் விழுவதற்கு அவைகள் காரணமாயிருக்கும். சாவான பாவம் சாவையும், அற்பப்பாவம் வியாதியையும் ஒத்திருக்கிறதென்னத்தகும்.

(உ) அற்பப்பாவமென்று சொல்லும்போது அந்தப்பாவம் சொற்பக்காரியம் என்று அலட்சியஞ் செய்யக்கூடாது. ஆத்துமத்தைச் கொல்லுகிற சாவான பாவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அற்பப்பாவம் சொற்பக் காரியமென்பது மெய்யே. ஆனால் அது அளவில்லாத மகிமையுள்ள சர்வேசுரனுடைய சித்தத்துக்கு விரோதமாயிருக்கிறதினாலே, சாவான பாவம் நீங்கலாக, அற்பப்பாவத்துக்கு ஒத்த பொல்லாப்பு உலகத்தில் வேறில்லையென்று சொல்லவேண்டியது. மேலும், அற்பப்பாவமானது நமக்கு மிகுந்த கெடுதல் வருவிக்கிறதினாலே, அதைப்போன்ற தின்மை வேறெதுவுமில்லை.

**8. அநேக அற்பப்பாவங்கள் சேர்ந்தால், ஒரு சாவானபாவம் ஆகுமா?**— ஒருபோதுமில்லை. ஆயிரம் அற்பப்பாவங்கள் முதலாய் சர்வேசுரனுடைய சிநேகத்தையும் இஷ்டப்பிரசாதத்

தையும் முழுதும் நீக்கமாட்டாது. ஆனால் இஷ்டப்பிரசாதத்தை முழுதும் போக்கி, நம்மை நரகத்துக்குப் பாத்திரவான்களாக்குவதற்கு ஒரே ஒரு சாவானபாவம் போதும்.

(க) அற்பப்பாவங்கள் கூடிச்சேர்வதினால் சாவானபாவம் உண்டாகிறதில்லை என்பது மெய்தான். ஆயினும் அற்பப்பாவத்துக்குரிய காரியமானது கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்துக் கனமானதாகிப்போனால், அப்போது சாவான பாவமாகும். இப்படியே, ஒருசந்தி நாளிலே ஒருவன் அநேகம்விசை யாதொரு பதார்த்தம் சாப்பிட்டால், கடைசியாக ஒருசந்தி அநுசரியாததால் சாவானபாவங் கட்டிக்கொள்வான். ஊழியக்காரன் அடிக்கடி எஜமானனிடத்திலிருந்து சொற்பத் தொகையாகத் திருடிவந்தால், சாவானபாவத்துக்கு வேண்டிய தொகை சேர்ந்தவுடனே, கனமானபாவங் கட்டிக்கொள்ளுகிறதுமன்றி, திருடின பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடக் கனமான கடமைப்பட்டிருக்கிறான்.

(உ) யாதொரு காரியந் தன்னிலே அற்பப் பாவமாயிருந்தாலும், மனசாட்சியின் பிசகினால் சாவானபாவம் ஆகிறதுண்டு. அதெப்படியென்றால், ஒருவன் ஒரு சிறு பழத்தைத் திருடுகி



றான் என்று வைத்துக்கொள்வோம். அதைத் திருடும்போது சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதாகத் தப்பிதமாய் எண்ணிக்கொண்டு திருடினால், அந்தத் தப்பிதமான எண்ணத்தின் முகாந்திரமாக, அந்த அற்பத் திருட்டு முதலாய் அவனுக்குச் சாவானபாவமாகும். இப்படியே மற்ற விஷயங்களிலும் சம்பவிக்கலாம். ஆகையால் அற்பப்பாவம் எது, சாவானபாவம் எது என்று திட்டமாய் அறிந்துகொள்ளுவது அவசரமாமே. ஆனால் எல்லாவற்றையும் விட முக்கியமானதேதென்றால், நமது மனச்சாட்சிக்கு விரோதமான எந்தக் காரியத்தையும் ஒருக்காலும் செய்யாமலிருப்பதேயாம்.

### 9. பாவங்களின் வகைகளைப்பற்றி.

திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் போதனைக்கேற்க, பாவசங்கீர்த்தனத்தில் பாவங்களின் வகையையும் தொகையையும் அறிவிப்பது அவசரமாயிருக்கிறதினாலே, இவைகளைப் பற்றிய சில விசேஷங்களை வெளிப்படுத்துவோம்.

1. பாவங்களின் வகையை அறிவதெப்படி?

(க) வெவ்வேறு புண்ணியங்களுக்கு விரோதமான குற்றங்கள் வெவ்வேறு வகையான பாவங்களாகும்.—அஞ்ஞானத்தனமும் பதிதத்தனமும்

விசுவாசத்துக்கு விரோதம். அவநம்பிக்கையானது நம்பிக்கைக்கும், களவானது நீதிக்கும் விரோதம். ஒரே பாவமானது இரண்டு மூன்று புண்ணியங்களுக்கு விரோதமாயிருக்கலாம், தகப்பனை அடித்தல் பிறர் சிநேகத்துக்கும், பெற்றோருக்குச் செலுத்தவேண்டிய வணக்கத்துக்கும் பொருந்தாது. ஆனால் பணம் திருடுவதும், ஆடு மாடு களவாண்பதும், பிறர் சொத்தை அபகரிப்பதும், இவை எல்லாம் பொருள் நஷ்டம் மாத்திரம் உண்டாக்குகிறதினாலே, நீதி என்கிற ஒரே புண்ணியத்துக்கு விரோதம்; ஆகையினாலே இவைகளுக்குள்ளே வகையில் வித்தியாசமில்லை.

(உ) மிதமிஞ்சின [illegible]மென்கிலும், குறையான [illegible]ன்கிலும் ஒரே புண்ணியத்துக்கு விரோதமாய்க் கட்டிக்கொள்ளப்படுகிற பாவங்கள் வெவ்வேறு வகையான பாவங்களாகிறது. அப்படியே, மிதமிஞ்சின நம்பிக்கையும், அவநம்பிக்கையும் இரண்டு வகைப் பாவங்கள்.

(ஊ) பற்பல பாவமான காரியங்கள் ஒரே புண்ணியத்துக்கு விரோதமாயிருந்தாலும், வகையில் வித்தியாசப்படும். ஒருவனைக் கொன்றுபோடுகிறதும், அவனுடைய பேரைக்கெடுப்பதும், அவன் உடைமைகளை அபகரிப்பதும்



புறத்தியாருக்குச் செலுத்தவேண்டிய நீதிக்கு விரோதமான பாவங்கள். ஆனால் அந்தப் பாவங்களுக்குரிய விசேஷங்கள் வித்தியாசமாயிருப்பதால், அவைகளின் வகையும் வித்தியாசப்படும்.

(எ) யாதொரு விசேஷ நன்மைக்காக, பல கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தால், அவைகளுக்கு விரோதமான பாவங்கள் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவைகளாகும். பூசைகாண்பதும், ஒருசந்தி அநுசரிப்பதும், வருஷத்துக்கொரு தடவை பாவசங்கீர்த்தனம் செய்வதும் ஒரே கட்டளையில் அடங்கியிராததால், இவைகளை மீறுவது வெவ்வேறு வகையான பாவமாகும்.

(ஏ) பாவங்களின் வகையை மாற்றுகிற விசேஷங்களையெல்லாம் பாவசங்கீர்த்தனத்திலே வெளிப்படுத்தவேண்டியது. சாதாரணமாய் [illegible] ஜனங்கள் ஒரே [illegible]மான கிரியையில் அடங்கியிருக்கக்கூடிய பல விசேஷங்களைச் சரியாய்க் கண்டுபிடிக்கிறதில்லை. ஆதலால், அந்தத் தோஷங்கள் அவர்களைச் சாராது. அறிவுணர்வின்றி பாவமில்லையென்று மேலே சொல்லியாயிற்று.

## 10. பாவத்தின் தொகையின் பேரில்.

செய்த பாவங்கள் எத்தனை என்று அறிவதற்கு, எத்தனை தடவை சம்மதித்தோமென்றும்,

எத்தனை விசேஷ கட்டளையை மீறினேமென்றும், எத்தனை விசேஷ பாவ காரியங்கள் உண்டென்றும் கவனிக்கவேண்டியது.

(௪) மனசம்மதி பாவத்துக்கு அவசரமாயிருப்பதினாலே, எத்தனை தடவை ஒருவன் பாவத்துக்குச் சம்மதிக்கிறானோ, அத்தனை விசையும் பாவங் கட்டிக்கொள்ளுகிறான். இப்படியே வெகு நேரம் விடாமல் ஒரு கெட்ட நினைவைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறவன் ஒரு தடவை மாத்திரம் சம்மதிக்கிறதினாலே, ஒரே ஒரு பாவங் கட்டிக்கொள்ளுகிறான். இந்த நேரத்துக்குள்ளாக பத்துத்தடவை அந்தக் கெட்ட நினைவை வெறுத்துத்தள்ளி, திரும்பவும் திரும்பவும் அதற்குச் சம்மதித்தால், பத்துத்தடவை சம்மதித்ததினாலே, பத்துப் பாவமாகும்.

(௫) எத்தனை தடவை பாவத்துக்குச் சம்மதித்தோமென்று அறிகிறதெப்படி?—பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அதைத் தள்ளிவிடுவதினாலேயும், நேரம் சென்று முதல் கருத்து தன்னாலே நீங்கிப்போனதினாலேயும், முதல் பாவக்கிரியை முடிந்துபோக அதே கிரியையாவது வேறே கிரியையாவது நடக்கினதினாலேயும் முதல் பாவங் கட்டிக்கொள்ளப்பட்டதென்று சொல்லவேண்டும். அதற்குப்பின் பாவமான



கருத்துக்குத் திரும்பவும் சம்மதித்தால், வேறே பாவமாயிருக்கும், பாவத்தின் தொகையும் அதிகரிக்கும்.

(௬) இதுவுமன்றி, முழுதும் நிறைவேறின பாவமான காரியங்கள் எத்தனை இருக்குமோ, அத்தனை பாவங்களுமுண்டாகிறது.—தேவ தூஷணம், மோகம், கொலை முதலிய துர்க்கிரியைகள் வெவ்வேறான காரியங்களானதினாலே, அவைகளைச் செய்கிறவன் அத்தனை பாவங்கள் கட்டிக்கொள்ளுகிறான். அந்தப் பாவமான கிரியைகளில் யாதொன்றைத் திரும்பச் செய்தால், புதுப் பாவமாகும். அப்படியே மோகபாவம் முடிந்தவுடனே, அதை இன்னம் ஒருவிசை கட்டிக்கொள்ளுகிறது வேறே பாவமாகும்.

(௭) தான் நினைத்த பாவத்துக்குப் பல வழிபாடுகள் அவசரமாயிருந்தால், இவைகளெல்லாம் ஒரே பாவந்தான்.—ஒருவன் தன் பகையாளியை அடிக்கத் தீர்மானித்து, அதற்காகப் பல தந்திரங்கள் உபயோகித்து, கடைசியில் சமயம் வாய்த்தவுடன், தடியினாலே பத்து அடி அடிக்கிறானென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி அடிக்கும்போது, பகையாளியைக் கொன்றுபோடும் கருத்துக்கொண்டு, தன் புதுக் கருத்தை நிறைவேற்றினால், இரண்டு பாவமாகும்.

முதல் கடவையே தன் எதிராளியைக் கொன்றுபோடத் தீர்மானித்திருந்தால், அடிப்பதும் கொல்லுவதும் ஒரே ஒரு பாவம்தான். ஏனென்றால் கொலை செய்யும் ஒரே தீர்மானத்துக்கு மற்றக்காரியங்கள் வழிபாடுகளாய் மாத்திரம் இருக்கின்றது. யாதொரு பாவத்தை நிறைவேற்றுவதற்கு அநேக விசேஷங்கள் அவசரமாயிருந்தால், இவைகளினால் பாவத்தின் கனமானது அதிகரிக்கக் கூடுமேயொழிய, அதின் தொகை அதிகரிக்கிறதில்லை. இப்படிப்பட்ட சமயங்களிலே பல குற்றமான கிரியைகள் சேர்ந்து ஒரே பாவமாகின்றன.

(3) அதற்கு விரோதமாய் ஒரே ஒரு பாவமான கிரியை செய்திருந்தாலும், அது எத்தனை புண்ணிய[illegible]ந்தும் கட்டளைக[illegible] விரோ[illegible]யிருந்ததோ, அ[illegible]னை பாவ[illegible]ள் அதில் அடங்கியிருக்கும்.—உதாரணமாக: கோவில் சாமான்களைத் திருடுகிறது இரட்டைப்பாவமாம்.

III. மனச்சாட்சியின் பேரில்

1. மனச்சாட்சியாவதென்ன?

நாம் செய்யப்போகிற கிரியைகள் நல்லதோ கெட்டதோ என்று நமது புத்தி தீர்மானிப்பதே மனச்சாட்சியாம். நாம் செய்கிறதெல்லாம் நல்-



லொழுக்கத்துக்குத் தக்கபடி சீர்படுத்துவதற்காக, சர்வேசுரன் ஒவ்வொரு மனுஷனுக்கும் மனச்சாட்சியைக் கொடுத்திருக்கிறார். ஊருக்குப் பிரயாணம் போகிறவனுக்கு நல்ல துணையாளி அவசரமாயிருப்பதுபோல, நெருக்கமான மோக்ஷ பாதையை விட்டுத் தவறாதபடி, நமக்கு மனச்சாட்சி ஒத்தாசை பண்ணுகிறது. அதைக் கேட்டு நடக்கிறவன் சர்வேசுரனுக்கு ஒருக்காலும் துரோகம் செய்யமாட்டான்.

௨

(க) மனச்சாட்சி சொல்லுகிறது மெய்யாகவே விலக்கப்பட்ட காரியமாயிருந்தாலும், பாவமாகாது. ஆனால் அதற்கு மனசானது உறுதியுடன் சாட்சி சொல்லுவதுமன்றி, அப்பேர்ப்பட்ட [illegible]யம் நல்லதோ கெட்டதோ என்று [illegible]சோதித்துப்பா[illegible] சிறிதும் [illegible]சயத்துக்கு இடமில்லாதிருக்க[illegible]. சந்தேகமில்லாத சமயத்தில் மனச்சாட்சிக்கேற்க நடக்காதவர்கள் எப்போதும் பாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஓர் விலக்கப்பட்ட காரியம் நல்லதென்று மனச்சாட்சி சொன்னால், அதைச் செய்து குற்றமல்ல.

(உ) மனச்சாட்சியின்படி ஒரு காரியம் பாவமல்லவென்று எண்ணிச் செய்தபின், அது பெரிய பாவ

மென்று பிற்பாடு அறிந்தால், அதைப்பற்றி மனக்கலக்கங்கொள்ளவும், அதைப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவும் அவசரமில்லை. ஏனென்றால், செய்யும்போது பாவமென்று அறியாததினாலே, அது பாவமாகாது.

(கூ) ஆனால் ஒருவன் தேவகட்டளைகளையும் தனது கடமைகளையும், தன்னுடைய குற்றத்தினாலே அறியாதிருப்பானாகில், இப்பேர்ப்பட்ட அறியாமையினிமித்தம் செய்கிற சகல பாவங்களுக்கும் உத்தரவாதியாயிருப்பான். தன் கடமைகளைப் படித்தறியக்கூடிய சமயமிருந்தும், வேறுமென்று படியாமல் விட்டுவிட்டால், இவ்வித அறியாமையிலிருந்து உண்டாகிற பாவங்களுக்குத் தன் அசட்டைத்தனத்துக்குத் தக்கது அவன் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும். அப்படியே யாதொருவன் ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப் போக மனமில்லாமலிருந்ததினால், அந்த வாரத்தில் வருகிற ஒருசந்தி நாட்கள், சுத்தபோசன நாட்கள் எவை என்று அறியாமலும், அந்தக் கட்டளைகளை அனுசரியாமலுமிருந்தால், பாவமாகும். ஆனால் தக்க முகாந்தரத்தைமுன்னிட்டுப் பூசைக்குப் போகாதவன், ஒருசந்தி நாட்கள் சுத்தபோசன நாட்கள் வருவதைப்பற்றிச்



சிறிதும் சமுசயப்படாமல் மாம்சம் சாப்பிட்டால், அவன் பாவம் கட்டிக்கொள்ளுகிறதில்லை.

2. சந்தேகமுண்டாகும்போது செய்யவேண்டியதென்ன? யாதொரு காரியம் செய்யுமுன், இது பாவமோ இல்லையோவென்று சந்தேகப்படும்போது, அந்தச் சந்தேகத்தைத் தீர்க்காமல் அதைச் செய்தால், பாவமாகும். சமயம் கிடைத்தால், தெரிந்தவர்களிடத்திலே யோசனை கேட்கவேண்டியது.

(க) அப்படியும் சந்தேகம் தீராவிடில், நிச்சயமில்லாத சட்டத்தை அநுசரிக்கக் கடமையில்லை என்ற சுலோகத்தின்படி அந்தச் சந்தேகத்தைத் தள்ளிவிட்டு, மனச்சாட்சியைச் சீர்ப்படுத்திக்கொண்டு, இது விஷயத்தில் மனம்போல செய்துகொள்ளலாம். இப்படியே வியாழக்கிழமை நடுச்சாமம்வரையில் மாம்சம் சாப்பிடக்கூடுமாயிருக்க, நடுச்சாமம் ஆகிவிட்டதோ இல்லையோவென்கிற சந்தேகம் எவ்வளவு பிரயாசப்பட்டும் தீராதபட்சத்தில், மாம்சம் சாப்பிடுவதற்கு விக்கினமில்லை. ஆனால் சந்தேகத்தைத் தீர்க்கப் பிரயாசப்படாமலாகிலும், வந்தது வரட்டுமென்கிற எண்ணத்தோடாவது,

மாம்சம் சாப்பிட்டால், இன்னம் நடுச்சாமம் ஆகாமலிருந்தபோதிலும், சாவானபாவமே.

(உ) ஈடேற்றத்துக்கு அவசரமான தேவதிரவிய அநுமானங்கள் முதலியவைகளிலும், உயிருக்கும் பொதுநன்மைக்கும் அவசரமான விஷயங்களிலும், சந்தேகமிருக்கும்போது, எது அதிக நிச்சயமாயிருக்குமோ, அதைத் தெரிந்துகொள்ளுவது கடமை. இவ்விதமே அவஸ்தை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவந்த தண்ணீர் மெய்யான தண்ணீரோ என்று சந்தேகமுண்டானால், அகத்தியம் வேறே தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, அத்துடன் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியது. வேறே தண்ணீர் கிடைக்காத போது மாத்திரம், முதலில் கொண்டுவந்ததை உபயோகிக்கலாம்.

IV. இஸ்பிரீத்துசாந்துவுக்கு விரோதமான பாவமாகிறதேன்ன?

அவருடைய வரப்பிரசாதங்களால் நமது ஆத்துமத்தில் உண்டாகவேண்டிய ஞான நன்மைகளுக்கு, அதிக விசேஷமான தடங்கல் வருவிக்கிற கனமான பாவங்கள் இஸ்பிரீத்துசாந்துவுக்கு விரோதமான பாவங்கள் என்று சொல்ல



ப்படும்.—பொறுக்கப்படாத பாவமென்பது யாதொன்றுமில்லை. ஆனால் இந்தப் பாவங்களைக் கட்டிக்கொண்டவர்கள் தேவ வரப்பிரசாத ஏவுதல்களை மூர்க்கத்தோடு தள்ளிப்போட்டு, மனஸ்தாபப்பட சிறிதும் ஆசிக்காதிருப்பதினாலே, இப்பேர்ப்பட்டவர்கள் பாவப்பொறுத்தலை அடைவது மிகவும் அரிது. (மத். XII. 32.) இந்தப் பாவங்களாவன :—

(க) இரட்சணியம் அடைய முடியாதென்று அவநம்பிக்கைப்படுவது. (பழமொழி XVIII. 3.)

(உ) நற்கிரியைகள் செய்யாமல் மோக்ஷத்தை அடைவோமென்று மிதமிஞ்சி நம்புவது; சர்வேசுரனுடைய இரக்கத்தை நம்பி, துணிகரத்தோடு பாவத்தின்மேல் பாவம் செய்வது. (சர்வப்பிரசங்கி V. 6)

(ங) வேதசத்தியங்கள் என்னவென்று அறிந்தும், அவைகளை நிர்மூலமாக்கப் பிரயாசப்படுவது. (அரு. XII. 18.)

(ச) புறத்தியாருடைய ஞான நன்மைகளைக் கண்டு, காய்மகாரப்படுவது. (மத். XX. 14.)

(௫) பாவச்சேற்றிலே மூர்க்கத்தோடு அமிழ்ந்தியிருப்பது. (பழமொழி XXI. 29.)

(௬) தன் சாவானபாவத்துக்காக மனஸ்தாபப்படாமல் மரிப்பது. (சங். CXI. 10.)

### V. பழிவாங்கப் பரலோகமட்டும் அபயமிடும் பாவங்கள்.

இந்தப் பாவங்களின் அக்கிரமமும் அநியாயமும் மற்றப்பாவங்களின் அவலக்ஷணத்தைவிட அதிக வெளிப்படையாயிருப்பதால், இவைகள் சர்வேசுரனுடைய கோபாக்கினையை எழுப்புகின்றன.

(௧) வேணுமென்று கொலை செய்கிறது. (ஆகியாக. IV. 10.)

(௨) சுபாவத்துக்கு அடாத மோக பாவம் கட்டிக்கொள்ளுகிறது. (ஆதியா. XVIII. 20.)

(௩) ஏழைகளையும் கைம்பெண்சாதிகளையும் தாய் தகப்பனில்லாத பிள்ளைகளையும் துன்பப்படுத்துகிறது. (யாத்திராக. XXII. 23.)

(௪) உழைத்தவர்களுக்குக் கூலி கொடாதிருப்பது. (யாக. V. 4.)



### VI. தலையான பாவங்கள்.

தலையான பாவங்கள் ஏழு. இவைகளில் ஒவ்வொன்றும் அநேக பாவங்களுக்கு ஊற்றும் காரணமுமாயிருக்கிறதினாலே, இந்த ஏழு பாவங்களும் தலையான பாவங்களென்று சொல்லப்படுகின்றன.—அவைகளாவன: ஆங்காரம், உலோபித்தனம், மோகம், காய்மகாரம், போசனப்பிரியம், கோபம், சோம்பல்.

1. ஆங்காரமாவது என்னவென்றால், தன்னைப் பெரிதாயெண்ணி, மற்றவர்களை நிந்திக்கப்பண்ணுகிற பாவம்.

(௧) இரண்டு வகையான ஆங்காரமுண்டு. ஒருவனுக்கும் அடங்கியிருக்கப் பிரியமில்லாமல், எவ்வித அதிகாரத்தையும், சர்வேசுரனுடைய அதிகாரத்தையும் முதலாய்ப் பிறக்கணித்துத் தள்ளுவது, முதல் வகை ஆங்காரமாம். இந்த ஆங்காரம் பொதுவிலே சாவானபாவமாகும். இரண்டாம் வகை ஆங்காரமேதென்றால், ஒருவன் தன்னைத்தானே பெருமையாக மதித்து, தனக்குக் கீழ்ப்பட்டவர்களையும், சமமானவர்களையும் நிந்திப்பதே. இப்பேர்ப்பட்ட நிந்தையால் புறத்தியாருக்கு உண்டான நஷ்டத்துக்குத் தக்கது. இது சாவானபாவம், அல்லது அற்பப்பாவமாகும்.

(உ) இத்தோடு சேர்ந்த பாவங்கள்: உத்தியோகங்களையும் மகிமைகளையும் மிதமிஞ்சி விரும்பச்செய்கிற பேராசை; தன்னிடமிருக்கும் அல்லது தன்னிடமிருப்பதாக எண்ணும் நன்மைகளை எடுத்துக்காட்ட ஓயாத ஆசைமூட்டி வளர்க்கிற வீண் சிலாக்கியம்; தன்னிடமுள்ள நன்மைகளே சிறந்த நன்மைகளென்று தன்னை வானமட்டும் உயர்த்திப் பேசத் தூண்டுகிற வீம்பு; புண்ணியவான்போல் வேஷம் போடச் செய்கிற கள்ள ஞானம்; தன்னை மினுக்கி மீதமிஞ்சி அலங்கரிக்கச்செய்கிற வீண் ஆடம்பரம் முதலியவை ஆங்காரத்தோடு சேர்ந்த பாவங்களாம்.

2. உலோபித்தனமானது இலௌகீக நன்மைகளின் மேல் மட்டுக்கடந்த ஆசை ஆவல் வைத்து, அவைகளை இறுகப்பிடித்துக்கொண்டு, தன் அந்தஸ்துக்குத் தக்கபடி தானதர்மம் செய்யாதபடி தடுக்கிற பாவம்.

(க) இது பொதுவில் அற்பப்பாவமாயிருந்தபோதிலும், நீதிக்கும் பிறர் சிநேகத்துக்கும் முழுதும் விரோதமாயிருக்குமாகில், சிற்சில சமயங்களில் சாவான பாவமாகலாம். ஏனெனில் பணத்துக்காக உலோபிகளில் சிலர் கட்டிக்கொள்ளத் துணியாத துரோகமொன்றுமேயில்லை.



(உ) இத்தோடு சேர்ந்த பாவங்கள்: துன்பப்படுகிறவர்கள் மட்டில் ஈவு இரக்கமில்லாதிருத்தல், ஏழை எளியவர்களைக் கஷ்டப்படுத்துதல், பிறரை ஏமாற்றுதல், களவாடுதல் முதலியவைகளே.

3. மோகமாவதேதென்றால், கற்புக்கு விரோதமான இன்பசுகங்களை அக்கிரமமாய் ஆசித்துச் சுகிக்கச் செய்கிற பாவம்.

(க) இந்தப்பாவம் தன்னிலே எப்போதும் சாவானபாவம். கவனமும் சம்மதமுமிருக்கும்போது, இந்தப்பாவ விஷயத்தில் சொற்பக்காரியம் என்பதும், அற்பப்பாவமென்பதுமில்லை. இந்தப்பாவமானது உள்ளிந்திரியங்களாலும் வெளி இந்திரியங்களாலும் கட்டிக்கொள்ளப்படுகிறது. கெட்ட உருபிகரம், நினைவு, ஆசை என்பவை உள்பாவம். கெட்ட பார்வை, பேச்சு, கிரியை என்பவை வெளிப்பாவம்.

(உ) இத்தோடு சேர்ந்த பாவங்கள்: மிதமிஞ்சின சுயபட்சம், தேவபகை, பிறர் சிநேகமின்மை, பத்திக்குரிய விஷயங்களின் பேரில் வெறுப்பு, ஞான குருட்டாட்டம் முதலியவைகளே.

4. காய்மகாரமானது புறத்தியார் நன்றாய் வாழ்ந்தால் அல்லது யாதொரு நன்மை அடைந்தால், தனக்குக் கேடு நேரிட்டதுபோல் துக்கிப்பதும், அவர்கள் நாசமாய்ப்போனால் அல்லது யாதொரு துன்பம் அடைந்தால், தன் வாழ்வும் பாக்கியமும் அதிகரித்ததுபோல் சந்தோஷப்படுகிறதுமாம்.

(க) இது பிறர் சிநேகத்துக்கு முழுதும் நேர் விரோதமாயிருப்பதால், தன்னிலே சாவான பாவமாயிருந்தாலும், பாவகாரியம் சொற்பமாயிருக்கும்போதும், பூரண சம்மதமில்லாத போதும் அநேகமாய் அற்பப்பாவமாகும்.

ஒருவன் புறத்தியான் புண்ணியவானாய் ஜீவிக்கிறதினால் தனக்கு மானக்குறைவு உண்டாகிறதென்றும், தன் பாவங்கள் அதிகப் பெரிதாய்க் காணப்படுகின்றனவென்றும் எண்ணி, அவன் மேல் கோபங்கொண்டு கஸ்திப்பட்டால், இது மற்ற காய்மகாரத்திலும் மகா பொல்லாத காய்மகாரமாகும்.

(உ) இந்தோடு சேர்ந்த பாவங்கள்: தான் காய்மகாரப்படுகிறவன் பேரில் பகை, வஞ்சம் கொள்வதும், புறணி, கோள்தண்டணி, அபாண்டம், அபதூறு முதலியவை சொல்லித் தூற்றுவதுமாம்.



5. போசனப்பிரியமாவதேதென்றால், அன்னபான முதலியவைகளை அளவுக்குமிஞ்சி சாப்பிட்டுக்குடிக்கதலும், அவைகளின் பேரில் மட்டற்ற ஆசை ஆவல்கொள்ளுதலாம்.

(க) இது தன்னிலே அற்பப்பாவமாயிருந்தபோதிலும், இதனால் சுகத்துக்கும், தன் தொழிலுக்கும், குடும்பத்துக்கும் வரக்கூடிய நஷ்டத்தால் சாவானபாவமாகலாம்.

(உ) இந்தோடு சேர்ந்த பாவங்கள்: குடிவெறி, புத்திமயக்கம், வீண்பேச்சு, அடிபிடி, தூஷணவார்த்தை, காமம் முதலியவைகளே.

6. கோபமானதென்னவென்றால், நமக்குப் பொருந்தாதவைகளை நம்மைவிட்டு அகற்ற, பிறரைப் பழிவாங்க நம்மைத்தூண்டி எழுப்புகிற பாவம்.

(க) ஓர் நியாயமான விஷயத்தைப்பற்றி, ஒருவன் கோபங்கொண்டு குற்றவாளியைக் கிரமமாய்க் கண்டித்தால், இது பாவமாயிராததும் தவிர புண்ணியமாயிருக்கலாம்.

கோபத்தினால் குற்றமற்றவனைத் தண்டிப்பதும், குற்றவாளியை வேண்டியதுக்குமேல் தண்டிப்பதும், அதிகாரமின்றிக் கண்டிப்பதும்,

குற்றத்தின் பேரிலுள்ள வெறுப்பினால் தண்டிக்காமல், குற்றவாளியின்பேரில் வைத்த வெறுப்பால் தண்டிப்பதும், குற்றமாகும். ஞாயமாய் தண்டிக்கும்போது முதலாய், மிதமிஞ்சின விதமாய் உள்ளே எரிச்சல் கொள்வதும், அதை வெளியே காட்டுவதும் பாவமாகும்.

இது சாந்தமென்கிற புண்ணியத்துக்கு மாத்திரம் விரோதமாயிருக்கும்போது, அற்பப்பாவமும், நீதிக்கும் பிறர் சிநேகத்துக்கும் விரோதமான கனமான குற்றமானால் சாவான பாவமுமாகலாம்.

(உ) இத்தோடு சேர்ந்த பாவங்கள்: மன எரிச்சல், மனவைராக்கியம் கொள்வது, சண்டை சச்சரவு செய்வது, நிந்தை, அவமானம் வருவிப்பது தேவதூஷணஞ்சொல்லுவது இவை முதலியவைகளே.

7. சோம்பலானது சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கும், நமது அந்தஸ்தின் கடமைகளுக்கும், ஆத்தும இரட்சண்ணியத்துக்கும் அடுத்த காரியங்களைச் சரியாய் நிறைவேற்றுதிருக்கவும், வீண் நேரம் போக்கவும், வழியாயிருக்கிற பாவம்.



(க) இது தேவ சிநேகத்துக்கு விரோதமென்பதால், தன்னிலே சாவானபாவமென்றபோதிலும், சோம்பேறி சாதாரணமாக சுகத்தை மாத்திரம் தேடுகிறதினிமித்தம் வழக்கமாய் அற்பப்பாவமாகும்.

(உ) இத்தோடு சேர்ந்த பாவங்கள்: கற்பனைகளை அநுசரிப்பதில் அசட்டைத்தனமாயிருந்தல், செபத்தில் பராக்குக்கு இடங்கொடுத்தல், யாதொரு துன்பம் தொந்தரவு வந்தவுடன் சாதாரணமாய் அவதைரியமடைதல், நித்திய பாக்கியத்தின்பேரில் அவநம்பிக்கைகொள்ளுதல் இவை முதலியவைகளே.

8. குடிவெறியைப்பற்றிய விசேஷங்கள்:

போசனப்பிரியத்துக்கு விரோதமான பாவங்களில் குடிவெறி முக்கியமானது. குடிவெறியென்றால், புத்தி மயங்குமட்டும் வேணுமென்று மட்டுக்கு மிஞ்சி மதுபானங்களைச் சாப்பிடுவதே. முழுதும் மதிமயங்குமட்டும் குடிப்பது சாவான பாவம். அரைகுறையாய் புத்தி கலங்குமட்டும் குடிப்பது அற்பப்பாவம்.

(க) புத்திமயக்கத்தில் செய்த கிரியைகளுக்கு அவனவன் உத்திரவாதியா?

அக்கிரியைகளைச் செய்யப்போகிறதாக குடிக்குமுன் போதுமானமட்டும் எற்கனவே அறிந்

திருந்தால், அப்பேர்ப்பட்டவைகளுக்கு உத்திரவாதிதான். அப்படியே வழக்கமாய் குடிவெறியில் தான் தேவதூஷணங்கள் பொல்லாத வார்த்தைகளைக் கக்குவதாகவும், துர் நடக்கையாய் நடப்பதாகவும், அடிபிடி சண்டைகள் செய்வதாகவும், அநுபவசித்தியினாலே அறிந்திருப்பவன் மதுபானம் குடித்தால், இந்தப்பாவங்களுக்கு உத்திரவாதியாவான்.

(௨) மற்றவர்களைக் குடிக்கும்படி தூண்டுகிற பாவம்:—இராப்பகலாய்க்குடித்து, வேணுமென்று தங்கள் புத்தியை மயக்கிக்கொள்ளுகிறது மல்லாமல், இப்படிக்குடிக்கும்படி மற்றவர்களைத் தூண்டுகிறவர்களும், சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

(௩) இன்னின்னாரோடு சேர்ந்து போவதால் மட்டுத்திட்டின்றி குடிக்கிறேன் என்று அநுபவசித்தியால் அறிந்திருந்தும், அப்பேர்ப்பட்டவர்களோடு கூடிச்சகவாசம் செய்கிறவர்களும், புத்திமயங்கப்போகிறதென்று தெரிந்தும் இன்னம் அதிகமாய்க் குடிக்கிறவர்களும், சாவானபாவத்தில் விழுகிறார்கள்.

(௪) மதிமயக்கம் வருமட்டும் குடித்து, புத்திமயங்குமுன் தூங்கப்போகிறவர்களும், சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள்.*



(௫) மதுபானங்களைக் குடித்துப் பழக்கப்பட்டவர்கள் ஒருபோதும் மயக்கம் கொள்ளுகிறதில்லை என்றாலும், குடியால் சுகத்துக்குக் கடினமான மோசமும், பொருள் நஷ்டமும், குடும்பத்துக்கு நாசமும் வருகிறதென்பதால், அவர்களும் சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

(௬) இலாகிரிப் பதார்த்தங்களைப்பற்றியும், மேலே சொன்னவை செல்லும். முக்கியமான காரணங்களிருந்தாலொழிய, ஒருபோதும் உபயோகிக்கக்கூடாத சில வஸ்துக்களுண்டு. புத்திமயங்கும்படி இவைகளைச்சாப்பிடுவது சாவானபாவமாகும். மெய்யான பிரயோசனமிருக்கும்போது, அவைகளைச் சொற்பமாய் சாப்பிடுவது தன்னிலே பாவமில்லாவிட்டாலும், கெட்ட வழக்கத்தினால் தனக்கும் குடும்பத்துக்கும் அதிலிருந்து உண்டாகிற கஷ்ட நஷ்டங்களினிமித்தம் சாதாரணமாய் பாவமில்லாமலிருப்பது அரிது.

(௭) மதுபானத்தாலும் இலாகிரி வஸ்துக்களாலும் எண்ணிக்கையற்ற பொல்லாப்புகள் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் உண்டாகிறதினாலும், அவைகளைக் கொஞ்சம் உருசி பார்க்கத் துவக்குகிறவர்கள் வரவர பெரும் குடியரென

சீர்குலைந்து திரிகிறதினாலும், மதுபானத்தையும் இலாகிரிவஸ்துக்களையும் விஷமுள்ள சர்ப்பமெனத் தூரத்தள்ளி ஜீவிப்பது சகல புத்தியுள்ள மனுஷருக்கும், விசேஷமாய் நல்ல கிறீஸ்துவர்களுக்குமுரிய கடமை.

(அ) பெற்றோர்கள் குடியர்களாயிருந்ததினால், எத்தனையோ வீட்டில் சண்டை சச்சரவும் சமாதானக் குறைவும் ஓயாது ஒழியாது குடிகொண்டிருப்பதுமன்றி, குடும்பமுழுதும் நாசமாகி தேவ சாபத்துக்குள்ளானது. இப்பேர்ப்பட்டவர்களுடைய பிள்ளைகள் சாப்பாட்டுக் இல்லாமல் வருந்தி, தங்கள் அந்தஸ்துக்குத் தக்க படிப்பும் நல்லொழுக்கமுமின்றி, இளைய பிராயத்திலேயே அநேக துர்ப்பழக்கங்களில் மூழ்கி, கெட்டலைந்து போகிறதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

(ஆ) குடியினால் மோகம் உண்டாகிறதென்றும், அது சண்டை சச்சரவு கோபம் முதலிய சகலவித பொல்லாப்புகளுக்கும் எவ்வித கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணமாயிருக்கிறதென்றும் வேத புஸ்தகங்களிலிருந்து அறிகிறோம்.—இரட்சணியத்துக்கு மகா பெரிய தடங்கலான பாவங்களுள் குடிவெறியானது ஒன்று என அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். "குடிவெறியரும் சர்வேசுரனுடைய இராச்சியத்தை அடைய மாட்டார்கள்" என்கிறார்.



(ம) தலையான பாவங்களுக்கு எதிரான புண்ணியங்களாவன:—தாழ்ச்சி—பொறுமை—கற்பு—உதாரம்—மட்டசனம்—பிறர்சிநேகம்—சுறுசுறுப்பு.

---

## இரண்டாம் பிரிவு.

---

### I. தேவ வரப்பிரசாதத்தின் பேரில்.

---

**1. தேவ வரப்பிரசாதமாவதென்ன?**

நாம் மோக்ஷத்தை அடைய சர்வேசுரன் இலவசமாய்ச் செய்கிற ஞான ஒத்தாசையை வரப்பிரசாதமென்கிறோம். (வரம்=கொடை; பிரசாதம்=தேவகிருபை, உபகாரம். சர்வேசுரன் தமது தயவினாலே அளிக்கிற உபகாரம்). யாதொரு கடமையுமில்லாதிருக்க, யாராவது ஒரு காரியத்தை இலவசமாய்க் கொடுத்தால், அது சகாயம் அல்லது வரம் என்று சொல்லத்தகும்.

**2. மனிதனுடைய சுபாவ ஒழுங்கின் பேரில்.**

(க) சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களின் மட்டில் சர்வேசுரனுக்கு எவ்வித கடமையும்

இல்லை. ஆகையால் அவர் நமக்குச் சுயதயவினால் அளிக்கிற உயிரும், ஆத்துமசரீர நற்குணங்களும் வரம் என்னப்படும். ஆனால் இவைகள் மனித சுபாவத்துக்குரியவைகளானதால், வழக்கமாய் இவைகளைத் தேவ வரப்பிரசாதமென்று சொல்லுகிறதில்லை. சர்வேசுரன் யாதொருவஸ்துவை உண்டாக்கும்போது, அது தனது கதியை அடைவதற்கு வேண்டிய சக்தியையும் குணங்களையும் அளிக்கிறதுமல்லாமல், சுபாவத்துக்கடுத்த கிரியைகளைச் செய்வதற்கு விசேஷ உதவி புரிந்தருளுகிறாரென்பது நிச்சயம். இதுவே சுபாவ ஒழுங்கு என்னப்படும்.

(௨) சர்வேசுரன் தம் கிருபையினாலே ஸ்தாபித்த சுபாவ ஒழுங்குப்படி சில கொடைகளை நமக்கு அளிப்பது அவசரமாயிருந்தாலும், வேண்டிய அளவுக்கும் தொகைக்கும் மேல் அதிகமாய்க் கொடுக்கப்படுகிறதெல்லாம் இலவசக் கொடைகளென்னப்படும். இப்படியே ஒரு மணிநேரம் சீவிப்பதற்குப் பதிலாக அநேக வருஷம் சுக சௌக்கியமாய் சீவிக்கச் செய்வதும், சில தத்துவங்களுக்குப் பதிலாக எல்லா தத்துவங்களையும் பூரணமாய் அளிப்பதும், ஒருக்காலும் பேதப்படாத புத்தியைத் தந்தருளுவ



தும், இவை முதலான கொடைகள் இலவசமாய்க் கொடுக்கப்பட்ட வரங்களாகும்.

(௩) மனிதனுக்குரிய சுபாவ அந்தஸ்து எதில் அடங்கியிருக்கிறதென்றால், சர்வேசுரன் யாதொரு சத்தியத்தைத் தாமே வெளிப்படுத்தாமலும், தேவ வரப்பிரசாதத்தைக் கொடாமலும், மனுஷனைப் பராமரித்து, சுபாவத்துக்குரிய உதவிகளை மாத்திரம் அவனுக்குத் தந்திருக்க, அவன் தனக்கு இயல்பாயுள்ள தத்துவங்களாகிய புத்தியையும் மனதையும் கிரமமாய் உபயோகித்து, தன் அந்தஸ்துக்குரிய பாக்கியத்தை நாடி சீவிக்கும் சீவியமானது மனுஷ சுபாவத்துக்குரிய அந்தஸ்தாகும்.

(௪) சர்வேசுரன் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களின் மூலமாய்த் தமது இலட்சணங்களை மனிதனுக்கு வெளிப்படுத்தி, அவைகள் ஒவ்வொன்றிற்கும் தமது அளவில்லாத நன்மைத்தனத்தைக் கொஞ்சம் பகிர்ந்து கொடுத்திருக்கிறாரென்பது யாவருக்கும் தெரிந்த காரியம். மனிதன் தன் சுபாவ அந்தஸ்திலிருந்து உயர்த்தப்படாவிட்டால், சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களைக் காண்பதினாலே, அவைகளைப் படைத்த சர்வேசுரனைத்தானே ஒரு கண்ணாடியில் பார்த்தாற்போல் அறிந்து, அவைகளின் அதிசயமான

அலங்காரத்தினிமித்தம் அளவில்லாத நன்மைத்தனமுள்ள கடவுளைச் சிநேகித்து, தன் புத்தி நியாயத்துக்கேற்ற கற்பனைகளையும் வேதத்தையும் மனச்சுவாதீனமாய் அநுசரித்து, இப்படிச் சிலகாலம் சோதிக்கப்பட்டபின், சுபாவபாக்கியத்தை அநுபவித்திருந்திருப்பான்.

(ங) சுபாவபாக்கியமாகிறதென்ன? சிருஷ்டிகளைக்கொண்டு சர்வேசுரனைக் கண்டறிந்து சிநேகித்து, அதினால் திரளானபாக்கியத்தைச் சுகிப்பதும், மேற்சொன்ன நன்மைகளை ஒருபோதும் இழந்துபோகிறதில்லையென்று நிச்சயமாயிருக்கிறதுமே மனுஷனுக்குச் சுபாவபாக்கியமாகும். இவை இரண்டும் அவனுக்குச் சம்பூரண திருப்தி உண்டாக்கப்போதும்.

### 3. மனிதசுபாவ அந்தஸ்துக்கு மேலான அந்தஸ்தின்பேரில்.

சர்வேசுரன் சிருஷ்டிக்கப்பட்ட எந்தச் சுபாவத்துக்கும் மேலாக மனிதனை உயர்த்தி, மோக்ஷத்தில் நாம் நித்தியானந்த சீவியத்தை அடையும்படி தயவோடு அளிக்கிற உதவி சகாயங்களுக்கு மாத்திரம் தேவவரப்பிரசாதமென்கிற பேர் செல்லும்.

மனித சுபாவத்துக்கு மேற்பட்ட இந்தப் பரம வரப்பிரசாதங்களில் இரண்டு வகை



யுண்டு: வெளி வரப்பிரசாதங்களானவை சில, உள் வரப்பிரசாதங்களானவை சில.

(சு) வெளி வரப்பிரசாதங்களேவை?

சர்வேசுரன் நமக்கு அறிவித்த மெய்யான வேதம், சேசுக்கிறீஸ்துநாதருடைய மனித அவதாரம் சீவியம் மரணம், கிறீஸ்துவர்களான தாய் தந்தைகள், பிரசங்கம், ஞானவாசகம், புத்திமதிகள், பத்திமான்கள் காட்டும் நன்மாதிரிகை, தேவகற்பனை முதலிய ஞான உதவிகள் மனிதனுக்கு வெளிப்பட இருப்பதால், அவைகள் நித்தியபாக்கியத்தை அடைய உதவியாகிய வெளி வரப்பிரசாதங்களாம்.

(உ) வெளி வரப்பிரசாதங்கள் மோக்ஷத்தைச் சேருவதற்குப் போதாது. உள் வரப்பிரசாத ஒத்தாசையின்றி, வெளி வரப்பிரசாதம் தன்னாலே தானே ஒரு மேலான பலனையும் விளைவிக்கிறதுமில்லை, நமது ஆத்துமத்தை நித்திய சம்பாவனைக்குரிய எந்த நன்மையும் செய்யத்தூண்டிவிடுகிறதுமில்லை. ஆனால் இப்போது இருக்கிற தேவ பராமரிப்பின் ஒழுங்குப்படி, வெளி வரப்பிரசாதத்தோடு கூட சர்வேசுரன் எப்போதும் தயவினாலே உள்வரப்பிரசாதத்தையும் அளித்துவருகிறார். அதின் வழியாக நமது புத்திக்கு ஞானத்தெளிவு கொடுத்து, நமது மனதை

சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்துகிறார்.

இனி வெளி வரப்பிரசாதத்தின்பேரில் ஒன்றும் பேசாமல், உள் வரப்பிரசாதத்தைப் பற்றி மாத்திரம் விவரித்துக்காட்டுவோம்.

4. உள் வரப்பிரசாதமாகிறதென்ன?

நமது ஆத்தும தத்துவங்களைச் சுபாவத்துக்குமேலாக உயர்த்தவும், சுபாவத்துக்கு மேலான கிரியைகளைச் செய்ய சக்தி தந்தருளவும், நமக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற தேவ வரமே உள் வரப்பிரசாதமென்னப்படும். அதைக்கொண்டு மனித சுபாவத்துக்கு எட்டாத மோக்ஷகதியை அடையவும், அவ்வுன்னத கதிக்கடுத்த ஞானக்கிரியைகளைச் செய்யவும், சக்தியுள்ளவர்களாகிறோம்.

(க) சுபாவத்துக்கு மேற்பட்ட ஒழுங்கில் நமக்குக் கிடைப்பதெல்லாம் இலவசக்கொடைகளாகும். சுபாவ ஒழுங்கைப்பற்றிப் பேசும்போது, சர்வேசுரன் நமக்கு வேண்டிய அளவுக்கும் தொகைக்கும் மேலாக கொடுக்கிறதைமாத்திரம் இலவசக்கொடை என்று சொல்லுகிறோம். மேலான ஒழுங்கிலோவென்றால், இக்கொடைகள் அதிகமாயிருப்பதினால் மாத்திரமல்ல, வெகு வெகு சொற்பமாயிருந்தாலுமே, இவை முழுவதும்



மெய்யாகவே இலவசக் கொடைகள் ஆகும். ஏனெனில், நமது மேலான கதியைச் சேர்ந்தவைகளில் யாதேனும் அடைய நமக்கு அற்பச் சுதந்தரமுங் கிடையாது. இவைகள் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுக்கு முழுவதும் மேற்பட்டதாயிருக்கிறபடியால், இவைகளை விசேஷித்த விதமாய் இலவசக் கொடைகள் என்ன வேண்டியது.

(உ) சர்வேசுரன் மனிதனைச் சுபாவமான அந்தஸ்தில் உண்டாக்காமல், மேலான கதியாகிய தேவ தரிசனத்தை அவனுக்கு நியமித்திருக்கிறதற்கு அவருடைய அளவில்லாத கிருபையே காரணம். இந்த நமது மேலான கதிக்கு ஒத்தபிரகாரம் ஜீவிப்பது மேலான அந்தஸ்தென்றும், அதற்கு உதவுமான வழிபாடுகளெல்லாம் மேலான ஒழுங்கு என்றும் சொல்லப்படும்.

(ங) சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவுக்கு இப்பேர்ப்பட்ட மேலான வரம் ஏதேனும் அளிக்கப்படக்கூடுமோ என்று [illegible] சுபாவ புத்தியைக் கொண்டு நாம் நினை[illegible]தலாய் இயலாது. சர்வேசுரன் தமது [illegible]டற்ற சிநேகத்தினால் இந்த மேன்மையு[illegible]ள அந்தஸ்துக்கு மனிதனை உயர்த்தியிருக்கிற[illegible]ாக, அவரே வெளிப்படுத்த வேண்டியிருந்த[illegible]

5. அந்நாள் முதற்கொண்டு சகல மனிதரும் சுபாவத்துக்கு மேலான கதிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(க) சர்வேசுரன் சுபாவ கதிக்கு மாத்திரமே மனிதனை அழைத்திருந்தாலும், அவன் முறைப்படாமல் மிகவும் நன்றியறிந்திருக்கவேண்டியது. மனிதனைச் சுபாவ கதிக்கு மாத்திரம் உண்டாக்குவது தேவ ஞானத்துக்கும் நீதிக்கும் ஒத்ததானாலும், அது அவருடைய அளவில்லாத சிநேகத்துக்குப் போதுமாயில்லை. ஆதலால் சிருஷ்டிகளுக்கு உரித்தான அந்தஸ்தைக் குறிக்காமல், சர்வேசுரன் நிகரில்லாத விதமாய் சகல மனிதரையும் உயர்த்தச் சித்தமானார்.

(உ) சகல மனிதருக்கும் இப்போதிருக்கிற மேலான கதி யேதென்றால், இப்பூலோகத்தில் சர்வேசுரனைத் திவ்விய விதமாய் அறிவதும் சிநேகிப்பதும், மறுலோகத்தில் அவரைப் பிரத்தியக்ஷமாய்த் தரிசித்து, அவரது நித்திய சீவியத்துக்கும் மகிமைக்கும் பங்காளியாயிருக்கிறதுமே அவர்களுக்கு [illegible]யமாய்க் குறிக்கப்பட்ட கதியாகும். இந்தக் கதியைத்தவிர மனுஷனுக்கு வேறே கதியில்லை. நாம் இப்பூலோகத்தில் இந்த மேலான சீவியத்தைச் சீவிக்கத் துவக்கி மோக்ஷத்திலே அந்தச் சம்பூரணமாய் ஊழியுள்ளகாலம் கொண்டிருப்போம். இச்சத்



தியத்தைச் சர்வேசுரன்தானே வெளிப்படுத்தியிராவிட்டால், நாம் இதை அறிந்திருக்கமுடியாது.

6. இந்த மேலான கதியை அடையும்படி மனிதனுக்கு வேண்டியதென்ன?

(க) இந்தப் பரம மகிமைப்பிரதாபத்தைப் பெறுமுன்னே, மனிதன் ஒரு புதிய சுபாவத்தைக் கொண்டவனைப்போல், ஆத்துமத்தில் ஞானசக்தி திறமையை அடைந்திருக்கவேண்டியது. கதி எப்பேர்ப்பட்டதோ, வழிபாடுகளும் அப்பேர்ப்பட்டதாயிருக்கவேண்டும். மனுஷன் தன் சுவாதீன முயற்சியினாலே கதியை அடையவேண்டியிருப்பதினால், அவன் தனது கதிக்குரிய கிரியைகளைச் செய்வது அவசியம். கதியானது தெய்வீகத்துக்கு அடுத்ததாயிருக்கிறபடியால், அதை அடைவதற்கு உதவும் வழிபாடுகளும் தெய்வீகமுள்ளதாயிருக்கவேண்டும். ஆகையால், இந்தக் கிரியைகள் கதியைப்போலவே, மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருக்கிறதுமல்லாமல், சிருஷ்டிக்கப்பட்ட எவ்வகை சத்துவத்துக்கும் எட்டாததாயிருக்கிறது. இதின் நிமித்தம்தான், இப்பேர்ப்பட்ட கிரியைகளைச் செய்யும்படி சுபாவத்துக்கு மேலான சக்தி திறமையை நாம் அடைந்துகொள்ள வேண்டி-

யிருக்கிறது. இந்த மேலான சக்தியைக் கொடுத்து, நமது தத்துவங்களைச் சுபாவத்துக்கு மேலாய் உயர்த்துகிறதே தேவவரப்பிரசாதம். இந்தத் தேவ வரப்பிரசாதமின்றி நாம் பரகதியை அடைகிறது, முழுதும் கூடாத காரியமாமே.

(உ) தேவ வரப்பிரசாதமானது தேவ அநுக்கிரகப்பிரசாதம், தேவஇஷ்டப்பிரசாதம் என இருவகைப்படும்.

## II. தேவ அநுக்கிரகப்பிரசாதத்தின் பேரில்.

1. தேவ அநுக்கிரகப்பிரசாதமாவதேன்ன?

மோக்ஷத்துக்கான கிரியைகளைச் செய்யும்படி, சேசுநாதருடைய பேறுபலன்களின் முகாந்தரமாக, சர்வேசுரன் நமக்கு உள்ளரங்கமாய் அளிக்கிற சுபாவத்துக்கு மேலான உதவியே அநுக்கிரகப்பிரசாதமாகும். ("அநுக்கிரகம்" என்கிறதற்கு ஒத்தாசை என்று அர்த்தம். ஒவ்வொரு நற்கிரியைக்கும் சர்வேசுரன் கொடுக்கிற மேலான உதவி.)

தேவ இஷ்டப்பிரசாதத்தை நாம் அடையவும், அது முன்னமே நமக்குள் இருந்தால்,



அதை அதிகரிக்கவும், வேண்டிய நற்கிரியைகளைச் செய்வதற்கு சக்தியைக் கொடுக்கும் தேவ உதவியானது அநுக்கிரகப்பிரசாதம் என்று சொல்லப்படும்.

(உ) புத்திக்கும் மனதுக்கும் வருகிற உதவி என்ன? அநுக்கிரகப்பிரசாதம் மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்ட சக்தியை அளிக்கிறதுமல்லாமல், நாம் செய்யவேண்டிய நன்மைகளை விளக்கிக்காட்டி புத்திக்கு ஞானவெளிச்சங் கொடுக்கிறது.

இன்னமும் நன்மையின்பேரில் ஆசையைத் தூண்டி எழுப்பி மனதைத் திடப்படுத்துகிறது. நன்மையைச் செய்யவும், தின்மையை விலக்கவும், தக்க உதவி அளிக்கின்றது. இவ்விதமாய்ச் செய்த கிரியைகள் மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்ட மேன்மையை அடைந்து, சர்வேசுரனுக்கு ஆனந்த சந்தோஷத்தை விளைவிக்கின்றன.

(உ) இது எப்படி நேரிடுகிறதென்று ஒரு உவமையைக்கொண்டு எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கலாம். ஓர் புஸ்தகத்தில் அக்ஷரங்கள் பலவித மையினால் எழுதப்பட்டிருக்கிறதாக வைத்துக்கொள்ளுங்கள். அதில் கருப்பு மையினாலேயும், தங்க மையினாலேயும், எழுதப்பட்ட எழுத்துக்களுண்டு. இவைகள் ஒரேமாதிரி அக்ஷரங்

களானாலும், மையின் முகாந்தரமாகப் பார்வைக்கு ஒன்றுபோலில்லை, கருப்பு மையினாலே எழுதப்பட்ட எழுத்துக்கும், தங்கத்தினாலே எழுதப்பட்ட எழுத்துக்கும், மகா வித்தியாசமுண்டு. சுபாவமாய்ச் செய்கிற கிரியைக்கும் அநுக்கிரகப்பிரசாத உதவியால் செய்கிற கிரியைக்கும் இதைவிட பாரதூரமான வித்தியாசம் உண்டாகிறது. சுபாவ பலத்தினால் செய்யக்கூடாத கிரியைகளை முடித்து, அவைகளை மோக்ஷத்துக்கான விதமாய்ப் பண்ணுகிறதற்கு வேண்டிய சக்தியை வரப்பிரசாத உதவியினால் அடைகிறோம்.

2. அநுக்கிரகப்பிரசாதம் நமக்கு அவசரமா?

ஆத்தும இரக்ஷணியத்துக்கான கிரியை ஏதாவது செய்யவேணுமானால், இந்த வரப்பிரசாத முழுதும் அவசரம்.

(க) அநுக்கிரகப்பிரசாதமின்றி, புத்திவிவரமுள்ள மனுஷன் தேவ இஷ்டப்பிரசாதத்தை அடையவும், அதை அடைந்த பின் மோக்ஷ சம்பாவனைக்குரிய நற்கிரியைகளைச் செய்யவும், பரிச்சேதம் யாதொன்றும் செய்யமுடியாது. இரக்ஷணியத்துக்கு உதவுமான பிரகாரம் சேசுவின் திருநாமத்தை உச்சரிக்கவும், வேண்டிக் கொள்ளவும், நல்ல நினைவு நல்ல ஆசைப்படவு,



முதலாய் நம்மாலே கூடாது. அநுக்கிரகப்பிரசாதம் எப்பேர்ப்பட்ட சிருஷ்டியின் சுபாவத்துக்கும் பேறு பலனுக்கும் மேற்பட்டதினாலே, தமது சுயதயவினாலே சர்வேசுரன் அந்த அநுக்கிரகப்பிரசாதத்தை அளிக்காவிட்டால், மனிதனுடைய கிரியைகளுக்கும் இந்தப் பரம கதிக்கும் யாதொரு சம்பந்தமும் பொருத்தமுமிராது.

(உ) ஆகையால் அநுக்கிரகப்பிரசாதம் எப்போது வேண்டியது?—அநுக்கிரகப்பிரசாதம் யாதொரு மேலான கிரியையை முடிக்கிறதற்கு மாத்திரமல்ல, அதைத் துவக்குகிறதற்குமுதலாய் முழுதும் அவசரம். விசுவாசத்துக்கும் இரக்ஷணியத்துக்கும் உதவுமான முதல் நினைவு ஆசையை நமது சுய மனதைக்கொண்டு எழுப்பவேணுமென்றும், அதற்குப் பின் மாத்திரம் முதல் அநுக்கிரகப்பிரசாதம் அளிக்கப்படுகிறதென்றும் சில பதிதர் பிதற்றுகிறார்கள். இது தேவ விசுவாசத்திற்கு ஒவ்வாதது. ஏனெனில் நாம் நமது சொந்த பலத்தினாலே ஏதேனும் செய்யக் கூடுமானால், முதல் அநுக்கிரகப்பிரசாதம் சர்வேசுரனாலே இலவசமாய்க் கொடுக்கப்படுகிறதில்லையென்று சொல்லவேண்டியிருக்கும்.

நாம் மோக்ஷத்துக்குரிய யாதொரு காரியம் துவக்குமுன், தேவ அநுக்கிரகப்பிரசாதம் நமது புத்தியை விளக்கி, மனதை எழுப்பித் திடப்படுத்துகிறதுமன்றி, கடைசிமட்டும் நமக்கு உதவியாயிருப்பது அவசியம். அந்த உதவி இல்லாவிட்டால், நமது ஆசையெல்லாம் வீண் ஆசையும், பிரயாசமெல்லாம் வீண் பிரயாசமுமாயிருக்கும். ஆத்தும ஈடேற்றத்தைச் சேர்ந்ததெல்லாம் மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்டதாயிருக்கிறதென்பது மறுக்கப்படாத சத்தியம். ஏனெனில் கதி மேலானதாயிருக்கிறதினாலே, அதின் துவக்கமும், அதற்குரிய வழிபாடுகளும், மேலானவைகளாயிருக்க வேண்டுமென்பது பரிஷ்காரம்.

(௩) முதல் தேவ அநுக்கிரகப்பிரசாதத்தைப் பெறுகிறதற்கு நாம் நமது சொந்த பலனால் யாதொரு ஆயத்தமும் செய்ய முடியாது. ஆயினும் சர்வேசுரனுடைய இரக்கத்தினாலே, இலவசமாய் அளிக்கப்பட்ட முதல் வரப்பிரசாதத்திற்குப் பிரமாணிக்கமாயிருந்து, யாதொரு நற்கிரியை செய்தோமாகில், அது புதிய வரப்பிரசாதங்களையும், பாவப் பொறுத்தலையும், நமக்கு அடைந்தருளுவதற்கு ஏற்ற ஆயத்தமாகும்.



3. அநுக்கிரகப்பிரசாதம் நம்மைக் கட்டாயம் பண்ணுகிறதில்லை.

அதைப் பெற்றுக்கொள்ளப் பிரியமானால் பெற்றுக்கொள்ளலாம்; தள்ளிப்போடவேணுமானாலும் தள்ளிப்போடலாம். இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளுதல் நமது கைக்குள்ளிருக்கிறது. அதைப் பெற்றுக்கொண்டபின்னும், நமது சுகிர்த கிருத்தியங்களை மனங்கொண்டபடி சுவாதீனமாய்ச் செய்கிறோம். அநுக்கிரகப்பிரசாதம் சுபாவமாய் நிறைவேற்றக்கூடாத அநேக காரியங்களைச் செய்ய உதவியாயிருக்கிறதென்றாலும், அது யாதொரு பலவந்தமும் பண்ணுகிறதில்லை.

சூரியனுடைய பிரகாசம் எங்கும் வீசுகையில், அப்பிரகாசத்தினால் பற்பல வஸ்துக்களைப் பார்க்கிறோம். ஆனால் யாதொருவன் தன் கண்ணை மூடிக்கொண்டால், யாதொரு வஸ்துவையும் பார்க்கமாட்டான். இப்படிப் பாராதிருப்பதற்கு அவன் மனது காரணமேயல்லாமல், சூரியன் காரணமல்லவென்று எவனும் சொல்லுவானல்லோ? இந்தப் பிரகாரமே நமக்குப் பிரியமானால், நமக்கு அளிக்கப்பட்ட அநுக்கிரகப்பிரசாதத்தைத் தள்ளிப்போட்டு, மோக்ஷத்துக்கான யாதொரு நற்கிரியையும் செய்யாம

விருக்கலாம்; அல்லது அதை ஆசையுடன் கையேற்றுக்கொண்டு, அதின் ஏவுதலுக்கு இணங்கி, அதினால் அளிக்கப்படும் மேலான சக்தியைக்கொண்டு ஏராளமான பேறுபலன்களைச் சேர்த்துக் குவிக்கலாம்.

(௧) அநுக்கிரகப்பிரசாதத்துக்கு நாம் இணங்கி, அதனோடுகூட ஒத்து நடக்கவேண்டியது. அதற்கு அர்த்தமென்னவென்றால், அநுக்கிரகப்பிரசாத ஏவுதலுக்குச் செவிகொடுத்து, அதினால் உண்டாகும் நல்ல ஆசைகளுக்குச் சம்மதித்து, அது அளிக்கும் பலத்தைக்கொண்டு முயலவேண்டியது. அநுக்கிரகப்பிரசாதமின்றி இரக்ஷணியத்துக்காக நம்மால் ஒன்றும் செய்யமுடியாதென்பது மெய்யே. ஆயினும் எல்லாம் நமது முயற்சியில் மாத்திரம் அடங்கியிருந்தாற்போல, இடைவிடாது பிரயாசப்படவேண்டியது. நம்முடைய சொந்த பேறுபலன்களினால் நாம் அநுக்கிரகப்பிரசாதத்தை அடையக்கூடாதானாலும், பாவத்தை விலக்கவும் புண்ணியத்தைச் செய்யவும் வேண்டிய மேலான ஒத்தாசையைச் சர்வேசுரன் எப்போதும் தந்தருளுகிறாரென்பது குன்றாத சத்தியம்.

இப்படியே மழையில்லாமல் பூமியிருந்தால் அல்லது பூமியில்லாமல் மழையிருந்தால் ஒரு பலனு



மிராது. அதுபோலவே, ஞானமழையாகிய வரப்பிரசாதமில்லாமல் நாமொன்றும் நடத்த முடியாது. நாமில்லாமல் வரப்பிரசாதமும் யாதொரு பலனும் விளைவிக்காது. வரப்பிரசாதத்துக்கு இணங்காததினாலே அநேகர் நித்திய ஆக்கினைக்குள்ளாகிறார்களேயொழிய, வரப்பிரசாதக் குறைவினிமித்தம் நரகத்தில் விழுகிறவர்கள் ஒருவருமில்லை.

(௨) நம்மால் கூடாததைச் சர்வேசுரன் கட்டளையிடுகிறதில்லை. சர்வேசுரன் எதாவது ஒரு காரியம் கட்டளையிடும்போது, அதைச் செய்வதற்குப் போதுமான உதவி தந்தருளுகிறார். உடனே கொடுக்காவிட்டால், வேண்டிய பலனை அதிகமதிகமாய் அடையும்படி, மன்றாட்டு வரத்தையாகிலும் கொடுத்தருளுகிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. செபம், தேவதிரவிய அநுமானங்கள், நற்கிரியைகள் முதலியவைகள் நமக்கு அவசியமான உதவியை அடைவதற்கான வழிபாடுகளென்றாலும், வேண்டிக்கொள்ளுகிறதற்கு அளிக்கப்படுகிற தேவ ஒத்தாசையே முதல் வரப்பிரசாதமாகும். ஆகையால் நாம் அதை ஆவலாய் ஏற்றுக்கொண்டு, பிரமாணிக்கமாய் உபயோகிக்கக்கடவோம்.

(ங) நாம் வேண்டிக்கொள்ளாவிட்டால், நமதுமேல் குற்றம். பட்டினியாய்ச் சாகிறவன் தன் கையிலே பணத்தை வைத்துக்கொண்டு, "உணவு இல்லாமல் சாகிறேன், சாகிறேன்" என்று மனம் நொந்து அலறிக்கதறினால், அவன் புத்தியீனனென்று சொல்லுவோமல்லவோ?

வேண்டிக்கொள்ளும்படியான அநுக்கிரகப் பிரசாதம் பணத்துக்கு ஒப்பாயிருக்கிறது. சர்வேசுரன் நமது சத்துவத்துக்கு மேலிட்ட சோதனை உண்டாகும்படி விட்டுவிடும்போது, அச்சோதனையை ஜெயிப்பதற்கு வேண்டிய சக்தியை நாம் செபத்தின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளும்படி விசேஷ உதவி செய்கிறார். எவ்வளவுக்குச் சோதனை அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கு அதிக பத்தி சுறுசுறுப்புடன் மன்றாட வேண்டும். ஏனெனில் சர்வேசுரன் நமது மன்றாட்டுக்குத் தக்கது அதிகமதிகமான வரப்பிரசாதங்களைக் கொடுப்பார்.

**4. சர்வேசுரன் வரப்பிரசாதத்தை அளிக்கிற முறையென்ன?**

சகல ஜாதி மனுஷரும் கரையேறவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறதினாலேயும், சேசுநாதர்சுவாமி எல்லோருக்காகவும் மரணம்



அடைந்திருக்கிறதினாலேயும், அஞ்ஞானிகளுக்கு முதலாய் ஈடேறுகிறதற்குப் போதுமான அநுக்கிரகப்பிரசாதங்களை எக்காலத்திலும் அளித்துவந்திருக்கிறாரென்பது தப்பாத சத்தியம்.

(க) ஆனால் சர்வேசுரன் இந்த அநுக்கிரகப் பிரசாதத்தை முழுதும் இலவசமாய்க் கொடுக்கிறாரென்பதினாலேயும், எப்பேர்ப்பட்ட சிருஷ்டியும் தனது சொந்த பலத்தினாலே அதைக் கொஞ்சமாவது அடையக்கூடாதென்பதினிமித்தமும், சர்வேசுரன் தமது அளவறுக்கப்படாத கிருபை ஞானம் நிறைந்த பராமரிக்கைக்கேற்க அளிப்பதற்கு முழு சுயாதீனமுள்ளவராயிருக்கிறார்.

(உ) சர்வேசுரன் சர்வ அதிகாரமும் சுயாதீனமுமுள்ள எஜமானானதினாலே, அநுக்கிரகப் பிரசாதங்களை எல்லோருக்கும் ஒரே அளவாய்க் கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல. அவர் சிலருக்குக் கூடவும், சிலருக்குக் குறையவும் கொடுக்கக்கூடும். ஆயினும் சர்வேசுரன் நரகத்தில் விழுந்[illegible]க்கப் பெரும் பாவிகளுக்கு முதலாய் ஈடேற்றத்துக்குப் போதுமான அநுக்கிரகப்பிரசாதங்களை அளித்தாரென்றும், அப்படி

அவர்கள் கெட்டதற்குக் காரணம் அவர்கள் மனதுதானென்றும், நடுத்தீர்வையிலே எல்லோரும் அறியப் பிரசித்தமாய் ஒப்பிப்பார்.

**5. மனிதன் அநுக்கிரகப்பிரசாதமின்றி நற்கிரியைகளைச் செய்யக்கூடுமா?**

(க) மனிதன் தன் சொந்த பலத்தினாலே சில சுபாவ நற்கிரியைகளைச் செய்யலாமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இப்புண்ணியங்களுக்கு மோக்ஷ சம்பாவனை கிடையாது.

(உ) எளிதாயிருக்கிற ஒரு கற்பனையை நிறைவேற்றி, சில பாவங்களை விலக்குவதற்குச் சுபாவ பலன் போதுமாயிருந்தாலும், சகல கற்பனைகளையும் சரிவர அநுசரிக்கிறதற்கு அநுக்கிரகப் பிரசாதம் முழுதும் அவசியம்.

(ங) நீதிமான் அநுக்கிரகப்பிரசாதத்தின் உதவியைக்கொண்டு, ஒவ்வொரு அற்பப் பாவத்தையும் தனித்தனியே விலக்கக்கூடும். ஆனால் அபூர்வமான ஒத்தாசையின்றி, சகல அற்பப் பாவங்களையும் விலக்கமுடியாது. இந்த மேலான வரம் தேவமாதாவுக்கு அளிக்கப்பட்டது. 6

(ச) ஒருபோதும் சாவானபாவத்தில் விழாதிருப்பதற்கு ஒரு விசேஷ வரம் அவசியம். சர்வே



சுரன் இந்த வரத்தை அப்போஸ்தலர்களுக்கு அளித்தருளினார்.

(ரு) கடைசிமட்டும் நிலைநிற்கிற வரமானது இஷ்டப்பிரசாதத்தோடே சாகிறதற்கான சுதந்தரமாகும். அது ஒருவனுக்குமில்லை. அதை அடைவதற்குத் தேவகிருபை அவசரம்.

## III. தேவ இஷ்டப்பிரசாதத்தின்பேரில்.

**1. தேவ இஷ்டப்பிரசாதமாவதென்ன?**

மனித சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்தில் நம்மை உயர்த்தவும், தேவ சுபாவத்துக்கு ஒருவிதத்தில் பங்காளியாக்கவும், சர்வேசுரன் இலவசமாய் அளிக்கிற வரமானது தேவ இஷ்டப்பிரசாதமெனப்படும்.

"இஷ்டம்" என்பதற்கு 'சிநேகம்' என்றும், "பிரசாதம்" என்பதற்கு 'வரம்' என்றும் அர்த்தமாம்.—அதாவது: அளவில்லாத தயையுள்ள சர்வேசுரன் இஷ்டப்பிரசாதத்தோடே தமது சிநேகத்தையும், அத்துடன் சேர்ந்த சகல மேலான ஞான நன்மைகளையும் தந்தருளுகிறார்.

**இஷ்டப்பிரசாதத்தைச் சேர்ந்த மேலான கொடைகளென்ன?**—இஷ்டப்பிரசாதத்தினாலே சர்வேசுரன் சாவான பாவமில்லாத மனிதனிடத்தில் விசேஷ சிநேகத்தோடே வாசம்பண்ணி,

அவனுடைய ஆத்துமத்தை அர்ச்சித்து, அவனைத் தமது சுவீகாரப் பிள்ளையாகத் தெரிந்துகொண்டு, தமது ஏகசுதனாகிய சேசுநாதர்சுவாமியோடுகூட மோக்ஷ இராட்சியத்துக்கு அவனை, உடன் பங்காளியாக்கி, இப்பூலோகத்தில் நித்திய சம்பாவனைக்குரிய நற்கிரியைகளைச் செய்ய அவனுக்கு உன்னத சக்தியை அளித்தருளுகிறார். ஆத்துமம் சரீரத்துக்குச் சுபாவமான உயிராயிருக்கிறதுபோலே, தேவ இஷ்டப்பிரசாதமானது ஆத்துமத்திற்குச் சுபாவத்துக்கு மேற்பட்ட ஞான உயிராயிருக்கிறது. இம்மேலான கொடைகள் யாவும் நமக்காக மரித்த சேசுநாதரின் ஏராளமான பேறுபலன்களைக் கொண்டு அடைந்துகொள்ளுகிறோம்.

## 2. சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்து எதில் அடங்கியிருக்கிறது?

(க) அநுக்கிரகப்பிரசாதத்தினாலே நாம் மனித சுபாவத்துக்கு மேலாக உயர்த்தப்படுகிறோமென்பது உண்மைதான். ஆயினும் அது நிலைமையான அந்தஸ்தல்ல. அநுக்கிரகப்பிரசாதம் ஆத்துமத்தில் எப்பொழுதும் நிலைத்துக் குடிகொண்டிராமல், ஒரு கிரியை செய்ய எவ்வளவு நேரம் செல்லுகிறதோ, அவ்வளவு நேரமாத்திரம் நம்மிடத்திலே நீடித்திருக்கும். ஆன



னால் நாம் யாதொரு நற்கிரியை செய்வதற்கு, ஒவ்வொரு விசையும் இந்தத் தேவ உதவி நமக்குக் கொடுக்கப்படுகிறது அவசியம்.

(உ) இஷ்டப்பிரசாதமோவென்றால், ஆத்துமத்தில் நிலைமையாய்க் குடிகொண்டிருக்கிறது:— சுபாவ ஒழுங்கின்பிரகாரம் ஜீவிக்கவும், அதற்குரிய கிரியைகளைச் செய்யவும், சர்வேசுரன் நிலைமையான சக்தி நமக்குக் கொடுக்கிறதுபோலே, சுபாவத்துக்கு மேலான ஒழுங்கிலும் தக்கவிதமாய் ஜீவிக்கவும், நித்திய சம்பாவனைக்குரிய கிரியைகளைப் பண்ணவும், நிலைமையான சக்தியை நமக்குத் தந்தருளுகிறார். இஷ்டப்பிரசாதத்தைக்கொண்டுதான் இந்த மேலான சக்தியை அடைந்துகொள்ளுகிறோம்.

(ங) இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவன் யாதொரு நற்கிரியை செய்யவேணுமானால், அவனுக்கு அநுக்கிரகப்பிரசாதம் அவசியம்:—தேவ இஷ்டப்பிரசாதம் நமது ஆத்துமத்தில் நிலைமையாய்க் குடிகொண்டிருந்து சுபாவத்துக்கு மேலான சீவியத்தை அளித்து, அதற்குரிய கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறதென்றாலும், அதைக்கொண்டு எந்தக் கிரியையும் செய்வதற்கு அநுக்கிரகப்பிரசாத உதவி அவசரம். ஒரு காரியத்தைப் பார்க்கவேணுமா

னால், கண் சௌக்கியமாயிருக்கவேண்டியதுமல்லாமல், வெளிச்சமும் அவசியமாயிருப்பது போலே, நாம் நற்கிரியைகளைச் செய்வதற்கு நமது ஆத்துமத்தின் தத்துவங்கள் சுபாவத்துக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறதுமல்லாமல், அநுக்கிரகப்பிரசாதமும் நமது புத்திக்குப் பிரகாசம் கொடுத்து, நமது மனதை ஏவித் தூண்டி ஸ்திரப்படுத்தவேண்டியது. ஏனெனில் ஆத்துமத்தின் தத்துவங்கள் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருந்தாலும், முன்னைப்போலவே தங்களுக்கு இயல்பான கிரியைகளைச் செய்யக்கூடும். இந்தக் கிரியைகள் சுபாவ ஒழுங்கிலிராமல், மேற்பட்டதாயிருக்கும்படி, அநுக்கிரகப்பிரசாதம் ஆத்துமத்தின் தத்துவங்களுக்கு ஞான வெளிச்சத்தைக் கொடுத்து, திவ்விய விதமாய் ஏவித் தூண்டுவது முழுதும் அவசியமாமே.

**3. சுபாவ ஒழுங்கில் உள்ள எந்த வஸ்துவும் தேவ இஷ்டப்பிரசாதத்துக்கு ஒப்பாகாது.**

இஷ்டப்பிரசாதத்தினாலே ஆத்துமமானது சிருஷ்டிக்கப்பட்ட எவ்வஸ்துவுக்கும் மேல் உயர்த்தப்படுகிறதென்பது சத்தியம். ஆனால் தேவ சுபாவம் மாத்திரம் படைக்கப்பட்ட வஸ்து[illegible] எல்லாத்துக்கும் மேற்பட்டிருக்கிறதினால், இஷ்



டப்பிரசாதத்தைக்கொண்டு இந்தத் தேவசுபாவத்துக்கு ஓர் வகையாய்ப் பங்காளியாகிறோமென்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இந்த அந்தஸ்தில் நமது ஆத்துமம் சர்வேசுரனுடைய அளவில்லாத அழகு சவுந்திரியத்தினால் பூரிக்கப்பட்டு, சொல்லிலடங்காத ஒளி காந்தியை அடைந்து, அவரால் அனந்த நேசத்துடன் சிநேகிக்கப்படுகிறது. சர்வேசுரன் இஷ்டப்பிரசாதத்தோடிருப்பவனைத் தம்முடைய பிள்ளையாகச் சுவீகரித்துக்கொள்ளுகிறார். அவர் ஏகசுதனாகிய சர்வேசுரனுக்குத் தமது சுபாவம், சீவியம், மகிமைப்பிரதாபம் முதலியவைகளை முழுதும் அளிப்பதுபோல, சிருஷ்டிகளாகிய நமக்கும் கொடுக்கக்கூடாததினால், மட்டுக்குள் அடங்கிய நமது ஆத்துமத்துக்கு அளவோடு மாத்திரம் அதைக் கொடுத்துவருகிறார். தமது திவ்விய குமாரனாகிய சேசுநாதர்சுவாமியோடு நம்மை உடன் பங்காளிகளாக்கி, நித்திய பேரின்ப பாக்கியத்தை நமக்குப் பகிர்ந்தருளுகிறார்.

(க) மேற்சொன்னவைகள் சுபாவ ஒழுங்கிலுள்ள எவ்வஸ்துக்களுக்கும் அளவற்றவிதமாய் மேலானவைகள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஏனெனில் இவ்விதமாய்த் தேவசுபாவத்துக்குப் பங்காளிகளாயிருப்பது சிருஷ்டிக்குச் சுதாவாய்

உரியதல்ல. ஆகையால் இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிற மனிதனுக்கு முன்பாக, சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் ஒன்றாய்க் கூட்டினாலும், அவை ஒன்றுமில்லையென்னத்தகும். சம்மனசுக்களின் சுபாவம் எவ்வளவோ உத்தமமானது! ஆனால் அவர்களும் தேவ இஷ்டப்பிரசாதமில்லாதவர்களாயிருந்தால், இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவனுக்கு எள்ளளவேனும் ஒப்பாகமாட்டார்களென்றே சொல்லவேண்டியது.

(உ) தேவ இஷ்டப்பிரசாதம் மனுஷாவதாரத்துக்குப்பின் அற்புதங்களிலெல்லாம் மேலான அற்புதமாயிருக்கிறதினாலே, அதை அடைந்திருக்கிறவனை அதிசயங்களிலும் அதிசயமென்கலாம். தேவ இஷ்டப்பிரசாதத்தினாலே மனிதனை உன்னத அந்தஸ்துக்கு உயர்த்துகிறதே தேவ வல்லமையினாலே செய்யப்பட்ட மகா மேன்மையான காரியம். வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்கிறதைப்பார்க்க, அது மேலானதென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறார். சர்வேசுரன் மனிதனுக்கு இஷ்டப்பிரசாதத்தை அளிக்கும்போது, அவனை ஒருவிதத்தில் தெய்வீகத்துக்கு உரியவனாக்குகிறார்.

4. சர்வேசுரன் நமக்குந் தெய்வீகத்துக்குரிய இலட்சணங்களை, நமது சுபாவம் பெற்றுக்கொ-



ள்ளக்கூடுமான அளவு அளிக்கிறார். இஷ்டப்பிரசாதத்தால் நம்மிடத்தில் உண்டாகிற ஆச்சரியமான மாற்றத்தைச் சற்றேனும் அறிவிக்கத் தாற்பரியங்கொண்டு, வேதபாரகர் இரும்பின் உவமையை விவரித்திருக்கிறார்கள்.

(க) இரும்பானது அகோர நெருப்பில் போட்டபிறகு, தன் சுபாவத்தை இழக்காமல், அக்கினியின் குணங்களை அடைந்துகொள்ளுமாப்போல, நாம் இஷ்டப்பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டவுடனே, சர்வேசுரன் நமது ஆத்துமத்தில் தம் தெய்வீகத்தின் சிறப்பலங்கார மகத்துவத்துடன் எழுந்தருளி, நம்முடைய சுபாவத்தை அழிக்காமல், நமது சுபாவத்துக்கு இயல்பான பலவீனத்தையும் நீசத்தனத்தையும் நீக்கி, அதைத் தமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்புகிறார். சர்வேசுரன் தேவசுபாவத்துக்குரிய இலட்சணங்களில் சிலவற்றை நமது ஆத்துமத்தில் துலங்கச்செய்து, அவைகளை நமது தத்துவங்களோடு ஒன்றித்தருளுகிறார்.

(உ) இதை வேதபாரகர்கள் ஓர் வாசனைத்திரவியத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். வாசனைத்திரவியமானது தன்னுடன் நெருங்கியுள்ள வஸ்துக்களை வாசனையினால் நிரப்புகிறதுபோல, தெய்வீகமும் இஷ்டப்பிரசாதமுள்ள ஆத்து-

மத்தில் இறங்கிவந்து, அதை ஒருவாறு தெய்வீக பரிமளத்தால் பூரிப்பிக்கின்றது.—மனித சுபாவம் இந்த ஞானசீவியத்தினால் மாறாமல், மகா மேன்மையான அந்தஸ்தை அடைகிறதென்பதை விளக்கிக்காட்ட வேறோர் உவமையும் எழுதியிருக்கிறார்கள். சாதாரணமான ஓர் வேஷ்டியைச் சிவப்பு சாயத்தில் தோய்த்தால், அந்த வேஷ்டி தன் சுபாவத்தில் மாறாதபோதிலும், அதிக விலையுயர்ந்ததாயும், அதிக மேன்மையான உபயோகத்துக்கு ஏற்றதாயுமிருக்கிறதென்று ஒத்துக்கொள்ளுகிறோம். இவ்விதமே, மனிதனும் இஷ்டப்பிரசாதத்தினால் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்படும்போது, அவனுடைய சுபாவம் மாறாதேபோனாலும், முன் தன்னாலே நிறைவேற்றமுடியாத புண்ணியங்களைச் செய்யவும், தன் சுபாவத்தினாலே மாத்திரம் அடையக்கூடாத மோக்ஷ பாக்கியத்தைச் சம்பாதித்துக்கொள்ளவும், புதியதோர் சக்தி அடைந்துகொள்ளுகிறான்.

**5. சர்வேசுரன் நம்மிடத்தில் எழுந்தருளிவரும்போது, தெய்வீகசாயலை உத்தமமானவிதமாய் நமது ஆத்துமத்தில் பிறப்பிக்கிறார்.**

(க) புத்தியறிவில்லாத வஸ்துக்கள் சர்வேசுரனுடைய அளவற்ற வல்லமை, பராமரிப்பு முத



லிய இலட்சணங்களை மாத்திரம் அறியப்பண்ணுகின்றன.

(உ) சம்மனசுக்களும் மனிதனுடைய ஆத்துமமுமோவெனில், இந்த இலட்சணங்களோடுகூட தெய்வீகபுத்தியையும், மனதையும் விளங்கப்பண்ணுகின்றன. படைக்கப்பட்டுள்ள வஸ்துக்களெல்லாவற்றிலும் சர்வேசுரனுடைய சாயலை அதிக உத்தமமாய்க் கொண்டிருப்பது புத்தி அறிவுள்ள வஸ்துக்களே. ஆனாலும், சர்வேசுரனுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இந்த வெறும் சாயல் வெகு வெகு குறைவுள்ளதென்று உடனே விளங்கும். ஏனெனில் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் சர்வேசுரனுடைய வெளிச் சீவியத்தைமாத்திரம் பிரசித்தப்படுத்துகின்றன.

(ங) தேவ இஷ்டப்பிரசாதமானது, ஆத்துமத்தில் தெய்வீகத்துக்கு அதிக ஒப்பான சாயலை உண்டாக்குகிறது.—உலோகங்களைப் படைத்துக் காப்பாற்றி நடத்தி வருகிறதானது சர்வேசுரனுடைய வெளிச் சீவியமென்று சொல்லப்படும். ஆதலால் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் தேவ இலட்சணங்களுக்கு அடையாளமாயிருக்கின்றன. ஏக சர்வேசுரன் திரித்துவமாயிருந்து புத்தியின் வழியாகத் தமது திருக்குமாரனை ஜெனிப்பிக்கிறது, மனதின்வழியாக இஸ்பிரீத்துசாந்து,

வானவர் பிதா சுதனிடத்திலிருந்து புறப்படுகிறது, இது முதலியவைகளை உட்சீவியமென்கிறோம். சிருஷ்டிகளில் இந்த உட்சீவியத்தின் அடையாளம் அற்பமேனும் கிடையாததினாலே, சர்வேசுரன்தாமே இதை நமக்கு அறிவித்திராவிட்டால், அதை அறிய நமக்கு வேறே வழி இருந்திராது. ஆனால் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட சம்மனசுக்களிடத்திலும், மனிதரிடத்திலும், இஷ்டப்பிரசாதத்தினால், இந்த உட்சீவியத்தின் அதிசயமான சாயல் உண்டாகிறது.

(ச) சர்வேசுரன் இஷ்டப்பிரசாதத்தைக்கொண்டு நமது ஆத்துமத்தில் தமது உயிருள்ள சாயலைப் பிறப்பிக்கிறார்.—தமது விசேஷ பிரசன்னத்தினாலும், அளவில்லாத சிநேகத்தினாலும், நம்மிடத்தில் தமக்குரிய உட்சீவியத்தை ஜீவித்து, தெய்வீகத்தின் சொல்லிலடங்காத உத்தம கிரியைகளை விளங்கப்பண்ணுகிறார். நமதாத்துமத்தில் தமது உட்சீவியத்தை ஜீவிக்கிறதுமன்றி, அதற்கு நம்மைப் பங்காளிகளாக்குகிறார். அதினால் நமது ஆத்துமம் சர்வேசுரனுடைய உட்சீவியத்துக்கு ஒப்பாகிற ஒரு புது சீவியத்தை அடைகிறது. இதைப்பற்றி இஷ்டப்பிரசாதத்தினாலே மனிதன் "தெய்வீக ரூபமுள்ளவன்,



ஒருவாறு சர்வேசுரனுக்கு ஒத்தவனாகிறான்" என்று வேதபாரகர்கள் சொல்லுகிறார்கள். வேத புஸ்தகத்திலும் "நீங்கள் தேவர்கள்" என்றெழுதியிருக்கிறதைக் காண்கிறோம். ஆகையால், "நீங்கள் தேவ சுபாவத்துக்குப் பங்காளிகளாயிருக்கிறீர்கள்" என்னும் அர்ச். இராயப்பருடைய வாக்கியம் முழுதும் [illegible]யானது. (II இரா. I. 4.).

### 6. நாம் சர்வேசுரனுடைய உட்சீவியத்துக்குப் பங்காளிகளாகிறதெப்படி?

தேவ இஷ்டப்பிரசாதத்தினாலே நாம் சர்வேசுரனோடு சொல்லிலடங்காத ஐக்கியத்தை அடைந்தாலும், மனிதசுபாவம் தேவசுபாவமாகவும், தேவசுபாவம் மனிதசுபாவமுமாக மாறுகிறதில்லை. இது கூடாத காரியம். சர்வேசுரன் தமது சுபாவத்தைச் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களாகிய நமக்குக் கொடுக்கமுடியாதானாலும், தமது உட்சீவியத்துக்கு நம்மைப் பங்காளிகளாக்கலாம்.

(க) அறிகிறதும், சிநேகிக்கிறதுமே அரூபிகளுடைய சீவியம்.—இதினிமித்தம் சர்வேசுரன் நித்தியமாய்த் தம்மைத்தாமே அறிகிறதும், தம்மைத்தாமே சிநேகிக்கிறதுமே தேவசீவியமாகும்.

பிதாவாகிய சர்வேசுரன் தம்மை நித்தியமாய் அறிந்திருக்கிறதினாலே, தமது சுதனாகிய வார்த்தையானவரை நித்தியமாய் ஜெனிப்பிக்கிறார். பிதாவும் சுதனும் தங்களை நித்தியமாய்ச் சிநேகிக்கிறதினாலே, தேவசிநேகமாகிய இஸ்பிரீத்துசாந்துவானவரை நித்தியமாய்ப் புறப்படச்செய் [illegible]

(உ) நாம் இந்தத் தெய்வீக சீவியத்துக்கு தேவ இஷ்டப்பிரசாதத்தினாலே உடந்தையாயிருக்கிறோம். சர்வேசுரன் நமது ஆத்துமத்தை மனித சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்தில் உயர்த்தும்போது, நாம் இப்பூலோகத்திலே அவரைத் திவ்விய விதமாய் அறியவும் சிநேகிக்கவும் விசேஷ சக்தியை நமக்குக் கொடுத்தருளுகிறார். இப்பூலோகத்தில் இந்த அறிவும் சிநேகமும் குறைவுள்ளதாயிருக்கிறதென்றாலும், மோட்சத்தில் இவைகள் உத்தமமானவைகளாயிருக்கும். இங்கே நாம் துவக்கும் தேவ சீவியம், அங்கே சம்பூரணமாய் ஊழியுள்ள காலம் நிலைத்திருக்கும்.

(ஊ) ஆயினும், நமது புத்தியும் அறிவும் மோட்சத்தில் மகா உத்தமமானவையாயிருந்தபோதிலும், எப்போதும் மட்டுள்ளவைகளாய்த்தானி-



ருக்கும். சர்வேசுரனிடத்தில் மாத்திரம் இவைகள் அளவில்லாத விதமாய் இருக்கின்றனவென்பது திருஷ்டாந்தமாய்த் துலங்குகிறது.

7. இஷ்டப்பிரசாதத்தினாலே நமக்கு வருகிற இந்த மேலான சீவியத்துக்கு மூலாதாரம் சர்வேசுரன் தாமே.

தேவ இஷ்டப்பிரசாதத்தைக்கொண்டு சர்வேசுரன் மனிதனோடு ஞானவிதமாய் ஜீவித்து, நற்கிரியைகளை நிறைவேற்றுகிறாரென்றும், மனிதன் சர்வேசுரனோடு ஜீவித்து அவைகளைச் செய்துவருகிறானென்றும் சொல்லலாம். அர்ச். அகுஸ்தீன் வசனித்ததாவது: "ஆத்துமம் சரீரத்துக்கு உயிர்கொடுத்து, அதின் சுபாவ நடபடிக்கைகளுக்குக் காரணமாவதுபோலே, சர்வேசுரன் ஆத்துமத்தில் வீற்றிருந்து, (இஷ்டப்பிரசாதத்தால்) சுபாவத்துக்கு மேலான உயிரைத்தந்து, அதின் உத்தம சீவிய நடபடிக்கைக்குக் காரணமாயிருக்கிறார்."

8. சர்வேசுரன் இஷ்டப்பிரசாதத்தோடுகூடத் தமது பிரிய பிள்ளைகளுக்குக் கொடுக்கிற தேவ உணவின்பேரில்.

சர்வேசுரன் மோட்சத்தில் தம்மை முகமுகமாய்த் தரிசித்து, சம்பூரணமாய்ச் சுகித்து அநுபவிக்குங்காலம் வரும்வரையில். நம்மா

டைய பிள்ளைகளுக்கு இவ்வுலகத்தில்தானே ஓர் திவ்விய உணவு தயார் செய்யச் சித்தமானார். பரமண்டல மந்திரத்தைப்பற்றி வியாக்கியானம் செய்யும்போது, அர்ச். கிறிசொலோகுஸ் இராயப்பர் நமக்குப் போதிப்பதாவது: "மோட்சத்திலிருக்கிற நமது பிதா, தம்முடைய பிள்ளைகள் மோட்ச உணவு மாத்திரம் கேட்கும்படி விரும்புகிறார். இந்த உணவு வதென்றால், நாமே சீவியத்தின் அப்பம் (அரு. III. 51.) என்று திருவுளம்பற்றிய சர்வேசுரனுடைய திவ்விய குமாரனேயாம்."

(க) பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் போஷித்து, வளர்க்கிறது சுபாவ ஒழுங்கு. தங்கள் பிள்ளைகளை வளர்த்துப் பாதுகாக்க அவர்கள் படுங் கவலையைக்கொண்டு பிள்ளைகளின்மேல் எவ்வளவு பட்சம் வைத்திருக்கிறார்களென்று அறியக்கூடும். சர்வேசுரன் தமது பிள்ளைகளின்மேல் எவ்வளவு சிநேகம் வைத்திருக்கிறார் என்று அறியவேணுமானால், அவர் நம்மிடத்தில் ஞான உயிர் உண்டாகி அதிகரிக்கும்படி கொடுக்கிற உணவு எப்பேர்ப்பட்டதென்று ஆய்ந்து ஆராய்ந்து பார்க்கவேணும். தேவ நற்கருணையின் வழியாய் தம் திருக்குமாரனுடைய திருச்சரீரத்தையும், திரு ஆத்துமத்தையும், தேவசுபாவத்தையும், அவருடைய சொல்



லிலடங்காத சகல உத்தம இலட்சணங்கள் முதலிய யாவையும் அவர்களுக்குக் கொடுத்தருளுகிறார்.

(உ) இப்பேர்க்கொத்த திவ்விய உணவைப் பெறுவதற்கு, இஷ்டப்பிரசாதமே கிறீஸ்துவனைப் பாத்திரவானாக்குகிறதினாலே, இஷ்டப்பிரசாதத்தின் மட்டற்ற மகிமைத்தனம் எவ்வளவு என்று எடுத்துரைக்கக்கூடியதார்? இப்பூலோகத்திலிருக்குமளவும், நாம் சாங்கோபாங்கத்தில் வளரும்படி சர்வேசுரன் மனித சுபாவத்தோடு ஒருமித்துள்ள தமது திருக்குமாரனை, நமக்குத் திவ்விய உணவாக அளிக்கிறார். மறுலோகத்தில் நாம் ஞான வளர்ச்சியை முழுதும் அடைந்திருப்போமானபடியால், அங்கே ஊழியுள்ள காலம் தடை தடங்கல்களின்றி, தம்மைத் தாமே நமக்குக் கொடுத்தருளுவார். தேவ இஷ்டப்பிரசாதத்தின் மகிமையை நாம் கண்டுபிடிப்பது கூடாத காரியம். இது ஓர் ஆச்சரியமான பரம இரகசியம்.

## II. இஷ்டப்பிரசாதத்தினால் வரும் மேலான நன்மைகளின் பேரில்.

**1. அர்ச். தமதிரித்துவம் நம்மிடத்தில் வாசம் பண்ணுகிறது.**

இஷ்டப்பிரசாதத்தினாலே சர்வேசுரனோடு உந்நத ஐக்கியத்தை அடைகிறோம். கடவுள்

எங்கும் வியாபித்திருந்தாலும், அவர் சில விசேஷ இடங்களைத் தெரிந்துகொண்டு, அங்கே தம்மை அண்டிவருகிறவர்களுக்குத் தமது தெய்வீகத்தை அதிகத் தெளிவாய் வெளிப்படுத்துகிறதைக் கண்டுவருகிறோம்.

(க) சர்வேசுரன் எல்லோரிடத்திலும் குடிகொண்டிருந்தபோதிலும், தம்மைத்தாமே ஓரே விதமாய் சகலருக்கும் கையளிக்கிறதில்லை. ஓர் பாவியிடத்திலிருந்தபோது, தமது சிநேகத்தையும் வரப்பிரசாதங்களையும் அவனுக்கு கொடுக்காமல் அவன்மேல் வெறுப்பாயிருக்கிறார். அவர் நரகவாசிகளிடத்திலிருக்கிறாரென்றாலும், அவர்களுக்குப் பாவ மன்னிப்பு அளிக்காமல் அவர்களைத் தண்டித்துக்கொண்டிருக்கிறார். நீதிமானிடத்திலோவென்றால், விசேஷ பட்சத்தோடு விற்றிருந்து, இஷ்டப்பிரசாதத்தினாலே உச்சிதமும் ஆச்சரியமுமான மாற்றங்களை உண்டுபண்ணுகிறார்.

(உ) "நாங்கள் வந்து அவனிடம் வாசம் செய்வோம்" (அரு. XIV 23.) என்று சேசுநாதர் சுவாமி சொல்லியருளிய வாக்கு, இஷ்டப்பிரசாதத்தினால்தான் நிறைவேறுகிறது. சர்வேசுரன் எவ்விடங்களில் அதிக ஆச்சரியத்துக்



குரிய நன்மைகளைச் செய்துவருகிறாரோ? அவ்விடங்களில் விசேஷ விதமாய்ப் பிரசன்னராயிருக்கிறாரென்பது பரிஷ்காரமே.

(ங) சுபாவ ஒழுங்குக்கடுத்த சகலத்தையும்விட, இஷ்டப்பிரசாதமானது அதிக உச்சிதமானபடியால், நீதிமானின் ஆத்துமத்தில் விற்றிருக்கும் சர்வேசுரனுடைய பிரசன்னமானது, நமது புத்தி ரூபிகரிக்கக்கூடிய சகலத்தையும் வாக்குக்கெட்டாத விதமாய் மேலிட்டுப்போகிறது. இந்தச் சுபாவத்துக்கு மேலான பிரசன்னம் எப்பேர்ப்பட்டதென்று கொஞ்சமென்கிலும் தெளிவிக்கும்படியாக, நாம் சொல்லப்போகிறதைக் கேளுங்கள்: "சுபாவத்துக்கடுத்த சகல சிருஷ்டிகளினின்றும் சர்வேசுரன் நீங்கி, அதனிமித்தம் அவைகளெல்லாம் அழிந்து ஒன்றுமில்லாமற்போகும்படி செய்தாலும், அவர் நீதிமானின் ஆத்துமத்தில் பிரசன்னமாயிராமலிருக்கக்கூடாது."

(ச) சர்வேசுரன் மனிதனை உண்டாக்கிக் காப்பாற்றும்படி ஏற்கனவே அவனிடத்தில் விற்றிருப்பது அவசியமே. ஆனால் அவன் நீதிமானானவுடனே புது விதமாய் எழுந்தருளி வருகிறார். இந்த விசேஷ ஒன்றிப்பின் மூலமாக, ஓர் சிநேகிதனைப்போலவும் விருந்தாளியைப்போலவும்

அவனிடத்தில் வாசம்பண்ணுகிறதுமன்றி, அவனுக்குத் தம்மைத்தாமே கையளிக்கத் திருவுளமாகிறார்.

(௫) சர்வேசுரன் சகலத்தையும் படைத்துக் காப்பாற்றி நடப்பித்துவருவதால், சிருஷ்டிகளிடத்தில் சர்வேசுரனாக பிரசன்னராயிருக்கிறார். இஷ்டப்பிரசாதத்திலுள்ள ஆத்துமத்திலோவெனில், உள் ஜீவியம் சீவிக்கும் திரியேக சர்வேசுரனாகவும் பிரசன்னராயிருக்கிறார். இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிற ஆத்துமத்தில் பிதாவும், சுதனும், இஸ்பிரீத்துசாந்துவும், தெய்வீக சீவியம் ஜீவித்து, அந்த அற்பச் சிருஷ்டியை அத்தெய்வீக சீவியத்துக்குப் பங்காளியாக்குகிறார்கள். அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல், சர்வேசுரன் அப்பேர்ப்பட்ட ஆத்துமத்தைத் தமது சாயலாக மாற்றுகிறார். "நாங்களெல்லாரும்......இஸ்பிரீத்துசாந்துவின் செயலால் ஒளிக்குமேல் ஒளிபெற்று, அந்தச சாயலாகி மறுரூபமாகிறோம்." (II கொரி. III 18.)

(௬) எப்படி சூரியனானது வைரக்கல்லைத் தன் கதிர்களினால் பிரகாசிப்பித்து, அதைத் தனது காந்தியினால் ஜொலிக்கச்செய்கின்றதோ, அப்படியே சர்வேசுரனும் இஷ்டப்பிரசாதத்தினாலே நம்மிடத்தில் எழுந்தருளிவந்து,



நமது ஆத்துமத்தைத் தமது திவ்விய ஜோதி அலங்காரத்தால் நிரப்பி, நம்மை மறுரூபமாக்கி, தமது தெய்வீக சீவியத்தை நமக்கும் அளித்தருளுகிறார்.

ஆதலால் தேவ சீவியத்துக்கு நாம் பங்காளிகளாயிருப்பதற்குக் காரணம், நம்மிடத்தில் சர்வேசுரன் சுபாவத்துக்கு மேலான விதமாய்ப் பிரசன்னமாயிருப்பதே என்று அறியவருகிறோம்.

(௭) இஷ்டப்பிரசாதத்தால் சர்வேசுரன் நம்மிடத்தில் நிலைமையான விதமாய் வாசம் செய்கிறார். ஆத்துமமானது சரீரத்தோடு இணைந்து, ஐக்கியப்பட்டு, அதற்கு உயிர் அளித்துவருவதுபோலவே, சாவான பாவமில்லாமலிருக்கிறவனிடம் சர்வேசுரன் இடைவிடாமல் ஜீவித்து, தமது சீவியத்தை அவனுக்கு அளித்து, அவனுடைய மேலான சீவியத்துக்குக் காரணமாயிருக்கிறார்.

(௮) நீதிமான் சர்வேசுரனுடைய தேவாலயமாயிருக்கிறான். அவன் ஆத்துமம் இஷ்டப்பிரசாதத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, சர்வேசுரன் வாசமாயிருக்கத்தக்க தேவாலயமாகிறது. சர்வேசுரன் அத்தேவாலயத்தில் நீதிமானுடைய ஆராதனைகளையும் மன்றாட்டுக்களையும்

கையேற்றுக்கொண்டு, அவன் விரோதிகள் அவனுக்கு எக்ஷணமும் வருவிக்கிற துன்ப துரித சோதனைகளில் ஆறுதலும் திடனும் கொடுக்கும்படியாக அவன் ஆத்துமத்தில் வீற்றிருக்கிறார்.

(௩) இதினால் ஆத்துமமானது அர்ச். தமதிரித்துவத்தின் தேவாலயமாகிறது. இது சர்வேசுரனுடைய மேலான பிரசன்னத்தால் அர்ச்சித்துப் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கும் ஓர் தேவாலயம். மனிதருடைய கரங்களால் கட்டப்பட்ட ஓர் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துகிறது மகா பெரிய துரோகமானால், விசேஷ பிரசன்னத்தால் அர்ச்சிக்கப்பட்ட இந்தத் தேவஸ்தலத்தைப் பாவத்தினாலே தீட்டுப்படுத்துவது எவ்வளவோ பெரிய அக்கிரமம்! இந்த அக்கிரமத்தைச் செய்பவனுக்கு வரவிருக்கும் தண்டனை எவ்வளவோ பயங்கரமானது!

(௪) சர்வேசுரன் இப்படி சுபாவத்துக்கு மேற்பட்ட விதமாய் நீதிமானின் ஆத்துமத்தில் வாசம் செய்வதால்தான், அவன் சேசுநாதர் சுவாமியை தேவநற்கருணை வழியாய்ப் பெற்றுக்கொள்ளப் பாத்திரவானாகிறான் என்பது மெய்தான். ஆயினும் இப்படி தெய்வீகமாக்கப்பட்ட அவனுடைய இருதயத்தில் சற்றுநேரம்



மாத்திரம் சேசுநாதருடைய மனுஷீகம் சிநேக அன்போடு குடிகொண்டிருக்கிறது. ஆனால் இஷ்டப்பிரசாதத்தினாலுண்டாகும் தேவ பிரசன்னமானது நிலையுள்ள விதமாய் நீதிமானின் ஆத்துமத்தை மாத்திரமல்ல, அவன் சரீரத்தையும் அர்ச்சிக்கிறது.

2. இஷ்டப்பிரசாதம் பாவத்தைத் துரத்துகிறது.

சர்வேசுரன் அருவருக்குந் தன்மையது பாவமொன்றே. ஆதலால், பாவம் சகல தின்மைகளிலும் மகா பொல்லாத தின்மை. அது எவ்வளவு பெரிய பொல்லாப்பு என்றால், அதை நிர்மூலமாக்கும்படி தேவகுமாரனே விலைமதிக்கப்படாத தமது உயிரைப் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

(௧) நரதேவன் நமக்காகச் சிந்திய திரு இரத்தத்தினின்று விளைந்த இஷ்டப்பிரசாதம் மாத்திரமே நம்மைப் பாவத்திலிருந்து மீட்டிரட்சிக்கக்கூடியதாயிருக்கிறது. இஷ்டப்பிரசாதமும் சாவான பாவமும், ஒரே சமயத்தில் ஒருவனிடமிருப்பது கூடாது. பிரகாசத்துக்கு முன்பாக இருள் முழுதும் மறைவதுபோல, இஷ்டப்பிரசாதத்துக்கு முன்பாக சகல சாவான பாவங்களும் ஓடி ஒழியும். நாம் சுபாவத்தால் சர்வேசுரனுடைய விரோதிகளாயிருக்கிறோம்; இஷ்

டப்பிரசாதத்தால் அவருடைய சிநேகிதர்களும் பிள்ளைகளுமானோம். இஷ்டப்பிரசாதம் சகல பாவங்களையும் போக்குகிறது. உலகிலுள்ள சாவான பாவங்களெல்லாம் ஒருங்கே கூடி ஒருவனிடம் குடிகொண்டிருந்தாலும், இஷ்டப்பிரசாதத்தின் அனுப்பிரமாண முதலாய் அவைகளை நிவர்த்திசெய்யப் போதும்.

(உ) இஷ்டப்பிரசாதம் பாவத்தை மெய்யாகவே நிவர்த்தி செய்கிறதில்லையென்றும், நமது பாவங்கள் ஓர் போர்வையால் போர்த்து மறைக்கப்படுவதுபோல்மாத்திரம் சேசுநாதர் சுவாமியுடைய பேறுபலன்களால் மறைக்கப்படுகிறதென்றும், அபத்தமாய்ச் சில பதிதர்கள் கூறிவருகிறார்கள். இஷ்டப்பிரசாதத்தினால் நாம் மனப் பரிசுத்தம் அடையும்போது, ஆத்துமத்துக்குள் பூரண மாற்றம் உண்டாகிறது. ஆகையால் அவர்கள் சொல்லுமாப்போலே இஷ்டப்பிரசாதத்தை வெளிக்கு மாத்திரம் போர்த்தப்படுகிற போர்வைக்கு ஒப்பிடலாகாது. இஷ்டப்பிரசாதத்தால் ஆத்துமம் தன் பாவங்களினின்று கழுவி சுத்திகரம் பண்ணப்பட்டு, எவ்வித சிருஷ்டியும் கண்டுணரக்கூடாத அழகு சவுந்தரியத்தை அடைகிறது.



3. இஷ்டப்பிரசாதத்தினால் ஆத்துமம் அர்ச்சிக்கப்படுகிறது.

(க) தேவ இஷ்டப்பிரசாதமானது நமது ஆத்துமத்துக்குள் மெய்யான அர்ச்சியசிஷ்டதனத்தை உண்டாக்குகிறது, ஏனெனில் சர்வேசுரன் சுபாவத்துக்கு மேலான சீவியத்தை நமக்கு அளிக்கையில்தானே, சகலமேலான புண்ணியங்களாலும் நமது ஆத்துமத்தை அலங்கரிக்கிறார். அன்றியும் ஆத்துமத்தின் தத்துவங்களைச் சுபாவத்துக்கு மேலாக உயர்த்தி, தெய்வீக கிரிகைகளைச் செய்ய உந்த சக்தியை அளித்தருளுகிறார். நித்திய சம்பாவனைக்குரிய கிரியைகளைச் செய்யும் சக்தியே சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியங்களென்னப்படும். சர்வேசுரன் மாத்திரம் அவைகளை நமது ஆத்துமத்தில் உற்பத்தி செய்யக்கூடும்.

(உ) நம்மிடத்திலுண்டாகும் மாற்றத்தை ஒரு உவமையினால் விளக்கிக் காட்டலாம். சாதாரண ஓர் இரும்பு ஊசியை நூலில் கோர்த்து தொங்கவிட்டால், அதன் நுனி ஓர் விசேஷ பக்கமும் திரும்பாது. ஆனால் அந்த ஊசியை ஓர் காந்தத்தோடு தேய்த்தவுடன், அதற்கு ஓர் நூதன சக்தியுண்டாக எப்போதும் வடக்குத் திசையையே நோக்கும். அப்படியே நமது தத்து

வங்கள் சுபாவ அந்தஸ்திலிருக்கும்போது, தங்கள் தங்களுக்கேற்ற பற்பல காரியங்களைச் சாரும். இஷ்டப்பிரசாதம் ஆத்துமத்தில் பிரவேசித்தவுடன், அந்தத் தத்துவங்களெல்லாம் சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு, இதுவரையில் அறிந்திராத ஒரு வஸ்துவைக் கோருகின்றன. இந்த வஸ்து எதுவென்றால், நமது சுபாவத்துக்கு மேலான சீவியத்தின் ஊற்றும் ஊறணியுமான சர்வேசுரன் தாமே.

(௧) இஷ்டப்பிரசாதத்தோடுகூட தேவ சம்பந்தமான புண்ணியங்களைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இவைகளால் திவ்விய சீவியத்துக்கு விசேஷவிதமாய்ப் பங்காளிகளாகி, சர்வேசுரன் எப்படித் தம்மைத்தாமே அறிந்து சிநேகிக்கிறாரோ அவ்வண்ணமே இந்தப் புண்ணியங்களால் அவரை அறிந்து சிநேகிக்கிறோம்.

மேலும், நன்னடக்கைக்குரிய சகல புண்ணியங்களும் மேலான புண்ணியங்களாக உயர்த்தப்பட்டு, ஆத்துமத்தை அலங்கரிக்கின்றன.

இதினாலே சுபாவசீவியத்தின் கிரியைகளெல்லாம் சுபாவத்துக்கு மேலாகி, மோட்ச கதியை அடைய நமக்குப் பிரயோசனமாகின்றன.

கடைசியாய், இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களால் ஆத்துமம் அலங்கரிக்கப்படுகிறது. இவை



களைக்கொண்டு வரப்பிரசாதத்தின் ஏவுதலுக்கு அதிக சுளுவாய் இணங்கி, அதியுத்தம நற்கிரியைகளைச் செய்கிறோம். இவ்வண்ணமாய் இஷ்டப்பிரசாதத்தினாலே நமது ஆத்துமம் சுபாவத்துக்கு மேலான மேரையாய் அலங்கரிக்கப்படுகின்றது.

**4. இஷ்டப்பிரசாதத்தினால் மனுஷன் சர்வேசுரனுடைய சுவீகாரப்பிள்ளையாகிறான்.**

தகப்பனுக்கும் பிள்ளைக்கும் இருக்கிற சம்பந்தம் சர்வேசுரனுக்கும் நீதிமானுக்கும் உண்டாகிறது. ஆயினும் சொந்தப்பிள்ளையல்ல, சுவீகாரத்தினால் மாத்திரம் நீதிமான் சர்வேசுரனுக்குப் பிள்ளையாகிறான். ஒருவன் மற்றொருவனைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, தன் சொந்தப் பிள்ளைக்குரிய ஆஸ்தி பாஸ்தி முதலிய வெளிச் சுதந்தரங்களை அப்பிள்ளைக்கு அளிக்கும்போது, அவனைச் சுவீகாரப் பிள்ளையாக்குகிறானென்கிறோம். ஆனால் அந்தப் பிள்ளைக்கு வெளிக்காரியங்களில் மாற்றமுண்டாகிறதேயல்லாமல் உள் மாற்றம் அற்பமேனுமில்லை. சுவீகாரப் பிள்ளையாக ஒருவனை எடுத்து வளர்க்கிறவன் தனது பேரையும் ஆஸ்தியையும் அவனுக்குக் கொடுத்தாலும், தன் சுபா

வத்தையும் உயிரையும் பகிர்ந்து கொடுக்க முடியாது.

இப்படி மனிதனால் உள் மாற்றம் செய்யக்கூடாதென்றாலும், சர்வேசுரனால் இது நிறைவேறக்கூடுமென்பதற்குச் சந்தேகமில்லை. சர்வேசுரன் ஒருவனைப் புத்திரனாக ஏற்றுக்கொள்ளும்போது, தமது ஏகசுதனாகிய சேசுநாதருடைய சுதந்திரங்களைப் பங்கிட்டுக் கொடுத்து, அவனைத் திவ்விய சீவியத்துக்கு மெய்யாகவே பாகஸ்தனாக்குகிறார். அவர் சிருஷ்டிகளுக்குத் தமது அளவறுக்கப்படாத தேவ சுபாவத்தை முழுதும் அளிக்கக்கூடாதென்றாலும், சுபாவத்துக்கு மேலான நன்மையாகிற இஷ்டப்பிரசாதத்தைக் கொண்டு மனிதனைத் தேவ சீவியத்துக்குப் பங்காளியாக்கக்கூடும்.

5. தேவ இஷ்டப்பிரசாதமானது நித்திய சம்பாவனைக்குரிய கிரியைகளைச் செய்வதற்குச் சக்தி அளிக்கிறது.

(க) அர்ச். சின்னப்பர் (உரோ. XI, 17, 24) இதை ஒரு ஒட்டுமாங்கன்றுக்கு ஒப்பிடுகிறார். ஒட்டுமாங்கன்றின் துறுதணமென்ன? ஒருவர் தோட்டத்தில் புளிப்பு மாங்கன்று ஒன்று இருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அது நாளடைவில் வளர்ந்தபின், புளித்த பழம் தருமே



யன்றி, உருசிகரமான பழம் தராது. அதினால் வருகிற பிரயோசனம் வெகு சொற்பமானதே. ஆனால் நல்ல ஜாதி மாங்கிளையொன்றை வெட்டி, அப்புளிப்பு மாங்கன்றில் ஒட்டுவோமானால், அக்கன்றின் சாரம் நல்ல ஜாதிக்கிளையின் வழியாய்ப் பாய்ந்து, இன்பமான பழம் தருமல்லோ? நாம் எடுத்த உபாயத்தினால், மாத்தின் சாரம் மாறினதேயாழிய, வேறே ஒரு வித்தியாசமும் உண்டாகவில்லை. இப்படியே இஷ்டப்பிரசாதமும் நமது ஆத்துமத்தில் சேர்ந்து பொருந்தினவுடனே, அதில் முன் விளையக்கூடாத அர்ச்சியசிஷ்டதனம், திவ்விய நீதி முதலிய சுபாவத்துக்கு மேலான பலன்களை விளைவிக்கும். சர்வேசுரன்தாமே நம்மிடத்தில் வீற்றிருந்து, நம்மோடுகூட நற்கிரியைகளைச் செய்கிறதினிமித்தம் இப்பலன்கள் உண்டாகிறது.

(உ) இஷ்டப்பிரசாதத்துக்கும் மோட்ச சம்பாவனைக்குமுள்ள சம்பந்தமென்ன? இஷ்டப்பிரசாத அந்தஸ்திலுள்ளவன், அநுக்கிரகப்பிரசாத உதவியைக்கொண்டு, சர்வேசுரனுக்காக நற்கிரியை செய்யும்போதெல்லாம், இஷ்டப்பிரசாதம் அவனிடத்தில் வளருகிறதுமல்லாமல், அவ்வளர்ச்-

சிக்குத்தக்கது அவன் அடையவேண்டிய மோட்ச மகிமையும் அதிகரிக்கும். இஷ்டப்பிரசாதம் மோட்சத்துக்கு அச்சாரமும், மோட்சத்தை நமக்கு விளைவிக்கும் ஞான வித்துமாயிருக்கிறது. ஆகையால் நீதிமான் மோட்சத்தைத் தன் இருதயத்தில் சுமக்கிறானென்று சொல்வது நியாயந்தானே? மோட்சவாசிகள் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கிறார்கள். நீதிமானோ, தன் விசுவாசத்தினால் சர்வேசுரனை நன்றாய் அறிந்து, அவருடைய உட்சீவியத்தை உணருகிறான். சர்வேசுரன் பரலோகத்தில் மோக்ஷவாசிகளைச் சிநேகிக்கிறதுபோல நீதிமானிடத்தில் வாசமாயிருந்து, அவனை நேசிக்கிறார். நீதிமானும் மோக்ஷவாசிகளைப்போலவே, அவரை மேலான சிநேகத்துடன் நேசிக்கிறான்.

(௩) நீதிமானுக்கும் சேசுநாதருக்குமுள்ள சம்பந்தமென்ன? இஷ்டப்பிரசாதத்தினாலே நாம் சர்வேசுரனுக்குச் சுவீகாரப் பிள்ளையாகிறதினால், சேசுநாதருக்குச் சகோதரராகி, மோக்ஷ பாக்கியத்துக்குச் சுதந்தரவாளிகளாகிறோம். நாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய ஞான அவயவங்களாகி, அவரோடே ஒன்றித்து, "ஒரே கிறீஸ்து" ஆகிறோம். மனுஷீகத்துக்குச் சிர



சாயிருக்கிறவர் அவர்தான். நாம் அவருடன் கூடி ஒரே ஞான சரீரமாகி, அவர் நமக்குத் தலையாகவும் நாம் அவருக்கு அவயவங்களாகவும் இருக்கிறதைப்பற்றி, தேவ சீவியம் அவர் வழியாக நமக்குள் பாய்கிறது. அடிமரத்தோடு கிளை ஒன்றித்திருக்குமட்டும், ஒரே மரமாகி, உயிர் இரண்டுக்கும் பொதுவாயிருக்கிறது. இப்படியே இஷ்டப்பிரசாதம் நீதிமானிடத்திலிருக்கிறதென்று காண்பிக்க, அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறதாவது: "ஜீவிக்கிறது நானல்ல, சேசுநாதர்தாமே என்னிடத்தில் ஜீவிக்கிறார்" என்கிறார் (கல. II, 20). நீதிமான் சேசுக்கிறீஸ்துநாதரோடு ஒன்றித்திருக்கிறதால், அவரோடுகூட மோக்ஷ பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவான்.

௬. தேவ இஷ்டப்பிரசாதத்தை அடைகிறதெப்படி?

(க) ஞானஸ்நானத்தினாலாவது, அதைப் பெறக்கூடாத சமயத்தில் உத்தமமனஸ்தாபத்தினாலாவது இஷ்டப்பிரசாதத்தை முதல்விசை அடையலாம். அதை இழந்துபோனால், குருவானவரிடத்தில் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதினாலும், உத்தமமனஸ்தாபப்படுகிறதினாலும், திரும்பவும் அடைந்துகொள்ளுகிறோம்.

(உ) இஷ்டப்பிரசாதத்தை அதிகரிப்பதெப்படி? தேவதிரவிய அநுமானங்களைப் பெறுதலினாலும், ஜெப தப தான தர்மம் முதலிய எந்த மேலான புண்ணியக் கிருத்தியங்களை நிறைவேற்றுகிறதினாலும், இஷ்டப்பிரசாதம் நம்மிடத்தில் வளரும். அது ஒவ்வொருவர் செய்யும் நற்கிரியைக்கு ஏற்றபடி அதிகரிக்கிறதினாலே, தேவ ஏவுதலுக்கு அதிக ஊக்கத்துடன் இணங்கி, ஏராளமான நற்கிரியைகளைச் செய்கிறவன் எவனோ, அவனிடத்தில் இஷ்டப்பிரசாதமும் தாராளமாய் அதிகரிக்குமென்பது சத்தியம். நமது பக்தி சுறுசுறுப்புக்கொத்தபடியும், நாம் அடைந்திருக்கும் இஷ்டப்பிரசாதத்தின் அளவுக்குத் தக்கபடியாலும், ஒவ்வொரு நற்கிரியையினாலும் இஷ்டப்பிரசாதம் ஆத்துமத்தில் பெருகும். அது எவ்வளவாக அதிகரிக்குமென்றால், நாம் செய்கிற கிரியை சொற்பமானதாயிருந்தாலும், உத்தமமான விதமாய்ச் செய்து முடித்தால், ஏற்கனவே நமதாத்துமத்திலுள்ள இஷ்டப்பிரசாதமும் பேறுபலனும் இரட்டிக்குமென்று சில வேத சாஸ்திரிகள் எழுதி வைத்திருக்கிறார்கள். இதினிமித்தம் தான் தேவமாதாவிடத்திலுள்ள இஷ்டப்பிரசாதம் ஆச்சரியமான விதமாய் வளர்ந்து வந்தது. அவள் உற்பவித்த க்ஷணந் துவக்கி, சாரும்பரி



யந்தம் நிறைவேற்றின ஒவ்வொரு சொற்பக் கிரியையையும் உந்நத நேசத்தோடும் உத்தம சாங்கோபாங்கத்தோடும் செய்து வந்ததினாலே, அவள் அடைந்த இஷ்டப்பிரசாதத்தின் அளவை யாராலும் கண்டுபிடிக்கவும் விவரிக்கவும் கூடாமற்போயிற்று.

(ங) சாவான பாவஞ் செய்தவுடனே தேவ இஷ்டப்பிரசாதத்தை முழுதும் இழந்துபோகிறோம்.

7. இஷ்டப்பிரசாதமானது நமது ஆத்துமத்தில் உண்டாக்கும் அதி அற்புதமான மாற்றங்களைச் சுருக்கமாய் வெளிப்படுத்தும்படி, மேலே சொன்ன இரும்பின் உவமையைச் சற்றே விளக்கக்கடவோம்.

(க) இரும்பை நெருப்பில் போட்டால், முந்த முந்த அதிலுள்ள துரு அசுத்தம் எல்லாம் நீங்கிப் போகிறதுபோல், இஷ்டப்பிரசாதம் ஆத்துமத்தில் பிரவேசித்தவுடனே, சகல சாவான பாவங்களும் அழிந்து ஒழிந்து நிவாரணமாகின்றன. ஏனெனில் சாவான பாவமும் தேவ இஷ்டப்பிரசாதமும் ஒரு க்ஷண முதலாய் ஒருங்கே ஆத்துமத்தில் குடியிருப்பது கூடாது.

(உ) இரும்பைப் பழுக்கக் காய வைப்பதினால், இரும்பை நெருப்பாக்குகிறோமென்று ஒருவனும் சொல்லமாட்டான். ஆனாலும் முன்னே

கருப்பாயும் வளைக்கக்கூடாததுமாயிருந்த இரும்பு இப்போது அக்கினியைப்போல உஷ்ணங்கொண்டு காந்தியுடன் பிரகாசிக்கிறதுமன்றி, அதை வளைக்கவும் உருக்கவுங்கூடும். மேலும் எவ்வளவுக்கு நெருப்பு அதிகரிக்கின்றதோ, அவ்வளவுக்கு இரும்பின் பிரகாசமும் உஷ்ணமும் வளரும். இவ்விதமே, இஷ்டப்பிரசாதமானது நம்மிடத்தில் குடிகொண்டிருக்கையில், நமது சுபாவத்தைச் சிறிதும் அழிக்கிறதுமில்லை, நம்மைத் தேவ ஆட்களாக மாற்றிப்போடுகிறதுமில்லை. ஆனால் நம்மைத் தெய்வீகத்துக்கு உடந்தையாக்கி, தெய்வீகத்துக்குரிய சிந்தனை, அறிவு, உணர்ச்சி, சிநேகம் முதலியவைகளை அளிக்கின்றது. இந்த அதிசயத்துக்குரிய இலட்சணங்கள் நமது இஷ்டப்பிரசாதத்தின் அளவுக்குத் தக்கது ஆத்துமத்தில் ஜொலிக்கும்.

(௩) கடைசியாய், இரும்பை நெருப்பை விட்டு முழுதும் எடுத்துவிடுவோமானால், உஷ்ணம் பிரகாசம் முதலிய புதிதாய் அடைந்த குணங்களை அது இழந்துவிடுமென்பது நிச்சயம். இந்தப் பிரகாரமே, மனிதன் இஷ்டப்பிரசாதத்தோடிருக்குமளவும் சர்வேசுரனோடே ஒன்றித்து, தேவ ஜீவியம் சீவிக்கிறானென்றாலும், சாவான பாவத்தினாலே தன் இஷ்டப்பிரசாதத்



தைப் போக்கடித்தவுடனே, இந்த ஞான மகிமை அலங்காரங்களை எல்லாம் இழந்துவிடுகிறான்.

---

## IV. பேறு பலன்களின் பேரில்.

1. சுபாவத்துக்கு மேலான பேறு பலனாவதென்ன?

தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருக்கிறவன் சர்வேசுரனைக் குறித்து நற்கிரியைகள் செய்கிறதினால், நித்திய சம்பாவனையைப் பெற்றுக்கொள்வதற்கு அடையும் பாத்தியமே பேறு பலனென்னப்படும். நித்திய சீவியத்துக்குப் பாத்திரமான நற்கிருத்தியங்கள் செய்யும்படி, தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருப்பது அவசரம் என்று முந்திய பாடங்களில் வெளிப்படுத்தினோம். உலக எஜமானுக்கு ஒருவன் ஊழியஞ் செய்தால், அவ்வூழியத்துக்குத் தக்க சம்பாவனை அடைய அவனுக்குச் சுதந்தரமுண்டல்லோ? இதுதான் சுபாவத்துக்குரிய பேறுபலன். மோக்ஷத்தை அடையும்படியான நற்கிரியை செய்யும் ஒவ்வொருவனும் நித்திய பேரின்ப பாக்கியத்தைப் பெற அதிகமதிகமாய்ச் சுதந்தரவாளிகளாகிறோம். இதுவே சுபாவத்துக்கு மேலான பேறுபலன[illegible]

2. எத்தனை வகை பேறு பலன்கள் உண்டு?

நீதியினிமித்தம் கிடைக்கும் பேறுபலன் (de condigno), கிருபையினிமித்தம் கிடைக்கும் பேறுபலன் (de congruo) என இரு வகை உண்டு. இவையிரண்டில், முதலாவது பேறு பலன் வேலை செய்தவனுக்குச் சேரவேண்டிய சம்பளத்தையும், இரண்டாவது பிச்சைக்காரனுக்குக் கொடுக்கப்பட்ட தான தர்மத்தையும் ஒத்திருக்கும். முதல் வகை மாத்திரம் மெய்யாகவே பேறுபலனாகும்.

3. நீதியினிமித்தங் கிடைக்கும் பேறுபலனாவதென்ன?

மனிதன் தன் சுபாவ சக்தியைக்கொண்டு மோக்ஷ சம்பாவனை அடைவது கூடாத காரியம். எனெனில் அதற்கு வேண்டிய நியாயமான சுதந்தரம் அவனுக்குக் கிடையாது. ஆயினும் அச்சுதந்தரம் சர்வேசுரனுடைய கிருபையாலும், அவர் செய்த வாக்குத்தத்தத்தினாலும், மனிதனுக்குக் கிடைப்பதற்கு யாதொரு விக்கினமுமில்லை.

(க) மனிதன் சுபாவமாய் அடையக்கூடாததை தேவ உதவியைக்கொண்டு அடையக்கூடும். சர்வேசுரன் மனிதன்பேரில் வைத்த இரக்கத்தால், ... தேவ வரப்பிரசாதத்தைக்



கொடுத்து, தாம் இட்ட கட்டளைப் பிரகாரம் அவன் நடந்தால், நித்திய பேரின்ப பாக்கியத்தை அளிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். இவ்வாக்குத்தத்தத்தின் நிமித்தந்தான், மனிதன் தனது நற்கிரியைகளுக்கு நித்திய சம்பாவனை அடையும் மெய்யான சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான். இதுவே நீதியினிமித்தம் கிடைக்கும் பேறுபலன் எனப்படும்.

(உ) இதை ஓர் உதாரணத்தால் விளக்கிக்காட்டுவோம். எஜமான் ஒருவன் வேலை இல்லாத ஓர் கூலியக்காரனை அழைத்து, "இந்த வேலையைச் செய், இன்ன சம்பளங் கொடுக்கிறேன்" என்றபின், இக்கூலியக்காரன் தனக்கு இடப்பட்ட கட்டளைப்படி வேலை செய்து முடித்தானானால், தன் சம்பளத்தைப் பெற அவனுக்குப் பாத்தியமுண்டல்லோ? அவ்வண்ணமே சர்வேசுரன் கிருபைதயாளத்துடன் நமது நற்கிருத்தியங்களுக்கு மோக்ஷ சம்பாவனை அளிப்பதாக வாக்குக் கொடுத்திருப்பதால், அதைப் பெற்றுக்கொள்ள நமக்கு மெய்யான சுதந்தரமுண்டாகிறது.

4. கிருபைப்பேறுபலனாவதென்ன?

சர்வேசுரன் வாக்குத்தத்தம் கொடாவிட்டாலும், நமது அளவறுக்கப்படாத இரக்க

தயாளத்துக்கு யோக்கியமானபடி, நமது நற்கிரியைகளுக்கு அவர் தந்தருளும் சம்பாவனையே கிருபைப்பேறுபலனென்னப்படும். சர்வேசுரன் மோக்ஷம் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்யாதிருந்தால், அதை அடைவதற்கு மெய்யான சுதந்தரமும், நீதியினிமித்தம் கிடைக்கும் பேறுபலனும் நமக்கு இருந்திராதென்பது உள்ளதுதான். ஆயினும், அநுக்கிரகப்பிரசாதத்துக்கு இணங்கி நடக்கப் பிரயாசப்படுகிறவர்களுக்கு, சர்வேசுரன் கிருபை தயாளத்தோடு சம்பாவனை அளிப்பாரென்பதற்கு மெய்யான முகாந்தரமுண்டு. ஏனெனில் அவர் மட்டற்ற கிருபை இரக்கம் நிறைந்தவராயிருக்கிறதினாலே, வாக்குத்தத்தம் பண்ணாதபோதிலும், புண்ணியஞ் செய்கிறவனுக்குச் சம்பாவனை அளிக்காதிருக்கமாட்டார்.

நிர்ப்பாக்கிய தரித்திரன் ஒருவன் மிகுந்த தாழ்ச்சியுடன் தயாளகுணம் பொருந்திய ஐசுவரியவான் ஒருவனிடத்தில் பிச்சை கேட்டால், அவன் கேட்டது கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. சர்வேசுரன் அளவில்லாத கிருபையுள்ளவராகையால், அவரிடம் பிச்சை கேட்டால், கொடாமலிருப்பாரோ? இக்கொடைக்கு நீதி அல்ல, சர்வேசுரனுடைய கிருபையே



காரணம். இப்படி நாம் நம்பிக்கேட்பதற்கு கிருபையே காரணமானதால், இதைக் கிருபையினிமித்தம் நமக்கு கிடைக்கும் பேறுபலனென்கிறோம்.

**5. பேறுபலன் அடைவதற்கு அவசரமானவைகள்.**

(க) நீதிக்குரிய பேறுபலனையேனும், கிருபைக்குரிய பேறுபலனையேனும் அடையும்படி, நற்கிரியை செய்கிறவன் இவ்வுலகத்தில் உயிரோடிருந்தல் முழுதும் அவசியம். செத்த பிற்பாடு பேறுபலன் அடையமுடியாது. நரகவாசிகள் தின்மையில் நிலைகொண்டிருப்பதால், எவ்வித பேறுபலனும் அடைய முடியாது. உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள் அநுபவிக்கும் வேதனையினிமித்தம், அவர்களுக்குப் பேறுபலனும் சம்பாவனையும் அதிகரிக்கிறதில்லை. மோக்ஷவாசிகள் தாங்கள் செய்யுங் கணக்கற்ற புண்ணிய முயற்சிகளால் புதிதானபேறுபலன்களைச் சம்பாதிக்கிறதில்லை. இறந்துபோன மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் கடைசிக்கதியைப்பற்றி மாறாததீர்ப்பு அடைந்திருப்பதால், சாகும்போது தாங்கள் இருந்த பாவ புண்ணிய அந்தஸ்துக்கு தக்கபடி, தண்டனையையாவது சம்பாவனையையாவது மாறாத விதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

(உ) இந்தக் கிரியைகளைப் பிறர் கட்டாயத்தினால் செய்யாமல், நாம் மனச்சுவாதீனமாய் செய்ய வேண்டும். ஓர் காரியத்தைச் செய்யவும் செய்யாதிருக்கவும் வேண்டிய சுவாதீன சுதந்தரமின்றி, ஒருவன் யாதொரு கிருத்தியத்தை நிறைவேற்றினால், அது பாவமுமாகாது, புண்ணியமுமாகாது; அதினால் பேறுபலன் உண்டாகாது. ஆகையால் நாம் எப்பேர்ப்பட்ட துன்பங்களை அநுபவித்தாலும், வேதத்துக்காக உபத்திரவப்பட்டாலும், இவைகளை மனமின்றி, கட்டாயத்தினால் அநுபவித்தோமானால், பிரயோசனமில்லை. பேறுபலன் அடையவேணுமானால், முழுமனதோடு அவைகளை ஏற்றுக்கொண்டு, சர்வேசுரனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.

(ஊ) நாம் செய்யும் கிரியை நற்கிரியையாயிருக்க வேண்டியது. துர்க்கிரியைக்குக் கிடைக்கிற சம்பாவனை தண்டனையே. யாதொரு நற்கிரியை சுபாவத்துக்கு மேலானதாயிராத பட்சத்தில், அதற்குக் கொடுக்கப்படும் சம்பாவனை இலௌகிக நன்மையாயிருக்குமேயொழிய, தேவ தரிசனையாயிராது. எந்த நற்கிரியையும் மோக்ஷத்துக்குரிய பேறுபலனை அடைந்து கொடுக்கும்படி நமது சுபாவ முறைமைக்கு மேற்பட்டதாயிருக்கவேண்டியது.



ஆனதால் அநுக்கிரகப்பிரசாதத்தின் உதவியைக் கொண்டு அதைச் செய்து முடிப்பது அவசியம். நம்மால் கூடுமானதை நாம் செய்யப் பிரயாசப்படும்போது, சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் கிடைக்கும் என்பது தப்பாத சத்தியம். ஆகையால் பேறுபலன்களை அதிகமாய் அடையவேணுமானால், நாம் செய்யும் சகல கிரியைகளையும் சுத்த கருத்தோடும், சர்வேசுரனுக்கு உகந்த விதமாயும் செய்து முடிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

(எ) நீதிக்குரிய பேறுபலன் அடைவதற்கு, மேலே சொன்ன மூன்று காரியங்களோடு இன்னம் ஒரு காரியம் அவசரம். அதென்னவெனில், நற்கிரியை செய்யும்போது, தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருப்பதேயாம்.

சாவான பாவத்தோடிருக்கிறவன் நித்திய சம்பாவனைக்குப் பாத்திரமான கிரியை செய்யவும், நீதிப்பேறுபலனை அடையவும் முடியாது. அவன் எப்பேர்ப்பட்ட உத்தமமான கிரியைகளைச் செய்தாலும், அவனுக்கு மோக்ஷ சம்பாவனை கிடைக்கமாட்டாது. ஆனால் இக்கிரியைகள் அவன் தன் பாவங்களுக்காக வருத்தப்பட்டு, மனந்திரும்புவதற்கு உதவக்கூடும்.

6. நற்கிரியைகளினால் உண்டாகக்கூடிய பேறுபலனென்ன?

(௧) பாவியானவன் மனந் திரும்பும்போது அவனுக்கு அளிக்கப்படும் முதல் அநுக்கிரகப் பிரசாதத்தை அவன் தன் சொந்தப் பேறுபலனாலே பெறாமல், முழுதும் சர்வேசுரனிடத்திலிருந்தே இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறான். ஆனால் அதற்குப்பின் செபதப தான தர்ம முதலிய புண்ணியங்களைச் செய்தால், அவைகளைக்கொண்டு வேறு பாவங்கள் கட்டிக்கொள்ளாதிருக்கவும், உத்தம மனஸ்தாபப்பட்டுப் பாவப்பொறுத்தலையடையவும், அவசியமான உதவி சகாயங்களைக் கிருபைப் பேறுபலனாய்ப் பெற்றுக்கொள்வான்.

(௨) சாவான பாவமில்லாதவன் யாதொரு நற்கிருத்தியம் செய்யும்போது, அவனுடைய இஷ்டப்பிரசாதமும், நித்திய பாக்கியத்தை அடைவதற்கு அவனுக்குள்ள பாத்தியமும் நீதிப்பேறுபலனால் அதிகரிக்கிறது. அவன் சாவான பாவமில்லாமல் மரித்தால், மோக்ஷத்தில் சேர்ந்து, அங்கே தனது இஷ்டப்பிரசாதத்துக்கும் பேறுபலன்களுக்கும் தக்காப்போல் பேரின்ப சந்தோஷ மகிமையை அநுபவிக்கும்படி அவனுக்கு நீதிக்கடுத்த சுதந்தரமுண்டு.

(௩) சகல மனிதரும், விசேஷமாய் நீதிமான்களும், தாங்கள் செய்யும் ஒவ்வொரு நற்கிரியை



யினாலும், பாவ சோதனைகளை ஜெயிப்பதற்கு அவசரமான அநுக்கிரகப்பிரசாதங்களைத் தேவ தயவினாலே அதிகமதிகமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். நிலைமை என்னும் வரத்தை நாமது கிரியைகளுக்குச் சம்பாவனையாய் அளிப்பதாகச் சர்வேசுரன் ஒருக்காலும் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. அதை நாம் நீதிப் பேறுபலனால் ஒருபோதும் அடையக் கூடாதென்றாலும், தேவ கிருபையினால் அடைவோமென்று நம்பக்கடவோம். அர்ச். அகுஸ்தீன் "சர்வேசுரனை இரந்து மன்றாடுவதினால் அந்த வரத்தை அடைந்து கொள்ளுவோம்", என்று எழுதியிருக்கிறார்.

7. நாம் அடையக்கூடிய பேறுபலனின் அளவு என்ன?

இதற்குப் பல காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

(௧) நற்கிரியை செய்கிறவனுடைய புண்ணியத்துக்கும், இஷ்டப்பிரசாதத்தின் அளவுக்கும் தக்காப்போல், அவன் அடையும் பேறுபலனும் அதிகரிக்கும்.

சேசுநாதர்சுவாமி அளவறுக்கப்படாத பரிசுத்தமுள்ளவராதலால், அவருடைய அற்ப சொற்பக் கிரியைக்கு முதலாய் அளவில்லாத பேறு

பலனுமுண்டு.—அர்ச். கன்னிமரியம்மாள் அதி மிக பரிசுத்தமுள்ளவளானதால், ஒவ்வொரு கிரியைக்கும் அவள் அடைந்த பலன் இவ்வளவென்று வரையறுத்தல் கூடாத காரியம்.—நீதிமான்களோவென்றால், தங்கள் ஆத்தும ஆபரணமாகிய தேவ இஷ்டப்பிரசாதத்தின் அளவுக்குத் தக்கது அதிக பலன் அல்லது குறைவான பலன் அடைகிறார்கள்.

(உ) மீளவும் ஒவ்வோர் கிரியையின் மேன்மைக்கும், அதைச் செய்வதற்கு வேண்டிய பிரயாசத்துக்கும் தக்கபடி பேறுபலனும் அதிகரிக்கும். அற்பத் தர்மத்தைவிட, பெரிய தர்மத்துக்கு அதிக பலன் உண்டு. ஆயினும் ஐசுவரியவான் கொடுத்த தங்கக் காசைவிட, ஓர் ஏழை விதவை கொடுத்த சொற்பக்காசு சேசுநாதருக்கு அதிகப் பிரியமாயிருந்ததென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வண்ணமே தேவசிநேக முயற்சி, விசுவாச நம்பிக்கை முயற்சிகளைவிட, அதிக உத்தமமானதால், அதிக பேறுபலனை விளைவிக்கின்றது.

(ங) உத்தமகருத்து, பத்தி உரு[illegible]புத்தம், விசேஷமாய் தேவசிநேக மிகுந்த [illegible] முயற்சியவைகளுக்கும் ஏற்றபடி, பேறுபலன்களும் அதிகரிக்கும். சாப்பிடுதல், குடித்தல், முதலான சாதா



ரண கிரியைகளை முதலாய் நாம் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கலாம். இவைகளை எவ்வளவுக்குப் பத்திவேகத்தோடும் தேவ சிநேகத்தோடும் ஒப்புக்கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாகப் பேறுபலன் அடைந்து, மோக்ஷத்தில் உன்னத சம்பாவனையைப் பெறு[illegible]ளப் பாத்திரமாயிருப்போம். இதினால் சுத்த கருத்தோடு சர்வேசுரனுக்காகமாத்திரம் செய்யப்பட்ட கிரியையின் பலன் எப்பேர்ப்பட்டதென்று தெளிவாய் கண்டுணரலாம்.

**8. பரிகாரப் பேறுபலன்பேரிலும், மன்றாட்டுப் பேறுபலன்பேரிலும்.**

மேற்சொல்லிய நீதிப் பேறுபலன் கிருபைப் பேறுபலனைத்தவிர, பரிகாரப்பேறுபலன் மன்றாட்டுப்பேறுபலன் என வேறு இரண்டுவகைப் பலன்கள் உண்டு.

(க) **பரிகாரப்பலனைப்பற்றி.**—நமது பாவங்கள் பொறுக்கப்பட்ட பின்னும், அவைகளுக்காக அநித்திய ஆக்கினை அநுபவிக்கவேண்டியிருக்கும். சர்வேசுரன் மகா தயாளத்துடனே நாம் செய்யும் நற்கிரியைகளையும் படும் துன்ப வருத்தங்களையும் அநித்திய ஆக்கினைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளுகிறார். ஆதலால் அநித்திய ஆக்கினைக்குப் பொறுத்தலை அடையும் நற்

கிரியையே பரிகாரப் பலனென்னப்படும். நாம் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தபிரகாரம், இந்தப் பலன் நமக்கும் சாவான பாவமில்லாத புறத்தியாருக்கும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கும் உதவுமென்பது நிச்சயம்.

(ரு) [illegible] பேறுபலன் என்றால் என்ன? நாம் செய்யும் செபதப தானதர்ம நற்கிரியைகளினிமித்தம் சர்வேசுரன் நமக்கு வேண்டிய உபகாரங்களை அளிக்கவும், வரப்பிரசாதங்களைப்பொழியவுஞ் சித்தமாயிருக்கிறார். இதுதான் மன்றாட்டுப்பலன். இவ்விருவகைப் பேறுபலன்களுக்கும் காரணம் தேவ நீதி அல்ல, தேவ கிருபையே.

(கூ) இப்பலன்களை நாமே நமக்குப் பிரயோகப்படுத்திக்கொள்ளலாம், அல்லது புறத்தியாருக்கு இன்னின்ன வரப்பிரசாதங்கள் கிடைக்கும்படி சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கலாம். சேசுநாதர்சுவாமி தமது திரு இரத்தத்தையும், தமது கிரியைகள் முதலிய யாவற்றையும் நித்திய பிதாவின் அதிமிக தோத்திரத்துக்காக ஒப்புக்கொடுத்ததுமல்லாமல், இவைகளை நமது இரட்சண்ணியத்துக்கு ஈடாக்கி, நாம் பாவப்பொறுத்தல் அடையவும், நாம் நமக்கு தேவையான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள



வும் தமது திவ்விய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். சகல மனிதரும் அவருடைய திவ்விய மாதிரியைப் பின்பற்றி மேற்சொன்ன கருத்துகளுக்காகத் தங்கள் நற்கிருத்தியங்களையும் ஒப்புக்கொடுக்கலாம்.

(சு) மனிதருக்காக சே[illegible] ஒப்புக்கொடுத்த பேறுபலனுக்கும், புறத்தியாருக்காக நாம் ஒப்புக்கொடுக்கும் பேறுபலனுக்குமுள்ள வித்தியாசம் என்ன? பிதாவாகிய சர்வேசுரன், மனித இரட்சணியத்துக்காக, சேசுநாதர்சுவாமிபட்ட பாடுகளை ஏற்றுக்கொள்ளுவேனென்று வாக்குத்தத்தம் பண்ணினபடியால், பாவப்பொறுத்தலையும், நமக்கு வேண்டிய வரப்பிரசாதங்களையும் அடைந்துகொடுக்க அவருடைய கிருத்தியங்களுக்கு நீதிப்பலன் உண்டு. ம[illegible] புறத்தியாருக்காகச்செய்யும் கிரியைகளுக்கு அப்படிப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்படாததால், நாம் அந்த நன்மைகளைத் தேவ கிருபையால் மாத்திரம் மற்றவர்களுக்குப் பெறுவிக்கலாம். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமுதித பிரயோசனத்தைச் சேர்ந்த பலன்களுள் இது ஒன்று.

நாம் பாவத்தில் விழுந்த பிற்பாடு இஷ்டப்பிரசாதத்தை அடைவது, கடைசிமட்டும்

நிலைமையாயிருப்பது, இவை முதலான வரங்களை நாம் நமக்காக எப்படி அடைந்துகொள்ளலாமோ, அப்படியே கிருபைப்பேறுபலனால் மற்றவர்களுக்கும் கிடைக்கும்படி செய்யலாம். முதல்விசை மனந்திரும்புகிறவர்களுக்கு வேண்டிய முதல் அநுக்கிரக வரப்பிரசாதத்தை ஒருவனும் தனக்கென்று பெற்றுக்கொள்ளக்கூடாதானாலும், புறத்தியாருக்கு அந்த முதல் அநுக்கிரக வரப்பிரசாதங் கிடைக்கும்படி நாம் தேவ கிருபையை நோக்கி மன்றாடி அடையக்கூடும்.

(ரு) நாம் மற்றவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதைவிட, நமக்காகவே வேண்டிக்கொள்ளும்போது, அம்மன்றாட்டுப்பலன் அதிக வல்ல பிரயோசனமுமுள்ளது. பிறருக்காக ஒப்புக்கொடுக்கும் மன்றாட்டை சர்வேசுரன் கேட்பாரென்பது மெய்யே. ஆயினும் அவர் அவர்கள் மட்டில் வைத்திருக்கிற இரக்கத்துக்குத் தக்கதுதான் அம்மன்றாட்டு அவர்களுக்குப் பலிக்கும். அது எவ்வளவென்பது சர்வேசுரனுக்கு மாத்திரம் தெரியும்.

(சா) நமக்கான பரிகாரப்பலன் முழுமையும் பிறருக்காக ஒப்புக்கொடுக்கலாமென்றாலும், நமது மன்றாட்டின் பலன் முழுமையும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. ஏனெனில் அநுக்கிரகப்பிர



சாத உதவி நமக்கு எப்போதும் அவசரமானபடியால், இந்த உதவிக்காகச் சர்வேசுரனை நோக்கி அகத்தியம் மன்றாடவேண்டியிருக்கிறது.

(எ) பரிகாரப்பலனை பிறருக்காக ஒப்புக்கொடுப்பதால், நமக்கு ஏதாவது பிரயோசனமுண்டா? நமக்கு வரக்கூடிய பரிகாரப்பலனெல்லாம் நமக்காக வைத்துக்கொள்ளுவது அவசரமில்லை. பிறர் நன்மைக்காகச் சர்வேசுரனுக்கு அவைகளை ஒப்புக்கொடுப்பது வெகு உசிதமான தேவசிநேக முயற்சியாகும். இதினால் நம்மிடத்தில் உள்ள தேவ இஷ்டப்பிரசாதம் வளர்ந்து, மோட்ச சம்பாவனையின் சுதந்தரம் அதிகரிக்கிறதுடன், நமது மன்றாட்டினால் தேவ சகாயம் அடைவதற்கு அதிக பாத்திரவான்களாகிறோம்.

பிறருக்காக நாம் ஒப்புக்கொடுக்கும் காணிக்கை நமக்குத்தானே நன்மையை விளைவிக்கிறது. ஆகையால்தான் நமக்குக் கிடைக்கும் பரிகாரப் பலன்களையெல்லாம் உத்தரிக்கிற ஆத்துமாக்களைக் குறித்து சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கும் வீரதர வார்த்தைப்பாடு வெகு வெகு பிரயோசனமானது.

## மூன்றாம் பிரிவு.

## தேவதிரவிய அநுமானங்களின் பேரில்.

**தேவ வரப்பிரசாதம் அடைகிறதற்கான வழி பாடுகளென்ன?**

சர்வேசுரன் தம்மை நோக்கி வேண்டிக்கொள்ளாதவர்களுக்கு முதலாய்த் தேவவரப்பிரசாதத்தைக் கொடுக்கிறாரென்பது மெய்தான். ஆனால் இந்த வரப்பிரசாதத்தைத் தாராளமாய் அடைவதற்கு சாதாரண வழி யாதென்றால், தேவதிரவிய அநுமானங்களும், ஜெப தப தானதர்ம முதலிய நற்கிரியைகளுமாம்.

**தேவதிரவிய அநுமானங்களின்பேரில்.**

சேசுநாதர்சுவாமி தம்முடைய திருமரணத்தினாலே மனுஷருக்காக அடைந்த பாவப்பொறுத்தலையும் இஷ்டப்பிரசாதத்தையும் தந்தருளும்படி, அவர்தாமே தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தினார்.

**1. தேவதிரவிய அநுமானமாகிறதேதென்ன?**

"தேவதிரவியம்" என்றால் இஷ்டப்பிரசாதமென்றும், "அநுமானம்" என்றால் அடையாளமென்றும் அர்த்தமாகும். ஆகையால் தேவ



இஷ்டப்பிரசாதத்தை நமக்குக் குறித்துக் காட்டவும் அதை அளிக்கவும் சேசுநாதர் சுவாமி ஏற்படுத்திய அடையாளமே தேவதிரவிய அநுமானமென்கிறோம்.

(க) **தேவதிரவிய அநுமானங்கள் எத்தனை?**— நமக்கு ஞானசீவியத்தையும், அந்தச் சீவியத்தில் உள்ள பற்பல அந்தஸ்துக்கு தக்க வரப்பிரசாத உதவியையும் தந்தருளும்படி, சேசுநாதர் சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளாவன: ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை, பச்சாத்தாபம், அவஸ்தைப்பூசுதல், குருத்துவம், மெய்விவாகம்.

(உ) மனிதனுடைய சீவியத்திலே ஏழு முக்கியமான காரியங்களுண்டு.—முதலாவது, மனிதன் பிறக்கிறான்.—பிறகு வளர்ந்து பெலன் அடைகிறான்.—ஆகாரங்களைப் புசித்து, உயிரைக் காப்பாற்றுகிறான்.—வியாதியினின்று சொஸ்தப்படுகிறான்.—சாகிற சமயத்தில் அவனுக்கு மற்றவர்கள் விசேஷ உதவி ஒத்தாசை செய்கிறார்கள்.—மேலும், மனிதர்கள் ஒன்றாய்க்கூடி வாசம் பண்ணுகிறதினாலே, அவர்களை ஆண்டு நடத்துவதற்கு அதிகாரம் பெற்றவர்கள் சிலர் இருப்பது அவசரம்.—கடைசியாய் மனுக்குலமா

னது விர்த்திக்கும்படி புத்திர சந்தானமும் இருக்கவேண்டியது.

ஞான உயிரானது சரீர உயிருக்கு ஒத்திருக்கிறபடியினால், இந்த ஏழு முக்கிய விசேஷங்களுக்கு ஏற்றாப்போல், ஏழு தேவதிரவிய அனுமானங்களிருப்பது நியாயமே.

ஞானஸ்நானம் புது உயிராகிய இஷ்டப்பிரசாதத்தை அளிக்கும்.

உறுதிபூசுதல் இந்த ஞான உயிரை ஸ்திரப்படுத்தும்.

தேவநற்கருணை நம்மிடத்திலுள்ள மேலான உயிரைக் காப்பாற்றி, அதிகரிப்பிக்கிற ஞானபோசனமாகும்.

பச்சாத்தாபம் பாவத்தினாலே அழிக்கப்பட்ட ஞான உயிரைத் திரும்ப கொடுக்கும்.

அவஸ்தைபூசுதல் மரணசமயத்தில் வருகிற சகல தந்திர சோதனைகளினின்று தற்காத்து, மோக்ஷகரை கொண்டுபோய்ச் சேர்க்கும்.

குருத்துவம் விசுவாசிகளின் சபையை நடப்பித்து, ஞான நன்மைகளை அவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க வல்லமை அளிக்கிறது.

மெய்விவாகம் கிறீஸ்துவர்களுடைய ஞானசபையைப் பலுகச்செய்யும்.



ஏழு தேவதிரவிய அனுமானங்களில், ஐந்து ஒவ்வொரு மனிதனுடைய ஈடேற்றத்துக்காகவும், இரண்டு விசுவாசிகள் சபையின் பொது நன்மைக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

2. தேவதிரவிய அனுமானமாகிறதற்கு நாலு காரியம் வேண்டியது.

முதலாவது. இஷ்டப்பிரசாதம் கொடுக்கும் பொருட்டு அது சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டியது.

இரண்டாவது. சேசுநாதர்சுவாமியால் குறிக்கப்பட்ட விசேஷ பொருளும் வார்த்தையுமிருக்கவேண்டியது.

மூன்றாவது. அதை நிறைவேற்றுகிறவன் தக்க வல்லமையும் அதிகாரமும் பெற்றிருப்பதுமன்றி, திருச்சபையின் கருத்துப்படி, அவசியமானதெல்லாம் செய்யவேண்டியது.

நாலாவது. அதைப் பெறுகிறவன் அதற்குத் தடை செய்யாமல் சம்மதிக்கவேண்டியது.

இந்த நாலு காரியங்களும் சரியாய்ச் சேர்ந்திருக்கும்போது, தேவதிரவிய அனுமானங்கள் நல்ல ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுப்பதுமன்றி, ஒவ்வொரு தேவதிரவிய அனுமானத்துக்குமுரிய விசேஷ உதவிகளையும் அகத்தியமாய் பயக்கின்றன என்பது வேதசத்தியம்.

**(1) சேசுநாதர்சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களை ஸ்தாபித்தாரென்பது திருச்சபையின் பரம்பரையான வேதசத்தியமாம்.**

சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய தேவதிரவிய அநுமானங்களின் தொகை ஏழுக்கு அதிகமென்றாகிலும் ஏழுக்குக் குறைவென்றாகிலும் சொல்லுகிறவர்களையும், அவைகளில் யாதொன்று மெய்யான தேவதிரவிய அநுமானமல்லவென்று பிதற்றுகிறவர்களையும், திரிதேந்தின் பொதுச் சங்கம் சபித்திருக்கிறது.

(க) சேசுநாதர் சுவாமிக்குமாத்திரம் தேவதிரவிய அநுமானங்களை ஸ்தாபிக்க வல்லமை உண்டென்பது திருஷ்டாந்தமாய்த் துலங்குகின்றது. சர்வேசுரன் ஒருவரே தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுப்பதற்கு யாதொரு வெளி அடையாளம், கிரிகை, சடங்கு முதலியவைகளை ஏற்படுத்தக்கூடும். சேசுநாதர்சுவாமி எப்படி அப்போஸ்தலருக்குத் தமதுபேரால் பாவங்களைப் பொறுக்க வல்லமை அளித்தாரோ, அப்படியே சில புது தேவதிரவிய அநுமானங்களையும் தமதுபேரால் நியமிக்க அதிகாரம் அளித்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கவில்லை. அப்போஸ்தலர்களும், அவர்களுக்குப் பின் வந்த மேற்றிராணிமார்களும், சேசுநாதர்சுவாமிதாமே குறித்த



தெல்லாம் நுணுநுணுக்கமாய் நிறைவேற்றுகிறதுமன்றி, அவைகளில் ஏதேனும் மாற்றுவதற்குத் தங்களுக்கு அதிகாரமில்லையென்று எப்போதும் போதித்துவந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் புதிதான தேவதிரவிய அநுமானங்கள் யாதொன்றும் ஏற்படுத்தவில்லையென்றும், தேவதிரவிய அநுமானங்களைச் சேர்ந்த முக்கியமான காரியங்களில் யாதொன்றையும் மாற்றவில்லையென்றும் ஒத்துக்கொள்ளக்கடவோம்.

(உ) நாளாவட்டத்தில் திருச்சபை ஏதேனும் புதிதாய் ஏற்படுத்தியிருந்தால், நாம் அதைச் சரித்திர புஸ்தகங்களிலிருந்து அறிந்துகொள்ளக் கூடும். ஆனால் அவைகளில் இதற்கு யாதொரு அத்தாட்சியும் கிடையாது. இப்படிப்பட்ட முக்கியமான காரியங்களில் எவனாவது புது விஷயங்களைச் சேர்த்திருப்பானாகில், அவனை விசுவாசிகளும், குருக்கள் மேற்றிராணிமார்களும் எதிர்த்துத் தடுத்திருப்பார்களென்பது நிச்சயம். மேலும் திருச்சபையின் கொடிய சத்துருக்கள் மகா வைராக்கியத்தோடு கூக்குரலிட்டுத் தூஷணித்திருப்பார்கள். ஆனால் இத்தகைய அடையாளங்கள் யாதொன்றுமில்லை.

(ங) தேவதிரவிய அநுமானங்களில் திருச்சபை ஒன்றும் மாற்றவில்லை என்பதற்கு, கீழ்நாட்டுப் பிரிவினைக்காரர்கள் ஆட்சேபிக்கக் கூடாத சாட்சிகள். அவர்கள் கத்தோலிக்குத் திருச்சபையை விட்டுப் பிரிந்து ஆயிரம் வருஷமாகிறது. அவர்கள் அநேக விசுவாச சத்தியங்களைத் தள்ளிப்போட்டிருந்தாலும், ஏழு தேவதிரவிய அநுமானங்கள் உண்டென்று விசுவசித்து, இந்நாள்மட்டும் அவைகளைப் பழுதின்றி காப்பாற்றிவருகிறார்கள். திருச்சபையல்ல, சேசுநாதர் சுவாமிதாமே இந்த ஏழு தேவதிரவிய அநுமானங்களை ஸ்தாபித்தாரென்று பாரம்பரைப் போதனையின் வழியாக அவர்கள் அறிந்திருக்கிறதினாலே, இன்னமும் இந்த வேதசத்தியத்தை உறுதியாய் விசுவசிக்கிறார்கள்.

(ச) சேசுநாதர்சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தவில்லையென்று புரோட்டேஸ்டான்ட் மதத்தார் சாதித்ததற்குமுன், அது எங்கும் எப்போதும் விசுவாச சத்தியமாக சகல விசுவாசிகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்டுவந்தது. ஆகையால் திரேந்தின் என்னும் பொதுச் சங்கம் மகா நியாயத்தோடு நிரூபித்திருக்கிறதாவது:— "புது ஏற்பாட்டில் வழங்கிவருகிற சகல தேவதிரவிய அநுமானங்களையும் சேசுநாதர்சுவாமி



தாமே ஸ்தாபிக்கவில்லையென்றும், அவைகள் ஏழுக்கு அதிகமென்றும், ஏழுக்குக் குறைவென்றும், அவைகளில் யாதொன்று மெய்யான தேவதிரவிய அநுமானமல்லவென்றும் சாதிக்கிறவர்களுக்குச் சாபம்."

## (ii) தேவதிரவிய அநுமானத்துக்கு வேண்டிய பொருள் வார்த்தையின் பேரில்.

சேசுநாதர்சுவாமி ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்திலும் நாம் பஞ்சேந்திரியங்களால் உணரக்கூடிய பொருளும் வார்த்தையுமாகிய இரண்டு அடையாளங்களை ஸ்தாபித்திருக்கிறார்.

1. பொருளும் வார்த்தையும் தேவதிரவிய அநுமானத்துக்குரிய விசேஷ அடையாளமாம்.

(க) தேவதிரவிய அநுமானங்களில் உபயோகிக்கிற பொருளானது ஆத்துமத்துக்கு அளிக்கப்படுகிற இஷ்டப்பிரசாதத்தைப் பொதுவான விதமாய்க் காட்டுகிற அடையாளமாகிறது. இப்படியே, தண்ணீர் ஆத்துமம் பாவமில்லாமல் சுத்தமாகிறதற்கும்; அர்ச்சியசிஷ்ட எண்ணெய் சீவியகாலத்திலும், மரண நேரத்திலும் நாம் ஞான யுத்தம் செய்யப் பெலன் அடைகிறதற்கும்; அப்பமானது ஆத்துமம் ஞான வித

யாய் உயிர் பிழைப்பதற்கும் அடையாளமாகும். இவ்விதமே மற்றதும்.

(உ) இந்தப் பொருளைப் பிரயோகிக்கும்போது சொல்லப்படுகிற வார்த்தைகள், ஆத்துமத்திற்கு எவ்விதமான இஷ்டப்பிரசாதம் அளிக்கப்படுகிறதென்று அதிகத் தெளிவாய்க் குறித்துக்காட்டுவதும் தவிர, பொருள் தனக்குரிய ஞான நன்மையை ஆத்துமத்தில் உண்டாக்கும்படி செய்யும். இப்படியே "பிதாவுடையவும் ........................உன்னைக் கழுவுகிறேன்" என்று ஞானஸ்நானம் கொடுக்கிறவன் சொன்னவுடனே, பொருளாகிய தண்ணீர் பாவத்தைப் போக்கி ஆத்துமத்தைச் சுத்திகரிக்கிறது.

2. 'பொருளையும் வார்த்தையையும் தந்- யார்?

தேவதிரவிய அநுமானங்கள் சேசுநாதசுவாமியால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலேயும், அவைகளில் ஒவ்வொன்றுக்கும் விசேஷ பொருளும் வார்த்தைகளும் அவசரமாயிருக்கிறபடியினாலேயும் சேசுநாதர்சுவாமிதாமே இந்தப் பொருளையும் வார்த்தைகளையும் பொதுவிலாகிலும் குறித்துத் தீர்மானித்தாரென்று சொல்ல



வேண்டியது. சேசுநாதர்சுவாமி ஞானஸ்நானம், தேவநற்கருணையாகிய தேவதிரவிய அநுமானங்களில் உபயோகிக்கவேண்டிய பொருளையும் வார்த்தைகளையும் திட்டம் பண்ணியிருக்கிறார். மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப்பற்றி இவ்வளவு விபரமாய்த் தீர்மானிக்காதபோதிலும், பொதுவிலாகிலும் அவைகளைக் குறித்து, அதிகத் தெளிவாய்த் திட்டப்படுத்தும்படி, திருச்சபைக்கு அதிகாரம் கொடுத்தார்.

3. ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்துக்கும் குறிக்கப்பட்டுள்ள பொருளும் வார்த்தையுமென்ன?

ஞானஸ்நானத்துக்குப் பொருள்: சுபாவமான தண்ணீர்.—வார்த்தைகள்: "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே நான் உன்னைக் கழுவுகிறேன்."

உறுதிபூசுதலுக்குப் பொருள்: மேற்றிராணியார் தமது கரத்தை விரித்தலும், அவர் பூசுகிற பரிமளம் சேர்ந்த ஒலிவென்கிற பழத்தின் எண்ணெயுமாம்.—வார்த்தைகள்: "சிலுவை அடையாளத்தினாலே உன்னைக் குறிக்கிறேன்; ஈடேற்றத்தின் பரிமள எண்ணெயைக்கொண்டு உன்னை உறுதிப்படுத்துகிறேன்; பிதா

வுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே."

தேவநற்கருணைக்குப் பொருள்: கோதும்பை அப்பமும், முந்திரிகைப்பழ இரசமும்.—வார்த்தைகள்: "இது என் சரீரம், இதுஎன் இரத்தம்."

பச்சாத்தாபத்துக்கு ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு கட்டிக்கொண்ட பாவங்களிருப்பது அவசியமானாலும், இந்தப் பாவங்கள் மெய்யான பொருளாகாது; இஷ்டப்பிரசாதத்தினுடைய அடையாளமாகாது. இவைகள் விலக்கப்பட வேண்டியவைகளாயிருப்பதால், தேவதிரவிய அநுமானத்துக்குப் பங்குபோலே சேர்ந்திருப்பது கூடாது. ஆனால் ஆயத்தக்காரன் செய்கிற மனஸ்தாப முயற்சியும், பாவசங்கீர்த்தனமும், ஞான அபராதமும், பச்சாத்தாபத்தின் பொருளைப்போலிருக்கின்றன.-வார்த்தைகள்: "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே நான் உன் பாவங்களைப் பொறுக்கிறேன்" என்று சொல்லுவதாம். குருவானவர் எவ்விதமான வார்த்தைகளால் இப்பேர்ப்பட்ட தீர்ப்புச் சொன்னாலும் செல்லும்.



அவஸ்தைப் பூசுதலுக்குப் பொருள்: ஒலிவென்கிற பழத்தின் எண்ணெய்.—வார்த்தைகள்: பஞ்சேந்திரியங்களைப் பூசும்போது, குருவானவர் உச்சரிக்கிற சொற்களாம்.

குருத்துவம் பெறும்போது, எழு பட்டங்களில் ஒவ்வொன்றுக்குமுரிய அலுவலைக் குறிக்கிற விசேஷமான பொருளும் வார்த்தைகளுமுண்டு. குருப்பட்டத்துக்குரிய பொருள்: மேற்றிராணியார் ஒவ்வொருவரின் தலைமேல் கைவிரித்து அவர்களைத் தொடுதல் அவசரமாயிருப்பதுமல்லாமல், இரசத்தோடு பூசைப்பாத்திரமும், அப்பத்தோடு பாத்திரத்தின் தட்டும் கொடுக்கவேண்டுமென்பது கண்டிப்பான கட்டளை. ஆனால் பாத்திரமும் தட்டும் கொடுப்பது தேவதிரவிய அநுமானம் நிறைவேற்றுகிறதற்குக் கட்டாயம் வேண்டியதோ என்பது நிச்சயமில்லை.—வார்த்தைகள்: மேற்றிராணியார் தமது கைகளை விரித்துச் சொல்லுகிற செபமும், பிற்பாடு பூசைப் பாத்திரத்தையும், அதின் தட்டையும் தொடச் செய்யும்போது, "சீவியர்களுக்காகவும், மரித்தவர்களுக்காகவும் சர்வேசுரனுக்குப் பலி ஒப்புக்கொடுக்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்" என்று உச்சரிக்கிற வார்த்தைகளுமாம்.

மெய்விவாகத்துக்குப் பொருள்: மணவாளர் இருவரும் ஒருவருக்கொருவர் தங்களைக் கையளித்தலாம்.—வார்த்தைகள்: அப்படிக் கையளிப்பதை ஏற்றுக்கொள்ளுவதாம். இந்தச் சம்மதத்தை, வார்த்தையினாலாவது வெளி அடையாளங்களினாலாவது வெளிப்படுத்தலாம்.

4. பொருளும் வார்த்தையும் சேர்ந்திருக்கிறது அவசரமா?

தேவதிரவிய அநுமானம் ஆகிறதற்குப் பொருளும் வார்த்தைகளும் சேர்ந்திருக்கிறது முழுதும் அவசரம். ஆகையால் பொருளைப் பிரயோகிக்கும்போதுதானே, குறிக்கப்பட்ட வார்த்தைகளையும் உச்சரிக்கவேணும். இவைகளைப் பிரித்து, முதலில் பொருளைக் கொடுத்து, கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு வார்த்தைகளை உச்சரித்தால், இது தேவதிரவிய அநுமானமாகமாட்டாது.

(க) பச்சாத்தாபமானது ஓர் நீதித் தீர்ப்பாயிருப்பதினாலே, குற்றவாளியின் தப்பிதத்தைக் கேட்டு விசாரித்த சிலநாளைக்குப் பிற்பாடு தீர்ப்புச் சொல்லலாம்.

மெய்விவாகமானது ஓர் உடன்படிக்கை. ஆகையால் இந்த இரண்டு தேவதிரவிய அநுமா-



னங்களில் பொருளும் வார்த்தையும் ஒன்றித்திருக்கும்படி, உலக நியாயத் தீர்ப்பிலும் உடன்படிக்கையிலும் உண்டாகிற ஒன்றிப்பு இருப்பது போதும். இதினாலே கனமான முகாந்தரமிருக்கும்போது, மாப்பிள்ளையானவன் காகித மூலமாயென்கிலும் வேறே ஒரு ஆளின் மூலமாயென்கிலும் கலியாணம் முடித்துக்கொள்ளலாம். இப்படி காகிதத்தினாலாவது வேறே ஆள் வழியாயாவது அனுப்பின சம்மதத்தைக் குருவானவருக்கும் இரண்டு சாட்சிகளுக்கும் அறிவித்தவுடனே, பெண் அதற்குச் சம்மதிக்க வேண்டியது. மாப்பிள்ளையைப்பற்றி இப்போது சொன்னதெல்லாம் பெண்ணைப்பற்றியும் சொல்லத்தகும். இது உலக கலியாண உடன்படிக்கைமாத்திரமல்ல, ஆனால் மெய்யான ஞானக்கலியாணமாகும்.

(உ) தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றுகிறவன் தானே பொருளையும் வார்த்தையையும் ஒன்றாய்ச் சேர்க்கவேண்டியது. ஆதலால் ஒருவன் வார்த்தையை உச்சரிக்க, வேறொருவன் தண்ணீர் வார்த்தால், ஞானஸ்நானமாகாது.

5. பொருளும் வார்த்தைகளும் மாறிப்போனால், தேவதிரவிய அநுமானமாகுமா?

(க) சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த பொருளும், வார்த்தையும், கருத்தும் தேவதிரவிய

அநுமானத்துக்கு அகத்தியமாய் வேண்டியிரு
ப்பதினால், அவைகளில் அவசியமானதேதா
வது சரியாய் இல்லாதேபோனால், தேவதிரவிய
அநுமானம் ஆகமாட்டாது, இஷ்டப்பிரசாத
மும் கொடுக்கப்படாது.

அப்படியே ஓர் குருவானவர் தமக்கே தெரி
யாமல் இரசத்துக்குப் பதிலாய் தண்ணீரைக்
கொண்டு பூசை செய்தால், அல்லது தேவ வசீ
கர வார்த்தைகளைப் பராக்கினால் முழுதும்
மாற்றிவிட்டால், மெய்யான பூசையாகாது.
அவசரமான வார்த்தைகளில் ஒன்றை மாத்தி
ரம் மாற்றிவிட்டாலும், தேவதிரவிய அநுமா
னம் நிறைவேறுகிறதில்லை. பதினி, கள்ளு முத
லியவைகளைக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்
கிறதும், தேவமாதாவின் நாமத்தினாலேயாவது,
பிதா இஸ்பிரீத்து சாந்துவின் நாமத்தினாலேயா
வது, நான் உன்னைக் கழுவுகிறேன் என்று சொல்
லுகிறதும், கனமான மாற்றங்களாகையால், ஞா
னஸ்நானமாகாது. பொருளிலும், வார்த்தை
யிலும் மனம்பொருந்தி இப்பேர்ப்பட்ட கன
மான மாற்றஞ் செய்கிறவன் சாவான பாவம்
கட்டிக்கொள்ளுகிறானேயொழிய தேவதிரவிய
அநுமானத்தை நிறைவேற்றுகிறதில்லை



(உ) தேவதிரவிய அநுமானம் வீணாய்ப்போகி
றது மகா பெரிய காரியமானதால், தக்க பொ
ருள் கிடையாத சமயத்தில் மாத்திரம் சந்
தேகமான பொருளை உபயோகிக்கலாம். ஒரு மனி
தனை நித்திய நரகத்திற்குப் போகிற ஆபத்தில்
விட்டுவிடுகிறதைப் பார்க்கிலும், தேவதிரவிய
அநுமானம் ஒன்றுமில்லாமல் போகும்படி விடு
கிறது நலம். தேவதிரவிய அநுமானங்கள் மனி
தருக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன என்
பது ஓர் விதி சுலோப வாக்கியம். ஆகையால்
அவஸ்தைக்காரனுக்கு ஞானஸ்நானம் கொடு
ப்பதற்குச் சுபாவமான தண்ணீர் இல்லாவிட்
டால், சந்தனத் தண்ணீரையாவது, கையிலே
இருக்கிற எந்தத் தண்ணீரையாவது பிரயோ
கிக்கக்கடவோம்.

(III) தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்
றக்கூடியவர்கள் யார்?

1. மேற்றிராணிமார்கள் சகல தேவதிரவிய
அநுமானங்களையும், குருக்கள் உறுதிபூசுதல்
குருத்துவம் தவிர, மற்ற ஐந்து தேவதிரவிய
அநுமானங்களையும் நிறைவேற்றுவதற்கு வல்ல
மையுள்ளவர்கள். சில இடங்களில் அர்ச்.
பாப்பானவருடைய விசேஷ உத்தரவிருந்தால்,
குருவானவர் மேற்றிராணியாரால் மந்திரிக்க-

பரிமள எண்ணெயைக்கொண்டு, உறுதிபூசுதல் கொடுக்கலாம். அவஸ்தை சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். மெய்விவாகத்தைக் கலியாணக்காரர்தானே நிறைவேற்றுகிறார்கள். குருவானவர் கலியாணத்தை ஆசீர்வதித்து, திருச்சபையின் பேராலே அதற்குச் சாட்சியாயிருக்கிறாரேயல்லாமல், தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றுகிறதில்லை.

2. குருத்துவம் பெற்றவர்கள் தேவதிரவிய அநுமானங்களை எங்கும் நிறைவேற்றலாமா?

அர்ச். பாப்பானவர் திருச்சபை யெங்கும் சகல தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றலாம். அவருக்குச் சர்வ அதிகாரம் இருக்கிறதினாலே, அவர் சகல கிறீஸ்துவர்களுக்கும் முதன்மையும் மேன்மையுமான ஞான ஆசாரியராயிருக்கிறார். மேற்றிராணிமார்களும், குருக்களும் தங்களுக்கு உட்பட்ட கிறீஸ்துவர்களுக்கு மாத்திரம் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவேண்டும். அவர்கள் திருச்சபை ஒழுங்குக்கு விரோதமாய் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுத்தால், இவைகள் செல்லும்; ஆனால் சாவான பாவம் கட்டிக்கொள்வார்கள். பாவசங்கீர்த்தனமும் கலியாணமும் மாத்திரம் அதிகாரமில்லாமல் செல்லாது.



3. தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுகிறவர்களிடத்தில் எது அவசியம்?

மெய்யான தேவதிரவிய அநுமானம் ஆகிறதற்கு சரியான பொருளும் வார்த்தையும் உபயோகிக்கிறதுமல்லாமல், அதை நிறைவேற்றுகிறவர்கள் திருச்சபையின் கருத்துப்படி எல்லாம் செய்ய மனதுள்ளவர்களாயிருக்கவேண்டியது. தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுகிறவனுக்கு இந்தப் பொதுக்கருத்து இல்லையானால், தேவதிரவிய அநுமானம் ஆகிறதில்லை. அவன் சேசுநாதர்சுவாமி பேராலே அவருடைய ஊழியன்போலே அதை நிறைவேற்றாமல், சாதாரண மனுஷனைப்போல வெறும் கிரியையை மாத்திரம் செய்தால், யாதொரு ஞான பலனும் உண்டாகிறதில்லை. அவனுக்குத் திருச்சபையின் கருத்தாகிலும் அல்லது சேசுநாதர்சுவாமி கற்பித்ததை நிறைவேற்றவேணுமென்கிற ஓர் பொதுவான கருத்தாகிலும் இருந்தாலே போதும். ஆனால் இந்தக் கருத்தை திட்டமாய்த் தள்ளிப்போட்டால், தேவதிரவிய அநுமானம் ஆகிறதில்லை.

(க) புண்ணியவானாயிருப்பது அவசரமா? அவசியமில்லை. சேசுநாதர் சுவாமி திருச்சபையின் ஊழியர் [illegible] கெல்லாம் தக்க அதிகாரத்

தோடே சரியாய் நிறைவேற்றுகிறவன் எவனோ, அவன் நிறைவேற்றும் தேவதிரவிய அநுமானம் எப்போதும் செல்லும். அது அவனுடைய புண்ணிய பலன்களாலே பலிக்கிறதில்லை. சேசுநாதர் சுவாமி அவனைத் தமக்கு ஒரு ஆயுதமாகப் பிரயோகிக்கிறார். மெய்யாகவே சேசுநாதர் சுவாமிதாமே ஞானஸ்நானம் கொடுக்கிறார். பாவங்களை மன்னிக்கிறார். அப்பத்தைத் தமது சரீரமாகவும் இரசத்தைத் தமது இரத்தமாகவும் மாற்றுகிறார். சாவான பாவத்தோடு தேவதிரவிய அநுமானம் நிறைவேற்றுகிறவன் தேவதுரோகத்தைக் கட்டிக்கொண்டாலும், அதைப் பெறுகிறவர்களிடத்தில் யாதொரு வித்தியாசமும் உண்டாகாது.

(௨) இந்தன்மையே நடியானவன் நல்லவனானாலும் சரி, கெட்டவனானாலும் சரி, அவன் கையால் பூமியில் போட்ட விதை தன் சொந்த பலத்தினால் விளையும். நிறைவேற்றுகிறவனிடத்தில் விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகம் முதலிய புண்ணியங்கள் இருக்கிறது அவசியமில்லை. சேசுநாதர் சுவாமிதாமே தேவதிரவிய அநுமானங்களை ஸ்தாபித்து, தமது பேராலே அவைகளைக் கொடுக்கக் கற்பித்து, தாம் அடைந்த அளவில்லாத பேறுபலன்களை அவைகள் வழி



யாகக் கொடுக்கிறாரே யொழிய, அவைகளை நிறைவேற்றுகிறவனுடைய பேறுபலன்களினால், அற்பப் பிரயோசனமும் வருகிறதில்லை. அவன் பாவியானாலும் சரி, அர்ச்சியசிஷ்டவனானாலும் சரி, அந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெறுகிறவனுக்குக் கிடைக்கிற இஷ்டப்பிரசாதத்தில் யாதொரு வித்தியாசமும் உண்டாகிறதில்லை.

(௩) வித்தியாசமெல்லாம் அதைப் பெறுகிறவனிடத்திலிருந்து வரும் என்பது சத்தியம். அதெப்படியென்றால், ஒரு மரத்தில் யார் நெருப்பைவைத்தாலும் அந்த நெருப்பு மரம் காய்ந்திருப்பதற்குத் தக்கது அதைச் சுட்டெரிக்கும். அவ்விதமே, தேவதிரவிய அநுமானங்களை யார் கொடுத்தபோதிலும், அவைகளைப் பெறுகிறவர்களின் ஆயத்தத்துக்குத் தக்கது அதிக பலன் உண்டாகுமேயல்லாமல், தேவதிரவிய அநுமானத்துக்குத்தானே யாதொரு புது சக்தி அளிக்கப்படுகிறதில்லை. ஆயினும் அதைப் பெறுகிறவனுக்காக மகா புண்ணியமுள்ள குருவானவர் வேண்டிக்கொண்டால், மன்றாட்டுப் பலனினிமித்தம் அவனுக்கு அதிக அநுக்கிரகப்பிரசாதம் கிடைக்கலாம்.

(IV) தேவதிரவிய அநுமானங்களைப் பெறக்கூடியவர்கள் யார்?

இவ்வுலகத்தில் ஜீவிக்கிற மனிதர்கள் மாத்திரம் பெறக்கூடும். ஆனால் எல்லோரும் சகல தேவதிரவிய அநுமானங்களையும் அதேவிதமாய் அடைய முடியாது. குருத்துவம் பெண்பிள்ளைகளுக்குச் செல்லாது.

1. புத்திவிபரம் அறிகிறதற்குமுன் ஞானஸ்நானம் பெறக்கூடும்; பச்சாத்தாபம், அவஸ்தைப் பூசுதல், மெய்விவாகம், குருத்துவத்தைப் பெற்றுக்கொள்ளுதல் கூடாது. லத்தீன் திருச்சபையில் சிறுபிள்ளைகளுக்குத் தேவநற்கருணை கொடுக்கிறதில்லை. வெகு சொற்பத் தேசங்களில் மாத்திரம் உறுதிபூசுதல் குழந்தைகளுக்குக் கொடுக்கிறதுண்டு. கிரீக் திருச்சபையில், அர்ச். பாப்பானவர்களுடைய சம்மதியின் பேரில், இந்த இரண்டு தேவதிரவிய அநுமானங்களையும் சிறுபிள்ளைகளுக்குக் கொடுத்துவருகிறார்கள்.

புத்திவிபரம் அறிந்தவர்கள் வியாதியினால் மரண ஆபத்திலிருக்கும்போதுமாத்திரம், அவஸ்தைப்பூசுதல் பெறலாம். ஆண்பிள்ளைகளுக்குமாத்திரம் குருப்பட்டம் கொடுக்கலாம். குருத்துவத்



துக்கடுத்த பெரிய பட்டங்களைப் பெற்றவர்களும் பிரதான சந்நியாச சபையில் பெரிய வார்த்தைப்பாடு கொடுத்தவர்களும் கலியாணம் செய்தால், அது ஒருக்காலும் செல்லாது. விசேஷ விக்கினமில்லையானால், மற்றவர்கள் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடும்.

மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப் பெறுகிறதற்குமுன், சரியாய் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டியது. இது சரியாயில்லாவிட்டால், மற்றத் தேவதிரவிய அநுமானங்களெல்லாம் வீணாய்ப்போகிறது.

2. புத்திவிபரம் அறிந்தவன் தேவதிரவிய அநுமானம் பெற்றுக்கொள்ள மனதாயிருக்கவேண்டும்.

தேவதிரவிய அநுமானமாகிறதற்கு, பெறுகிறவனிடத்தில் அகத்தியம் இருக்கவேண்டியது இந்த மனதே; இது போதும். ஆகலால் ஒருவனுக்கும் தேவதிரவிய அநுமானங்களைக் கட்டாயமாய்க் கொடுக்கக்கூடாது. புத்திவிபரமுள்ளவனுக்கு இவைகளைப் பெற மனதில்லையானால், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றமுடியாது. தேவநற்கருணையைப்பற்றி, ஒரு விசேஷம் உண்டு. சேசுநாதர்சுவாமி அதில் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறதினாலே, அதை வாங்குகிறவன் அந்த

ஞானியாயிருந்தபோதிலும், மனதில்லாமலிருந்தபோதிலும், திவ்வியகர்த்தனைத் தாமே உட்கொள்ளுகிறான்; ஆகிலும் அதற்குரிய இஷ்டப்பிரசாதத்தை அவன் அடைகிறதில்லை.

3. ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்துக்குரிய இஷ்டப்பிரசாதத்தை அடைவதற்கு வேண்டிய ஆயத்தம் என்ன?—புத்திவிபரம் அறிந்தவர்கள் ஞானஸ்நானமாவது பச்சாத்தாபமாவது பெறும்போது, அடிமை மனஸ்தாபமாகிலும் படவேண்டியது. மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப் பெறும்போது, சாவான பாவம் இல்லாமல் இருப்பது அவசரம். இப்படிப்பட்ட ஆயத்தங்களில்லாமல் தேவதிரவிய அநுமானத்தைப் பெறுகிறவன் இஷ்டப்பிரசாதத்தை அடையமாட்டான்.

(க) யாதொரு தேவதிரவிய அநுமானத்துக்குரிய இஷ்டப்பிரசாதத்தை அடைவதற்கிருந்த விக்கினம் தள்ளுண்டபிறகு, இஷ்டப்பிரசாதம் கிடைக்குமா? ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவம் என்கிற தேவதிரவிய அநுமானங்களை ஒருவிசை மாத்திரம் பெறலாம் என்பதினாலும், ஒரு வியாதியிலே இரண்டு தடவை அவஸ்தைபூசுதல் பெற உத்தரவு இல்லாததினாலும், புருஷன் பெண்சாதி இருவரும் உயிரோடிருக்கும்



போது வேறு கலியாணம் செய்துகொள்ளலாகாது என்பதினாலும், இந்தத் தேவதிரவிய அநுமானங்களைத் தக்க ஆயத்தமின்றிப் பெற்றவர்கள், விக்கினம் தள்ளுண்ட உடனே இவைகளில் ஒவ்வொன்றுக்குமுரிய சகல தேவ வரப்பிரசாதங்களையும் அடைந்துகொள்ளுகிறார்கள்.

இப்படியே புத்திவிபரமறிந்தவன் ஒருவன் சரியான விசுவாசமும் அடிமை மனஸ்தாபமுமின்றி ஞானஸ்நானம் பெறுகிறானென்று வைத்துக்கொள்வோம். அவன் ஞானஸ்நானம் மெய்யாகவே பெற்றிருக்கிறதினாலே, சர்வேசுரனுடைய பிள்ளைகளுக்குரிய ஞான அக்ஷரம் அவன் ஆத்துமத்தில் பதிந்திருக்கிறதுமன்றி, திருச்சபையின் ஞான சரீரத்திலும் சேர்ந்திருக்கிறான். ஆனால் அவனிடத்தில் தக்க ஆயத்தம் இல்லாததினால், பாவப் பொறுத்தலும், இஷ்டப்பிரசாதமும் கொடுக்கப்படுகிறதில்லை.

(உ) தனக்குத் தெரியாதபடி இப்பேர்ப்பட்ட விக்கினங்கள் நேரிட்டிருந்தால், தக்க விசுவாசமும் அடிமை மனஸ்தாபமும் கொண்டவுடனே, பாவசங்கீர்த்தனமின்றியே, இஷ்டப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்வான்.

சாவானபாவத்தின்பேரில் பற்றுதலோடு தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுக் கொண்டவன் மனம் பொருந்தி தேவதுரோகம் கட்டிக்கொள்கிறான். இவன் இஷ்டப்பிரசாதத்தை அடையவேண்டுமானால், பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது. உத்தம மனஸ்தாபப் பட்டானாகில், இந்தப் பாவம் நீங்கிப் போகிறபடியால், இஷ்டப்பிரசாதமும் அளிக்கப்படும்; ஆனால் பாவசங்கீர்த்தனம் செய்யும்போது, இந்தப் பாவத்தை வெளிப்படுத்த வேண்டியது.

தேவநற்கருணையும் பச்சாத்தாபமும் அடிக்கடி பெறக்கூடுமென்கிறதினாலே, இவைகளைத் தெரியாமல் குறையுள்ள ஆயத்தத்தோடு பெற்றிருந்தால், விக்கினம் தள்ளுண்ட பிற்பாடு இவைகளுக்குரிய இஷ்டப் பிரசாதம் கிடைக்குமோவென்பது சந்தேகம்.

### 3. தேவதிரவிய அநுமானங்களால் வரும் ஞான நன்மைகளின் பேரில்.

தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்ற வல்லமையும் அதிகாரமுமுள்ளவர்கள் சேசுநாதர் சுவாமி குறித்திருக்கும் பொருளையும் வார்த்தைகளையும் உபயோகித்து, திருச்சபையின் கருத்துப்படி நல்ல ஆயத்தமுள்ள மனுஷனுக்கு



அவைகளைக் கொடுக்கும்போதெல்லாம், உண்டாகும் ஞான நன்மைகளாவன: (I) முதன்மையும் முக்கியமுமானது தேவ இஷ்டப்பிரசாதம் கொடுக்கப்படுவதே. (II) அல்லது அது அதிகரிக்கப்படும். (III) ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்துக்குரிய விசேஷ வரப்பிரசாதம் அளிக்கப்படும். (IV) கடைசியாய், மூன்று தேவதிரவிய அநுமானங்கள் ஆத்துமத்தில் ஞான அக்ஷரம் பதிப்பிக்கின்றன.

### (I.) தேவ இஷ்டப்பிரசாதம் கொடுக்கப்படுவதின் பேரில்.

தேவதிரவிய அநுமானங்கள் மெய்யாகவே இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கின்றன என்பதைப்பற்றி திரிதெந்தீன் பொதுச்சங்கம் நிருபித்ததாவது: "பழைய ஏற்பாட்டைச் சேர்ந்த தேவதிரவிய அநுமானங்களுக்கும், புது ஏற்பாட்டைச் சேர்ந்த தேவதிரவிய அநுமானங்களுக்கும், சடங்குகள் வெளி ஆசாரங்கள் முதலியவைகளில் வித்தியாசம் இருக்கிறதேயன்றி, வேறே வித்தியாசமில்லையென்றும்,—புது ஏற்பாட்டைச் சேர்ந்த தேவதிரவிய அநுமானங்கள் மனிதருடைய விசுவாசத்தை எழுப்புகிறதற்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டனவென்

றும்,—அடையாளத்தால் குறிக்கப்பட்ட இஷ்டப்பிரசாதம் இவைகளில் அடங்கியில்லையென்றும்,—தடை செய்யாதவர்களுக்கு, இந்தத் தேவதிரவிய அநுமானங்கள் தங்களுக்குரிய பலத்தினாலே இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்காமல், விசுவாசத்தினாலே முன் அடைந்த இஷ்டப்பிரசாதத்துக்கும் பரிசுத்தத்துக்கும் வெறும் அடையாளமாயிருக்கின்றனவென்றும்,— இவைகள் தங்களுக்குரிய ஞான பலத்தினாலே இஷ்டப்பிரசாதத்தை அளிக்கிறதில்லையென்றும் சேசுநாதர்சுவாமியின் வாக்குத்தத்தத்தின் மேல் நமக்குள்ள விசுவாசமே அதைக் கொடுக்கிறதென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

1. யூதர் செய்துவந்த சடங்குகள் மெய்யான தேவதிரவிய அநுமானங்கள் அல்ல. "பழைய ஏற்பாட்டின் சடங்குகள் தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கப் பலனற்றதென்றும், சேசுநாதர் சுவாமியுடைய திருப்பாடுகளினாலே வரவேண்டிய தேவ இஷ்டப்பிரசாதத்துக்கு வெறும் அடையாளமாயிருந்ததென்றும்" பிலோரென்ஸ் (Florence) பட்டணத்தில் கூடின பொதுச் சங்கம் தீர்மானித்தது.



(க) யூதரிடத்தில் விருத்தசேதனம் என்னும் முக்கியமான சடங்கோடுகூட வேறு அநேக திருச்சடங்குகளுமிருந்தன. இவைகள் ஆத்துமத்துக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்காமல், வெளியரங்கமான சுத்திகரம் பண்ணுவதற்கு ஏதுவாயிருந்தன. மேலும் யூதர்களுக்குள்ளே இருந்த ஒன்றிப்பையும், சர்வேசுரனோடு அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் காட்டுவதற்கு இந்தச் சடங்குகள் வெளி அத்தாட்சிகளாயிருந்தன.

(உ) இந்தச் சடங்குகள் சொந்த சக்தியினாலே இஷ்டப்பிரசாதத்தை அளிக்கக்கூடாததினாலே, இவைகளைச் செய்தவர்களின் நல்ல ஆயத்தத்துக்குத் தக்கது, சர்வேசுரன்தாமே அதைத் தந்தருளினார். புத்தி விபரம் அறிந்தவர்கள் பாவப்பொறுத்தல் அடைவதற்கு, இரட்சகர் வருவார் என்று விசுவசித்து, உத்தமமனஸ்தாப முயற்சியும் சிநேக முயற்சியும் செய்யவேண்டியதாயிருந்தது: குழந்தைகளுக்கோவெனில், விருத்தசேதனம் செய்தவர்களின் விசுவாசத்தினாலே, ஜென்மப்பாவம் நீங்கிப்போனது. ஆகையால், இஷ்டப்பிரசாதமானது சடங்குகளின் சக்தியினால் உண்டாகாமல் மனிதருடைய விசுவாசத்தினால்தான் அளிக்கப்பட்

டது. பழைய ஏற்பாட்டில் இஷ்டப்பிரசாதத்துக்குச் சடங்கல்ல, ஆனால் விசுவாசமே காரணம்.

2. புதிய ஏற்பாட்டைச் சேர்ந்த தேவதிரவிய அநுமானங்களும் அவைகளைப் பெறுகிறவர்களின் விசுவாசத்தினாலே இஷ்டப்பிரசாதத்தைப் பிறப்பிக்கின்றனவேயல்லாமல், தங்களுக்குரிய சக்தியினாலே பிறப்பிக்கிறதில்லை என்பது சில பதிதருடைய போதனை. இது முழுதும் அபத்தமென்றும், வேத சத்தியத்திற்கு விரோதமென்றும் நிர்மானிக்கப்பட்டது. சேசுநாதர் சுவாமி ஸ்தாபித்த தேவதிரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தின் வெறும் அடையாளங்களல்ல, தடைசெய்யாதவர்களிடத்தில் இவைகள் தங்களுக்குரிய சக்தியினால் எப்போதும் இஷ்டப்பிரசாதத்தைப் பிறப்பிக்கும். விசுவாசமும் மற்றப் புண்ணியங்களும் இஷ்டப்பிரசாதத்தை அடைவதற்கு வேண்டிய ஆயத்தமேயொழிய மற்றப்படியல்ல.

(க) வேத புஸ்தகங்கள் நமக்குப் படிப்பிக்கிறதென்ன? ஞானஸ்நானத்தினாலே, நாம் மறுஜென்மமடைந்து, புதுப்பிக்கப்படுகிறோம், (தித். III. 5.)—மறுபிறப்பு அடையாதிருந்தால் மோட்சமில்லை, (அரு. III. 5.)—சுத்திகரிக்கப்பட்டு



பரிசுத்தர் ஆகிறோம், (எபே. V. 26.)—நமது பாவங்கள் மன்னிக்கப்படும், (நட. II. 38.)—பாவங்கள் கழுவப்படும். (நட. XXII. 16.)

உறுதிபூசுதலினால் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொள்ளுகிறோம். (நட. VIII. 17.)

தேவநற்கருணையை வாங்குகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டு. (அரு. VI. 55.)

சேசுநாதர்சுவாமியின் திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் ஞானபோசனமாக உட்கொள்ளுகிறோம். (I. கொ. X. [illegible]

பச்சாத்தாபத்தினால் பாவங்களெல்லாம் பொறுக்கப்படும். (அரு. XX. 23.)

அவஸ்தைப்பூசுதலினால் வியாதியின் உபத்திரியங்களைப் பொறுமையாய் அநுபவிக்கவும், பசாசின் சோதனைகளை ஜெயிக்கவும், பாவங்களோடிருந்தால் பொறுத்தல் அடையவும் கூடும். (இயா. V. 14-15.)

குருத்துவத்தினாலே சுவிசேஷத்தின் வேலைக்குப் பாத்திரவான்களாகிறார்கள். (எபே. IV. 12.)

மெய்விவாகத்தினால் புருஷன் பெண்சாதிக்குள்ளே இருக்கிற பந்தனம் அர்ச்சிக்கப்படுகிறது. (எபே. V. 31-32.)

தேவதிரவியஅநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதென்று வேதபுஸ்தகத்திலிருந்து தெளிவாய்த் துலங்குகிறது.

(௨) சேசுநாதர்சுவாமி தேவதிரவிய அநுமானங்களுக்குக் கொடுத்த அதிசயமான பலத்தினாலே இவைகள் இஷ்டப்பிரசாதத்தைப் பிறப்பிக்குமென்று திருச்சபையின் பரம்பரைப் போதகத்தினாலும் விளங்கிறது. அதினாலே அதிகாரமுள்ளவன் தக்க கருத்தோடு தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றினால், எப்போதும் இஷ்டப்பிரசாதம் அளிக்கப்படுமென்றும், அது திரு அடையாளத்தின் சக்தியினால் வருகிறதேயல்லாமல், அவைகளை நிறைவேற்றுகிறவனின் புண்ணியத்தினாலாவது, பேறுபலன்களினாலாவது, கொஞ்சமென்கிலும் வருகிறதில்லையென்றும் வேதசத்தியமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(௩) தேவதிரவிய அநுமானங்களைப் பெறுகிறவன் இஷ்டப்பிரசாதத்துக்குத் தடை செய்யக்கூடுமேயொழிய, தன் ஆயத்தத்தினாலே தேவதிரவிய அநுமானங்களுக்குப் புதுச் சக்தியும் பலனும் கொடுக்கிறதில்லை. அவைகள் அளவில்லாத பலனைக்கொண்டிருந்தபோதிலும், பெறுகிறவனுடைய ஆயத்தத்துக்குத் தக்கப்படி ஒரு



பங்கு மாத்திரம் அளிக்கப்படும். இப்படியே அதிக பெரிய பாத்திரமுள்ளவன் அதிக தண்ணீர் மொள்ளுவான்.—விதை விதைத்த பூமி எவ்வளவு செழிப்பாயிருக்குமோ, அவ்வளவு அதிக வெள்ளாண்மை தரும்.—பச்சை மரத்தைப்பார்க்கிலும் காய்ந்த மரம் அதிக நன்றாய் எரியும். மரம் காய்ந்திருப்பது, சுட்டெரிக்கிற சத்தியை நெருப்புக்குக் கொடுக்கிறதில்லை; ஆனால் மரத்தை அதிக எளிதாய் எரிக்கக்கூடியதாக்குகிறது. அதுபோலவே தேவதிரவிய அநுமானங்கள் தங்களில்தானே சக்தியெல்லாம் கொண்டிருந்தாலும், அவைகளைப் பெறுகிறவனுடைய பத்தி சுறுசுறுப்பு ஆயத்தத்துக்குத் தக்கப்படி இஷ்டப்பிரசாதத்தின் அளவும் அதிகரிக்கிறது.—ஒருவன் எவ்வளவு சவுக்கியத்தோடும் பசியோடும், மட்டசனத்தோடும் சாப்பிடுகிறானோ, அவ்வளவுக்குப் பிரயோசனம் அடைகிறதுபோல, தேவதிரவிய அநுமானங்களை எவ்வளவுக்கு ஆசை ஆவலோடும், பத்தி பற்றுதலோடும், மேரை மரியாதையோடும் பெற்றுக்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்குப் பலனடைவோம்.

(௪) இது நிற்க, புத்தி விபரமில்லாத பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறது திருச்சபை எங்கும் நடந்துவருகிற வழக்கம். அதைப் பெறு

கிறதினால் அவர்களிடத்திலிருக்கிற ஜென்மப் பாவம் தப்பாமல் நீங்கிப்போகுமென்பது வேத சத்தியம். ஆகையால் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றுகிறவனுடைய புண்ணியத்தினாலாவது, இதைப் பெற்றுக்கொள்ளுகிறவனுடைய சுயத்தத்தினாலேயாவது இஷ்டப்பிரசாதம் ஏதேனும் உண்டாகிறதில்லை. சகல தேவதிரவிய அநுமானங்களும் தங்களுக்குரிய பலத்தினாலே மாத்திரம் ஞான நன்மைகளைப் பயக்குமென்று விசுவசிக்கக்கடவோம்.

3. வெளி அடையாளம் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கக்கூடியதெப்படி?

இது சுபாவமாய்க் கூடாதென்பதற்குச் சந்தேகமில்லை. பஞ்சேந்திரியங்களால் பரீட்சிக்கக்கூடிய அடையாளத்துக்கும் அவைகளுக்கெட்டாத தேவ இஷ்டப்பிரசாதத்துக்கும் தன்னிலே யாதொரு சம்பந்தம் கிடையாது. ஆனால் அளவில்லாத வல்லமையுள்ள சர்வேசுரனுக்குச் சித்தமானால், ஒரு வெளி அடையாளத்துக்கு இந்த ஆச்சரியமான சக்தியைக் கொடுக்கிறதற்கு யாதொரு விக்கினமுமில்லை. சேசுநாதர்சுவாமி இப்பேர்ப்பட்ட சக்தியை அவர் ஸ்தாபித்த தேவதிரவிய அநுமானங்களுக்குக் கொடுத்தாரென்று நாம் நிச்சயமாய் அறிந்திருக்கிற



தினாலே, முழுமனதோடு உறுதியாய் விசுவசிக்கக்கடவோம்.

(க) தேவதிரவிய அநுமானங்களுக்கு வெளி அடையாளம் இருக்கிறதினால் என்ன பிரயோசனம்? சகல ஜனங்களையும் ஒரே ஒரு வேதத்தில் சேர்த்து ஒரே ஞான சரீரமாக ஐக்கியிக்கவும்,— விசுவாசப்பிரமாணத்தைப் பிரசித்தப்படுத்தி, மெய்யான சர்வேசுரனுக்குத் தக்க ஆராதனை செலுத்தவும்,— எல்லாரும் அன்னியோன்னிய ஐக்கியமாயிருந்து ஒருவர் ஒருவரை நன்னெறியில் நடக்கத் தூண்டவும்,— இந்தத் திரு அடையாளங்கள் மிகவும் பிரயோசனமாயிருக்கின்றன.

(உ) இதுவுமன்றி மனிதன் ஆத்தும சரீரமுள்ளவனாயிருக்கிறபடியினாலே, பஞ்சேந்திரியங்களைக் கொண்டு ஞானக் காரியங்களை அறிகிறான். தேவதிரவிய அநுமானத்தின் வெளி அடையாளத்தைக் கண்டவுடனே, இஷ்டப்பிரசாதமும், மற்ற ஞான நன்மைகளும் ஆத்துமத்திலே உண்டாகிறதென்று நிச்சயித்துக்கொள்ளுகிறான்.

அப்படியே, ஞானஸ்நானத்தில் ஒரு குழந்தையின் தலைமேல் தண்ணீர் வார்த்துச் சொல்லவேண்டிய வார்த்தைகளைத் தக்க கருத்தோடு

உச்சரித்தால், அக்குழந்தையிடத்திலுள்ள ஜென்மப்பாவம் நீங்கி, அதின் ஆத்துமம் இஷ்டப்பிரசாதத்தினாலேயும், சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களினாலேயும் அலங்கரிக்கப்பட்டதென்று மேற்சொன்ன குறிகளால் நிச்சயமாய் அறிந்துகொள்ளுகிறோம். இதில் தலைமேலே வார்க்கப்படுகிற தண்ணீர் பொருளாகவும், அதை வார்க்கும்போது சொல்லுகிற வசனம் வார்த்தையாகவும் இருக்கிறது. இப்பொருளையும் வார்த்தையையும் சேர்த்து, அதிகாரமுள்ளவர்கள் திருச்சபைக் கருத்துப்படி இச்சடங்கைச் செய்து முடித்தால், பாவ அசுத்தத்தைக் கழுவுகிற ஞானஸ்நானமென்கிற தேவதிரவிய அநுமானம் நிறைவேறினதென்று அறிகிறோம்.

(II.) ஞான உயிரைக்கொடுக்கிறதும், அதை அதிகரிப்பிக்கிறதுமான தேவதிரவிய அநுமானங்களின் பேரில்.

இந்த ஏழு தேவதிரவிய அநுமானங்களில் இரண்டு ஞான உயிரில்லாத பாவிகளுக்காகவும், மற்ற ஐந்தும் ஞான உயிராகிய இஷ்டப்பிரசாதத்தோடு இருக்கிறவர்களுக்காகவும் நியமிக்கப்பட்டன.

(க) பாவத்தின் நிமித்தம் ஞான உயிரில்லாதவர்களுக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கும்படி, ஞானஸ்நானமும் பச்சாத்தாபமும் விசேஷமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறதினால், இவ்விரண்டும் மரித்தோர்களுடைய தேவதிரவிய அநுமானங்களென்று சொல்லப்படும்.

(உ) மற்றத் தேவதிரவிய அநுமானங்கள் ஐந்தும் ஆத்துமத்திலிருக்கிற தேவ இஷ்டப்பிரசாதம் மென்மேலும் அதிகரிக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் ஞான உயிருள்ளவர்களுக்கு உரியவையானதினாலே, சீவியர்களுடைய தேவதிரவிய அநுமானங்களென்னப்படும். சாவான பாவத்தோடு இவைகளைப் பெறலாகாது.

(ங) ஞானஸ்நானமாவது பச்சாத்தாபமாவது பெறப்போகிறவர்கள் சாவான பாவமில்லாமலிருப்பார்களாகில், அவர்களிடத்திலிருக்கிற இஷ்டப்பிரசாதம் இன்னம் அதிகரிக்குமென்பது சத்தியம். அவஸ்தைப்பூசுதலோவென்றால், பாவசங்கீர்த்தனம் செய்யக்கூடாதவர்களுக்குப் பாவப்பொறுத்தலையும் தரக்கூடியதாயிருக்கிறது.

(ச) சாவான பாவத்தோடிருக்கிறவன் தான் பாவத்தோடிருப்பதை அறியாமல், நல்ல ஆயத்தமாயிருப்பதாக எண்ணி, உயிருள்ளவர்களுக்குரிய தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொண்டால், அவைகளின் வழியாய் அவனு

க்கு இஷ்டப்பிரசாதம் அளிக்கப்படும். இதற்கு அவன் அடிமை ஸ்தாபத்தோடிருப்பது போதும்.

(III.) ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்துக்குரிய விசேஷ வரப்பிரசாதத்தின்பேரில்.

(க) ஒவ்வொரு தேவதிரவிய அநுமானமும் தேவ இஷ்டப்பிரசாதத்தோடு தனக்குரிய ஒரு விசேஷ வரப்பிரசாதத்தையும் பெறுவிக்கிறது. இதின் வழியாய் அந்தந்தத் தேவதிரவிய அநுமானங்களுக்குரிய நன்மைகளை அடைவதற்கு, விசேஷ அநுக்கிரகப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளச் சுதந்தரமுண்டாகிறது. இப்படி இல்லாவிட்டால், வித்தியாசமான ஏழு தேவதிரவிய அநுமானங்கள் அவசரமில்லை. சேசுநாதர் சுவாமி ஒன்றுமாத்திரம் ஏற்படுத்தியிருந்தால், போதுமாயிருந்திருக்கும். ஆனால் வெவ்வேறான ஏழு தேவதிரவிய அநுமானங்களிருக்கிறதென்பது வேதசத்தியம்.

(உ) அந்த விசேஷ வரப்பிரசாதங்கள் எவைகளென்றால் :—ஞானஸ்நானம் பெற்றதினால், ஆத்துமம் சுத்திகரிக்கப்பட்டு, இனிமேல் நாம் பாவத்தை விலக்கி, சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாக நடக்கவும் ;



உறுதிபூசுதலினாலே, விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, பசாசை எதிர்க்கவும், வேதத்துக்காக உயிரை முதலாய்ப் பலியிடவும் ;

தேவநற்கருணை வாங்கினதினாலே, நம்மிடத்திலிருக்கிற ஞான உயிரைக் காப்பாற்றவும், அதிகரிக்கவும், சர்வேசுரனோடே அதிக ஐக்கியமாய் ஜீவிக்கவும் ;

பச்சாத்தாபத்தினாலே, ஞானஸ்நானத்துக்குப் பின் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு மன்னிப்படைந்து, பாவத்திலே திரும்பி விழாதபடி ஸ்திரமாய் நிற்கவும் ;

அவஸ்தைபூசுதலினால், மரண சமயத்தில் வருகிற சோதனைகளை ஜெயித்து, மோட்சபாக்கியத்தை யடையவும் ;

குருத்துவம் பெற்றதினாலே, தேவ ஊழியத்துக்கு விசேஷதத்துவத்தை அடைந்து, இப்போர்ப்பட்ட மேலான அந்தஸ்தின் கடமைகளையெல்லாம் சுறுசுறுப்பாய் நிறைவேற்றவும் ;

மெய்விவாகத்தினால், புருஷன் பெண்சாதி தங்களை அன்னியோன்னியமாய்ச் சிநேகித்து, தங்கள் பிள்ளைகளை நல்ல வழியிலே நடத்தவும், திரளான அநுக்கிரகப்பிரசாதங்கள் அளிக்கப்படும்.

(௩) ஒவ்வொரு தேவதிரவிய அநுமானமும் பெற்றதினாலே, விசேஷ கடமைகள் உண்டாகின்றன. அவைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றுகிறதற்கு அநுக்கிரகப்பிரசாதம் அவசரம். இந்த விசேஷ அநுக்கிரகப்பிரசாதம் நமக்குத் தேவையாயிருக்கும் போதெல்லாம் கிடைக்கும்படி, நாம் பெற்றுக்கொண்ட தேவதிரவிய அநுமானங்களைக்கொண்டு சுதந்தரத்தை அடைகிறோம். இப்படியே ஞானஸ்நானம் பெற்றபின், நல்ல கிறீஸ்துவர்களாக ஜீவிப்பதற்கு வேண்டிய அநுக்கிரகப்பிரசாதத்தை அடைய விசேஷ சுதந்தரம் உண்டு.

## (IV.) ஞான அக்ஷரத்தின் பேரில்.

தேவதிரவிய அநுமானங்களுக்குள்ளே, ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவமாகிய இம்மூன்றும் ஆத்துமத்தில் அழியாத அக்ஷரத்தைப் பதிப்பிக்கும்.

(௧) ஆத்துமத்தில் பதிகிற இந்த ஞான அக்ஷரமானது ஞானக் குறிபோலவும், ஞான முத்திரை போலவும் இருக்கிறது. இந்த அக்ஷரத்தின் வழியாக, சேசுநாதர் சுவாமி தமது ஊழியத்துக்கு நம்மை நியமித்து, அபிஷேகம்பண்ணி, தமக்குச் சொந்தமாக ஏற்றுக்கொள்ளுகிறார்.



ஞானஸ்நானம், உறுதிபூசுதல், குருத்துவமாகிய இம்மூன்று தேவதிரவிய அநுமானங்களும் கொடுக்கிற அக்ஷரங்களில் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமுண்டு. ஞானஸ்நானம் பெற்றவன் சேசுநாதர் சுவாமியின் சீஷனாகவும், உறுதிபூசுதல் பெறுகிறவன் அவருடைய போர்வீரனாகவும், குருத்துவம் பெறுகிறவர் அவருடைய குருவாகவும், ஞானவிதமாய் வெவ்வேறான அடையாளத்தினால் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(௨) இந்த மூன்று அக்ஷரங்களும் அழியாமலிருக்கிறதற்கு முகாந்திரமென்ன? எந்த அபிஷேகத்திலும், ஒப்புக்கொடுக்கப்பட்ட பொருள் எவ்வளவு காலம் நீடித்திருக்குமோ, அவ்வளவு காலம் அபிஷேகம் நீடித்திருக்கும். ஆத்துமம் சாகாத வஸ்துவாயிருக்கிறதினாலே, அது அடைந்துகொள்ளுகிற ஞான அக்ஷரம் எப்போதைக்கும் பதிந்திருக்கும். ஆகையால் சாவான பாவமாவது, வேதத்தை மறுதலிப்பதாவது, மரணமாவது, ஒன்றும் இந்த ஞான அக்ஷரத்தை அழிக்க முடியாது.

(௩) அதினாலே இந்த மூன்று தேவதிரவிய அநுமானங்களையும் ஒருவிசை மாத்திரம் பெற்றுக்

கொள்ளலாமே யொழிய, இரண்டுதடவை பெற முடியாது: இவைகளை இரண்டுதடவை பெறுகிறது கனமான பாவம்.

(ச) ஆனால், இவைகளை நிறைவேற்றும்போது, அவசியமாய் வேண்டிய பொருளாவது வார்த்தையாவது கருத்தாவது குறைவுபட்டதென்று சந்தேகமிருந்தாகில், அவைகளை மறுபடியும் கொடுக்கவேண்டியது. இப்படி ஞானஸ்நானம் திரும்பக் கொடுக்க அவசியமிருந்தால், "அது முன்னே சரியாய் நிறைவேறியிராவிட்டால், இப்போது நிறைவேற்றுகிறேன்" என்று சொல்லி, பொருளையும் வார்த்தையையும் தக்கபடி உபயோகிக்க வேண்டுமென்பது கட்டளை.

(ரு) நாம் இப்போது அந்த ஞான அக்ஷரங்களைக் கண்ணாலே காணக்கூடாதாயினும், மறு உலகத்தில் நன்றாய்க் காண்போம். அவைகள் மோட்சவாசிகளிடத்தில் மகிமை சம்பாவனைக்காகவும், நரகவாசிகளிடத்தில் ஆக்கினை அவமானத்திற்காகவும் என்றென்றைக்கும் தெளிவாய் விளங்கும்.



## நாலாம் பிரிவு.

## ஞானஸ்நானத்தின் பேரில்.

1. ஞானஸ்நானமாவதென்ன?

ஜென்மப்பாவத்தையும் கர்மப்பாவத்தையும் போக்கி, நமக்கு தேவ இஷ்டப்பிரசாதமாகிய ஞான ஜீவியத்தைத் தந்து, நம்மைச் சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்குகிற தேவ திரவிய அநுமானம்.

ஸ்நானம் செய்யும்போது, சரீரத்திலுண்டான அசுத்தம் நீங்கிப்போகிறதுபோலே, திருச்சபையின் ஞானஸ்நானத்தினாலே, ஆத்துமத்திலிருக்கும் பாவமென்கிற ஞான அசுத்தம் எல்லாம் சுத்திகரிக்கப்படுகிறது.

1. ஞானஸ்நானத்தை ஸ்தாபித்ததார்?

சேசுநாதர் சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களையும் ஸ்தாபித்திருக்கிறதினாலே, அவரே ஞானஸ்நானத்தை ஏற்படுத்தினாரென்பது விசுவாச சத்தியம். திவ்விய கர்த்தர் அர்ச். ஸ்நாபக அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெறும்போது, ஞானஸ்நானத்தைத் தேவதிரவிய அநுமானமாக ஸ்தாபித்தாரென்று வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

(க) சேசுநாதர் சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களில் ஒவ்வொன்றையும் எப்போது உண்டாக்கினாரென்று அறிவது அவசரமில்லை. ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்தையும் மெய்யாகவே ஸ்தாபித்தாரா என்பதே பிரதான காரியம். சேசுநாதர் சுவாமி ஏழு தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தினாரென்பது வேத சத்தியமானதால், அதை உறுதியாய் விசுவசிக்கக்கடவோம்.

(உ) சேசுநாதர் சுவாமி மரணமடைகிறதற்கு முன், அவருடைய போதனையை ஏற்றுக்கொண்டவர்களுக்கு, சீஷர்களைக்கொண்டு, ஞானஸ்நானம் கொடுக்கச் சித்தமானார். (அரு. IV. 2.) அப்போஸ்தலர்கள் முதலாய், பெரிய வியாழக்கிழமை தேவநற்கருணை வாங்குகிறதற்கு முன்னே, ஞானஸ்நானம் பெற்றிருந்தார்களென்று அநேக வேதசாஸ்திரிகள் உரைக்கிறார்கள்.

2. ஞானஸ்நானமில்லாமல் இரட்சணியம் அடையக்கூடுமோ?

அடையக்கூடாது. சேசுநாதர் சுவாமிதாமே ஞானஸ்நானத்தைத் தேவதிரவிய அநுமானமாக ஏற்படுத்தி, அதைப் பெறாமல் ஒருவனும் மோட்ச இராட்சியத்தில் பிரவேசிக்கக்கூடாதென்று கட்டளையிட்டார். தமது அப்



போஸ்தலர்களை நோக்கி: "நீங்கள் போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதித்து ஞானஸ்நானம் கொடுங்கள்" (மத். XXVIII. 19.) என்று திருவுளம்பற்றினார்.

(க) "இரட்சணியம் அடைவதற்குச் செய்யவேண்டியதென்ன? என்று நமது ஆண்டவரை ஒருவன் கேட்டபோது, அவர் பிரத்தியுத்தரமாக, "ஜலத்தினாலும் இஸ்பிரீத்து சாந்துவினாலும் மறுசீவியம் அடையாவிட்டால், மோட்சராட்சியத்தில் பிரவேசிக்க முடியாது" (அரு. III. 5.) என்று சொன்னார். ஆதலால் சேசுநாதர்சுவாமியின் சித்தப்படி எல்லாருக்கும், சிறு குழந்தைகளுக்கு முதலாய், ஞானஸ்நானம் அவசரம். ஆதாம் கட்டிக்கொண்ட பாவத்தினால் சகல மனிதரும், சிறு குழந்தைகளுங்கூட, ஞான சாவுக்குள்ளானார்கள். திரும்பவும் இந்த ஞான சீவியத்தைக்கொடுக்க சேசுநாதர்சுவாமி ஞானஸ்நானமென்னும் ஓரே வழிபாட்டை ஏற்படுத்தியிருக்கிறதினாலே, குழந்தைகள் முதலிய சகலரும் ஞானஸ்நானம் பெறுவது ஆத்தும இரட்சணியத்துக்கு அவசரம்.

(உ) ஞானஸ்நானம் பெறுவதற்குமுன் விசுவாச முயற்சி செய்வது அவசியமா? புத்தி விபரமறிந்தவர்களுக்கு மாத்திரமே அவசரம். "நீங்கள்

உலகமெங்கும்போய் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவசித்து, ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சணியமடைவான்; விசுவசியாதவனோ ஆக்கினைக்குத் தீர்வையிடப்படுவான்" (மாற். XVI. 15-16.) என்று சேசுநாதர் சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறதினாலே, புத்திவிபரமறிந்தவர்கள் விசுவாச முயற்சி செய்யாமல் ஞானஸ்நானம் பெறலாகாது. சிறு குழந்தைகள் விசுவாச முயற்சி செய்வது கூடாத காரியமானதினாலே, இந்தக் கட்டளைக்கு உட்பட்டிருக்கிறதில்லை என்பது பரிஷ்காரம். ஆனால் நமது ஆண்டவர் ஆதாமின் சந்ததியார் எல்லாரும் ஞானஸ்நானம் பெறாமல் மோக்ஷத்தில் பிரவேசிக்கக்கூடாதென்று கற்பித்திருக்கிறபடியினால், சிறுபிள்ளைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது.

எக்காலத்திலும் திருச்சபை போதித்து வந்திருப்பது இதுவே. அர்ச். அகுஸ்தீன் "நீ கத்தோலிக்குக் கிறீஸ்தவனாயிருக்க விரும்புவாயாகில், ஞானஸ்நானமில்லாமல் சாகிற குழந்தைகள் ஜென்மப்பாவத்திலிருந்து மீட்கப்படக்கூடுமென்று விசுவசிக்கவும், சொல்லவும், போதிக்கவும் ஒண்ணாது" என்றார்.

(௩) திருச்சபையின் விசுவாசத்துக்கேற்ப திரிதெந்தீன் பொதுச் சங்கம் வசனித்ததாவது: "இரட்சணியம் அடையும்படி ஒருவனுக்காவது ஞானஸ்நானம் பெறப் பிரியமானால் பெறலாம்; ஆனால் அது இரட்சணியத்துக்கு அவசரமில்லையென்றும், சிறு குழந்தைகள் விசுவாச முயற்சி செய்யக்கூடாததினால், புத்தி விவரம் அறிகிறவரைக்கும் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்றும் பிதற்றுகிறவன் எவனோ, அவன் சபிக்கப்படக்கடவான்."

(௪) ஞானஸ்நானம் இரட்சண்ணியத்துக்கு அவசரமானதினால்தான், சேசுநாதர் சுவாமி அதை வெகு எளிதாய்ப் பெற்றுக் கொள்வதற்கான பல ஏற்பாடுகள் செய்யச் சித்தமானார். முதலாவது, எங்கும் அகப்படக்கூடிய தண்ணீரை அதற்கு அவசரமான பொருளாகத் தெரிந்து கொண்டார். பிறகு, மரண அவஸ்தையிலிருப்பவர்களுக்கு எவரும் ஞானஸ்நானம் கொடுக்கலாமென்று உத்தரவு அளித்தார்.—புத்தி விபரமறிந்தவர்கள் இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெறக்கூடாதானால், அவர்களுக்கு வேறு சில வழிபாடுகளும் ஏற்படுத்தியிருக்கிறார்.

(௫) மற்றத் தேவதிரவிய அநுமானங்களை அடைவதற்குமுன் ஞானஸ்நானம் பெறவேண்டியது:—

ஞானஸ்நானமானது மேலான உயிரைக் கொடுக்கிறதினாலேயும், அது ஞான சீவியத்துக்கு வாசற்படி போலிருக்கிறதினாலேயும், அதைப் பெறாதவர்கள் மற்றத் தேவதிரவிய அநுமானங்களையும் பெறக்கூடாது. இன்னம் பிறக்காத பிள்ளை இவ்வுலோக நன்மைகளைச் சுகிக்கக்கூடாததுபோல், ஞானஸ்நானத்தினால் ஞான விதமாய்ப் பிறக்காதவன், மேலான உயிருக்குரிய ஞான நன்மைகளைப் பிரயோகிக்கவும், சேசுநாதர் சுவாமியின் ஞான சரீரத்துக்கு அவயவமாகவும், திருச்சபையின் சொந்தப் பிள்ளையாகவுமுடியாது.

3. எத்தனை வகை ஞானஸ்நானம் உண்டு?

தண்ணீர் ஞானஸ்நானம், ஆசை ஞானஸ்நானம், இரத்த ஞானஸ்நானம் ஆக மூன்றுவகை உண்டு. தண்ணீர் ஞானஸ்நானம் பெறக்கூடாவிட்டால், ஆசை ஞானஸ்நானமாவது, இரத்த ஞானஸ்நானமாவது மோக்ஷத்தை அடைவதற்கு முழுதும் அவசியம்.—தண்ணீர் ஞானஸ்நானம் மாத்திரம் தேவதிரவிய அநுமானமாயிருக்கிறதினாலே, இதைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் சகல ஞானப்பலன்களும் அளிக்கப்படும். ஆகையால் அது அவசரமென்று அறிந்தவர்கள் உடனே அதைப் பெற்றுக்கொள்ள



வேண்டியது; வீண் தாமதம் செய்தால், சாவான பாவமாகும்.

(௪) தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கிறதெப்படி?

ஞானஸ்நானம் சரியாய்க் கொடுப்பதற்குச் சில காரியங்கள் அத்தியாவசியம். அவைகளென்னவென்றால், அதைக் கொடுக்கிறவன் முந்த முந்தத் திருச்சபை ஞானஸ்நானம் கொடுக்கிற கருத்தோடே அதைக் கொடுக்கவேண்டியது. பின்னும், பிள்ளையின் நெற்றியின்மேல் தண்ணீர் வார்க்கும்போதே, அதற்கு இடவேண்டிய பேரை உச்சரித்து, "பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே, நான் உன்னைக் கழுவுகிறேன்" என்று அவன் தானே சொல்லவேண்டியது.

(௫) மரண அவஸ்தையாயிருக்கிறவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க எல்லோரும் கடமைப்பட்டிருப்பதினாலே, அதைக் கொடுக்கிறதெப்படி? தண்ணீர் வார்க்கிறதெப்படி? வார்த்தைகளை உச்சரிக்கிறதெப்படி? என்று சகல கிறீஸ்துவர்களும் கற்றுக்கொள்ளக் கடவார்கள்.

(௬) முன் காலத்து ஒழுங்குப் பிரகாரம் பல இடங்களிலே தண்ணீரை வார்ப்பதற்குப் பதிலாய், தண்ணீரில் அமிழ்த்தி ஞானஸ்நானம்

கொடுப்பது வழக்கம்.—இதுவுந்தவிர, ஒரே சமயத்தில் அநேகாநேக ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியிருக்கிறபோது, அவர்கள் மேலே தண்ணீரைத் தெளித்து, "பிதாவுடையவும்......நான் உங்களைக்கழுவுகிறேன்" என்று சொல்லி, அந்தத் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றலாம்.

(ஈ) சுற்றியிருக்கிற அஞ்ஞானிகள் பார்ப்பார்களோ என்று பயப்பட்டால், தண்ணீர் வார்க்காமல், பஞ்சையாவது துணியையாவது தண்ணீரில் நனைத்து, அதை நெற்றியிலே தேய்க்கவேண்டும். சில துளிகளாகிலும் சிந்தும்படி செய்வது அவசரம். இல்லாவிட்டால், நெற்றியை நனைப்பதாகுமேயொழிய, ஸ்நானமாகாது.

4. ஞானஸ்நானத்துக்கு மெய்யான தண்ணீர் முழுதும் அவசியமான பொருள்.

குருவானவர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, பெரிய சனிக்கிழமை மகா ஆடம்பரத்தோடு மந்திரித்த தண்ணீரை வழக்கமாய் உபயோகிப்பார்.

(க) அவசரமான சமயங்களிலே கடல், ஆறு, குளம், குட்டைகளிலுள்ள சாதாரண தண்



ணீரை உபயோகிக்கலாம்.—மெய்யான தண்ணீர் அகப்படாதபோது, மேலே சொன்னதுபோல சந்தனத் தண்ணீர், பன்னீரைக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்கலாம்; ஆகிலும் இது செல்லுமென்பது நிச்சயமில்லாததினாலே, கூடிய சீக்கிரம் மெய்யான தண்ணீரைக்கொண்டு ஞானஸ்நானம் திரும்பக்கொடுக்கவேண்டியது. பால், எண்ணெய், இரசம் முதலியவை ஞானஸ்நானத்துக்கு உதவாதென்பது நிச்சயம்.

(உ) ஊற்றுகிற தண்ணீர் சரீரத்தின் தோலைத் தொடுவது அவசியம்.—கூடுமானபோதெல்லாம் தண்ணீரைத் தலைமேலே ஊற்றுவது கட்டளை: இது கூடாதே போனால் மாத்திரம், நெஞ்சு, முதுகு முதலிய இடங்களிலே தண்ணீர் வார்க்கலாம்; இப்பேர்ப்பட்டவர்களுக்குக் கூடுமானபோது திரும்பவும் தலையின்மேல் தண்ணீர் ஊற்றி ஞானஸ்நானம் கொடுப்பது நலம். ஆனால் கை கால்களில் மாத்திரம் தண்ணீர் வார்த்திருந்தால், திரும்ப ஞானஸ்நானம் கொடுக்கக்கூடுமானால், தலையின் மேல் தண்ணீர் ஊற்றுவது அந்தியாவசியம்; ஏனெனில் இது மெய்யான ஞானஸ்நானமோ அல்லவோ என்பது சந்தேகம்.—வார்த்த தண்ணீர் தலை மயி

ரிலே மாத்திரம் பட்டால் போதாது, தோல் மேல் ஓடும்படி செய்ய வேண்டியது.

5. ஞானஸ்நானத்துக்கு வேண்டிய வார்த்தைகளைப்பற்றி.

ஞானஸ்நானம் கொடுக்கும்போது, சொல்ல வேண்டிய வார்த்தைகளையெல்லாம் குறைக்காமலும், கூட்டாமலும், மாற்றாமலும், சரியாய் உச்சரிக்கவேணும்.

(க) அர்ச். திரித்துவத்தின் மூன்று நாமங்களையும், "உன்னைக் கழுவுகிறேன்" என்கிற வார்த்தைகளையும் சொல்லாவிட்டால் ஞானஸ்நானமாகாது.

"உன்னை" என்னும் வார்த்தையால், ஞானஸ்நானத்தைப் பெறுகிறவனும், "கழுவுகிறேன்" என்னும் வார்த்தையால், அதைக் கொடுக்கிறவனும் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். கொடுக்கிறவன் யார் என்பதும், பெறுகிறவன் யார் என்பதும், கொடுக்கப்படுவது என்ன என்பதும், திரித்துவத்தின் மூன்று திருநாமங்களும் ஆகிய இந்த நாலு காரியங்களும் வார்த்தைகளில் தெளிவாய்க் குறிப்பிட்டிருப்பது இந்தத் தேவத்திரவிய அநுமானத்திற்கு அவசியம்.

(உ) ஞானஸ்நானமாகிய தேவதிரவிய அநுமானத்தால் வரும் இஷ்டப்பிரசாதத்துக்கு, பொருளும்



வார்த்தையும் அத்தியாவசியமான வெளி அடையாளங்களாயிருக்கிறதினால், இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, சுற்றியிருப்பவர்கள் கேட்காதபடி மனசுக்குள்ளே மாத்திரம் வார்த்தைகளை நினைத்துக்கொண்டால், ஞானஸ்நானமாகாது. தானாகிலும் கேட்கும் விதமாய் வாய்க்குள்ளே வார்த்தைகளை மெய்யாகவே உச்சரிப்பது அவசியம்.

6. தண்ணீர் ஞானஸ்நானத்தால் உண்டாகும் ஞான நன்மைகளாவன:—

(க) ஜென்மபாவமும் கர்மபாவமும் நீங்கிப்போக, இஷ்டப்பிரசாதம் கொடுக்கப்படுகிறது.

(உ) புத்தி விபரம் அறிந்தவர்களுக்கு நரகத்தின் நித்திய ஆக்கினை மாத்திரமல்ல, கர்மபாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினையும் முழுதும் பொறுக்கப்படும். ஆதலால் ஞானஸ்நானத்துக்குமுன் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு யாதொரு ஞான அபராதம் இடப்படுகிறதில்லை. ஞானஸ்நானம் பெற்றவுடன் சாகிறவன் உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகாமல், நேரே மோக்ஷத்தில் போய் சேர்வான்.

(௩) ஞானஸ்நானம் பெற்றவன் இஷ்டப்பிரசாதத்தினாலே சேசுநாதர் சுவாமியோடு ஐக்

கியமாய் ஒன்றித்து, அவருக்கு ஓர் ஞான அவயவமாகிறான். மேலும் நல்ல கிறீஸ்துவனாய் நடப்பதற்கு வேண்டிய உதவி வரப்பிரசாதங்களை அடைந்துகொள்ளச் சுதந்தரவாளியாகிறான்.

(ஈ) வெளியரங்கமாய்த் திருச்சபையின் கூட்டத்திற் சேர்ந்து, சகல தேவதிரவிய அநுமானங்களைப் பெறவும், அதின் ஞான பொக்கிஷத்திலுள்ள சகலவித வரங்களை அடைந்துகொள்ளவும், அவனுக்குப் பாத்தியம் உண்டாகிறது.

(உ) ஞான அக்ஷரமானது அவனுடைய ஆத்துமத்திலே அழியாத விதமாய்ப் பதியவே, அவன் சேசுநாதர் சுவாமியால் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷனாக அபிஷேகம் பண்ணப்படுகிறான். அதினாலே இந்தத் தேவதிரவிய அநுமானத்தை ஒரே ஒரு விசை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

7 ஞானஸ்நானத்தினால் உண்டாகிற கடமைகள் என்ன?

ஞானஸ்நானம் பெறும்போது, குழந்தைகள் ஞானத்தாய் ஞானத்தகப்பன் வழியாகவும், புத்தி விபரம் அறிந்தவர்கள் தாங்களாயும், சர்வேசுரனோடு மெய்யான உடன்படிக்கை முடித்துக் கொள்ளுகிறார்கள். சர்வேசுரன் இப்



பூலோகத்திலே தமது இஷ்டப்பிரசாதத்தையும், நடக்கவேண்டிய ஞான நன்மைகளையும், பரலோகத்திலே மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவதாகத் திட்டம் பண்ணுகிறார். நாமோவெனில், எப்போதும் நல்ல கிறீஸ்துவர்களாய் நடந்து, தேவ கட்டளைகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிப்போமென்று வாக்குத்தத்தம் செய்கிறோம்.

நாம் ஞானஸ்நானம் பெறும்போது கொடுக்கிற வாக்குத்தத்தம் என்னவென்றால், பசாசையும்—அதின் கிரியைகளையும்,—ஆரவாரங்களையும் விட்டுவிட்டு, சேசுநாதருடைய திவ்விய போதனையை விசுவசித்து,—சத்திய வேதத்தின்படியே நடக்க வாக்குத்தத்தம் பண்ணுகிறோம். அதினாலே ஞானஸ்நானம் பெற்றவன் அஞ்ஞானக காரியங்களைச் செய்யாமல், உலோக மகிமை ஆசையின் சிலாக்கியம் முதலியவைகளை அருவருத்துத் தள்ளி, பத்தியுள்ள கிறீஸ்துவர்களுக்குரிய உத்தம புண்ணியங்களை அநுசரிக்கத் தன்மேல் கடன் சுமத்திக் கொள்ளுகிறான்.

8. ஆசை ஞானஸ்நானத்தின் பேரில்.

புத்தி விபரமுள்ள அஞ்ஞானிகள் தண்ணீர் ஞானஸ்நானம் பெறக்கூடாவிட்டால், ஆத்தும இரட்சணியம் அடைய முடியாதென்று நினைக்

கப்படாது. ஒரே சர்வேசுரன் உண்டென்றும், அவர் தமக்கு ஊழியஞ் செய்கிறவர்களுக்கு மோக்ஷபாக்கியத்தைக் கொடுப்பாரென்றும் விசுவசிப்பதுந் தவிர, தங்களால் கூடுமான மட்டும், வேதத்தின் பிரதான சத்தியங்கள் எவை என்று அறிந்து விசுவசித்து, தங்கள் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட வேண்டியது.

(க) மேலும் சமயம் கிடைத்தவுடனே, ஞானஸ்நானம் பெறவும், வேத கற்பனைப்படி நடக்கவும், சர்வேசுரனுடைய மற்றக் கட்டளைகளெல்லாம் தங்களுக்குத் தெரிந்த மட்டும் அநுசரிக்கவும் அவர்கள் ஆசையாயிருக்க வேண்டியது. இதுவே ஆசை ஞானஸ்நானமென்று சொல்லப்படும்.—இப்பேர்க்கொத்த மனதும் ஆசையுமுள்ளவர்கள் இரட்சணியம் அடைவது நிச்சயம். ஆயினும் அவர்களுக்குச் சமயங் கிடைக்கிறபோது தண்ணீர் ஞானஸ்நானம் பெறக் கடனுண்டு.

(உ) ஆசை ஞானஸ்நானத்துக்கு உத்தம மனஸ்தாபமாவது தேவ சினேகமாவது அவசரமாயிருக்கிறபடியினாலே, இவைகளினிமித்தம் பாவதோஷமும் நித்திய ஆக்கினையும் நீங்கிப்போகிறது. ஆனால் தண்ணீர் ஞானஸ்நானத்தைப்போல,



ஆசை ஞானஸ்நானத்தினால் அநித்திய ஆக்கினை எப்போதும் முழுதும் விமோசனமாகாது; தேவ சினேகத்துக்குத் தக்கது விமோசனமாகும். ஆசை ஞானஸ்நானத்தால் ஞான அக்ஷரம் ஆத்துமத்திலே பதிகிறதில்லை; மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப் பெறச் சுதந்தரமும் உண்டாகிறதில்லை. அதினாலே நாம் திருச்சபையின் ஆத்துமத்தைச் சேர்ந்திருப்போமே யொழிய, அதின் சரீரத்தோடு சேர்ந்திருக்க மாட்டோம். இந்த ஞான நன்மைகளையெல்லாம் அடைவதற்குத் தண்ணீராலே ஞானஸ்நானம் பெறவேண்டியது.

புத்தி விபரமறியாத பிள்ளைகள் ஞானஸ்நானத்துக்கு ஆசைப்படக்கூடாததினாலே, அவர்கள் ஆசை ஞானஸ்நானத்தினால் மோக்ஷத்தை அடைய முடியாதென்பது தெளிவே.

## 9. இரத்த ஞானஸ்நானத்தின் பேரில்.

தண்ணீர் ஞானஸ்நானம் பெறாதவன் சத்திய வேதத்துக்காகத் தன் உயிரைக் கொடுத்து, வேதசாட்சியாக மரணம் அடைந்தால், மோக்ஷபேரின்ப பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுவானென்பது சத்தியம். இவ்விதமரணந்தான் இரத்த ஞானஸ்நானமென்று சொல்லப்

படும். இதினால் பாவதோஷமும் நித்திய ஆக்கினையுமல்லாமல், அநித்திய ஆக்கினையும் முழுதும் நீங்கிப்போகும்; ஆனால் ஞான அக்ஷரம் மாத்திரம் கிடையாது.

இந்த ஞானஸ்நானம் பெறுவதற்கு, புத்தி விபரமறிந்தவர்களுக்கு:

(க) வேத விசுவாசத்துக்காவது, அதற்கடுத்த யாதொரு புண்ணியத்துக்காவது, மரணம் அடையவேண்டும்; அல்லது, மரண ஆபத்துக்குரிய அடி காயம் முதலியவை படவேண்டும்.

(உ) மனம் பொருந்தி சர்வேசுரனுக்காக உயிரைக் கொடுக்கவேண்டியது; இல்லாவிட்டால் பலனில்லை.

(ங) செய்த பாவங்களுக்காக அதனோடே மனஸ்தாபமாகிலும் படவேண்டும். இரட்சணியத்துக்கு வேண்டிய மனஸ்தாபம் வேதத்துக்காக உயிர் கொடுப்பதில் எப்போதும் அடங்கியிருக்கிறது.

(ச) தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறதற்குப் பொருவான ஆசையாகிலும் கொண்டிருக்கவேண்டியது.

புத்தி விபரமில்லாத பிள்ளைகள் வேதத்துக்காகக் கொல்லப்படுவது இரத்த ஞானஸ்நா-



னத்துக்குப் போதும். இதினால்தான் திருப்பாலகனுக்காகக் கொல்லப்பட்ட மாசில்லாத குழந்தைகளும், பின்பாடு வேதகலாபனைகளிலே கொல்லப்பட்ட சிறு குழந்தைகளும் திருச்சபையினால் வேதசாட்சிகளாகக் கொண்டாடப்படுகிறார்கள்.

## II. ஞானஸ்நானம் கொடுக்கக்கூடியது யார்?

(க) ஞானஸ்நானம் கொடுப்பது குருவானவருக்குரியதாயிருப்பதினால், வழக்கமாய் மரண அவஸ்தையிலில்லாதவர்களுக்கு விசாரணைக்குருவானவர் கொடுக்கவேண்டும். அவருடைய உத்தரவின்றி அதிகாரமில்லாத குரு ஞானஸ்நானம் கொடுத்தால், அவருக்குச் சாவான பாவமாயிருக்கும். ஆனால் யார் கொடுத்தாலும், சரியாய்க் கொடுத்திருந்தால், திரும்பவும் புதிப்பிக்கலாகாது.

(உ) அவஸ்தை சமயத்தில், குருக்கள் வரக்கூடாதபோது, யாரும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். பதிதர் துலுக்கர் அஞ்ஞானிகள் முதலாய், திருச்சபைக் கருத்துப்படி, தக்க விதமாய்க் கொடுத்தால், எந்தச் சமயத்தில் கொடுத்த போதிலும், அதுவும் மெய்யான ஞானஸ்நானமாயிருக்கும்.

(௩) இத்தேசத்திலே போதுமான குருக்கள் இல்லாததினால், பரம அனேகமாய்ப் பிறந்த குழந்தைகள் பட்டிலும், அர்ச். பாப்பானவர் ஒரு விசேஷ உத்தரவு தந்தருளினார். அதாவது: குருக்களில்லாத ஊரில் சௌக்கியமாயிருக்கிற குழந்தைகளுக்கு முதலாய் உபதேசிமார்களாவது, கோவில்பிள்ளைகளாவது, அல்லது ஞானஸ்நானத்தைக் கொடுக்க நன்றாய் அறிந்திருக்கும் வேறே யாராவது இத்தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றலாம்.

(௪) ஒரு ஆண்பிள்ளை அங்கே இருப்பானாகில், பெண்பிள்ளையைவிட அவனே அதைக் கொடுக்கவேணுமென்பது திருச்சபையின் கட்டளை, ஆனால் விசேஷ முகாந்தரமிருக்கும்போது ஆண்பிள்ளை அங்கே இருந்தாலும், பெண்பிள்ளை ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யாதொரு விக்கினமுமில்லை.

(௫) ஆகையால், தூரமான ஊர்களிலிருக்கிற தாய் தகப்பன்மார் தங்கள் குழந்தைகளுக்குத் தாமதமில்லாமல், தகுந்த ஆளைக்கொண்டு ஞானஸ்நானம் கொடுக்கும்படி பிரயாசப்படவேண்டும். இது அவர்கள்மேல் சுமந்த கடன். பிற்பாடு கோவில் சடங்குகளை நிறைவேற்றும்படி, குருவானவரிடத்தில் குழந்தைகளைக் கொண்டு போகவேண்டியது.



(௬) யாதொரு ஆபத்தில்லாதபோது விசாரணைக்குருவானவர்தாமே, வீட்டிலே ஞானஸ்நானம் கொடாமல், எப்போதும் கூடியமட்டும் கோவிலிலேயே கொடுக்கவேண்டும். ஆனபடியால் அவருடைய உத்தரவில்லாமல் வேறு பங்குகளுக்கும், திருயாத்திரை ஸ்தலங்களுக்கும் பிள்ளைகளை ஞானஸ்நானத்துக்காகக் கொண்டு போகும் தாய் தகப்பன்மார் சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆயினும், வேறே பங்கிலே பிள்ளை பிறந்திருந்தால், அது ஞானஸ்நானமின்றி இறந்துபோகாதபடிக்கு, அங்கே தானே தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றுவது நலம்.

## III. ஞானஸ்நானம் பெறக்கூடியது யார்?

௧. ஜீவிக்கிற எந்த மனிதனும், முன் ஞானஸ்நானம் பெறாமல் இருப்பானாகில் அதைப் பெறலாம்.

(க) குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்பது அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து திருச்சபையில் அநுசரிக்கப்படும் வழக்கமாகும். இதற்கு விரோதமாய்ப் பேசுகிறவர்கள் பதிதர்களெனத் திருச்சபைக்குப் புறம்பாய்த் தள்ளப்பட்டார்கள். திரிதெந்தின் என்னும் பொதுச் சங்கத்தின் தீர்மானமாவது:— "சேசுநாதர் சுவாமி ஞானஸ்நானம் பெற்ற வய

தில்லாவிட்டால், அல்லது மரண சமயமாயில்லாவிட்டால், ஞானஸ்நானம் கொடுக்கலாகாது என்று சொல்லுகிறவன் சபிக்கப்படக்கடவான்."

(௨) ஞானஸ்நானம் பெறாதவர்கள் [illegible]ல்லைதயாயிருந்தால், அப்பேர்ப்பட்டவர்கள் எல்லோருக்கும், முக்கியமாய் அஞ்ஞானிகளுடைய குழந்தைகளுக்கும், கூடுமானபோது, ஞானஸ்நானம் கொடுக்க, சகல கிறீஸ்துவர்களும் கனமான கடன்பட்டிருக்கிறார்கள். இதற்குத் தாய் தகப்பன் சம்மதம் அவசரமில்லை. ஆனால் யாதொரு தொந்தரவுக்கும் இடங்கொடாதபடி, இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுப்பது நலம்.

(௩) அஞ்ஞானிகளுடைய குழந்தைகள் சௌக்கியமாயிருக்கும்போது, ஞானஸ்நானம் கொடுக்கலாமா? அஞ்ஞானிகள் திருச்சபையின் அதிகாரத்துக்கு உட்படாததினால், அந்தக் குழந்தைகளுக்குத் தாய்தகப்பன் உத்தரவின்றி ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது. தகப்பனாவது தாயாவது சம்மதித்தால், அதைக் கொடுக்கிறதற்கு விக்கினமில்லை. அஞ்ஞானிப் பிள்ளைகள் புத்தி விபரம் அறிந்தபிறகு மனம் திரும்ப விரும்பினால், வேதசத்தியங்களை நன்றாய்ப் படி-



த்து, [illegible]றுதியாயிருப்பார்களென்று நம்பிக்கையிருக்கும்போது மாத்திரம், தாய் தகப்பன் சம்மதியின்றி ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

## IV. ஞானத்தாய் ஞானத்தகப்பன் பேரில்.

[illegible]டம்பரத்தோடு சடங்குகள் செய்து, ஞானஸ்நானம் கொடுக்கும்போது, ஒரு ஞானத்தகப்பனாவது ஒரு ஞானத்தாயாவது இருக்கவேணுமென்பது திருச்சபையின் கண்டிப்பான கட்டளை.

(௧) புத்தி விபரம் அறிந்தவன் ஞானஸ்நானம் பெறும்போது, திருச்சபையில் சுத்த கருத்துடன் உட்பட மெய்யான ஆசைப்படுகிறானென்பதற்கு, ஞானத்தாய் ஞானத்தகப்பன் அத்தாட்சியாயிருக்கவேண்டும். புத்தி விபரமில்லாதவர்களுக்குத் தலை தொட்டுக்கொள்ளுகிறவர்கள் பிள்ளைகள்மேல் விழிப்பாயிருந்து, அவர்களை நன்றாய் விசாரித்து, வேத ஒழுக்கத்திலும் நற்படிப்பினையிலும் வர்த்திக்கச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாய், பிள்ளையைப் பெற்ற தாய் தகப்பன் தக்கபிரகாரம் பராமரித்து நடப்பிக்காதபோது, பிள்ளையின் பேரில் கண்ணுண்டாயிருப்பது ஞானத்தாய் ஞானத்தகப்பனுக்குரிய விசேஷ கடமையாகும்.

(உ) ஞானஸ்நானம் கொடுக்கையில் தண்ணீர் வார்க்கும்போது, ஞானத்தாய் ஞானத்தகப்பன் பிள்ளையைத் தொட்டுக்கொண்டிருப்பது முழுதும் அவசரம்; தொடாவிட்டால், ஞான சம்பந்தமிராது.

(ஊ) ஞானஸ்நானத்தின் வழியாக ஞான உறவு உண்டாகிறபடியால், தலை தொட்டுக்கொள்ளுகிறவர்கள் தங்கள் ஞானப்பிள்ளையோடென்கிலும், அதின் தாய் தகப்பனோடென்கிலும், அர்ச். பாப்பானவருடைய உத்தரவில்லாமல் கலியாணம் செய்யக்கூடாது. ஆனால் ஒரே பிள்ளைக்கு ஞானத்தாய் ஞானத்தகப்பனாயிருந்தவர்கள் ஒருவர் ஒருவரைக் கலியாணம் செய்துகொள்வதற்கு விக்கினமில்லை.

உறுதிபூசுதலிலும் இப்பேர்ப்பட்ட ஞான உறவு உண்டாகிறதென்று அறியவேண்டியது.

### V. ஞானஸ்நானப் பெயரைப்பற்றி.

ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்குப் பொய்த் தேவர்களுடைய பெயரும் கள்ளத்தபசிகளுடைய பெயருமிடாமல், அர்ச்சியசிஷ்டவர்களுடைய பெயரிடவேணுமென்று அர்ச். பாப்பானவர்கள் *கண்டிப்பாய்க் கற்பித்திருக்கிறார்கள்.



முந்நூறு வருஷங்களுக்குமுன் இந்திய தேசத்திலுள்ள தியாம்பூரில் கூடின ஒரு சங்கமானது உரைத்ததாவது:—“அநேகம் கிறீஸ்துவர்கள் தங்கள் சத்தியவேதத்தைப் பிரசித்தமாய் அநுசரியாமல், தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயரை மாற்றி, நல்ல கிறீஸ்துவர்களுக்குள்ளே வழங்காத பெயர்களைக்கொண்டு அழைக்கிறார்கள். இது திருச்சபையின் கருத்துகளுக்கு முழுதும் விரோதம்.”

---

## ஐந்தாம் பிரிவு.

## உறுதிபூசுதலின் பேரில்.

### 1. உறுதிபூசுதலாவதென்ன? —

உறுதிபூசுதலாவது, இஸ்பிரீத்து சாந்துவையும், அவருடைய வரங்களையும் பூரணமாய் நமக்குக் கொடுத்து, நம்மை உத்தம கிறீஸ்துவர்களாக்குகிற தேவதிரவிய அநுமானம். இதினால் நாம் சத்திய வேதத்தில் ஸ்திரப்பட்டு, இரட்சணியத்தின் சத்துராதிகளை ஜெயிக்கும்படி, விசேஷ பலத்தை அடைகிறோம்.

(க) நாம் ஞானஸ்நானம் பெறும்போது, தேவ இஷ்டப்பிரசாதத்துடன் இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களையும் மேலான புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறோம். உறுதிபூசுதலினாலே, நாம் உத்தம கிறீஸ்துவர்களாகிறதுமன்றி, மேற்பட்டதில் உள்ள வரங்களும் மேலான புண்ணியங்களும் அதிகரித்து உறுதி அடைகின்றன.

(உ) இந்தத் தேவதிரவிய அநுமானத்தை அசட்டைத்தனத்தால் பெறாதிருந்தால், ஆத்துமத்துக்கு மகா பெரிய நஷ்டம் உண்டாகும். ஆகையால் சகல கிறீஸ்துவர்களும் இதைப் பெறக் கவலையாயிருப்பார்களாக. ஆனால் எவனாவது இதை அலட்சியஞ் செய்து பெறாதிருந்தாலுஞ் சரி, இது விஷயத்தில் மற்றவர்களுக்குத் துர்மாதிரிகையாயிருந்தாலும் சரி, அது சாவான பாவமாகும்.

உறுதிபூசுதல் பெறக் கண்டிப்பான கட்டளையில்லாதபோதிலும், தாய் தகப்பன்மார் பிள்ளைகளுடைய ஆத்தும நன்மையை விசாரிக்கக் கடன்பட்டிருப்பதினாலே, ஞான சீவியத்துக்கு வெகு பிரயோசனமான இந்தத் தேவதிரவிய அநுமானத்தைத் தங்கள் பிள்ளைகள் அடையும் பொருட்டு கண்ணுண்டாயிருக்கக்கடவார்கள்.



(ங) எப்போது இதைப் பெற்றுக்கொள்ளவேண்டியது? வேத சத்தியங்களை அறிந்தவர்கள், புதுநன்மை வாங்குமுன்னே முதலாய் உறுதிபூசுதல் பெறுவது நலம் என்று திருச்சபை போதிக்கிறது.

(ச) இந்தத் தேவதிரவிய அநுமானத்தினாலே ஆத்துமத்தில் ஓர் விசேஷ ஞான அடையாளம் பதிகிறதினாலே, இதை ஒருவிசை மாத்திரம் பெறக்கூடும். இரண்டு தடவை பெற்றால், தேவதுரோகமாகும்.—ஆனதால் உறுதிபூசுதல் பெற்றுக்கொண்டதைப்பற்றி சந்தேகமிருந்தால், அதற்குள்ள காரணங்களை எல்லாம் குருவானவருக்கு வெளிப்படுத்தி, அவர் ஆலோசனையின்படி நடக்கவேண்டியது.

(ஞ) உறுதிபூசுதல் பெறுவதற்கு செய்யவேண்டிய ஆயத்தம் என்ன? ஞானஸ்நானம் பெற்றிருப்பதுமல்லாமல்,—பிரதானசத்தியங்களைப் படித்தறிந்து,—இஷ்டப்பிரசாதத்தோடிருக்கவேண்டியது.

2. உறுதிபூசுதல் பெறும்போது, கூடுமானால், ஓர் ஞானத்தாயாவது ஞானத்தகப்பனாவது இருக்கவேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை. ஞானஸ்நானத்தில் ஞானத்தாய் ஞானத்தகப்

பன் ஆக இருவரிருக்கலாம். உறுதிபூசுதல் பெறும்போதோவெனில், ஒருவர் மாத்திரம் இருக்கவேண்டும். ஆதலால் ஆண்பிள்ளைக்கு ஞானத்தகப்பனும், பெண்பிள்ளைக்கு ஞானத்தாயும் மாத்திரமிருக்கலாம். ஓர் பிள்ளையின் ஞானஸ்நான காலத்தில் ஞானத்தாயாயாவது ஞானத்தகப்பனாயாவது இருந்தவர்கள், பிறகு அதே பிள்ளைக்கு உறுதிபூசுதல் பெறும்போது ஞானத்தாய் ஞானத்தகப்பனாய் இருக்கக்கூடாது.— அவசரமிருந்தால், இவ்வொழுங்குகளை அநுசரியாதிருக்க, மேற்றிராணியார் உத்தரவு கொடுக்கலாம். ஞானத்தாய் ஞானத்தகப்பன் பதினாலு வயதிற்கு மேற்பட்டவர்களாயும் உறுதிபூசுதல் பெற்றவர்களாயுமிருக்கவேண்டியது. அர்ச். எண்ணெய் பூசும்போது, அவர்கள் ஞானப்பிள்ளையைத் தொட்டுக்கொண்டிருப்பது அவசரம்.

3. இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களெத்தனை?

ஏழு: ஞானம், புத்தி, விமரிசை, திடம், அறிவு, பத்தி, தெய்வபயம்.

(க) எதுக்காக இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள் கொடுக்கப்படுகின்றன? சாவானபாவத்தோடில்லாதவர்கள், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலுக்



கிணங்கி, மேலான புண்ணியக் கிரியைகளை எளிதாய்ச் செய்யும்படியாக, இந்தத் தேவ வரங்கள் நிலையுள்ள விதமாய்க் கொடுக்கப்படுகின்றன. பாவத்தோடிருக்கிறவர்கள், நற்கிருத்தியங்களைச் செய்யக்கூடுமென்றாலும், அவர்கள் ஆத்துமத்தில் இவ்வரங்களில்லாததால், தேவ ஏவுதலுக்குக் கீழ்ப்படிவதும் புண்ணியத்தை அநுசரிப்பதும் அவர்களுக்கு அதிக வருத்தமாயிருக்கும்.

4. இஸ்பிரீத்துசாந்துவினுடைய ஏழு வரங்களும், பாவஸ்திதியிலிருந்து உத்தமதனத்தின் கொடுமுடிவரையில் ஏறுவதற்கு உதவும் ஞான ஏணியின் படிகளாகின்றன. இந்த ஏணியின் கீழ்ப்படி தேவ பயமும், மேற்படி தேவ ஞானமுமாயிருக்கின்றது.

(க) மனந்திரும்பி, இஷ்டப்பிரசாதத்தை அடைந்து, புண்ணியவழியிலே நடக்கத் துவக்குகிற மனிதன் சர்வேசுரனுடைய சிநேகத்தை இழந்துபோகாதபடி, சகல பாவங்களையும் வெறுத்து விலக்கத் தீர்மானிக்கிறது தேவ பயம் என்கிற வரத்தினாலேதான். இது எஜமானுக்கு நடுநடுங்கி உழைக்கிற அடிமைகளின் பயமல்ல; தகப்பனுக்குப் பட்சமுள்ள மகன் வணக்கத்துடன் காட்டும் பயமாகும்.

(௨). அதனிமித்தம் வேதத்தின் ஒழுங்குகளை அறிந்து, அநுசரிக்கவும், சகலத்திலும் தேவசித்தத்தின்படி நடக்கவும், புத்தி யென்கிற வரத்தைக்கொண்டு தீர்மானிக்கிறான்.

(௩). அறிவு என்கிற வரத்தால் அந்தத் தேவசித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளுகிறதுமல்லாமல், இரட்சணியமும் உத்தமதனமும் அடைவதற்கு வேண்டிய வழிபாடுகளையும், அவற்றிற்கு நேரிடுகிற விக்கினங்களையும் தெளிவாய்க் கண்டுணருகிறான்.

(௪) ஆனால் ஜென்ம சத்துருவாகிய பசாசு புண்ணியவழியிலே அவனைத் தடுத்துக் கெடுக்கப் பிரயாசப்படுவதால், திடம் என்கிற வரத்தின் உதவியைக்கொண்டு, சகல விக்கினங்களையுந் தைரியமாய் ஜெயித்து, வேதத்துக்காகத் தன் உயிரைமுதலாய்க் கொடுக்க அஞ்சான்.

(௫) பசாசு பலவந்தத்தினால் அவனை ஜெயிக்கக்கூடாதென்று கண்டு, கணக்கில்லாத உபாய தந்திரங்களைப் பண்ணுகையில், விமரிசையென்கிற வரத்தால் அந்தத் தந்திரங்களுக்குத் தப்பித்துக்கொள்ளுகிறான். மேலும் இவ்வரத்தினாலேயே தனக்கு யாதொரு ஏவுதல் வருவிக்-



கிறது பசாசோ, சப்பனசோ, என்று பகுத்தறிகிறான்.

(௬) அவன் உலோக காரியங்களைப் பிறக்கணித்து, புண்ணியத்தில் வர்த்தித்து, மேன்மேலும் உத்தமதனத்தில் உயருகிறதினால், பத்தியென்கிற வரத்தைக்கொண்டு வேத சத்தியங்களையும் பரம தேவ இரகசியங்களையும் முதலாய் அதிகமதிகமாய்க் கண்டுபிடிக்கிறான்.

(௭) கடைசியாய் ஞானம் என்கிற வரத்தால் அளவில்லாத ஞானமுள்ள சர்வேசுரனை நன்றாயறிந்து அவரை மதிக்கவேண்டியபடி மதித்து, தான் செய்கிற சகல கிரியைகளையும் தேவசிநேகத்துக்காகச் செய்துவருகிறான். இவ்விதமாக நாம் புண்ணியத்தில் படிப்படியாய் ஏறி, கடைசியில் உத்தமதனத்தின் உச்சிச் சிகரத்தை அடையக்கூடும்.

4. மேற்றிராணியார் உறுதிபூசுதல் கொடுக்கும்போது, செய்கிற சடங்கென்ன?

(௧) உறுதிபூசுதல் பெறுகிறவன்மேலே அவர் தமது கரங்களை விரித்து நீட்டி, இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கி வரவேண்டுமென்று மன்றாடுகிறார்.

(௨) பின்னும் அவனுடைய நெற்றியிலே பரிமளதைலமென்கிற அர்ச்சியசிஷ்ட எண்ணெயைப்

பூசுகிறார். யாதொருவன் பயப்படுகிறதும் வெட்கப்படுகிறதும் அவன் முகத்தில் வெளியாகிறதினாலே, உறுதிபூசுதல் பெற்றவன் சத்திய வேதத்தைக் கூச்சமின்றிப் பிரசித்தமாய் அநுசரித்து, அதின் கட்டளைகளை அஞ்சாநெஞ்சுடன் நிறைவேற்ற வேணுமென்று காட்டும்பொருட்டு, மேற்றிராணியார் பரிமளத் தைலத்தைச் சிலுவை அடையாளமாக நெற்றியிலே பூசுகிறார்.

இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றவன் நல்ல கிறீஸ்துவனாய் நடந்து, விசுவாசிகளுக்கும் அஞ்ஞானிகளுக்கும் நன்மாதிரி காண்பித்து, நமது ஆண்டவர் பாவனையாக தனது புண்ணியங்களின் சுகந்த பரிமளத்தை எங்கும் வீசவேண்டுமென்பதே, பரிமள தைலத்தை உபயோகிப்பதின் கருத்து.

(௩) கடைசியிலே மேற்றிராணியார் கன்னத்திலே தமது கையினால் தட்டுகிறார். இவ்விதமாய், மெய்யான கிறீஸ்துவர்களாய் எப்போதும் உறுதியாயிருந்து, விசுவாசத்தை இழந்துபோவதை விட எவ்வித கஸ்தி துன்பவேதனைகளை அநுபவிக்கவும், அவசரமாயிருந்தால் தன் உயிரைப் பலியாக்கவும் முஸ்திப்பாயிருக்கவேணுமென்று அறிவிக்கிறார்.



## ஆறாம் பிரிவு.

---

### தேவநற்கருணையின் பேரில்.

1. தேவநற்கருணையாவதென்ன? கோதும்பை அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் முந்திரிகைப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் சேசுநாதர்சுவாமியுடைய திருச் சரீரமும் திரு இரத்தமும், திரு ஆத்துமமும், தேவசுபாவமும் அடங்கியிருக்கிற தேவதிரவிய அநுமானம்.

(௧) தேவநற்கருணை, சகல தேவதிரவிய அநுமானங்களிலும் மிகவும் சிறந்தது. அதேதென்றால், இந்தத் தேவதிரவிய அநுமானம் மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப்போல், இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதுந் தவிர, அதில் இஷ்டப்பிரசாதத்தின் ஊற்றாகிற சேசுநாதர்சுவாமிதாமே தம்முடைய மனித சுபாவத்தோடும் தேவ சுபாவத்தோடும் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறார்.

(௨) இப்பூவுலகத்தில் அர்ச். கன்னிமரியம்மாளிடத்தினின்று பிறந்த சேசுநாதர்சுவாமி மரித்து, உயிர்த்து இப்பொழுது மோட்சத்தில் எப்படி வீற்றிருக்கிறாரோ, அப்படியே தேவநற்கருணை

யிலும் உயிரோடு இருக்கிறார்.—இவ்விதமாய் அவர் தமது தேவசுபாவத்தோடும், மனித சுபாவத்தோடும் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறபடியினால், அதை உட்கொள்ளுகிறவர்களுடைய ஆத்துமத்துக்கு அவரே திவ்விய போசனமாயிருக்கிறார்.

(௩.) எப்போது சேசுநாதர்சுவாமி தேவநற்கருணையை ஸ்தாபித்தார்? சேசுநாதர்சுவாமி மரணமடைகிறதற்கு முந்தின நாளாகிய பெரிய வியாழக்கிழமை இராப்போசனம் செய்யும்போது, கோதும்பை அப்பத்தைத் தமது திருக்கையில் எந்தி, ஆசீர்வதித்து, தமது அப்போஸ்தலர்களைப்பார்த்து: "இது என்னுடைய சரீரம், இதைப் பொசியுங்கள்" என்றும், பிறகு முந்திரிகைப்பழ இரசப் பாத்திரத்தைக் கையிலெடுத்து, ஆசீர்வதித்து: "இது என்னுடைய இரத்தம், இதைப் பானம்பண்ணுங்கள்" என்றும் சொல்லி, இவ்வுன்னத தேவதிரவிய அநுமானத்தை ஸ்தாபித்தார். அதே சமயத்தில்தானே, தமது அப்போஸ்தலர்களுக்குக் குருப்பட்டம் அளித்து, அவர்களும் அவர்களுக்குப் பின்வரும் குருக்களும் உலக முடிவுபரியந்தம், திவ்வியபூசை செய்து, அப்பத்தையும் இரசத்-



தையும் தேவநற்கருணையாக மாற்றவும், விசுவாசிகளுக்குத் திவ்விய போசனமாக கொடுக்கவும் கட்டளையிட்டார்.

## 2. தேவநற்கருணைக்கு வேண்டிய பொருளின் பேரில்.

(௧) கோதும்பை மாவைத் தண்ணீரிலே போட்டு வேகவைத்துச் செய்த அப்பம், தேவநற்கருணைக்கு அவசியமாய் வேண்டிய பொருள். நெல்லு, அரிசி, சோளம் முதலிய மற்றத் தானியங்களின் மாவை உபயோகிக்கலாகாது. கிரீச் சபையில் புளித்த அப்பமும், லத்தீன் திருச்சபையில் புளிக்காத அப்பமும் உபயோகித்து வருகிறார்கள். இவ்விரண்டும் தேவநற்கருணைக்குத் தக்க பொருளாகும். சேசுநாதர் சுவாமி தேவநற்கருணையை உண்டாக்கினபோது, புளிக்காத அப்பத்தைத்தான் உபயோகித்தார்.

(௨) பிழிந்தெடுத்த முந்திரிகைப்பழ இரசமானது இரண்டாம் பொருளாகும். இந்த இரசமன்றி வேறு விதமான இரசங்கள் செல்லாது.—அப்பம் சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசம் அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப் போகின்றது.

(ங.) இரசத்தைத் தேவசிகரம் பண்ணுமுன், அத்துடன் கொஞ்சம் தண்ணீர் கலக்கவேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை. அதற்கு முகாந்தரமென்னவென்றால்,—சேசுநாதர்சுவாமி தேவநற்கருணை உண்டாக்கும்போது அப்படிச் செய்தாரென்று அநேக வேதசாஸ்திரிகள் எழுதியிருப்பதினாலும்,—அது நமது ஆண்டவரின் திருவிலாவிலின்று புறப்பட்ட இரத்தத்தையும் தண்ணீரையும் அடையாளமாயிருக்கிறதினாலும்,—தேவநற்கருணையிலே நமதாண்டவருக்கும் கிறீஸ்துவர்களுக்கும் உண்டாகும் ஆச்சரியமான ஐக்கியத்தை அது குறித்துக் காட்டுகிறதினாலும், இரசத்துடன் கொஞ்சம் தண்ணீர் கலப்பது நியாயமே. இரசம் சேசுநாதர்சுவாமியையும் தண்ணீர் கிறீஸ்துவர்களையும் குறிக்கின்றது. இரசத்தோடு தண்ணீர் ஒன்றித்துப்போகிறதுபோல, சேசுநாதருடன் கிறீஸ்துவன் தேவநற்கருணையினால் ஐக்கியமாகிறான். இதைப்பற்றி நமதாண்டவர் திருவுளம்பற்றிய வார்த்தைகளாவன: "என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்." (அரு. VI. 57.)



## 3. தேவநற்கருணையில் சம்பவிக்கிற சில விசேஷங்கள்.

(க) சேசுநாதர் அப்ப இரசத்தின் குணங்களுக்குள்ளிருக்கிறார். குருவானவர் பூசை பண்ணுகையில், அப்பத்தின்மேலும் இரசத்தின்மேலும், தேவசிகர வார்த்தைகளைச் சொன்னவுடனே, அப்பம் சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசம் திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது. சேசுநாதர்சுவாமி கடைசி இராப்போசனம் செய்கையில், நிறைவேற்றின புதுமை, குருவானவர் தேவசிகரம் பண்ணும்போதெல்லாம் புதுப்பிக்கப்படுகிறது. தேவசிகரத்திற்குப் பிற்பாடு, நமது ஐம்புலன்களுக்குத் தோன்றுகிற அப்ப இரசத்தின் குணங்களாகிய உருவம், நிறம், வாசனை, உருசி, கனம், அளவு முதலியவைகள் அதில் இருக்கிறதேயல்லாமல், அப்பமுமில்லை இரசமுமில்லை.

(உ) எனெனில், அப்பத்தின் பொருளெல்லாம் சேசுநாதருடைய திருச் சரீரமாகவும், இரசத்தின் பொருளெல்லாம் அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது.

4. பத்தர் சொன்னதுபோல் சேசுநாதர்சுவாமியின் திருச்சரீரம் அப்பத்துக்குள்ளேயாவது

அப்பத்தோடேயாவது இருக்கிறதில்லை. அப்பமும், இரசமும் நீங்கிப்போக, அவைகளின் குணங்களுக்குள்ளே திருச்சரீரம் தனியே இருக்கிறது.—"இது என்னுடைய சரீரம், இது என்னுடைய இரத்தம்" என்று சேசுநாதர் சுவாமி சொன்னதினாலே, தேவநற்கருணையில் அப்பமும் இரசமும் இல்லையென்று வெளிப்படுகிறது. திருச்சரீரமானது அப்பத்தோடு இருக்கிறதாயிருந்தால், "அப்பத்தோடும், அப்பத்தினுள்ளேயும் என் சரீரமிருக்கிறது" என்று சொல்லியிருப்பார். ஆகையால், அவருடைய வார்த்தையின் வல்லமையினால் அப்பமே திருச்சரீரமாய் மாறிப்போனதென்பது பரிஷ்காரமாய் விளங்குகிறது.

(௧) மேலும், அப்பம் திருச்சரீரமாகவும், இரசம் திரு இரத்தமாகவும் மாறிப்போகாவிட்டால், "இதுதான் உங்களுக்காகக் கையளிக்கப்படுகிற என் சரீரம்" (லூக். XXII. 19) என்றும், "இதுதான் அநேகருடைய பாவங்களின் மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" (மத். XXVI. 28.) என்றும், சேசுநாதர் சுவாமி திருவுளம்பற்றியிருக்கமாட்டார். நமது ஆண்டவர் அப்பத்தையும் இரசத்தையுமல்ல, ஆனால் தமது சொந்த சரீரத்தையும் இரத்தத்தையுமே சிலுவையின்மேல் பலியாக ஒப்புக்கொடுத்தார்.



(௨) யாதொருவன் ஒரு பொருளைக் கையிலெடுத்து, "இது தங்கம்" என்று சொன்னால், அவன் சொல்வது உண்மையாயிருப்பதற்கு, வெளியே நிறம், சாயல், முதலியவை பார்வைக்குக் கல்லைப்போலிருந்தாலும், உள்ளே மெய்யான தங்கமிருக்கவேண்டும். சேசுநாதர் தமது கையில் அப்பத்தையும் இரசத்தையும் வைத்துக்கொண்டு, தேவவசீகர வார்த்தைகளை உரைத்தபோது, அப்ப இரசத்தின் குணங்களுக்குள்ளே மெய்யாகவே அவருடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் மாத்திரம் இருந்திராவிடில், அவர் சொன்ன வார்த்தைகள் பொய்யென ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கும். ஆனால் இதைவிட பெரிய தேவதூஷணமுமுண்டோ?

(௩) சர்வேசுரன் அளவில்லாத வல்லமையும் உண்மைத்தனமும் நிறைந்தவராயிருக்கிறபடியால், பார்வைக்கு விரோதமான விஷயம் யாதொன்று அவர் தெரிவித்தால், தமது அளவற்ற வல்லமையினால் அப்பேர்ப்பட்ட மாற்றம் வருவித்திருக்கிறார் என்பது திண்ணம். ஆனதினால், அப்பத்தையும் இரசத்தையும் ஓர் மகா ஆச்சரியத்துக்குரிய புதுமையினால் தமது திருச்சரீரமாகவும், திரு இரத்தமாகவும் மாற்றச் சித்தமானாரென்பது தெளிவாய்த் துலங்கு

கிறது. அப்போஸ்தலர்களும், திருச்சபையும், திரிதெந்தின் பொதுச்சங்கமும் போதிப்பது இதுவே.

(ச) இந்த மாற்றத்துக்கு (Transubstantiatio) திரான்சுப்ஸ்தான்சியாசியோ என்று பெயர். இதற்கு அர்த்தமென்னவென்றால், ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறிப்போகிறதென்பதே. இதைக்குறித்து ஓர் வேதபாரகர் "கானாவூரில் நடந்த கலியாணத்திலே நமதாண்டவர் தண்ணீரை இரசமாக மாற்றியருளினார். ஆதலால் அப்ப இரசத்தைத் தமது திருச்சரீரமாகவும் திரு இரத்தமாகவும் மாற்றுகிறார் என்று விசுவசிக்கிறதுக்கு ஆக்ஷேபனை ஏதேனும் உண்டோ" என்று எழுதியிருக்கிறார்.

வேறோர் வேதபாரகர் வேத புஸ்தகத்திலுள்ள வர்த்தமானத்தைக்கொண்டு இந்த அதிசயமான மாற்றத்தைச் சற்றே விளக்கிக்காட்டுகிறார். லோத்தென்பவருடைய மனைவி உப்புச் சிலையாய் மாறிப்போனபோது, வெளி உருபம் மாறிப்போகவில்லை, பொருள் மாத்திரம் உப்பாய்ப்போனது. இப்படியே தேவநற்கருணையிலும், அப்ப இரசத்தின் ரூபம் மாறாவிட்டாலும், அவைகளின் பொருள் சேசுநாதருடைய



திருச் சரீரமும் திரு இரத்தமுமாய் மாறிப் போகிறது.

5. சர்வ வல்லபருள்ள சர்வேசுரன் மாத்திரம் இப்பேர்ப்பட்ட அதிசயத்துக்குரிய மாற்றம் செய்யக் கூடும்.

(க) நாம் அப்பமாகிலும் இரசமாகிலும் உணவாகச் சாப்பிடும்போது இவைகள் நம்மைவிட்டு முழுதும் நீங்கிப்போகாமல், நமது சரீரத்தோடு ஒன்றிக்கின்றன. தேவநற்கருணையிலோவெனில், அப்பமும் இரசமும் சேசுநாதர் சுவாமியின் திருச்சரீரத்தோடு சிறிதும் ஒன்றிப்பதில்லை. அதிலே அப்ப இரசத்தின் குணங்கள் மாத்திரம் இருக்கின்றனவேயொழிய, அவைகளின் பொருள் முழுதும் நீங்கிப்போகிறது.

(உ) ஆகையினாலே குருவானவர் நடுப்பூசையில் தேவவசீகர வார்த்தைகளை உச்சரிக்கிறதற்கு முன், ஒஸ்தியிலே அப்பமும், பாத்திரத்திலே திராக்ஷ ரசமும் சில தண்ணீர்த் துளிகளும் இருக்கின்றன. தேவவசீகர வார்த்தைகள் சொன்னவுடனே, அப்பமும் இரசமும் முழுதும் நீங்கிப்போக, அவைகளின் குணங்களுக்குள்ளே நமது ஆண்டவருடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் எழுந்தருளி வருகிறது. அவருடைய திருச்சரீரம் தனது சுபாவத்துக்குரிய

தேல்லாம் சம்பூரணமாய்க் கொண்டிருப்பதினலேயும், இனிமேல் அது கொஞ்சமும் மாறக்கூடாததினலேயும், அதினுடன் அப்பமும் இரசமும் சேர்ந்திருக்கமுடியாது. அப்படிச் சேர்ந்திருந்தால், நமது ஆண்டவருடைய திருச் சரீரம் வேறுபட்டு, இடைவிடாத மாற்றங்களுக்குள்ளாகும்; இது கூடாத காரியம்.

6. குணங்கள் மாறிப்போகிறதில்லை.—அப்பம் திருச் சரீரமாகவும் இரசம் திரு இரத்தமாகவும் மாறிப்போனலும், அவைகளின் குணங்கள் சிறிதும் மாறாமலிருப்பது பெரிய புதுமை. பொருளின் உருசி, நிறம், வாசனை, முதலிய குணங்கள் பொருளோடு அகத்தியம் ஒன்றித்திருக்கவேணும்; அந்தப் பொருள் அழிந்துபோனால், அவைகளும் அதோடு அழிந்துபோகும். எனெனில் குணங்கள் தங்கள் பொருளோடு ஒன்றித்திராமல் தாங்களாய் நிலைத்திருப்பது, சுபாவமாய்க் கூடாத காரியம்.

(க) தேவநற்கருணையிலோவென்றால், அப்பமும் இரசமும் முழுதும் நீங்கிப்போனதால், அவைகளின் குணங்கள் யாதொரு பொருளின் ஆதாரமின்றி நிலைத்திருக்கின்றன. இந்தக் குணங்கள் மனுஷ சரீரத்தோடு முதலாய்ப் பொருந்தியிருப்பது முழுதும் ஒவ்வாது. ஆகையால்



இவைகள் மகிமை நிறைந்த சேசுநாதர்சுவாமியின் திருச்சரீரத்தோடு எவ்விதமாய்ச் சேர்ந்திருக்கக்கூடும்? மேலும், அழியாததும் மாறாததுமான நமது ஆண்டவரின் திருச் சரீரத்தோடு இவைகள் ஒன்றித்திருந்தால், இதினலே அத்திருச் சரீரத்துக்குக் கணக்கற்ற விக்கினங்களும் மாற்றங்களும் உண்டாகும். ஆனதால் இந்தக் குணங்கள் யாதொரு பொருளின் ஆதாரமின்றி, சர்வேசுரனுடைய அளவில்லாத வல்லமையினிமித்தம், புதுமையாய் நிலைத்திருக்கின்றனவென்று கண்டுணரக்கடவோம்.

(உ) இந்தக் குணங்கள் பஞ்சேந்திரியங்களை ஏய்க்கிற மாய ரூபங்களல்ல; மெய்யான குணங்களே. அப்பமும் இரசமும் நீங்கிப்போகுமுன், எப்பேர்ப்பட்டவைகளாய் இருந்தனவோ, அப்பேர்ப்பட்டவைகளாகவேயிருக்கின்றன. தேவவசீகரம் நிறைவேற்றுவதற்கு முன்னிருந்தது போலவே, இவை நமது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டினவைகளாயும், பகுக்கக்கூடியவைகளாயும், போசிக்கப்படத் தக்கவைகளாயும், அழிவு மாற்றத்துக் குரியவைகளாயுமிருக்கின்றன. மெய்யான அப்ப இரசத்தோடு கூடியிருக்கும்போது, இந்தக் குணங்கள் என்னென்ன மாற்றங்கள் அடையக்கூடுமோ, அதே

மாற்றங்கள் பொருள் நீங்கிப்போனபின்பும் உண்டாகும்.

(௫) மேலும், தேவநற்கருணை மெய்யான தேவதிரவிய அநுமானமாவதற்கு, நமது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டின வெளி அடையாளமாயிருப்பது முழுதும் அவசியம். இந்த வெளி அடையாளங்களைக்கொண்டு, சேசுநாதர்சுவாமி மோட்சத்திலிருப்பதுபோலவே, இந்தக் குணங்களுக்குள்ளேயும் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறாரென அறிகிறோம். ஆனால் அப்ப இரசத்தின் குணங்களாகிய நிறம், வாசனை, முதலியவை திருச் சரீரத்தினுடையவும் திரு இரத்தத்தினுடையவும் நிறம் வாசனையாக மாறிப்போனதென்று நினைக்கலாகாது. அப்ப இரசத்தின் குணங்கள் முன்போலவே மாறாமலிருக்கின்றன.

7. இந்த மேலான ஆச்சரியத்துடன், தேவநற்கருணையில் வேறநேக அதிசயங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே சொல்லத்தகும்.

(௧) உலகத்தின் எத்திசையிலும் ஓரே நேரத்தில் எத்தனை பூசை நடந்தாலும், ஓரே பூசையில் எத்



தனை அப்பத்துண்டுகளைக் குருவானவர் வசீகரம் பண்ணினாலும், ஒவ்வொரு இடத்திலும், அப்பம் சேசுநாதருடைய திருச் சரீரமாகவும், இரசம் அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறது. சேசுநாதர் எப்போதும் மோட்சத்தில் இருப்பதுமன்றி, ஓரே நேரத்தில் பல இடங்களிலும், பற்பல அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், முந்திரிகைப்பழ இரசத்தின் குணங்களுக்குள்ளேயும், வீற்றிருப்பது பெரிய ஆச்சரியமல்லோ?

(௨) அப்ப இரசக் குணங்களின் ஒவ்வொரு பகுதியிலும் சேசுநாதர்சுவாமி முழுதும் இருக்கிறார். எப்படி தேவவசீகரம் பண்ணப்பட்ட ஒவ்வொரு அப்பத்தின் குணங்களிலும், இரசத்தின் குணங்களிலும், சேசுநாதர்சுவாமி முழுதும் வீற்றிருக்கிறாரோ, அப்படியே இந்தக் குணங்கள் பிரிபட்டபோது முதலா[illegible]வொரு சிறுபாகத்திலும், தமது முழுச் சரீரத்தோடும், இரத்தத்தோடும், ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் வீற்றிருக்கிறார்.

இந்த அதிசயத்தைக் கண்டுபிடிக்கும்படி நாம் அறிந்திருக்கவேண்டியதாவது.—சரீரமுள்ள வஸ்து யாதொரு இடத்திலிருந்தால், அது அந்த இடத்தின் ஒவ்வொரு பங்கிலும்

முழுதுமிருக்கமுடியாது. அப்படியே கை இருக்கிற இடத்திலே தலை காலும் எல்லாம் கூட இருப்பது கூடாத காரியம். அரூபிகளோவென்றால், இப்படியல்ல. அவைகளுக்குப் பங்குபாகமில்லாததால், எந்த இடத்திலிருந்தாலும், அந்த இடத்தின் ஒவ்வொரு சிறு பங்கிலும் முழுதும் இருக்கும். இதினால்தான் நமது ஆத்துமம் சரீரத்திலே முழுதும் இருக்கிறதுமல்லாமல், சரீரத்தின் ஒவ்வொரு பங்கிலும் முழுதும் இருக்கிறது.

சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரம் தேவநற்கருணையிலே மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறதென்றாலும், அவர் அதிலே காணக்கூடாதவராயும் தொட்டு அறியக்கூடாதவராயும் ஓர் அரூபியின் மேரையாக எழுந்தருளியிருக்கிறார். இதினாலே தேவநற்கருணையிலே நமதாண்டவருடைய திருச்சரீரம் பங்கு பங்காயிராமல், எங்கும் முழுவதும் பிரசன்னமாயிருக்கிறது.

(௫) அதினாலே, அப்பத்தைத் துண்டு துண்டாய்ப் பிரித்தாலும், ஒவ்வொரு துண்டிலேயும், சேசுநாதர் சுவாமி முழுதும் இருக்கிறார்.—இதை முகக்கண்ணாடியின் உவமையினாலே சற்றே



விளக்கிக் காட்டலாம். அதெப்படியென்றால், நாம் முகக்கண்ணாடியில் பார்க்கும்போது, நமது முகம் முழுதும் தோன்றுகிறது. பிற்பாடு அது கலைந்து துண்டாக உடைந்துபோனால், முகத்தின் சாயலும் பிரிந்துபோகாமல் ஒவ்வொரு துண்டிலும் முழுதும் காணப்படும். சேசுநாதர் சுவாமியும் முழு ஓஸ்தியிலே எழுந்தருளியிருப்பதுமல்லாமல், அது எத்தனைப் பங்காகப் பிரிக்கப்படுகிறதோ அத்தனைப் பங்கிலும் சிறிதும் குறைவுபடாமல் முழுதும் வீற்றிருக்கிறார்.

தேவநற்கருணையைப் பிட்கும்போதாவது அது வாயில் பிரிபடும்போதாவது, சேசுநாதர் சுவாமியைப் பிரிக்கிறதாக எண்ணவேண்டாம். ஏனென்றால், அப்பத்தினுடைய குணங்களை இப்படிப் பிரிக்கிறோமேயன்றி, சேசுநாதருடைய திருச்சரீரத்தை நாம் பிட்கிறதுமில்லை, பிரிக்கிறதுமில்லை.

(௬) அப்பத்தின் குணங்களுக்குள்ளே திரு இரத்தமும் உண்டு.—தேவ வசீகரம் பண்ணினவுடனே, அப்பமானது சேசுநாதருடைய திருச்சரீரமாகவும், இரசமானது அவருடைய திரு இரத்தமாகவும் மாறிப்போகிறதென்று சொல்லும்போது, அப்பத்தின் குணங்களுக்குள்ளே சேசுநாதருடைய திரு இரத்தம் இல்லையென்

றும், இரசத்தின் குணங்களுக்குள்ளே அவருடைய திருச்சரீரம் இல்லையென்றும், எண்ணக்கூடாது. குருவானவர் பூசை செய்யும் போது, சேசுநாதர் பேரால் அப்பத்தைப் பார்த்து: "இது என் சரீரம்" என்றும், இரசத்தைப் பார்த்து: "இது என் இரத்தம்" என்றும் சொல்லுகிறபடியால், தேவ வசீகரம் பண்ணுகிற இவ்வார்த்தைகளின் பெலத்தால், அப்பத்தில் சரீரமும், இரசத்தில் இரத்தமுமாத்திரம் இருக்கவேண்டியிருந்தாலும், ஒவ்வொரு குணங்களுக்குள்ளேயும் சேசுநாதர்சுவாமி முழுதும் விற்றிருக்கிறார்.

**(கு) ஒவ்வொரு வகைக் குணங்களுக்குள்ளேயும் சேசுநாதர்சுவாமி முழுதும் இருக்கிறதற்கு முகாந்திரமென்ன?**

சேசுநாதர்சுவாமி உயிர்த்தபிறபாடு, திரும்பவும் சாகக்கூடாதவராயிருக்கிறபடியினாலே, இப்போது அவர் மோட்சத்தில் எப்படி இருக்கிறாரோ, அப்படியே தேவநற்கருணையிலும் எழுந்தருளி வருகிறார். இப்போது மோட்ச இராச்சியத்தில் சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரமும், இரத்தமும், ஆத்துமமும், தேவசுபாவமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத விதமாய் ஐக்கியமாயிருக்கிறதினாலே, அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், இரசத்தின் குணங்களுக்



குள்ளேயும் அவர் தமது திருச்சரீரத்தோடும், இரத்தத்தோடும், ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் மெய்யான சர்வேசுரனுமாய் மெய்யான மனுஷனுமாய் எழுந்தருளியிருக்கிறார்.

பெரிய வியாழக்கிழமை சேசுநாதர்சுவாமி தேவநற்கருணை உண்டாக்கினபோது, அதிலே அவருடைய திருச்சரீரமானது உயிருள்ளதாகவும், பாடுபட்டு மரிக்கக்கூடியதாகவுமிருந்தது. சேசுநாதர்சுவாமி அடக்கமாயிருந்த மூன்று நாட்களில் அப்போஸ்தலர்கள் தேவநற்கருணையை உண்டாக்கியிருந்தால், அப்பத்தின் குணங்களுக்குள்ளே தேவசுபாவத்தோடிருந்த திருச்சரீரமும், இரசத்தின் குணங்களுக்குள்ளே தேவசுபாவத்தோடிருந்த திரு இரத்தமுமாத்திரம் இருந்திருக்கும். இந்தச் சமயத்தில் அவருடைய திரு ஆத்துமம் திருச் சரீரத்தோடும் இரத்தத்தோடும் சேர்ந்திராமல், தேவசுபாவத்தோடுமாத்திரம் சேர்ந்திருந்திருக்கும்.—ஆகையால் தேவ வசீகர வார்த்தைகள் சொல்லும் போது, நமதாண்டவர் எந்த அந்தஸ்திலே இருக்கிறாரோ, அப்படியே தேவநற்கருணையிலே எழுந்தருளிவருகிறார்.

8. தேவநற்கருணையில் நடக்கிற ஆச்சரியங்களை இவ்வுலோகத்திலே உண்டாகிற சில அதிசயங்களைக்கொண்டு சற்று விளக்கிக்காட்டலாம்.

(க) சர்வேசுரன் நமக்குப் பேசும் வாக்கு அளித்திருக்கிறார். இதை ஆராய்ந்து பார்த்தால், இது எவ்வளவோ அதிசயத்துக்குரியது! நான் பேசவே, என் புத்திக்குள்ளிருக்கிற நினைவானது மற்றவர்களுக்குப் புலப்படுகிறது.—ஆயிரம் பேர் நான் சொல்லும் வார்த்தையைக் கேட்டபோதிலும், என் நினைவானது பங்குபாகமின்றி முழுதும் அவர்களில் ஒவ்வொருவருக்குந் தெரியவருகிறது. இவ்வண்ணமே தேவ வார்த்தையானவர் தேவ நற்கருணை வழியாகத் தம்மை மனிதர்களுக்கு ஞானப்போசனமாக அளிக்கையில், எத்தனை பேர் திவ்விய நன்மை வாங்கினபோதிலும், அவர் சிறிதும் குறையாமல் ஒவ்வொருவருக்கும் தம்மை முழுதும் கொடுத்தருளுகிறார்.

(உ) நமது நினைவுகளை வார்த்தையினாலே மாத்திரமல்ல, எழுத்தினாலும் வெளிப்படுத்துகிறோம். நாம் எழுதுகிற காகிதம் வெண்மையாயிருந்தாலுஞ் சரி, மஞ்சளாயிருந்தாலுஞ் சரி,



சதுரமாயிருந்தாலுஞ் சரி, வட்டமாயிருந்தாலுஞ் சரி, பெரிதாயிருந்தாலுஞ் சரி, சிறிதாயிருந்தாலுஞ் சரி, நாம் உபயோகிக்கிற மையானது எவ்வர்ணமாயிருந்தாலுஞ் சரி, நாம் எழுதுகிற வார்த்தைகளில் அடங்கிய நினைவானது மாறிப்போகிறதில்லையே. இவ்விதமே அப்ப இரசத்தின் நிறம், வாசனை, உருபம், பிரமாணம் எப்பேர்ப்பட்டதாயிருந்தாலும், சேசுநாதர்சுவாமி சிறிதும் மாறிப்போகாமல் தேவநற்கருணையிலே முழுதும் பிரசன்னமாயிருக்கிறார்.

(ங) நம்மில் அநேகர் தந்திக்கம்பிகளைப் பார்த்திருக்கிறோம். தந்திக்கம்பிகளில் ஓடுகிறதே, மின்சாரம் (Electricity) என்னப்படும். இந்த மின்சாரத்தின் வழியாய் உலகத்தின் கடைசி எல்லையிலிருப்பவர்களுக்கு முதலாய் ஒரே க்ஷணத்தில் நமது நினைவை அறிவிக்கக்கூடும். மேலும் எத்தனை ஆயிரம் இடங்களுக்கு நாம் அறிவிக்கப் பிரியப்படுவோமோ, அத்தனை ஆயிரம் இடங்களிலும் ஒரே க்ஷணத்தில் அதைப் பெற்றுக்கொள்ளும்படி செய்யலாம். மின்சாரத்துக்கு இவ்வளவு சக்தியைக் கொடுத்த சர்வேசுரனுக்கு, கூடாத காரியமுமுண்டோ? சேசுநாதர்சுவாமியுடைய திருச்சரீரமும் உலகத்தின்

பற்பல இடங்களிலுள்ள திவ்விய அப்பங்களிலே அதே சமயத்தில் யாதொரு குறைவின்றி சம்பூரணமாய் வீற்றிருக்கின்றது.

9. இருவகையிலும் திவ்வியநன்மை வாங்குதலின்பேரில்.

அப்பத்தின் குணங்களுக்குள்ளும், இரசத்தின் குணங்களுக்குள்ளும், அவைகளின் ஒவ்வொரு சிறு பாகத்திலும், சேசுநாதர்சுவாமி முழுதும் இருக்கிறதினாலே, தேவநற்கருணையை ஒருவகையில் வாங்குவதற்கும், இருவகையிலும் வாங்குவதற்கும், யாதொரு வித்தியாசமில்லை. இதினாலே, திவ்விய அப்பத்தை மாத்திரம் உட்கொள்ளுகிறவர்களிடம் குறைவாகவும், திவ்விய அப்பத்தையும் இரசத்தையும் உட்கொள்ளுகிறவர்களிடம் அதிகமாகவும், சேசுநாதர்சுவாமி எழுந்தருளிவருகிறதில்லை. திவ்விய அப்பமானது பெரிதாயிருந்தாலுஞ் சரி, சிறிதாயிருந்தாலுஞ் சரி, ஒன்றாயிருந்தாலுஞ் சரி, அநேகமாயிருந்தாலுஞ் சரி எப்போதும், யாதொரு வித்தியாசமின்றி, சம்பூரணமாய் எழுந்தருளிவருகிறார்.

அநேக வருஷமாய்க் கிறீஸ்துவர்கள் இருவகையிலும் தேவநற்கருணை வாங்கிவந்தார்கள். ஆனால் [illegible] பாத்திரத்தைக் கொண்டு பானஞ்செய்வது அசங்கருத்து அருவருப்பும் அரோசிகமும் உண்டாகிறதினாலும், திரு இரத்தம் அடிக்கடி சிந்திப்போய் அவசங்கைக்குக் காரணமாகிறதினாலும், இன்னும் வேறு சில விக்கினங்கள் நேரிட்டதினாலும், லத்தீன் திருச்சபையில் ஒருவகையிலே மாத்திரம் திவ்விய நன்மை வாங்கவேணுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது.

10. தேவநற்கருணை வாங்குதலினால் உண்டாகும் பலன்களென்ன?

தேவநற்கருணையானது தேவதிரவிய அநுமானமானதால், ஆயத்தக்காரன் விக்கினஞ் செய்யாவிட்டால், தனக்குரிய நன்மைகளை எப்போதும் அளிக்குமென்பது விசுவாச சத்தியம். ஆனால் ஒவ்வொருவனுடைய ஆயத்தத்துக்கும் பக்தி பற்றுதல் சிநேகத்துக்கும் தக்கதாய்ப்போல், தாராளமாயும் குறைவாயும் அளிக்கப்படும்.

தேவநற்கருணையினால் உண்டாகும் பிரயோசனங்களாவன:

(க) ஆத்துமத்துக்கு ஞானப்போசனம் ஆகிறது. நாம் சாதாரணமாய் உட்கொள்ளுகிற ஆகாரம் தேகத்துக்கு என்னென்ன கொடுக்கிற

தோ, அதெல்லாம் ஞானப்போசனமாகிற இந்தத் தேவதிரவிய அநுமானம் நமது ஆத்துமத்துக்குத் தருகிறது. சரீர போசனம் தேகபலத்தைப் புதுப்பித்துக் காப்பாற்றி அதிகரிப்பது போல், தேவநற்கருணையானது தேவ இஷ்டப்பிரசாதம் நம்மிடத்தில் அதிகரிக்கச் செய்வதுமன்றி, நமது ஞான சீவியம் நம்மிடத்தில் தங்கி வளர்ந்தோங்கி உத்தமமாகும்பொருட்டு, விசேஷ அநுக்கிரகப் பிரசாதங்களை அடையவேண்டிய சுதந்தரத்தையும் தருகிறது. "என்னைப் புசிக்கிறவன் என்னால் பிழைப்பான்."

(அரு. VI. 58.)

(௨) தேவநற்கருணையினால் கிறீஸ்துநாதரோடு நமக்கு விசேஷ அந்நியோந்நியம் உண்டாகிறது.— தேவநற்கருணை உட்கொள்ளுகிறவனுடைய ஆத்துமத்தோடு கிறீஸ்துநாதர் தேவ இஷ்டப் பிரசாதத்தினாலும் தேவசிநேகத்தினாலும் விசேஷவிதமாய் ஒன்றிக்கிறார்.

நமது ஆத்துமம் மாத்திரமல்ல, இந்தத் தேவ திரவிய அநுமானத்திலே நம்முடைய சரீரமும் கிறீஸ்துநாதருடைய திருச்சரீரத்தோடு மெய்யாகவே சேர்ந்து ஐக்கியப்படுகிறது; ஏனெனில் தேவநற்கருணையின் குணங்களுக்குள்ளே மறைந்திருக்



கிற யேசுநாதருடைய திருச்சரீரம் நமது சரீரத்தைத்தொட்டு அதோடு ஒன்றிப்பதினால் அதை விசேஷவிதமாய் அர்ச்சிக்கிறது.

(௩) ஆசாபாச அக்கினியைத் தணித்து நீக்குகிறது.—தேவநற்கருணையானது தேவ இஷ்டப் பிரசாதம் நம்மிடத்தில் அதிகரிக்கச் செய்வதினால் மாத்திரமல்ல, நமது சரீரத்தைக் கிறீஸ்துநாதருடைய பரிசுத்த மாமிசத்தோடு ஒன்றிப்பதினாலும், நம்மிடத்தில் ஆசாபாச அக்கினியை அவிக்கிறது. ஏனெனில் கிறீஸ்துநாதர் நமது மாமிசத்தைத் தமதாகப் பாவித்து, அதோடுகூட அவருக்கு ஓர்வித உறவுண்டானதுபோல் மதிப்பதினால், அதைச் சிநேகித்துக் காப்பாற்றித் தம்முடைய மாமிசத்துக்கு ஓர் வகையிலே ஒத்ததாக்கி, அதிலே தகாத பற்றுதல்கள் கிளம்பாதபடி விசேஷ பராமரிப்போடு பாதுகாத்துவருகிறார்.

(௪) நாம் மகிமையோடு உயிர்த்தெழுந்திருப்போமென்பதற்கு அது அச்சாரம்.— தேவநற்கருணை உட்கொள்ளுகிறவனுடைய சரீரம் கிறீஸ்துநாதருடைய சரீரத்தோடு ஒன்றிப்பதினால், அப்படி அர்ச்சிக்கப்பட்ட சரீரம் மகிமையோடு உயிர்ப்பதற்குச் சுதந்தரம் பெறுகிறது. "என்

மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டாகும்; கடைசி நாளில் நான் அவனை உயிர்ப்பிப்பேன்" என்று கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறார். (அரு. VI. 55.)

(இ) நாம் மனம்பற்றுதல் நிறையாதிருக்கிற அற்பப் பாவங்களை மன்னிக்கிறதும்.—திரிதெந்தீன் என்னும் திருச்சங்கம் சொல்வதுபோல், இந்தத் தேவதிரவிய அநுமானமானது நாம் சாவான பாவத்திலே விழாதபடி காப்பாற்றுவதுமல்லாமல், நம்மிடத்திலுள்ள அற்பப்பாவங்களை நீக்குகிறது. இதற்கு இரண்டு காரணமுண்டு: தேவநற்கருணை ஔஷதம்போல அசனமாகையால், நாமிழந்துபோன ஞானப்பெலனைத் திரும்பக் கொடுக்கிறது. மேலும், தேவநற்கருணையானது தேவசிநேக ஒன்றிப்பை அதிகரிப்பதினால், அச்சிநேகம் உத்தமமாவதற்குத் தடையாயிருக்கிற அற்பப் பாவங்களை நீக்கிப்போடுகிறது.

(உ) ஞான இன்பத்தையும் சந்தோஷத்தையும் பெறுவிக்கிறது.—இத்தேவதிரவிய அநுமானம் கொடுக்கிற இஷ்டப்பிரசாதத்தினிமித்தம் ஆத்துமமானது தனக்கு நேரிடுகிற சகல துன்ப துரிதங்களையும் பொறுமையோடுமாத்திரமல்ல,



சந்தோஷத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறது. அன்றியும் ஆத்துமமானது கிறீஸ்துநாதர் மேலுள்ள நேசத்தால் நிறைந்து, அவருடைய சமுகத்திலே ஆனந்தத்தைச் சுகித்தநுபவிக்கிறது. தேவநற்கருணையை உட்கொள்ளுகிறவனுடைய அசட்டைத்தனம், பராக்கு, இலௌகீக கவலைகள் முதலியவைகள் தடையாயிராதபட்சத்தில், இந்த ஆநந்த சந்தோஷம் உண்டாவது தவறாது. சில சமயங்களிலே அதிசப் பத்தியுள்ளவர்களிடத்திலே இந்தச் சந்தோஷம் வெளிக்கு முதலாய்த் தோன்றுவதுண்டு.

11. தேவநற்கருணை வாங்குவதற்கு வேண்டிய ஆயத்தம் எத்தனைவகைப்படும்?

சரீர ஆயத்தம், ஆத்தும ஆயத்தம், ஆக இரண்டுவகைப்படும்.

(க) சரீர ஆயத்தம் ஏதென்றால், தேவநற்கருணை வாங்குகிறவன், மரண அவஸ்தை சமயந்தவிர மற்றச் சமயங்களிலே, நடுச்சாமந்துவக்கி தேவநற்கருணை வாங்குகிறவரைக்கும், மருந்தாக முதலாய் ஒன்றுஞ் சாப்பிடாமலும், குடியாமலும், உபவாசமாயிருக்கவேணும். உபவாசமாயிராமல் தேவநற்கருணை வாங்குகிறது சாவான பாவமாயிருக்குமென்று நன்றாய்க் கவனிக்க.

யாண்டும். உபவாசத்தைப்பற்றிய இந்தக் கட்டளையை மீறுகிறதற்கு, விழுங்குகிற காரியம் வெளியேயிருந்து வாய்க்கு வரவேண்டியது. ஆகையால் வாய்க்குள் இரத்தம் வடிந்தால், அல்லது முந்தினநாள் சாப்பாட்டில் ஏதாவது பல்லிடுக்கில் ஒட்டியிருந்தால், இவைகளை விழுங்கிறது நன்மை வாங்குவதற்கு விக்கினமாகாது. சர்க்கரை மருந்து முதலியவைகளை நடுச்சாமத்துக்கு முந்தி வாயிலே போட்டு, நடுச்சாமமானபின்பு உட்கொண்டால், தேவநன்மை வாங்கலாகாது. கைவிரல் முகம் முதலியவைகளிலிருந்து வெளியே வடியும் இரத்தத்தை விழுங்குகிறவன் உபவாசம் அநுசரிக்கிறதில்லை. ஆனால் உமிழ்நீரோடு சொற்பமாய்க் கலந்திருக்கிற தண்ணீரையும், வேர்வை, மழைத்துளியையும், ஆகாசத்தில் பறக்கிற சின்ன பூச்சிகளையும் விழுங்கும்படி நேரிட்டால், நன்மை வாங்கலாம். ஏனென்றால் நாம் இதெல்லாம் போசனமாகவும் பானமாகவும் உட்கொள்ளுகிறதில்லை.

இராத்திரி சாப்பிடும்போது, நடுச்சாமம் ஆனதோ இல்லையோவென்று சந்தேகப்படும்போது, நன்றாய் விசாரித்து ஆகவில்லையென்பதற்குத் தக்க முகாந்தரமிருந்தால், சந்தேகத்தைத்



தள்ளி, தேவநன்மை வாங்கலாம். ஆனால் சாப்பிடுகிறதற்கு முன்னேதானே, இப்போது நடுச்சாமமாகிவிட்டதோ என்று சந்தேகம் உண்டாகும்போது, அதை நிவர்த்தியாக்குகிறதற்குத் தகுந்த நியாயங்களில்லாமல் சாப்பிட்டால், தேவநன்மை வாங்கக்கூடாது.

அவஸ்தையாயிருக்கிற வியாதிக்காரன் உபவாசமாயிராமல் நாள்தோறும் தேவநன்மை வாங்கலாம். ஆதலால் வேண்டியிருக்கும்போது, நடுச்சாமத்துக்குப்பின், மருந்து பால் கஷாயம் முதலியதுகளை எல்லாம் விக்கினமின்றி சாப்பிடலாம்.

அவஸ்தையாயிராத வியாதிக்காரனுக்கு அர்ச். பாப்பானவர் கொடுத்த புது உத்தரவு என்னவென்றால், ஒரு மாசம் அளவாக படுக்கையாயிருப்பவன் சீக்கிரம் சௌக்கியம் அடையமாட்டானென்று நினைத்தால், ஆத்தும குருவின் அநுமதியோடு உபவாசமில்லாமல் சில சமயங்களில் திவ்வியநன்மை வாங்கலாமென்பதே. அவன் வசிக்கிற வீட்டிலேயே தேவநற்கருணையிருந்தால், வாரத்துக்கு இரண்டுவிசையும், வெளியேயிருந்து கொண்டுவர வேணுமானால், மாசத்துக்கு இரண்டுவிசையும் வாங்கலாம். இப்படிப்பட்ட வியாதிக்காரன் தண்ணீர், பால், கஷாயம்

முதலியவை குடிக்கலாம். அவைகளில் தான், மாவு, முதலியனவும் கொஞ்சமாய்ச் சேர்த்துக் கொள்ளலாம்; ஆனால் குடிக்கத் தக்கதாய் மாத்திரம் இருக்கவேண்டியது. ஏனென்றால் புதிய உத்தரவுப்படி வியாதிக்காரன் திவ்விய நன்மை வாங்குமுன் பானம் பண்ணலாமேயொழிய, சாப்பிடலாகாது.

(உ.) ஆத்தும ஆயத்தம் ஏதென்றால், தேவநற்கருணை வாங்குகிறவன், சாவான பாவமில்லாமல் இருக்கவேண்டியதுந்தவிர, தன்னுடைய துர்வாடிக்கைகளைத் திருத்திக்கொள்ள முழுமனதுள்ளவனுமாயிருக்கவேணும். இப்படிப்பட்ட ஆயத்தமில்லாமல், தேவநற்கருணை வாங்குகிறவன் தேவதுரோகமென்கிற கனமான பாவத்தைக் கட்டிக்கொண்டு, "தன் சாபத்தைத் தானே உட்கொள்ளுகிறான்" என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். சாவான பாவத்தோடிருக்கிறவன் தேவநன்மை வாங்குகிறதற்குமுன், உத்தம மனஸ்தாபமுயற்சி செய்கிறது போதாது; நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணவேண்டியது.

12. நன்றியறிந்த தோத்திரத்தின்பேரில்.

தேவநற்கருணை வாங்கின பிற்பாடு, நமது இருதயத்தில் வந்திருக்கிற சேசுநாதரை மறந்து



போகாமல், நமது சாவகாசத்துக்குத் தக்கது கொஞ்சநேரமாகிலும் கோவிலிலேதானேயிருந்து, அவரை ஆராதித்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, சரீரத்துக்கும் விசேஷமாய் ஆத்துமத்துக்கும் அவசரமான காரியங்களைக் கேட்கவேணும்.

அர்ச். பாப்பானவரின் கட்டளையாவது: "ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் நிலைமைக்கும் அந்தஸ்துக்கும் கடமைகளுக்கும் தக்கபடி, நன்மை வாங்குமுன் ஜாக்கிரதையுடன் ஆயத்தஞ் செய்யவும், வாங்கியபின் தக்க நன்றியறிந்த தோத்திரம் செய்யவும் தங்களாலியன்றமட்டும் பிரயாசப்படக்கடவார்கள்." ஆகையால் யாதொருவன் பூசை முடிந்தவுடன் வேலைக்குப் போகவேண்டியிருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இந்தக் காரணத்தினிமித்தம் மாத்திரம் அடிக்கடி திவ்விய நன்மை வாங்காமலிருப்பது சரியல்ல.

13. எப்போது திவ்விய நன்மை வாங்கவேண்டியது.

(க) பாஸ்குக்காலத்திலும், மரண அவஸ்தையிலும் தேவநன்மை வாங்கக் கடனுண்டு. திருச்சபைக் கட்டளையை அநுசரிக்க, வருஷத்துக்கு ஒருவிசை திவ்விய நன்மை வாங்குவது போது

மானாலும், கிறீஸ்துவர்களெல்லாரும், படித்தவரும் படியாதவரும், இல்லறத்தவரும் துறவறத்தவரும், எந்த சிவிய அந்தஸ்து, தொழில், அலுவலிலுள்ளவரும், நாடோறும் தேவநற்கருணை உட்கொள்ளவேணுமென்பது சேசுநாதர்சுவாமிக்கும் திருச்சபைக்குமுள்ள அத்தியந்த ஆசை. இப்படித் திவ்வியநன்மை வாங்குவதற்கு இஷ்டப்பிரசாதமும் சுத்த கருத்தும் அகத்தியம் இருக்கவேணும். தினந்தோறும் தேவநன்மை வாங்குவதற்கு விக்கினம் சாவான பாவமே. அற்பப் பாவம் தடையாயில்லாவிட்டாலும், அதிகப் பிரயோசனம் அடையும்படி, கூடினமட்டும் நாம் மகா ஆத்தும சுத்திகரத்தோடேயிருந்து, நல்ல ஆயத்தம் பண்ணவேண்டியது. சாவான பாவமில்லாதவர்கள் நன்மை வாங்குவதற்குப் பாவசங்கீர்த்தனஞ் செய்வது அவசியமில்லை.

(௨) பற்பல திருப்பலன்களை அடைய, எட்டு நாளைக்கொருவிசை பாவசங்கீர்த்தனம் பண்ணவேணுமென்பது திருச்சபையின் கட்டளை. ஆனால் தினந்தோறும் தேவநற்கருணை உட்கொள்ளுகிறவர்கள், சமயாசமயம் இரண்டொருவிசை நன்மை வாங்கத் தவறிப்போனாலும், இப்பேர்ப்பட்ட பலன்களைப் பெறுகிறதற்குப் பாவசங்கீர்த்தனம் செய்வது அவசியமில்லை.



(௩) இப்புது உத்தரவும், வியாதிக்காரருக்குக் கொடுத்த விசேஷ உத்தரவும், எல்லாரும் கூடுமானமட்டும் அடிக்கடி தேவநற்கருணை வாங்குவது திருச்சபைக்கு எவ்வளவு பிரியமென்று துலக்கமாய்க் காட்டுகிறது. ஆத்தும குருவானவரிடத்தில் ஆலோசனை கேளாமல், நன்மை வாங்கலாகாது. ஆனால், சாவான பாவமில்லாமல் பத்தியோடும் சுத்த கருத்தோடும் நன்மை வாங்க விரும்புகிறவர்களுக்கு, அவர் தடை செய்யமாட்டார். திருச்சபையின் கட்டளை இதுவே.

(௪) சிறுபிள்ளைகள் அநுதினமும் திவ்வியநன்மை வாங்குவதைப்பற்றி, அர்ச். பாப்பானவரின் உத்தரவுப்படி, இரண்டு விசேஷ கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. "சகல கிறீஸ்துவ பள்ளிக்கூடங்களிலும் தினந்தினம் திவ்வியநன்மை வாங்கும் வழக்கம் செழித்தோங்கி வளரும்படி, சர்வ பிரயாசப்படவேண்டியது... புது நன்மை வாங்கின பிள்ளைகள் அடிக்கடி அதை உட்கொள்ளத் தடைசெய்யாதிருப்பதுந் தவிர, அதைத் தினந்தோறும் வாங்கும்படி அவர்களைத் தூண்டிவரவேண்டும்." இந்த இரண்டு கட்டளைகளுக்கேற்ப, சிறுபிள்ளைகள் நாடோறும் திவ்விய சற்பிரசாதத்தை உட்கொண்டுவர

தால், இதிலிருந்து எவ்வளவோ அரிய பெரிய நன்மைகளுண்டாகுமென்று எளிதாய்க் கண்டு கொள்ளலாம்.

14. ஆசை நன்மையைப் பற்றி.

(க) திவ்விய நன்மை வாங்குந்தபோதெல்லாம் ஆசை நன்மை வாங்கலாம். அப்படியே, நாள் முழுதும் எந்த இடத்திலிருந்தபோதிலும், என்னென்ன வேலைகள் செய்துகொண்டிருந்தாலும், எப்பேர்ப்பட்ட சமயங்களிலும், ஆசைநன்மை வாங்கக்கூடும். சாப்பிடும்போதும், விளையாடும்போதும், வேலைசெய்யும்போதும், வாசிக்கும்போதும், எந்தச் சமயத்திலும், நமக்கு இஷ்டமான அளவு ஒரு நாளைக்கு நூறு தடவை முதலாய், ஆசை நன்மை வாங்கலாம்.

(உ) தேவநற்கருணையை உட்கொண்டு, நமது திவ்விய கர்த்தரோடு ஐக்கியமாய் ஒன்றித்திருக்கும்படி உருக்கமான பத்தி பற்றுதலோடு விரும்புவதே, ஆசை நன்மையாகும். மகா விசுவாசத்தோடும், பத்தி விநயத்தோடும், தேவ சிநேகத்தோடும் இப்பேர்ப்பட்ட ஆசையை நமது மனதில் எழுப்பும்போதெல்லாம், கணக்கற்ற பலன்களை அடைவோமென்பது சத்தியம்; நமது பத்தி உருக்கத்தின் மிகுதியினிமித்தம், தேவநற்கருணை வாங்குவதினால் உண்டா



கும் பலன்களை முதலாய் ஆசைநன்மையினால் சிலவிசை அடையக்கூடுமென்று அர்ச். தோமையார் எழுதியிருக்கிறார்.

(ங) தேவநற்கருணை வாங்கும்போது செய்யும் ஜெபத்தையும் நன்றியறிந்த தோத்திரத்தையும், ஆசை நன்மை வாங்கும்போதும், மகா சுருக்கமாய்ச் செய்யலாம். ஆனால் அது அவசியமல்ல. ஏனென்றால் இந்த நல்ல ஆசை நமது ஆத்துமத்தில் ஓர் க்ஷணம் மாத்திரம் நீடித்திருந்தபோதிலும், அது ஆசை நன்மையே.

## ஏழாம் பிரிவு.

## திவ்விய பூசையின்பேரில்.

1. திவ்வியபூசை யாவதென்ன?

திருச்சிலுவைப்பலியைப் புதுப்பித்து, நமது பீடங்களின்மேல் அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் குருவானவரின் கரங்களால் சேசுநாதருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறதே திவ்விய பூசை என்னப்படும்.

(க) திரிதெந்தீன் பொதுச்சங்கம் வசனித்ததாவது:—"திவ்வியபூசை பண்ணும்போது சர்வேசுரனுக்கு மெய்யான பலி ஒப்புக்கொடுக்கிறதில்லையென்று யாதாமொருவன் சொன்னால், அவன் சபிக்கப்பட்டவனாவான்."

(உ) தேவநற்கருணை நமக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிற தேவதிரவிய அநுமானமாயிருக்கிறதுமல்லாமல், சேசுநாதர் சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்ட புது ஏற்பாட்டின் பலியாகவுமிருக்கிறது. அவர் நமதுபேரில் வைத்த அத்தியந்த நேசத்தினால், திருப்பீடத்தில் தினந்தோறும் நமக்காகத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுக்கிறார். முன் அவர் கல்வாரிமலைமேல் சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியும் இதுவே. இப்போது அவர் தாமே பிரதான குருவாயிருந்து, தேவ ஊழியர்களான குருக்களைக்கொண்டு எவ்விடத்திலும், எந்நேரத்திலும், அந்தப் பலியைப் புதிப்பித்துக்கொண்டு வருகிறார்.

(ங) சிலுவையின்பலி இரத்தம் சிந்தின பலியாகவும், பீடத்தின்பலி இரத்தம் சிந்தாத பலியாகவும் இருக்கிறது. ஆயினும் இந்த இரண்டு பலியும் ஒரே பலிதான். ஏனென்றால், இவ்விரு பலிகளிலேயும் சேசுநாதர்சுவாமி தானே, பிரதான குருவாகவும், பலியிடப்படும் பொருளாகவுமிருக்கிறார்.



(ச) சேசுநாதர்சுவாமி சிலுவையிலே அறையுண்டபோது நமக்காக அளவில்லாத பேறுபலன்களை அடைந்தார். இப்போது வேறு புதுப்பலன்களை சம்பாதிக்காமல், முன்னே மனிதருக்காகத் தமது பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த மட்டற்ற பேறுபலன்களையே, முக்கியமாய் திவ்விய பூசையின் வழியாக நமக்குப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டு வருகிறார்.

சிலுவைப்பலியால் உண்டான பலன் அளவற்றது: இது இப்படியிருக்க, இன்னம் அந்தப்பலியைத் திவ்வியபூசையால் புதுப்பிக்கிறதுக்குள்ள முகா[illegible]மென்ன என்று பதிதர்கள் வாதாடு[illegible]. திவ்வியபூசையினால் சர்வேசுரனுடைய மகத்துவத்துக்கு உகந்த பலியானது ஒவ்வொரு க்ஷணமும் உலகத்தின் நாலா பக்கங்களிலும் ஒப்புக்கொடுக்கப் படுகிறதே முக்கிய காரணமாகும்.

மேலும், திருச்சிலுவையினால் நமக்கு வரவேண்டிய பலன்களை அடைவதற்கு, திவ்விய பூசையே உன்னத வழிபாடாகும். பதிதர்கள் வேண்டிக்கொள்ளும்படியாகவும் ஞானஸ்நானம் பெறவும், இராப்போசனம் செய்யவும் தங்களுடைய கோவில்களுக்குப் போகிறதில்லையா? ஏன் இதெல்லாம் செய்யவேண்டும்? சேசு

நாதர்சுவாமி நமக்காக வேண்டிக்கொள்ளவில்லையா? அல்லது, அவருடைய மன்றாட்டுகளுக்கு அளவில்லாத பலனில்லையா? அவருடைய மன்றாட்டுகளினால் நமக்கு அளவில்லாத பலன் அடைந்திருக்கிறாரென்றால், நாம் ஏன் வேண்டிக்கொள்ள வேண்டும்? சேசுநாதர் நமக்காகக் குவித்துவைத்திருக்கும் பலன்களைப் பெற்றுக்கொள்ளும்படிதான். திவ்வியபூசையானது சிலுவைப்பலியைப் புதுப்பித்து, அதிலிருந்தே தனது சக்தியெல்லாம் அடைந்து வருவதால், முன் சேசுநாதர் நமக்காகப் பெற்றருளிய பலன்களை, திவ்வியபூசையின் வழியாய் அடைந்துகொள்ளுகிறோம்.

2. எப்போது சேசுநாதர்சுவாமி திவ்வியபூசையை ஸ்தாபித்தார்?

(க) மேலே சொன்னபடி, திவ்வியகர்த்தர் கடைசி இராப்போசனம் செய்து, தேவநற்கருணையை ஏற்படுத்தும்போது, அப்போஸ்தலர்களைப் பார்த்து, "இதை நமது ஞாபகத்துக்காகச் செய்யுங்கள்" என்று திருவுளம் பற்றினார். இந்த வார்த்தைகளுக்கு அர்த்தமென்னவென்றால், "இப்போது நாம் செய்ததுபோலே, அப்பத்தை நமது சரீரமாகவும், இரசத்தை நமது இரத்தமாகவும் மாற்றி, சர்வேசுரனுக்கு



நம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்க உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறோம்" என்பதே.

(உ) இந்தச் சமயத்தில்தான் சேசுநாதர்சுவாமி புது ஏற்பாட்டின் முதல் பூசைபண்ணி, தமக்குப்பின் வரும் குருக்களுக்கும் அதைப் புதுப்பிக்க வேணுமென்று கட்டளையிட்டார். திவ்வியபூசை பண்ணும் குருக்களின் வார்த்தைகளுக்கு, அப்பத்தைத் தமது திருச்சரீரமாகவும், இரசத்தைத் திரு இரத்தமாகவும் மாற்றும் அத்தியந்த பலத்தைக் கொடுத்திருக்கிறாரென்பது வேதசத்தியம்.

3. திவ்வியபூசையானது மெய்யான பலியா?

பூசைப்பலியாவது என்னவென்று கேட்டால், சர்வேசுரன் சகல வஸ்துக்களையும் படைத்து, அவைகளின்மேல் சர்வ வல்லபங்கொண்டிருக்கிறாரென்று காட்டும்பொருட்டு, நமது பஞ்சேந்திரியங்களால் உணரக்கூடிய யாதொரு யோக்கியமான பொருளை அழித்து ஒப்புக்கொடுப்பதேயாம். இப்பேர்ப்பட்ட பலியானது அதை ஒப்புக்கொடுக்க அதிகாரம் பெற்ற குருவினால் தக்க சடங்குகளுடன் நிறைவேற்றப்படவேண்டியது.

இப்போது சொன்ன காரியங்களெல்லாம் திவ்விய பூசையில் அடங்கியிருக்கின்றன.

(க) திவ்வியபூசையில் ஒப்புக்கொடுக்கப்படும் பொருளைவிட அதிக விலைமதியாத்தும் பூச்சியமுமான வஸ்து வேறொன்றுமில்லை. மனிதனாய்ப் பிறந்த சுதனாகிய சர்வேசுரனே, தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கிறார். சிலுவையில் பலியானவரும் பூசையில் பலியாகிறவரும் அவரே.

(உ) சேசுநாதர்சுவாமி அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும் இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் எழுந்தருளியிருக்கிறபடியால், பூசையில் ஒப்புக்கொடுக்கிற வஸ்துவானது பஞ்சேந்திரியங்களால் பரீக்ஷிக்கக்கூடாததாயிருக்கிறது. அப்பமும் இரசமும் பலியாகிற வஸ்துவின் பங்கல்ல. ஆனால் அதை மறைத்துக்கொண்டிருக்கின்றன என்னத்தகும்.

(ங) திவ்விய பூசைப்பலியை நிறைவேற்றுகிறவர் சர்வேசுரனாலேதானே குருவானவராக நியமிக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டவர். இவர் மனுஷாவதாரம் பண்ணின சுதனாகிய சர்வேசுரனே. இவர் நமது கண்களுக்குத் தெரியாமல் பிரசன்னமாயிருந்து, தமது பதிலாளியாகிய குருவானவரின் வாயினால் தேவ வசீகர



வார்த்தைகளை உச்சரிக்கிறார். அதினாலேதான் குருவானவர் "இது என் சரீரம், இது என் இரத்தம்" என்று உரைக்கிறார். இந்த வார்த்தைகளைக்கொண்டு நமதாண்டவரும் குருப்பிரசாதியும் சர்வேசுரனுக்கு ஓர் உன்னத பலி ஒப்புக்கொடுக்கிறார்கள். சுதனாகிய சர்வேசுரன் மனுஷாவதாரமாகி இந்தப் பலியை ஒப்புக்கொடுப்பதற்குப் பிதாவினுடைய திருச் சித்தமே காரணமானபடியால், இந்தப் பலி தமக்குப் பிரியமில்லை என்று அவர் தள்ளிப்போடுவது கூடாதகாரியம். மேலும் பலியாகிறவர் யார்? மனிதனாய் அவதரித்த சுதனல்லவா? சுதனுக்கும் பிதாவுக்கும் ஒரே மனதுமாத்திரமிருக்கிறபடியால், திவ்விய பூசைப்பலியானது சர்வேசுரனுக்கு எப்போதும் மகா உகந்தபலியாயிருக்குமென்பது நிச்சயம்.

(ச) ஆனால் சேசுநாதர்சுவாமி சர்வேசுரனாயிருந்து, அவர் எப்படி சர்வேசுரனுக்குத் தம்மைப்பலியாக ஒப்புக்கொடுக்கக்கூடும்? பலியாகிறவரும் பலியை ஏற்றுக்கொள்ளுகிறவரும் அவரேயல்லவா என்று சிலர் கேட்பார்களாக்கும். மெய்தான். சேசுநாதர்சுவாமியிடத்தில் ஒரே ஆள்தான் உண்டு. ஆனால் அவருக்கு இரண்டு சுபாவங்களிருக்கின்றன. தேவமாதாவின் திரு உத

ரத்தில் உற்பவித்துப் பிறந்த மனிதனாகியமட்டும் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கிறார். பிதா இஸ்பிரீத்து சாந்துவோடு ஒரே சர்வேசுரனாகியமட்டும் இந்தத் திருப்பலியை அவரே ஏற்றுக்கொள்ளுகிறார்.

4. எதிலே பலியானது அடங்கியிருக்கிறது?

(க) மெய்யான பலியாவதற்கு யாதொரு யோக்கியமான பொருளைக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பது மாத்திரம் போதுமென்று சில வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டின் காலத்திலே மிருகங்களையும் பறவைகளையுங் கொன்று, பால் இரசம் முதலியவைகளைப் பீடத்தின்மேல் ஊற்றி, பலியாக ஒப்புக்கொடுத்த வஸ்துக்களை எல்லாம் முழுதுமென்கிலும் அல்லது அவைகளின் ஒரு பங்கையென்கிலும் அழித்து வந்தார்கள். இப்பேர்ப்பட்ட மாற்றம் சர்வேசுரனுக்குச் சகல ஜீவராசிகளின் உயிரின்மேலுள்ள கர்த்தத்துவத்தைத் துலக்கமாய்க் காட்டினது.

(உ) புது ஏற்பாட்டைச் சேர்ந்த பலியிலும் இந்த மாற்றமுண்டோ? சேசுநாதர்சுவாமி சிலுவையிலே பலியானபோது, மெய்யாகவே தமது திரு



இரத்தத்தைச் சிந்தி மரித்தாரென்பது பரிஷ்காரமே. இனி அவர் திரும்பவும் மரிப்பது கூடாத காரியமானபோதிலும், திவ்விய பூசையிலும் சாவுக்கொத்த ஓர் மாற்றம் உண்டாகிறது.

இதுவிஷயத்தில் சிலர் சொல்லுகிறதாவது: திவ்விய பூசையிலே குருவானவர் தேவ வசீகர வார்த்தைகளைச் சொன்னவுடனே, இந்த வார்த்தைகளுக்குள்ள பெலத்தினால் நமதாண்டவருடைய திருச்சரீரம் ஒரு பக்கத்திலும் அவருடைய திரு இரத்தம் ஒரு பக்கத்திலும் பிரிந்தாற்போலிருக்கிறது. இரத்தமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்திருப்பது மரணத்துக்கு அடையாளமானதால், திவ்விய பூசையிலே சாவுக்கொத்த மாற்றமுண்டாகிறதென்று உரைக்கிறார்கள்.

ஆனால் திவ்விய பூசையானது மெய்யான பலியென்று காட்டுவதற்கு இது போதாதெனத் தோன்றுகிறது. தேவ வசீகர வார்த்தை [illegible]னால் திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் பிரிப்பதானது சிலுவைப் பலியை ஞாபகப்படுத்துவதற்கு அவசரமான அடையாளமானபடியால், இது எப்போதும் திவ்விய பூசைக்கு முழுதும் அவசரமான பங்காயிருக்கும். ஆனால் திரு இரத்தமானது மெய்யாகவே திருச் சரீரத்தைவிட்டுப் பிரியக்கூடாததி

ஞலே, மெய்யான பலிக்கு வேண்டிய மாற்றம் பூசையில் உண்டாகிறதென்று வேறுவிதமாய்க் காண்பிக்கவேண்டியிருக்கிறது.

(௩.) தேவவசீகர வார்த்தைகளினால் உண்டாகிற அதிசயமான மாற்றமென்ன? பிதாவாகிய சர்வேசுரனின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் நம தாண்டவரிடத்தில் என்ன மோக்ஷ பிரதாப சோபனம் விளங்குகிறது! அவர் சர்வவல்லபரான தமது பிதாவுக்கு நிகரானவராயிருக்கிறார். ஆனால் தேவவசீகர வார்த்தைகள் சொன்னவுடனே, வாக்குக்கெட்டாத மாற்றமாக, தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்ளுகிறார். உயிருதலாயில்லாதவரைப்போலே, அப்ப இரசத்தின் குணங்களுக்குள்ளே எழுந்தருளிவந்து, தமது ஐம்புலன்களை உபயோகிக்கக்கூடாமல், மனுஷருக்குத் தம்மை அன்னபானமாகக் கையளிக்கிறார். தேவநற்கருணைப் பெட்டிக்குள்ளே ஓர் கைதியைப்போல் அடைக்கப்பட்டு நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். நமது கண்ணுக்குத் தென்படாமல், மனிதர்கள் எப்படி நடத்தினாலும் யாதொரு அசைவுமில்லாமலிருக்கிறார். இப்பேர்ப்பட்ட மாற்றம் சாவுக்கொத்த மாற்றமல்லவா? இந்த ஆச்சரியத்துக்குரிய மாற்றம் நிறைவேறுகிற பூசைப்பலியா



னது மெய்யான பலியல்லவென்று சொல்லக்கூடியதார்?

(௪) குருவானவர் திவ்வியநன்மையை உட்கொள்ளுவது திவ்வியபூசை மெய்யான பலியாவதற்கு அவசரமா? குருவானவர் பூசை செய்யும்போதெல்லாம் தேவநற்கருணை உட்கொள்ளுவது அவசரமென்றாலும் அப்படி அவர் வாங்காத போதிலும், பலியானது நிறைவேறியிருக்கும். ஏனென்றால் பலி நிறைவேறுகிற நேரம் தேவவசீகர வார்த்தைகள் சொல்லுகிற நேரமாகும். ஆதலால்தான் குருவானவர் தேவவசீகர வார்த்தைகள் சொல்லும்போது சேசுநாதர்சுவாமியின் பேரால் உச்சரிக்கிறார். திவ்வியநன்மை உட்கொள்ளும்போது, தமது பேரால் அதை நிறைவேற்றுகிறார்.

(௫) நமதாண்டவர் மனிதருக்கு அன்னபானமாகும்படி தேவநற்கருணையில் எழுந்தருளி வருகிறபடியால், குருவானவர் அதை உட்கொண்டுதான் பூசையை முடிக்கவேணுமென்று கட்டளையிட்டிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் நடந்தேறின சில பலிகளில், ஜனங்களும் பலியான பொருளில் ஓர் பங்கு சாப்பிடவேண்டியிருந்தது. திவ்விய பூசையிலும்

இதுவே நடந்தேறிவருகிறது. பூசைகாண்கிற கிறீஸ்துவர்கள் இஷ்டப்பிரசாதத்தோடிருந்தால், தக்க ஆயத்தத்துடன் திவ்விய நன்மை வாங்கவேணுமென்பது சேசுநாதர்சுவாமிக்குள்ள அத்தியந்த ஆசை.

5. என்ன முகாந்திரத்துக்காக திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கிறோம்?

பழைய ஏற்பாட்டில் அநேக பூசைப் பலிகள் இருந்தன. (க) தேவ ஆராதனைப் பலியும், (உ) உபகாரங்களுக்கு நன்றியறிதல் பலியும், (ந) பாவத்துக்குப் பரிகாரப் பலியும், (ச) வேண்டிய நன்மைகளை அடைவதற்கு மன்றாட்டுப்பலியும், இதுமுதலான பலிகள் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டன. இவைகளெல்லாம் சேசுநாதர்சுவாமி பிற்காலத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டியிருந்த உத்தம பலிக்குக் குறியும் அடையாளமுமாயிருந்தன. ஆனதால் சிலுவைப்பலி நிறைவேறினபிறகு, மற்றப் பலிகள் நிறுத்தித் தள்ளப்பட்டன. இனிமேல் அளவில்லாத பலனுள்ள திவ்விய பூசைப் பலியொன்றே, தெய்வத்துக்குப் பிரியமான காணிக்கையாகுமேயொழிய, மற்றதெல்லாம் ஆகாது. உலோக முடிவுபரியந்தம் மேல்சொன்ன நாலு கருத்துக்களுக்காகவும் சிலுவைப்பலியைப் புதுப்-



பித்துவருகிற திவ்விய பூசைமாத்திரம் ஒப்புக்கொடுக்கப்படும்.

6. யாருக்காக திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கிறோம்?

முன் சொன்னதுபோல சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகருக்குமாத்திரம் திவ்விய பூசையை ஆராதனை முயற்சியாக ஒப்புக்கொடுத்தாலும், மோக்ஷத்திலும், உத்தரிக்கிற ஸ்தலத்திலும், பூமியிலுமிருக்கிற திருச்சபையாருடைய நன்மைக்காகவும் திவ்விய பூசை பண்ணலாம்.

(க) தேவமாதாவுக்கும் மோக்ஷவாசிகளுக்கும் ஒருபோதும் பூசை ஒப்புக்கொடுக்கிறதில்லையென்றாலும், ஆண்டவர் அவர்களுக்குத் தந்தருளின அபூர்வமான வரப்பிரசாதங்களுக்குத் தோத்திரமாகவும், அவர்கள் நமக்காகப் பரிந்துபேசி நாம் கேட்கிற சகாயங்களைத் தாராளமாய் அடைந்தருளும்படியாகவும், அவர்கள் பேரால் சர்வேசுரனுக்குப் பூசை ஒப்புக்கொடுக்கிறோம்.

(உ) உத்தரிக்கிற ஆத்துமாக்களின் அநித்திய ஆக்கினையை நிவர்த்திபண்ணும்படி திவ்விய பூசையை மரித்தவர்களுக்காக ஒப்புக்கொடுக்-

கிறது, திருச்சபையின் பாரம்பரையான வழக்கம். மற்றச் செபதப தர்மகிருத்தியங்களைப் பார்க்க, திவ்விய பூசையினால் அந்த ஆத்துமாக்களுக்கு அதிக உதவி ஆறுதல் வருகிறதென்பது தப்பாத சத்தியம்.

(௨) பூமியிலிருக்கிற சகல விசுவாசிகளுக்காகவும், குருக்கள் நாடோறும் பூசைசெய்து, அவர்கள் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் வேண்டிய நன்மைகளுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்கள். சபிக்கப்பட்டவர்கள், பதிதர், அஞ்ஞானிகள் முதலியவர்கள் திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிறதினால், இதில் அவர்களுக்கு யாதொரு பங்கும் கிடையாது.

7. திவ்வியபூசையின் பலன் எப்பேர்ப்பட்டது?

பூசையினால் வரும் அளவில்லாத பலனை நமக்கு அறிவிக்கும்படி ஓர் அர்ச்சியசிஷ்டவர் உரைத்த வார்த்தைகளாவன:—"சகல மனிதர்களும் நிறைவேற்றக்கூடிய நற்கிரியைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கூட்டினாலும், ஒரே ஒரு பூசையின் பலன் அவையெல்லாம் மேலிட்டுப் போகும். ஏனெனில் மனிதர்களுடைய நற்கிரியைகள் மட்டுள்ளவைகளாயிருக்க, பூசையா



னது அளவற்ற சர்வேசுரனுடைய கிரியையாகின்றது.—அவருடைய கண்முன்பாக வேதசாட்சியின் மரணம் முதலாய் பூசைப்பலனுக்கெட்டாது. வேதசாட்சியாகும்போது, ஓர் மனிதன் கடவுளுக்குப் பலியாகிறான். பூசையிலோவெனில், கடவுள் மனிதனுக்காகப் பலியாகிறார்."

சேசுக்கிறீஸ்துநாதரே பூசைக்குப் பிரதான குருவாகவும், பலியின் பொருளாகவுமிருப்பதால், அதின் பலன் அளவற்றதே. ஆயினும் பூசையினாலே மனிதனுக்குக் கிடைக்கிற பலன் மட்டுக்குள் அடங்கியதாயிருக்கவேணுமென்பது சர்வேசுரனுடைய சித்தம். இது இப்படி இல்லாவிட்டால், உயிரோடிருக்கிற சகல மனிதருக்கும், உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படுகிற சகல ஆத்துமங்களுக்கும் தேவையானதெல்லாம் அடைந்துகொடுக்க ஒரே ஒரு பூசை போதுமாயிருக்கும். அவர்களுக்காகத் திரும்பவும் பூசை செய்யத் தேவை இராது.

(௩) பூசை காண்கிறவர்கள் தங்கள் தங்கள் ஆயத்தத்துக்குத் தக்கபடி, பூசைப் பலனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால் ஒரே ஒருவன் பூசை கண்டாலும் சரி, அநேகர் ஒன்றாய்க்கூடி

பூசை கண்டாலும் சரி, அவர்கள் எல்லோரும் அதே அயத்தத்தோடிருந்தால், அதே பலனைத் தனித்தனியே பெற்றுக்கொள்ளுவார்களென்பது நிச்சயம்.

(உ.) ஒருவனுக்காக மாத்திரம் ஒரு பூசையை ஒப்புக்கொடுக்கையில், அவனுக்குக் கிடைக்கிற பலனுக்கும், அநேகம் பேருக்காக ஒரே பூசையை ஒப்புக்கொடுக்கும்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கிற பலனுக்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டோ? பல பேர்போன சாஸ்திரிகள் வித்தியாசமில்லையென்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறதாவது: பூசைப்பலியானது அளவில்லாத பலனுள்ளதினாலே, எப்படி சமுத்திரத்தின் தண்ணீர் வற்றிப்போகிறதில்லையோ, அப்படியே அதை எத்தனைக் கோடிப்பேர்களுக்காக ஒப்புக்கொடுத்தாலும், அதின் பலன் தண்ணீரிலேதானே ஒருபோதும் குறைந்துபோகாது என்பது தப்பாத சத்தியம். ஆனால் பூசையை யாருக்காக ஒப்புக்கொடுக்கிறோமோ, அவர்கள் ஆத்துமத்தின் நிலைக்கும், அவசரங்களுக்கும் தக்கபடி பூசைப்பலனை அதிகமாயும் குறைவாயும் சர்வேசுரன் அளித்தருளுகிறார். ஆகையினாலே ஒரு பூசையை ஒரே ஆத்துமத்துக்கு ஒப்புக்கொடுத்தா



லும் சரி, அநேக ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுத்தாலும் சரி, எல்லோரும் அதே திட்டமான பலன்களை அடைவதற்கு விக்கினமில்லை என்று எண்ணுகிறார்கள்.

(௩.) இது ஓர் அபிப்பிராயமேயொழிய முழுதும் நிச்சயமான காரியமில்லாததாலும், வேறு அநேக கனத்த முகாந்தரங்களினிமித்தமும், ஒருவன் பூசைக்குப் பணம் கொடுத்திருந்தால், அவனுக்காக மாத்திரம் முதல் கருத்துவைத்து இந்தப் பூசையை ஒப்புக்கொடுக்கவேண்டியது. குருவானவர்கள் அநேக பூசைகளுக்காகப் பணத்தை வாங்கிக்கொண்டு, ஒரே ஒரு பூசை செய்து சரிக்கட்டலாகாதென்று திருச்சபை வெகு கண்டிப்பாய்க் கற்பித்திருக்கிறது. இந்தக் கட்டளையை மீறுகிறவர்கள் சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், வாங்கின பணத்துக்காகவும் உத்தரிக்கவேண்டியது. ஆனால் ஒரு விசேஷ திருநாளில் அநேகம் பேர் மனப்பூரணமாய் அதே பூசைக்காகப் பணங் கொடுத்தால், அவர்கள் கருத்தின்படி ஒரே பூசை செய்கிறது குற்றமில்லை.

(௪) அர்ச்சிக்கப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு வியாபாரம்பண்ணுவது பாவமானபடியால், பூசைக்கென்று பணம் வாங்குவது தேவ அபோகபா

கும். விசுவாசிகளுடைய நன்மைக்காக உழைக்கிற குருவானவர் தன்னுடைய சவரட்சணைக்காக மாத்திரம் பூசைப்பணம் பெற்றுக்கொள்ளலாமென்று திருச்சபை உத்தரவு அளிக்கிறது. ஆகையால் ஒரு பூசை செய்வதற்கு மேற்றிராணியாரால் குறிக்கப்பட்ட தொகைக்குமேல் அதிகமாய்க் கேட்கக்கூடாதென்பது ஒழுங்கு.— குருவானவர் பணம் வாங்காமல் பலபேருக்காகத் தான் பூசை பண்ணுவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தால், அவர் எல்லோருக்காகவும் ஒரே பூசை ஒப்புக்கொடுப்பதற்கு விக்கினமில்லை.

8. பூசைக்காக கிறிஸ்துவர்கள் கொடுக்கும் பணவிஷயமாய் அர்ச். பாப்பானவர் கண்டிப்பான சில கற்பனைகள் செய்திருக்கிறார். அவைகளை அறிந்திருக்கிறது அவசியம்.—

(க) குருவானவர் எவருக்காகப் பணம் வாங்குகிறாரோ அவர்களுக்காக ஒரு மாதத்துக்குள்ளே அவ்விதமே பூசை செய்யவேண்டியது. அல்லது அந்தக் கெடுவுக்குள் மற்றவர்களைக்கொண்டு பூசை செய்விக்க வேண்டியது. இது கண்டிப்பான கட்டளை. ஆகையால் உபதேசியாவது, வேறெந்த ஆளாவது பூசைக்குப் பணம் வாங்கினபின், உடனே அதைக் கொடுக்காமல் ஒரு மாதத்துக்



குள் பூசை செய்ய முடியாத விதமாய், அந்தப் பணத்தைத் தன்னிடம் வைத்துக்கொண்டால், இந்தக் கட்டளையை மீறி, குற்றவாளியாகிறான்.

(உ) ஆனால் பூசைப் பணத்தை முழுதுமே அபகரித்துக்கொள்ளுகிறவன் இன்னம் அதிக பெரிய குற்றவாளியாகிறான். அப்பேர்ப்பட்டவன் பணங்கொடுத்தவனுக்குக் கனமான ஞான நஷ்டம் வருவிப்பதினாலே, நீதிக்கு விரோதமான சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறான். இந்தப் பாவத்துக்குப் பொறுத்தல் அடைவதற்கு, ஒன்றில் கேட்ட பூசையைச் செய்விக்கவேணும். அல்லது பணத்தையே திரும்பக் கொடுத்துவிடவேண்டியது.

(ங) பூசைக்காகப் பணம் சேகரிப்பவன் பணத்தை முழுதும் பூசைக்குக் கொடுத்துவிடவேண்டியது. எத்தனை பூசைகளுக்குப் பணம் வாங்கினானோ, அத்தனை பூசைகள் சரியாய்ச் செய்விக்கப்பண்ணி, பெற்றுக்கொண்ட பணத்தில் எதாகிலும் வைத்துக்கொள்வானாகில், ஓர் சாவான பாவம் கட்டிக்கொள்ளுவதுமல்லாமல், அர்ச். பாப்பானவரால் மாத்திரம் நிவர்த்திக்கக்கூடிய சாபத்துக்கும் உள்ளாகிறான்.

(௪) பூசைக்கென்று பணத்தைச் சேகரித்து, வேறொரு மேற்றிராசனத்திலுள்ள குருவானவரைக்கொண்டு பூசைகளைச் செய்விக்க விரும்புகிறவர்கள், அந்தக் குருவானவருடைய மேற்றிராணியார் வழியாகப் பணத்தை அனுப்ப வேண்டியது; அல்லது அந்தப் பணத்தை இந்தக் குருவானவருக்குக் கொடுக்க மேற்சொன்ன மேற்றிராணியாரிடம் உத்தரவாவது பெற வேண்டியது. இல்லாவிட்டால் பணத்தில் ஒரு பைசா முதலாய்த் தங்களுக்கென்று வைத்துக் கொள்ளாவிட்டாலும், சாவான பாவம் கட்டிக் கொள்ளுகிறார்கள்.

9. பூசையின் பலன்கள் எப்படிப் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன?

சேசுநாதர்சுவாமி திருச்சபைக்குத் தலைவராயிருப்பதால், அவரே பிரதான குருவாயிருந்து, தமது பேரால் சர்வேசுரனுக்குப் பூசைப்பலியை ஒப்புக்கொடுக்கிறார். மேலும், திருச்சபையின் பேராலும், பூசை செய்கிற குருவானவர் பேராலும், அதைக் காண்கிறவர்கள் பேராலும், எப்போதும் பூசை ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

இப்படி ஒப்புக்கொடுக்கப்பட்ட பூசையினால் மூன்றுவித பலன் உண்டாகிறது.



(க) இறந்துபோன விசுவாசிகளுக்கும், உயிரோடிருக்கிற விசுவாசிகளுக்கும், சகல மனிதருடைய இரட்சணியத்துக்கும் உதவுகிற பலன் பொதுப்பலன் எனப்படும். பூசைக்கு உதவி செய்கிறவர்களும், அதைக் காண்கிறவர்களும், முக்கியமான பங்கு அடைந்துகொள்ளுகிறார்கள்.

(உ) பூசை யாருக்காகச் செய்யப்படுகிறதோ, அவர்களுக்குக் கிடைக்கும் பலன் விசேஷபலன் எனப்படும். இன்னார் இன்னார் என்று சில பேர்களைக் குறித்துக்கொண்டு, அவர்கள் விசேஷபலனை அடையும்பொருட்டு, குருவானவர் அவர்களுக்காகத் திவ்விய பூசை செய்யலாமென்பது விசுவாசத்துக்குச் சம்பந்தப்பட்ட சத்தியமாகும். பூசை எவர்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படுமோ, அவர்கள் நல்ல கிறீஸ்துவர்களாய் நடக்க அநுக்கிரகப்பிரசாதங்களை அகத்தியமாய் அடைந்துகொள்ளுவார்கள்.—சாவான பாவத்தோடிருந்தால், பூசையினிமித்தம் பாவதோஷம் நீங்கிப்போகாது; ஆனால் இஷ்டப்பிரசாதத்தைத் திரும்பவும் அடைந்துகொள்ளுவதற்கு விசேஷ உதவி அநுக்கிரகப்பிரசாதங்கள் அளிக்கப்படும். இஷ்டப்பிரசாதத்-

தேர்டிருந்தால், அவர்களுடைய அநித்திய ஆக்கினை குறைந்துபோகுமென்பது நிச்சயம். மேலும் பூசையினால் இலௌகிக நன்மைகளும், நமது ஆத்தும இரட்சணியத்துக்கு உதவும் அளவாகக் கொடுக்கப்படும்.

(௩.) இவ்வளவு அதி உன்னத பூசைப்பலியைத் தக்கவிதமாய் ஒப்புக்கொடுக்கும் குருவானவருக்கும் சிறப்புபலன்கள் அதிகரிக்கும். இது சொந்த பலன் என்னப்படும். இந்தப் பலனை அவர் மற்றவர்களுக்குக் கொடுக்கமுடியாது. தனக்குக் கிடைக்கிற மன்றாட்டுப் பலனையும், பரிகாரப் பலனையும், புறத்தியாருக்காக ஒப்புக் கொடுக்கலாம்; ஆனால் இந்தப் பலன்களைக் கொடுப்பதற்குப் பணம் வாங்கவேகூடாது.

10. திவ்வியபூசை காண்கிறதினால் வரும் பிரயோசனம் என்ன?

திவ்விய பூசையானது அளவில்லாத மாட்சிமையுள்ளதும், அதிசயத்துக்குரிய நன்மைகளையுடையதுமாயிருக்கிறபடியால், பூசை காண்கிறதைவிட கிறீஸ்துவனுக்கு அதிக மேலான நன்மை ஒன்றுமில்லை.

(௧) திவ்விய பூசையினால் சர்வேசுரனுடைய மட்டற்ற மகத்துவத்துக்கு எல்லாத்தையும்விட



அதிக யோக்கியமான ஆராதனை தோத்திரம் செலுத்துவதுமல்லாமல், முக்கியமாய் அந்நேரத்திலே தேவநற்கருணை உட்கொள்ளுவோமானால், தேவ இஷ்டப்பிரசாதமும் ஞான சீவியமும் நம்மிடத்தில் அதிகரிக்கச் செய்யவும்; நம்மை சேசுக்கிறீஸ்துநாதரோடு அன்னியோந்நியமாய் ஒன்றிக்கவும், ஆசாபாசங்களின் அகோரத்தைத் தணிக்கவும், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு ஆறுதல் வருவிக்கவும், நமக்கும் நமக்குப் பிரியமானவர்களுக்கும், அநேக ஏராளமான நன்மைகளைப் பெறுவிக்கவும், அதைவிட மேலான வழிபாடு வேறொன்றுமில்லை.

(௨) பத்தியுள்ள அநேகர் தாங்கள் செய்யவேண்டியதைச் சரியாய் ஒழுங்குப்படுத்துவதால், தங்கள் கடமைகளுக்கு யாதொரு விக்கினம் வராமல், ஒவ்வொரு நாளும் பூசை காணவும் தேவநன்மை வாங்கவும் போதுமான நேரம் அவர்களுக்குக் கிடைக்கிறது.

(௩) இப்படியாய்த் தங்களால் கூடிய பத்தி சுறுசுறுப்போடு பூசை காண்பதினால், தாங்கள் தினம் செய்யவேண்டிய வேலைகளை அதிகப் பலனுள்ளதாக்குவதுமன்றி, தங்களுக்கு வருகிற கஸ்தி

தூர்ப்பங்களாச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டிய வரப்பிரசாதமும் அடைந்துகொள்ளுகிறார்கள்.

(ச) கிறீஸ்துநாதர் அநுசாரம் சொல்வதுபோல், "வாக்குக்கெட்டாத இப்படிக்கொத்த கொடையைக் கவனமாயெண்ணாமலிருப்பதும், வாடிக்கையினிமித்தம் கவனக் குறைவாய் அதைச் சட்டைபண்ணாமலிருப்பதும், மனிதனுடைய குருட்டாட்டமும் கன்னெஞ்சத்தனமுந்தானல்லோ? இந்தப் பரம பூசை உலகத்தில் ஓரேயொரு இடத்தில் மாத்திரம் நிறைவேறி, ஓரேயொரு குருவானவராலே மாத்திரம் செய்யப்படுமேயாகில், அந்தத் தெய்வீக பரம ரகசியம் நிறைவேறுகிறதைப் பார்க்கிறதற்கு அந்த ஸ்தலத்துக்கும் அந்தக் குருவானவரிடத்திலும் மனிதர் எம்மாத்திரம் ஆவலோடு ஓடி வருவார்கள்!" (IV. 1.)

11. திவ்விய பூசைக்கும் தேவநற்கருணைக்குமுள்ள வித்தியாசமென்ன?

(க) திவ்விய பூசை தேவதிரவிய அநுமானமல்ல. தேவநற்கருணை தனக்குரிய பலத்தினாலே, இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறதுமல்லாமல், அற்பப்பாவங்களைப் பொறுக்கக் கூடும்.



திவ்வியபூசை அப்படியல்ல. ஆனால் நமது இரட்சணியத்துக்குவேண்டிய வரப்பிரசாதங்களைச் சர்வேசுரனிடத்திலே பெற்றுக்கொள்ளுவதற்கு, பூசையானது அளவில்லாத பலமுள்ள மன்றாட்டாகிறது. இந்த அளவில்லாத பலன் ஒவ்வொருவனுடைய ஞான ஸ்திதிக்குத் தக்கதும், சர்வேசுரன் அவன்பேரிலேவைத்த இஷ்டம் இரக்கத்துக்குத் தக்கதும், மட்டோடு அளிக்கப்படுகின்றது.

(உ) திவ்விய பூசை அநேகருக்குப் பிரயோசனமாயிருக்கும். தேவநற்கருணை அதை உட்கொள்ளுகிறவர்களுக்குமாத்திரம் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கும்.

(ங) திவ்விய பூசையானது தேவ ஆராதனை முயற்சியாகவும், தேவநற்கருணை மனிதருடைய ஞான போசனமாகவும் முக்கியமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(ச) திவ்விய பூசை சற்றுநேரத்துக்குள்ளாக முடிந்துபோகிறது. தேவநற்கருணை திவ்விய பூசை முடிந்தபிற்பாடு முதலாய் நிலைத்திருக்கிறது. அப்பத்தின் குணங்கள் எவ்வளவுநாள் கெடாமலிருக்குமோ, அவ்வளவு நாளும் சேசுநாதர்சுவாமி அதில் எழுந்தருளியிருப்பார்.

அந்தக் குணங்கள் அழிந்துபோனவுடனே, அவரும் நீங்கிப்போவார். தேவ நன்மை வாங்கினவன் நெஞ்சிலே, சேசுநாதர்சுவாமி தமது தேவசுபாவத்தோடும் மனுஷசுபாவத்தோடும் சற்றுநேரம் பிரசன்னராயிருக்கிறார். குணங்கள் அழிந்தபின், மனுஷ சுபாவம் நீங்கிப்போகிறதென்றாலும், அவன் சாவான பாவம் கட்டிக்கொள்ளாமட்டும், திவ்விய கர்த்தர் இஷ்டப்பிரசாதத்தினாலே அவனிடத்திலே வாசம்பண்ணிக்கொண்டிருப்பார்.

12. திவ்விய பூசையை நன்றாய்க் காண்கிறதெப்படி?

திவ்விய பூசையைக்கொண்டு நமக்கு வரவேண்டிய பிரயோசனமெல்லாம் அடையும்பொருட்டு, கவனத்தோடும் பக்தி பற்றுதலோடும் வேண்டிக்கொள்ளவேணும்.

அதற்கு உத்தம வழியென்னவென்றால்:—
(க) துவக்கத்தில் நமது கருத்தைக் குருவானவர் கருத்தோடே ஒன்றித்து, மேற்சொன்ன நாலு முகாந்தரங்களுக்காகப் பூசையை ஒப்புக்கொடுக்கிறது.

(உ) திவ்விய பூசையிலே நிறைவேறும் சடங்குகளையும் செபங்களையும் பக்தி உருக்கத்து



டன் கவனித்து, குருவானவரோடுகூட ஒரே மனமாய் இருக்கிறது.

(ங) அப்படிச் செய்யக்கூடாதானால் செபமாலை அல்லது மற்றச் செபங்களைப் பூசைநேரத்தில் ஜெபிக்கலாம்.

(ச) சேசுநாதசுவாமியின் மிகுந்த ஆசைக்கு இணங்கி, திவ்விய பூசை காணும்போதெல்லாம் திவ்விய நன்மை வாங்குகிறது உத்தம வழக்கம். அதற்கு விக்கினமிருந்தால், ஆசை நன்மையாகிலும் மகா விசுவாச சிநேகத்தோடு வாங்கவேணும்.

13. தேவநற்கருணையை அடிக்கடி சந்திப்பதைப்பற்றி.

(க) திவ்விய பூசை முடிந்தபின் சேசுநாதர்சுவாமி திருக்குணங்களுக்குள்ளே தமது திருச்சரீரத்தோடும், ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் நிலைத்திருப்பதற்கு முகாந்தரமென்னவென்றால், மோட்சத்துக்கு எழுந்தருளிப்போயிருந்தபோதிலும், அளவற்ற நேசத்தோடு சிநேகித்த மனுஷர் மத்தியில் வாசம்பண்ணவும், நம்முடைய சந்தோஷங்களையும் துன்ப துயரங்களையும் கேட்டு, நம்முடைய மன்றாட்டுக்களை ஏற்றுக்கொள்ளவும்;—அவஸ்தைக்காரர் மரிக்

குழுன் நோயாளியிருந்தாலும் அவர்களிருதயத்தில் வந்து, இவ்வுலோகத்திலிருந்து மறு உலோகத்துக்குச் செய்யும் பிரயாணத்தில் அவர்களுக்கு உதவியாயிருக்கவும், தம்மை அவர்களுக்குத் திவ்விய போசனமாகக் கொடுத்து, நித்திய பாக்கியத்தைத் அவர்களுக்கு உறுதிப்படுத்தும்படியாகவும்,—சிநேக சிறைச்சாலையாகிய திவ்வியநற்கருணைப் பெட்டியில் இரவும் பகலும் அளவிறந்த தாழ்ச்சியோடு வீற்றிருக்கச் சித்தமாயிருக்கிறார்.

(உ) சேசுநாதர்சுவாமி நமது ஆத்தும சரீர நன்மைக்காகவே தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கச் சித்தமானதால், அவரை அடிக்கடி போய் சந்திப்பது கிரமம். சிநேகத்துக்குச் சிநேகம் காட்டுவது அன்பின் கடமை, நன்றிக்கு பிரதி நன்றி காட்டுவது நியாயம். நோயாளி வைத்தியனிடத்துக்கும், தரித்திரன் இரக்கமுள்ள தனவானிடமும் போவது சகஜமே.

நமக்காக இராப்பகலாய்க் காத்திருந்து, சகலராலும் புறக்கணித்துக் கைவிடப்பட்டவரைப் போல, தனியே வசிக்கும் நமது ஆண்டவரைப் போய் சந்தியாமல் விட்டுவிடுவது மகா நன்றிகெட்டதனமாயிருக்கும். ஆகையால் கூடுமானால் நாள்



தோறும் ஒருவிசையாகிலும் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுநாதர்சுவாமியைச் சந்திப்பது பத்திமான் கிறீஸ்துவர்களின் வழக்கம்.

(௩) இவ்விதமாக சேசுநாதரைச் சந்திக்கப் போகும்போது, அவரை ஆராதித்து வணங்கினபின், நமது நன்றிகெட்டதனத்துக்காகப் பொறுத்தல் கேட்டு, அவிசுவாசிகளாலும், விசுவாசிகளாலும் இந்தப் பரம தேவநற்கருணைக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்காகப் பரிகாரம் செய்து, நமது ஆத்தும சரீர துன்ப வருத்தங்களை அவருக்குத் தெரியப்படுத்தி, நமக்காகவும், பிறருக்காகவும், விசேஷமாய் சத்தியதிருச்சபைக்காகவும் வேண்டிக்கொள்ளத்தகும். தேவநற்கருணையிலிருக்கும் ஆண்டவருக்கு மனுஷரோடு ஒன்றித்திருக்க அணைகடந்த ஆவலிருப்பதால், அவரைச் சந்திக்கும்போது, ஞானவிதமாய் அவர் நமது இருதயத்தில் எழுந்தருளி வரும்படி மன்றாடி ஆசைநன்மை வாங்காமல், தேவநற்கருணை சன்னதியை விட்டுப் போவது நன்றன்று.

14. தேவநற்கருணைக்குச் செய்யவேண்டிய வணக்கமென்ன?

(க) பூசை நேரத்திலும், பூசை முடிந்தபின்னும், பீடத்துப் பெட்டிக்குள் தேவநற்கருணை வைத்திருந்தால் சேசுநாதர்சுவாமி மெய்யாகவே அதில் எழுந்தருளியிருக்கிறதினாலே, நாம் அவருக்குத் தேவ ஆராதனை நமஸ்காரஞ் செலுத்தவேண்டியது.

(உ) தேவநற்கருணையானது, பாடுபட்ட சுரூபத்தைப்போல, சேசுநாதர்சுவாமியைக் குறிக்கும் வெறும் அடையாளமல்ல. அதில் அவருடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் திரு ஆத்துமமும் தேவசுபாவமும் மெய்யாகவே அடங்கியிருக்கிறது. தேவநற்கருணையிலே எழுந்தருளியிருக்கிறவர் அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலே நின்று பிறந்து, நமக்காகச் சிலுவையில் அறையுண்டு, மரித்து, உயிர்த்து, பரலோகத்துக்கு ஆரோகணமாகி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரனே. ஆகையால் அவருக்குத் தேவ ஆராதனை செலுத்துகிறது நியாயமே.



## எட்டாம் பிரிவு.

## பச்சாத்தாபத்தின் பேரில்.

1. பச்சாத்தாபம் என்னும் வார்த்தையில், "பச்சாத்" என்பதற்கு "பிற்பாடு" என்றும், "தாபம்" என்பதற்கு "மனக்கஸ்தி, மனஸ்தாபம்" என்றும் அர்த்தம். ஆகையால் பச்சாத்தாபமானது பாவங் கட்டிக்கொண்டபின் வருகிற மனக்கஸ்தியாகும். அதாவது, செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவர்களுக்குப் பொறுத்தல் கொடுக்கிற தேவதிரவிய அநுமானம் பச்சாத்தாபமென்று சொல்லப்படும்.

**பச்சாத்தாபம் என்றால் என்ன?** ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புத் தருகிற தேவதிரவிய அநுமானம்.

**2. பச்சாத்தாபமென்கிற தேவதிரவிய அநுமானத்தை ஏற்படுத்தினதார்?**

(க) **சேசுநாதர்சுவாமி மரணம்** அடைகிறதற்கு முன், அர்ச். இராயப்பருக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அளவற்ற வல்லமையைத் தந்தருளினார். (மத். XVI. 18. XVIII. 18.)

அதில் பாவங்களைப் பொறுக்கும் அதிகாரம் அடங்கியிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. — மீளவும் அவர் உயிர்த்த பிறகு, பாவங்களைப் பொறுக்கத் தமக்குள்ள வல்லமையை அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்க சித்தமானார். அவர்கள்மேல் தமது ஆவியை விட்டு, "பிதா நம்மை அனுப்பினதுபோலே, நாமும் உங்களை அனுப்புகிறோம். நீங்கள் யார் யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். யார் யாருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படாது" என்று திருவுளம்பற்றினார். (அரு. XX. 21. 23.)

(௨) சகல பாவங்களையும் பொறுக்க அப்போஸ்தலர்களுக்கும் அவர்களுக்குப் பின்வந்த மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்கும் வல்லமை உண்டென்பது, திருச்சபையில் ஆதி துவக்கி இந்நாள் வரையும் வழங்கிவருகிற விசுவாச சத்தியம். பூர்விக காலத்தில் சில பதிதர் திருச்சபைக்கு எந்தச் சாவான பாவங்களையும் மன்னிக்க அதிகாரமில்லையென்றும், வேறே சிலர் அதிக கனமான சாவான பாவங்களை அது பொறுக்க முடியாதென்றும் சாதித்தார்கள்.



ஆனால் அப்போதே அவர்கள் எல்லாரும் சபிக்கப்பட்டு, திருச்சபைக்குப் புறம்பாய்த் தள்ளப்பட்டார்கள்.

(௩) கீழ்த்திசை பிரிவினை சபைகள் முதலாய் திருச்சபைக்குப் பாவங்களைப் பொறுக்கும் வல்லமை உண்டென்று இன்னும் அங்கீகரித்துவருகிறார்கள். இந்த சத்தியம் சேசுநாதர்சுவாமியாலும் அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்பட்டதென்பதற்கு இதுவே போதுமான அத்தாட்சி.

(௪) இடைவிடாமல் தொன்றுதொட்டு வந்த திருச்சபைப் போதனைக்கேற்க, திரிதெந்தீன் பொதுச்சங்கம் நிர்மாணித்திருப்பதாவது: "விசுவாசிகள் ஞானஸ்நானத்துக்குப் பின் கட்டிக்கொள்ளும் பாவங்களை விமோசனமாக்கி அவர்களைச் சர்வேசுரனோடு சமாதானமாக்கும்படி, கத்தோலிக்குத் திருச்சபையில் வழங்கிவரும் பாவசங்கீர்த்தனமானது சேசுநாதர்சுவாமியால் ஏற்படுத்தப்பட்ட மெய்யான தேவதிரவிய அநுமானமல்லவென்று சொல்லுகிறவன் சபிக்கப்படக்கடவான்."

3. பாவப்பொறுத்தல் அடைகிறதற்கு ஐந்து காரியம் வேண்டியது.

க-வது, தான் செய்த பாவங்களை நினைக்கிறது.—உ-வது, தான் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறது.—ங-வது, இனிமேல் ஒருக்காலும் ஒரு பாவத்தையும் செய்வதில்லையென்று கெட்டியான மனதோடு பிரதிக்கினை பண்ணுகிறது.—ச-வது, தன் பாவங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமல் குருவுடனே சொல்லுகிறது.—ரு-வது, குரு கட்டளையிட்ட அபராதத்தைத் தீர்க்கிறது.

(I) செய்யவேண்டிய நல்ல ஆயத்தத்தின்பேரில்.

(க) நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணினநாள் முதல், நினைவு, வாக்கு, கிரியையினாலும், அந்தஸ்தின் கடமைகளைச் செலுத்தாததினாலும், தான் செய்த சகல சாவான பாவங்களையும் ஒன்றும்விடாமல் நன்றாய் நினைத்துப்பார்த்து, அவைகளின் வகை என்னவென்றும் தொகை என்னவென்றும் கவனமாய் விசாரித்து, அவைகளுக்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு, அவைகளை வெறுத்து, அப்படிப்பட்ட பாவங்களில் ஒன்றையும் இனிமேல் ஒருக்காலும் செய்யமாட்டேனென்றும், பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலக்கி நடப்பேனென்றும், புறத்தியார் எனக்குச் செய்த குற்றங் குறைகளைப் பொறுத்து நான் அவர்களுக்கு விருவித்த நஷ்-



டத்தைப் பரிகரிப்பேனென்றும், உறுதியான பிரதிக்கினை செய்வது நல்ல ஆயத்தத்துக்கு அவசரம்.

(உ) செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறது, மகா அவசியமாயிருப்பதால், பாவசங்கீர்த்தனம் செய்யப்போகுமுன், சகல சாவான பாவங்களுக்காகவும் சரியான மனஸ்தாபப்படும்படி, சர்வேசுரனுடைய இரக்கத்தைக் குறித்து மன்றாடவேண்டும்.

(ங) நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்கு நன்றாய் ஆயத்தம் செய்வது அவசியம். தக்க ஆயத்தம் செய்யாததினாலே, ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணும் ஆபத்துக்கு மனம் பொருந்தி தங்களை உள்ளாக்கிக்கொள்ளுகிறவர்கள் சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். வெகு முக்கியமான காரியங்களை நிறைவேற்றும்போது எப்படிக் கவனமாயிருப்போமோ, அப்படியே பாவசங்கீர்த்தன ஆயத்தமும் கவனத்தோடு செய்து முடிக்கவேணும். ஆனால் திரும்பவும் திரும்பவும் தன் பாவங்களைச் சோதித்துப்பார்த்து, மனஸ்தாபம் உண்டோ இல்லையோ என்று வீணான அங்கலாய்ப்புகளுக்கு இடங்கொடுக்கலாகாது. ஏனெனில் நமது ஆண்டவர் மனக்கலக்கமும் ஓயாத ஒழியாத

சந்தேகங்களும் உண்டாக்கும்படியல்ல, ஆனால் நமது ஆத்துமத்துக்கு ஆரோக்கியமும் மனச் சமாதானமும் வருவிக்கும்படியே, பச்சாத்தாபத்தை ஸ்தாபித்தருளினார்.

(ச) ஆயத்தமானது ஒவ்வொருவனுடைய சக்திக்கு ஒத்திருக்கவேண்டும். படியாதவன் ஞானசாஸ்திரியைப்போலவும், அவஸ்தைக்காரன் நல்ல சௌக்கியத்திலிருப்பவனைப்போலவும், ஆயத்தம் செய்யமுடியாது. அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்கிறவன், எப்போதாகிலும் சமயாசமயம் பாவசங்கீர்த்தனம் செய்கிறவனைப்போல, அவ்வளவு நேரம் ஆயத்தத்துக்குச் செலவழிக்கவேண்டியதில்லை. முந்தின பாவசங்கீர்த்தனம் செய்தது முதல் இதுவரையில் யாதொரு சாவான பாவமும் கட்டிக்கொள்ளவில்லையென்று நிச்சயமாயிருந்தால், அற்பப் பாவங்களைப்பற்றி அவ்வளவு கவனத்தோடு ஆராய்ந்து பார்ப்பது அவசியமில்லை. அப்பேர்ப்பட்டவன் விசேஷமாய் மனஸ்தாபமுயற்சிகள் செய்வதினாலே தன்னைப் பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தப்படுத்தவேண்டும்.

(ரு) சாவான பாவமில்லாதவன் முன் செய்த யாதொரு சாவான பாவத்தின்பேரிலாவது, ஒரு விசேஷ அற்பப் பாவத்தின்பேரிலாவது,



தன் இருதயத்தில் மெய்யான மனஸ்தாபம் எழும்பப் பிரயாசப்படவேண்டியது. அநேகர் தாங்கள் முன் கட்டிக்கொண்ட பாவங்களை அறிவிக்கும்படி, சில வார்த்தைகளைப் பாராமல் படித்துக்கொண்டு வாடிக்கையாய்ப் பாடம் சொல்வதுபோல் சொல்லிவருவார்கள்; இப்படி அறிவிக்கிற பாவங்களின்பேரில் அவர்களிடத்தில் யாதொரு மனஸ்தாபமுமில்லாவிடில், இவ்விதம் சொல்வதில் யாதொரு பிரயோசனமுமில்லை. முன் செய்த சாவான பாவங்களைத் திரும்பச் சொல்லாவிட்டால், இப்போது வெளிப்படுத்தும் அற்பப் பாவங்களுக்குள்ளே ஒரு பாவத்தின்மேலேயாகிலும் மனஸ்தாபப்படுவது அவசியம்; இல்லாவிட்டால் பாவசங்கீர்த்தனம் வீணாய்ப்போகும்.

மேலும், தக்க மனஸ்தாபமில்லையென்று நிச்சயமாய் அறிந்தும் பாவசங்கீர்த்தனம் பண்ணினால், தேவதுரோகமாகும். ஆகையால், ஆயத்தம் பண்ணும்போது, இதெல்லாம் யோசித்துத் திட்டப்படுத்தவேண்டியது.

(II) மனஸ்தாபமாவதென்ன?

சர்வேசுரனுக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்ததினால் விசனப்பட்டு, அவைகளை வெறுக்

அத்தன்றி, இனிமேல் ஒருக்காலும் எந்தப் பாவத்தையும் செய்வதில்லையென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணுவதே மனஸ்தாபம். மெய்யான மனஸ்தாபமின்றி பாவம் விமோசனமாக மாட்டாது. பச்சாத்தாபமென்கிற தேவதிரவிய அநுமானமாகிறதற்கு, மனஸ்தாபம் முழுதும் அவசியமான பங்கு.

1. எத்தனை வகை மனஸ்தாபம் உண்டு?

இரண்டு வகை மனஸ்தாபம் உண்டு. அளவில்லாத சகல நன்மைச் சுரூபியும், நமது பேரில் மட்டில்லாத சிநேகமுள்ளவருமான சர்வேசுரனுக்கு நமது பாவங்களால் துரோகம் செய்தோமேயென்று நினைத்து வருத்தப்பட்டால், அது உத்தமமனஸ்தாபமாகும்.

நமது பாவ அக்கிரமங்களினாலே மோட்சத்தை இழந்து, இவ்வுலோகத்திலும் மறுலோகத்திலும், தேவ கோபாக்கினைக்கு ஆளாய்ப் போனோமேயென்று நினைத்துக் கஸ்திப்பட்டால், அது அடிமை மனஸ்தாபமாகும்.

(க) ஆகையினாலே, உத்தம மனஸ்தாபம் தேவசிநேகத்தினாலும், அடிமை மனஸ்தாபம் தேவபயத்தினாலும் உண்டாகிறது. உத்தம மனஸ்தாபத்தினால் சகல பாவங்களும் உடனே பொறுக்



கப்படும். ஆனால் இந்தப் பாவங்களை அடுத்த பாவசங்கீர்த்தனத்திலே வெளிப்படுத்துவேனென்று பொதுத் தீர்மானமாகிலும் இருக்கவேண்டும்.—அடிமை மனஸ்தாபம் அற்பப் பாவங்களை நீக்கக்கூடுமானாலும், பாவசங்கீர்த்தனமில்லாமல் சாவான பாவங்களை விமோசனமாக்கமுடியாது. பாவசங்கீர்த்தனம் பிறகு செய்வேனென்று எவ்வளவு உறுதியாய்த் தீர்மானித்தபோதிலும், அடிமை மனஸ்தாபம் மாத்திரம் போதாது. பாவசங்கீர்த்தனம் பண்ணக்கூடாதபோது, சாவான பாவத்துக்குப் பொறுத்தல் அடைய, உத்தம மனஸ்தாபப்படுவது முழுதும் அவசியம்.

(உ) பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் பண்ணுகையில், உத்தம மனஸ்தாபப்படுவது மெத்த நலமாயிருந்தபோதிலும், அது அவசரமில்லை. அடிமை மனஸ்தாபமிருந்தால் போதும். ஆனால் அடிமை மனஸ்தாபமாகிலும் அத்தியாவசியமாய் நம்மிடத்தில் இருக்கவேண்டியது. இந்த மனஸ்தாபமுமில்லாவிட்டால், பாவசங்கீர்த்தனத்தைக்கொண்டு பாவங்களுக்குப் பொறுத்தல் அடையமுடியாது.

2. பச்சாத்தாபத்திலே பாவப்பொறுத்தல் அடைவதற்கு அவசரமான மனஸ்தாபத்துக்கு நாலு குணங்கள் வேண்டும்.

(க) தான் செய்த பாவங்களுக்காக மனதிலே மெய்யாகவே துக்கப்படவேண்டியது.—உள்ளே மனஸ்தாபப்படாமல் வெளியிலே மாத்திரம் வருத்தப்படுவதுபோல் நடிப்பதில் பிரயோசனமில்லை. பாவத்தினாலே மனது சர்வேசுரனை விட்டு அகன்றுபோகிறது. திரும்பவும் சர்வேசுரனோடு ஒன்றிப்பதற்கு மனது பாவத்தை வெறுக்கவேண்டியது. எப்படி மனதில்லாமல் செய்தது பாவமாகாதோ, அப்படியே மனஸ்தாபப்படாமல் பாவப்பொறுத்தல் கிடையாது.

(உ) சுபாவத்துக்கு மேலான முகாந்தரத்தினாலே மனஸ்தாபப்படவேண்டியது.—அளவில்லாத சகல நன்மைச்சுரூபியாகிய சர்வேசுரனுக்குத் துரோகம் செய்ததினாலும், மோட்சத்தை இழந்து நரகத்திற்குப் பாத்திரமானதினாலும், இன்னம் இப்பேர்ப்பட்ட விசுவாசத்துக்கடுத்த முகாந்தரங்களினாலும், தேவ வரப்பிரசாதத்தின் உதவியைக்கொண்டு, மனதில் கஸ்தி வருத்தம் எழுப்புவது மெய்யான மனஸ்தாபமாகும். வியாதி, பொருள் நஷ்டம், அவமானம் முதலிய இலௌகீக தின்மைகளைப்பற்றி மாத்திரம் பாவத்தை வெறுப்பது சுபாவத்துக்கு மேலான முகாந்தரமாகாததினாலே, இது போதாது. பாவப்பொறுத்தல், தேவ இஷ்டப்பிரசாதம்,



பெரிய சீவியத்துக்குள்ள சுதந்தரம், இது முதலானவைகள் சுபாவத்துக்கு மேலானவைகளாயிருக்கிறபடியினாலே, இவைகளை நமக்கு அடைந்தருளுகிற மனஸ்தாபமும் சுபாவத்துக்கு மேலானதாயிருப்பது அவசியம்.

(ங.) பாவத்துக்காகப்படும் மனஸ்தாபம் மற்றுங் கஸ்திகளுக்கு மேற்பட்டதாயிருக்கவேண்டியது.—பாவத்தினாலே சகல நன்மை நிறைந்த சர்வேசுரனுக்குத் துரோகஞ்செய்து, இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்து, நரகத்துக்குப் பாத்திரவான்களாகிறோமென்பது நிச்சயம்; அது நமக்கு வரக்கூடிய எந்த உலோக பொல்லாப்பையும் பார்க்க அதிக பெரிய கேடென்பது குன்றாத சத்தியம். இதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடித்து, உறுதியாய் ஒத்துக்கொள்வது, முழுதும் அவசரம். ஆனால் பஞ்சேந்திரியங்களில் உணருகிறது வேறே, புத்தியினாலே கண்டுபிடிப்பது வேறே. அப்படியே நாம் சாவான பாவத்தைக் குறித்துப் படுகிற துக்கத்தைப் பார்க்க, தாய் தகப்பன் மரணத்தைப் பற்றி வெளியரங்கமாய் அதிக வருத்தப்படுவதாகத் தோன்றலாம். ஆனால் நமது புத்தியிலே பாவம் மற்ற எல்லாப் பொல்லாப்புகளைவிட, அதிக பெரிய பொல்லாப்பென்று எண்ணி,

பாவத்தைச் செய்வதற்குப் பார்க்க உயிரை முதலாய் இழக்கத் தயாராயிருக்கவேண்டும்.

(ச) ஒன்றும் விடாமல், சகல பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படவேண்டியது.—அற்பப் பாவங்களுக்கு முதலாய் பொறுத்தல் அடையும்படி, நமது மனஸ்தாபத்துக்கு மேற்சொன்ன மூன்று குணங்களிருக்கவேண்டும். ஆனால் இந்த குணம் சாவான பாவங்களுக்கு மாத்திரம் அவசரம். மனஸ்தாபமில்லாமல், யாதொரு அற்பப் பாவமும் பொறுக்கப்படமாட்டாதென்பது மெய்தான். ஆனால் சில அற்பப் பாவங்களுக்குப் பொறுத்தல் அடையும்படி, சகல அற்பப்பாவங்களின்மேலும் மனஸ்தாபப்படவேண்டியதில்லை.

அற்பப் பாவத்துக்கும் சாவான பாவத்துக்கும் [illegible] வித்தியாசமுண்டு. சாவான பாவமானது நம்மைச் சர்வேசுரனுக்கு எதிராளிகளாக்குகிறதினாலே, ஒரே ஒரு சாவான பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டாலும், நாம் மற்றப் பாவங்களுக்காக மன்னிப்படைந்து, சர்வேசுரனோடு சிநேகிதர்களாகமுடியாது. ஆனால் அற்பப் பாவமானது, இஷ்டப்பிரசாதத்தை அழிக்காததினாலே, சர்வேசுரன் நாம் மனஸ்தாபப்படும் அற்பப் பாவங்களை மாத்திரம் மன்



னித்து, மற்றவைகளைப் பொறுக்காமல் விட்டுவிடக்கூடும்.

(iii) நல்ல பிரதிக்கினையாவதென்ன?

ஒருபோதும் பாவம் செய்யமாட்டேனென்றும் தீர்மானம் நல்ல பிரதிக்கினையாகும். இனிமேல் ஒரு சாவானபாவமும் கட்டிக்கொள்ளமாட்டேனென்றும், சர்வேசுரனுக்குப்பண்ணின துரோகத்துக்காகவும், புறத்தியாருக்கு வருவித்த சேதநஷ்டத்துக்காகவும் என்னால் கூடியமட்டும் பரிகரிப்பேனென்றும், மற்றவர்கள் எனக்குச் செய்த குற்றங்களை இப்போதுதானே பொறுத்துக்கொள்ளுகிறேனென்றும் மனதிலே உறுதியாய்த் தீர்மானிக்கவேண்டியது. இப்பேர்ப்பட்ட பிரதிக்கினையை ஒருவன் செய்யாவிட்டால், அவன் மெய்யான மனஸ்தாபப்படுகிறதில்லை என்பதற்கு அது தப்பாத அடையாளம்.

(க) எவ்வித சாவான பாவமும் விலக்கி நடப்பதுமன்றி, சாவான பாவம் கட்டிக்கொள்ளாதபடி சகலத்தையும் இழக்க உறுதியான மனதுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(உ) அதே பாவத்தில் அடிக்கடி விழுவதற்குக் காரணமாயிருக்கும் கெட்டவழக்கங்களை விட்டுவிடும்படி, ஆத்துமகுருவானவர் காட்டும் வழி

பாடுகளை உபயோகிக்கிறவனாய்க்கொண்டிருப்பது அவசியம்.

தங்கள் சுபாவத்தினிமித்தமாகிலும், நம்முடைய பலவீனத்தின் நிமித்தமாகிலும், நம்மைப் பாவத்தில் விழவைக்கிற ஆட்கள், இடம், பொருள், உத்தியோகம், முதலிய சகல கிட்டின சமயங்களையும் விலகி நடக்கப் பிரதிக்கினை செய்யவேண்டும்.

(௩) பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது, நாம் இப்பேர்ப்பட்ட நல்ல பிரதிக்கினை செய்திருக்கிறோமென்று நிச்சயமாயிருக்கக்கடவோம். திரும்பவும் பாவத்திலே விழக்கூடுமென்று பயப்பட்டால், இதைக்கொண்டு மாத்திரம் நமது பிரதிக்கினை உறுதியானதல்லவென்று சொல்லக்கூடாது. ஏனெனில், இதினாலே நாம் பாவத்தை வெறுக்கிறோமென்றும், அதில் விழுகிறதற்குப் பயப்படுகிறோமென்றும் வெளியாகிறதேயல்லாமல், பாவத்தில் விழாதபடிக்கு நாம் உறுதியான பிரதிக்கினை செய்யவில்லையென்று காட்டுகிறதில்லை. பாவசங்கீர்த்தனம் செய்த பிறகு, திரும்பவும் அதே பாவத்தில் விழுந்தாலும், இதினாலே அந்தப் பாவசங்கீர்த்தனம் செய்யும்போது மெய்யான மனஸ்தாபமில்லையென்றும், உறுதியான பிரதிக்கினை செய்யவில்லையென்றும், தீர்மானிக்கக்கூடாது.



(௪) மெய்யான மனஸ்தாபப்படவும், கெட்டியான பிரதிக்கினை பண்ணவும், சர்வேசுரனுடைய அளவில்லாத நீதியைப்பற்றியும், அவருடைய மட்டற்ற சிநேகத்தைப்பற்றியும் யோசித்து, மகா பத்தி உருக்கத்தோடு மன்றாடக்கடவோம்.

## (II.) பாவசங்கீர்த்தனத்தின் பேரில்.

**1. பாவசங்கீர்த்தனமாவதென்ன?**

பொறுத்தல் அடையும்படியாக, தான் செய்த சகல சாவான பாவங்களையும் அதிகாரம் பெற்ற குருவானவரிடத்தில் வெளிப்படுத்துகிறதே பாவசங்கீர்த்தனமாம்.

**2. பாவசங்கீர்த்தனத்தை ஏற்படுத்தினது யார்?**

இயேசுநாதர்சுவாமி தாமே பாவசங்கீர்த்தனத்தை ஏற்படுத்தினார். பாவப்பொறுத்தல் அடைவதற்கு அவசரமானவைகளைத் தீர்மானிக்க அவர் ஒருவருக்குமாத்திரம் அதிகாரமுண்டு.

(௧) அவர் அப்போஸ்தலர்களுக்குப் பாவங்களைப் பொறுக்க அதிகாரம் கொடுத்ததுமன்றி, அவைகளைப் பொறுக்காமலிருக்கவும் அதிகாரம்கொடுத்தார். இரண்டுவகை தீர்ப்பும் மோட்சத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது. "பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ, அது பரலோகத்திலும்

கட்டப்பட்டிருக்கும்; நீ பூலோகத்தில் எதைக் கட்டவிழ்ப்பாயோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று திவ்விய கர்த்தர் அர்ச். இராயப்பரைப்பார்த்துத் திருவுளம் பற்றினார். (மத். XVI. 19.)

ஒரு வார்த்தையில் சொல்லவேணுமானால், சேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்களுக்குத் தீர்ப்பிடும் அதிகாரம் தந்தருளியிருக்கிறார் என்னத்தகும். ஆகலால், அவர்களை மெய்யான நடுவர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்.

உலக நியாயாதிபதியைப்போல், குருக்களும் கருணைத்துக்குத் தக்கது குற்றவாளியை மன்னிக்கிறார்கள், அல்லது ஆக்கினைக்குள்ளாக்குகிறார்கள். அவர்கள் அவனைப் பாவஸ்திதியிலும், அதற்கு வரக்கூடிய தண்டனையிலும் விட்டுவிடுகிறார்கள், அல்லது அவனைப் பாவத்திலிருந்து கட்டவிழ்த்து, அவனுக்கு மனப் பரிசுத்ததனம் அளிக்கிறார்கள். உலக நியாயாதிபதியைப் போல் குருவானவர் குற்றம் சாட்டப்பட்டவனிடம் குற்றம் இல்லை என்று மாத்திரம் வெளிப்படுத்துகிறதில்லை. ஆனால், அவரே மாசற்ற தனத்தை அவனுக்கு அளிக்கிறார். பச்சாத்தாபமானது இவ்விடப்பிரசாதத்தைக் குறித்துக் காட்டுவதுமல்லாமல், அந்த அளிக்கவேண்டியது.



இல்லாவிட்டால், தேவதிரவிய அநுமானமாயிருக்கமாட்டாது.

(உ) பாவப்பொருத்தலுக்குப் பாவத்தை வெளிப்படுத்துவது அவசரம்: நியாயாதிபதிக்குத் தான் எதன்பேரில் தீர்ப்புச் சொல்லுகிறோமென்று அந்த வழக்குத் தெரிந்திருக்கவேண்டியது. ஆனால் பாவியானவன் தன் பாவங்களை அறிக்கையிடாவிட்டால், அவன் கட்டிக்கொண்ட சகல பாவங்களையும், அதி இரகசியமான ஆசைகளையும், நினைவுகளையும், அவைகளின் எண்ணிக்கையையும், அவைகளைச் சார்ந்த விசேஷ சமயங்கள் முதலியவைகளையும் குருவானவர் அறியமுடியாது. ஆகலால் பாவியே தன் பாவங்களை அறிக்கையிடவேண்டுமென்பது சேசுநாதர்சுவாமியின் சித்தம்.

மேலும் பாவியின் குற்றத்துக்குத் தக்கது, பரிகாரமாக அவனுக்கு ஓர் அபராதமிட குருவானவருக்குக் கடமையுண்டு. ஆனால், குற்றத்தை அறிந்தாலொழிய அவர் அந்தக் கடமையை நிறைவேற்ற முடியாது. பாவிமாத்திரமே அந்தக் குற்றத்தை அவருக்கு அறிவிக்கக்கூடுமாயிருக்கிறான்.

இதுவுந் தவிர, சேசுநாதர்சுவாமி குருவானவரை ஆத்துமாக்களின் ஞான வைத்தியனாக ஏற்

படுத்தியிருக்கிறார். வைத்தியன் தன் கடமையை நிறைவேற்றவும், வியாதிக்குத் தக்க மருந்து கொடுக்கவும், வியாதிக்காரன் தன் வியாதியை வைத்தியனுக்குத் தெரிவிக்கவேண்டியது.

3. **இது விஷயத்தைப்பற்றிய பாரம்பரிய விசுவாசப் போதகமென்ன?**

(க) விசுவாசிகள் பாவப்பொறுத்தலை அடையும்படி, தங்கள் பாவங்களை விபரமாய் வெளிப்படுத்தவேண்டுமென்று மேற்சொன்ன வாக்கியத்தால் சேசுநாதர்சுவாமி அறிவித்தருளினாரென்று பாரம்பரையாகப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. இது எங்கும், எப்போதும், சகலராலும் விசுவசிக்கப்பட்டு வந்தது. அநேக நூற்றாண்டுகளாகப் பிரிந்திருக்கும் கீழ் நாட்டுப் பிரிவினைச் சபைகளிலும் இந்தச் சத்தியம் பாரம்பரையாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

(உ) சேசுநாதர்சுவாமியின் வாக்கியங்களை வியாக்கியானிப்பதில் தவறிப்போகாத வரத்தை அடைந்திருக்கிற திருச்சபையின் தீர்மானமும் இதுவே. திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் பின்வருமாறு தீர்மானித்திருக்கிறது: "குருக்கள் எதைப்பற்றித் தீர்ப்பு சொல்லவேண்டுமோ, அதை அறியாவிட்டால், நியாயாதிபதிக்



குரிய தங்கள் அதிகாரத்தைச் செலுத்தமுடியாதென்பது நிச்சயம். அவர்கள் அபராதம் போடுகிறதில் நீதியை அநுசரிக்கும்பொருட்டு, பாவங்களைப் பொதுவாய் அறிக்கையிடாமல் விசேஷித்த விதமாயும், விபரமாயும் அவைகளைத் தெரிவிப்பது முழுதும் அவசரம்." பின்வருவதும் பொதுச்சங்கத்தின் தீர்மானம்: "பச்சாதாபமென்னும் தேவதிரவிய அநுமானத்தில் பாவத்தை வெளிப்படுத்துவது சர்வேசுரனால் ஏற்படுத்தப்படவில்லையென்றாவது, அது தேவகட்டளைப்படி இரட்சணியத்துக்கு அவசரமில்லையென்றாவது எவனாகிலும் சொல்லத் துணிவானாகில் அவனுக்குச்சாபம்.—தங்கள் தங்கள் பாவங்களை இரகசியமாய் ஒரு குருவினிடம் வெளிப்படுத்துவது ஆதித்துவக்கமுதல் எப்போதும் அநுசரிக்கப்பட்டுவந்ததுபோலவே, இன்னும் திருச்சபையால் அநுசரிக்கப்பட்டுவரும் வழக்கமாயிருக்க, இது சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்படவில்லை என்றும், முழுதும் நூதனமாய் மனுஷரால் ஏற்படுத்தப்பட்டதென்றும் யாதொருவன் சொல்லத் துணிவானாகில் சபிக்கப்படக்கடவானாக.—குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்கும்போது, நியாயாதிபதியாயில்லாமல், பாவசங்கீர்த்தனம்

செய்கிறவனுடைய விசுவாசத்தினிமித்தம் அவனுடைய பாவங்கள் பொறுக்கப்பட்டன என்று அதிகாரமின்றி வெளிப்படுத்துகிறவனும், பாவப்பொறுத்தல் அடைவதற்குக் குருவானவரிடத்தில் வெளிப்படுத்துவது அவசியமில்லையென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

(௩) திருச்சபையின் பொதுச் சங்கங்கள் பயம்பண்ணித் சாட்சிகளாயிருக்கின்றன. அவைகள் எவ்விதத்திலும் புதிதான சத்தியத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை. ஆனால் முன்னிருந்த சத்தியத்தையே ஸ்திரப்படுத்துகின்றன, அல்லது அது எப்போதுமிருந்ததாகக் காட்டுகின்றன. ஆதலால் லாத்திரான் சங்கம் சகல விசுவாசிகளும் வருஷத்தில் ஒருவிசையாகிலும் தங்கள் பாவங்களைச் சங்கீர்த்தனம் செய்யவேண்டும் என்று தீர்மானித்தபோது, இந்தத் தேவ கட்டளையை நாம் கவனித்து அநுசரிக்கவேண்டுமென்று கற்பித்ததேயொழிய, அது பாவசங்கீர்த்தனத்தை நூதனமாய் உண்டாக்கவில்லை. இதினால்தான் ஒருவனாகிலும் இத்தீர்மானத்துக்கு விரோதமாய் முறைப்படுவதில்லை. ஏனெனில் பாவசங்கீர்த்தனம் முன்னமே ஸ்தாபிக்கப்பட்டிருந்த



தென்றும், அது மகா அவசரமென்றும் சகலரும் நன்றாய் அறிந்திருந்தார்கள்.

(௪) பாவசங்கீர்த்தனத்தை சேசுக்கிறீஸ்துநாதர் சுவாமி ஏற்படுத்தினதேயொழிய, அது மனுஷனால் ஏற்படுத்தப்படவில்லை. மனுஷன் ஸ்தாபித்திருந்தால், அதை உண்டாக்கினவன் யாரென்று சகலருக்கும் தெரிந்திருக்கும். அதை நூதனமாய் ஏற்படுத்திய காலம் இதென்றும், அதை ஸ்தாபிப்பதற்கு இருந்த இடையூறுகள் என்ன என்றும் நாம் அறிந்திருப்போம். சிலர் பாவசங்கீர்த்தனத்துக்கு விரோதமாய்ப் போதித்து அதை மறுத்திருந்தாலும் பாவசங்கீர்த்தனம் எப்போதும் அநுசரிக்கப்பட்டு வந்ததென்று தேச சரித்திரங்கள் நமக்குக் [illegible]டுகிறதே [illegible] தவிர, பாவசங்கீர்த்தனம் புதிதாய் [illegible] உண்டுபண்ணப்பட்டதைப்பற்றி யாதொன்று [illegible] நமக்குத் தெரிவிக்கிறதேயில்லை!

பாவப்பொறுத்தல் அடையும்பொ[illegible]ருட்டு, சர்வேசுரன் இக்கடமையை மனுஷர்மே[illegible] சுமத்தாவிட்டால், தங்கள் பாவங்களையும் வெ[illegible]ட்கத்துக்குரிய அக்கிரமங்களையும் ஒரு மனுஷ[illegible]ரிடத்தில் போய்ச் சொல்லுவது மகா கஷ்டமா[illegible] காரியமாதலால், மனுஷர்கள் இக்கடமைமை[illegible] ஒருபோதும் அங்கீகரித்திருக்கமாட்டார்கள். [illegible] பொழுத்

தல் அடைய வேறே வழியில்லையென்று நிச்சயமாய் அறிந்திருந்தும், எத்தனையோ பேர் அனேக சமயங்களில் வெட்கத்தினாலும் கூச்சத்தினாலும் பாவத்தை மறைத்துப் போடுகிறார்கள்!

(ங) இராஜாக்களும், குருக்களும், மேற்றிராணிமார்களும், பாப்புமார்களும் முதலாய், சாதாரண விசுவாசிகளைப்போல், பாவசங்கீர்த்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பாவசங்கீர்த்தனமானது குருக்களால் நூதனமாய் உண்டாக்கப்பட்டிருந்தால், மற்றவர்களைப்பார்க்க அவர்களுக்கு ஒன்றும் அதிக வெட்கத்தைக் கொடுக்கக்கூடிய இந்தக் கட்டளைக்குத் தங்களை உட்படுத்தியிருக்கமாட்டார்கள். மேலும் அவர்கள் இதை நூதனமாய் ஏற்படுத்த விரும்பியிருப்பார்களேயாகில், மனிதர்கள் ஒருக்காலும் இந்த விஷயத்தில் அவர்கள் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள்.

(ச) ஆகையால் பாவசங்கீர்த்தனமானது பாவப்பொறுத்தல் அடைவதற்கு ஏக வழியாக சேசுநாதர் சுவாமியால் ஏற்படுத்தப்பட்டதென்று எப்போதும் எங்கும் சகல கிறீஸ்துவர்களும் ஏற்றுக்கொண்டதால், அது தப்பாத



வேத சத்தியமென்று நாமும் அங்கீகரிக்கக்கடவோம்.

**4. பாவசங்கீர்த்தனம் அவசரமென்பதின் பேரில்.**

(க) தக்க ஆயத்தமில்லாதவர்களுடைய பாவத்தைக் கட்டவும், மன்னிக்காது விட்டுவிடவும் சேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்களுக்குச் சகல அதிகாரமும் கொடுத்திருக்கிறார். பாவப்பொறுத்தல் அடைய வேறொரு வழியிருக்குமாகில், இந்த அதிகாரம் பிரயோசனமற்றதாய்ப் போயிருக்கும். உத்தம மனஸ்தாபத்தால் ஒருவன் பாவப்பொறுத்தல் அடைந்தபோதிலும், சேசுநாதர்சுவாமியின் கட்டளைப்படி பாவசங்கீர்த்தனம் செய்ய அவனுக்குக் கடமை உண்டு. இந்தப்பிரகாரமே ஒருவன் உத்தம மனஸ்தாபத்தைக்கொண்டு ஞானஸ்நானத்துக்குமுன்தானே தன் சகல பாவங்களுக்கும் மன்னிப்படைந்திருப்பானாகில், தன்னால் கூடுமானபோது ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான்.

(உ) திரிதேந்தீன் சங்கம் தீர்மானித்ததாவது: "பாவப்பொறுத்தல் அடையும்படி தான் கட்டிக்கொண்ட ஒவ்வொரு சாவான பாவத்தை

ரும்.........பச்சாத்தாபமென்றும் தேவதிரவிய அநுமானத்தில் வெளிப்படுத்தவேண்டுமென்பது தேவகட்டளை யல்லவென்று...எவனாவது சொல்லுவானாகில், சபிக்கப்படக்கடவானாக."

அர்ச். அகுஸ்தீன் சொல்லுவதாவது: "நான் இரகசியமாய்ச் சர்வேசுரனுக்கு முன்பாக மனஸ்தாபப் படுகிறேன். சர்வேசுரன் என் மனதில் நடப்பதை அறிந்து, எனக்குப் பாவப்பொறுத்தல் தந்தருளுகிறார் என்று ஒருவன் தனக்குள் சொல்வானாகில். அப்படியானால், "நீங்கள் பூலோகத்தில் கட்டவிழ்ப்பீர்களோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும்" என்று அவர் சொல்லிய வாக்கியம் வீணாய்ப் போகும்; தமது திருச்சபைக்கு மோட்சத் திறவுகோலைக் கொடுத்ததில் பிரயோசனமில்லாது."

**5. யாரிடத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணவேணும்?**

சேசுநாதர்சுவாமி தமக்குப் பதிலாய்க் குருக்களை ஏற்படுத்தி யிருக்கிறதினாலேயும், மோக்ஷ வாசலைத் திறக்கவும் பூட்டவும் வேண்டிய திறவுகோல்களை இவர்களுக்கு மாத்திரம் கொடுத்திருக்கிறதினாலேயும், பாவப்பொறுத்தலை அடைய



விரும்புகிறவர்கள் எல்லாரும் அவர்களிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது.

ஒரு குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்க, அவரிடம் மூன்று காரியங்கள் தேவை:—

(க) முந்த முந்த அவர் மெய்யாகவே குருப்பட்டம் பெற்றிருக்கவேண்டியது. குருப்பட்டத்தோடே பாவங்களைப் பொறுக்கும் அதிகாரம் சேர்ந்திருக்கிறதென்பது நிச்சயம். ஆகையால் மரண ஆபத்திலிருக்கிறவன் சமீபத்தில் நல்ல குரு கிடைக்காதே போனால், எந்தக் குருவானவனாவது, அவர் சபிக்கப்பட்டிருந்தாலும், திருச்சபையின் அதி[illegible] இருந்தாலும், சகல பாவங்களையும் ஒன்றுக் குறையாமல் மன்னிக்க உத்தரவுண்டு.

மரண ஆபத்தில்லாத சமயத்தில், குருவானவர் அர்ச். பாப்பானவரிடத்திலாவது மேற்றிராணியாரிடத்திலாவது உத்தரமும் அதிகாரமும் பெற்றிருப்பது அவசியம்.

(உ) உத்தரமாவதென்னவென்றால், குருவானவர் பாவசங்கீர்த்தனம் கொடுக்கத் தகுதியுள்ளவரென்று மேற்றிராணியார் செய்யும் தீர்மானமே உத்தரமெனப்படும்.

(௩) அதிகாரமாவது என்னவென்றால், குறிக்கப்பட்ட எல்லைக்குள் குடியிருக்கும் விசுவாசிகளை நடப்பிக்கவும், அவர்களுக்குப் பாவப்பொறுத்தல் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கவும் மேற்றிராணியாரால் அளிக்கப்படும் வல்லமையே அதிகாரமென்னப்படும்.— இந்த உத்தாரமும் அதிகாரமுமின்றி குருவானவர் கொடுக்கும் பாவப்பொறுத்தல் செல்லாது. அது போலவே உலோக நியாயாதிபதி தனது அதிகாரத்துக்குட்பட்டவர்கள் மேலே மாத்திரம் தீர்ப்புச் செய்யலாம்.

திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் கற்பிக்கிறதாவது: "ஒரு கிறிஸ்துவன் மேலே அதிகாரமில்லாத குருவானவர் கொடுக்கும் பாவப்பொறுத்தல் உதவாததாக எப்போதும் திருச்சபையில் எண்ணப்பட்டு வந்திருக்கிறது என்றது."

மேற்றிராணியார் உத்தாரமும் அதிகாரமும் கொடுக்கையில், எல்லை திட்டம்பண்ணுகிறதுமல்லாமல், எங்கே, எப்போது, எந்த ஆட்களுக்கு, எந்தப் பாவங்களைப் பொறுக்கலாமென்றும் குறித்து, அதற்குத் தமதிஷ்டப்படி மட்டுக்கட்டுகிறார். உத்தரவு கொடுத்த பின்னும், தக்க முகாந்தரமிருந்தால், அவரே எல்லாம் மாற்றி, நீக்கியும் போடலாம்.



6. எல்லாக் குருவானவர்களுக்கும் எவ்வித பாவங்களையும் பொறுக்க அதிகாரமுண்டா?

சகல பாவங்களையும் பொறுக்கும்படி சேசுநாதர்சுவாமி திருச்சபைக்கு அதிகாரங் கொடுத்தாரென்பது வேத சத்தியம். எவ்வளவு பெரிய பாவங்களிருந்தாலும், எத்தனை விசை அவைகளைக் கட்டிக்கொண்டிருந்தாலும், நல்ல ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு, எல்லாம் மன்னிக்கப்படலாம். அர்ச். பாப்பானவரிடத்தில் மாத்திரம் சகல பாவங்களையும் மன்னிப்பதற்குப் பூரண அதிகாரமுண்டு.

(க) அர்ச். பாப்பானவர் மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்கும், மேற்றிராணிமார்கள் குருக்களுக்கும் அதிகாரம் கொடுக்கும்போது, அதைப் பூரணமாய் அளிக்காமல், சிற்சில மகா கனத்த பாவங்களை மன்னிக்கும் பாத்தியத்தைத் தாங்களே வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்பேர்ப்பட்ட பாவங்களைக் கட்டிக்கொண்டவர்கள் அர்ச். பாப்பானவரிடத்திலும் மேற்றிராணிமார்களிடத்திலும் போய் மன்னிப்புக் கேட்கக்கூடாதாகில், தங்கள் ஆத்தும குருவானவருக்கு அதை அறிவித்த பின், அவர் சொன்னதெல்லாம் செய்யவேண்டியது. வழக்கமாய் அவர் எழுதி, விசேஷ உத்தரவு

பெற்று, திருச்சபையில் விதிக்கப்பட்ட ஞான தண்டனைகளையும் சாபங்களையும் நீக்கிப்போடும்படி வேண்டிய பிரயாசப்படுவார். மரணத் தறுவாயிலே இப்படி விசேஷமாய் விலக்கப்பட்ட பாவங்களை எந்தக் குருவானவரும் பொறுக்கலாம்.

(உ) சகல குருக்களும் இப்படிப்பட்ட பாவங்களை மன்னிக்கக்கூடாததைப்பற்றி, ஆச்சரியப்படுகிறதற்கு இடமில்லை. உலோக உத்தியோகஸ்தருக்குள்ளே மேற்பட்டவர்கள் முக்கியமான சங்கதிகளை விசாரித்துத் தீர்ப்புச் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் சொற்ப விஷயங்களை மாத்திரம் தீர்க்கலாம்; பெரிய தண்டனை கொடுக்க முடியாது. அவர்களுக்கு வரும் கனமான சங்கதிகளை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். குருக்களைச் சேர்ந்த அதிகாரத்தைப்பற்றியும் இவ்விதமே சொல்லத்தகும்.

(ங) ஆகையால், ஒருவன் பாவப்பொறுத்தலை அடையவேண்டுமானால், அர்ச். பாப்பானவரிடத்திலாவது, அவராலே நியமிக்கப்பட்ட மேற்றிராணியாரிடத்திலாவது, அதிகாரமும் உத்தாரமும் பெற்ற குருவானவரிடம் தன்னுடைய பாவங்களை வெளிப்படுத்தி, விமோச



னம் கேட்க வேண்டியது. தெரிந்தும், அதிகாரமில்லாத குருவிடத்திலே பாவசங்கீர்த்தனம் செய்கிறவன் பாவப்பொறுத்தல் அடையாமல் போகிறதுமன்றி, தேவ துரோகம் கட்டிக்கொள்ளுகிறான்.

7. எப்போது பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது?

தேவ கட்டளைப்படி, மரண ஆபத்திலும் ஆத்தும இரக்ஷணியத்துக்கு அவசரமாயிருக்கிற சமயத்திலும் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டியது. மீளவும் சாவானபாவத்தைக் கட்டிக்கொண்டவன், திருச்சபைக் கட்டளைக்குக் கீழ்ப்படியும்படியாக, வருஷத்துக்கு ஒருவிசையென்கிலும் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணக்கடவான்.

(க) சாவான பாவத்தோடே இருப்பவன் திவ்விய நன்மை வாங்குமுன், அவசியமாய் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும். இப்போது நான் உத்தம மனஸ்தாபப்படுகிறேன், இனிமேல் பாவசங்கீர்த்தனம் செய்வேனென்று சாக்குப்போக்கு சொல்லலாகாது. ஏனெனில், மெய்யாகவே நாம் உத்தம மனஸ்தாபப் பட்டோமென்று நிச்சயமாயிருக்க முடியாது. மேலும் திவ்விய நன்மை வாங்குமுன், சாவான பாவத்தோடே

இருக்கிறவர்கள், பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டுமென்று திருச்சபை கண்டிப்பாய்க் கற்பித்திருக்கிறது. ஆகையால் யாதொரு சமயத்தில் பாவசங்கீர்த்தனம் செய்ய முடியாவிட்டால், திவ்விய நன்மை வாங்கவும் கூடாது. இதினாலே எவ்வித துன்பங்கள் நேரிடுவதாயிருந்தபோதிலும், தேவ நன்மை வாங்கி தேவ துரோகம் கட்டிக்கொள்வதைவிட, சாகத் தயாராயிருக்கவேணும்.

(உ) ஒருவன் பாவசங்கீர்த்தனம் பண்ணின பிற்பாடு, இராத்திரி கிரியையினாலாவது, ஆசையினாலாவது, நினைவினாலாவது ஒரு சாவான பாவம் கட்டிக்கொள்வானாகில், திவ்விய நன்மை வாங்கிறதற்கு முன், திரும்பவும் பாவசங்கீர்த்தனம் செய்வது முழுதும் அவசியம்.

8. நல்ல பாவசங்கீர்த்தனத்துக்கு வேண்டிய குணங்களென்ன?

கடைசி பாவப்பொறுத்தல் அடைந்த நாள் முதல் இந்த நாள் வரையில் கட்டிக்கொண்ட சகல சாவான பாவங்களையும் ஒன்றையும் ஒளிக்காமலும், குறைக்காமலும், ஒரே குருவானவரிடத்தில், மிகுந்த தாழ்ச்சியோடு வெளிப்படுத்தவேணும். பாதி ஒருவரிடத்திலும், வேறே பாதி வேறொருவரிடத்திலும் அறிவிக்கிற



தில் பிரயோசனமில்லை. அதினால் பாவப்பொறுத்தல் கிடைக்கமாட்டாது.

(க) பாவசங்கீர்த்தனத்தில் யதார்த்தமாயிருக்கவேணும்.—தனக்குத் தெரிந்த மட்டும், பாவங்களையெல்லாம் தெளிவாய்ச் சொல்லி, உள்ளபடி வெளிப்படுத்த வேண்டுமென்பது தேவ கட்டளை. குருவானவர் நன்றாய்க் கண்டுபிடிக்காதபடி மனம்பொருந்தி கனமான காரியத்தை மறைவாய்ச் சொன்னால், ஆகாத பாவசங்கீர்த்தனமாகும். பாவங்களின் வகையையும் இலக்கங்களையும் அறியும்படி, குருவானவர் கேட்கும் கேள்விக்குத் திறந்த மனதோடே மறுமொழி சொல்ல வேண்டியது. குருவானவரை ஏய்த்துப் போடலாம், ஆனால் சர்வேசுரனை ஏய்க்க முடியாது.

(உ) பிரயோசனமில்லாத சங்கதிகளை நீக்குவதுடன், சம்பவித்த காரியங்களை வீணில் விவரித்துச் சொல்லாமலும், யோக்கியமில்லாத வார்த்தைகளை உபயோகிக்காமலும், எப்போதும் தக்க மேரை மரியாதையோடு குற்றங்களைத் தெரிவிப்பது கடமை. அவசரமின்றி, பிறர் பாவங்கள் ஒன்றையும் அறிவிக்கக்கூடாது. சில சமயங்களில் பாவத்தின் தன்மையையும் கனத்தை

யும் கண்டுபிடிக்கும்படி, உடந்தையாளின் பெயரைச் சொல்லவேண்டியிருக்கலாம். இப்பேர்ப்பட்ட சமயத்தில், அதிக வருத்தமில்லாமல் செய்யக்கூடுமாகில், உடந்தையானவனை அறியாத குருவானவரிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்வது உத்தமம்.

(கூ) பாவங்களை வாயினாலே உச்சரித்து வெளிப்படுத்தவேண்டியது. பேசக்கூடாதவன் சயிக்கினையினாலே அவைகளை அறிவிக்கிறது போதும். எழுதின பாவங்களைத் தான்தானே வாசிக்கிறதுக்கு விக்கினமில்லை. நல்ல முகாந்தரத்தினிமித்தம் பாவங்களை எழுதிக் குருவானவருக்கு வாசிக்கும்படி கொடுக்கலாம். அவர் வாசித்து முடிக்கிறபோது, "இந்தப் பாவங்களை உமக்கே சங்கீர்த்தனம் பண்ணுகிறேன்" என்று அபத்தக்காரன் சொல்லக்கடவான். பாவசங்கீர்த்தனத்தில் சொல்லவேண்டியவைகளை மறந்துபோகாதபடி, அவைகளை எழுதிவைத்துக்கொள்ளவேண்டுமென்பது கட்டளையில்லை. பிரியமுண்டானால், அப்படிச் செய்யலாம். ஊமையானவன் எழுத்துத் தெரிந்தபோதிலும் தன் பாவங்களை எழுத்து மூலியமாக வெளிப்படுத்தவேண்டியதில்லை. ஆனால் எழு



திக்கொடுப்பதினாலே அவனுக்கு ஞான ஆறுதலும் பிரயோசனமும் வரலாம்.

(ச) சகல சாவானபாவங்களையும் ஒன்றும் ஒளிக்காமல் வெளிப்படுத்தவேண்டும்.—இதுவும், நல்ல மனஸ்தாபமும், பொறுத்தலுக்கு மகா அவசியமான குணங்கள். திரிதெந்தின் பொதுச்சங்கம் வசனித்திருக்கிறதாவது: "தெரிந்தமட்டும் தான் செய்த சாவான பாவங்களெல்லாத்தையும் ஒவ்வொன்றாய்ச் சொல்லிக்காட்டுகிறதுமல்லாமல், இரகசியமான பாவங்களையும், ஒன்பதாம் பத்தாம் கற்பனைக்கு விரோதமான பாவங்களையும், பாவத்தின் வகையை மாற்றும் விஷயங்களையும், தேவ கட்டளைப்படி வெளிப்படுத்துகிறது அவசியம்."

ஞாபகத்தில் வருகிற சாவான பாவங்களையெல்லாம் வெளிப்படுத்துதல் நல்லபாவசங்கீர்த்தனத்துக்குப் போதுமாயிருந்தாலும், சங்கீர்த்தனக் கட்டளையை அநுசரிக்கும்படி தான் செய்த சகல பாவங்களையும் ஒன்றும் விடாமல் தெரிவிக்கவேண்டியது. ஆகையால், மறந்துபோன பாவங்கள் நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் பொறுக்கப்பட்டிருந்தாலும், பின்னாலே நினைவில் வந்தால், அடுத்த பாவசங்கீர்த்தனம்

செய்யும்போது, அவைகளைக் குருவானவரிடத்திலே வெளிப்படுத்துகிறது மீறக்கூடாத கட்டளை.

ஒவ்வொரு சாவான பாவமும் சர்வேசுரனுக்கு விசேஷ துரோகத்தை வருவிக்கிறதினாலேயும், ஒவ்வொன்றுக்கும் நித்திய நரக ஆக்கினை செல்ல வேண்டியிருக்கிறதினாலேயும், பொறுத்தல் அடைவதற்குப் பாவசங்கீர்த்தனத்தில் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்துகிறதைவிட, வேறே வழியில்லை. ஒரே ஒரு சாவான பாவத்தை ஒளித்தால், மற்றப் பாவங்கள் விமோசனமாகமாட்டாது. இஷ்டப்பிரசாதமும் அளிக்கப்படாது. ஒரே ஆத்துமத்தில் சர்வேசுரன்பேரில் சிநேகமும் பகையும் ஒன்றாயிருப்பது கூடாத விஷயம்.

சகல பாவங்களையும் தெரிவிக்காதபோது, நல்ல முகாந்தரத்தினாலே பொறுத்தல் கிடைத்திருக்குமானால், அந்த விக்கினம் நீங்கிப்போன பிற்பாடு சரியான பாவசங்கீர்த்தனம் பண்ணி, சகல பாவங்களையும் வெளிப்படுத்தவேண்டியது.— இப்படியே பிரக்கினை தப்பியிருக்கிறவர்களும், சரியாய்ப் பேசக்கூடாதவர்களும், சமீபத்திலிருக்கிறவர்கள் கேளாமல் பாவங்களைச் சொல்லக்கூடாதவர்களும், தங்கள் பாஷை தெரிந்த குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்யக்கூடா



தவர்கள் முதலியவர்களும் தங்கள் பாவங்களைச் சில அடையாளங்களினால் வெளிப்படுத்தினால் போதும். ஆனால் அவர்கள் எல்லாரும் சமயங் கிடைத்தால், சரியான சங்கீர்த்தனம் செய்யக்கடவார்கள். பாஷை தெரியாதானால், மொழி பெயர்க்கிறவனை உபயோகிக்கக் கடனில்லையானாலும், இவன் ஒன்றும் அறியாதபடி தான் செய்த பாவங்களைக் குருவானவருக்கு அறிவிக்கப் பல வழியுண்டு.

(௫) ஒவ்வொரு சாவானபாவமும் எத்தனைவிசை கட்டிக்கொண்டோமென்று சரியாய்ச் சொல்லுகிறது கண்டிப்பான கட்டளை. மேற்சொன்ன முகாந்தரங்களினால் அது விளங்குகிறது. அதினால் ஒவ்வொரு பாவத்துக்கும் மன்னிப்படையாவிட்டால், மோட்சமில்லை. பத்துவிசை ஒரு பாவத்தைச் செய்தவன் ஐந்துவிசை மாத்திரம் செய்தேனென்று மனம்பொருந்திப் பொய்சொன்னால், தேவதுரோகம் கட்டிக்கொள்ளுகிறான்; ஒளித்த பாவங்களுக்கும் மற்றப்பாவங்களுக்கும் பொறுத்தல் கிடையாது. பாவத்தின் தொகை சரியாய்த் தெரியாத பட்சத்தில், ஒரு நாளிலாவது வாரத்திலாவது சுமார் இத்தனைவிசை செய்தேனென்று சொல்வது போதும்.

(ஈ) ஒவ்வொரு சாவான பாவத்தின் வகையை மாற்றுகிற விஷயங்கள் எல்லாத்தையும் சொல்ல வேணும். அப்படியே ஓர் சொற்பப் பொய்யினாலே பிறருக்குப் பெரிய நஷ்டம் உண்டானால், அந்தச் சொற்பப் பொய் முதலாய் சாவான பாவமாகும். ஒரு ரூபாய் திருடுகிறது சாதாரணமாய் அற்பப் பாவமாயிருந்தாலும், அதை ஒரு ஏழையிடமிருந்து களவுசெய்தால், கனமான பாவம். ஆகையால் இப்பேர்ப்பட்ட விசேஷங்களைப் பாவசங்கீர்த்தனத்தில் அறிவிக்கவேண்டியது. இதுபோலவே, தன்னிலே கனமான பாவம், சில விசேஷக்கரிணிமித்தம் அற்பப்பாவமானால், அவைகளையும் சொல்லவேண்டியது.

(எ) பாவங்களின் வகையையுந் தொகையையும் மாத்திரமல்ல அவைகளின் கனத்தை மாத்திரம் அதிகரிக்கும் விஷயங்களை வெளிப்படுத்துவது அவசியமா? திரிதெந்தின் பொதுச்சங்கமானது பாவத்தின் வகையை மாற்றுகிற விஷயங்களை எல்லாம் சங்கீர்த்தனம் செய்யவேண்டுமென்று கண்டிப்பான கட்டளை கொடுத்திருக்கிறதென்றாலும், சாவான பாவத்தின் கனத்தை அதிகரிக்கிற விசேஷங்களைப்பற்றி யாதொன்றும் கட்டளையாகக் கற்பிக்கவில்லை. ஒருவன் பொருளைத் திருடியிருந்தால், அது நூறு ரூபாய் என்றும் ஆயிரம் ரூபாய் என்றும் விபரமாய்ச் சொல்லவேண்டியதில்லையென்று அநேக வேத சாஸ்திரிகள் உறுதியாய் உரைக்கிறார்கள். ஆனால் குருவானவர் ஆயத்தக்காரனுடைய தன்மையைக் கோரி, பாவத்தின் விபரங்களைப் பற்றிக் கேட்கும்போது, அவைகளை அறிவிக்கக் கடமை உண்டு. ஏனென்றால் தக்க பரிகாரத்தைக்கொண்டு ஆத்துமத்தைக் குணப்படுத்தவும், சரியான அபராதம் விதிக்கவும், இவைகளை அறிந்திருப்பது சில சமயங்களில் அவசரமாயிருக்கும்.



(ஐ) ஒரே ஒரு காரியமாத்திரஞ் செய்திருந்தபோதிலும் அதிலே அநேக பாவங்கள் அடங்கியிருக்கக் கூடும். நாம் செய்த காரியம் எத்தனை புண்ணியங்களுக்கும், கற்பனைகளுக்கும் விரோதமாயிருக்குமோ, அத்தனை பாவங்கள் அதிலே அடங்கியிருக்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக: கோவில் சாமான்களைத் திருடுகிறது வேத பத்தி என்னும் புண்ணியத்துக்கும், நீதியென்கிற புண்ணியத்துக்கும், விரோதமாயிருக்கிறபடியினால், இந்த ஒரே கிரியையில் தேவ துரோகம் என்கிற முதல் கற்பனைக்கு விரோதமான பாவமும், களவென்கிற ஏழாம்

கற்பனைக்கு விரோதமான பாவமும், ஆக இரண்டு பாவங்கள் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இந்தக் குற்றத்தைச் செய்தவன் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணுவதற்குக் களவு செய்தேன் என்று சொல்லுகிறது போதாது. கோவில் பொருளைத் திருடினேனென்று வெளிப்படுத்த வேண்டியது.

அப்படியே தாயை அடித்தவன், நாலாம், ஐந்தாம் கற்பனைகளை மீறினதினாலே, ஒரு ஆளை அடித்தேனென்று சொல்லாமல், தாயாரை அடித்தேனென்று சொல்வது அவசியம்.

ஒரு கலியாணக்காரன் தனக்கு உறவின் முறையான கலியாணக்காரியுடன் மோக பாவஞ் செய்ய ஆசைப்பட்டால், இந்த ஒரே ஆசையிலே நாலு சாவான பாவங்கள் உண்டு. ஆகையால் பாவசங்கீர்த்தனம் பண்ணுகையில், இந்த நாலு விஷயங்களையும் தெளிவாய் வெளிப்படுத்தவேண்டியது.

கலியாணம் செய்தவர்கள் புறத்தியில் மோக பாவங் கட்டிக்கொண்டால், ஆறாம் கற்பனையை மீறி நடப்பதுமன்றி, புருஷன் பெண்சாதிக்குள்ளே இருக்கவேண்டிய பிரமாணிக்கம் தவறி ஒருவரொருவருக்கு அநியாயம் செய்கிறார்கள்.



மேலும் இதினால் அநேக விசை புறத்திக் குடும்பத்துக்கும் மகா பெரிய அநியாயம் உண்டாகிறது.

### 9. மறந்துபோன பாவங்களின் பேரில்.

மனம் பொருந்தி ஒளிக்கும் பாவங்களும் மறந்துவிடும் பாவங்களும், ஒரே மாதிரியானவையல்ல. ஆத்தும சோதனை சரியாய்ச் செய்த பிறகு, ஒரு பாவம் மறந்து போயிருந்தால், தேவ நன்மை வாங்குகிறதற்கு விக்கினமில்லை. அது குருவானவர் கொடுத்த பாவப்பொறுத்தலால் மன்னிக்கப்பட்டது. இனிமேல் அடுத்த பாவசங்கீர்த்தனம் செய்யும்போது, மறந்து போன பாவத்தை அகத்தியம் வெளிப்படுத்த வேண்டியது. ஏனெனில், சேசுநாதர் சுவாமியின் கட்டளைப்படி, சகல சாவான பாவங்களையும் குருவானவரிடம் வெளிப்படுத்த வேண்டியது அவசரம். ஆனால் அடுத்த பாவசங்கீர்த்தனம் செய்கிறதற்கு முன்னே, அநேகந்தடவை தேவ நற்கருணை வாங்குகிறதுக்கு விக்கினமில்லை.—பாவத்தை ஒளித்து, கெட்ட பாவசங்கீர்த்தனம் செய்தவனேயென்றால், நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணும் வரையில், ஒரு விசை முதலாய் நன்மை வாங்கக்கூடாது.

10. சந்தேகத்துக்குரிய பாவங்களின் பேரில்.

(க) ஒரு காரியத்தைச் செய்தபின், அது பாவமோ பாவம் அல்லவோ என்றும், அதைச் செய்யும்போது சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ள மனதாயிருந்தேனோ என்றும், பாவசங்கீர்த்தனத்தில் அதைத் தெளிவுபடுத்தவேணுமோ என்றும், இவை முதலிய சந்தேகங்கள் உண்டாகி, அவைகளைப்பற்றி யோசிக்க யோசிக்க யாதொரு தீர்மானமும் செய்யக்கூடாமலிருக்கும்போது, அதைக் குறித்துக் குருவானவரிடத்தில் பேசுகிறது நல்லது. அப்போது மனதிலே சமாதானமும், சந்தோஷமும், ஞான ஆறுதலும் பூரணமாயுண்டாகும். அதைப்பற்றிப் பிற்பாடு நினைத்து கவலைப்படவேண்டியதில்லை. அந்தச் சந்தேகத்தை அறிவிக்காதே போனால், எப்போதும் மனதிலே கலக்கமாயிருக்கும். வெளிப்படுத்தாவிட்டால் பாவசங்கீர்த்தனம் பண்ணப்போகும்போதெல்லாம், இதைத் திரும்பச் சொல்லவேண்டியதில்லையோ என்கிற மனச் சஞ்சலம் உண்டாகும். சந்தேகமான பாவத்தைப் பாவசங்கீர்த்தனத்தில் சொன்னால் இந்தச் சஞ்சலம் நீங்கிப்போகும்.

(உ) சந்தேகமான பாவங்களைச் சொல்லுகிறது கடனோ?



நாம் கட்டிக்கொண்ட பாவங்கள் சாவான பாவமல்ல என்றும், அவைகளை மனம்பொருந்திச் செய்யவில்லையென்றும், முந்தின பாவசங்கீர்த்தனங்களில் வெளிப்படுத்தினேனென்றும் நினைப்பதற்குச் சரியான முகாந்திரம் உண்டானால், இவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் சாதாரணமாய் வெளிப்படுத்தக்கடனில்லை. மிஞ்சின பயமுள்ளவர்களும், கலக்கமுள்ளவர்களும் இப்படிப்பட்ட பாவங்களைச் சொல்லத் தேவையில்லை. பாவத்துக்கு அதிகமாய்ப் பயப்படாதவர்களும், பாவத்தின் கனத்தை அறியாதவர்களும், இப்பேர்ப்பட்ட பாவங்களைச் சந்தேகமுள்ளது போலே பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்துகிறது மெத்த நலம்.

(௩) ஆனால் ஒரு காரியத்தைச் செய்யுமுன், அது பாவமோ பாவமல்லவோ என்று சந்தேகப்பட்டால், அதைப்பற்றி விசாரித்துக் கூடியமட்டும் முன்னதாக அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் எந்தக் காரியத்தையும் செய்வதற்குமுன், சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வது கடன். சந்தேகத்தைத் தீர்க்காமல், மனச்சாட்சிக்கு விரோதமாய் எதைச் செய்தாலும், அது எப்பேர்ப்பட்ட பாவமென்று சமுசயப்படுகிறோமோ, அப்பேர்ப்பட்ட பாவமாயிருக்கும்.

ஏனெனில் இந்தச் சமயத்தில், மேற்சொன்ன காரியம் சர்வேசுரனுடைய கற்பனைக்கு விரோதமாயிருந்தாலும், அது செய்ய மனத்தீர்மானமாயிருக்கிறோமென்று காண்பிக்கிறோம்.

## 11. ஆகாத பாவசங்கீர்த்தனத்தின்பேரில்.

பாவசங்கீர்த்தனத்தில் யாதொரு சாவானபாவத்தை ஒளித்தால், அந்தப் பாவசங்கீர்த்தனம் பிரயோசனமில்லாமல்போய், சொன்ன பாவங்கள் பொறுக்கப்படாததுமன்றி, அப்படிச் செய்தவன் தேவதுரோகமும் கட்டிக்கொள்ளுகிறான்.

(க) சாவான பாவங்களை ஒளித்து, கள்ளப் பாவசங்கீர்த்தனம் செய்யும்படி, பசாசு மனதில் பயமும் கூச்சமும் எழுப்பப் பிரயாசப்படும். இந்தச் சோதனைக்கு ஒருபோதும் இணங்கக்கூடாது. பாவப்பொறுத்தல் அடைவதற்கும், மனச் சஞ்சலம் திகில் முதலியவை நீங்குவதற்கும், நித்திய தீர்வைகளுக்குத் தப்பித்துக்கொள்ளுவதற்கும், நல்ல பாவசங்கீர்த்தனத்தைத் தவிர வேறே வழியில்லை.

(உ) மேலும், குருவானவர் தயாளம் நிறைந்த சேசுநாதர்சுவாமியின் ஸ்தானத்திலிருப்பதால், அவர் பாவிகள்பேரில் எப்போதும் இரக்கமும் பட்ச



மும் காட்டவேண்டியிருக்கிறது. ஆகையினாலே, பயப்படுகிறதற்கு முகாந்தரமில்லை. இதுவுமன்றி, பாவியானவன் அநேக குருக்களுக்குள்ளே ஒருவரைத் தன் இஷ்டப்படி தெரிந்துகொண்டு, தனக்கு அறிமுகமாயிராதவரிடமும், வெகு தூரத்தில் ஜீவிக்கிறவரிடமும் பாவசங்கீர்த்தனம் செய்யலாம். பாவசங்கீர்த்தனத்திலே சொன்ன பாவங்களை வெளிப்படுத்துவதைவிட, குருவானவர் தேவ கட்டளையின்படி எவ்வித துன்ப ஆக்கினைகளையும், மரணத்தையுமுதலாய் ஏற்றுக்கொள்ளுவாரென்பது திண்ணம். இதினாலே ஒருபோதும் ஆகாத பாவசங்கீர்த்தனம் செய்வதில்லை என்று கெட்டியான பிரதிக்கினை பண்ணக்கடவோம்.

(ங) சாவான பாவத்தை ஒளிக்கிறதினாலே மாத்திரமல்ல, யாதொரு சாவான பாவத்திற்காக மெய்யான மனஸ்தாபப்படாமலும், இனிமேல் பாவத்தைச் செய்யமாட்டேனென்று கெட்டியான பிரதிக்கினை பண்ணாமலும், யாதொரு பாவத்துக்கு அவசியமான பரிகாரம் செய்ய மனதில்லாமலும், ஒருவன் பாவசங்கீர்த்தனம் பண்ணினால், பாவங்கள் பொறுக்கப்படமாட்டாது. ஒருவன் தக்க மனஸ்தாபமின்றிப் பாவசங்கீர்த்தனம்

செய்கையில், இந்த அறியாதிருந்தால், பாவசங்கீர்த்தனம் பிரயோசனமில்லாமல் போகும்; ஆனால் வேணுமென்று அறிந்து செய்தால், தேவ துரோகமாகும்.

(ச) ஆகாத பாவசங்கீர்த்தனஞ் செய்தவன் பாவப்பொறுத்தல் அடைவதற்குச் செய்யவேண்டியது என்ன?

மேலே சொன்ன யாதொரு காரணத்தினிமித்தம், ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணினவன், மறுபடி பாவசங்கீர்த்தனத்துக்குப் போகும்போது, அநுசரிக்கவேண்டிய காரியங்களாவன:—

முதலாவது, முன் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணினது முதல் எத்தனைவிசை பாவசங்கீர்த்தனஞ் செய்து, திவ்விய நன்மை, மற்றத் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று, தேவதுரோகம் கட்டிக்கொண்டானென்று அறிவிக்கவேண்டியது.

இரண்டாவது, ஆகாத பாவசங்கீர்த்தனத்தில் ஒளித்த சகல சாவான பாவங்களையும், அதுக்குப்பின் கட்டிக்கொண்ட சகல சாவான பாவங்களையும் சொல்லுகிறதுமல்லாமல், ஆகாத பாவசங்கீர்த்தனங்களில் சொன்ன சாவான பாவங்களையெல்லாம் திரும்பவும் வெளிப்படுத்தவேண்டியது. ஏனெனில் கள்ளப் பாவ



சங்கீர்த்தனத்துக்குப்பின் செய்த பாவங்களை உண்மையாகவே வெளிப்படுத்தினபோதிலும், அந்தத் தன்னாத்தனத்தைத் தெரிவிக்காதபடியால், பின்வருகிற பாவசங்கீர்த்தனங்களெல்லாம் வீணாய்ப்போய், அத்தனை துரோகங்களாகும்.

(ரு) இதைப்பற்றி அறியவேண்டிய விசேஷமாவது: தான் முன் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணின குருவானவர் நீங்கலாக, வேறே குருவானவரிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்தால் இப்போது சொன்னபிரகாரம் சகல பாவங்களையும் விபரமாய் வெளிப்படுத்துகிறது கடமை. ஆனால், தான் ஆகாத பாவசங்கீர்த்தனம் பண்ணின குருவானவரிடத்திலேயே திரும்பவும் போனால், முன் அவருக்கு அறிவித்த சாவான பாவங்களையெல்லாம் விபரமாய்ச் சொல்லுவது அவசியமில்லை. பொதுவாய் மாத்திரம் குறிப்படுத்துகிறது போதும்.

ஆயினும் கெட்ட பாவசங்கீர்த்தனத்தில் ஒளித்த பாவங்களையும், அதற்குப் பின்பாக இந்தக் குருவிடத்தில் ஒருபோதும் வெளிப்படுத்தாத பாவங்களையும், தேவதுரோகங்களையும், வழக்கப்பிரகாரம் விபரமாய்ச் சங்கீர்த்தனம் பண்ணவேண்டியது.

### 12. அற்பப்பாவத்துக்குப் பொறுத்தல்.

அற்பப் பாவங்களுக்குப் பொறுத்தல் அடையும்படி, அவைகளைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்வது கடனல்ல. அவைகளுக்கு ஆழமைய மனஸ்தாபப்பட்டால் போதும். இதுவுமல்லாமல் யாதொரு மேலான நற்கிரியை செய்தால், அற்பப்பாவம் பொறுக்கப்படும். ஏனென்றால் சாவான பாவமில்லாதவனிடத்தில் ஒவ்வொரு புண்ணியமுயற்சியினாலும் இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கிறது. தேவசிநேகம் இப்படி ஆத்துமத்தில் அதிகரிக்கும்போதெல்லாம் அதோடு கூட வெறுக்கப்பட்ட அற்பப் பாவங்களெல்லாம் மன்னிக்கப்படும்.

ஆயினும் முக்கியமான அற்பப் பாவங்களைக் குருவானவரிடத்தில் மனஸ்தாபத்தோடே வெளிப்படுத்துகிறது அதிக நல்லது.

(௧) பிரதான அற்பப்பாவங்களையாகிலும் சொல்லுவதினால் வருகிற பிரயோசனமென்னவென்றால், ஆத்துமத்தில் தேவ இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கும்.—குருவானவர் நமது ஸ்திதியை நன்றாய் அறிவார்.—நமது பாவத்தைக் குறித்து மனத்தத்தளிப்பும் சந்தேகமும் நீங்கிப்போம். ஓர் பாவத்தைக் மனம்பொருந்தி செய்தோமென்று அறிந்திருந்தையில், அந்தப் பாவம் அற்பப்பாவமோ சாவான பாவமோவென்று தீர்மானிக்கிறது சிலவேளை மகா வருத்தமான காரியம். வேதசாஸ்திரிகள் முதலாய் அநேகவிசை இதைத் தெளிவாய்ச் சொல்லத் துணியமாட்டார்கள். செய்த பாவத்தைத் தெரிந்தமட்டும் சொல்லுகிறது நமது கடமை. அது என்ன விதமான பாவமென்று தீர்மானிக்கிறது குருவானவருடைய காரியம். இப்படி நாம் அறிவித்த பாவத்தைக் குறித்து ஒருபோதும் சந்தேகப்படவேண்டியதில்லை.—கடைசியாக குருவானவருடைய ஆசீர்வாதத்தினாலும் ஞானஅபராதத்தினாலும் அற்பப் பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினை முழுதும் நீங்கிப்போகும், அல்லது குறைந்துபோகும்.



(௨) எந்த அற்பப் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறேமோ, அவைகளை மாத்திரம் குருவானவரிடத்தில் வெளிப்படுத்தவேண்டியது. அவைகளுக்காக மனஸ்தாபப்படாமலும், அவைகளை விட்டுவிட மனதில்லாமலும், பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவேண்டாம். இப்படிச் செய்கிறது வீண் காரியமும், தேவதிரவிய அநுமானத்துக்கு அவசங்கையுமாயிருக்கும். ஆனால் அது தேவதூஷணமல்ல.

(௩). தான் செய்த சகல சாவான பாவங்களையும் பாவசங்கீர்த்தனத்தில் சரியாய் வெளிப்-

படுத்தினால், அந்தச் சாவான பாவங்கள் நீங்கிப்போகிறதுந்தவிர, எந்தெந்த அற்பப் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறோமோ, அப்பாவங்களும், நாம் சொல்லாதபோதிலும், மன்னிக்கப்படும். நாம் மனஸ்தாபப்படாத அற்பப் பாவங்களுக்கோவென்றால், சொன்னாலும் பொறுத்தல் கிடைக்கமாட்டாது.

ஆகையால் ஒவ்வொரு அற்பப் பாவத்தின் அவலட்சணத்தை நினைத்து மனஸ்தாபப்படாமல், பொது முகாந்தரங்களைப்பற்றி மனஸ்தாபப்பட்டால் அதிக நலம். இப்படியே பொய்யானது உண்மைத்தனத்துக்கும், சொற்பக் களவானது நீதிக்கும் விரோதமான குற்றமென்று மாத்திரம் மனஸ்தாபப்படாமல், சகல அற்பப் பாவங்களும் சர்வேசுரனுக்கு அருவருப்பைக் கொடுக்கிறதினாலேயும், இவைகளோடே மோட்சத்தில் பிரவேசிக்கமுடியாததினாலேயும், உத்தரிக்கிற ஸ்தலத்தில் அதிக்கிய ஆக்கினை அநுபவிக்கவேண்டியதினாலேயும், இவை முதலிய முகாந்தரத்தைப்பற்றி மனஸ்தாபப்படுகிறது உத்தமம்.

### 13. பொதுப் பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி.

முந்தி செய்யப்பட்டுள்ள பல பாவசங்கீர்த்தனங்களைச் சேர்த்து, திரும்பச் செய்வது பொதுப் பாவசங்கீர்த்தனமென்னப்படும்.



(க) பொதுப்பாவசங்கீர்த்தனம் எப்போது அவசியம்? முன் செய்த பாவசங்கீர்த்தனங்கள் மனஸ்தாபக் குறைச்சலினாலேயும், சில பாவத்தை மனம்பொருந்தி மறைத்ததினாலேயும், இது முதலிய முகாந்தரங்களினாலே தோஷமாயிருக்குமாகில், இப்படிப்பட்ட ஆகாத பாவசங்கீர்த்தனம் உண்டான இந்நாள் வரைக்கும் செய்த சாவான பாவங்களை எல்லாம் பொதுப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தவேண்டியது. மேலும் அதிகாரமில்லாத குருவிடத்தில் செய்த பாவசங்கீர்த்தனங்களெல்லாம் செல்லாதென்கிறதினாலே, அப்பாவங்களை எல்லாம் திரும்பி வெளிப்படுத்துவது கட்டளை.

(உ) பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்ய அவசியமில்லாதபோதிலும், எந்தச்சமயத்தில் அது செய்யத் தூண்டலாம்? முன் செய்த பாவசங்கீர்த்தனங்கள் ஆகாதென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதானாலும், சந்தேகப்படுகிறதற்கு நல்ல முகாந்தரங்களிருக்கும்போது, அது செய்ய ஏவித் தூண்டலாம்.

(ங) எப்போது பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்கிறதற்கு உத்தாரம் கொடுக்கலாம்?—இதின் ஜீவியத்தில் முக்கியமானவையாகிய புதுநன்மை வாங்குதல், ஒரு அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளு

தல், மெய்விவாகம் செய்யப்போகுதல், சந்நியாச அந்தஸ்தில் பிரவேசித்தல், இது முதலான சமயங்களில் ஓர் பெரும் நன்மையை அடையலாமென்று நம்பிக்கையிருக்கிறதினாலே, பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்ய உத்தரவு கொடுக்கலாம். தான் கட்டிக்கொண்ட சகல பாவங்களையும் இப்பாவசங்கீர்த்தனத்தில் மறுபடி சொல்லக் கடமையில்லை. ஏனென்றால் முன்னே நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, இவைகளை வெளிப்படுத்தியிருப்பதினாலே, இவைகள் ஏற்கனவே பொறுக்கப்பட்டன. பிரதான பாவங்களில் சிலதைத் தெரிந்துகொண்டு சொல்லுகிறது போதும். விசேஷமாய் ஆறாங் கற்பனைக்கு விரோதமான பாவங்களைப் பாவசங்கீர்த்தனத்தில் விபரமாய்த் திரும்பச் சொல்லவேண்டாம். ஏனெனில் இது அபாயத்துக்குரிய சோதனைக்கு வழியாயிருக்கிறதினாலே, நன்மைக்குப் பதிலாய்த் தின்மையுண்டாகும்.

இப்போது சொன்ன விசேஷத்தை நன்றாய்க் கவனித்து, ஞான ஒடுக்க காலத்தில் அதிக மனஸ்தாபத்தோடு வருஷப் பாவசங்கீர்த்தனம் செய்கிறது, பக்தியுள்ளவர்களுக்கு மிகவும் பிரயோசனமாயிருக்கும்.



(ச) எப்போது பொதுப்பாவசங்கீர்த்தனஞ் செய்யலாகாது? மனக்கலக்கமும் மிதமிஞ்சின பயமுமுள்ளவர்களுக்குப் பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்வது பொல்லாப்பாயிருக்கிறதால், அவர்கள் பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்யாதபடி விலக்கவேண்டியது.

## 14. பாவப்பொறுத்தல் ஆசீர்வாதத்தின்பேரில்.

(க) பாவத்தைப் பொறுக்கிற ஆசீர்வாதமென்றால் என்ன? நல்ல ஆபத்தோடிருக்கிற பாவியின் குற்றத்தை நிவர்த்தியாக்கும்படி, சேசுநாதர்சுவாமி பேரால் குருவானவர் கொடுக்கும் தீர்ப்புத்தான் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதமென்னப்படும்.

நல்ல ஆபத்தோடிருக்கிறவர்களுக்குச் ஒழிதாகாலம் இந்த ஆசீர்வாதம் கொடாமலிருப்பது நலமென்று ஆத்தும குருவானவர் நினைத்தால் அப்படிச் செய்யலாம். இப்பேர்ப்பட்ட சமயம் தவிர, மற்றச் சமயங்களில் தக்க ஆபத்துள்ளவர்களுக்குப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் தந்தருள, குருவானவருக்குக் கடமையுண்டு.

(உ) எப்பேர்ப்பட்டவர்களுக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கக்கூடாது? வேதத்தின் பிரதான

சத்தியங்களை அறியாதவர்களுக்கும், தங்கள் அந்தஸ்துக்குத் தக்கதாக தாங்கள் அறியவேண்டியவைகளைப் படித்துக்கொள்ள மனமில்லாதவர்களுக்கும் பாவப் பொறுத்தல் கொடுக்கக் கூடாது.

இதுபோலவே தங்கள் பாவங்களுக்குக் கஸ்தியும் மனஸ்தாபமுமில்லாதவர்களுக்கும்;

பிறத்தியாருடைய சொத்துக்காவது, நல்ல பேருக்காவது, வருவித்த கஷ்டத்துக்குப் பரிகாரம் செய்யக்கூடுமாயிருக்கும், அதைச் செய்ய மனமில்லாதவர்களுக்கும்;

பகைவர்களாயிருந்து தங்கள் எதிராளிகளோடு சமாதானமாய்ப்போக ஒத்துக்கொள்ளாதவர்களுக்கும்;

கெட்ட பழக்கங்களைவிட்டுத் தங்கள் நடக்கைகளைச் சீர்திருத்திக்கொள்வதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடி உபயோகிக்க இஷ்டமில்லாதவர்களுக்கும்;

பிறருக்குக் காட்டும் துர்மாதிரிகளை நீக்கிவிட்டுத் தீர்மானம் செய்யாதவர்களுக்கும்;

பாவத்துக்கு ஏதுவான சமயங்களைத் தள்ளிப்போடச் சம்மதியாதவர்களுக்கும், மன்னிப்புக் கொடுக்கவே கூடாது.



சிலர் தங்கள் அநுபவசித்தியினால் இந்த ஆளிடம் அடிக்கடி பேசுவதாலும், இந்த இடத்துக்குப் போவதாலும், இன்னின்ன கெட்ட புஸ்தகத்தை வாசிப்பதாலும், இந்த அநுவவிருப்பதாலும், அடிக்கடி பாவத்தில் விழுகிறதாகக் கண்டும், இந்தச் சமயங்களை விலக்கி, தங்கள் நடத்தையை ஒழுங்குப்படுத்திக்கொள்ள ஒன்றுமே செய்ய மனமில்லாதிருப்பார்களேயாகில், இப்படிப்பட்டவர்களுக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கும் குருவானவர் குற்றவாளியாவார்.

இச்சமயங்களில், இதில் அவன் குருவானவரைப்பற்றி முறைப்பட்டுக் கோபங்கொள்ளாமல், அவருக்கு நன்றியறிதல் காட்டி, அவருடைய புத்திமதிகளுக்குக் காதுகொடுத்து, பாவப்பொறுத்தல் அடைவதற்குத் தன்னைத் தானே தக்க பிரகாரம் முஸ்திப்பு செய்துகொள்ள வேண்டியது.

(க) பாவப்பொறுத்தல் ஆசீர்வாதத்தினால் வரும் பலன்கள் என்ன? குருவானவர் "உன் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறேன்" என்று சொல்லும்போது, முன்னதாகவே உன் பாவங்கள் பொறுக்கப்பட்டனவென்று வெளிப்படுத்துகி

றாலொழிய, அவைகளாலே பாவங்களைப் பொறுக்கிறதில்லை என்று சில பதிதர்கள் பிதற்றுகிறார்கள். இது அபத்தம். ஏனெனில் இந்த வார்த்தைகளிலும் அவர் மெய்யாகவே பாவங்களை நிவர்த்தியாக்கி, ஆத்துமத்தின் மாசுகளை நீக்கி, இஷ்டப்பிரசாதத்தைத் தந்தருளச் சக்தியுடையவராயிருக்கிறார். பாவத்தைப் பொறுக்கவும் மன்னிக்காமலிருக்கவும், குருவானவருக்குத் தெய்வீக அதிகாரமுண்டு. அவர் மெய்யான நீதிபதியாயிருக்கிறார். அவர் கொடுக்கும் தீர்ப்பானது பரலோகத்திலும் பூலோகத்திலும் பலிக்குமென்பது வேத சத்தியம்.

அவர் பாவத்தைப் பொறுப்பதுமல்லாமல், பாவ மன்னிப்புக்கு விக்கினமாயிருக்கும் திருச்சபை விலக்கம், சாபம் முதலியவைகளையும் தாம் அடைந்திருக்கும் ஞான அதிகாரத்துக்குத் தக்கது நிவர்த்திசெய்கிறார்.

பாவப்பொறுத்தல் ஆசீர்வாதமானது, ஞானஸ்நானம் பெற்றபின் கட்டிக்கொண்ட சகல சாவான பாவங்களையும், தாம் மனஸ்தாபப்படும் அற்பப் பாவங்களையும் போக்குகிறது.

மேலும் பாவத்துக்குரிய நித்திய ஆக்கினையையும் நீக்குகின்றது.



அல்லாமலும் பச்சாத்தாபமென்னும் தேவதிரவிய அநுமானத்தின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட அபராதத்துக்கும் நயந்து ஆத்தும ஸ்திதிக்கும் தக்கதைப்போல், அநித்திய ஆக்கினையில் ஏறக்குறைய பெரும்பாகத்தையும் நீக்கிவிடுகிறது.

பாவிக்கு இஷ்டப்பிரசாதத்தை அளித்து, சுபாவத்துக்கு மேலான உயிரைத் திரும்பவும் கொடுக்கிறது; நீதிமானிடத்திலிருந்த இந்த இஷ்டப்பிரசாதத்தை அதிகரிக்கச் செய்கிறது.

தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்த போது, அடைந்திருந்த புண்ணிய பேறுபலன்கள் பாவத்தால் போக்கடிக்கப்பட்டன. பாவப் பொறுத்தல் இவைகளைத் திரும்பவும் அவனுக்குக் கிடைக்கச் செய்கிறது. ஒருவன் பாவம் செய்வதற்கு முன்கொண்டிருந்த அதே தேவ இஷ்டப்பிரசாத ஸ்திதியையும், அதே மோட்ச பாக்கிய சுதந்தரத்தையும் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் அவனுக்குத் திரும்பவும் அளிக்கிறதென்று அநேக வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

இத்தோடுகூட பச்சாத்தாபமென்கிற தேவதிரவிய அநுமானத்துக்குரிய வரப்பிரசாதத்தையும்

அவனுக்குக் கொடுக்கிறது. அதாவது சோதனைகளை ஜெயித்து, பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்வதற்கு வேண்டிய அநுக்கிரகப்பிரசாதத்தைத் தக்க தருணத்தில் அடைந்துகொள்ளும்படி விசேஷ பாத்தியதையைக் கொடுக்கிறது.

15. பாவசங்கீர்த்தன இரகசியத்தின்பேரில்.

(௧) பாவசங்கீர்த்தன முத்திரையென்றால், பச்சாத்தாபமென்னும் தேவதிரவிய அநுமானத்தின் மூலமாய் அறிந்தவைகளை வெளிப்படுத்தாமல் இரகசியமாய்க் காப்பாற்றவேண்டிய கனமான கடமைதான். சொற்பக் காரியம் முதலாய் வெளிப்படுத்துகிறது சாவான பாவமாகும். இந்தக் கடமை சுபாவத்துக்குரிய கடமையாயிருப்பதுமன்றி, தேவ சட்டத்தாலும், திருச்சபைச் சட்டத்தாலும் ஏற்படுத்தப்பட்ட கடமை. பாவசங்கீர்த்தனத்தில் அறிந்தவைகளை வெளிப்படுத்தவேண்டுமென்று யாராகிலும் குருவானவரைக் கேட்டால், அவர் எனக்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லவேண்டியது. ஏனெனில் உலகிலுள்ள எவனுக்கும் இப்பேர்ப்பட்ட கேள்வி கேட்க அதிகாரமேயில்லை. மேலும் இந்த இரகசியத்தை வெளி



யிடாமல் காப்பாற்றும்படி, குருவானவர் தன்னுயிரை முதலாய் இழக்கத் தயாராயிருக்க வேண்டியது.

(௨) இந்த இரகசியம் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயத்தக்காரன் மாத்திரம் தன் பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிப் பேசக் குருவானவருக்கு உத்தரவு கொடுக்கக்கூடும். அவன் இந்த உத்தரவு திட்டமாயும் மனசுவாதீனத்தோடும் கனமான முகாந்தரத்தினிமித்தமும் கொடுக்காவிட்டால், குருவானவர் ஒருபோதும் அதைப்பற்றிப் பேசவேகூடாது. பாவசங்கீர்த்தனத்தில் நடந்தவைகளைக் குறித்து இரகசியங் காக்க ஆயத்தக்காரனுக்குக் கடமையில்லையென்றாலும், குருவானவருக்கு யாதொரு கெடுதி உண்டாக்கக்கூடிய விஷயத்திலும், கேட்பவர்களுக்குப் பாவசங்கீர்த்தனத்தின்மேல் வெறுப்பு வருவிக்கக்கூடிய விஷயங்களிலும் பேசாமலிருப்பது அவனுக்குக் கடன்.

(௩) பாவசங்கீர்த்தன விஷயங்களைப் பாவசங்கீர்த்தன மூலமாய் அறிந்தவன், எவனுக்கும் அதை வெளியிடக்கூடாது. இதுபோலவே பாவசங்கீர்த்தனத்தில் சொல்லியவைகளைத் தற்செயலாய் முதலாய்க் கேட்டவனும், பாவசங்கீர்த்த

னத்துக்காக எழுதப்பட்ட பாவங்கள் அடங்கிய காகிதத்தைப் பாவசங்கீர்த்தனம் கொடுக்குமிடத்திலே எடுத்தவனும், குருவானவரைப் போல் இரகசியத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான்.

(௫) ஞான அபராதத்தின் பேரில்.

1. பச்சாத்தாபத்துக்குரிய பரிகாரமாவதென்ன?

குருவானவர் பாவசங்கீர்த்தனத்திலே கட்டளையிடுகிற நற்கிருத்தியங்கள் செபங்களைக் கொண்டு, நாம் பாவத்தினாலே சர்வேசுரனுக்கு வருவித்த அவமானத்துக்காக உத்தரிப்பதே பரிகாரமாம். மேலும் இந்த ஞான அபராதம் நமது அநித்திய ஆக்கினையை நீக்கவும் குறைக்கவும் உதவுகின்றது.

(க) ஞான அபராதத்தைக் கற்பிப்பது குருவானவருக்குக் கடன்; அதை ஏற்றுக்கொள்வது ஆயத்தக்காரனுக்குக் கடன். யாதொருவன் பிறத்தியாருக்குப் பொருள் நஷ்டம் அபகீர்த்தி வருவித்திருந்தால், அதைப் பரிகரிக்கவேண்டுமென்று குருவானவர் பாவசங்கீர்த்தனத்தில் கட்டளையிடுகிறதுமல்லாமல், பாவங்களின் தொகைக்கும் கனத்துக்கும் ஏற்றவிதமாயும், ஆயத்தக்



காரனுடைய ஸ்திதிக்கு ஒத்தபிரகாரமாகவும் அவர் ஞான அபராதம் குறிக்கவேண்டியது.

(உ) பாவசங்கீர்த்தனத்தில் விதிக்கப்பட்ட ஞான அபராதம், அநேக விசை ஆத்தும பிணிகளை நீக்குவதற்கேற்ற ஞான ஔஷதமாகிறது. ஒவ்வொருவனுடைய அவசரத்துக்குத் தக்கது, பாவ சமயங்களை நீக்கவேணுமென்றும், பற்பல நற்கிருத்தியங்கள், தபமுயற்சிகள் முதலியவை செய்யவேண்டுமென்றும் குருவானவர் கற்பிப்பார்.

(௩) ஆயத்தக்காரன் குருவானவர் குறித்தும் அபராதத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். மனதிலே ஒத்துக்கொள்ளாமல் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் பெற்றால், தேவதுரோகமாகும். ஏனெனில் அபராதமானது பாவசங்கீர்த்தனத்துக்கு ஒர் அவசியமான பாகமானபடியால் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், பாவப் பொறுத்தல் அடையமுடியாது.

(௪) கட்டளையிட்ட அபராதம் அதிக கடினமாயிருந்தால், மாற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளலாம். கொடுத்த அபராதத்தை மறந்துவிட்டால், பாவசங்கீர்த்தனம் செய்யும்

போது, அதற்குப் பதிலாக வேறே அபராதம் விதிக்கும்படி கேட்பது நலம்.

2. அபராதம் இடுகிறதற்கு முகாந்தரமென்ன?

பாவப்பொறுத்தலினால் எப்போதும் பாவ தோஷமும் நித்திய ஆக்கினையும் மன்னிக்கப்படுகிறதென்றாலும், சாதாரணமாய் இவ்வுலோகத்திலாகிலும் மறு உலோகத்திலாகிலும் அநித்திய ஆக்கினை அநுபவிக்கவேண்டியிருக்கும். ஞானஸ்நானம் பெற்றபின் பாவங் கட்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அதிக அறிவு இருப்பதினாலும், அவர்கள் அதிக நன்றிகெட்டவர்களாயிருப்பதினாலேயும், சர்வேசுரன் ஞானஸ்நானத்திலே அநித்திய ஆக்கினையையும் மன்னித்துக்கொள்வதுபோல பச்சாத்தாபத்திலும் சகலத்தையும் பொறுத்துக்கொள்ளச் சித்தமாகவில்லை. பாவத்தின் அவலட்சணத்தைக் காட்டவும், அதில் திரும்பவும் விழாதபடி நம்மைத் தடுக்கவும், பாவப்பொறுத்தல் பெற்றபிறகு முதலாய் நாம் கொஞ்சம் பரிகாரஞ் செய்யவேண்டுமென்று சித்தமாயிருக்கிறார்.

நாம்தானே சர்வேசுரனுக்கு வருவித்த நிந்தைக்காகத் தக்கபிரகாரம் உத்தரிக்கமுடியாதென்பது நிச்சயமே. ஆனால் சேசுநாதர்சுவாமி



பட்ட பாடுகளோடும் மரணத்தோடும் நமது பரிகார முயற்சிகளை ஒன்றித்து ஒப்புக்கொடுத்தால், அவருடைய அளவில்லாத பேறுபலன்களினிமித்தம் நமது உத்தரிப்பும் மகா மேன்மை அடையும்.

3. கொடுத்த அபராதத்தைத் தீர்க்கிறதெப்படி?

பாவசங்கீர்த்தனம் பண்ணினபிறகு குருவானவர் கொடுக்கும் அபராதத்தைத் தவறில்லாமல் கூடிய சீக்கிரத்தில் பக்தியோடு தீர்த்துப்போடப் பிரயாசப்படவேண்டியது. சாவானபாவத்துக்காகக் கொடுத்திருந்த அபராதத்தை விட்டுவிட்டால் சாவான பாவமாயும், அற்பப்பாவத்துக்காகக் கொடுத்திருந்ததை நிறைவேற்றாவிட்டால் அற்பப் பாவமாயுமிருக்கும்.

(க) சாவானபாவத்தோடு தன் அபராதத்தைச் செலுத்துகிறவன், கடமையைத் தீர்த்துப்போட்டாலும், மோட்சத்துக்குரிய பேறுபலன் யாதொன்றும் அடைகிறதில்லை. அன்றியும் அநித்திய ஆக்கினை நீங்கிப்போவதற்கு இஷ்டப்பிரசாதத்தோடு இருப்பது அவசியமானபடியால், கூடியமட்டும் இஷ்டப்பிரசாதத்தோடிருக்கும்போதே அபராதத்தைத் தீர்த்துப்போடவேண்டும்.

(உ) குருவானவர் மூலமாய்க் கற்பிக்கிற ஞான அபராதம் நமது பாவங்களை முழுதும் உத்தரிப்பதற்குப் போதாததினாலே, தக்க பரிகாரம் செய்யும்படி, பற்பல ஜெபங்கள் சொல்லுவதும், பிறர் ஆத்தும சரீரத்துக்கு உதவும் தர்மங்களை நிறைவேற்றுவதும், ஒருசந்தி முதலிய தபசு முயற்சிகளை ஒப்புக்கொடுப்பதும் உத்தம வழிபாடாகும். மேலும் இப்பூலோகத்தில் நமக்கு வரும் வியாதி, துன்பதுரிதங்களையெல்லாம் பொறுமையோடு அநுபவிப்பதும், திருச்சபைப்பலன்களை அடைவதும் நமது அநித்திய ஆக்கினைகளைக் குறைக்கின்றன.

(ரு) மனதின்படியே நாம் செய்கிற தபசுகளைப் பார்க்க, குருவானவர் கட்டளையிடும் அபராதத்தைச் சரிவரத் தீர்ப்பது அதிக பிரயோசனமாயிருக்கும். ஏனெனில் இந்த அபராதம் தேவதிரவிய அநுமானத்தின் அவசியமான பாகமாயிருப்பதால், இதின் வழியாய்ச் சேசுநாதர்சுவாமியின் பேறுபலன்கள் அதிக தாராளமாய் அளிக்கப்படும்.

## (VI) திருச்சபைப் பலன்களின் பேரில்.

பச்சாத்தாபம் என்னும் தேவதிரவிய அநுமானத்தின் வழியாக, பாவங்களின் தோஷ



மும், அவைகளுக்கு வரவேண்டிய நித்திய ஆக்கினையும் மன்னிக்கப்பட்டாலும், மனஸ்தாபத்தின் குறைச்சலினால், அந்தப்பாவங்களுக்கு இவ்வுலகத்திலாகிலும், மறு உலகத்திலாகிலும் சாதாரணமாய்ச் சில அநித்திய ஆக்கினைகள் அநுபவிக்கவேண்டியதாயிருக்கும். அந்த அநித்திய ஆக்கினையை இப்பூலோகத்தில்தானே தீர்த்துக்கொள்வது உத்தமம்.

### 1. திருச்சபைப் பலன்களினால் வரும் பிரயோசனமென்ன?

சகல பாவங்களையும், அவைகளுக்கு வரவேண்டிய நித்திய ஆக்கினையையும் பொறுக்க, சேசுநாதர்சுவாமி திருச்சபைக்கு அதிகாரம் கொடுத்ததுந்தவிர, அநித்திய ஆக்கினையை மன்னிக்கும் வல்லமையும் கொடுத்திருக்கிறார். அநித்திய ஆக்கினைக்குத் திருச்சபை கொடுக்கிற மன்னிப்பானது பலன் என்று சொல்லப்படும்.

(க) ஏதோ பாவம் திருச்சபையின் பலன்களால் பொறுக்கப்படுமோ? திருச்சபையின் பலன்கள் பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினையை மன்னிக்கிறதேயல்லாமல், நித்திய ஆக்கினையையாவது, சாவான பாவத்தின்

தோஷத்தையாவது, அற்பப்பாவத்தின் தோஷத்தையாவது, இனி கட்டிக்கொள்ளக்கூடிய எந்தப் பாவத்தையாவது மன்னிக்கிறதில்லை. பொறுத்தல் அடைகிறதற்றுமுன், அப்பாவங்களுக்கு முதலாய்த் திருச்சபையின் பலன்கள் பிரயோசனப்படமாட்டாது. பொறுக்கப்பட்ட பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினைமாத்திரம் பலன்கள் வழியாய்த்தீரும்.

(உ) திருச்சபைப் பலன்களினால் மற்றக்கடமைகளெல்லாம் நீங்கிப்போகிறதா?—பாவங்களினால் உண்டாகிற அநித்திய ஆக்கினையோடுகூட மற்றக் கடன்களையும் பலன்களைக்கொண்டு தீர்த்துப்போடலாமென்று எண்ணக்கூடாது. இதற்கு உதாரணமாக: மற்றவர்களுடைய பொருளை அபகரித்து, கீர்த்தியைக்கெடுத்து, அவர்களுக்குத் துர்மாதிரிகை காண்பித்து, நஷ்டம் வருவித்தவன் எவனோ, அவன் திருச்சபைப்பலன்களை அடைந்ததினால், தான் செய்யவேண்டிய பரிகாரங்களையெல்லாம் செய்து முடித்துவிட்டதாக எண்ணக்கூடாது. அந்தந்தக் குற்றத்தினால் வந்த நஷ்டத்துக்குத் தன்னாலான பரிகாரம் செய்யவேண்டும்.

2. திருச்சபைப் பலன்களை அடைகிறதெப்படி?

(க) யாதொரு பலனை அடையவேண்டுமானால், அதை அடையும்படியாக, திருச்சபை கற்



பித்திருக்கிற செபம், தர்ம[illegible] கிரியைகளெல்லாம் சரியாய்ச் செய்யவேண்டியது [illegible] அவசியம். வழக்கமாய் பரிபூரணபலன் [illegible]டைகிறதற்கு, பாவசங்கீர்த்தனம்பண்ணி, [illegible]வியநன்மைவாங்கி, ஒருகோவிலைச்சந்தித்து, [illegible] ஆர்ச். பாப்பானவர் கருத்துக்காக வேண்டி[illegible]கொள்ளவேணும்.

(உ) பலனடைகிற[illegible]குப் பாவமில்லாமலிருக்க வேணுமா?—ஆத்துமத்தில் சாவான பாவமிருக்கும்போது, தனக்குத்தானே ஓர் அற்பப் பலனும் அடையமுடியாது. அற்பப்பாவத்தின் மேல் இருதயத்தில் பற்றுதலிருந்தால், பரிபூரண பலனை முழுதும் பெறுவது கூடாத காரியம்.

திருச்சபை பலனை அடையும்படி பற்பல தர்மக்கிரியைகள் கற்பித்திருக்கும்போது, அவைகளெல்லாம் இஷ்டப்பிரசாத அந்தஸ்தோடு செய்வது மிகவும் பிரயோசனமுள்ளதாயிருக்கிறது, ஆனால் கடைசிக் கிரியையை நிறைவேற்றும்போதாகிலும், சாவானபாவம் இல்லாதிருக்கவேண்டும். பலனடைவதற்கு இது முழுதும் அவசியம்.

சாவானபாவத்தோடு இருக்கிறவன் தனக்காக யாதொரு பலனும் பெறக்கூடாதபோதிலும், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்

காக அவைகளை அடையலாம் என்று அநேக சாஸ்திரிகள் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இது உண்மையென்று நிச்சயமாய்ச் சொல்லக் கூடாததால், பாவம் நீங்கிப்போகும்படி, முந்த முந்த உத்தம மனஸ்தாப முயற்சிகள் செய்யப் பிரயாசப்படவேண்டியது.

3. உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக அநேக பலன்கள் அடையலாம்.

திருச்சபைப்பலன்கள் நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய உதவுகிறதுமல்லாமல், சிலது நீங்கலாக, மற்றப் பலன்களெல்லாம் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களின் வேதனையைக் குறைக்கக்கூடும்.

4. எத்தனைவகைப் பலன்களுண்டு?

திருச்சபைப் பலன்கள் இருவகைப்படும். அநித்திய ஆக்கினையை முழுதும் தீர்க்கிறபலன் பரிபூரணபலன் என்றும், ஓர் பங்கை மாத்திரம் தீர்க்கிற பலன் தனிப்பலன் அல்லது சில்லறைப் பலன் என்றும் சொல்லப்படும்.

5. தனிப்பலனென்கிறதற்கு அர்த்தமென்ன?

(க) திருச்சபை தனது ஞானபொக்கிஷத்திலிருந்து தனிப்பலன்களாகிற நூறுநாட்பலன்,



ஒருவருஷப்பலன், ஏழுவருஷம் ஏழுமண்டலப் பலன், இவை முதலிய சில்லறைப் பலன்களைக் கொடுக்கும்போது, உத்தரிக்கிற ஸ்தலத்தில் நூறுநாள், ஒருவருஷம், ஏழுவருஷம், ஏழு மண்டலமாகிய காலத்து வேதனை குறைந்து போகிறதென்று நினைக்கவேண்டாம்.

(உ) திருச்சபையின் துவக்கத்தில், பாவத்துக்குத் தண்டனையாக, நூறுநாள், ஒருவருஷம், ஏழுவருஷம் ஏழுமண்டலமும், இதுமுதலான காலங்களுக்கு அதிகமாயும், பற்பல வகைத் தபசு செய்யும்படி ஏற்பாடு இருந்தது. ஒரு மண்டலமென்றால் நாற்பதுநாள் தபசென்று அர்த்தமாகும். இப்போது திருச்சபை முன் சொல்லப்பட்ட பலவகைத் தபசுகளுக்குப் பதிலாகச் செபங்கள் நற்கிரியைகளைக்கொண்டு அநித்திய ஆக்கினைக்கு மன்னிப்புக் கொடுக்கிறது.

(ங) அப்போது நடந்த தபசு முயற்சிகளாலும், இப்போது அடைகிற சில்லறைப் பலன்களாலும், உத்தரிக்கிறஸ்தலத்தின் வேதனை எவ்வளவு குறைகிறதென்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அது சர்வேசுரனுக்குமாத்திரம் தெரிந்த காரியம்.

6. ஜூபிலி பலனைப்பற்றி—25 வருஷத்துக்கு ஒரு தடவையும், இன்னும் சமயாசமயத்திலும், அர்ச். பாப்பானவர் பிரசித்தப்படுத்துகிற விசேஷ பரிபூரண பலனுக்கு ஜூபிலிபலன் என்று பெயர்.—இந்த ஜூபிலி பலனுக்கும் சாதாரண பரிபூரண பலனுக்கும் தன்னிலேதானே யாதொரு வித்தியாசமில்லை. ஆனால் ஜூபிலி பலனை அடையும்படி அதிக ஜெபங்களும், தான தர்மங்களும், தபமுயற்சிகளும் செய்யவேண்டியிருக்கிறதினாலும், திருச்சபையிலுள்ளவர்கள் ஒருவர் ஒருவருக்காக அந்தக்காலத்தில் வேண்டிக்கொள்வதினாலும், இந்தப் பலனைச் சம்பூரணமாய் அடைவது அதிக சுலபமாயிருக்கும் விலக்கப்பட்ட பெரிய பாவங்களைப் பொறுக்கவும், சில மகாப் பெரிய பாவங்களுக்குத் திருச்சபையால் இடப்பட்டிருக்கும் சாபம், விலக்கம் முதலிய ஞான தண்டனைகளை மன்னிக்கவும், அநேக வார்த்தைப்பாடுகளை நீக்கிப் போடவும், அர்ச். பாப்பானவர் ஜூபிலிகாலத்தில் சகல குருக்களுக்கும் விசேஷ அதிகாரம் தருகிறார். அர்ச். பாப்பானவர் ஒவ்வொரு ஜூபிலிக்கும் செய்யும்படி குறித்திருக்கிற பற்பல நற்கிரியைகளை நுணுநுணுக்கமாய் அநுசரிக்கவேண்டியது.



[illegible] பலன்களை எல்லாரும் அடையப் [illegible]பட்டிருக்கிறார்களா?

(க) பற்பல பலன்களை அடைந்துகொள்ளலாமென்று சொல்லும்போது, இக்காலத்துக் கிறீஸ்தவர்கள் தபசுசெய்யக் கடமைப்பட்டவர்களல்லவென்று கனவிலும் நினைக்கப்படாது. ஆனால் நமது தாயாராகிய திருச்சபை பாவத்துக்குப் பரிகாரமாக நாம் தபசு செய்யும்படி புத்தி சொல்லுகிறதுமல்லாமல், நம்முடைய பத்தி பலக்குறைவுக்கு உதவியாக, பலன்களைத் தந்து, சகல விதத்திலும் நமக்கு நன்மைசெய்து வருகிறதென்று அறியவேண்டியது.

(உ) யாதொருத்தன் பலன்களை அடைவதினிமித்தம் தபக்கிரியைகளை அசட்டை செய்யலாமென்று நினைப்பது தப்பறை. பலன்களினால் பாவத்துக்குரிய அநித்திய ஆக்கினை குறையுமென்பது மெய்தான்; ஆனால் பலன் அடைவதற்கு வேண்டிய கிரியைகளைத்தவிர, மற்றத் தபக்கிரியைகளைச் செய்யாதவனுக்குக் கிடைக்கும் மோட்ச நன்மை வெகுவாய்க் குறைந்துபோகும். ஏனெனில் இப்பேர்ப்பட்டவன் படும் பிரயாசை கொஞ்சம். தபக்கிரியைகளையுங்கூட செய்பவனோவென்றால் தான் படும் வருத்தத்துக்கும் தனக்குத்தானே பலவந்தம் செய்து அடையும் வெற்றிக்கும் தகுந்த சம்பாவனையைப் பெறுக்

கொள்வான். இவன் பலன் அடைந்து வேண்டிய கிருத்தியங்களையுமல்லாமல், ஜெபம், தானம், தர்மம் முதலிய மற்றப் புண்ணியக் கிரியைகளையும் செய்துமுடிக்கிறான்.

(௬) இது விஷயத்தில் அர்ச். தோமாஸ் சொல்லுவதாவது: "பாவத்துக்குரிய அநித்திய ஆக்கினையை நிவாரணமாக்குவதற்குப் பலன்கள் வெகு ஏதுவானவைகளென்றாலும், மற்றுத் தபக்கிரியைகள் நமக்கு அவசியமான சம்பாவனையாகிய மோட்சபாக்கியத்தைப் பெறுவதற்கு மேலான சுதந்தரத்தைக் கொடுக்கிறது. இந்த நன்மை பேர அநித்திய ஆக்கினையின் நிவாரணத்தைவிட, ஆயிரமடங்கு அதிக அதிக்கத்தக்கது." மெய்யாகவே, அநித்திய ஆக்கினையின் நிவாரணம் முடிவுள்ளது. மோட்ச பாக்கியத்தின் அநுகரிப்போ, என்றென்றைக்கும் நிலைநிற்கும்.

---

## ஒன்பதாம் பிரிவு.

---

## அவஸ்தைபூசுதலின் பேரில்.

1. அவஸ்தைபூசுதலாவதென்ன?

மரண அவஸ்தையாயிருக்கிற வியாதிக்காரருடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் ஆறு



தலாக உண்டாக்கப்பட்ட தேவதிரவிய அநுமானமாம்.

(௧) அவஸ்தைபூசுதலை ஸ்தாபித்தது யார்?

சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த ஏழு தேவதிரவிய அநுமானங்களில் அவஸ்தைபூசுதல் ஒன்று என்பது திருச்சபையில் எக்காலத்திலும் எங்கும் விசுவசித்த வேதசத்தியமாம்.

(௨) ஆகையால் திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் நிரூபித்ததாவது: "அவஸ்தைபூசுதலானது சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த மெய்யான தேவதிரவிய அநுமானமில்லையென்றும், அப்போஸ்தலரான அர்ச். யாகப்பர் அதைப்பற்றிப் பேசுகிறதில்லை யென்றும், அது வேதபாரகர் ஏற்றுக்கொண்ட வெறும் அடையாளமென்றும், மனிதர் அதை ஏற்படுத்தினார்களென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

(௩) அர்ச். யாகப்பர் எழுதிவைத்ததாவது: "உங்களில் ஒருவன் வியாதியாயிருக்கிறானோ, அவன் சபையின் குருக்களை வரவழைப்பானாக. அவர்கள் ஆண்டவருடைய நாமத்தால் அவனைத் தைலத்தினால் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணுவார்கள். அப்போது விசுவாசமுள்ள

ஜெபம் வியாதிக்காரனை இரட்சிக்கும். ஆண்டவர் அவனுடைய வருத்தத்தைக் குறைப்பார். அன்றியும் அவன் பாவங்களோடிருந்தால், அவைகள் மன்னிக்கப்படும்."(இயா. V.14.15.)—எண்ணெய் பூசுவதற்கும், ஜெபத்திற்கும் பாவத்தைப் பொறுக்கிற சக்தி சேசுநாதர்சுவாமி மாத்திரம் கொடுக்கக்கூடும். சகல அவஸ்தைக் காரருக்கும் அவஸ்தைபூசுதல் கொடுக்கவேணுமென்று பொதுவிலே கற்பித்திருக்கிறதினாலேயும், அவஸ்தைபூசுதலினாலே இஷ்டப்பிரசாதம் அளிக்கப்படுகிறதினாலேயும், இது மெய்யான தேவதிரவிய அநுமானமென்பதற்குச் சந்தேகமில்லை.

2. அவஸ்தைபூசுதலினால் உண்டாகும் ஞானநன்மைகளென்ன?

அவஸ்தைபூசுதல் பெறுகிறதினாலே, ஆத்துமத்திலிருக்கும் தேவ இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கிறதுமல்லாமல், நாலு பிரதான ஞானநன்மைகள் உண்டாகின்றன.

(௧) பாவங்கள் பொறுக்கப்படும்.—இந்தத் தேவதிரவிய அநுமானம் பெறுகிறதற்கு இஷ்டப்பிரசாதத்தோடிருப்பது அவசரமானதினாலே சாதாரணமாய் அற்பப்பாவங்கள் மாத்திரம் விமோசனமாகிறது. ஆனால் பாவசங்கீர்த்த



னம் செய்யக்கூடாத ஒரு அவஸ்தைக்காரன் சாவான பாவத்தோடிருப்பானாகில், அவஸ்தைபூசுதலின் வழியாக முழு பாவப்பொறுத்தலடைய அடிமை மனஸ்தாபமாவது அவசரம்.—"பாவங்களோடிருந்தால்..." என்று அர்ச். யாகப்பர் சொல்லும்போது, ஒரு பாவமும் விடாமல் எல்லாப் பாவங்களும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்று அர்த்தமாகும்.

(௨) முன் செய்த பாவங்களினிமித்தம், ஆத்துமத்திலுண்டான ஞான அசமந்தமும், தின்மைக்குத் தூண்டுகிற துர்க்குணங்களும், பொறுக்கப்பட்ட பாவங்களுக்கு வரவேண்டிய அநித்திய ஆக்கினையும், அவஸ்தை பெறுகிறவன் ஆயத்தத்துக்குத் தக்கது நீங்கிப்போகும்.

(௩) மரணநேரத்தில் உண்டாகிற பசாசின் தந்திரங்களை ஜெயிக்கவும், வியாதியின் உபத்திரியங்களைப் பொறுமையோடு அநுபவிக்கவும், மரணத்தருவாய்க்குரிய திகில், மனச்சஞ்சலம், முதலியவைகளை அடக்கவும் விசேஷ வரப்பிரசாதம் கிடைக்கிறது.

(௪) சரீரத்துக்குச் சவுக்கியம் வருவிக்கும்படி, அவஸ்தைபூசுதலுக்குச் சக்தி உண்டு. அது

ஆத்தும இரட்சணியத்துக்குப் பிரயோசனமாயிருக்கும்போது மாத்திரம் அளிக்கப்படும்.

3. அவஸ்தைபூசுதல் நிறைவேற்றக் கூடியவர்கள் யார்?

(க) குருவானவர் மாத்திரம் நிறைவேற்றக்கூடும். திரிதெந்தின் பொதுச் சங்கம் திருச்சபையின் பரம்பரையான விசுவாசத்தை நிச்சயப்படுத்தித் தீர்மானித்ததாவது: "மேற்றிராணியாரிடத்திலே பட்டமடைந்த குருவானவரல்ல, ஒவ்வொரு சபையில் அதிக வயதுள்ளவர்கள் அவஸ்தைபூசுதல் கொடுக்கலாமென்றும், அது குருவானவருக்கே உரிய சுதந்தரமில்லையென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

(உ) எந்தக்குருவானவரும் தமது பட்டத்தின் சுதந்தரத்தினாலே அவஸ்தைபூசுதல் கொடுக்க வல்லமை அடைந்திருக்கிறதினால், அதிகாரமில்லாத குருவானவர் முதலாய் கொடுக்கும் அவஸ்தைபூசுதல் எப்போதும் மெய்யான தேவதிரவிய அநுமானமாகும்.

(ங) ஆனால் மகா பெரிய அவசரமிருக்கும்போது மாத்திரம், அதிகாரமில்லாத குருவான



வர் சாவானபாவம் கட்டிக்கொள்ளாமல் அதை நிறைவேற்றலாம். விசாரணைக் குருவானவரைக் கூப்பிடக் கூடுமானால், அவர் வந்து தமது அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட கிறீஸ்துவர்களுக்கு அவஸ்தைபூசுதல் கொடுக்கவேண்டுமென்பது கண்டிப்பான கட்டளை.

4. எப்போது அவஸ்தைபூசுதல் கொடுக்கலாம்?

அவக்கின வியாதியினாலே மரணம் வரக்கூடுமென்று சந்தேகப்பட்டவுடனே, வியாதிக்காரன் இன்னும் பெலனாயிருந்து அநேக நாள் உயிரோடிருப்பானென்று தெரிந்தாலும், அவஸ்தைபூசுதல் கொடுக்கலாம்.—வியாதி சொற்பமாயிருப்பதினாலே மரணம் வராதென்று நிச்சயமாய்த் தெரியும்போது, அவஸ்தை பூசுதல் கொடுக்கிறதற்கு உத்தரவில்லை. அதைக் கொடுத்தாலும், மெய்யான தேவதிரவிய அநுமானம் ஆகமாட்டாது. ஏனெனில் வியாதி மரணத்துக்கு ஏதுவாயிருப்பது, அவஸ்தைபூசுதலுக்கு அத்தியாவசியம். இதினிமித்தம் தான் மரணத்தீர்வையிடப்பட்டவர்களுக்கு அவஸ்தை நன்மை கொடுக்கலாமேயொழிய, அவஸ்தைபூசுதல் கொடுக்கலாகாது.

அவஸ்தைக்காரனுடைய ஆத்துமத்துக்கும், சரீரத்துக்கும், அதிகப் பிரயோசனமாயிருக்

கும்படி, ஜீவன் பிரிகிற சமயம் வரையிலும் காத்திராமல், அவனுக்குப் புத்தி தெளிவு இருக்கும்போதே, தாமதமின்றி, குருவானவரை வரவழைக்கவேண்டும். இது வியாதிக்காரனுடைய தாய் தகப்பன், உறவின் முறையார், முதலியவர்களின்மேல் சுமந்த விசேஷ கடமையாகும்.

௫. யாருக்கு அவஸ்தைபூசுதல் கொடுக்கலாம்?

புத்தி விபரம் அறிந்த சகல கிறீஸ்தவர்களும் மரண சமயத்திலே அவஸ்தைபூசுதல் பெறக் கூடும்.

(க) மந்திரம் தெரியாதவர்களும் புதுநன்மை வாங்காத பிள்ளைகளும், பாவங் கட்டிக் கொள்ளுகிறதற்குப் புத்தி விபரம் அறிந்திருப்பார்களானால், இத்தேவதிரவிய அநுமானத்தைப் பெறவேண்டும். சில பிள்ளைகளுக்கு ஏழு வயதுக்கு முந்தியே சாவானபாவம் செய்வதற்கு வேண்டிய புத்தியறிவு உண்டு. தங்கள் தாய் தகப்பன் அசட்டைத்தனத்தினாலே அவர்கள் பாவசங்கீர்த்தனம் அவஸ்தைபூசுதலில்லாமல், சாவான பாவத்தோடு செத்தால், இது எவ்வளவோ பரிதாபத்துக்குரிய மோசமாயிருக்கும்!



(உ) விருத்தாப்பியர் கடின வியாதிக்கு ஒத்தவராயிருக்கிறதினாலே, ஒரு தள்ளாத வயசுள்ளவன், குருவானவர் அவனிருக்கும் ஊருக்குத் திரும்பி வருமுன், இறந்துபோவானென்று கொஞ்சமாகிலும் சந்தேகப்பட்டால், அவனுக்கு அவஸ்தைபூசுதல் கொடுக்கலாம்.

(௩) குழந்தைகளும், பிறந்தநாள் துவக்கி பைத்தியம் பிடித்திருப்பவர்களும் ஒருபோதும் பாவம் செய்யாததினாலே, அவர்களுக்கு அவஸ்தைபூசுதல் கொடுக்கப்படாது. ஆனால் புத்தி விபரமறிந்த அஞ்ஞானி கடின அவஸ்தையாயிருக்கும்போது, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதுமல்லாமல், அவஸ்தைபூசுதலுங் கொடுக்கலாம். அவனுடைய பாவமெல்லாம் ஞானஸ்நானத்தின் வழியாக நீங்கிப்போயிருந்தாலும், அவன் முன் செய்த பாவத்திலிருந்து பிறந்த அசமந்தம், ஆசாபாசம், சோதனை முதலியவைகள் அவனிடத்தில் இன்னம் இருக்கின்றன. இவைகளை அடக்குவதற்கும், வியாதியின் உபத்திரவங்களைத் தணிக்கிறதற்கும், பசாசின் தந்திரங்களை ஜெயிக்கிறதற்கும், அவஸ்தைபூசுதல் வெகு பிரயோசனமாயிருக்கும்.

௬. எத்தனைவிசை அவஸ்தைபூசுதல் பெறலாம்?

சாவுக்கு ஏதுவான ஒவ்வொரு வியாதியிலும் ஒருவிசை மாத்திரம் அவஸ்தைபூசுதல் பெற

உத்தரவுண்டு. அவஸ்தை பெற்ற வியாதிக்காரன் கொஞ்சம் சௌக்கியமாகி, பிழைப்பானென்று சொற்ப நம்பிக்கையுண்டாகலாம். அதற்குப்பின் திரும்பவும் மரண அவஸ்தைப்படுவானாகில், அவனுக்கு மறுபடியும் அவஸ்தைபூசுதல் கொடுக்கத்தகும்.

7. அவஸ்தைபூசுதல் பெறுகிறதற்கு, தக்க ஆயத்தமென்ன?

(க) முந்த முந்த அவஸ்தைக்காரன் இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெற மனதாயிருக்கவேண்டியது.

(உ) இஷ்டப்பிரசாதத்தோடு இருக்கிறது முக்கியமான ஆயத்தம்.

(ங) சாவான பாவத்தோடேயிருக்கிறவன் இதைப் பெறுமுன் பாவசங்கீர்த்தனம் செய்கிறது கட்டளை. செய்யக்கூடாதானால், மனதுக்குள்ளே அடிமை மனஸ்தாபப்படுகிறது போதும்.

(ச) இந்தத் தேவதிரவிய அநுமானத்தால் வரும் ஞானப்பலன்களை பூரணமாய்ப் பெற்றுக்கொள்ளும்படி, சர்வேசுரனுக்குத் தன் உயிரை ஒப்புக்கொடுத்து, விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், மனஸ்தாபம் முதலான புண்ணியமுயற்சிகளை அடிக்கடி செய்கிறது உத்தமம்.



(ரு) மரணத்தறுவாயிலே, கூடுமானால், அவஸ்தைபூசுதலைப்பார்க்க, அவஸ்தை நன்மையாக அதிக கண்டிப்பான கடமையுண்டென்று கிறீஸ்துவர்கள் அறியக்கடவார்கள்.

8. அவஸ்தைபூசுதல் கொடுக்கிறது எப்படி?

(க) வியாதிக்காரன் பாவசங்கீர்த்தனம் செய்தபிறகு, குருவானவர் கூடுமானால் அவனுக்கு அவஸ்தை நன்மை கொடுத்து, அவஸ்தைபூசுதல் சடங்குகளை நிறைவேற்றுவார்.— ஐம்பொறிகளின் மேல் அர்ச். எண்ணெய் பூசி, வேண்டிய வார்த்தைகளை உச்சரிப்பார்.

(உ) ஏற்ற சடங்கெல்லாம் செய்து, தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றவேண்டும். கிறீக்கு சபையிலோவெனில், மூன்று அல்லது ஏழு குருக்கள் முதலாய் ஒரு வியாதிக்காரனின் ஐம்பொறிகளின்மேல் அர்ச்சியசிஷ்ட எண்ணெய் பூசுகிறதுண்டு. பூசுகிற குருவானவரே அந்தந்த பொறிக்குத்தக்க வார்த்தைகளை உச்சரிக்கவேண்டியது. ஒருவர் எண்ணெய் பூசி வேறொருவர் வார்த்தைகளை உச்சரித்தால், அது தேவதிரவிய அநுமானமாகமாட்டாது.

வியாதிக்காரன் சீக்கிரம் செத்துப்போவானென்று பயமிருந்தால், ஒரே ஒரு இடத்தில்

மாத்திரம் பூசி, சர்வேசுரன் உன் பாவங்களை எல்லாம் பொறுத்துக்கொள்ளுவாராக என்று சொல்லுகிறது போதும். இதற்குப்பின் நேரமிருந்தால், சகல பொறிகளிலும் ஒழுங்குப்படி பூசவேண்டியது.

9. அவஸ்தை பெறக்கூடாதானால், செய்யவேண்டியதென்ன?

(௧) பாவசங்கீர்த்தனமாவது அவஸ்தை பூசுதலாவது இல்லாமல், சாவானபாவத்திற்குப் பொறுத்தலடைய அடிமை மனஸ்தாபம் போதாதினாலே, குருவானவர் வரக்கூடாதபோது, வியாதிக்காரன் தான் செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, சர்வேசுரனிடத்தில் தாழ்ச்சியோடே பொறுத்தல் கேட்டு மன்றாடி, தேவசிநேகத்தைத் தன் மனதில் எழுப்பப் பிரயாசப்படக்கடவான்.

(௨) மரணசமயத்திலே பசாசு வெகு சோதனை வருவிக்கிறதினால், அவஸ்தைக்காரனுடைய ஆத்துமத்தில் பயமும் அவநம்பிக்கையும் உண்டாகாதபடி, அவன்கிட்ட இருக்கிற கிறீஸ்துவர்கள், அஞ்ஞானிகளைப்போல் அழுது கூக்குரலிடாமல், உருக்கத்தோடு ஜெபம்பண்ணவேணும். திரு இருதயத்தையும், தேவமாதாவையும்,



அர்ச். சூசையப்பரையும், காவலான சம்மனசையும் வேண்டிக்கொண்டு, அவஸ்தைக்காரனிடத்தில் பசாசு அண்டாதபடிக்கு, அடிக்கடி தீர்த்தம் தெளிக்கவேணும். மரிக்கும் தருணத்தில் அவன் உத்தரியம் தரித்திருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கவேண்டியது.

(௩) அன்றியும், பாடுபட்ட சுரூபத்தை அவன் கையில் கொடுத்து, செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டு, ஆண்டவருடைய அளவில்லாத கிருபையின்பேரில் அவன் நம்பிக்கை வைத்து, தேவ சித்தத்துக்கு அமைந்து, சந்தோஷமாய்த் தன் உயிரை ஒப்புக்கொடுத்து, சேசுவென்கிற பெயரை உச்சரித்துப் பாக்கியமான மரணமடையும்படியாக, சமீபத்திலிருக்கிறவர்கள் எல்லாரும் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## பத்தாம் பிரிவு.

## குருத்துவத்தின்பேரில்.

(1) குருத்துவமாவதென்ன?

திவ்விய பூசை செய்யவும், தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும், சுதந்தரத்

தையும் வரப்பிரசாதத்தையும் கொடுக்கிற தேவதிரவிய அநுமானமே குருத்துவமென்னப்படும்.

1. சேசுநாதர்சுவாமி குருத்துவத்தை எப்படி ஸ்தாபித்தார்?

திவ்விய கர்த்தர் தமது சிஷர்களுக்குள்ளே பன்னிரண்டு பெயரைத் தெரிந்தெடுத்து, தமது வேத சத்தியங்களை மூன்று வருஷமளவாக வெகு ஜாக்கிரதையுடன் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தார். (மார்க். III. 13; லூக். VI. 12.)—பிற்பாடு தமது திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் பலியாக ஒப்புக்கொடுக்க, பெரிய வியாழக்கிழமையன்று அவர்களுக்கு வல்லமையும் சுதந்தரமும் அளித்தார். (லூக். XXII. 19.) அவர் மரித்து உயிர்த்தெழுந்தருளியபின், பாவங்களை மன்னிக்கவும், மன்னிக்காதிருக்கவும், அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தருளினார். (அரு. XX. 22.)—கடைசியாக மெய்யான வேதத்தை உலகமெங்கும் பிரசங்கிக்கவும், விசுவசிக்கிறவர்களுக்கெல்லாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவும், தாம் மோட்சத்துக்கு எழுந்தருளிப் போவதற்குச் சற்றுமுன் அவர்களுக்குக் கற்பித்தார். (மத். XXVIII. 19.)—பிதாவினிடத்திலிருந்து தாம் பெற்றுக்கொண்



ட சகல அதிகாரங்களையும் அவர்களுக்குக் கொடுத்து, உலக முடியுமட்டும் அவர்களோடு எப்போதுமிருப்பதாக வாக்குத்தத்தம் செய்தருளினார். (மத். XXVIII. 18-20.)

(க) சேசுநாதர்சுவாமி தமது அப்போஸ்தலர்களை மெய்யான குருக்களாக ஏற்படுத்தி, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும், விசுவாசிகளை ஞான நெறியில் நடப்பித்து, ஒழுங்கு சட்டங்கள் செய்து, மீறிப்போகிறவர்களைத் தண்டிக்கவும், பூரண வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார்.

(உ) திருச்சபை ஒருபோதும் மாறாமல் நிலைத்திருக்கும்படி இந்த மேலான சுதந்தரங்கள் அவசரமாயிருக்கின்றன. ஆகையால் அப்போஸ்தலருக்குப் பின் வரவேண்டிய ஞான அதிகாரிகள் இந்த வல்லமையெல்லாம் கைக்கொள்ளும்பொருட்டு, திவ்விய கர்த்தர் குருப்பட்டமென்கிற தேவதிரவிய அநுமானத்தை ஸ்தாபித்தார்.

2. அப்போஸ்தலர்கள் மேற்றிராணியார்களையும் குருக்களையும் ஆறும் பட்டமுள்ள தியாக்கோன்மார்களையும் பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு வந்தார்கள். (நட. VI. 6.)

(க) சர்வேசுரனுடைய கட்டளைப்படி அர்ச். சின்னப்பரும் அர்ச். பர்ணபாவும் தேர்ந்துகொள்ளப்

பட்டு, குருத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்கள். "சவுலையும், பர்னபாவையும் நாம் நியமித்து அழைத்த ஊழியத்துக்காக நமக்குப் பிரித்துவிடுங்கள்" என்று இஸ்பிரீத்துசாந்துவானவர் அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றினார். அப்போது அவர்கள் உபவாசமாயிருந்து, ஜெபம் செய்து, இவர்கள்மேலே கரங்களை வைத்து, இவர்களுக்குப் போகும்படி விடைகொடுத்தார்கள். (நட. XIII. 23.)

(2) தீமோத்தேயுஸ் மேல் அர்ச். சின்னப்பர் "கைகளை நீட்டி" குருத்துவத்தை அளித்தபிற்பாடு, அவருக்கு "அருளப்பட்ட தேவ வரப்பிரசாதத்தை அவர் மூட்டி எழுப்பிக்கொள்ளவேணும்" என்று புத்திமதி சொல்லுகிறார். (II. திமோ. I. 6.)

3. திருச்சபையின் பாரம்பரையான போதனையென்ன?

குருத்துவமென்கிற தேவதிரவிய அநுமானத்தைப் பெறுகிறவர்கள் குருக்களுக்குரிய மேலான சுதந்தரங்களையும், தங்கள் அந்தஸ்தின் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுவதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களையும் கைக்கொள்ளுகிறார்களென்பது, திருச்சபையானது எப்போதும் எங்கும் விசுவசித்துவந்த சத்தியம். இதற்கு விரோதமான தப்பறைகளைப் போதிக்கிற



வர்களை, திருச்சபை எப்போதும் சாபமிட்டுத் தனக்குப் புறம்பாய்த் தள்ளிவருகிறது.

திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் இந்தப் பாரம்பரையான சத்தியத்தை நிச்சயப்படுத்தி வசனித்திருக்கிறதாவது: "புது ஏற்பாட்டில் தெளிவாய்க் காணப்படும் மெய்யான குருத்துவமில்லையென்றும்,—சேசுநாதர்சுவாமியுடைய மெய்யான சரீரத்தையும் மெய்யான இரத்தத்தையும் தேவ வசீகரம் பண்ணி ஒப்புக்கொடுக்கவும், பாவங்களைப் பொறுக்கவும் பொறுக்காமலிருக்கவும், இப்பூலோகத்தில் ஒருவருக்கும் ஞானவல்லமையில்லையென்றும்,—குருப்பட்டாபிஷேகம் சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான தேவதிரவிய அநுமானம் அல்ல என்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

ஆனபடியால், குருத்துவம் பெற்றவர்களுக்குத் திவ்வியபூசை ஒப்புக்கொடுத்து, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும், சகல கிறீஸ்துவர்களையும் திருச்சபையின் ஒழுங்குப்படி நடப்பிக்கவும் அதிகாரம் உண்டென்று ஒத்துக்கொள்ளக்கடவோம்.

## (ங) குருத்துவத்தைச் சேர்ந்த திருப்பட்டங்களைப் பற்றி.

**1. திருச்சபை விசுவாசிகள் எப்படி வகுக்கப்பட்டிருக்கிறார்கள்?**

திருச்சபையிலுள்ளவர்கள் யாவரும் இரண்டு வகுப்பில் அடங்குவார்கள். அதாவது, சாதாரண கிறீஸ்தவர்கள் ஓர் வகுப்பு. மோட்சவழியில் அவர்களை நடப்பிக்க நியமிக்கப்பட்டிருக்கிற தேவ ஊழியர்கள் இரண்டாம் வகுப்பு. இந்தத் தேவ ஊழியர்கள் சர்வேசுரனுக்குத் தங்களை விசேஷவிதமாய் ஒப்புக்கொடுத்து, தங்கள் பட்டத்துக்குத் தக்கபடி திவ்விய பூசைக்கு உதவியாயிருக்கிறார்கள். இவர்களுக்குள்ளிருக்கிற பலவகைப் பட்டங்கள் ஒன்றுக்கொன்று மேற்பட்டதாய்ப் பலவகை அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. குருப்பட்டத்தைத் தவிர, குருப்பட்டத்துக்கு வழியாயிருக்கிற வேறே பட்டங்களும் உண்டென்பது விசுவாச சத்தியமாகும். அப்படி இல்லையென்று சாதிக்கிறவன் திரிதெந்தீன் என்னும் பொதுச் சங்கத்தினால் சபிக்கப்பட்டவனாவான்.

**2. தேவ ஊழியருக்குரிய பொது அடையாளமென்ன?** தலைப்பட்டந்தான் இந்த அடையாளம்.



(௧) மற்றப் பட்டங்களைப் பெறுவதற்கு ஆயத்தமாக முந்த முந்த தலைப்பட்டம் (Tonsure) பெற வேண்டியது. இந்தச் சடங்கு குருத்துவமாகிய தேவதிரவிய அநுமானத்தைச் சேர்ந்த மெய்யான பட்டங்களுள் ஒன்று அல்ல. சாதாரண கிறீஸ்தவர்களிலிருந்து ஒருவன் திருப்பட்டம் பெற ஏற்றுக்கொள்ளப்பட்டானென்று அடையாளமாக, அவனுடைய தலையிலிருக்கிற மயிரை முடி ரூபமாக மேற்றிராணியார் கத்தரிக்கிறார். இதுதான் தலைப்பட்டமெனப்படும்.

(௨) தலைப்பட்டம் பெற்றவர்களுக்கு, குருக்கள் அணிந்துகொள்ளும் வஸ்திரம் அணிந்துகொள்ள உத்தரவுண்டு. இவர்கள் திவ்விய பூசைக்குதவி செய்து, திருச்சபையில் உத்தியோகம் செலுத்தி வருகிறார்கள். இவர்கள் விசேஷமான விதமாய்த் தங்களைச் சர்வேசுரனுக்குக் கையளித்திருப்பதால், சாதாரண கிறீஸ்துவர்களைவிட அதிக உத்தமர்களாய் நடக்கக் கடன்பட்டிருக்கிறார்கள்.

**(௩) தேவஊழியர்களுக்குள்ள சுதந்தரமேதென்ன?**

தலைப்பட்டம் பெற்று, குருப்பிரசாதி வஸ்திரம் தரித்திருக்கிறவர்களுக்குத் திருச்சபையானது இரண்டுவித சுதந்தரத்தை அளிக்கிறது:- முதலாவது நீதிஸ்தல சுதந்தரம். அதேதெனில்

அவர்கள் குருப்பிரசாதிகளால் அல்லாமல் உலக அதிகாரிகளால் விசாரித்துத் தீர்வையிடப்படலாகாது. திருச்சபைக்கிருந்த பூர்வீக உரிமையைத் தற்காலத்து இராஜாங்கத்தார் ஏற்றுக்கொள்ளாததினால், குருப்பிரசாதிகளும் மற்ற ஜனங்களைப்போலவே உலக காரியங்களில் நியாயாதிபதிகளால் தீர்வை இடப்படுகிறார்கள். இவ்வுலக இராச்சிய ஏற்பாட்டுக்கு அர்ச். பாப்பானவர் சம்மதங்கொண்டிருக்குமளவும், குருப்பிரசாதிகள் அதற்குக் கீழ்ப்படிவது சரியே.

இரண்டாவது: வேதகட்டளையின் சுதந்தரம். அதேதெனில் யாதாமொருவன் வேணுமென்ற கெட்ட கருத்துடன் தேவ ஊழியர[illegible]மாய் அடித்தால், அவன் சாபத்துக்குள்ளாகிறான்.

**3.—குருத்துவத்தில் எவ்வளவான பட்டங்களுண்டோ?** குருத்துவத்தில் அநேக வகுப்புகளுண்டு.

(க) இவைகள் ஒன்றுக்கொன்று முழுதும் வித்தியாசமாயிருந்தாலும், இவைகளெல்லாம் குருத்துவமென்கிற ஓரே தேவதிரவிய அநுமானமாகும். ஒவ்வொரு பட்டத்துக்கும் வெவ்வேறு அதிகாரமுண்டு. கீழ்ப்பட்டங்களெல்லாம் குருப்பட்டம் ஒன்றில் அடங்கியிருக்கின்றன. மேற்றிராணிமார்கள் மாத்திரமே, குருத்துவமென்கிற



தேவதிரவிய அநுமானத்தின் வல்லமையெல்லாம் பூரணமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

(உ) குருத்துவத்தின் பிரதான கதி ஏதென்றால், தேவ பலி ஒப்புக்கொடுப்பதே. கீழ்ப்பட்டங்களெல்லாம் அதனதன் அதிகாரத்துக்கு அளவாக பூசைப்பலியை நிறைவேற்றும் குருவானவருக்கு உதவியாயிருக்கவேண்டியது. இப்படி இந்தப் பட்டங்களுக்கெல்லாம் ஓரே கதியிருப்பதினிமித்தம், இவையெல்லாம் ஓரே தேவதிரவிய அநுமானத்தைச் சேர்ந்தவைகளாகின்றன.

**[illegible]லத்தீன் திருச்சபையிலே தலைப்பட்டத்தைத் தவிர, வேறு [illegible]னைப் பட்டங்களுண்டு?** ஏழு பட்டங்கள் உண்டு. அவைகளில் நாலு கீழான பட்டங்களெனப்படும். அவையாவன: போர்ட்டர் (கோவில் வாசற்படி காப்போர்) பட்டமும், லெக்டர் (வாசிக்கிறவர்) பட்டமும், எக்சொர்சிஸ்ட் (பசாசுகளை ஓட்டுகிறவர்) பட்டமும், அக்கோலித்து (பூசைக்கு வேண்டியவைகளை முஸ்திப்பு செய்கிறவர்) பட்டமுமாம். மற்ற மூன்று பட்டங்களும் மேலான பட்டங்களெனப்படும். அவையாவன: சப்தியாக்கோன் பட்டமும், தியாக்கோன் பட்டமும், குருப்பட்டமு

மாம். இந்த ஏழாம் பட்டத்தில் குருப்பட்டம் மேற்றிராணியார் பட்டம் ஆக இரண்டுபடிகளுண்டு.—குருப்பட்டமும் தியாக்கோன் பட்டமும் சேசுநாதராலும், சுப்தியாக்கோன் பட்டமும் கீழ்ப்பட்டங்களும் திருச்சபையாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்னத்தகும்.—மேலான பட்டங்கள் தேவ ஆராதனைக்கும் விசேஷமாய் திவ்வியநற்கருணைக்கும் அடுத்தவைகளாயிருப்பதால், அவைகள் திருப்பட்டங்களென்று சொல்லப்படும்.

(ச) கிரேக்க சபையில் [illegible] (வாசிப்பவர்) என்னும் ஒரே ஒரு சிறு பட்டம் மாத்திரமுண்டு. மற்றச் சிறு பட்டங்களுக்குரிய அலுவல்[illegible] வாசிகள் தானே பார்த்துக்கொ[illegible]றார்கள்.

4. இவ்வேழு பட்டங்களின் எவற்றைப் பெறும்போது, நடத்துவமென்னும் தேவதிரவிய அநுமானமும் ஞான அட்சரமும் உண்டாகிறது? ஆறும் பட்டமாகிய தியாக்கோன் பட்டமும், குருப்பட்டமும், மேற்றிராணியார் பட்டமும் தேவதிரவிய அநுமானமென்பது நிச்சயம். இப்பட்டங்களைப் பெறுகிறவர்களின் ஆத்துமத்தில் ஞான அட்சரம் பதியுமென்பதற்குச் சந்தேகமில்லை. மற்ற கீழ்ப் பட்டங்களில் தேவதிரவிய அநுமானமும்



ஞான அட்சரமும் உண்டாகிறதோ இல்லையோ என்பது நிச்சயமாய்த் தெரியாது.

5. ஏழு பட்டங்களுக்குமுள்ள விசேஷ கடமைகளென்ன?

(க) மூன்று திருப்பட்டங்களும் திவ்விய பலிபூசை பண்ணவும் இதற்கு உதவிசெய்யவும் மிகவும் பூச்சியமான வல்லபத்தைக் கொடுக்கிறதினாலே, இலத்தீன் திருச்சபையில் இப்பேர்ப்பட்ட வல்லபத்தைப் பெறுகிறவர்கள் தங்களுடைய பரிசுத்த தொழிலுக்கு அதிகப் பாத்திரமுள்ளவர்களாயிருக்கத்தக்கதாக, சாகுமட்டும் [illegible] அநுசரிக்கக் கடன்பட்டிருக்கிறார்கள். [illegible]ப்பேர்ப்பட்டவர்கள் தவறிப்போய் கலியாணம் செய்தால், ஒருக்காலும் மெய்விவாகமாகாது.—மேலும் நாள்தோறும் தேவ சங்கீத செபங்கள் சொல்வது இந்தப் பட்டங்கள் பெற்றவர்களுக்குள்ள மற்றொரு கடமையாகும்.

(உ) கீழான பட்டங்கள் தேவநற்கருணை எழுந்தருளுதல் செய்வதற்கு அவ்வளவு கிட்டினவிதமாய் உதவாததாலும், சொற்ப அதிகார பாத்திரம் அளிப்பதாலும், இவைகள் சின்ன பட்டங்களெனப்படும். இப்பட்டங்களைப் பெற்றவர்கள் தேவ சங்கீத செபம் சொல்லவேண்டிய

இல்லை. அவர்கள் கலியாணம் செய்தால் செல்லும். ஆனால் கலியாணம் செய்தவுடனே தங்கள் பட்டத்தின் சுதந்தரமெல்லாம் இழந்துவிடுகிறார்கள்.

### 6. விரத்தத்துவத்தின் பேரில்.

விரத்தத்துவமானது குருத்துவத்தின் மேலான பட்டங்களைப் பெற்றவர்களுக்கு வெகு மேன்மையான காரியம்.

(க) நமதாண்டவரும் அப்போஸ்தலர்களும் மெய்விவாகமானது பரிசுத்தமான அந்தஸ்தென்றும், முழுமனதுடன் விரத்தத்துவம் அநுசரிப்பது அதைவிட உன்னதமான அந்தஸ்தென்றும், இது முக்கியமாய்த் தேவ அலுவலை நிறைவேற்றுகிறவர்களுக்குத் தகுதியானதென்றும் போதிருக்கிறார்கள். (மத். XIX. 12.) உத்தம சாங்கோபாங்கத்தை அடைவதற்கு இது உசிதமான வழியாகும்.

கலியாண அந்தஸ்தைவிட ஏன் விரத்தத்துவ அந்தஸ்து தேவ ஊழியருக்கு அதிக உசிதமானதென்பதற்கு, அர்ச். சின்னப்பர் தக்க நியாயம் சொல்லுகிறார். "மனைவி இல்லாதவன் ஆண்டவருக்கு எப்படிப் பிரியப்படலாமென்று கர்த்தருக்குரியவைகளின்மேல் கவலையுற்றிருக்கிறான்.



மனைவியோடிருக்கிறவனோ, தன் மனைவிக்கு எப்படிப் பிரியப்படலாமென்று உலகத்துக்குரிய ...ல் கவலையுற்று இருமனப்பட்டிருக்கிறான்" என்றார். (I. கொரி. VII. 32-33.)

சேசுநாதர்சுவாமி எப்போதும் விரத்தராயிருந்ததுமன்றி, தமக்குத் தாயாராக ஓர் கன்னிகையையும், முன்னோடியாக விரத்தரான அர்ச். ஸ்நாபக அருளப்பரையும், தமது அதிக பிரியமுள்ள சீஷராக விரத்தரான அர்ச். அருளப்பரையும் தெரிந்துகொண்டாரென்று அர்ச். அகுஸ்தீன் வசனித்தார். மோக்ஷத்திலும் நமதாண்டவர் விரத்தர் கன்னிகைகளின்மேல் விசேஷ பட்சம் வைத்திருப்பதால், தேவ செம்மறிப்புருவையை அவர்கள் எங்கும் பின்செல்லுவார்கள். (காட்சி. XIV.) அர்ச். சின்னப்பர் விவாகம் செய்யாமல் ஜீவித்ததுமல்லாமல், அப்பேர்ப்பட்ட அந்தஸ்தில் மற்றவர்களும் ஜீவிக்கும்படி புத்திமதி சொல்லுகிறார். (I. கொரி. VII. 8.)

அர்ச். இராயப்பர் கலியாணம் செய்திருந்தபோதிலும், சேசுநாதரால் சீஷராக அழைக்கப்பட்டவுடனே, பெண்சாதியை விட்டுவிட்டுப் பின்சென்றார். இதினால்தான் "இதோ சகலத்தையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோம்" என்று அவர் சொல்லக்கூடுமாயிருந்தது. இந்த

வார்த்தைகளைக் கேட்டபின், நமதாண்டவர் இன்னின்ன காரியங்களைத் தமக்காக விட்டுவிடுவதற்கு வெகுமானம் உண்டென உரைக்கும்போது, மனைவியை விட்டுவிடுவதும் அவைகளில் ஒன்றென்று திருவுளம்பற்றினார்.

மேற்றிராணியார் "மன அமைதியுள்ளவரும், நீதியுள்ளவரும், பரிசுத்தரும்," (தீத்து. I. 8.)—"விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு நன்மாதிரியானவருமாய்" (I. திமோ. IV. 12.) இருக்கவேண்டுமென்று அர்ச். சின்னப்பர் கற்பிக்கிறார். தேவ ஊழியனை அலங்கரிக்கிற பற்பல புண்ணியங்களுக்குள்ளே கற்பும் ஒன்று என்று உரைக்கிறார். (2. கொரி. VI. 6.)

(௪.) வேதபுஸ்தகத்தில் அநேகாநேக இடங்களில் விரத்தத்துவமானது புகழப்பட்டிருந்தாலும், சேசுநாதர்சுவாமி இதைக் குருக்கள் எல்லோரும் அகத்தியம் அநுசரிக்கவேண்டுமென்று கட்டளையிடவில்லை.

திருச்சபையானது அதன் துவக்கத்திலே சேசுநாதர்சுவாமியுடையவும் அப்போஸ்தலர்களுடையவும் நடக்கையைப் பின்பற்றி, குருக்கள் விரத்தத்துவம் அநுசரிக்கவேண்டுமென்று போதித்து வந்தது.—அப்போஸ்தலர்கள் காலத்திலேதானே, கலியாணம் செய்யாதவர்களுக்கும்,



கலியாணம் செய்திருந்தால் தங்கள் பெண்சாதியோடு சேர்க்காமல் இருக்கக்கூடியவர்களுக்கும் மாத்திரம் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது.

"மேற்றிராணிமார்களும், குருக்களும், தியாக்கோன் பட்டம் பெறுகிறவர்களும், கலியாணம் செய்யாதவர்களாயாகிலும், அல்லது குருப்பட்டம் பெற்றபின் எப்போதைக்கும் கற்பை அநுசரிக்கிறவர்களாயாகிலும் இருக்கவேண்டும்" என, அர்ச். எரோணிமுஸ் எழுதிவைத்திருக்கிறார்.

இதினிமித்தம் இக்காலத்தில் குருத்துவத்தின் மேலான பட்டங்களைப் பெற விரும்புகிறவர்கள் இலத்தீன் திருச்சபையில் விரத்தத்துவ வார்த்தைப்பாடு கொடுக்கவேண்டியது.

(௫.) விரத்தத்துவத்தினால் வரும் நன்மைகளேவை? குருவானவருடைய அந்தஸ்தானது மிகவும் பரிசுத்தமாயிருக்கவேண்டியது. அவர் சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாயிருந்து, நமதாண்டவர் துவக்கிய மேலான அலுவலை நிறைவேற்றிக்கொண்டுவருகிறார். நாள்தோறும் சேசுநாதருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுப்பதே, அவருக்குள்ள முக்கியமான கடமையாகும். யூத குருப்பிரசாதிகள் திரு ஆலயத்தில் முறைமுறை

யாக மிருகங்களைச் சதாசமயம் பலியிட்டுவந்ததுமன்றி, ஒவ்வொருதினமும் இரண்டு செம்மறி ஆட்டுக்குட்டிகளைப் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. இந்த ஞான அலுவலுக்குக் குறிக்கப்பட்ட காலமுழுதும் தங்கள் பெண்சாதிகளோடு கூடி ஜீவிக்க அவர்களுக்கு உத்தரவு இல்லை. இதிப்படியிருக்க, தினந்தோறும் திவ்விய செம்மறி ஆட்டுக்குட்டியைப் பலியிடுகிற புதிய ஏற்பாட்டுக் குருப்பிரசாதிகள் எக்காலமும் விரத்தராய் ஜீவிப்பது அதிக யோக்கியமும் மேன்மையும்பொருந்திய காரியமல்லவா?

(ச) மேலும் குடும்பத்தினுடைய கவலையில்லாத குருக்கள் தங்களை முழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துவிடுவதால், ஆத்துமங்களை இரட்சித்து, விசுவாசிகளுக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்து, வியாதிக்காரர்களையும் எளியவர்களையும் பராமரிப்பதுமன்றி, அவசரமிருந்தால் தங்கள் ஞான மந்தைக்காகத் தங்கள் ஜீவனை முதலாய் இழக்கப் பயப்படமாட்டார்கள். ஆனால் குடும்பத்துடன் இருக்கிற குரு தன்னுடைய குடும்ப சவரட்சணையைப்பற்றிக் கவனிக்கவேண்டியிருப்பதால், மேற்சொன்ன காரியங்களை எப்படி உத்தமமாய் நிறைவேற்றக்கூடும்?



(ரு) குருக்கள் கலியாணஞ்செய்துகொள்வதால், எத்தனை விக்கினங்கள் உண்டாகிறதென்று கிரீக்கு சபையாரைக்கொண்டு கண்டுணரலாம். திருச்சபையின் துவக்கத்தில் கிரீக்குசபைக் குருக்களும், விரத்தத்துவம் அநுசரித்துவந்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் இவ்விஷயத்தில் தளர்ந்துபோனதால், அவர்கள்மேல் இந்தக் கட்டன் சுமத்தப்பட்டவில்லை.

கிரீக்கு சபையிலுள்ள மேற்றிராணிமார்கள் கலியாணம் செய்திருந்தாலும், பெண்சாதியோடு ஜீவிக்காமல் கற்பென்கிற புண்ணியத்தை முழுதும் அநுசரிக்கக் கடன்பட்டிருக்கிறார்கள். குருக்களுக்கும் தியாக்கோன் பட்டம் பெற்றவர்களுக்கும் அப்படியல்ல; பட்டம் பெறுகிறதற்கு முன் கலியாணம் செய்திருந்தால், தங்களுடைய பெண்சாதியோடிருக்கலாம். ஆனால் அவர்களுடைய பெண்சாதி இறந்தால், மறு கலியாணம் செய்ய அவர்களுக்கு உத்தரவு இல்லை. சப்தியாக்கோன் பட்டம் பெற்றவர்கள் தங்களுக்கு இஷ்டமிருந்தால் திரும்பக் கலியாணம் செய்துகொள்ளலாம்.

(சு) விரத்தத்துவ விஷயத்தில் அர்ச். பாப்பானவருக்குள்ள அதிகாரமென்ன? கிரீக்கு சபையாருக்குள்ளே குருக்கள் கலியாண அந்தஸ்தில் சீவிக்கிறதால் வெகு விக்கினங்களுண்டானாலும்,

அர்ச். பாப்பானவர் திருச்சபையில் உட்பட்டிருக்கும் கிரேக்குசபைக் குருக்களுக்குக் கலியாணத்தை முழுதும் விலக்கிப்போடவில்லை. [illegible]த்தத்துவத்தை அநுசரிக்க வேண்டுமென்பது திருச்சபையின் கற்பனையாக மாத்திரம் இருப்பதினால், இலத்தீன் திருச்சபைக் குருக்களுக்கு முதலாய் இந்தக் கடமையை நீக்கிவிட அர்ச். பாப்பானவருக்கு அதிகாரமுண்டு. இந்த உத்தரவு வெகுவெகு அபூர்வமாய் மகா கனத்த முகாந்திரங்களுக்காக மாத்திரம் கொடுக்கப்பட்டது; இலத்தீன் சபையில் இப்பேர்ப்பட்ட விசேஷித்த உத்தரவு பெற்றவர்கள் குருத்துவத்துக் கடுத்த தொழில்களை நிறைவேற்றப்படாதென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது.

## (III.) திருச்சபையின் ஆளுகைக்குரிய அதிகார முறைமையின் பேரில்.

சேசுநாதர்சுவாமி தமது மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்கும் திவ்வியபூசை பண்ணவும் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவும் வல்லமை அளித்ததுமன்றி, சகல கிறீஸ்துவர்களையும் ஞானநெறியில் நடப்பிக்கவும் அதிகாரம் கொடுத்தருளினாரென்று மேலே சொல்லியாயிற்று.





திருச்சபையைச் செவ்வையாய் நடத்தும்படி சேசுநாதர்சுவாமி ஞான மேய்ப்பருக்குள்ளே அதிகார முறைமையை நியமித்து, கீழ்ப்பட்டவர்கள் மேலதிகாரமுள்ளவர்களுக்கு ஒழுங்குக்கிரமமாய் அமைந்திருக்கக் கட்டளையிட்டார். திருச்சபைக்கு அர்ச். பாப்பானவர் காணப்படும் தலைவராயிருக்கிறதுமன்றி, அவரால் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமார்களும், அந்த மேற்றிராணிமார்களால் நியமிக்கப்பட்ட குருக்களும், ஞான ஆளுகைக்குரிய அதிகாரத்தைக் கைக்கொள்ளுகிறார்கள்.

### I. மேற்றிராணிமார்களுக்கும் குருக்களுக்குமுள்ள அதிகாரத்தின் பேரில்.

(க) குருத்துவமென்னும் தேவதிரவிய அநுமானத்தினாலே நமது ஆண்டவருடைய திருச்சரீரத்தின்மேலே மாத்திரமல்ல, அவருடைய ஞானசரீரமாகிய கிறீஸ்துவர்கள்மேலும் குருக்களுக்குச் சுதந்தரமுண்டாகிறது. விசுவாசிகள்மேலுள்ள இச்சுதந்தரம் ஞான அதிகாரமென்னப்படும். திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் நிருபித்ததாவது: "மேற்றிராணிமார்கள், குருக்கள், தேவஊழியர்களென்னும் இந்த ஞான அதிகார முறைமையைக் கத்தோலிக்குத் திருச்சபையில் சர்வேசுரன் ஸ்தாபிக்கவில்லையென்றும்,...மேற்

ற்றிராணிமார்கள் குருக்களுக்கு மேற்பட்டவர்களல்ல என்றும், ...அவர்களுக்குக் குருக்களைவிட அதிக வல்லமையில்லையென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

(உ) அதிகாரம் பெறுவது அவசியமா? குருத்துவத்துக்குரிய சுதந்தரத்தை மாற்றவும், முழுதும் எடுத்துவிடவும், ஒருவராலும் முடியாது. ஆனால் ஞான அதிகாரத்தையும் அதின் விஸ்தாரத்தையும் மாற்றவும், கூட்டவும், குறைக்கவும், முழுதும் எடுத்துப்போடவும், மேல் அதிகாரிகளுக்குப் பூரண வல்லமை உண்டு. ஆனதால்தான் குருவானவருக்கு யாதாமொரு காரியத்தைச் செய்ய அதிகாரம் அவசரமாயிருக்கையில், உத்தரவின்றி அக்காரியத்தைச் செய்தால், அது வியர்த்தமாய்ப் போகிறது. இவ்வண்ணமே, குருத்துவமென்கிற தேவதிரவிய அநுமானத்தினால் குருவானவர் பாவங்களைப் பொறுக்கலாமென்றாலும், உத்தரவும் அதிகாரமுமின்றி பாவப்பொறுத்தல் கொடுத்தால் அது செல்லாது. அப்பேர்ப்பட்ட குருவிடம் சொன்ன பாவங்களை அதிகாரமுள்ள குருவானவரிடத்தில் மறுபடியும் சங்கீர்த்தனம் செய்யவேணும்.



2. குருத்துவத்தில் அதிகாரவரிசை முறையுண்டோ?

அதிகாரவரிசை என்றால், திருச்சபையிலே பல உத்தியோகஸ்தர்களுண்டென்றும், அவர்கள் ஒழுங்குடன் ஒருவரொருவருக்குக் கீழ்ப்படிந்து வருகிறார்களென்றும் அர்த்தமாகும். குருத்துவத்தின் பட்டங்களில் அநேக படிகளிருக்கிறதைப்போல, அதின் அதிகார ஆளுகையில் பலவகைப் படிகளுண்டு.

(க) அர்ச். பாப்பானவர் திருச்சபைக்குத் தலைவராயிருந்தாலும், மேற்றிராணியாராகிய மட்டும் அவருக்கும் மற்ற மேற்றிராணியார்களுக்கும் சொற்ப வித்தியாசமுமில்லை. ஆனால் அவர் உரோமை நகர் மேற்றிராணியாராகவும், அர்ச். இராயப்பருடைய ஸ்தானாபதியாகவும் தெரிந்துகொள்ளப்பட்ட உடனே, அவருக்குக் கிடைக்கும் தேவ உரிமையினாலே மகா உன்னத மகிமை அடைந்து, திருச்சபை முழுமையிலுமுள்ள மேற்றிராணிமார்கள், குருக்கள், விசுவாசிகளின் பேரில் சர்வ அதிகாரத்தை அடைகிறார். அர்ச். பாப்புமார்களின் பட்டாபிஷேகம் குருத்துவமென்னும் தேவதிரவிய அநுமானத்துக்குச் சம்மந்தப்பட்டதல்ல. திருச்சபையில் யார் மேற்றிராணிமார்களாக வேண்டுமென நியமிக்கிறதும், அவர்களுக்கு வேண்டிய விசாரணை நாடு

களைக் குறிப்பதும், அர்ச். பாப்பானவர் தான். சில இராஜாக்கள் அர்ச். பாப்பானவருடைய உத்தரவு பெற்று மேற்றிராணிப் பட்டத்துக்கு ஒருவனைக் குறிக்கலாமென்றாலும், குறிக்கப் பட்டவர்களை அங்கீகரித்துக் கொள்வதும் அங்கீகரியாதிருப்பதும் அர்ச். பாப்பானவருடைய சித்தமே.

(௨) கர்தினல்பட்டம் குருத்துவத்தைச் சேர்ந்ததல்ல. இக்காலத்தில் திருச்சபையில் எழுபது கர்தினல்மார்களுண்டு. இவர்களுக்குள்ளே ஆறுபேர் மேற்றிராணிக் கர்தினல்மார்கள், ஐம்பதுபேர் குருக்கர்தினல்மார்கள். மீதி பதினாலுபேர் தியாக்கோன் கர்தினல்மார்கள். அநேகமாய், குருக் கர்தினல்மார்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் மேற்றிராணிமார்களாயும், தியாக்கோன் கர்தினல்மார்க்ள் என்று அழைக்கப்படுகிறவர்கள் குருக்களாயுமிருக்கிறதுண்டு. இம்மேன்மையான உத்தியோகம் அர்ச். பாப்பானவருக்கு உதவிசெய்யவும் ஆலோசனை கொடுக்கவும் திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதேயொழிய, சேசுநாதர்சுவாமிதாமே இதை ஸ்தாபிக்கவில்லை.

(௩) மேற்றிராணிமார்கள் அப்போஸ்தலர்களுக்குப் பதிலாயிருக்கிறதால், அவர்களுடைய



அதிகாரம் இவர்களுக்குமுண்டு. இவர்களுக்குள்ளே மேலான அதிகாரத்தையும் மேலான மகிமையையும் கொண்டிருக்கிறவர்கள் பேத்ரியார்க் (பிதாப்பிதா மேற்றிராணிமார்கள்) என்னப்படுவார்கள். முற்காலத்தில் அந்தந்த நாடுகளிலுள்ள அதிமேற்றிராணிமார்களுக்கும், மேற்றிராணிமார்களுக்கும் இவர்கள் சிரேஷ்டராயிருந்தார்கள். இக்காலத்தில் சிலர் தவிர மற்றவர்களுடைய உத்தியோகம் மகிமையுள்ள வெறும் பெயரேயல்லாது, விசேஷ அதிகாரம் யாதொன்றும் அளிப்பதில்லை.

(௪) அதிமேற்றிராணிமார்கள் மகிமையிலும், அதிகாரத்திலும் தங்களைச் சேர்ந்த நாட்டிலுள்ள மேற்றிராணிமார்களுக்கு மேற்பட்டிருக்கிறார்கள்.

(௫) மேற்றிராணிமார்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட நாட்டிலுள்ள குருக்களுக்கும் விசுவாசிகளுக்கும் தலைவர்களாயிருக்கிறார்கள். தங்கள் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சட்டதிட்டங்களை ஏற்படுத்தவும், நீதி செலுத்தவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

(ரு) அதிசிரேஷ்ட குருக்களும், பங்குசுவாமியார்களும் கிறிஸ்துவர்களை விசாரணை செய்வதில் மேற்றிராணிமார்களுக்கு உதவியாயிருக்கிறார்கள். மேற்றிராணியாரின் வழியாக இவர்களுக்கு இந்த அதிகாரங்கிடைக்கிறது.

3. குருவானவருடைய மேன்மையின்பேரில்.

(க) சம்மனசுக்களுக்கு முதலாய் இல்லாத அதிகாரம் குருவானவருக்குண்டு. எனென்றால் திவ்விய நற்கருணையில் சேசுநாதர்சுவாமியை எழுந்தருளிவரச் செய்யவும், மனிதருக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கவும், சம்மனசுக்களுக்கு அதிகாரமில்லை. சேசுநாதர் சுவாமி குருவானவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

(உ) திருச்சபையின்பேரால் குருவானவர் சகல தகனப்பலிக்கும் மேலான பலியாகிய திவ்விய பூசையை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறார். சகல வஸ்துக்களின்பேரிலும் சர்வ வல்லமை கொண்டிருக்கிற சர்வேசுரனுக்கு தேவ ஆராதனை செலுத்துவதற்காகவும், சகல கிறிஸ்துவர்களும் அடைகிற எண்ணிறந்த உபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்வதற்



காகவும், செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகவும், ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய உபகார சகாயங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகவும், குருவானவர் இந்த உன்னத பலியிடுகிறார்.

இதுவுமன்றி, திருச்சபையின்பேரால் நாள்தோறும் சங்கீத செபங்கள் செய்து ஒப்புக்கொடுக்கிறார்.

(ங) குருவானவர் சர்வேசுரனிடத்தில் மனிதருக்கு மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். திவ்விய கர்த்தர் இவ்வுலகத்தில் துவக்கின வேலையை அவருடைய ஸ்தானபதியாயிருந்து நடத்துகிறவர் இவரே. இவரே இன்னும் கடைசிபரியந்தம் ஆத்துமங்களை இரட்சித்து அர்ச்சிக்கிற அலுவலை நிறைவேற்றும் சேசுக்கிறிஸ்துநாதருக்கு பதிலாளியாக இருக்கிறார். நம்மில் ஒவ்வொருவருடைய பாவங்களையும் கழுவி, நரகவாசலை அடைத்து, மோட்சவாசலைத் திறக்கிறவர் இவரே. குருவானவரில்லாமல் இப்பூலோகத்தில் நமது ஆத்தும போசனமாகிய தேவநற்கருணை கிடைக்க வழியில்லை. நாம் புதுநன்மை வாங்கும்போது மாத்திரமல்ல, நாம் நன்மை வாங்கும்போதெல்லாம் நமதாண்டவருடைய திருச்சரீரத்தை நமக்குக் கொடுக்கிறவர் குருவானவரே.

இவரே மரணசமயத்தில் பசாசினால் நமக்குண்டாகும் தந்திர சோதனைகளிலே ஒத்தாசை செய்து, அவஸ்தை பூசுதல் வழியாய் நம்முடைய ஆத்துமத்தை உறுதிப்படுத்தி, கடைசி விசையாக நமக்குப் பாவப்பொறுத்தல் அளித்து, சர்வேசுரன் சமுகத்தில் சந்தோஷமாய்ப் போய்ச்சேர நம்மை முஸ்திப்புப் படுத்துவார்,—நமது ஆத்துமம் உத்தரிக்கிற ஸ்தலத்தின் நெருப்பிலே வெந்து வேதனைப்படுகிற போது, நாம் அதைவிட்டு சீக்கிரம் வெளிப்பட நமக்கு உதவிசெய்து, அதிலிருந்து நம்மை விடுதலையாக்குகிறவர் முக்கியமாய் இவரே.

## IV. யார் குருத்துவமென்கிற தேவ திரவிய அநுமானத்தை நிறைவேற்றக்கூடும்?

மேற்றிராணியார்களுக்கு மாத்திரம் இந்தச் சுதந்தரமுண்டு. இது திருச்சபையின் பரம்பரையான போதனை.

(க) இது மேற்றிராணியார் பட்டத்தின் சுதந்தரமானதினாலே, திருச்சபையினின்று விலக்கப்பட்ட மேற்றிராணியார்கள்கூட குருத்துவத்துக்குரிய மெய்யான பட்டங்களை அளிக்கக்கூடும். ஆனால் அவர்கள் இப்படிச் செய்தால், தேவதுரோகம் கட்டிக்கொள்ளுகிறார்கள்.



(உ) மேற்றிராணியார் தம் அதிகாரத்துக்கு உட்பட்டவர்களுக்கு மாத்திரம் குருத்துவ பட்டங்களை நிறைவேற்றலாம். தம் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிராதவர்களுக்கு அவரவர்களுடைய மேற்றிராணியார் சம்மதமின்றி கொடுத்தால், சாவான பாவம் கட்டிக்கொள்ளுகிறதுமன்றி, திருச்சபையின் ஞான தண்டனைகளுக்கு உள்ளாவார்.

(ங) குருத்துவம் பெறுகிறவர், மேற்றிராணியாருக்குப் பின்சொல்லப்படும் நான்கு விதங்களில் ஒன்றில் கீழ்ப்பட்டிருந்திருக்க வேண்டும். அவர் பிறந்தபோது, அவருடைய தாய் தகப்பன் அந்த மேற்றிராணியார் எல்லைக்குள்ளே குடியிருந்திருக்கவேணும்,—அல்லது, தான் தானே அந்த எல்லைக்குள்ளே பத்து வருஷமளவாக வாசம் பண்ணி, இனிமேலும் அங்கேயே ஜீவிக்க மனதாயிருக்கவேண்டும்,—அல்லது, மேற்றிராணியார் ஊழியத்தில் மூன்று வருஷமளவாக வேலை பார்த்திருக்கவேண்டியது,—அல்லது, மேற்றிராணியாரிடத்திலிருந்து யாதோரு கோவில் மானியம் பெற்றுக்கொண்டு, அதை அநுபவித்து வரவேண்டியது.

இதுவுந்தவிர, பட்டம் பெறுகிறவர் வேறே மேற்றிராணியார் அதிகாரத்துக்குட்பட்ட தேசத்தில் கொஞ்சகாலம் ஜீவித்திருந்தால், அங்கே இருக்கையில், பட்டத்துக்கு விக்கினமானது யாதொன்றும் நேரிடவில்லை என்று அந்த மேற்றிராணியாரிடத்திலிருந்து ஓர் அத்தாட்சி கொண்டுவரவேண்டியது.

(ங) அர்ச். பாப்பானவருடைய விசேஷ அநுமதியோடு குருவானவர்கள் நாலு கீழ்ப்பட்டங்களையும் ஐந்தாம் பட்டமும் முதலாய்க் கொடுக்கலாம்.

## V. குருத்துவம் பெறுகிறவனைப்பற்றி.

குருத்துவம் பெறுகிறதற்கு அவசியமானவைகளாவன:—

(க) ஆண்பிள்ளைகள்மாத்திரம் இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெறலாம்.

(உ) இந்தத் தேவதிரவிய அநுமானத்துக்கு முந்தமுந்த அவசரமான ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டியது. உறுதிபூசுதல் அவசரமில்லாவிட்டாலும், அதைப் பெற்றிருக்கவேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை.



(ந) குருத்துவத்தைப் பெற்றுக்கொள்ள மனதாயிருக்கவேண்டியது.

(ச) தக்கபிராயம் அவசியம். அர்ச். பாப்பானவருடைய விசேஷ உத்தரவில்லாமல் இருபத்தைந்து வயது துவக்குமுன் குருப்பட்டம் பெறலாகாது.

(ரு) இந்த உந்நத அந்தஸ்துக்குத் தக்கவிதமாய்க் காலக்ஷேபம்பண்ணக்கூடியவராயிருப்பது அவசியம். மேலான பட்டங்கள் பெற்றவர்களுக்குச் சிக்ஷை வராதபடி, இவர்கள் இழிவான தரித்திர அந்தஸ்திலிருக்கக்கூடாதென்பது திருச்சபையின் கட்டளை. இதினிமித்தமே ஒருவர் ஐந்தாம் பட்டம் பெறுமுன், அவர் சாகுமட்டும் தன் குடும்ப காணியாட்சியினாலாவது, வருஷாந்தர வரும்படியினாலாவது, தன் குருத்துவ அந்தஸ்துக்கு யோக்கியமானபடி ஜீவிக்கக் கூடுமென்று திட்டமாய்க் காட்டவேண்டியது.

(சா) பட்டம் பெறப்போகிறவர் அதைப் பெற்றுக்கொள்ளுவதற்கும், அதின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் விக்கினங்கள் இருக்கலாகாது. சில விக்கினங்கள் சரீர குறைகளினாலும்,

சிலது புத்தி மந்தத்தினாலும், மற்றது அபகீர்த்தியினாலும் உண்டாகக்கூடும். ஆகையால் மூன்று மேலான பட்டங்களில் ஒன்று கொடுக்கிறதற்குமுன், மேற்றிராணியார் உத்தரவுப்படி, பட்டம் பெற இன்னார் இன்னார் யோக்கியரா அல்லவாவென்பதைப்பற்றி கோவிலிலே ஓர் கட்டளை வாசிக்கப்படும்.—பட்டம் பெற விக்கினங்களுண்டானால், கிறீஸ்தவர்கள் மேற்றிராணிமார்களுக்கு அவைகளைத் தெரிவிப்பது கடன்.—ஒவ்வொரு பட்டத்துக்கும் வேண்டிய சாஸ்திரமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டியது.

(எ) சர்வேசுரனால் தமது ஊழியத்துக்கு அழைக்கப்பட்டவர்களைச் சரியான முகாந்தரமின்றி பெரியோர் தடுக்கிறது யாசித் தும்பும். மறுதடை செய்ததினால், இப்பூலோகத்திலும் மறுஉலகத்திலும் பெருங்கேடு விளையுமென்று சொல்லத் தேவையில்லை.

(அ) தேவ அழைப்பில்லாதவர்களையும், வேண்டிய புண்ணியங்கள் இல்லாதவர்களையும், குருப்பட்டத்தின் கடமைகளை நிறைவேற்றத் தகாதவர்களையும், அதற்கு யாதொரு ஆசை காட்டாதவர்களையும், குருக்கள் அந்தஸ்துக்குக்



கொஞ்சமென்கிலும் வலித் துண்டக்கூடாது. ஏனென்றால் தேவ அழைப்பின்றிக் குருப்பட்டம் பெறுகிறவன் பெரிய குற்றம் கட்டிக்கொள்ளுகிறான்.

VI. குருவானவர்மட்டில் நமது கடமை என்ன?

(க) இப்பேர்க்கொத்த மேலான அதிகாரமும், அதிசயத்துக்குரிய வல்லமையும் சர்வேசுரனால் குருவானவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினாலும், அவர் நமக்கு இவ்வளவு உதவி செய்கிறபடியினாலும், அவரை நாம் எவ்வளவோ மதித்து, சங்கிக்கவேணும்.

(உ) குருக்களைப் புறக்கணித்து வெறுக்கிறது பெரிய துரோகம். ஏனெனில் "உங்களை நிந்திக்கிறவன் என்னை நிந்திக்கிறான்" என்று அவர்களைப்பற்றி சேசுநாதர்சுவாமி திருவுளம்பற்றியிருக்கிறார். (லூக். X. 16.)

(ங) உத்தம குருவாகிய சேசுநாதர்சுவாமி தமது பிள்ளைகளாகிய கிறீஸ்துவர்களை நடத்திவரும்படி மெய்யாகவே தமக்குப் பதிலாய் குருக்களை நியமித்திருக்கிறதினால், அவர்களுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவர்கள் சொல்லைக் கேளாதவர்கள் சேசுநாதர்சுவாமியைத்தானே கேளாதே போகிறார்கள்.

(ச) குருக்களுக்கு உதவிசெய்கிறது கிறீஸ்துவர்களுடைய கடமை. ஆதினாலே குருக்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கப்போலே சீவியம்பண்ணும்படி ஒவ்வொருவனும் தன் ஐசுவரியத்துக்கும், மேற்றிராணியாருடைய கட்டளைக்கும் ஒத்தபிரகாரம் குருக்களுக்கு உதவி செய்யக்கடவான். ஆகையினால் அநேக தேசங்களிலே திருச்சபையின் கட்டளைகளில் ஆறுங் கட்டளை ஒன்று சேர்ந்திருக்கிறது. இதினால் அந்தத் தேசங்களிலுள்ளவர்கள் தங்களுக்கு வரும் முந்தின பலனில் பத்திலொன்று கோவிலுக்குக் காணிக்கை கொடுக்கவேண்டியிருக்கிறது.

(ஞ) நாம் குருக்களிடத்தில் காணும் மனிதருக்குரிய குறைகளைக் கவனியாமல், விசுவாசக் கண்ணால் அவர்களிடத்தில் சேசுநாதர்சுவாமியையமாத்திரம் பார்த்து, எப்போதும் அவர்களுக்குச் சங்கைபண்ணக்கடவோம்.

## பதினோராம் பிரிவு.

## மெய்விவாகத்தின் பேரில்.

### I. மெய்விவாகமாவதென்ன?

சமுசார அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளுகிறவர்கள் தங்கள் கடமைகளையெல்லாம் பிரமா



ணிக்கமாய் நிறைவேற்றி, தங்களுக்குள்ளே அந்நியோந்நிய நேசமாயிருக்கவும், தங்கள் பிள்ளைகளை தேவ பத்தியில் வளர்க்கவும், வேண்டிய வரப்பிரசாதத்தை அவர்களுக்குக் கொடுக்கிற தேவதிரவிய அநுமானமாம்.

சேசுநாதர்சுவாமி மெய்விவாகத்தைத் தேவதிரவிய அநுமானமாக ஏற்படுத்தி, அதின்வழியாய் இஷ்டப்பிரசாதத்தை அளித்து வருகிறபடியினாலே, அது யோக்கியமும் அர்ச்சிக்கப்பட்டதுமான ஓர் நல்ல அந்தஸ்தே. விவாகமானது ஆகாதகாரியமென்று சில பதிதர்கள் முன்காலத்தில் போதித்தபோது, திருச்சபையானது அவர்களுடைய போதனை முழுதும் தப்பறையானதென்று தீர்மானித்தது. இல்லறத்தைவிட துறவறத்தினாலே நாம் சர்வேசுரனுக்கு அதிக ஊழியம் பண்ணுவதால், கலியாண அந்தஸ்தைவிட விரத்தத்துவம் அதிக மேலானதென்றாலும், கலியாணம் ஆகாதென்று சொல்லுகிறது சரியல்ல.

சர்வேசுரன் மனுக்குலத்தின் விர்த்திக்காக மெய்விவாகத்தை ஸ்தாபித்து அர்ச்சித்திருப்பதினால், அதற்கடுத்த கடமைகளை ஒழுங்குடன் நிறைவேற்றுகிற புருஷனும் பெண்சாதியும் யாதொரு குற்றமும் கட்டிக்கொள்ளாமல், பெண்

ணியம் செய்கிறார்கள். இந்தக் கடமைகளுக்கு முழு விரோதமாய் நடக்கிறவர்களோவென்றால், சாவானபாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். கலியாண அந்தஸ்திலே பாவம் கட்டிக்கொள்ளாதபடி, தேவதிரவிய அநுமானத்தினால் விசேஷவரப்பிரசாதம் அளிக்கப்படுகிறது.

## II. மெய்விவாக ஒப்பந்தத்தின் பேரில்:

1. கலியாண ஒப்பந்தம் மூன்று வகைப்படும். அவை: மனித சுபாவத்துக்கடுத்த ஒப்பந்தமும், உலோக இராச்சிய சட்டங்களுக்கடுத்த ஒப்பந்தமும், தேவதிரவிய அநுமானமாகிய திருச்சபைக்கடுத்த ஒப்பந்தமுமாம்.

(க) மனித சுபாவத்துக்கடுத்த ஒப்பந்தம் ஏதென்றால், கூடி வசித்து ஒரு குடும்பத்தை உண்டுபண்ணுகிறதற்கு ஆணும் பெண்ணும் செய்யும் உறுதியான உடன்படிக்கையாம்.—மனுக்குலம் விர்த்தியடைவதற்கு இது அவசரமான வழியாதலால், சர்வேசுரன், சிங்காரத் தோப்பிலே ஏவாளை உண்டாக்கி ஆதாமுக்கு மனைவியாகக் கொடுக்கும்போது, இந்தச் சுபாவ ஒப்பந்தத்தை ஸ்தாபித்தருளினார்.—அஞ்ஞானிகள் மெய்விவாகமென்னும் தேவதிரவிய அநுமானத்தைப் பெறக்கூடாததினால், இப்போது முத



லாய் சுபாவ ஒழுங்குக்கிசைந்தபடி அவர்கள் மெய்யான கலியாண உடன்படிக்கை முடித்துக்கொண்டால், அது செல்லும்.

(உ) உலோக இராச்சிய சட்டங்களுக்கடுத்த கலியாண ஒப்பந்தம் ஏதென்றால், கலியாணத்தில் எல்லாம் சுபாவ ஒழுங்குப்படி நடக்கும்பொருட்டு சர்க்கார் அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கிற சட்டதிட்டங்களுக்கு ஒத்தாப்போல் செய்யும் உடன்படிக்கையாம். யாருக்கு ஆஸ்திபாஸ்தி சேரவேண்டுமென்று தீர்மானித்தல், பிள்ளைகள் மேல் பெற்றோருக்குள்ள அதிகாரத்தைத் திட்டப்பண்ணுதல், இவை முதலியவை சர்க்காருடைய சட்டங்களால் குறிக்கப்பட்டிருக்கிறது.

(ங) கலியாணமானது எப்படி திருச்சபையின் ஒப்பந்தமாகிறதென்றால், சேசுநாதர்சுவாமி மேலே சொன்ன கலியாணத்தின் சுபாவ ஒப்பந்தத்தைத்தானே தேவதிரவிய அநுமானத்தின் மேன்மைக்கு உயர்த்தி, தமது இஷ்டப்பிரசாதத்தைக் குறிக்கவும் கொடுக்கவும் அதற்குத் திவ்விய பலனைத் தந்தருளியிருக்கிறார். எப்படி மற்றத் தேவதிரவிய அநுமானங்களில் காணப்படுகிற வெளி அடையாளங்களுக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்க மேலான சக்தி உண்டோ, அப்படியே கிறீஸ்துவர்களு

டைய கலியாணத்துக்கும் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கும் சக்தி உண்டு.

2. மெய்விவாகமானது தேவதிரவிய அநுமானமென்று எக்காலமும் எவ்விடத்திலும் திருச்சபையால் விசுவசிக்கப்பட்டு வந்திருக்கிறது. திரிதெந்தீன் என்னும் பொதுச் சங்கம் வசனித்ததாவது: "மெய்விவாகம் அருள் வேதத்தில் சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு தேவதிரவிய அநுமானங்களில் ஒன்று அல்லவென்றும், அது மனிதரால் மாத்திரம் ஏற்படுத்தப்பட்டதென்றும் சாதிக்கிறவன் எவனோ, அவனுக்குச் சாபம்."

(க) சேசுநாதர்சுவாமி கலியாணத்தின் சுபாவமான ஒப்பந்தத்தைத்தானே தேவதிரவிய அநுமானமாக உயர்த்தியிருக்கிறதினாலே, கிறீஸ்துவர்களிடத்தில் சுபாவ ஒப்பந்தத்தையும் தேவதிரவிய அநுமானத்தையும் பிரிக்க முடியாது. இதினிமித்தம் அவர்களுடைய கலியாணம் திருச்சபை விதித்துக்கொண்ட ஒழுங்குப்படி சரியாய் நிறைவேறினால்மாத்திரம், செல்லுமான ஒப்பந்தமாகும்.

கிறீஸ்துவர்களுடைய கலியாண ஒப்பந்தமே தேவதிரவிய அநுமானமாயிருக்கிறபடியால், கலியாணத்தை முடித்துக்கொள்ளுகிற பெண்



ணும் மாப்பிள்ளையுமே இந்தத் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றும் பரிசாரகராயிருக்கிறார்கள். குருவானவர் இதற்குச் சாட்சியாக மாத்திரமிருக்கிறார்.—ஆதலால் குருவானவர் தேவ ஊழியராயிருந்து மற்றத் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவதுபோல், மெய்விவாகமென்கிற தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றும் பரிசாரகர் அல்ல.

(உ) கிறீஸ்துவர்களுடைய மெய்யான கலியாணம் எப்போதும் தேவதிரவிய அநுமானமாகிறதினால், அதைச் சேர்ந்ததெல்லாம் தீர்மானிக்க, திருச்சபைக்கு மாத்திரம் அதிகாரம் உண்டு. இந்த ஞான ஒப்பந்தத்துக்கடுத்தவைகளில் உலோக இராஜாக்கள் பிரவேசிக்கவும், விசாரணை செய்யவும், விக்கினங்களை ஸ்தாபிக்கவும் அதிகாரம் கொஞ்சமுங் கிடையாது. ஆகையால் கலியாணத்தைப்பற்றிய திருச்சபைச் சற்பனைகளைக் கிறீஸ்துவர்கள் எல்லோரும் அநுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கலியாணத்தைக் குறிக்கிற யாதொரு கட்டளையை அவர்கள் மீறிப்போனால், அது விபசாரமாகுமேயொழிய, மெய்யான விவாகமாகாது.

ஞானஸ்நானம் பெற்ற பதிதரும், பிரிவினைக்காரரும், கலியாணத்தைக் குறித்து, திருச்சபையின் கட்டளைகளுக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் ஞானஸ்நானத்தினிமித்தம் திருச்சபையைச் சேர்ந்திருக்கிறதினால், அதின் ஒழுங்குப்பிரகாரம் நடக்கவேண்டியது. ஞானக் காரியங்களை எல்லாம் விசாரிக்கத் திருச்சபைக்கு மாத்திரம் சுதந்தரமானதினாலே யாதொரு கலியாணம் செல்லுமோ, செல்லாதோ, என்று தீர்மானிக்கிறது திருச்சபையின் ஞான அதிகாரிகளைச் சேர்ந்த அலுவல்.—ஆனதால், அர்ச். பாப்பானவர் இப்போது கொடுத்த பொது உத்தரவுப்படி, பதிதர் பிரிவினைக்காரரின் கலியாணங்கள் செல்லும்படி, திருச்சபைக் குருக்கள் மந்திரிக்க அவசரமில்லை. வேறே விக்கினமில்லாவிட்டால், அவர்கள் செய்யும் ஒப்பந்தம் மெய்யான கலியாணமாகும். ஆனால் அவர்கள் திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிறதினால், தேவதிரவிய அநுமானத்துக்குரிய தேவ இஷ்டப்பிரசாதத்தை அடையமாட்டார்கள். மணவாளர்கள் இருவரும் அல்லது அவர்களில் ஒருவர் முதலாய் கத்தோலிக்குச் சபையில் சிலகாலமிருந்த பின், அதை மறுதலித்திருந்தால், குருவின் ஆசீர்வாதமில்லாமல் கலியாணம் செல்லாது.

3. கலியாணத்துக்கு வேண்டிய சம்மதத்தின் பேரில்.

கலியாணம் ஒரு உடன்படிக்கையானதால், கிறீஸ்துவர்களாயிருந்தாலும் சரி, *அஞ்ஞானி



களாயிருந்தாலும் சரி, புருஷன் பெண்சாதி இருவரும் இதற்குச் சம்மதிக்கிறது கட்டாயம் அவசியம். சம்மதமானது வார்த்தையினாலாவது, வெளி அடையாளத்தினாலாவது, தெளிவாய்க் கொடுக்கப்படவேண்டும். அதில்லாமல் உடன்படிக்கை செல்லாது. தேவதிரவிய அநுமானமும் நிறைவேறமாட்டாது.

4. பிள்ளைகளின் கலியாணத்துக்குப் பெற்றோர்களின் உத்தரவு அவசியமா?

(க) கலியாணம் செல்லும்படி அவர்கள் சம்மதம் அவசரமில்லை.—பெற்றோர்களுடைய சம்மதமின்றிப் பிள்ளைகளுடைய கலியாணம் ஒருபோதும் செல்லாதென்றும், தங்கள் உத்தரவில்லாமல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைத் தாய் தகப்பன் உடைத்துவிடக் கூடுமென்றும் சொல்லுகிறது முழு தப்பறை. இது திரிதெந்தீனென்னும் பொதுச் சங்கத்தின் தீர்மானம்.—ஏனென்றால் கலியாண விஷயத்தில் மணவாளர்களுக்கு மாத்திரம் தங்கள் சரீரத்தின்மேலே பூரண சுதந்தரம் உண்டு. அதற்கு விரோதமான உலக சட்டங்கள் பெலனற்றதாய் இருக்கின்றன.

(உ) ஆனால் பாவமில்லாமல் மெய்விவாகம் முடிக்கவேணுமானால், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்

களுடைய சம்மதத்தைக் கேட்கக் கடன்பட்டிருக்கிறார்கள். அவ்வளவு பிரதானமும் அபாயகரமுமான விஷயத்தில் தாய் தகப்பன் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதி சொல்லி, தங்களால் கூடிய உதவி செய்யவேண்டியிருக்கிறது.—இதினிமித்தம் சரியான முகாந்தரமில்லாமல், பெரியவர்களை மீறிக் கலியாணம் செய்கிறவர்கள் சாவான பாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆகையினால் ஆண்டவருடைய ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைக்கமாட்டாது.

ஆயினும் கலியாண விஷயத்தில் தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லவேண்டுமேதவிர, அவர்களைக் கட்டாயம்பண்ணக்கூடாது. மாப்பிள்ளை தனக்கு நியமிக்கப்பட்ட பெண் வேண்டாமென்றும், பெண் தனக்கு நியமிக்கப்பட்ட மாப்பிள்ளை வேண்டாமென்றும் உறுதியாய்ச் சொல்லும்போது, குருவானவர் அவர்கள் கலியாணத்தை மந்திரிக்கக்கூடாது. ஏனென்றால் பெண்ணாவது மாப்பிள்ளையாவது மனம்பொருந்தி சம்மதிக்காவிட்டால், ஒருக்காலும் அது கலியாணமாகமாட்டாது.



(௯) பெண்ணும் மாப்பிள்ளையும் கனத்த முகாந்தரத்தை முன்னிட்டு, பெற்றோர்கள் உத்தரவில்லாமல் கலியாணம் முடிக்க யோசித்தால், தேவபத்தியும் புத்தி விவேகமுமுள்ள மனிதர்களையும் முக்கியமாய் ஆத்தும குருவானவரையும் ஆலோசனை கேட்காமல், ஒருக்காலும் தங்கள் யோசனையை நிறைவேற்றக்கூடாது. இது விஷயத்தில் வெகு சுலபமாய் மோசம் போகலாமென்பது எல்லாருக்கும் தெளிவான காரியமே.

(௰) கலியாணத்தை முடிக்கிறதற்கும் பிரிக்கிறதற்கும் உலோக உத்தியோகஸ்தர் யாதொரு சட்டமும் ஏற்படுத்தக்கூடாததினால், விவாகம் செய்தவர்கள் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரிவது நியாயமென்றும், அது குற்றமல்லவென்றும் தீர்ப்புப்பண்ண சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது. இப்படி செய்வது சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் விரோதமாய் நடக்கிறதாகும். உலோக நியாயாதிபதிகளிடம் விவாகத்தைப் பிரித்துக்கொள்ளும்படி தீர்ப்புப் பெற்றுக்கொண்டவன் திருச்சபைக்குக் கீழ்ப்படியாமல் மறு கலியாணம் பண்ணினால், பாவத்தில் ஜீவித்து விபசாரம் கட்டிக்கொள்வான்.

ஆனால், கலியாணக்காரருக்குப் பொதுவான ஆஸ்திபாஸ்தி, அவைகளின் அநுபோகம், பங்குபாகம் முதலியவைகளைக் குறித்து, புருஷன் பெண்சாதி பிள்ளைகளுக்குள்ள சுதந்தரங்களைத் திட்டம் பண்ணவும், இதுகாரியத்தில் சட்டங்கள் ஏற்படுத்தி ஒழுங்கு செய்யவும், உலக உத்தியோகஸ்தருக்கு வல்லமை உண்டு. இந்தச் சட்டங்களுக்குக் கிறீஸ்துவர்களும் உட்பட்டிருக்கிறார்கள். இவ்வொழுங்குகள் திருச்சபையின் போதனைகளுக்கு விரோதமாயிராதபோது, அவைகளுக்கொத்தாப்போல் நடக்கவேண்டும்.

### III. கலியாணத்தைப்பற்றி, பத்தாம் பத்திநாதரென்னும் அர்ச். பாப்பானவர் செய்த புதுத் தீர்மானங்களேவை?

#### 1. பரிசத்தின்பேரில்.

கலியாணம் செய்ய உத்தேசித்திருக்கிற கிறீஸ்துவர்கள், இனி தாங்கள் ஒருவர் ஒருவரைக் கலியாணம் செய்துகொள்வதாகக் கொடுக்கும் வாக்குத்தத்தம் பரிசமாகும்.

கலியாணம் செய்ய விரும்புகிறவர்கள் பரிசம் போடவேணுமென்பது கட்டாயமில்லை. ஆனால் பரிசம்போட மனதாயிருந்தால், அது செல்லும்படி பின்வரும் நிபந்தனைகளை அநுசரிக்கவேண்டியது.



அந்த வாக்குத்தத்தம் எழுத்தால் கொடுக்கப்பட்டு, அதில் மாப்பிள்ளையும் பெண்ணும் கையெழுத்துப் போடவேண்டியதுமல்லாமல், அவர்களுடைய குருவானவரும் கையொப்பம் வைக்கவேண்டும். அவர் வைக்காதபட்சத்தில் இரண்டு சாட்சிகளாகிலும் கையொப்பம் வைப்பது முழுதும் அவசரம். மாப்பிள்ளைக்காவது, பெண்ணுக்காவது, அல்லது இரண்டுபேருக்கும் எழுதத் தெரியாதானால், குருவானவருடன், அல்லது முன் சொல்லப்பட்ட இரண்டு சாட்சிகளுடன், வேறொரு சாட்சியும் கையொப்பம் வைக்கவேண்டியது. பரிசத்தில் இந்த நிபந்தனைகளை அநுசரிக்காதபோது, அந்த வாக்குத்தத்தத்தின்படி நடக்கக் கடனில்லை. திருச்சபையால் குறிக்கப்பட்ட விக்கினங்கள் இப்பேர்க்கொத்த செல்லாத பரிசத்திலிருந்து உண்டாகிறதில்லை.

#### 2. கலியாணத்தின்பேரில்.

கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுடைய கலியாணம், ஒரு குருவானவர்முன்னும், இரண்டு சாட்சிகளுக்கு முன்பாகவும் நிறைவேறவேண்டியது. இல்லாவிட்டால் கலியாணம் மெய்யான கலியாணமாகாது.

(க) ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்துவன் புரோட்டெஸ்டாண்டாருக்கு முன்பாகவாவது, அல்லது இராஜாங்க அதிகாரி (Registrar) முன்பாகவாவது தன் கலியாணத்தை நிறைவேற்றிக்கொண்டால், அது ஓர் கனமான பாவமும் தேவதுரோகமுமாயிருக்குமேயொழிய, மெய்யான கலியாணமாகாது. இவ்விதமாகக் கலியாணம் முடித்துக்கொள்ளுகிறவர்கள் சிறிதும் பிரயோசனமற்றதும் அக்கிரமுமான ஓர் சடங்கைச் செய்கிறார்களேயன்றி, அதைச் செய்துகொள்வதற்குமுன் இருந்ததைவிட அதைச் செய்தபின் புருஷனும் பெண்சாதியுமாய்ப் போகவேயில்லை.

(உ) கலியாணம் மெய்யான கலியாணமாயிருப்பதற்கு, குருவானவர் கட்டாயமின்றி மனம்பொருந்தி கலியாணத்துக்கு வந்திருக்கவேண்டியது. அவர் கலியாணம் செய்வோரின் சம்மதத்தைக் கேட்டு, அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். உலகத்திலுள்ள சகல கத்தோலிக்கக் கிறீஸ்துவர்களும் இந்தச் சட்டங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஆனால் கத்தோலிக்கராயிராதவர்கள் இதற்குட்படவில்லை.

3. கலியாணம் செல்லும்படிக்கு, எந்தக் குருவானவர் அதை மந்திரிக்கவேண்டியது?



கிறீஸ்துவர்கள் பேரில் ஞான அதிகாரமுள்ள சகல குருக்களும், அவர்கள் தங்களுக்குப் பதிலாகக் குறிப்பிடும் எந்தக் குருவானவரும், தங்கள் அதிகாரத்துக்குக் குறிக்கப்பட்ட எல்லைக்குள் வருகிற சகலருடைய கலியாணத்தையும் மந்திரிக்கலாம். இப்படி மந்திரிக்கப்பட்ட கலியாணம் செல்லும்.

4. கலியாணம் பாவமின்றி முடியும்படி, எந்தக் குருவானவர் அதை மந்திரிக்கவேணும்? பாவமின்றி ஓர் கலியாணத்தை மந்திரிப்பதற்கு, கலியாணக்காரரில் ஒருவராவது, மந்திரிக்கிற குருவானவருடைய அதிகார[illegible] ஒரு மாதமாகிலும் குடியிருந்திருக்கவேண்டியது. மற்ற இடத்தில் கலியாணத்தைப் பாவ[illegible]க்கொள்ள விரும்பினால், கலியாணக்காரரில் ஒருவராவது தன்னுடைய பங்குக் குருவானவரிடம் உத்தரவு பெற்றிருக்கவேண்டியது.

(க) போதுமான முகாந்தரமிருந்தாலொழிய, சாதாரணமாய் பெண்ணுடைய பங்குக்கோவிலில்தானே கலியாணம் மந்திரிக்கிறது ஒழுங்கு.

(ச) மரண ஆபத்தான சமயத்தில் மனச்சமாதானம் கொடுப்பதற்கும், பிள்ளைகளை முறை

மைப்பிள்ளைகளாக்குவதற்கும், அதிகாரமுள்ள குருவானவர் இல்லாவிட்டால், எந்தக்குருவானவரும் பாவமின்றிக் கலியாணத்தை மந்திரிக்கலாம். கலியாணமும் அச்சமயத்தில் மெய்யான கலியாணமாயிருக்கும்.

(ரு) வேதகலாபனைமுதலிய முகாந்தரங்களினால் ஒருமாதமட்டும் குருவானவரைக் காணமுடியாதிருக்கும் இடங்களிலும், குருக்கள் இல்லாத நாட்டிலும், இரண்டு சாட்சிகளுக்குமுன் கலியாண உடன்படிக்கை நிறைவேற்றிக்கொண்டால், கலியாணம் மெய்யான கலியாணமாயும், [illegible]யுமிருக்கும்.

IV. திருச்சபை சட்டப்படி, முழுச்சம்மதத்துடன் முடிந்த கலியாணத்தில், இரண்டு காரியங்கள் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கவை. அதாவது: ஏகத்துவமும் பிரியாமையுமாம்.

1. கலியாணபந்தனத்தின் ஏகத்துவமாவதென்ன?

ஒரேகாலத்தில் ஒரு மனிதன் ஒரு பெண்சாதியோடும், ஒரு ஸ்திரீ ஒரு புருஷனோடும் மாத்திரம் கலியாண சம்மந்தம் செய்கிறது ஏகத்துவமென்னப்படும். ஒரு மாப்பிள்ளை பல பெண்பிள்ளைகளையும், ஒரு பெண்பிள்ளை பல மாப்பிள்ளைகளையும் கட்டிக்கொண்டால், சுபாவ



ஒழுங்குக்கு விரோதம். ஆயினும் புருஷன் பெண்சாதி இருவரில் ஒருவர் இறந்தால், மற்றொருவர் திரும்பக்கலியாணம் செய்துகொள்ளலாம்.

(க) பிதாப்பிதாக்களுக்குப் பல மனைவிகளை விவாகம் பண்ண சர்வேசுரன் உத்தரவு அளித்திருந்தார்.

பிள்ளைகளின் வளர்ப்பு விஷயத்திலும், குடும்ப சமாதானத்திலும் சாதாரணமாய் விளைகிற விக்கினங்களை நீக்க, சர்வேசுரன் விசேஷ உதவி கொடுத்துக்கொண்டுவந்தார். சிங்காரத்தோப்பில் ஆதாம் ஏவாளைப் புருஷன் பெண்சாதியாக நியமித்து, ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஒரு ஆணும் மாத்திரம் இருக்கவேண்டுமென்று ஆதியில் ஸ்தாபித்திருந்தார். சேசுநாதர்சுவாமி இந்த பழையகட்டளையைப் புதுப்பித்து பல மனைவிகளுடன் வாழலாகாதென்று விலக்கியிருக்கிறார். இது விசுவாச சத்தியம்.

(உ) புருஷனாவது பெண்சாதியாவது இறந்துபோனபின்பு, மறுபடியும் கலியாணம் செய்வது திருச்சபையால் ஒருக்காலும் விலக்கப்படவில்லை. அது அவ்வளவு உத்தமமல்லவென்றாலும், ஆத்தும இரட்சணியத்தைப்பற்றி அது அவசரமாயிருக்கும் சமயங்கள் உண்டு. அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறதாவது. விவாகம்

இல்லாதவர்களுக்கும், விதவைகளுக்கும் நான் சொல்லுகிறதாவது: "நானிருக்கிறதுபோலவே அவர்களும் இருந்துவிட்டால், அவர்களுக்கு நலமாமே. தங்களை அடக்கிக்கொள்ளாதவர்கள் விவாகம் பண்ணிக்கொள்ளட்டும். ஏனெனில் (நெருப்பில்) வேகிறதைவிட விவாகம் பண்ணிக்கொள்ளுகிறது நலமாம்."

(I. கொரி VII. 8, 9.)

௨. கலியாணபந்தனம் பிரிக்கக்கூடாத பந்தனம்.

கலியாணம் குறைவில்லாமல் முடிந்தபின், புருஷன் பெண்சாதியாய் இருந்தபிற்பாடு, திருச்சபை முதலாய், கிறீஸ்துவர்களுடைய பந்தனத்தைப் பிரிக்கமுடியாது. வைத்தியம், விபசாரம், பிள்ளைகளில்லாமை முதலியவை அதற்குத் தகுந்த முகாந்தரமல்ல. இருவரில் ஒருவர் இறந்துபோனதாக நிச்சயமாய் அறியும்வரையில், வேறே கலியாணம் பண்ணக்கூடாது. நீண்டகாலம் தூரதேசத்திலிருந்து திரும்பி வராமலிருக்கிறது மரணமானதுக்குத் திட்டமான அடையாளமில்லாதபடியால், உறுதியான அத்தாட்சி கிடைக்குமட்டும் காத்திருக்கவேண்டும்.

(௧) ஒருவரை விட்டு ஒருவர் பின்பாடு பிரிந்துகொள்ளலாமென்று வெளிப்படையாய் ஒப்பந்தம்



செய்துகொண்டு கலியாணம் முடித்தால், அப்பேர்ப்பட்ட கலியாணம் துவக்கத்திலிருந்து வியர்த்தமானதாகும். ஏனெனில் இவ்வொப்பந்தம் மெய்யான கலியாணத்தின் சுபாவத்துக்கு ஒவ்வாது.

(௨) சேசுக்கிறீஸ்துநாதர் நமக்குப் படிப்பித்ததாவது: "உங்கள் இருதய கடினத்தைப்பற்றியே மோயீசன் உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்களுக்கு உத்தரவு கொடுத்தார். ஆயினும் ஆதிமுதல் அப்படியிருந்ததில்லை." (மத். XIX. 8.) விபசாரத்தை முன்னிட்டு, விவாகத்தைப் பிரித்துக்கொள்ளலாமென்றிருந்த உத்தரவை, சேசுநாதர் சுவாமி தள்ளிவிட்டார். நம்முடைய கர்த்தரும் அப்போஸ்தலர்மார்களும் சொன்ன வார்த்தைகளும், திருச்சபையின் பரம்பரையான போதகமும், இதற்கு அத்தாட்சியாகும். "யாதொருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொரு ஸ்திரீயை விவாகம் செய்தால், அவனுக்கு விரோதமாய் விபசாரஞ்செய்கிறான்" என்றார். "அத்தன்மையே மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருவனை விவாகம் செய்தால், விபசாரியாகிறாள்" என்றார். (மார்க். XII. 12).

அர்ச். சின்னப்பர் "மனைவி புருஷனைவிட்டுப் பிரிந்துபோகக்கூடாது. அப்படி பிரிந்துபோனால், ஒன்றில் விவாகமில்லாதிருக்கவேண்டும்; ஒன்றில் தன் புருஷனோடு ஒப்புரவாகவேண்டும்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடாதிருக்கட்டும்." என்று எழுதியிருக்கிறார். (I. கொரி. VII. 10. 11.)

விபசாரம் செய்தவர்களைப்பற்றி, சேசுக்கிறீஸ்துநாதர் பேசும்போது (மத். V. 32.) சரீரப்பிரிவைப்பற்றிப் பேசுகிறாரேயன்றி, உண்மையாகக் கலியாணபந்தனத்தை உடைக்கலாமென்று சொல்லுகிறதில்லை. "இக்காரணத்துக்காகப் பிரிக்கப்பட்ட ஸ்திரீயானவள் மறு கலியாணம் பண்ணினால், விபசாரம் கட்டிக்கொள்ளுகிறாள்" என்று கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறார். ஆகையால் பந்தனம் உடைபடவில்லை.

திரிதெந்தின் பொதுச் சங்கமானது "பதிதமார்க்கம், சண்டை சச்சரவு, சகிக்கக்கூடாத பொது ஜீவனம், இருவரில் ஒருவர் காணாமற்போதல் முதலிய காரணங்களை முன்னிட்டு கலியாணம் உடைபடலாம் என்று சாதிக்கிறவர்களுக்கும், விபசாரத்தைப்பற்றிப் பிரிந்தவர்கள் மற்றொருவரோடு கலியாணம் செய்துகொண்டால், விப



சாரமாகாதென்று சொல்லுகிறவர்களுக்கும் சாபம் இடுகிறது."

(௩) இப்போது சொன்னது விசேஷமாய்க் கிறீஸ்துவர்களுடைய கலியாணத்தைச் சேர்ந்ததாகும். ஆனால் அஞ்ஞானியாகிய ஒருவன் கிறீஸ்துவனாக மனந்திரும்பியபின், அஞ்ஞானியாகிய தன் பெண்சாதியோடு சமாதானமாய் ஜீவித்திருக்கக்கூடாதபோது, அவன் கலியாண பந்தனத்தைப் பிரித்துக்கொள்ளலாமென்று அர்ச். சின்னப்பர் உத்தரவுகொடுத்திருக்கிறார், (I. கொரி. VII. 15.)

இப்படியே ஒருவன் கிறீஸ்துவனானபின் பெண்சாதி அஞ்ஞானியாயிருந்தால், அவளை நோக்கி "நீ மனந்திரும்புகிறாயா? அல்லது பாவத்துக்காகிலும் இழுத்துக்கொண்டு போகாமல் ஒழுங்குடன் கூடஜீவிக்க உனக்குப் பிரியமா?" என்று தன் ஞானஸ்நானத்துக்குப் பிற்பாடு இரண்டுதடவை கேட்கக்கடவான். இவ்விதம் கேட்கக்கூடாவிட்டால், குருவானவர் மூலமாய் அர்ச். பாப்பானவரிடத்திலிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு, மறுகலியாணம் செய்துகொள்ளலாம். அஞ்ஞானியாயிருக்கும் புருஷனாவது பெண்சாதியாவது கத்தோலிக்கு வேதத்தில் பிள்ளைகளை வளர்ப்பிக்க விக்கினம் செய்

தால், அந்த ஸ்திரீ விபசாரமாய் ஜீவித்தால், வேறு கலியாணம் செய்துகொள்ளப் போதுமான காரணமாகும். திருச்சபையின் கட்டளைப்படி, இப்பேர்ப்பட்ட கிறிஸ்தவன் மறு கலியாணம் செய்துகொள்ளுகிறவரைக்கும், முதல் கலியாணத்தின் பந்தனம் உறுதியாயிருக்கிறது.

(அ) புருஷன் பெண்சாதி ஒன்றித்து வாழக்கடவர்கள். பிரிந்துபோனால், கனத்த பாவம் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் இருவரில் ஒருவருக்கும் ஆத்தும அபாயம் இல்லாவிடில், பூரண சம்மதத்துடன் அவர்கள் தற்காலத்துக்குப் பிரிந்திருக்கலாம். இதினால் கலியாண பந்தனம் உடைந்துபோகிறதில்லை.

(ஆ). ஆத்துமத்துக்காவது சரீரத்துக்காவது கனத்த அபாயமிருந்தபோதும்; சாவான பாவத்தைத் தடுக்க வேறே வழியில்லாதபோதும், அவர்கள் கூட ஜீவிக்காமலிருக்கலாம். அடி, உதை, ஓயாத சண்டை முதலியவைகளைச் சகிக்க முடியாதபோது, நல்ல புத்திவரும்படி சில காலம் பிரிந்துபோகிறது அவ்வளவு மோசமல்ல. இதினால் மகா பொல்லாப்பு உண்டாகிறதாயிருந்தால் திரும்பிச் சேரவேண்டும். இருவரில் ஒருவர் விபசாரம் செய்தால், குற்றமற்ற ஆள் பிரிந்திருக்கிறதற்கு உத்தரவுண்டு.



ஆனால் அநேகமுறை சிலகாலத்துக்குப்பின் பிறர்சிநேகத்தினிமித்தம் குற்றவாளியை மன்னித்துக்கொள்ளவேண்டியிருக்கும். எதேனும் தீர்மானிக்கிறதற்குமுன், ஆத்தும குருவிடம் ஆலோசனை பண்ணுகிறது அவசியம்.

## V. கலியாணத்துக்குமுன் செய்யவேண்டிய ஆயத்தத்தின்பேரில்.

(க) கலியாணமானது உலக காரியங்களில் மிகவும் விசேஷித்த காரியமானதினாலேயும், அதின் வழியாக ஆத்துமசரீரத்துக்குக் கணக்கில்லாத நன்மையாவது தின்மையாவது நேரிடக்கூடும் என்பதினாலேயும், கலியாணம் தீர்மானஞ்செய்வதற்குமுன், நன்றாய் ஆராய்ந்து யோசித்து, அடிக்கடி சர்வேசுரனை மன்றாடி, அவருடைய உதவியைக் கேட்கவேணும். ஏனென்றால் கலியாணம் முடிந்தபிற்பாடு, புருஷனாவது பெண்சாதியாவது சாகும்வரையில், வேறு மெய்யான கலியாணம் செய்கிறது கூடாதகாரியம்.

(உ) கலியாணம் செய்கிறவர்கள் அந்த அந்தஸ்தின் கடமைகளை அறிந்து, அவைகளைச் சரிவர அநுசரிக்கத்தீர்மானிப்பது அவசரமாம். இதற்குவேண்டிய வரப்பிரசாதங்களை அடையும்படி, நல்ல ஆயத்தம் பண்ணி, சாவானபாவ

யில்லாமலிருக்கவேண்டியது. சாவானபாவத்தோடு கலியாணம் பண்ணுகிறவன் தேவதுரோகம் கட்டிக்கொள்ளுகிறான். கலியாணக்காரருக்கு வேதத்தின் பிரதான சத்தியங்கள் முதலாய்த் தெரியாதானால், குருவானவர் இவர்களுடைய கலியாணத்தை மந்திரிக்கலாகாது என்பது அர்ச். பாப்பானவருடைய கட்டளை.

4. கலியாண ஓலை கூறுகிறது:— கலியாணம் மந்திரிக்கிறதற்குமுன், யாதொரு விக்கினம் உண்டோ இல்லையோவென்று நிச்சயமாய் அறியும்படி, அதை விளம்பரம் செய்யவேண்டியது. இது விஷயத்துக்காக, தொடர்ந்துவரும் மூன்று ஞாயிற்றுக்கிழமை அல்லது கடன் திருநாட்களில், பூசைநேரத்தில், கலியாண ஓலை கூறுவது திருச்சபையின் கண்டிப்பான கட்டளை.—பெண் ஊரிலேயும், மாப்பிள்ளையின் ஊரிலேயும் குருவானவர் மூன்றுவிசை இந்த ஓலை கூறவேண்டியது. பெண்ணாவது மாப்பிள்ளையாவது தற்காலம் வேறே ஊருக்குப்போய் வாசம்செய்தால், அங்கேயும் விளம்பரம் செய்வது அவசியம்.—கிறீஸ்துவர்கள் தங்களுக்குத் தெரிந்த விக்கினங்கள் எவ்வளவு இரகசியமானவையாயிருந்தாலும்,



அவைகளை எல்லாம் குருவானவருக்கு வெளிப்படுத்துவது கனமான கட்டளை.—ஓலை கூறாமல் கலியாணம் முடிக்கும்படி, தக்க முகாந்தரமிருந்தால் மேற்றிராணியார் உத்தரவு அளிக்கக்கூடும்.

5. கலியாணத்துக்குத் திருச்சபை ஏற்படுத்தியிருக்கிற விக்கினம் ஏதாகிலும் உண்டோ இல்லையோவென்றும், விக்கினங்கள் எவையென்றும், எத்தனையென்றும் கவனமாய் விசாரித்து, கலியாணத்துக்கு முன்தானே குருவானவரிடத்தில் ஒன்றும் ஒளியாமல் அறிவித்து, உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டியது. கலியாணத்தைத் தீர்க்குகிற யாதொரு விக்கினம் இருக்கும்போது, அதற்கு உத்தரவு பெறாமல், ஒரு கலியாணத்தை நடத்தினால், அறிந்து செய்தாலும் சரி, அறியாமல் செய்தாலும் சரி, அது மெய்யான கலியாணமாகமாட்டாது. இதுவுந்தவிர, இப்போர்ப்பட்ட காரியத்தை அறிந்து செய்தால், கலியாணக்காரரும் அவர்களுக்கு உதவி செய்கிறவர்களும் சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

(இது விஷயத்தைப்பற்றி "மெய்விவாகத்துக்குள்ள விக்கினங்கள்" என்னும் சிறு புஸ்தகத்தை வாசிக்க.)

# பன்னிரண்டாம் பிரிவு.

## தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளின் பேரில்.

(Sacramentals.)

I. நம்மை அர்ச்சிப்பதற்கு தேவதிரவிய அநுமானங்களைத் தவிர, இன்னும் வேறே சில வெளி உதவிகளுமுண்டு. இப்பேர்ப்பட்ட உதவிகள் ஜெபங்கள், மந்திரிக்கப்பட்ட பொருட்கள், ஆசீர்வாதங்கள், திருச்சடங்குகள் முதலியவைகளாகும். இவைகள் சர்வேசுரனுக்கு வெளி ஆராதனை செலுத்தவும், நமது ஆத்துமங்களுக்கு நன்மை பயக்கவும் ஏற்படுத்தப்பட்டவைகள்.

1. இவைகளை "தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள்" என்று சொல்லுகிறார்கள். ஏனெனில் இவைகளெல்லாம் ஞான நன்மைகளைப் பெறுவிப்பதில் ஓர் விதத்தில் தேவதிரவிய அநுமானங்களுக்கு ஒத்தவைகளாயிருக்கின்றன. மேலும் இவைகளில் மந்திரித்த தண்ணீர், எண்ணெய் முதலிய சில காரியங்கள் தேவதிரவிய அநுமானங்களோடு அவசரமான பங்காய்ச் சேர்ந்தவைகள்; வேறு சில, தேவதிரவிய அநு



மானங்களை அதிக ஆடம்பரத்தோடு நிறைவேற்றுவதற்கும், அவைகளின் அர்த்தத்தை அதிகத் தெளிவாய்க் குறித்துக்காட்டவும் உபயோகிக்கப்படுகின்றன.

2. தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் என்றால் என்ன? கிறீஸ்துவர்கள் ஞான உதவிகளையும், தங்கள் ஆத்துமங்களுக்குப் பிரயோசனமான இலௌகீக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும்படி, திருச்சபை ஏற்படுத்தியிருக்கிற காணக்கூடிய சில வெளி அடையாளங்களே, தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் என்னப்படும். ஆகையால் தேவதிரவிய அநுமானங்களைப்போலவே இவைகளும் தங்கள் சுபாவத்துக்கு மேலான வரங்களைக் குறித்துக்காட்டி, இந்த ஞான நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ள உதவுகிற அடையாளங்களாகின்றன.

II. தேவதிரவிய அநுமானங்களுக்கும், தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளுக்குமுள்ள வித்தியாசமென்ன?

1. அவைகள் ஏற்படுத்தப்பட்ட விதத்திலுள்ள வித்தியாசம்.

தேவதிரவிய அநுமானங்களெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதர் தாமே ஏற்படுத்தியருளினார்.

திருச்சபை புதுத் தேவதிரவிய அநுமானங்களை ஏற்படுத்தவும் அவைகளில் யாதொன்றை நீக்கிப்போடவும் கூடாதிருப்பதுமன்றி, அவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான விஷயங்களை மாற்றவும் முதலாய்க் கூடாது. ஆனால் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளை ஏற்படுத்தினது திருச்சபையே என்று சொல்லலாம்.

(க) ஆகிலும், இப்போ வழங்கிவருகிற தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளுக்குச் சமானமானவைகள், சர்வேசுரன் கட்டளைப்படி பழைய ஏற்பாட்டிலேயே குறிக்கப்பட்டிருந்ததாக வாசிக்கிறோம். இப்படியே குருக்கள் புதிதாய் விளைந்த தானிய தவசங்களை மந்திரித்தார்கள்; காலமேயும் சாயந்தரமும் தேவாலயத்தில் கூடியிருந்த ஜனங்கள்மேல் தீர்த்தம் தெளித்தார்கள்; இன்னும் இதைப்போலொத்த வேறு காரியங்களும் செய்தார்கள்.

மேலும் சேசுக்கிறீஸ்துநாதர்தாமே தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் என்று சொல்லப்படும் சடங்குகளை நிறைவேற்றியிருக்கிறார். குழந்தைகளையும் தமது அப்போஸ்தலர்களையும் அப்பங்களையும் ஆசீர்வதித்தார்;



தமது சீஷர்களின் கால்களைக் கழுவினார்; பரமண்டலமந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார்.

நமதாண்டவர் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்த சடங்குகளை நியமிக்கத் திருச்சபைக்குப் பொது அதிகாரம் அளித்ததுமன்றி, அது நியமிக்கும் அடையாளங்களோடு தேவ உதவி எப்போதும் கூடியிருக்குமென்று வாக்கு அளித்திருக்கிறார். திருச்சபையும் இந்த அதிகாரத்தை எப்போதும் பிரயோகித்து வந்திருக்கிறது.

ஆகையால் தேவதிரவிய அநுமானங்கள் சேசுக்கிறீஸ்துநாதரால் நியமிக்கப்பட்டவையென்றும், தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டவைகளென்றும் சொல்லுவது சரியே.

(உ) தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளில் சிலது அப்போஸ்தலர் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டன. வேறு சிலது அந்தந்தக் காலத்தின் அவசரங்களுக்கும் வழக்கங்களுக்கும் தகுந்தபடி பிற்காலங்களில் உண்டாக்கப்பட்டன. திருச்சபைக்குப் பசாசுகள்பேரில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால், அவைகளை ஓட்டுவதற்குச் சக்தியுள்ள செபங்களை நியமித்திருக்கிறது; பின்னும், தனது தலைவரின் பேரால்

ஜனங்களை ஆசீர்வதித்தல், விசுவாசிகளுக்காக சர்வேசுரனிடத்தில் பரிந்துபேசுதல், தேவஊழியத்துக்கு அமர்ந்தவர்களையும் தேவாராதனைக்குரிய வஸ்துக்களையும் அபிஷேகம் பண்ணுதல், இவை முதலியவைகளையும் செய்துவருகிறது. மேலும் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளைப் புதிதாய் உண்டாக்கவும், அவைகளை அவசரத்துக்குத் தக்கபடி மாற்றவும் திருச்சபைக்கு அதிகாரமுண்டு.

தேவதிரவிய அநுமானத்துக்கும் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளுக்குமுள்ள சக்தியின் வித்தியாசம்:—

(க) தேவதிரவிய அநுமானங்களுக்குச் சுய சக்தியுண்டென்பதால், தாங்கள் பெறுவிக்கவேண்டிய நன்மைகளை விக்கினமில்லாதபட்சத்தில் தாங்களாய்த்தானே பெறுவிக்கும்; தங்கள் சுய சக்தியினால் தானே தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கும்.

தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளோவென்றால், தாங்கள் பெறுவிக்கவேண்டிய ஞான நன்மைகளைத் தங்கள் சுயசக்தியினால் பெறுவிக்கிறதில்லை; ஆனால் அதைப் பெறுவிக்கவேண்டிய வழிபாடுகளாக மாத்திரமிருக்கின்றன. ஏனெ



னில் திருச்சபையின் செபங்களே, அவைகளால் வரும் நன்மைகளுக்குக் காரணம். அவைகளின் சக்தி, நிறைவேற்றுகிறவனுடைய புண்ணியத்தினாலும் பெறுகிறவனுடைய ஆயத்தத்தினாலும் கொஞ்சமாகிலும் உண்டாகிறதில்லை. நியமிக்கப்பட்டவர்கள் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளை நிறைவேற்றும்போது, இவைகளால் வரவேண்டிய ஞான நன்மைகள் கிடைக்கும்பொருட்டு, திருச்சபை சர்வேசுரனை மன்றாடவேண்டியிருக்கிறது. திருச்சபையினுடைய மன்றாட்டினாலே மாத்திரம் அவைகள் பலிக்கும். ஞானஉதவிகளை நமக்கு அளிக்கும்படி திருச்சபை அவைகளை ஏற்படுத்தியதால், விசுவாசிகள் தாங்களாய் உபயோகித்துக்கொள்ளும் வேறெந்த வழிபாட்டையும்விட, அவைகளுக்கு அதிக சக்தியுண்டு. இப்படியே, இரண்டுபேர் அந்த அளவான விசுவாச நம்பிக்கையோடிருந்தாலும், அர்ச். சிலுவை அடையாளம் தீர்த்தத்தோடு போடுகிறவன் அடையும் நன்மை வேறே, சாதாரணத் தண்ணீரோடு சிலுவை போடுகிறவன் அடையும் நன்மை வேறே.

தேவதிரவிய அநுமானங்களுக்கும், தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளுக்கு

முள்ள வித்தியாசத்தை ஓர் உவமையினால் சற்றுவது கண்டுபிடிக்கலாம். யாதொருவன் பசியாயிருக்கிறானென்று நினைத்துக்கொள்வோம். அவனுக்குச் சாப்பிடத்தக்க பதார்த்தமேதாவது கொடுத்தால், அதுதானே அவன் பசியையாற்றச் சக்தியுள்ளது. ஆனால் அவனுக்குச் சாப்பாடு கொடுக்காமல் பணம் கொடுத்தால், இந்தப் பணம்தானே அவன் பசியை ஆற்றக்கூடாதானாலும், சாப்பாடு வாங்குவதற்கு உதவும். இதுபோலவே தேவதிரவிய அநுமானம் தன்னாலேதானே தேவஇஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறது; தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளோ, அதைப் பெற்றுக்கொள்வதற்கு வழிபாடாய் மாத்திரமிருக்கிறது.

(௨) தேவதிரவிய அநுமானங்களைத் தகுந்த ஆயத்தத்தோடு பெற்றுக்கொண்டால்; அவைகளால் வரும் நன்மை கிடைப்பது ஒருபோதும் தவறாது. ஆனால் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் எல்லாம் இப்பேர்ப்பட்ட தவறாத பலனைக் கொடுப்பதில்லை. திருச்சபையானது தேவ ஊழியத்துக்காக அபிஷேகம்பண்ணும் ஆட்களாலும் வஸ்துக்களாலும் கிடைக்க வேண்டிய விசேஷப்பலன் எப்போதும் கட்டாயமாய்க் கிடைக்குமென்பது மெய்தான். ஆனால்



திருச்சபையின் செபங்கள் முதலிய மற்ற வெளியடையாளங்களை உபயோகிப்பவர்கள் வேண்டிய ஆயத்தமாயிருந்தபோதிலும், அவைகளால் வரவேண்டிய நன்மைகளை எப்போதும் பெற்றுக்கொள்வதில்லை. இப்படிப் பெற்றுக்கொள்வார்களென்று சர்வேசுரன் உறுதிவாக்குக் கொடுக்கவில்லை. ஏனெனில் சில நன்மைகள் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு ஒவ்வாதிருக்கக்கூடும். இப்படியே பசாசுக்களை ஓட்டுதலும், யாதொரு இலௌகிக நன்மையை அடைதலும், நமது ஆத்துமத்துக்குப் பிரயோசனமாயில்லாதிருக்கலாம். ஆகையால் தேவதிரவிய அநுமானங்களைப்போல, தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் தங்களால் வரவேண்டிய பலனைத் தவறாமல் அகத்தியமாய்ப் பெறுவிப்பதில்லை. ஆகிலும் சர்வேசுரன் திருச்சபையின் மன்றாட்டைப் புறக்கணிக்கமாட்டாரென்பதால், அந்தப் பலன்கள் சாதாரணமாய் நமக்கு கிடைக்குமென்பதில் தடையில்லை.

(௩) தேவதிரவிய அநுமானங்களும் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளும் பெறுவிக்கும் நன்மைகள் எப்பேர்ப்பட்டவை?—தேவதிரவிய அநுமானங்கள் தேவஇஷ்டப்பிரசாதத்தைத் தாங்களாய்க் கொடுக்கின்றன. தேவதிரவிய

அநுமானங்களுக் கடுத்தவைகளோ வென்றால் நல்ல மனசு, அநுக்கிரகப்பிரசாதம், பரிசுத்தமாய் நடப்பதற்குவேண்டிய விசேஷ உதவிகள், பசாசின் வல்லமையினால் யாதொரு மெய்யான மோசம் வராமல் காத்தல், இது முதலிய நன்மைகளைப் பெறுவிக்கிறதேயல்லாமல், தாங்களாய்க் கொடுப்பதில்லை.

(ஊ) தேவதிரவிய அநுமானங்கள், தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள், ஆகிய இவை இரண்டில் எவை அதிக அவசியமானவை?—

தேவதிரவிய அநுமானங்கள் திருச்சபையில் அகத்தியமாய் இருக்கவேண்டியவைகளாகவும், ஆத்தும அர்ச்சிப்புக்கு அவசியமான வழிபாடுகளாகவும் சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்டன.

தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளோ, திருச்சபைக்கு அவ்வளவு அவசியமானவைகளல்ல. அவைகளில்லாவிட்டாலும், நாம் அர்ச்சியசிஷ்டதனத்தை அடையக்கூடும். அவைகள் நமக்குப் பிரயோசனமானவைகள்; ஆனால் அவசியமானவைகளல்ல. அநேக சமயங்களில் அவைகளால் வரவேண்டிய நன்மைகளை, அவைகளில்லாமலே சர்வேசுரன் நமக்கு அளித்தருளுகிறார்.



### III.—தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் எத்தனை விதப்படும்?

தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள் அநேகம். முன்காலத்திலே உபயோகிக்கப்பட்டவைகளில் சில, இப்போது பிரயோகிக்கப்படுகிறதில்லை. மந்திரம் ஆசீர்வாதம் முதலியவைகள் புதிதாய் ஏற்படுத்தப்பட்டன. இக்காலத்திலிருப்பவைகளை ஆறு பிரிவாய்ப் பிரிக்கலாம். இவை செபம், தீர்த்தம், மந்திரிக்கப்பட்ட தீபம், பாவசங்கீர்த்தனமந்திரம், தானதர்மம், ஆசீர்வாதமாம். இந்த ஆசீர்வாதமோ, ஆசீர்வதித்தல், ஆசீர்வதிக்கப்பட்டபொருள் ஆக இருவகைப்படும். இப்படியாய் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளின் தொகை ஏழென்றும் சொல்லலாம்.

1. செபம்:—செபத்தைச் சார்ந்த தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளாவன:—

(க) பரமண்டலமந்திரத்தைச் செபித்தல். பாவங்களுக்குப் பொறுத்தல் அடையவும், சோதனையினின்று விடுதலை அடையவும், இது விசேஷ உதவியாயிருக்கிறது.

(உ) திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட சில செபங்கள். இவைகளை முக்கியமாய் அபிஷே

கட்டளையிடப்பட்ட கோவில்களில் செய்தால், விசேஷப்பலன் அடையலாம்.

(ஈ) **பொதுச்செபங்கள்.** பூசை, மாலைப் பிரார்த்தனை, திருச்சபையின் கட்டளைப்படி குருக்கள் செபிக்கும் சங்கீதமாலை முதலிய செபங்கள் இப்பொதுச் செபங்களாகும்.

(உ) **சுற்றுப்பிரகாரங்கள்.** இவைகள் காணிக்கைத் திருநாள், குருத்து ஞாயிறு, திவ்விய நற்கருணைத் திருநாள், சுவிசேஷகரான அர்ச். மாற்கு திருநாள், சேசுக்கிறீஸ்துநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளிய திருநாளுக்கு முன் பூமியின் கனிகளைச் சர்வேசுரன் ஆசீர்வதிக்கும்படி கொண்டாடப்படும் மூன்று தினங்கள், ஆகிய இப்பேர்ப்பட்ட சில விசேஷ திருநாட்களில் சுற்றுப்பிரகாரங்கள் திருச்சபை ஆசாரப்படி சாதாரணமாய் நடந்துவருகிறது.

இந்தச் சாதாரண சுற்றுப்பிரகாரங்களைத் தவிர, யாதொரு அபாயத்தினின்று காப்பாற்றப்படும்படியாகவும், அல்லது பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றியறிதல் செலுத்தும்படியாகவும், விசேஷ சுற்றுப்பிரகாரங்களை அர்ச். பாப்பானவராவது மேற்றிராணியாராவது நியமிப்பது வழக்கம்.



2. **தீர்த்தம் :** தீர்த்தமாவதென்றால், உப்புக்கலந்து குருவானவரால் மந்திரிக்கப்பட்ட தண்ணீர்தான். உப்பும் தண்ணீரும் தீர்த்தத்தால் நமக்குக் கிடைக்கும் ஞான நன்மைகளைக் குறித்துக்காட்டும் அடையாளங்கள்.

தண்ணீர் அசுத்தமானவைகளைச் சுத்தி செய்கிறது; வறட்சியில் குளுமை உண்டாக்குகிறது; ஜீவஜெந்துக்கள் உயிரைக் காப்பாற்றுகிறது. இப்படியே தீர்த்தம் நமது ஆத்துமங்களைப் பரிசுத்தப்படுத்துகிறது; நமது ஆசாபாசங்களின் அனலைத் தணிக்கிறது; நாம் செய்யும் சாதாரண கிருத்தியங்களுக்கு ஓர் ஞான உயிருண்டாகும்படி உதவியாகிறது.

உப்பானது போசனம் கெட்டுப்போகாதபடி காப்பாற்றுவதுமல்லாமல், அதற்கு உருசியும் கொடுக்கிறது. இதுபோலவே, தீர்த்தமானது நமதாத்துமம் சோர்வை அடையாமல் எப்போதும் ஞான பெலன்கொண்டிருக்கும்படி செய்வதுமன்றி, நாம் ஞானக்காரியங்களின்பேரில் ஆசைப்பற்றுதலுள்ளவர்களாகும்படியும் பண்ணுகிறது.

ஆனால், இந்த ஞான நன்மைகளையெல்லாம் நாம் அடையவேண்டுமானால், தீர்த்தத்தை மகா

பத்தியோடும், உள் அடக்கத்தோடும், விசுவாசத்தோடும் உபயோகிக்கவேண்டியது.

(௧) குருவானவர் தீர்த்தம் மந்திரிக்கிறதெப்படி? முதலாவது தண்ணீரிலும் உப்பிலும் பசாசுக்கு யாதொரு பிடிப்பில்லாதபடி அதைத் துரத்தி, அவைகளில் அவ்வொன்றையும் தனித்தனியே மந்திரிக்கிறார். ஏனெனில் ஆதாமின் பாவத்துக்குப்பின், பூமியிலுள்ள சகல வஸ்துக்களும் சபிக்கப்பட்டு, கொஞ்சமாகிலும் பசாசின் கைவசத்திலிருக்கின்றன.

ஆனால் இந்தச் சாபத்தைத் தவிர்த்து, சாதாரண வஸ்துக்களை முதலாய்த் தேவ ஆராதனைக்காக அபிஷேகம் செய்யத் திருச்சபைக்கு அதிகாரமிருக்கிறது. இதினாலேதான் தண்ணீர், நெருப்பு, எண்ணெய், மெழுகுவத்தி முதலியவைகளைத் திருச்சபை மந்திரிக்கிறது. இப்படி மந்திரிக்கப்பட்ட பொருட்களுக்கெல்லாம் அதனதின் சுபாவத்துக்குத் தகுந்தபோல், ஓர் விசேஷ சக்தியும் ஞான பெலனும் உண்டாகிறது.

குருவானவர் உப்பையும் தண்ணீரையும் தனித்தனியே மந்திரித்தபின், மூன்றுவிசை சிலுவை அடையாளமாக உப்பைத் தண்ணீரில்



போட்டு, தீர்த்தத்தினால் வரும் நன்மைகள் இம்மாத்திரம் என்று குறித்துக்காட்டும் செபங்களைச் சொல்லுகிறார்.

(௨) தீர்த்தத்தின் உபயோகமென்ன? தீர்த்தமானது அப்போஸ்தலர் காலந்தொடங்கியே திருச்சபையில் வழங்கிவந்திருக்கிறது. ஆதிகாலத்துக் கிறீஸ்துவர்கள் பசாசை ஓட்டவும், அதன் மாய்கைகளுக்கு விலகித் தப்பிக்கவும், அதன் கொடுமையினின்று விடுதலை அடையவும், தீர்த்தத்தை உபயோகித்து வந்தார்கள். நாமும் அவர்களைக்கண்டு பாவித்து, பசாசுக்கு விரோதமாய்த் தீர்த்தத்தை உபயோகிக்கக்கடவோம். முக்கியமாய்ச் சாகக்கிடக்கும் வியாதிக்காரனைவிட்டுப் பசாசு ஓட்டம்பிடிக்கும்படி, இந்த வழிபாட்டை உபயோகிக்கவேண்டும். யாதொரு தொத்து வியாதியினால் பீடிக்கப்பட்ட இடங்களில் தீர்த்தத்தை விசுவாசத்தோடு தெளிப்பது, மகா பத்தியுள்ளதும் பிரயோசனமுமான வழக்கம்.

(௩) தீர்த்தமானது ஆட்களையும் பொருட்களையும் மந்திரிக்க உதவுகிறதுமன்றி, சில விசேஷமான சமயங்களில் தேவதிரவிய அநுமானங்களுக்கும் உதவுகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் பூசைக்கு முன் குருவானவர் விசுவாசிகள்மேல் தீர்த்தம் தெளிக்கும்போதும்,

நாம் தீர்த்தத்தைத் தொட்டு சிலுவை போட்டுக்கொள்ளும்போதும், பசாசுகளை ஓட்டி, சோதனைகளை நீக்கி, சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுதற்கு விசேஷ சக்தியுள்ளதாகிறது. இப்படித் தீர்த்தத்தினால் சிலுவை போட்டு, திரித்துவ மந்திரம் சொன்னால், ஒவ்வொரு விசையும் 100 நாள் பலன் அடையலாம்.

கிறீஸ்தவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போதும், அதைவிட்டு வெளியே போகும்போதும், காலமே கண்விழித்தவுடனேயும், இராத்திரி படுக்கப்போகுமுன்னும், கூடுமானால் கடின சோதனை வரும்போதும், தீர்த்தத்தைத் தொட்டு சிலுவை போட்டுக்கொள்ள அப்பியாசப்படவேண்டும். இதினிமித்தம் கிறீஸ்தவர்கள் வீடுகளில் தீர்த்தம் வைத்திருக்கவேண்டியது. சகலவித பொல்லாப்புக்களையும் நீக்கிப் போட, தீர்த்தத்துக்கு வல்லமையுண்டு.

3. மந்திரித்த அப்பம் :—

(க) சில இடங்களில் குருவானவர் பூசையில் அப்பத்தையும் இரசத்தையும் காணிக்கை



யாக ஒப்புக்கொடுக்கும்போது, அப்பங்களை மந்திரித்து விசுவாசிகளுக்கு அவைகளைப் பகிர்ந்துகொடுப்பது வழக்கம். பூர்வகாலத்தில் கிறீஸ்தவர்கள் தங்களுக்குள்ளிருக்கவேண்டிய சிநேக ஐக்கியத்தின் அடையாளமாகப் பூசைக்குப்பின் எல்லாரும் ஒன்றாய்க்கூடி "அகாப்பு" என்னும் போசனத்தைப் புசித்துவந்தார்கள். இதற்கு ஓர் ஞாபகமாய்ப் பூசையில் அப்பத்தை மந்திரிக்கும் வழக்கம் இன்னும் நிலைத்திருக்கிறது. இக்காலத்தில், மந்திரிக்கப்பட்ட அப்பங்களைக் கோவிலிலிருப்பவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதுமன்றி, பூசைக்கு வரக்கூடாதவர்களுக்கும் அனுப்புகிறதுண்டு. இப்படிச் செய்வதேனென்றால், தேவநற்கருணை வாங்காதவர்களும் பூசையில் ஒப்புக்கொடுக்கப்படும் பலியில் பங்கு அடையும்படியாகத்தான்.

மந்திரித்த அப்பத்தைக் கோவிலிலேயே சாப்பிடலாம்; அல்லது வீட்டுக்குக் கொண்டு போகலாம். ஆனால் தேவதிரவிய அநுமானத்துக்கடுத்தவைகளுக்குரிய நன்மைகளை அடையவேண்டுமானால், விசுவாசத்தோடும் சங்கையோடும் அருந்துவது அவசியம்.

(உ) அப்பத்தோத மந்திரிப்பதுபோல், வேறு சில காரியங்களும் அந்தந்தத் தேசங்களில் வழங்கிவருகின்றன. இப்படியே குருவானவர் எண்ணெய், உப்பு, புதிதாய் விளைந்த தானிய தவசங்கள் முதலிய சாப்பிடக்கூடிய பதார்த்தங்களை மந்திரிக்கிறார்; உயிர்த்த திருநாளன்று முட்டை, செம்மறியாட்டுக்குட்டி முதலியவைகளை ஆசீர்வதிக்கிறார்.

4. பாவ சங்கீர்த்தன மந்திரம்:—

இந்த மந்திரத்தைக் குருவானவரோடுகூட பூசையின் துவக்கத்திலாவது அல்லது விசுவாசிகள் தேவநற்கருணை வாங்குமுன்னாவது செபிக்கும்போது தேவதிரவிய அநுமானத்துக்கடுத்ததாகிறது. இந்த மந்திரத்தைச் செபித்த பின், குருவானவர் எப்போதும் பொதுப்பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுக்கிறார். உத்தமமனஸ்தாபமில்லாமல், இந்த ஆசீர்வாதத்தினாலே மாத்திரம் சாவானபாவம் பொறுக்கப்படுமென்று எண்ணலாகாது.

5. தான தர்மம்:—

பிறருடைய அவசரங்களில் அவர்களுடைய ஆத்துமத்துக்காவது சரீரத்துக்காவது உதவியாகச்செய்யும் ஒவ்வொரு கிரியையும் தான



தர்மம் என்னும் தேவதிரவிய அநுமானத்துக்கடுத்ததாகிறது. இப்படியே யாதொருத்தருக்கு மந்திரம் கற்றுக்கொடுத்தல், ஞானோபதேசம் சொல்லுதல், யாதொரு தர்மக்கிருத்தியத்துக்காகப் பணங்கொடுத்தல், வியாதிக்காரரைச் சந்தித்தல் முதலியவைகள் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகள். இப்பேர்ப்பட்ட கிரியைகளைச் செய்பவர்கள் இந்தக்கிரியைகளுக்குக் காரணமாய்க் கிடைக்கும் பேறுபலன்களை அடைகிறதுமன்றி, இவைகள் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளானதால், சர்வேசுரன் பொதுவாய்க் கொடுத்த வார்த்தைப்பாட்டின்பிரகாரமும், திருச்சபையின் வேண்டுதலின்பிரகாரமும், [illegible] அடைந்துகொள்ளுகிறார்கள். இப்படியே விசுவாசப் பரப்புதல், பாலசபை, அர்ச். இராயப்பர் காசு என்று வழங்கிவருகிற கிரியைகளுக்கு விசேஷ ஞான நன்மைகள் கிடைக்கிறது.

6. ஆசீர்வாதம்:—

இது செபம், அபிஷேகம் என்று இருவகைப்படும்.

(க) ஜனங்கள்மேலாவது, யாதொரு பொருள்மேலாவது தேவகிருபை இறங்கும்படி,

திருச்சபை தனது குருக்களைக்கொண்டு செய்யும் செபங்களே சாதாரண ஆசீர்வாதம் என்று சொல்லப்படும்.

ஜனங்களுக்குக் கொடுக்கும் ஆசீர்வாதமேதென்றால், அவர்கள் சகல பொல்லாப்புக்களிலும் நின்று காப்பாற்றப்பட்டு, அவர்கள் ஆத்துமங்களுக்குப் பிரயோசனமான ஞான நன்மைகளையும் இலௌகீக நன்மைகளையும் அடையும்படி தேவ உதவியை மன்றாடுகிறதாகும்.

இப்பேர்ப்பட்ட ஆசீர்வாதங்களில் சிலதை எடுத்துரைப்போம்:— தேவநற்கருணை ஆசீர்வாதம்; யாதொரு சடங்கு நடக்கும்போது பாடுபட்ட சுரூபத்தைக்கொண்டு கொடுக்கும் ஆசீர்வாதம்; பேறுபெற்றவர்களுக்கு எந்தச் சமயத்திலும் கொடுக்கும் ஆசீர்வாதம்; குருவானவர் பூசை முடிவிலும் தேவநற்கருணை கொடுக்குமுன்னும், இன்னும் தமது குருத்தத்துவ கடமைகளை நிறைவேற்றும்போதும் கொடுக்கும் ஆசீர்வாதம்.

இதினாலேதான் குழந்தைகளையும், வியாதிக்காரரையும் குருவானவரைக்கொண்டு ஆசீர்வதிக்கச் செய்கிறார்கள்.

யாதொரு பொருளை மந்திரிக்கிறதேனெனில், அப்பொருளை உபயோகிப்பவர்களுக்குச் சுகிக்கப்



பட்ட தேவசகாயம் கிடைக்கும்படியாகவும், பசாசுக்கு அதில் யாதொரு பிடிப்பிராதபடியாகவும்தான். வீடுகளையும், வயல்களையும், கப்பல்களையும், புகைவண்டிகளையும் மந்திரிக்கிறதுக்குக் காரணம் இதுவே.

பசாசுக்களை ஓட்டும்படியாகக் குருக்கள் செபங்கள் செய்யும்போது, இந்த ஆசீர்வாதமும் சார்ந்ததாகும். இச்செபங்களால் குருவானவர் தாம் ஆசீர்வதிக்கும் ஆளையும் பொருளையும் விட்டு சகல கெட்ட அரூபிகளும் நீங்கிப்போகும்படி, திருச்சபையின் பேரால் கட்டளையிடுகிறார். ஆனால் இக்கட்டளைக்கு அந்த அசுத்த அரூபிகள் கீழ்ப்படிவதும் கீழ்ப்படியாததும் சர்வேசுரனுடைய சித்தத்தில் அடங்கியிருக்கிறது.

(உ) மேற்சொலித்த ஆசீர்வாதங்கள் அபிஷேகம் என்று சொல்லப்படும். இதனால் திருச்சபையானது யாதொரு ஆளை அல்லது பொருளை தேவ ஊழியத்துக்காக நியமித்து ஏற்படுத்துகிறது. இப்படியே பாப்புமார்களையும், இராஜாக்களையும், மடாதிபதிகளையும், சந்நியாசிகளையும், கன்னியாஸ்திரிகளையும், "தோன்சூரா" என்னும் பட்டம் பெற்றவர்களையும் ஆசீர்வதித்து அபிஷேகம் செய்கிறது. "தோன்சூரா" என்னும்

தலைப்பட்டம், குருத்தத்துவத்தைப்போலத் தேவதிரவிய அநுமானமல்ல; ஆனால் தேவதிரவிய அநுமானத்துக்கடுத்தது.

7. அர்ச்சனையுமல்லாமல், சில பொருட்களையும் திருச்சபை அபிஷேகம் செய்கிறது. இதனால் அப்பொருட்கள் சாதாரணப் பொருட்களைப் போலல்லாமல், திருப்பண்டங்களாய் மாறிப் போகின்றன. ஆகையால் இவைகளிடத்தில் சங்கையீனமாய் நடத்தல் தேவதுரோகமாகிறது. திருச்சபையானது கோவில்களையும், பீடங்களையும், கல்லறைகளையும், பூசைக்கு உபயோகமாகும் திருப்பாத்திரங்களையும், மணிகளையும் அபிஷேகம் செய்கிறது.

மேலும், பெரிய சனிக்கிழமையன்று தீர்த்தம், நெருப்பு, ஞானஸ்நானத்தண்ணீர், உயிர்த்த திருநாளுக்குரிய வர்த்தியையும், காணிக்கைத் திருநாளன்று மெழுகுதிரிகளையும், தபசுகாலத்து முதல் புதன்கிழமையில் விபூதியையும், தபசுகாலத்தின் ஆறாம் ஞாயிற்றுக்கிழமையில் குருத்தோலைகளையும், பெரிய வியாழக்கிழமையன்று அர்ச்சியசிஷ்ட எண்ணெயையும் மந்திரிக்கின்றது.



இந்த அர்ச்சியசிஷ்ட எண்ணெயை மேற்றிராணியார் மாத்திரம் அபிஷேகம் செய்யலாம். இந்த எண்ணெய் மூன்றுவகைப்படும் :—

(௧) அவஸ்தைப்பூசுதல் எண்ணெய்: இதைக் கொண்டுதான் வியாதிக்காருடைய ஐம்பொறிகளைப் பூசுகிறது. கோயில் மணிகளை அபிஷேகம் பண்ணும்போதும் இந்த எண்ணெயால் வெளிப்புறம் பூசப்படுகிறது.

(௨) ஞானஸ்நானம்பெற ஆயத்தம் செய்பவர்கள் எண்ணெய்: இது ஞானஸ்நானம் பெறுகிறவர்களின் நெஞ்சிலேயும் தோட்களிலேயும் பூசவும், குருப்பட்டம் பெறும்போது குருவானவர் கைகளை அபிஷேகம் செய்யவும், இன்னும் இராஜ அபிஷேகம் முதலிய சடங்குகளுக்கும் உதவுகிறது.

(௩) அர்ச். பரிமள எண்ணெய்: இது எண்ணெயும் பரிமளமும் கலந்த தைலம். உறுதிப்பூசுதல் கொடுக்கும்போதும், ஞானஸ்நானம் கொடுத்தவுடனே தலை உச்சியிலே பூசும்போதும், பூசைப்பாத்திரங்கள், பீடங்கள், கோயில்கள் மந்திரிக்கும்போதும் உபயோகிக்கும் தைலம் இதுவே. மேலும் இதைக்கொண்டு மணிகளின் உட்புறம் பூசப்படுகிறது.

இன்னும் திருச்சபையானது பாடுபட்ட சுருபம், வட்டச் சுருபம், செபமாலை, உத்தரீயம், "ஆக்னூஸ் தேயி" முதலிய பக்திக்குரிய பொருட்களையும் மந்திரிக்கிறது. இதனால் இப்பொருட்கள் அர்ச்சியசிஷ்ட பண்டங்களாகி, அவைகளைப் பக்தியோடு தங்கள்மேல் அணிந்திருப்பவர்களுக்கும், சங்கையோடு முத்தி செய்பவர்களுக்கும், அந்தந்தத் தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளின் நன்மைவரங்களை அடைந்து கொடுக்கிறது. முக்கியமாய்த் துஷ்ட அரூபிகளைத் துரத்தும் சக்தி அவைகளுக்கு உண்டு.

"ஆக்னூஸ்தேயி" என்பது அர்ச். பாப்பானவர் கோவிலில் உயிர்த்த திருநாளுக்கு உபயோகிக்கப்படுகிற வர்த்தியின் மெழுகினால் செய்யப்படுகிறது. பாஸ்குத் திருநாளுக்குப்பின் வருகிற முதல் ஞாயிற்றுக்கிழமை, அர்ச். பாப்பானவரே இவைகளை ஆடம்பரமாய் மந்திரிக்கிறார். இவைகளை அணிந்திருப்பவர்கள் நெருப்பு முதலிய அபாயங்களில் அகப்படாமலும், இடிவிழுந்து மரிக்காமலும், தற்செயலாய்ச் சம்பவிக்கும் பல விபத்துக்களாகாமலும், கெர்ப்ப ஸ்திரீகளானால் யாதொரு ஆபத்து நேரிடாமலும் காப்பாற்ற, இவைகளுக்கு விசேஷ வல்லமையிருக்கிறது.



IV. ஆட்களையும் பொருட்களையும் மந்திரிக்க அதிகாரமுடையதார்?

"ஆக்னூஸ்தேயி" "பால்லியும்" முதலிய வஸ்துக்களை அர்ச். பாப்பானவர் மாத்திரம் மந்திரிக்கலாம். "பால்லியும்" என்றால், அதிமேற்றிராணிமார் முதலிய சிலருக்கு அர்ச். பாப்பானவரோடிருக்கும் ஒன்றிப்பையும், அவர்களுக்குத் தங்கள் மாகாணத்தைச் சேர்ந்த மேற்றிராணிமார்கள் மேலுள்ள அதிகாரத்தையும் குறித்துக்காட்டும் அடையாளமாய்க் கொடுக்கப்படும் ஓர் வித வஸ்திரம். இவைகளைத் தவிர வேறு பக்திக்குரிய பொருட்களை மந்திரித்து, திருச்சபையின் பலன்களை ஸ்தாபிக்கும் அதிகாரம், அர்ச். பாப்பானவருக்கே உடையது; ஆனால் அர்ச். பாப்பானவர் இந்த அதிகாரத்தைச் சாதாரண குருக்களுக்கு [illegible]ய்க் கொடுக்கலாம்.

சில விசேஷ அபிஷேகங்களை மேற்றிராணியார் மாத்திரம் செய்யலாம். இப்படியே கோவில்களும், பூசைப் பாத்திரங்களும் அபிஷேகம் பண்ண, அவருக்கு மாத்திரம் பொது அதிகாரமுண்டு.

குருக்கள் சாதாரண ஆசீர்வாதங்கள் கொடுக்கலாம். இந்த அதிகாரம் குருக்களாயில்லாத

வர்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படுவதில்லை. தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பது மெய்தான்; இது பிள்ளைகளுக்கு மிகவும் ஆசீர்வாதம் பெறுவிக்கக்கூடிய நல்ல வழக்கம். ஆனால் திருச்சபையின்பேரால் குருவானவர் மாத்திரம் ஆசீர்வாதம் கொடுக்கலாம். திருச்சபையால் கொடுக்கப்படும் விசேஷ அதிகாரத்தினிமித்தம்தான், தேவதிரவிய அநுமானத்துக்கடுத்தவைகளுக்கும் மற்றச் சாதாரண புண்ணிய முயற்சிகளுக்கும் வித்தியாசமுண்டாகிறது. இதினிமித்தம் குருவானவர் கொடுக்கும் ஆசீர்வாதம், வாக்கூடிய பொல்லாப்புகளை நீக்கவும், வியாதிகளை சொஸ்தப்படுத்தவும், உலோக பொருட்களாகிய வீடு வெள்ளாண்மை ஆடுமாடு முதலியவைகளைக் காப்பாற்ற விசேஷ சக்தி பெற்றது.

V. தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளால் விளையும் நன்மைகள் எவை?

தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளின் சக்தி முக்கியமாய்த் திருச்சபையின் ஜெபத்தினிமித்தமே உண்டாவதால், அவைகள் தாங்களாய்த் தானே யாதொரு நன்மையைப் பயக்கிறதில்லை. ஆனால் மேற்சொன்ன ஜெபத்தினிமித்தம், நாம் சர்வேசுரனிடத்திலிருந்து



அநேக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுந்த வழிபாடாகின்றன. இப்படி நன்மைகளை வருவிக்க இவைகளுக்கு விசேஷ சக்தியிருக்கிறது.

1. சகல தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளும் பொதுவாய்ப் பயக்கும் நன்மைகளாவன:

(க) நம்மிடத்தில் ஸ்திரமான பக்தி பற்றுதலை யெழுப்பி, நாம் பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்ய வேண்டிய அநுக்கிரகப்பிரசாதத்தைப் பெறுவிக்கிறதுமன்றி, பாவமன்னிப்பை அடைய, நம்மை ஆயத்தப்படுத்துகின்றன.

(உ) இந்த அநுக்கிரகப்பிரசாதத்தைக் கொண்டு ஆத்துமமானது அடிமை மனஸ்தாப முயற்சி செய்கிறது. இப்பேர்ப்பட்ட மனஸ்தாபத்தினால் நாம் கஸ்திப்படும் சகல அற்பபாவங்களும் மன்னிக்கப்படும். முக்கியமாய்ப் பரமண்டல மந்திரத்தைச் செபிக்கும்போது, "எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்" என்று மன்றாடுவதால், இந்த மந்திரம் பொறுத்தலுக்கு வேண்டிய ஞானப் பற்றுதல்களை நம்மிடத்தில் வருவிக்க விசேஷ சக்தியுள்ளது. சில சமயங்களில் தேவதிரவிய அநுமானங்க

ளுக்கடுத்தவைகளால் வரும் வரப்பிரசாதமானது நாம் சிநேகமுயற்சி செய்யவும் உத்தம மனஸ்தாபப்படவும் போதுமாயிருக்கிறபடியால், நமது சாவான பாவங்களுமுதலாய் மன்னிக்கப்படுகின்றன. இது தேவத்திரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளின் சுயபெலத்தினால் உண்டாவதில்லை; ஆனால் அவைகளைப் பத்தியோடே உபயோகிப்பவர்களிடம் கிளம்பும் உத்தம ஞான உணர்ச்சியினிமித்தம் சம்பவிக்கிறது.

(௩) மன்னிக்கப்பட்ட பாவங்களுக்குள்ள அநித்திய ஆக்கினையும் நீக்கப்படலாம். இந்த நன்மை விசேஷமாய்ப் பலன் ஸ்தாபிக்கப்பட்ட பொருட்களினால் உண்டாகிற.

2. தீர்த்தம், சுரூபங்கள் மந்தி[illegible] பொருட்களினால் உண்டாகிற விசேஷ நன்மைகள்:

(க) மேலேசொன்னபடி, பசாசானது இருக்கக்கூடிய இடங்களிலும் பொருட்களிலும் நின்று அதைத் துரத்துகின்றன. சோதனைகளைத் தணிப்பதுமல்லாமல் சில சமயங்களில் அவைகளை முழுதும் நீக்குகின்றன.

(உ) அநேக பிரபஞ்ச தின்மைகளினின்று இரட்சிக்கின்றன. இப்படியே வியாதி, தொத்துநோய், இடி, பஞ்சம் முதலிய அனர்த்தங்



களிலும், ஆபத்து விபத்துகளிலும் நின்று காப்பாற்றுகின்றன.

பசாசை ஓட்டுகிறதும், யாதொரு இலௌகிக நன்மையை அடைகிறதும், சர்வேசுரனுடைய சித்தத்துக்கும் நமது நன்மைக்கும் விரோதமில்லாதபோது மாத்திரம் பலிக்கும்.

VI. தேவத்திரவிய அநுமானங்களுக்கடுத்தவைகளுக்குரிய நன்மைகளைப் பெறுவதற்கு வேண்டிய ஆயத்தமென்ன?

விசுவாசம், பத்தி, பாவங்களின்மேல் மனஸ்தாபம் முதலிய பற்றுதல்கள் அவசியம். தேவத்திரவிய அநுமானங்களைப்போல, தேவத்திரவிய அநுமானத்துக்கடுத்தவைகளும் பெறுபவர்களின் ஆயத்தத்துக்குத் தகுந்தபடி அதிகமான பலனைப் பயப்பதினால், அவைகளால் வரும் நன்மைகளை ஏராளமாய் அடையும்படி நல்ல ஆயத்தமாயிருக்கவேண்டியது.

## பதின்மூன்றாம் பிரிவு.

## செபத்தின் பேரில்.

நாம் வரப்பிரசாதத்தை அடையும்படியாக, தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுகிறதுமல்லாமல், செபம் பண்ணவும் வேண்டியது.

1. செபமாவதென்ன?

நமது புத்தியையும் மனதையும், சர்வேசுரனை நோக்கி எழுப்புவதே செபமாகும்.

2. எத்தனை வகைச் செபம் உண்டு?

(க) மனச்செபம் வாய்ச்செபம் என இரண்டு வகை உண்டு.—மனதிலே மாத்திரம் செய்கிற மன்றாட்டு மனச் செபம் அல்லது தியானமென்றும், இருதயத்திலிருக்கிற பத்தியுள்ள நினைவு, ஆசை, கருத்துகளை வார்த்தையினால் வெளிப்படுத்துவது வாய்ச் செபம் என்றும் சொல்லப்படும்.

(உ) இதுவுமன்றி நாம் அநுதினம் செய்கிற கிரியைகளையும், படுகிற துன்ப வருத்தங்களையும், தேவ தோத்திரத்துக்காகவும் யாதொரு விசேஷ கருத்து மன்றாட்டுக்காகவும் சர்வேசுரனைப் பார்த்து ஒப்புக்கொடுத்தால், இதே "கிரியைச் செபம்" என்று அர்ச். சலேசியார் சொல்லுகிறார்.

எப்போதும் செபம் செய்யவேண்டுமென்று திவ்விய கர்த்தர் திருவுளம் பற்றியிருக்கிறார். மனச் செபமும் வாய்ச் செபமும் இடைவிடாமல் செய்யக்கூடாததினாலே, முக்கியமாய் கிரியைச் செபத்தினாலும், மனவல்லயச் செபத்தி-



னாலும் இந்தக் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது. இதில்தான் செபி அப்போஸ்தல சபையின் மகிமையும் பிரயோசனமும் அடங்கியிருக்கிறது.

3. எதற்காகச் சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுகிறோம்? செபம் பண்ணும்போது, சர்வேசுரனை ஆராதித்து, ஸ்துதித்து வணங்கி, அவர் நமக்குச் செய்திருக்கிற நன்மைகளுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்து, நாம் கட்டிக்கொண்ட பாவங்களுக்காகப் பொறுத்தல் மன்றாடி, நம்முடைய ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய சகல நன்மைகளையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

4. செபம் பண்ணுகிறது அவசியமா?—முந்த முந்த சர்வேசுரன் செபம் செய்யவேணுமென்று கற்பித்திருப்பதினாலே, வேண்டிக்கொள்ளுவது கடமை.—மேலும் தேவ கற்பனைகளையும் திருச்சபைக் கட்டளைகளையும், அநுசரிப்பதற்கும், பாவத்தை விலக்கிப் புண்ணியம் செய்கிறதற்கும் தேவ உதவி நமக்கு முழுதும் அவசரமாயிருப்பதினாலே, எப்போதும் அதற்காக மன்றாடவேண்டியது.

5. எப்படி செபம் பண்ணவேண்டும்?—சேசுநாதருடைய திருநாமத்தையும் அவருடைய பேறுபலன்களையும் குறித்து, சர்வேசுரனிடத்தில் கவனத்தோடும், தாழ்ச்சியோடும், சுறுசுறுப்போடும் இடைவிடாமல் மன்றாடினால், தேவ வரப்பிரசாதம் நமக்குக் கிடைக்குமென்பது நிச்சயம்.

6. சர்வேசுரன் நமது செபங்களைக் கேட்டருளுவாரோ?

(க) தப்பாமல் கேட்பாரென்பது விசுவாசத்துக்கடுத்த சத்தியம்.—"என் நாமத்தினாலே நீங்கள் பிதாவிடத்தில் ஏதாகிலும் கேட்பீர்களேயாகில், அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவாரென்று மெய்யாகவே, மெய்யாகவே, உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சேசுநாதர் சுவாமி திருவுளம் பற்றியிருக்கிறார்.

(அரு. XVII. 23).

(உ) சர்வேசுரன் நமது மன்றாட்டுகளைத் தப்பாமல் கேட்டருளும்படி, மேலே சொன்னபிரகாரம் செபம் பண்ணுவதுமன்றி, நமது இரட்சணியத்துக்கு உதவுமானவைகளை மாத்திரம் கேட்டுக்கொள்ளவேணும். ஆஸ்தியாஸ்தி, மகிமை, சுகம் முதலிய இலௌகீக நன்மைகள் அநேகம்



விசை நமது ஆத்துமத்துக்குக் கெடுதியாயிருக்கிறதினிமித்தம், நாம் அவைகளுக்காக மன்றாடும்போது, தேவசித்தத்துக்கு முழுதும் அமைந்து, பிரார்த்திக்கக்கடவோம். இவைகள் நமது ஞான சீவியத்துக்கு மோசமாயிருக்குமானால், அளவில்லாத கிருபையுள்ள சர்வேசுரன் இவைகளை அளிக்கமாட்டாரென்பது பிரத்தியட்சம்.

7. யாருக்காக வேண்டிக்கொள்ளவேண்டும்?—நமக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், உலோகத்திலுள்ள சகல மனுஷருடைய இரட்சணியத்துக்காகவும் மன்றாடுவது கிரமமே. முக்கியமாய் நமது பெற்றோர் உற்றார், உபகாரிகள், சிநேகிதர் பகையாளிகளுக்காகவும், திருச்சபை, அர்ச். பாப்பானவர், ஞான அதிகாரிகள், உலோக உத்தியோகஸ்தர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளக்கடவோம்.—மேலும் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக மன்றாடி, அவர்களுக்கு ஆறுதல் வருவிப்பது, பிறர்சிநேகத்தைச் சேர்ந்த புண்ணிய முயற்சி.

8. எந்தச் சமயத்தில் செபம்பண்ணவேணும்?—தன் ஆத்துமம் கரையேற மெய்யான ஆசையுள்ள கிறீஸ்துவன் அந்திசந்தி செபம்பண்ணுவான்.

காலமே எழுந்திருந்தவுடனே, அந்த நாளில் சர்வேசுரனுக்குப் பொருந்தாத பாவம் செய்யாமல், அவருக்குத் தோத்திரமாக அந்த நாளைச் செலவழிக்க, அவருடைய உதவியைக் கேட்பான். அன்றைக்குத் தான் செய்யும் கிரியைகள் எல்லாவற்றையும் முன்னதாகவே சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பான். இராத்திரி படுக்குமுன்னே, அன்று அந்தந்தக் கடமைகளின் பேரில் ஆத்தும சோதனை செய்து, பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு, இனிமேல் தன் கடமைகளைச் சரியாய் அநுசரிக்கப் பிரதிக்கினை பண்ணுவான். பிரதான கிரியைகளுக்கு முன்னும் பின்னும் செபம் செய்வது நலம்.

9. யாரை நோக்கி வேண்டிக்கொள்ளவேணும்?—சர்வத்துக்கும் கர்த்தாவான சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுகிறது நமது முக்கியமான கடமை. இதுவுமன்றி, சகல அர்ச்சியசிஷ்டவர்களும், சம்மனசுக்களும், முக்கியமாய் தேவமாதாவும் சர்வேசுரனுக்கு உகந்தவர்களாயிருப்பதால், அவர்களுக்குரிய வணக்கம் செய்கிறதும், நமக்கு வேண்டியதை அவர்கள் சர்வேசுரனிடத்தில் அடைந்தருளும்படி அவர்களை நோக்கி மன்றாடுகிறதும், மகா பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. நாம் இரட்சணிய



மும் நித்திய பாக்கியமும் அடையவேண்டுமென்று அவர்கள் வெகுவாய் ஆசிக்கிறபடியால், தங்களுடைய மன்றாட்டினாலே நமக்கு ஒத்தாசை செய்துகொண்டு வருகிறார்கள்.

10. பொதுவிலே செபம் பண்ணுகிறது:—குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் நித்திரை செய்வதற்குமுன் ஒன்றாகக்கூடி செபம் செய்தால், அதினால் விசேஷமான தேவ ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கோவிலில் அந்திசந்தி பிரார்த்தனை நடக்குமாகில், கூடியவரையில் வீட்டுக்கு ஒருவராவது கோவிலுக்குப் போவது நலமாயிருக்கும்.

குடும்பத்திலே நாள்தோறும் பொதுவிலே செபம் நடத்திக்கொண்டு வந்தால், பிள்ளைகள் சிறுபிராயத்திலிருந்துதானே செபம் பண்ணப் பழகிக்கொள்வதுமன்றி, அவர்களுக்கு மந்திரம் நன்றாய்த் தெரிந்திருக்கிறதினால், அவர்கள் புதுநன்மை வாங்குவதற்கு அதிக தாமசம் செய்ய முகாந்தரமிருக்காது.

(கிறீஸ்துவர்கள் விசேஷமாய்ப் படித்து அறிந்து வேண்டிக்கொள்ளத்தக்க செபங்களின்பேரில் இங்கே வியாக்கியானம் செய்கிறது அவசியமில்லை. "பிரதான மந்திரங்களின்

விளக்கம்" என்னும் சிறு புஸ்தகத்தைக் காண்க.)

---

## பதினாலாம் பிரிவு.

---

## புண்ணியங்களின் பேரில்.

1. புண்ணியமாகிறதென்ன?

நன்மை செய்வதற்கு மனிதனுடைய ஆத்துமத்தில் நிலைமையாயுள்ள மனசார்பும் நற்குணமும் புண்ணியம் எனப்படும்.—நன்மை செய்வதினால் நற்குணமும், தின்மை செய்வதினால் துற்குணமும் உண்டாகிறது.

இன்னம் புண்ணியம் என்கிறபேர் அந்த நற்குணங்களில் நின்று வருகிற சுகிர்த கிருத்தியங்களுக்குஞ் செல்லும்.—புண்ணியம் மரம்போலவும், நற்கிரியைகள் அதின் கனிகள்போலவுமிருக்கின்றன. நற்கிரியைகள் ஆத்துமத்தில் நிற்காமல், கொஞ்சத்துக்குள் கடந்துபோகும். புண்ணியமோவென்றால், யாதொரு கிரியை செய்யாத சமயத்தில் முதலாய், ஆத்துமத்தில் நிலைமையாய் நிற்கும்.—அப்படியே ஒரு கணக்கன் தூங்கும்போது ஒரு கணக்கும் செய்யாம



லிருந்தபோதிலும், கணிதசாஸ்திரம் அவனிடத்திலே தங்கி இருக்கிறது.—நற்குணமாகிற புண்ணியத்தின்பேரில் மாத்திரம் இங்கே பேசப்போகிறோம்.

எத்தனைவகைப் புண்ணியம் உண்டு?

(௧) மனித சுபாவத்துக்கு அடுத்த புண்ணியங்களும், மனித சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியங்களும் ஆக இரண்டு வகைப் புண்ணியமுண்டு.—

(௨) இந்தப் புண்ணியங்களை நம்மிடத்தில் பிறப்பிக்கிற காரணம் ஏதென்றால், சிலது நம்முடைய ஆத்துமத்தில் சர்வேசுரனாலே மாத்திரம் உண்டாகி, இஷ்டப்பிரசாதத்தோடே கூட அளிக்கப்படும். வேறே சிலதுகள் மனிதனுடைய பிரயாசத்தினாலும் அப்பியாசத்தினாலும் சுபாவமாய் உண்டாகும்.

(௩) புண்ணியமுயற்சி செய்வதில் நமக்கிருக்கிற நோக்கமும், முகாந்தரமுமென்னவென்று விசாரித்தால், தேவ சம்பந்தமான புண்ணியங்கள் என்றும், நல்லொழுக்கத்துக்கு அடுத்த புண்ணியங்கள் என்றும் புண்ணியங்களை இரண்டு வகுப்பாய்ப் பிரிக்கலாம்.

## II. மனிதசுபாவத்துக்கு அடுத்த புண்ணியங்களின் பேரில்.

மனுஷன் தன் சுபாவத்துக்கொத்த நற்கிரியைகளைச் செய்ய விசேஷ சக்திகள் அவனிடத்தில் இயல்பாய் இருக்கின்றன.

1. புண்ணியங்கள் உண்டாகிறதெப்படி ?—

சில நற்கிரியைகளைச் செய்வதற்கு சுபாவமாய் எந்த மனுஷனிடத்திலும் சக்தி உண்டு. ஆனால் அதற்குப் புண்ணியமென்கிற பேர் செல்லாது. நற்கிரியைகளை அடிக்கடி செய்கிறதினால், சுபாவமான புண்ணியங்கள் உண்டாகிறது. அந்த நற்கிரியைகளைச் செய்யாவிட்டால், புண்ணியம் வராமலிருக்கிறதுமன்றி, இயல்பான சக்தி முதலாய்க் குறைந்துபோய், நாள் வட்டத்தில் துற்குணம் மிஞ்சிப்போகிறதற்கு இடமாகும்.

இப்படியே புத்திக்கூர்மையுள்ள சிறுபையன் நன்றாய்ப் படித்தால், அவனுடைய சுபாவ திறமை அதிகரித்து, சாஸ்திரியாவான். அவன் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல், சுற்றித்திரிந்தால், எழுத்தறியாத மடையனாயிருப்பான். ஆகையால் அப்பியாசத்தினாலும் பிரயாசத்தினாலும் சுபாவத்துக்கு அடுத்த புண்ணியங்களெல்லாம் உண்டாகவேண்டியது.



2. அப்பியாசத்தினால் ஒரு புண்ணியத்தை அடைந்தவன் அதைச் சேர்ந்த நற்கிரியைகளை எளிதாயும், விவேகமாயும் உத்தமவிதமாயும் நிறைவேற்றுவான்.

நற்கிரியைகளை அடிக்கடி செய்வதினால், நன்மைக்கு விக்கினமாயிருக்கிற துற்குணங்களும் ஆசாபாசங்களும் வரவரக் குறைந்து நீங்கிப் போவதினிமித்தம், ஆத்துமத்தில் புண்ணியம் உண்டாகும். ஒரு புண்ணியத்துக்கு விரோதமான துற்குணம் நீங்காமலிருக்குமட்டும், சுகிர்தமுயற்சிகளைச் செய்ய மனதில் வருத்தமும் அருவருப்பும் இருக்கும். புண்ணியம் இன்னும் சரியாய் உண்டாகவில்லையென்பதற்கு இது தப்பாத அடையாளம்.

(க) சுபாவ புண்ணியமில்லாதவன் அதற்கடுத்த நற்கிரியைகளைச் செய்யக்கூடுமோ ?

சுபாவமான புண்ணியமுள்ளவன் நற்கிரியைகளைச் சுளுவாயும் அதிக உத்தமமாயும் செய்யக்கூடுமென்று சொன்னதினால், புண்ணியமில்லாதவன் யாதொரு நல்ல கிரியையும் செய்யமுடியாதென்று எண்ணவேண்டாம். பொறுமைசாலியானவன் ஓரோர் சமயத்தில் கோபிக்கிறதுண்டு. கோபக்காரனும் யாதொரு சமயத்தில் அதிக பொறுமையாயிருக்கக்கூடும். ஆனால்,

பொருப்பட், புண்ணியமில்லாதவன் மகா பிரயாசத்தோடும் குறைச்சலாயும் நன்மை செய்வானென்பது நிச்சயம்.

தொழிலின் உதாரணம்:—சுபாவமான புண்ணியம், தொழில் செய்வதிலுள்ள அப்பியாசத்தைப்போலிருக்கிறது. சாமர்த்தியமுள்ள தச்சனே நேர்த்தியான மேசை? பெட்டி, முதலியவைகளை மெத்த எளிதாயும் வெகு சீக்கிரமாயும் செய்வான். இந்தத் தொழிலை அறியாதவன் இப்பேர்ப்பட்ட வேலைகளை மகா வருத்தத்தோடும் மெத்த அலங்கோலையாயும் முடிப்பான். இந்தன்மையாகவே மட்டசனமென்கிற புண்ணியமுள்ளவன் சாப்பிடுகிறதிலும், குடிக்கிறதிலும், வருத்தமின்றி ஒரு கண்டசீராயிருப்பான். அதில்லாதவன் போசனப் பிரியத்தில் மிதமிஞ்சிப்போகாமலிருக்க, எம்மாத்திரம் பிரயாசப்படவேண்டியிருக்கிறது.

(உ). சுபாவ துர்த்தனமுள்ளவர்கள் புண்ணியங்களைப் பிரயாசப்பட்டால் சம்பாதிக்கக்கூடும்:—கோபம், ஆங்காரம், மோகம் முதலிய துற்குணங்கள் ஒருவனிடத்தில் இருந்தபோதிலும், அவன் அவைகளைத் திருத்தப் பிரயாசப்பட்டு, அவைகளுக்கு விரோதமான நற்கிரியைகளை



அடிக்கடி செய்துகொண்டுவந்தால்; துவக்கத்தில் இது அவனுக்கு அதிக வருத்தமாய் இருந்தாலும், வரவர அப்பியாசமாகி எளிதாயும், உத்தமமான விதமாயும் நடப்பித்துக்கொண்டு வருவான்.

3. சுபாவமான புண்ணியங்களை அதிகரிக்கிறது எப்படி?

சுபாவத்திற்கடுத்த புண்ணியங்கள் அப்பியாசத்தால் உண்டாகி, அந்தந்தப் புண்ணியத்தைச் சேர்ந்த நற்கிரியைகளை அடிக்கடி செய்வதால், அதிக உறுதியாகி வர்த்திக்கிறது. நம்முடைய கையானது அடிக்கடி வேலை செய்கிறதால், அதிக பலன் அடைவது, இதை விளக்கிக் காட்டுவதற்கு நல்ல உதாரணமாகும்.

4. சுபாவமான புண்ணியங்கள் அழிந்துபோகிறது எப்படி?

(க) அப்பியாசத்தால் நாளடைவில் கைக்கொள்ளப்பட்ட சுபாவமான புண்ணியங்கள், அவற்றிற்கு விரோதமான கிரியை ஒன்று இரண்டு செய்யப்பட்டாலும், நம்மைவிட்டு நீங்குகிறதில்லை. ஆனால் அடிக்கடி அப்பேர்ப்பட்ட விரோதமான கிரியைகள் செய்வோமானால், நம்மி

டத்தில் துற்குணம் செழித்து ஓங்க, நற்குணம் முழுதும் அழிந்துபோகும்.

(உ) நற்குணம் அழிந்துபோவதற்கு, அதற்கு விரோதமான கிரியைகள் செய்யவேண்டுமென்பது அவசரமில்லை. அப்புண்ணியத்துக்கடுத்த நற்கிரியைகளை வெகுகாலம் செய்யாமலிருந்தால், அதுவேபோதும். சுபாவமான நற்குணமும் துற்குணமும் அப்பியாசத்தால் முளைத்து வர்த்தித்து, அப்பியாசமில்லாததால் அழிந்துபோகிறது. இப்புண்ணியங்கள் வளருகிறதற்கு நாள்பிடிக்கும். அதுபோலவே இவை அழிகிறதற்கும் சிலநாள் தேவை.

## III. மனித சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியங்களின் பேரில்.

**1. மேலான புண்ணியங்களை சர்வேசுரன்மாத்திரம் அளிக்கக்கூடும்.**

இந்தப் புண்ணியங்கள் மனுஷ சுபாவத்துக்கு மேற்பட்டவைகளாயிருக்கிறதினாலே, நம்முடைய சொந்தப் பலத்தைக்கொண்டு அவைகளை ஒருக்காலும் அடையமுடியாது. சர்வேசுரன்தாமே அவைகளை அளிக்கவேண்டியது.—பாவியானவன் அநுக்கிரகப்பிரசாதத்தின் உதவியினாலே தன் பாவங்களுக்காக மனஸ்தா



பப்பட்டு, மன்னிப்பு அடைந்த மாத்திரத்தில், சர்வேசுரன் அவனுக்கு தேவ இஷ்டப்பிரசாதத்தைத் தந்தருளுகிறதுந்தவிர, அவனிடத்தில் சுபாவமாயிருந்த தத்துவங்களையும் புண்ணியங்களையும் சுபாவத்துக்கு மேற்பட்ட அந்தஸ்தில் உயர்த்தி, அவனுடைய ஆத்துமத்தை மேலான புண்ணியங்களினாலும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களினாலும் அலங்கரித்தருளுகிறார்.

(க) மோட்சத்துக்குரிய நற்கிரியைகள் செய்ய, இந்த மேலான புண்ணியங்கள் முழுதும் அவசரம்:—சுபாவ ஒழுங்கின்பிரகாரம் ஜீவித்து, பற்பல கிரியைகளைச் செய்யும்படி, சர்வேசுரன் இயல்பான சக்தி நமக்குக் கொடுத்திருக்கிறாப்போலே, சுபாவத்துக்கு மேலான ஒழுங்கினும் தக்கவிதமாய் ஜீவிக்கவும், நித்திய சம்பாவனைக்குரிய கிரியைகளைப் பண்ணவும், நிலைமையான சக்தி நமது ஆத்தும தத்துவங்களுக்குத் தந்தருளுகிறார்.

(உ) சுபாவ தத்துவங்கள் எப்படி உயர்த்தப்படுகிறது?—அப்படிப்பட்ட சிறந்த சக்தியை நமக்கு அளித்தருளும்படி சர்வேசுரன் நம்முடைய புத்தி, மனது, நினைவென்கிற உள்ளிந்திரியங்

களைச் சுபாவத்துக்கு எட்டாத ஸ்திதியில் உயர்த்தி, நமது ஆத்துமத்துக்கு மேலான புண்ணியங்களை நிலையுள்ளவிதமாய்க் கொடுக்கிறார். மனிதன் சுபாவ நற்கிரியைகளால் மோட்சத்தை அடையக்கூடாதென்கிறதினால், சர்வேசுரன் அவனுடைய சுபாவத்தை அழிக்காமலும், மாற்றாமலும், அவனை மேலான அந்தஸ்துக்கு உயர்த்தி, அவனுடைய புத்தி தேவ ஞானத்துக்கும், மனது தேவசிநேகத்துக்கும் பங்காளியாகும்படி செய்கிறார். இந்தப் புண்ணியங்களின்வழியாய் சுபாவத்துக்கு மேற்பட்ட சக்தியையும் தத்துவத்தையும் அடைந்து, மனுஷனுக்கு மேற்பட்ட நற்கிரியைகளைச் செய்ய வல்லமையுள்ளவர்களாகிறோம்.

2. நற்கிரியைகளை எளிதாய்ச் செய்வதற்கு மேலான புண்ணியங்கள் போதுமா?

போதாது. பின்னும் எது தேவை? சகல மேலான புண்ணியங்களுக்கும் அப்பியாசம் தேவை. சுபாவத்துக்கடுத்த புண்ணியங்கள் மேற்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பிறகு, அவைகளுக்குரிய முயற்சிகளைச் செய்ய, நிலைமையான சக்தியும் தத்துவமுமாத்திரம் உண்டு. துவக்கத்தில் நற்கிரியைகளை எளிதா-



யும், உத்தமமாயும் செய்கிறதில்லை. ஏனென்றால் ஆத்துமத்தில் ஏற்கனவே குடிகொண்டிருந்த துர்க்குணம், ஆசாபாசங்கள் யாவும் உடனே அதைவிட்டு நீங்கிப்போகாமலிருக்கக்கூடும். ஆகையால் புண்ணிய முயற்சிகளை எளிதாயும் உத்தமமாயும் செய்வதற்கு பிரயாசையும் அப்பியாசமும் அவசரமாயிருக்கும்.

(க) ஆயினும், சர்வேசுரன் தமது விசேஷ இரக்கத்தினாலே அர்ச். சின்னப்பருக்கும் வேறநேக மகாத்துமாக்களுக்கும் செய்ததுபோல, புண்ணிய முயற்சிகளை வருத்தமின்றி உத்தமமாய்ச் செய்ய, விசேஷ வரங்களை ஒரே க்ஷணத்திலே கொடுக்கலாமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் நற்கிரியைகளை வருத்தமின்றி உத்தமமான விதமாய்ச் செய்யும்படி, சாதாரணமாய் அந்தந்த நற்கிரியைகளை அடிக்கடி செய்து பழக வேண்டியது.

(உ) இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்கிக்காட்டுவோம். வாடிக்கையாய் மிதந்தப்பிக் குடிக்கிறவன் தன் குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டுப் பாவப்பொறுத்தல் அடைந்த க்ஷணமே தேவ இஷ்டப்பிரசாதத்தோடுகூட மற்றச் சகல மேலான புண்ணியங்களையும், மட்டசனமென்கிற

புண்ணியத்தையும், சுபாவத்துக்கு மேற்பட்ட விதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறான். இந்த மேலான புண்ணியம் மோக்ஷத்துக்கான நற்கிரியைகளைச் செய்ய வல்லமையும், சத்துவமும் கொடுக்குமென்பது குன்றாத சத்தியம். ஆனால் மட்டசனத்துக்குரிய முயற்சிகள் செய்து அவனுக்கு வழக்கமில்லாததால், குடிக்கிற வாடிக்கையை நீக்கிவிடுவது வெகு வருத்தமாயிருக்கலாம். ஆயினும் தனக்குக் கிடைத்த வரப்பிரசாதத்தின் ஒத்தாசையைக்கொண்டு, மட்டசனமுயற்சிகளைச் செய்யச் செய்ய, அவனுக்கு நல்ல அப்பியாசமும் நற்குணமும் வரும். மேலும் இந்த நல்ல அப்பியாசத்தைக் கைவிடாமல் காப்பாற்றி வருவானாகில், அவன் மோக்ஷத்துக்காக இந்தப் புண்ணியத்துக்கடுத்த கிரியைகளைச் செய்யக்கூடியவனாயிருக்கிறதுமல்லாமல், அவைகளைப் பிற்பாடு வருத்தமின்றி எளிதாயும் சுறுசுறுப்புடனேயும் செய்வான். இதற்காக சர்வேசுரன் அவனுக்கு நாளுக்குநாள் அதிகமதிகமான வரப்பிரசாதங்களை அளித்திடுவார்.

3. சுபாவத்துக்குமேலான புண்ணியங்கள் வர்த்திக்கிறது எப்படி?

மனித சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியங்களை சர்வேசுரன்தாமே நம்மிடத்தில் பிறப்பிக்கிறதினாலே, அவைகளை அவர்தாமே வளர்ப்பிக்கவும் வேண்டியது. இஷ்டப்பிரசாதத்தோடு இருக்கிறவன் தேவ ஒத்தாசையைக்கொண்டு, நற்கிரியைசெய்யும் ஒவ்வொருவிசையும், அதற்குச் சம்பாவனையாக, அவனிடத்திலிருக்கிற இஷ்டப்பிரசாதத்தையும், மேலான புண்ணியங்களையும், இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களையும் சர்வேசுரன் அதிகரிக்கும்படி செய்கிறார். இஷ்டப்பிரசாதம் எவ்வளவுக்கு அதிகரிக்குமோ, அவ்வளவுக்கு மேலான புண்ணியங்களும் இஸ்பிரீத்து சாந்துவின் வரங்களும் அதிகரிக்கும். யாதாமொரு மேலான புண்ணியம் நம்மிடத்தில் வளருமேயானால், மற்றப்புண்ணியங்கள் யாவும் அதினுடன் வளரும்.



நற்கிரியைகளைக்கொண்டு மேலான புண்ணியங்களை விர்த்திக்கச் செய்வது நம்மாலேதானே கூடாதெனினும், சர்வேசுரன் அதுகளை விர்த்திப்பிக்கும்படி செய்ய சில வழிபாடுகளுண்டு. அதெப்படியெனில், நாம் செப தப தான தர்மங்கள் செய்யும்போதும், தேவதிரவிய அநுமானங்களைப் பெறும்போதும், பற்பல நற்கிருத்தியங்களை நிறைவேற்றும்போதும், இஷ்டப்பிரசாதத்தோடிருந்தால், சர்வேசுரன் நம்மிடத்திலுள்ள மேலான புண்ணியங்களைத் தப்பாமல் விர்த்திக்கப்பண்ணுவார்.

4. மேலான புண்ணியங்கள் குறைகிறது எப்படி? அழிந்துபோகிறது எப்படி?

சுபாவமான புண்ணியமானது, அதற்கடுத்த முயற்சிகளை நாம் வெகுகாலமாகச் செய்யாவிட்டால், நம்மைவிட்டு நீங்கிப்போகுமென்று சொல்லியாயிற்று. ஆனால் சுபாவத்துக்கு மேலான புண்ணியங்களைப்பற்றி இப்படியல்ல. இவைகளுக்கடுத்த நற்கிரியைகளைச் செய்யாவிடினும், இவைகளின் தன்மையும் சக்தியும் குறையாது. இஷ்டப்பிரசாதத்தோடிருக்குமட்டும் இப்புண்ணியங்கள் நம்மைவிட்டு நீங்காது. அற்பப்பாவத்தினால் முதலாய் இஷ்டப்பிரசாதமும் மேலான புண்ணியங்களும் குறைகிறதில்லை.

(க) ஆனால் அற்பப்பாவத்தினாலும், நற்கிரியைகளை நிறைவேற்றாததினாலும், மேலான புண்ணியத்தில் பற்றுதலும் சுறுசுறுப்பும் குறையுமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே அசட்டைத்தனத்தால் ஒருவன் நற்கிரியைகளை அரைகுறையாய்ச் செய்தால், அல்லது அவைகளைச் செய்யாமல் முழுவதுமே விட்டுவிட்டால், அவனுடைய ஆத்துமத்தில் சுபாவ துற்குணங்கள் பிரவேசித்து, நாளடைவில் பலங்கொண்டு அவனைச் சாவானபாவத்தில் விழுத்தாட்டுமென்பது திண்ணம்.



(உ) சாவானபாவத்தினால் இஷ்டப்பிரசாதம் நிர்மூலமாய்ப்போக, இஷ்டப்பிரசாதத்துடன் கிடைத்த மேலான புண்ணியங்களும் முழுதும் போக்கடிக்கப்படுகின்றன. ஒருவன் சாவானபாவத்தைக் கட்டிக்கொண்ட அந்தக்ஷணமே, அதற்குமுன் எவ்வளவு புண்ணியவானாயிருந்திருந்தாலும், தேவசிநேகத்தோடுகூட மேலான புண்ணியங்களையும், இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களையும், இன்னம் அவன் அந்தக்ஷணமட்டும் அடைந்திருந்த பேறுபலன்கள் எல்லாத்தையும் இழந்துவிடுகிறான்.

5. விசுவாசம் நம்பிக்கை என்கிற புண்ணியங்களைப்பற்றி அறியவேண்டிய விசேஷமென்ன?

பாவியானவன் தனக்கு வரவேண்டிய தேவ ஆக்கினைக்குப் பயந்து, அதிக சுலபமாய் மனந்திரும்பும்படி, சர்வேசுரன் பாவியினுடைய ஆத்துமத்திலிருந்து தேவசிநேகம் நீங்கிப்போன பிறகு முதலாய், தமது அளவில்லாத இரக்கத்தினால், விசுவாசம் நம்பிக்கை என்கிற இரண்டு புண்ணியங்களையும் நீக்காமல் விட்டுவிடுகிறார்.

(க) எந்தச் சாவானபாவத்தாலும் தேவசிநேகம் நீங்கிப்போகும். விசுவாசம் நம்பிக்கையென்கிற இவ்விரண்டு புண்ணியங்களும் இவைக

ளுக்கு விரோதமான அவிசுவாசம் அவநம்பிக்கையென்கிற பாவங்களால் மாத்திரம் அழிந்துபோகிறது.

(உ) நம்பிக்கையென்கிற புண்ணியம் அழிந்து ஆத்துமத்தைவிட்டு விலகிப்போனபோதிலும், விசுவாசமானது அந்த ஆத்துமத்தில் குடிகொண்டிருக்கலாம். ஆனால் விசுவாசமானது மற்ற மேலான புண்ணியங்களுக்கு அஸ்திவாரக் கல்லாயிருக்கிறபடியால், விசுவாசமில்லாத ஆத்துமத்தில் நம்பிக்கையென்கிற புண்ணியம் இருப்பது கூடாது.

(ங) நம்முடைய கிரியைகளுக்குண்டான மோக்ஷ பேறுபலன்கள் யாவும் தேவசிநேகத்தால் மாத்திரம் வரவேண்டியிருப்பதால், ஓர் பாவியானவன் செய்கிற விசுவாச நம்பிக்கை முயற்சிகளுக்கு மோக்ஷ சம்பாவனை கிடையாது.

6. மனுலோகத்திலுள்ளவர்களிடத்தில் மேலான புண்ணியங்கள் உண்டா?

(க) நரக வாசிகளுக்கு மேலான புண்ணியம் கிடையாதென்று சொல்லத் தேவையில்லை. பசாசுகள் விசுவசித்து நடுநடுங்குகின்றனவென்று அர்ச். யாகப்பர் சொன்னதற்கு அர்த்தம்



யாதெனில்: பசாசுகள், சர்வேசுரன் இருக்கிறதையும், அவர் சொற்படி நடவாததால் தாங்கள் நரகத்தின் அகோர ஆக்கினைக்கு உள்ளானதையும் உணருகிறதுமன்றி, கெட்டுப்போகுமுன் விசுவசித்த மேலான சத்தியங்களையும் அந்த விசுவாசத்துக்கு ஆதாரமாயிருந்த சுபாவ நியாயங்களைக்கொண்டு இன்னம் அறிந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். ஆகையால் இப்படிப்பட்ட சுபாவமான விசுவாசமுண்டேயொழிய, சுபாவத்துக்கு மேலான விசுவாசமில்லை. சர்வேசுரன் இவைகளைச் சொன்னதினிமித்த மாத்திரம் பசாசுகள் விசுவசிக்கிறதுமில்லை, இப்பேர்ப்பட்ட விசுவாச முயற்சியை அநுக்கிரகப்பிரசாத உதவியால் செய்கிறதுமில்லை.

(உ) மோக்ஷவாசிகளிடத்திலோவெனில், அர்ச். சின்னப்பர் சொல்லியபடி, தேவசிநேகமென்கிற புண்ணியம் வெகு மேலானவிதமாய் எப்போதும் இருக்கிறது. ஆனால் மோக்ஷவாசிகள் சகலமும் கண்ணாலே பார்க்கிறதினால், விசுவாசமென்கிற புண்ணியத்துக்கு இடமில்லை. அளவில்லாத நன்மையை அடைந்து சுகிப்பதினால், நம்பிக்கை என்கிற புண்ணியத்துக்கு வழியில்லை. இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களும்

நல்ல நடக்கைக்கடுத்த புண்ணியங்களில் சிலதும் எப்போதுமிருக்கும்; சிலது இராது. அப்படியே நல்ல நடக்கைக்கடுத்த நன்றியறிதலென்கிற புண்ணியம் அவர்களிடத்திலிருக்கும்; ஆனால் மனஸ்தாபம், தபசு முதலியவைகள் இராது. இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள் வெகு மேலானவைகளாயிருக்கிறதினால், அவர்களிடத்தில் நிலைத்திருந்து அதிக உத்தமமாகுமென்பது சத்தியம்.

(ரு) உத்தரிக்கிறஸ்தலத்திலே இருக்கிறவர்கள், மரணசமயத்தில் தேவசம்பந்தமான புண்ணியங்களும், நல்ல நடக்கைக்கடுத்த சில புண்ணியங்களும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரங்களும், எவ்வளவுக்கு அடைந்திருந்தார்களோ, அவ்வளவுக்கே உத்தரிக்கிறஸ்தலத்திலேயும் கொண்டிருக்கிறார்கள்.

## II. தேவசம்பந்தமான புண்ணியங்களாவதேன்ன?

சர்வேசுரனை நேரே நோக்கிச்சென்று, அவரைமாத்திரம் நாடி, அவருக்கு நமது புத்தியையும், மனதையும், இருதயத்தையும் கீழ்ப்படுத்துகிற சுபாவத்துக்கு மேலான நற்குணங்களே தேவசம்பந்தமான புண்ணியங்கள் என்னப்



படும்.—ஆகையினால் சர்வேசுரனும் அவருடைய இலட்சணங்களும் மாத்திரம் இப்புண்ணியங்களின் விஷயம்.

(க) நமது கடைசிக்கதியாகிய சர்வேசுரனை மறுஉலகத்தில் அடைந்து அநுபவிப்பதற்கு, நமது ஞானசீவியம் இங்கே ஓர் ஆயத்தமாகின்றது. இந்த ஆயத்தமானது மூன்று தேவசம்பந்தமான புண்ணியங்களையும் நமது ஆத்துமத்தில் வர்த்திக்கச் செய்வதில்தான் முக்கியமாய் அடங்கியிருக்கிறது. விசுவாசமானது சர்வேசுரனே நமது மேலான கதியென்று காட்டுகிறது. நம்பிக்கையானது அவரை அடைந்து சுகிக்கும்படி நம்மைத் தூண்டி எழுப்புகிறது. தேவசிநேகமோவெனில், நாம் இவ்வுலகத்திலே எவ்வளவு ஒன்றித்திருக்கக்கூடுமோ, அவ்வளவுக்கு அவரோடு நம்மை ஒன்றிப்பிக்கின்றது.

(உ) இப்புண்ணியங்களால் சர்வேசுரனுக்கும் மனுஷனுக்கும் ஆச்சரியத்துக்குரிய ஐக்கியமும் ஞான உறவு சம்பந்தமும் உண்டாகிறது. இவைகளினால் சர்வேசுரனுடைய அளவில்லாத அறிவுக்கும் வல்லமைக்கும் நன்மைத்தனத்துக்கும் பங்காளிகளாகிறோம்.

சர்வேசுரன் அளவில்லாத உண்மையுள்ளவரானதினாலே அவரை விசுவசிக்கிறோம்; அள

வில்லாத பிரமாணிக்கமுள்ளவரானதினாலே நம்புகிறோம்; அளவில்லாத நன்மை நிறைந்தவரானதினாலே சிநேகிக்கிறோம்; இப்படியாக அவரோடு அந்நியோந்நியமாய் ஒன்றிக்கிறோம்.

(௩) தேவசம்பந்தமான புண்ணியங்கள் மற்றப் புண்ணியங்களைவிட சர்வேசுரனோடு விசேஷ சம்பந்தமுள்ளவைகள் என்பதற்கு நாலு நியாயங்கள் உண்டு.

௧-வது—சர்வேசுரன் மாத்திரம் இவைகளை நமது இருதயத்தில் பிறப்பிக்கவும், அதிகரிக்கவும் கூடும்.

௨-வது—இந்தப் புண்ணிய முயற்சிகளை நிறைவேற்றுகிறவனுக்குள்ள ஏக நோக்கம் என்ன என்றும், அவன் அடைய விரும்புகிற ஞான நன்மை என்ன என்றும் ஆராய்ந்து பார்த்தால், அவன் சர்வேசுரனை மாத்திரம் நாடித் தேடுவதாக அறிவோம்.

௩-வது—சர்வேசுரனுடைய உண்மைத்தனமும், பிரமாணிக்கமும், நன்மைத்தனமும்தான், இந்தச் சுகிர்த கிருத்தியங்களைச் செய்யும்படி ஏவுகிற முகாந்திரங்கள்.



௪-வது—இந்தப் புண்ணியங்களின் கடைசிக் கதி என்னவென்றால், மோட்சத்திலே பிரத்தியட்சமாய் சர்வேசுரனைத் தரிசித்துச் சுகித்து, என்றென்றைக்கும் அவரோடே வாழ்ந்திருப்பதேயாம்.

ஆனதினாலே, இந்தப் புண்ணியங்கள் தேவசம்பந்தமான புண்ணியங்கள் என்று சொல்லுவது சரியே.

(௪) தேவசம்பந்தமான புண்ணியங்களுக்கும் நல்லநடத்தைக்கடுத்த புண்ணியங்களுக்குமுள்ள வித்தியாசமென்ன?

நல்ல நடத்தைக்கடுத்த புண்ணியங்கள் சர்வேசுரனை நேராக நோக்கிச் செல்லுகிறதில்லை; இவைகள் இப்பூலோகத்தின் நன்மைகளைச் சார்ந்தவை, இவைகளைக்கொண்டு நாம் புத்திக்கொத்தபடி நமது கிரியைகளையெல்லாம் ஒழுங்குப்படுத்துகிறோம்.—தேவசம்பந்தமான புண்ணியங்களோவெனில், நாம் சர்வேசுரனுடைய சித்தத்துக்குச் சரியாய் அமைந்து நித்திய நன்மைகளைத் தேடும்படி செய்கின்றன. இவைகளின் வழியாக நல்ல நடக்கைக்கடுத்த புண்ணியங்களும் மேலான கதியைச் சார்ந்த புண்ணியங்களாகும்.—ஆகையால் சாவான பாவமில்லாதவன் சுத்த கருத்தோடே நல்ல

நடக்கைக்குரிய கிரியைகள் செய்யும்போது, அவனுடைய இருதயத்திலுள்ள தேவசிநேகத்தினிமித்தம் மோக்ஷத்திற்குரிய பலனடைகிறான்.

(ரு) தேவசம்பந்தமான புண்ணியங்கள் சகல புண்ணியங்களிலும் உத்தமமானவை. இவைகள் மோக்ஷத்தையடைவதற்கு வேண்டிய சுதந்தரமும் சக்தியும் கொடுப்பதுமன்றி, இவ்வுலகத்திலேதானே திவ்விய சீவியத்துக்கு நம்மைப் பங்காளிகளாக்குகின்றன.

(சு) தேவசம்பந்தமான புண்ணியங்கள் எத்தனை?

மூன்று. அவைகள் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமாம். மோட்சத்தைப் பெறும்பொருட்டு, இம்மூன்று தேவசம்பந்தமான புண்ணியங்களும் நமது ஆத்துமத்தில் நிலைகொண்டிருக்கவேண்டியதுமல்லாமல், இப்புண்ணிய முயற்சிகளைச் செய்வது வெகு அவசரமாமே. சமயாசமயமாகிலும் இம்முயற்சிகள் செய்யாதிருப்பது சாவான பாவமாகும்.

அநேகநாள் செபம் பண்ணாமலும், பூசை காணாமலும், அசட்டைத்தனமாயிருக்கிற கிறிஸ்துவர்கள் மாத்திரம் அப்பேர்ப்பட்ட பாவம் கட்டிக்கொள்ளுவார்கள். அடிக்கடி செபம்



பண்ணி, வேத ஒழுங்குகளின்படி நடந்து வருகிறவர்கள், எந்தச் செபஞ் செய்யும்போதும், பொதுவிதமாய் விசுவாசம் நம்பிக்கை தேவசிநேகமுயற்சிகள் செய்கிறார்களென்பது நிச்சயம்.

இந்தப் புண்ணிய முயற்சிகளைச் செய்கிறது எப்போதும் நலமாயிருக்கிறதுமன்றி, சிலவேளையில் அவசரமாயிருக்கலாம். மரணசமயத்திலே விசுவாச நம்பிக்கை தேவசிநேக முயற்சிகளை மனதிலே அடிக்கடி எழுப்புகிறது மிகவும் பிரயோசனமாயிருக்கும்.

## III. விசுவாசத்தின் பேரில்.

1. விசுவாசமாகிறதென்ன?

அளவில்லாத சத்திய சுரூபியாயிருக்கிற சர்வேசுரன் வேதசத்தியங்களையெல்லாம் அறிவித்ததினாலே, யாதொரு சந்தேகத்துக்கும் இடங்கொடாமல், அவைகளை ஏற்றுக்கொள்ளுகிறது தேவ விசுவாசமென்று சொல்லப்படும்.

(க) வேதசத்தியங்களை நமக்குப் படிப்பிக்கும்படியாக, சர்வேசுரன்தாமே வழுவாத திருச்சபையை ஸ்தாபித்திருக்கிறதினாலே, இவைகளை எப்படித் திருச்சபை போதிக்கிறதோ, அப்படியே நாமும் கொஞ்சமேனும் தத்தளிக்காமல் முழுதும் விசுவசிக்கவேண்டும்.

தேவவிசுவாசமானது சுபாவத்துக்கு மேலான சகல புண்ணியங்களுக்கும் அஸ்திவாரம். விசுவாசமில்லாமல் இரட்சணியமில்லை.

(உ) ஆனால் சில பதிதர் சொன்னபடி, மோட்சம் சேருகிறதற்கு புண்ணியக்கிரியைகளில்லாமல் விசுவாசமாத்திரம் போதாது. விசுவாசமும் கிரியைகளைக்கொண்டிராவிட்டால், தன்னிலே செத்த விசுவாசமாயிருக்கும். (யாக. II. 17.) செத்துப்போன ஒருவன் ஒரு அடி முதலாய் எடுத்துவைக்க முடியாததுபோல, நற்கிரியைகளில்லாமல் மோட்சத்தில் சேர முடியாது. சர்வேசுரன் அறிவித்த சத்தியங்களை எல்லாம் விசுவசித்தபோதிலும், தேவகற்பனைகளை அநுசரியாமற்போனால்; ஒருக்காலும் நித்திய சம்பாவனை கிடைக்காது. அப்படியே "பசாசு விசுவசித்து நடுநடுங்குகிறதல்லவா?" (யாக. II. 19.) ஓர் இராசாவானவர் தம்முடைய வல்லமை, நீதி முதலியவைகளை அறிந்து விசுவசிக்கிறவனுக்கு வெகுமானம் கொடுக்காமல், தமக்கு நல்ல ஊழியம் செய்கிறவனுக்கு மாத்திரம் வெகுமதி தந்தருளுவார். ஆகையால் நற்கிரியைகள் விசுவாசத்தோடு சேர்ந்திருக்கவேணும்.



2. மோக்ஷத்தை அடைவதற்கு நாம் விசுவசிக்கவேண்டிய பிரதான சத்தியங்களேவை?—

சர்வேசுரன் உண்டென்றும், தமக்கு நல்ல ஊழியஞ் செய்பவர்களுக்கு நித்திய பேரின்ப பாக்கியத்தைத் தந்தருளுகிறாரென்றும், அகத்தியம் விசுவசிக்கவேண்டியது.—இதுவுந்தவிர, அர்ச். திரித்துவத்தின் பரம இரகசியத்தையும், இரண்டாம் ஆளான சுதனாகிய சர்வேசுரன் நம்மை இரட்சிக்கும்படி மனுஷாவதாரமெடுத்து நமக்காக மரணமடைந்தாரென்கிற தேவ இரகசியத்தையும், சர்வேசுரனுடைய கற்பனைகளும் திருச்சபையின் கட்டளைகளுமெவையென்றும், தான் பெறப்போகிற தேவதிரவிய அநுமானங்கள் எப்பேர்ப்பட்டவையென்றும், இவை முதலியவைகளை அறிந்து விசுவசிப்பது நமது கடமையாம். தனது வயது, புத்தி, சகவாசத்துக்கு ஏற்றபோல், ஒவ்வொருவனும் இவைகளைக் கற்றறியவேண்டியது.

(க) ஒரு சத்தியத்தின்மேல் மனம்பொருந்தி சந்தேகப்பட்டால், விசுவாசம் முழுதும் அழிந்துபோகிறது.—ஏனென்றால், சந்தேகத்துக்கு இடங்கொடுக்கிறது சர்வேசுரனுடைய அளவில்லாத உண்மைத்தனத்தைப் புறக்கணித்து, அவர் சொல்லியருளிய வார்த்தை பொய்யாயிருக்கலாமென்று தீர்மானிப்பதுபோலாகிறது.

(உ) விசுவாசத்தை ஒருக்காலும் மறுதலிக்கக் கூடாது.—தன் வேதத்தைப் பிரசித்தமாய் வெளிப்படுத்த அவசியமிருக்கும்போது, யாதொரு வேதசத்தியத்தை மறுதலிக்கிறதைவிட, தன் ஆஸ்திபாஸ்திகளையும் உயிரையுமுதலாய் இழக்கத் தயாராயிருக்கவேண்டியது. மவுனமானது மறுதலிக்கிறதற்கொப்பாயிருக்கும்போதும், தன் வேதத்தை மறைப்பது மற்றவர்களுக்கு ஆத்தும நஷ்டத்தை வருவிக்கும் பெரிய துர்மாதிரிகையாயிருக்கும்போதும், பிரசித்தமாய் வேதத்தை வெளிப்படுத்த மகா கண்டிப்பான கடமையுண்டு.

(ஊ) விசுவாசத்துக்கு விரோதமான பாவங்களாவன:—பதிதர் அஞ்ஞானிகள் முதலியவர்கள் ஒப்புக்கொடுக்கும் ஆராதனையில் சேருகிறதும், பசாசைக் கும்பிடுவதும், அதற்கு ஒப்புக்கொடுக்கும் பலிகளுக்கு உதவிசெய்வதும்;—மேலும் யாதொரு வேதசத்தியத்தை ஒத்துக்கொள்ளாமலிருப்பதும், அதின்பேரில் மனசாரச் சந்தேகப்படுவதும் விசுவாசத்துக்கு விரோதமான சாவான பாவங்கள். இவைகளினால் விசுவாசம் முழுவதும் அழிந்துபோகிறது.

(எ) விசுவாச சத்தியங்கள் எதில் அடங்கியிருக்கின்றன? நாம் இரட்சணியம் அடையும்படி



விசுவசிக்கவேண்டிய சத்தியங்களெல்லாம் வேதாகமங்களிலும் திருச்சபையின் பாரம்பரைப் போதனைகளிலும் அடங்கியிருக்கின்றன.

### 3. வேத புஸ்தகங்களின்பேரில்.

தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர், சுவிசேஷகரும், இன்னம் இஸ்பிரீத்து சாந்துவினால் ஏவப்பட்ட மற்றவர்களும் எழுதியிருக்கும் புஸ்தகங்கள் வேதாகமங்களென்று சொல்லப்படும்.

(க) இவைகளில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பிரிவுகளுண்டு. பழைய ஏற்பாட்டில் 45 புஸ்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புஸ்தகங்களும், ஆகமொத்தம் 72 புஸ்தகங்களென, திருச்சபை சேசுநாதர் சுவாமியிடத்திலிருந்து பெற்றிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு தீர்மானித்திருக்கிறது. சேசுநாதர்சுவாமி பிறக்குமுன் நேரிட்ட வேதவிசேஷங்கள் பழைய ஏற்பாட்டிலும், அவர் பிறப்புக்குப் பின்னுள்ள போதனைகள் புதிய ஏற்பாட்டிலும் எழுதப்பட்டிருக்கிறது.

(உ) இந்த வேத புஸ்தகங்களை எழுதினவர்களுக்கு எதை எப்படி எழுதவேண்டுமென்று சர்வேசுரனுடைய ஏவுதலும், எழுதும்போது தவறிப்போகாதபடி அவருடைய இடைவிடாத ஒத்தாசையும் இருந்தபடியால், அவரே இவை

களுக்கு மெய்யான மூலகாரண கர்த்தாவாயிருக்கிறார். அதினாலே இந்தப் புஸ்தகங்களின் ஒவ்வொரு பாகத்திலும் அடங்கியிருக்கிற விஷயங்கள் தப்பில்லாத சத்தியமென்று எல்லோரும் உறுதியாய் விசுவசிக்கக்கடவோம். கைப்பிரதி எழுதினவர்களும் மொழிபெயர்த்தவர்களும் சில தப்பிதங்கள் செய்திருக்கலாமென்பது மெய்யே. ஆயினும் திருச்சபை ஆராய்ந்து பார்த்து, அங்கீகரித்திருக்கிற புஸ்தகங்களில், விசுவாசம் நன்னடைக்கைக்கு விரோதமானவை யாதொன்றும் இருக்கமாட்டாதென்பது நிச்சயம்.

சிலர் இந்த வேத புஸ்தகங்களிலுள்ளவைகளை வேறு[illegible]மென்று மாற்றிவிட்டதினாலேயும், அநேகம் தப்பறைகளைச் சேர்த்திருப்பதினாலேயும், திருச்சபையானது தான் அங்கீகரிக்காத பிரதிகளை வாசிக்கலாகாதென்றும், அப்பேர்ப்பட்ட பிரதிகளைத் தன்வசத்தில் முதலாய் வைத்திருக்கக்கூடாதென்றும் கற்பித்திருப்பது மகா நியாயமே. இவைகளைச் சும்மா கொடுத்தபோதிலும், நல்ல கிறீஸ்துவன் வாங்கலாகாது; அப்படித் தெரியாமல் வாங்கியிருந்தால், பிறர் ஆத்துமத்துக்கு மோசமுண்டாகாதபடி, இவைகளை நெருப்பில் போட்டுச் சுட்டெரிக்க வேண்



டியது. பதிதரால் அச்சிடப்படும் வேத புஸ்தகங்கள் முக்கியமாய் விலக்கப்பட்டிருக்கின்றன.

(௯) திருச்சபையானது, தான்தானே நமக்கு வேத விஷயங்களைப் படிப்பித்து வருகிறதினாலே, எல்லாக் கிறீஸ்துவர்களும் வேத புஸ்தகங்களை வாசிப்பது அவசியமல்ல. ஆகிலும், அவைகளை அறிந்திருப்பது வெகு பிரயோசனமாயிருப்பதால், அவைகளை வாசிக்கும்படி திருச்சபை நம்மைத் தூண்டி வருகிறது. தேச பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற வேத புஸ்தகங்களை வாசிக்கிறதற்கு விக்கினமில்லை. ஆகிலும், சேசுநாதர்சுவாமியுடைய போதனைகளின் மெய்யான அர்த்தத்தை அவைகளில் எடுத்துக்காட்டாவிடில், இதினால் பெரும் பொல்லாப்பும் தப்பிதங்களும் நேரிடும். தேச பாஷைகளில் இப்பேர்ப்பட்ட புஸ்தகங்களை எழுதும்போது, கடினமான வார்த்தைகள், வசனங்களை விளக்கி, சரியான கருத்தை வியாக்கியானிக்க வேண்டுமென்பது திருச்சபையின் கட்டளை. ஆகையினால் திருச்சபை அதிகாரிகள், நன்றாய் மொழிபெயர்த்திருக்கிறார்களாவென்றும், வியாக்கியானங்களில் தப்பறை இல்லையோவென்றும் சோதித்துப் பார்த்து, அங்கீகரியாத புஸ்தகங்களை வாசிக்கவும் வைத்திருக்கவும் உத்தரவு

இல்லை. இந்தக் கட்டளையை மீறுகிறவன் சாவான பாவங் கட்டிக்கொள்ளுகிறான்.

பதிதர் எழுதியிருக்கிற வேத புஸ்தகங்களிலாவது, மற்ற எவ்வித புஸ்தகங்களிலாவது, வேத சத்தியங்களுக்கு விரோதமான வியாக்கியானங்கள் சேர்த்திருப்பார்களேயானால், உத்தரவின்றி அவைகளை வைத்திருக்கிறவன் சாவான பாவம் கட்டிக்கொள்ளுகிறதுமன்றி, விசேஷ சாபத்துக்கு உள்ளாகிறான்.

வேத புஸ்தகங்களிலுள்ள மெய்யான அர்த்தத்தையும் கருத்தையும் விளக்கிக் காட்டி, அவைகளில் தப்பறைகள் நுழையாதபடி காப்பாற்றுவதற்குத் திருச்சபைக்கு விசேஷ வரம் உண்டு. ஆகையால் இந்தப் புஸ்தகங்கள் எவையென்றும், அவைகளிலுள்ள வார்த்தைகள் என்னவென்றும், அவைகளில் அடங்கியிருக்கிற அர்த்தம் என்னவென்றும் தர்க்கம் உண்டாகும்போது, அந்தத் தர்க்கங்களுக்கு முடிவான தீர்மானம் சொல்ல, திருச்சபைக்கே முழு சுதந்தரமுண்டு.

### 4. பாரம்பரையான போதனைகளின் பேரில்.

(க) பாரம்பரை போதனையாவதென்ன?—சேசுநாதர்சுவாமியாலும் இஸ்பிரீத்து சாந்துவினா



லும் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தப்பட்டு, அவர்களால் எழுதப்படாமல், வாய்மொழியாய்த் தலைமுறை தலைமுறையாக இக்காலமட்டும் திருச்சபையில் வழங்கி வந்திருக்கும் வேத சத்தியங்களே பாரம்பரையான போதகங்களென்னப்படும். இஸ்பிரீத்து சாந்துவானவர் பாரம்பரை சத்தியங்களைத் தப்பறையின்றிக் காத்து வந்திருக்கிறபடியால், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டைப்போலவே, இவைகளையும் விசுவாச நல்லொழுக்கத்துக்கடுத்த விஷயங்களில் தத்தளிக்காமல் ஏற்றுக்கொள்ளக்கடவோம். இவைகளை விசுவசிக்கமாட்டேனென்று மனம்பொருந்தித் தள்ளிப்போடுகிறவன் சாபத்துக்குள்ளாகிறானென்று திரிதெந்தீன் பொதுச் சங்கம் நிருபித்திருக்கிறது.

(உ) சர்வேசுரன் வெளிப்படுத்தின வேத சத்தியங்களெல்லாம் வேதாகமங்களில் மாத்திரம் அடங்கியிருக்கின்றன என்று சொல்லுவது அபத்தம். எழுதப்பட்ட வேதாகமங்களிலுள்ள வேத சத்தியங்களானாலும் சரி, எழுதப்படாத பாரம்பரை போதனைகளைச் சேர்ந்த வேதசத்தியங்களானாலும் சரி, இவைகள் எல்லாவற்றையும் அதே உறுதியோடு விசுவசிப்பது கடன். நாம் விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள் நாள்

வட்டத்தில் மாறிக் கெட்டுப்போகாதபடி, அளவில்லாத சர்வேசுரன் திருச்சபைக்குத் தவறாத வரம் அளித்திருக்கிறார். இந்த உன்னத வரத்தைக்கொண்டு, திருச்சபை எப்படி வேதாகமங்களைத் தப்பறையின்றிக் காத்துவருகிறதோ, அப்படியே பாரம்பரை சத்தியங்களையும் யாதொரு மாற்றமுண்டாகாமல் காப்பாற்றி வருகின்றது. இது வேதசத்தியம்.

(௫) பாரம்பரை போதனைகள் எப்படி நமக்கு வருகின்றன?—பல வழிகளுண்டு. முந்த முந்த அர்ச். பாப்பானவரும், திருச்சபையின் பொதுச் சங்கங்களும் செய்கிற தீர்மானங்கள் தவறாத விதமாய்ப் பாரம்பரை சத்தியங்களை நமக்குத் தெரிவிக்கின்றன.—அப்போஸ்தலர்களுடைய விசுவாச மந்திரம், [illegible] விசுவாசமந்திரம் இவை முதலியவைகள் பாரம்பரை போதனைகளைச் சங்க்ஷேபமாய்க் குறிக்கின்றன.—திருச்சபையின் திருச்சடங்கு ஆசாரங்களும் இந்தப் போதனைகளை வெளிப்படுத்துகின்றன.

ஏறக்குறைய எல்லா வேதபாரகரும் யாதொரு சத்தியத்தை ஒரேமனப்பட வெளிப்படுத்தியிருந்தால், இது பாரம்பரையாக வந்த போதனை என்பதற்கு அடையாளம். வேதசாஸ்திரிகளைப் பற்றியும் இப்படியே.



கடைசியாய், எந்தெந்தச் சத்தியம் உலகமெங்கும் எக்காலத்திலும் மேற்றிராணிமார்களாலும் கிறீஸ்துவர்களாலும் விசுவசிக்கப்பட்டிருக்கிறதோ, அதெல்லாம் சர்வேசுரனாலே வெளிப்படுத்தப்பட்ட சத்தியமென அங்கீகரிக்கவேண்டியது. அர்ச். பாப்பானவர் நீங்கலாக, மற்றச் சகல மேற்றிராணிமார்களும் கிறீஸ்துவ சபைகளும் தனித்தனியே தவறிப்போகக் கூடுமானாலும், எல்லோரும் ஒருமிக்கத் தவறிப்போவது கூடாதகாரியம். ஏனென்றால், அப்படித் தவறிப்போனால், நரகவாசல்கள் திருச்சபையை மேற்கொள்ளுவதாகும். ஆனால் இந்தப் பொல்லாப்பு நேரிடாதென்று சர்வவல்லபரான சர்வேசுரன் வாக்களித்திருக்கிறார்.

## IV. நம்பிக்கையைப்பற்றி.

**1. நம்பிக்கையாகிறதென்ன?**

சர்வேசுரன் நமக்கு மோட்ச பாக்கியத்தையும் அதை அடைகிறதற்கு வேண்டிய அநுக்கிரகத்தையும் கொடுத்தருளுவாரென்று கெட்டியான மனதாயிருப்பதே நம்பிக்கையென்னப்படும்.

**2. நமது நம்பிக்கைக்கு முகாந்தரமென்ன?**

சர்வேசுரன் தாம் நல்லவர்களுக்கு மோட்ச பாக்கியத்தையும் அதற்கு வேண்டிய உதவிகளை

யும் தந்தருளுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறதினாலே முழுமனதோடே கெட்டியாய் நம்புகிறோம். "சகல மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியும் அறிவைக் கைக்கொள்ளவும் வேண்டுமென்று (சர்வேசுரன்) சித்தமாயிருக்கிறார்." (I. திமோ. II. 4.) நமது நம்பிக்கைக்கு அசையாத ஆதாரம் இதுவே.

ஏனென்றால்:—(க) முந்தமுந்த சர்வேசுரன் சகல நன்மை சுரூபியாயிருக்கிறதினாலே, நமக்கு வெகு ஆனந்தசந்தோஷம் கொடுக்க அவருக்குச் சித்தமுண்டு.—அவர் அளவில்லாத வல்லமையுள்ளவராயிருக்கிறதினாலே, நமக்கு நேரிடும் விக்கினங்களையெல்லாம் ஜெயிப்பதற்கு அவசரமான வரப்பிரசாதங்களை அவர் நமக்கு அளிக்கக் கூடும்.—அவர் மட்டற்ற பிரமாணிக்கமுள்ளவராயிருக்கிறதினாலே தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி வேண்டிய உதவியெல்லாம் தாராளமாய்த் தந்தருளுவாரென்று உறுதியாய் நம்புகிறோம்.

(உ) மேலும் சேசுநாதர்சுவாமி மரணமடைந்து பாவப்பொறுத்தலையும் இரட்சணியத்துக்கேதுவான உதவிகளையும் நமக்காகப் பெற்றிருப்பதினாலே, அவருடைய அளவில்லாத பேறுபலன்



களைக்கொண்டு நமக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை அடைந்துகொள்ளுவோமென்று அசையாத நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

(ங) இதெல்லாம் நாம் அறிந்து விசுவசித்து, சர்வேசுரனை முழுமனதோடே நம்புகிறோம். இந்தச் சத்தியங்களை எவ்வளவுக்கு அதிக ஸ்திரமாய் விசுவசிப்போமோ, அவ்வளவுக்கு நமது நம்பிக்கை அதிக கெட்டியானதுமாய் சுளுவானதுமாய் இருக்குமென்பது தப்பாது.

ஏனென்றால் தேவ விசுவாசம் நமது நம்பிக்கைக்கு அவசியமான அஸ்திவாரம். மோட்சத்தை அடைவதற்கு வேண்டிய உதவிகளை சர்வேசுரன் நமக்குக் கொடுக்க வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறாரென்று விசுவாசத்தினால் மாத்திரம் அறிகிறோம். இப்படி நம்பிக்கையானது விசுவாசத்தில் ஊன்றியிருப்பதினால், விசுவாசத்துக்கு விரோதமான பாவஞ் செய்தவுடனே நம்பிக்கையும் நீங்கிப்போகிறது; விசுவாசம் அதிகரிக்க, அதிகரிக்க, நம்பிக்கையும் அதனுடன் வளரும்.

3. நம்மிடத்தில் நம்பிக்கை இருந்தமானால், மோட்சத்தை அடைவோமென்பது நிச்சயமா?

(க) சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தை யோசித்துப்பார்த்தால், இரட்சணியமடைவோமென்

று கொஞ்சமும் தத்தளிக்காமல் நம்புவதற்கு தக்க காரணமுண்டு. என்ன கலக்கம் சோதனை சம்பவித்தாலும், அதைச் சிறிதும் கவனிக்காமல், தாவீது இராசா சொன்னதுபோல, "ஆண்டவரே, உம்மை நம்புகிறேன், நித்தியத்துக்கும் நான் கலங்கமாட்டேன்" என்று சொல்லக்கடவோம்.

(உ) ஆனால் நமது பலவீனத்தைப் பார்த்தால், நமது நம்பிக்கை மகா தாழ்ச்சியோடு கூடியதாயிருக்கவேண்டும். நாம் அஞ்சாமலும் நடுநடுங்காமலும் இருக்க முடியாது. சர்வேசுரனுக்கு நாம் உகந்தவர்களோ பகைவர்களோவென்று நாம் நிச்சயமாய் அறிகிறதில்லை.—இன்னமும் மரணபரியந்தம் பாவம் செய்யாமல் இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் நிலைத்திருப்போமோவென்றும் நமக்குத் தெரியாது. நம்மை இரட்சித்து மோட்சபாக்கியத்தை அளிக்க, சர்வேசுரனுக்குச் சித்தமுண்டென்பது மெய்யே. ஆனால் அவர் நமக்குப் புரியும் ஞான உதவிகளுக்கு இசைந்து சரியாய் நடக்கவேண்டியிருக்கிறது. அதினாலேதான் நாம் எப்போதும் பயந்திருக்கவேண்டியது.—ஆகிலும் நாம் நம்புகிற சர்வேசுரன் அளவில்லாத கிருபையும் வல்லமையுமுள்ளவரென்பதை மறக்காமல், அவருடைய உதவியி



னாலே மோட்சபாக்கியத்தை அடைந்துகொள்ளுவோமென்று மனதிலே உறுதியான நம்பிக்கை வைக்கக்கடவோம்.

(௩) நரகத்திலே விழாதபடி மாத்திரம் பாவத்தை விலக்குகிறது இரட்சணியத்துக்குப் போதாது. அதோடுகூட மோட்சத்தின்பேரில் ஆசையும் நம்பிக்கையும் வைக்கவேண்டியது. நரகமில்லையானால் பாவத்தைக் கட்டிக்கொள்ளுவேனென்று தீர்மானித்திருக்கிறவன் சாவானபாவ அந்தஸ்திலிருக்கிறான். அவனிடத்தில் மெய்யாகவே மேலான நம்பிக்கையில்லை.

### 4. மேலான நம்பிக்கை அவசரமா?

மோட்சபாக்கியத்தை அடைய, நம்பிக்கையென்கிற மேலான புண்ணியம் சிறுபிள்ளைகளுடைய ஆத்துமத்தில் முதலாயிருக்கிறது முழுதும் அவசியம். ஞானஸ்நானம் பெறும்போது இந்தப் புண்ணியம் அளிக்கப்படுகிறது.

(க) மேலும் புத்தி விபரம் அறிந்த அஞ்ஞானி இஷ்டப்பிரசாதத்தை முதல்விசை பெற்றுக்கொள்ளும்படி அந்தப் புண்ணியத்தின் முயற்சியை ஒருதடவையாகிலும் செய்கிறது அவசியமான ஆயத்தம். கிறீஸ்துவனானவன் சமயாசமயத்தில் இந்த நம்பிக்கைமுயற்சியைப் புதுப்

பிக்கவேண்டியது. பாவத்தை விலக்கி, சகல கற்பனைகளையும் அநுசரித்து, தன் மேலான கதியை அடையும்பொருட்டு, அதின்மேல் ஆசை வைத்து நம்பிக்கையோடே வேண்டிக்கொள்ளக்கடவான். இந்த நம்பிக்கை அவனிடத்தில் இல்லாதேபோனால், சோதனைகளை ஜெயிக்கிறதற்குவேண்டிய உதவிக்காக மன்றாடமாட்டான்.

(௨) சேசுநாதர்சுவாமி பரமண்டலமந்திரத்தை நமக்குப் படிப்பிக்கும்போது, நம்மிடத்தில் நம்பிக்கை இருக்கவேண்டுமெனக் கட்டளை கொடுத்ததுமல்லாமல், நாம் எந்த நன்மைகளுக்காக வேண்டிக்கொள்ளவேண்டுமென்றும் கற்பித்திருக்கிறார்.—"நம்பிக்கையினால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" என்று அர்ச். சின்னப்பரும் வசனித்திருக்கிறார்.—அதினாலே சகல கிறீஸ்துவர்களும் சமயாசமயமாகிலும் நம்பிக்கை முயற்சி செய்யக் கடன்பட்டிருக்கிறார்கள்.

(௩) மேலான புண்ணியசாங்கோபாங்கத்தில் ஏறின சீமான்கள் சர்வேசுரனை முழுமனதோடு சிநேகிப்பதினாலே, மோட்ச பேரின்ப பாக்கியத்தின் மேலுள்ள ஆசைப்பற்றுதலை விட்டு, நம்பிக்கை முயற்சி செய்யாமலிருக்கிறது உத்தமமென்று சிலர் அபத்தமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி எண்ணவும் சொல்லவும் கூடாது.



விசுவசிக்கவேண்டுமென்கிற கடமை எப்படி நமதுபேரில் சுமத்தப்பட்டிருக்கிறதோ, அப்படியே நம்பவேண்டுமென்கிற கடமையும் நமது பேரில் சுமத்தப்பட்டிருக்கிறது. அநேகமான சோதனைகளைத் தள்ளுகிறதற்கு, நித்திய மோட்ச பாக்கியத்தின்பேரில் மனதில் ஆசையை எழுப்பி நம்பிக்கைமுயற்சி செய்கிறது, அநேகவிசை முழுதும் அவசரமாயிருக்கும்.

(௪) சர்வேசுரன் பிரபஞ்ச நன்மைகளைத் தருவாரென்று நம்புவது அவசரமா?—நாம் பாவத்தை விட்டு மோட்சமடைவதற்கு, சர்வேசுரன் வேண்டிய அநுக்கிரகப்பிரசாதங்களைக் கொடுப்பாரென்று நம்புகிறதுமல்லாமல், ஈடேற்றத்துக்கு அவசரமான அளவில் உலோக நன்மைகளும் தந்தருளுவாரென்று உறுதியாய் நம்பக்கடவோம்.

ஆயினும் பூலோக அவசரங்களில் சர்வேசுரன்மேல் வைக்கும் நம்பிக்கை, எப்போதும் தேவசம்பந்தமான நம்பிக்கையென்கிற புண்ணியமென்று சொல்லக்கூடாது. தேவசம்பந்தமான புண்ணியங்களெல்லாம் மோட்சத்தைச் சேர்ந்தவைகளை மாத்திரம் நாடுகின்றன. பிழைப்புக்கு வேண்டியதை அடைவோமென்று பத்தியோடு நம்புவது, சர்வேசுரன் கொடுத்த வாக்

குத்தத்தத்திலிருந்தும், தேவ பிரமாணிக்கத்திலிருந்தும் பிறக்காமல், அவருடைய அளவில்லாத கிருபையை நினைப்பதினால் நம்மிடத்தில் உண்டாகிறது. அவரே நமது தகப்பனென்று எண்ணி, அவர் கையிலே நம்மை முழுதும் கையளித்து, பிரபஞ்ச வாழ்வுக்கு உரியவைகளை அவசரத்துக்குத்தக்கது எப்போதும் தந்தருளுவாரென்று விசுவசிக்கக்கடவோம். ஆனால் இந்த உலோக நன்மைகள் நமது ஆத்துமத்துக்கு விக்கினமாயிருக்கும்போது அவைகளை நமக்குக் கொடுப்பாரென்று நினைக்கக் கூடாது.

நாம் தாழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் இடைவிடாமல் வேண்டிக்கொண்டபிறகு இந்த நன்மைகள் கிடைக்காவிட்டால், இவைகள் நமது ஆத்துமத்துக்கு அவசரமில்லையென்றும், அவைகளைப் பெறாமலிருக்கிறது அதிகப் பிரயோசனமென்றும், நாம் தீர்மானிக்கத்தகும்.

(ரு) நிந்தை அவமானப்படும்போதும், பொறுக்கக்கூடாத வியாதி துன்ப வருத்தங்கள் வரும்போதும், பிழைப்புக்கு அவசியமானவைகள் இல்லாதபோதும், சர்வேசுரன் நம்மைக் கைவிட்டுக்கவனிக்கிறதில்லையென்று எண்ணி, அவநம்பிக்கையாயிருக்கலாகாது. விசுவாசத்தையும்



நம்பிக்கையையும் நம்மிடத்தில் எழுப்பி, அதிகப்பத்தியோடு வேண்டிக்கொள்ளக்கடவோம். இதனால் தைரியமும் ஆறுதலும் உண்டாகும். தேவசித்தப்படி அநுபவித்தகஸ்தியும்சோதனையும் உத்தமதனத்தை அடைய மகா பிரயோசனமாயிருக்கிறதென்றும், இந்தத் துன்பம் சொற்பமாயிருந்தாலும் முடிவற்ற மகிமை பாக்கியத்துக்கு ஏதுவாயிருக்குமென்றும் ஒருநாளும் மறக்கவேண்டாம். இந்த நம்பிக்கையை மனசிலே வைத்து, நமது ஆத்தும ஈடேற்றத்துக்கு விக்கினமான பொருட்களையும் பிரபஞ்ச நன்மைகளையும் கடைசியில் ஒருநாள் விட்டு அகலவேண்டுமென்று நினைத்து, இன்று துடங்கி அவைகளை மிஞ்சின ஆசையோடு தேடாமல், அவைகள்பேரிலுள்ள பற்றுதல்களையெல்லாம் நீக்கப் பிரயாசப்படக்கடவோம்.

5. நம்பிக்கைக்கு விரோதமான பாவங்கள் இரண்டுவகை உண்டு. அவை மிதமிஞ்சின நம்பிக்கையும், அவநம்பிக்கையுமாம்.

6. **மிதமிஞ்சின நம்பிக்கையாவதென்ன?**

அவசரமான யாதொரு பிரயாசையும் எடுத்துக்கொள்ளாமல், இரக்கமுள்ள சர்வேசுரன் நம்மை இரட்சிப்பாரென்று எண்ணுவதே மிதமிஞ்சின நம்பிக்கையாம்.—தேவ பத்திக்குறை

வும் ஆங்காரமும் இப்பாவத்திற்கு ஊற்றும் காரணமுமாயிருக்கின்றன.

(க) சில பதிதர் சொன்னதுபோல, தேவ உதவியின்றி, நமது சொந்தப் பலத்தினாலேயே மோட்சகரை சேரக்கூடுமென்று மூடத்தனமாய் நினைக்கிறதும்,—கற்பனைகளை அநுசரிக்காமலும், நற்கிரியை ஒன்றும் செய்யாமலும், விசுவாசம் ஒன்றைக்கொண்டு இரட்சணியத்தை அடையலாமென்பதும்,—அவசரமில்லாமல் மனம்பொருந்தி பாவசமயங்களைத் தேடிப்போனாலும், அந்த ஆபத்திலின்று தப்பிக்கொள்வதற்கு சர்வேசுரன் விசேஷ உதவி செய்வாரென்று மன உறுதியாயிருக்கிறதும்,—அளவில்லாத கிருபையுள்ள சர்வேசுரன் தண்டிக்கமாட்டாரென்று எண்ணி, அதினாலே அதிக துணிவோடே பாவம் கட்டிக்கொள்வதும், மிதமிஞ்சின நம்பிக்கைக்குரிய சாவானபாவங்களாகும்.

(உ) பாவ அந்தஸ்தில் இருக்கையில், இப்போது மனந்திரும்பமாட்டேன், ஆனால் இனிமேல் ஒருநாள் மனந்திரும்புவேனென்று எண்ணுகிறவனும், பாவங்கட்டிக்கொள்ளுகிற சமயத்திலே இனி பாவசங்கீர்த்தனம் செய்வேனென்று மனதிலே தீர்மானித்துப் பாவங் கட்டிக்கொள்ளு



கிறவனும், தேவ நம்பிக்கைக்கு விரோதமான பாவங் கட்டிக்கொண்டதாகச் சொல்லத் தகாது. இப்படிச் செய்கிறவன் நித்திய ஆக்கினைக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டு, தன்மட்டில் வைத்திருக்கவேண்டிய சிநேகத்துக்கு விரோதமான பாவம் கட்டிக்கொள்ளுகிறானேயல்லாமல், மிதமிஞ்சின நம்பிக்கையென்னும் பாவம் கட்டிக்கொள்ளுகிறதில்லை.

7. அவநம்பிக்கையாவதென்ன?

மோட்சகரையேற முடியாதென்றும், அதற்குவேண்டிய உதவிகள் தனக்குக் கிடையாதென்றும், மனம்பொருந்தி எண்ணுவதே அவநம்பிக்கையாம்.

(க) செய்த பாவங்களை சர்வேசுரன் மன்னிக்கமாட்டாரென்று நினைப்பதும், சோதனையை ஜெயித்துப் பாவத்தை விலக்குவதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களை அவர் கொடுக்கமாட்டாரென்று எண்ணுவதும், நித்திய ஆக்கினைகள் தனக்கு விதிக்கப்பட்டதாக உறுதியாக நினைக்கிறதும், அதினாலே இரட்சணியத்தை அடைய என்ன முயற்சி செய்தும் பிரயோசனமில்லையென்று தீர்மானிக்கிறதும், அவநம்பிக்கையைச் சேர்ந்த பாவங்களாம். இதுவே யூதாஸ் இஸ்காரி

யோத்து கட்டிக்கொண்ட பாவம்.—இந்தப் பாவம் திவ்விய கிருபை, வல்லமை, உண்மைத் தனமாகிய தேவ இலட்சணங்களுக்கு விரோதமாயிருக்கிறதினாலே சாவானபாவமாகும்.

(உ) அவநம்பிக்கைக்குச் சோதனை வரும்போது செய்யவேண்டியதென்ன?—இவ்வித சோதனைப் படுகிறவன் சர்வேசுரனுடைய அளவறுக்கப் படாத கிருபையையும் சேசுநாதர்சுவாமி நமக்காகப்பட்ட பாடுகளையும் அடிக்கடி சிந்திக்க வேண்டியது. பாவங்கள் எத்தனையானாலும் முழுமனதோடே மனந்திரும்பி நம்மிடம் வருகிற பாவியைத் தள்ளிவிடமாட்டோமென்று ஆண்டவர்தாமே வாக்குக் கொடுத்ததினாலேயும், நல்ல மனசுள்ளவர்கள் எல்லாரையும் அவர் இரட்சிக்கச் சித்தமாயிருக்கிறதினாலேயும், சேசுநாதர்சுவாமியுடைய மட்டுக்கடந்த பேறுபலன்கள் சகலரும் செய்கிற பாவங்களின் பரிகாரத்துக்கு மேற்பட்டதாயிருப்பதினாலேயும், நமது நம்பிக்கையை அதிகமதிகமாய்த் தூண்டி எழுப்பவேண்டியது.

(ங) பத்திமான்கள் அவநம்பிக்கையென்னும் சோதனையினிமித்தம் சிலவேளைகளில் அதிக மனக்கலக்கப்பட்டால், அதைச் சட்டைபண்ணாமல்



மகா சுறுசுறுப்போடே இரக்கமுள்ள சர்வேசுரனை வேண்டிக்கொள்ளக்கடவார்கள்.—அச்சோதனையை வருவிக்கையில் பசாசுக்குள்ள காரணம் என்னவென்றால், ஞானசீவியத்தின் பேரில் அவர்களுக்குச் சலிப்புண்டாக்கி, தங்கள் தர்மக்கிரியைகளை அவர்கள் முழுதும் விட்டுவிடவும், அப்படி இல்லாவிட்டால், இந்த நற்கிரியைகளை முன்னையைப்போல அவ்வளவு பலனுள்ளவிதமாய் அவர்கள் செய்யாதபடிக்கும் தடங்கல் பண்ணும்படிதான். ஆகையால் நமது தகப்பனும் இரட்சகருமான சர்வேசுரன் பேரில் விசுவாசத்தைத் தூண்டி எழுப்பி, மிதமிஞ்சின பயத்தைத் தூரத் தள்ளவேண்டியது. இந்தப் பயம் மனதிலே நிலைத்திருந்தால், பசாசானது மனத்தளர்ச்சியும் அருவருப்பும் வருவித்து, புண்ணியவழியிலே ஏறிச் செல்லாதபடி நிறுத்திவிடும். ஆனதைப்பற்றி எக்காலத்திலும் எந்த விக்கினம் நேரிட்டாலும் சர்வேசுரனை உறுதியாய் நம்பி, மனத்திடனோடே இருக்க வேண்டும்.

## V. தேவசிநேகத்தின்பேரில்.

1. தேவசிநேகமாகிறதேன்ன?

எல்லாத்தையும் பார்க்க சர்வேசுரனைச் சிநேகித்து, அவரைப்பற்றி நமது புறத்தியாரையும் நம்மை நாம் சிநேகிப்பதுபோல நேசிப்பதே தேவசிநேகமென்னப்படும்.

(க) ஆகையால், தேவசிநேகமும் பிறர்சிநேகமும் ஒரே சிநேகந்தான். பிறரைச் சிநேகியாதவன் சர்வேசுரனைச் சிநேகிக்கிறதில்லை. பிறரின்மேல் நமக்குள்ள பரிசுத்த சிநேகத்தின் அளவே, சர்வேசுரன்மேல் நமக்குள்ள சிநேகத்தின் அளவாம். ஆகையைப்பற்றி யாதொரு எதிராளியின்மட்டில் சிநேகமில்லாதிருந்தால், சர்வேசுரன்மட்டிலுள்ள சிநேகமும் நம்மிடத்தில் இல்லையென்று சொல்லவேண்டியது. "சர்வேசுரனைச் சிநேகிக்கிறேன்,என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்" என்று அர்ச். அருளப்பர் எழுதிவைத்தார். (1. அரு. IV. 20.)

2. ஏன் இந்த் தேவசிநேகம் சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியமென்று சொல்லுகிறோம்?

சர்வேசுரன் மாத்திரம் அதைக் கொடுக்கக் கூடுமானதினாலும், தேவசிநேகமுயற்சி செய்ய



அநுக்கிரகப்பிரசாதம் வேண்டியிருக்கிறதினாலும், சர்வேசுரனை மோட்சத்திலே நித்தியமாய்த் தரிசித்து அநுபவிக்க தேவசிநேகம் அவசரமாயிருக்கிறதினாலேயும், அது சுபாவத்திற்கு மேற்பட்ட புண்ணியமென்கிறோம்.

### I. சர்வேசுரன்மட்டிலுள்ள சிநேகம்.

1. அதன் மேன்மை:—(க) தேவசிநேகம் அதிகமதிகமாய் சர்வேசுரனை அண்டிப்போகச்செய்து, சர்வேசுரனோடு நம்மை உத்தமவிதமாய் ஒன்றிக்கிறதினாலே சகல புண்ணியங்களுக்கும் மேலான புண்ணியமாம் (I. அரு. IV. 16.)

சகல கற்பனைகளிலும் மேலான கற்பனை தேவசிநேகக் கற்பனையென்றும், அதிலே மற்றக் கற்பனைகள் அடங்கியிருக்கின்றனவென்றும், ஆண்டவர் அறிவிக்கச் சித்தமானார். (மத். XXII. 37. 38.) தேவசிநேகமில்லாவிட்டால், நித்திய சம்பாவனை அடைகிறதற்கு மற்ற எந்தப் புண்ணியத்தாலும் யாதொரு பிரயோசனமில்லை. இத்தேவசிநேகத்தைப்பற்றித்தான், நாம் கொடுக்கும் ஒரு செம்புத் தண்ணீருக்கு முதலாய் மோட்ச சம்பாவனை கிடைப்பது திண்ணம்.

(உ) சகல கற்பனைகளும் தேவசிநேகத்தில் அடங்கியிருக்கிறதெப்படி?—தேவசிநேகமானது கற்ப

னைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் அநுசரிக்க நம்மைத் தூண்டுவதினாலும், சகல கற்பனைக ளும் அதை அ... ய் நமக்கு உதவுகிறதினாலும், ...கட்டளைகளெல்லாம் தேவசிநேகத்தில் அடங்கியிருக்கிறதென்று சொல்லலாம். ஏனென்றால் இந்தக் கற்பனைகளெ...லாம் சுமுத்தி யாய் நிறைவேற்றவும், யா...தாரு கற்பனையை மீறுதபடி உயிரை இழக்கவேண்டியிருந்தால் உயிரை இழக்கவும், தேவசிநேகம் நமக்குத் தைரியமும் பெலனும் அளிக்கும்.

(ரு) தேவசிநேகத்தில் மற்றப் புண்ணியங்கள் அடங்கியிருப்பதுபற்றியும், தேவசிநேகம் மற்றப் புண்ணியங்களை விளைவிக்கிறதுபற்றியும், தேவசிநேகமென்கி... புண்ணியம் சாங்கோபாங்கத்தின் சங்க்ஷேபம் என்னப்படும். பாவசங்கீர்த்தனம் பண்ணக்கூடாத சமயத்தில் மனதிலே உத்தம தேவசிநேக முயற்சி செய்வது பாவப்பொறுத்தலை அடைவதற்குப் போதும். இந்த முயற்சியிலே உத்தம மனஸ்தாபம் அடங்கியிருக்கிறது.

2. அதன் அவ...யம்:—இப்போது வெளியிட்டதைக்கொண்டு தேவசிநேகம் எவ்வளவு அவசரமென்று கண்டுபிடிக்கலாம். "அபிரகாம்



என்பவருக்கு இருந்த விசுவாசமும், பிதாப்பிதாக்களிடத்தில் விளங்கிய நம்பிக்கையும், புதுமை செய்யும் வரமும், இ...ரீத்துசாந்துவின் கொடைகள் யாவும் ஒருவனிடம் இருந்தபோதிலும், தேவசிநேகம் ஒன்று மாத்திரம் இல்லாவிட்டால், சகலமும் வீண். "மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசமெல்லாம் உடையவனாயிருந்தாலும், என்னிடத்தில் தேவசிநேகமில்லாவிட்டால், நான் ஒன்றுமில்லை"—என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். (I. கொரிந்தி. XIII. 2.) தேவசிநேகமின்றி மோட்சம் சேர முடியாது. ஆத்துமம் செத்த பிணத்துக்கு ஒப்பாயிருக்கும். அது நித்திய சம்பாவனைக்குரிய கிரியை எதுவும் செய்யக்கூடாது. தேவசிநேகம் ஆத்துமத்துக்கு ஞான சீவியமாயிருப்பதால், அது நமக்கு எவ்வளவோ அவசரமானது!

3. சர்வேசுரனைச் சிநேகிக்கும் விதமேது?—

நமதாண்டவர் தாமே அவ்விதமென்னவென்று காட்டியிருக்கிறார். "உன் சர்வேசுரனாகிய கர்த்தாவை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு புத்தியோடும், உன் முழு பலத்தோடும் சிநேகிப்பாயாக"

(மாற். XII. 30) என்ற ஆண்டவருடைய வாக்கியமே சிநேகிக்கும் விதத்தைக் விளக்குகிறது. "இதுவே முதன்மையான கற்பனை."

(க) இருதயமே சிநேகிக்கிறதற்கு அர்த்தமென்னவென்றால், மனிதனிடத்திலிருக்கும் மனது என்கிற உள்ளிந்திரியந்தான். சர்வேசுரன் சகலத்துக்குமுன் நமது மனதைத் தமக்குக்கொடுக்கும்படி கேட்கிறார். மனிதனிடத்தில் அது பிரதான காரியமானதைப்பற்றி, மனதைச் சர்வேசுரனுக்குக் கையளித்தால், சகலத்தையும் கையளித்தாற்போலாயிற்று. மனதைவிட்டு மற்றெல்லாத்தையும் கொடுத்தாலும், நாம் அவருக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லை. அதினாலே நம்மில் ஒவ்வொருவனையும் பார்த்து, "மகனே, உன் இருதயத்தைக் கொடு" என்று திருவுளம்பற்றுகிறார். நமது மனச்சுயாதீன நாட்டங்களையெல்லாம் அவருடைய திருச்சித்தத்தோடே ஒன்றிக்கவேணுமென்று இக்கற்பனையின் மூலமாக அறிவிக்கிறார்.

(உ) மனுஷனிடத்தில் உணர்வும் கீழாங்கிஷமும் உண்டு. அதில் ரூபிகரமும் ஆசாபாசங்களும் சேர்ந்திருக்கின்றன. இவைகளையும் தமக்குக் கையளிக்கும்படிக்குத்தான், "முழு ஆத்



துமத்தோடும் நம்மைச் சிநேகிப்பாயாக" என்று கற்பிக்கிறார். ஆத்துமமும் மனுஷ சரீரத்துக்கு உயிராயிருக்கிறது. தேவசிநேகம் அழிந்துபோகாதபடிக்கு, நமது உயிரை முதலாய்க் கொடுக்கவேண்டியது.

(ங) மனுஷனுக்குப் புத்தி உண்டு. முழுப்புத்தியோடும் அவனைச் சிநேகிக்கவேண்டுமென்று கட்டளையிடும்போது, பகுத்தறிவையும், ஞானத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்தவேண்டுமென்று கற்பிக்கிறார். ஆகையினாலே நமது விசுவாசம், நினைவு, எண்ணங்கள், தீர்மானங்கள் ஆகிய இவைகளையெல்லாம் அவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்துவிடவேண்டியது.

(ச) முழு பலத்தோடும் சர்வேசுரனைச் சிநேகிக்கிறதெப்படியென்றால், தேவமகிமை ஊழியத்தைச் சேர்ந்த எவ்வித வேலை பிரயாசத்திற்கும் பின்வாங்காமல், நமது ஆத்துமத்தின் சத்துவங்களையும், சரீரத்தின் வலிமையுமெல்லாம் அவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய ஊழியத்திலே செலவழிக்கிறதாகும்.

4. தேவசிநேகக் கற்பனையை அநுசரிப்பதற்கான படிகள் எத்தனை? மூன்று படிகளுண்டு. அவையாவன:—

முதல்படி:—எந்தக் கற்பனையையும் மீறி ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதைவிட, ஆஸ்திபாஸ்தியெல்லாம் இழக்கவும், சகல ஆக்கினை வாதைகளையும் அநுபவிக்கவும், உயிரை முதலாய்க் கொடுக்கவும், தயாராயிருப்பதில் அடங்கியிருக்கிறது. மோட்சம் அடைய விரும்புகிற சகலருக்கும் இது முழுதும் அவசரம். இதற்காக வேதசாட்சிகள் எல்லாரும் தங்கள் உயிரைப் பலியாக்கினார்கள். இதுக்குச் சம்பாவனை மோட்சமானதினால், இந்த முதல் படியே எவ்வளவு உத்தமமான படி என்று கண்டு பிடிக்கலாம்.

இரண்டாம்படி:—மனது பொருந்தி ஓர் அற்பப்பாவம் கட்டிக் கொள்வதைவிட, அவசரமானால், சகல வாதைகளையும் அநுபவிக்கவும், ஆஸ்திபாஸ்தியை இழக்கவும், உயிரைக்கொடுக்கவும் தயாராயிருப்பதாம். இது முதல் படியைப் பார்க்க அதிக உத்தமமான அந்தஸ்து.

மூன்றாம்படி:—பாவத்தை விலக்குவதில் மாத்திரம் நோக்கமாயிராமல், புண்ணிய முயற்சிகளிலும் சர்வேசுரனுக்கு எது அதிக பிரியமாயிருக்குமோ அதைத் தேடிச்செய்கிறது மூன்றாம் படியாம். இந்த ஸ்திதியிலிருப்பவன், சர்வேசுரனுக்குப் பிரியமில்லாத யாதொன்றைச் செய்வதைவிட பற்பல துன்பங்களை அநுபவிக்கவும், ஆஸ்திபாஸ்தியை இழக்கவும், தன் உயிரைக் கொடுக்க வேண்டுமானால் கொடுக்கவும், மனங் கொண்டிருப்பான். இது புண்ணிய சாங்கோபாங்கருக்கு உரியது. இது எல்லாத்திலும் உத்தமமானது.



5. தேவசிநேகக் கட்டளை கற்பிக்கிறதென்ன?

(க) எந்தப் பொருளையும் சர்வேசுரனுக்கு விரோதமாகவானாலும், அவரைச் சிநேகிக்கிற அளவாகவென்கிலும், அவருக்கு மேலாகவென்கிலும் சிநேகிக்கக் கூடாதென்பது தேவகற்பனை. அச்சிநேகம் சாவானபாவங் கட்டிக்கொள்ளாமலிருக்கிற முதல்படி துவக்கி, உன்னதமான சாங்கோபாங்கமாகிற மூன்றாம்படிமட்டும் நம்மைக் கொண்டுபோகும். தேவசிநேகம் இப்போது சொன்ன அளவுக்குள்ளே கொஞ்சமாயிருந்தாலும் சரி, அதிகமாயிருந்தாலும் சரி, அது எப்போதும் உத்தம தேவசிநேகமாகும்.

(உ) உத்தம சிநேகத்துக்கு வெளி அடையாளம் அவசரமா?

சர்வேசுரனை மேலான விதமாய் நமது புத்தியினாலே மதித்து, மனதைக்கொண்டு சிநேகிப்பதால், தேவசிநேகத்துக்கு அத்தியாவசிய

மான காரியம். வெளியே ஒன்றும் தோன்றாததினாலும், இருதயத்தில் நேசத்தின் உருக்கத்தை உணராததினாலும், உத்தம சிநேகமில்லை என்று சிலர் விசாரப்படுகிறதுண்டு. நமது ஐம்புலன்களிலும் தேகாங்கிஷத்திலும் சிநேகத்தை உணரவேண்டுமென்பது அவசரமில்லை. சிநேகத்துக்கு இருப்பிடம் மனதேயொழிய ஐம்புலன்களல்ல. ஆதலால் உத்தம சிநேகம் உண்டோ இல்லையோ என்று அறிய புத்தியை மாத்திரம் ஆராய்ந்து பார்க்கவேண்டியது.

தனது தாய் தகப்பனின் மரணத்துக்காக அழுது பிரலாபிக்கிறவன், சர்வேசுரனுக்கு விரோதமாய் தான் கட்டிக்கொண்ட பாவங்களுக்காகச் சிறிதும் கண்ணீர் சிந்தாமலிருக்கலாம். இதினால் அவன் சர்வேசுரனைவிட தாய் தகப்பனை அதிகமாய் மதிக்கிறானென்றும், தேவசிநேகத்தைப் போக்கடிக்கிறதைவிட சகலத்தையும் இழக்க அவன் ஆயத்தமாயிருக்கிறதில்லை என்றும் சொல்லமுடியாது.

உருக்கமான பக்தி பற்றுதல் மனதிலே உணருகிறது சிலவிசை அதிக சிநேகத்தின் அடையாளமாகலாம். ஆயினும் இந்தப் பற்றுதல்கள் மாத்திரம் அதற்கு போதுமான அத்தாட்சியல்ல. சுய சிநேகத்தினாலும், சுபாவ சுத்தியினா



லும், கபடமாய்த் தன்னை மறைத்துக்கொண்டு சம்மனசுபோல பிரகாசிக்கும் பசாசினாலும் முதலாய், வெளியில் தோன்றும் அவ்வுணர்ச்சிகள் உண்டாகக்கூடும். ஆதலால் தேவகற்பனைகளையெல்லாம் சரியாய் அநுசரிப்பதே, நாம் சர்வேசுரனைச் சகலத்தையும் பார்க்க அதிகமாய்ச் சிநேகிக்கிறோமென்பதற்கு தப்பாத அடையாளம்.

6 உத்தம தேவசிநேகம் அல்லாமல் அதைவிடக் குறைந்த தேவசிநேகம் உண்டா?

எந்த முகாந்தரத்தினாலே சர்வேசுரனைச் சிநேகிக்கிறோம் என்று விசாரித்தால், உத்தம தேவசிநேகமல்லாமல் சுய பட்சத்தோடே சேர்ந்த தேவசிநேகமும் உண்டென்று அறியக்கூடும். சிநேகிதனுடைய நன்மையை மாத்திரம் கோருகிற நேசம் உத்தம சிநேகமும், தன்னுடைய நன்மையை நாடுகிற நேசம் குறைவுள்ள சிநேகமுமாகும். இதினாலே சிநேகத்திலே இரண்டு வகை உண்டு.

(க) சர்வேசுரன் சர்வ நன்மை சுரூபியாயிருக்கிறதினால், அவருடைய அளவில்லாத இலட்சணங்களுக்காக அவரைச் சிநேகிக்கிறது உத்தம சிநேகம். இந்தச் சிநேகமுள்ளவன் சர்வேசுரனிடத்திலிருக்கிற மட்டற்ற நன்மைகளைப்பார்த்து சந்தோ

வித்து அக்களிக்கிறதுமன்றி, அவருக்குச் சகல மகிமை தோத்திரமும் வரவேணுமென்று ஆசிக்கிறான். தனக்குத் தானே இவ்வித சிநேக முயற்சியால் பேறுபலன் கிடைக்குமென்று அறிந்தாலும், இந்தப் பிரயோசனத்தைத் தேடிப் பாராமல், சர்வேசுரனுடைய நன்மையை முதன்மையாகக் கவனிக்கிறான்.

(௨) சுயபட்சத்தோடு சேர்ந்த தேவசிநேகத்தில் அப்படியல்ல.

சர்வேசுரன் நமக்குச் செய்த உபகாரங்களுக்காகவும், இனிமேல் அவர் நமக்கு அளிக்கப்போகிற ஆனந்த பாக்கியத்துக்காகவும் அவரைச் சிநேகிக்கிறோம். இப்பேர்ப்பட்ட முகாந்தரத்தினாலே சர்வேசுரனைச் சிநேகிக்கிறது சுய பட்சமுள்ள சிநேகம் அல்லது குறைவுள்ள சிநேகமென்று சொல்லவேணும்.

(௩) இப்படி நமக்கு நன்மை வருமென்கிறதுக்காக சர்வேசுரனைச் சிநேகிக்கிறது குற்றமென்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். அது சரியல்ல. ஏனெனில் இந்தச் சிநேகமும் சர்வேசுரனுக்குப் பிரியமுள்ள புண்ணியமே. நாம் பெற்றிருக்கும் உபகாரங்களுக்காக நன்றியறிந்த தோத்திரம் பண்ண வேண்டுமென்றும், சர்வேசுரன் மோட்ச பாக்கியத்தை நமக்குத் தருவாரென்று



உறுதியாய் நம்பவேணுமென்றும், அவரே கட்டளையிட்டிருக்கிறார்.

(௪) சுயபட்சத்தோடு சேர்ந்த சிநேகம் இரட்சணியத்தை அடையப்போதுமா? போதாது. உத்தம சிநேக முயற்சியும் சமயாசமயத்தில் செய்யவேண்டியது. எல்லாத்தையும் பார்க்க சர்வேசுரனை அவருடைய நன்மைத்தனத்துக்காகச் சிநேகிக்க வேண்டும். அதினாலே நம்மைவிட அவரை அதிகமாய்ச் சிநேகித்து, அவசரமிருந்தால் அவருக்காக நமது உயிரை முதலாய்க் கொடுப்பது கடமை.

தேவசிநேக முயற்சி செய்யும்போது, சர்வேசுரனுடைய அளவில்லாத நன்மைத்தனமே முக்கியமான முகாந்தரமும், நமக்கு வருகிற பிரயோசனம் கீழ்ப்பட்ட முகாந்தரமுமாய் இருக்கும்படி பிரயாசப்படுவோமாக. நம்முடைய பிரயோசனத்தை முக்கியமாய்க் கருதி தேவசிநேக முயற்சி செய்தால், பாவசங்கீர்த்தனத்தில் அல்லாமல் சாவான பாவத்துக்குப் பொறுத்தல் அடையமாட்டோம். பாவசங்கீர்த்தனம் செய்யாதபோது, உத்தம சிநேகமுயற்சியினாலே மாத்திரம் சாவான பாவத்துக்குப் பொறுத்தல் பெற்றுக்கொள்ளலாம்.

(ரு) நமக்கு வருகிற உபகாரங்கள் தேவ கிருபையினாலே கிடைத்தது என்று நன்றியறிதலோடே எண்ணி, நமது பிரயோசனத்தை அவ்வளவு கவனிக்காமல், சர்வேசுரனைக் குறித்து மாத்திரம் இந்த நன்மைகளை மேன்மையாய் மதித்து அவைகளின்பேரில் பிரியப்படுவோமானால், அதுவும் உத்தம சிநேக மென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால் இப்படிச் செய்கிறவன் உபகாரங்களைப் பிரதானமாய்ச் சிநேகிக்காமல், இவைகளுக்கு ஊற்றாயிருக்கிற கிருபை தயாபமுள்ள சர்வேசுரனைத் தானே எல்லாத்தையும் பார்க்கச் சிநேகிக்கிறானென்று ஒத்துக்கொள்ள வேண்டியது.

7. தேவசிநேக முயற்சி செய்யவேண்டியதின் பேரில்.

(க) சகல கிறீஸ்துவர்களும் உத்தம தேவசிநேக முயற்சி சமயா சமயங்களில் செய்ய வேண்டுமென்று கற்பித்திருக்கிறதினாலே, அது அர்ச்சியசிஷ்டவர்களாலே மாத்திரம் ஆகும் காரியம் என்றும், மற்றவர்களாலே கூடாத காரியமென்றும் எண்ணப்படாது. அதிக பத்தி சுறுசுறுப்பில்லாதவர்கள் முதலாய் இந்தத் தேவசிநேக முயற்சி செய்யவேண்டியது.

உன்னதமான சிநேக முயற்சிகளை வழக்கமாய்ச் செய்கிறது அர்ச்சியசிஷ்டவர்களுக்



குரிய செய்கையாகும். ஆனால் நாம் விளக்கிக் காட்டிய முதல் படியைச் சேர்ந்த தேவசிநேக முயற்சியோ வென்றால், தேவ வரப்பிரசாத உதவியைக் கொண்டு, சகல கிறீஸ்துவர்களும் செய்யக்கூடிய காரியம். சர்வேசுரன் அந்த வரப்பிரசாதத்தை சகலருக்கும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். ஆகையினாலே இவ்வித உத்தம தேவசிநேக முயற்சி தினந்தோறும், அடிக்கடி செய்து, ஒவ்வொரு கிரியையும் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகப் பண்ண முயலுவோமாக.

(உ) தேவசிநேகக் கற்பனையை நிறைவேற்றப் பலவிதமுண்டு.

தேவ இலட்சணங்களைத் தியானித்து மகிழ்ந்து சர்வேசுரனை ஸ்துதிப்பதும், சகலரும் அவரை அறியவும் சிநேகிக்கவும் வேணுமென்று ஆசைப்படுவதும், உத்தம தேவசிநேக முயற்சியே. பரமண்டல மந்திரத்தில் "உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது இராச்சியம் வருக, உமது சித்தம் நிறைவேறக் கடவதாக" என்று ஒவ்வொரு மன்றாட்டையும் முழு மனதோடே சொல்லும்போது, உத்தம தேவசிநேக முயற்சியாகும். தேவ மகிமை மேன்மேலும் பரம்பும்படியாகவும், தேவ கற்பனைகளை மற்றவர்கள் சுமுத்திரையாய் அநுசரிக்கும்படி

யாகவும், பாவிகள் அஞ்ஞானிகள் மனந்திரும்பவும், விசுவாசிகள் வேதத்தில் பிரமாணிக்கமாயிருக்கவும் பிரயத்தனப்படும்போதெல்லாம், அவ்வித தேவசிநேக முயற்சியைச் செய்கிறோமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. இன்னமும் சர்வேசுரனுக்குத் துரோகம் செய்ததினாலே நாம் மனம் நொந்து துக்கித்திருக்கிறதும் தேவசிநேக முயற்சி தான். இப்பேர்ப்பட்ட முயற்சிகளால், சகலத்துக்கும் மேலாக தேவ தோத்திரத்தை நாடுவதினாலே, அவைகளெல்லாம் உத்தமமான தேவசிநேக முயற்சிகளாமே.

(ங) யாராவது நிர்ப்பாக்கியமாய் சாவானபாவத்தில் விழுந்து, இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்திருப்பானாகில், பாவசங்கீர்த்தனம் பண்ண சமயம் நேரிடுமட்டும், அப்பேர்ப்பட்ட அந்தஸ்தில் இருக்கப்படாது. தான் செய்த பாவத்தினால் சர்வேசுரனை நிந்தித்ததற்காக உடனே மனஸ்தாபப்பட்டு முன்சொன்ன உத்தம தேவசிநேக முயற்சிகளில் ஒன்றுசெய்து, பாவப்பொறுத்தல் அடைந்துகொள்ளவேண்டும். பாவத்தில் தவறி விழுந்தவுடனே உருக்கமான செபஞ்செய்து, [illegible] இஷ்டப்பிரசாதத்தைச் சர்வேசுரனிடம் மன்றாடிப் பெற்றுக்கொள்ளுவது நல்ல கிறீஸ்துவர்களுக்குரிய வழக்கம்.



8. தேவசிநேகத்துக்கு விரோதமான பாவங்களெவை?

(க) தேவபகை:— சர்வேசுரனுக்குப் பொல்லாங்கு செய்து, அவரை நிர்மூலம் பண்ணவும் ஆசைப்படுகிறது, தேவசிநேகத்துக்கு விரோதமான மகா பெரிய பாதகம். இந்தத் தேவபகை, பசாசுகளுக்கும் நரகத்தில் விழுந்து கிடக்கிறவர்களுக்கும் உரிய பாவம்.

(உ) சர்வேசுரன் மட்டில் அருவருப்பு.—தேவசிநேகத்தைக் காப்பதற்குப் படவேண்டிய வருத்தத்துக்கு அஞ்சி, மனஞ்சலித்து, சோம்பலினாலே சர்வேசுரனை வெறுப்பது பாவம்.

(ங) தேவ கற்பனைகளில் இன்னின்ன காரியங்கள் விலக்கியிருக்கிறதென்பதைக் கவனியாமல், மனதுபொருந்தி சர்வேசுரனுக்கு மேலாக ஓர் பொருளைச் சிநேகிப்பது தேவசிநேகத்துக்கு விரோதமான பாவமாயிருக்கும்.

(ச) இப்போது சொன்ன தேவசிநேகத்துக்கு விரோதமான பாவங்கள் அல்லாமல், சகல சாவான பாவங்களும் தேவ சிநேகமாகிய இஷ்டப்பிரசாதத்தை ஆத்துமத்தில் அழிக்கிறதினாலே, ஓர் வகையில் அவைகளும் தேவ சிநே

கத்துக்கு ஒவ்வாத பாவங்களென்று சொல்ல லாம்.

## II. பிறர் சிநேகத்தின் பேரில்.

பரிசேயர் சேசுநாதர்சுவாமியை நோக்கி, பிரதான கற்பனை யேதென்று கேட்க, திவ்விய கர்த்தர் "எல்லாத்தையும்பார்க்க சர்வேசுரனைச் சிநேகிக்கவேண்டும்" என்று சொன்னபிற்பாடு, "இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை யென்னவென்றால், பிறரை உன்னைப்போல சிநேகிப்பாயாக" என்று திருவுளம்பற்றினார். (மத். XXII-39) "இந்த இரண்டு கற்பனைகளில் தேவ கட்டளைகளெல்லாம் அடங்கியிருக்கின்றன."

### 1. பிறர் சிநேகமாவதென்ன?

நாம் நம்மைச் சிநேகிக்கிறதுபோல, சர்வேசுரனுக்காக மற்றவர்களைச் சிநேகிப்பதே பிறர் சிநேகமாம். சர்வேசுரனையே பிரதானமாகவும், முக்கியமாகவும் சிநேகிக்க வேண்டுமென்பது உள்ளதுதான். அதற்குப் பிறகு அவர் நிமித்தமாக பிறரைச் சிநேகிப்பது தேவ கட்டளையானபடியால், அதுவும் நமது கடமையாமே. நமது சிநேகத்துக்குக் காரணம் ஒன்று மாத்திரம் உண்டு; அது சர்வேசுரன்தான். ஆனால்



நாம் சிநேகிக்க வேண்டிய பொருட்கள் இரண்டு உண்டு; சர்வேசுரனும் புறத்தியாருமாம். ஆதலால் சர்வேசுரனிமித்தம் பிறரைச் சிநேகிக்க வேணும். எப்படிச் சிநேகிக்க வேண்டுமென்றால், "உன்னைப்போல், பிறரைச் சிநேகிப்பாயாக" என்று ஆண்டவர் கற்பித்திருக்கிறார்.

### 2. பிறரைச் சிநேகிப்பதற்கான முகாந்திரங்களேவை?

(க) சர்வேசுரன் பிறரைச் சிநேகிக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்திருக்கிறபடியால், வேறெந்த முகாந்தரமில்லாவிட்டாலும், இந்த முகாந்தரமே போதும்.

(உ) மேலும், நாம் சர்வேசுரனைச் சிநேகித்தால், சர்வேசுரனுக்குச் சொந்தமானதையும் அவராலே சிநேகிக்கப்பட்டவர்களையும் சிநேகிப்பது ஞாயமல்லோ? பிறரை, அவர்களின் சற்குணத்துக்காகவும், சாமர்த்தியத்துக்காகவும், அவர்கள் நமக்குச் செய்யும் நன்மைக்காகவும் மாத்திரம் சிநேகியாமல், முக்கியமாய் சர்வேசுரன் அவர்களை மிகவும் சிநேகிக்கிறதினால், நாமும் சிநேகிக்கக் கடவோம்.

(ந) அவர்களும் நம்மைப்போல சர்வேசுரனால் தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டு, ஒரே

தகப்பனுடைய பிள்ளைகளாயிருப்பதினாலும், சேசுநாதர் திரு இரத்தத்தினாலே அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறதினாலும், அவர்கள் நமது சகோதரராய் நம்மோடுகூட ஓர்நாள் மோட்சபாக்கியம் அநுபவிக்க வேண்டியவர்களா யிருக்கிறதினாலும், அவர்களைச் சிநேகிக்கக்கடவோம். இந்த முகாந்தரங்களினிமித்தம் நம்து எதிராளிகளைமுதலாய்ச் சிநேகிக்கிறது ஞாயம்.

(௪) தேவசிநேகத்துக்குக் காரணம் ஆத்துமத்தில் விளங்கும் தேவ சாயலானதால், புத்தியற்ற சிருஷ்டிகளைத் தேவ சிநேகத்தைப்பற்றிச் சிநேகிக்க முடியாது. அவைகளின்பேரில் ஓர்வித சுபாவ பட்சமாத்திரம் வைக்கலாமேயொழிய, அவைகளைத் தேவசிநேகத்தினால் சிநேகிக்கக்கூடாது.

3. பிறரைச் சிநேகிப்பதெப்படி?

நம்மைப்போல பிறரைச் சிநேகிக்கவேண்டும் என்னும் தேவ கற்பனைக்கு அர்த்தம் ஏதென்றால், நம்மை நாம் சிநேகிக்கிற அளவே பிறரைச் சிநேகிக்கவேண்டுமென்று அல்ல, ஆனால் நம்மை நாம் சிநேகிக்கிறவிதமே பிறரையும் சிநேகிக்க வேணுமென்று அர்த்தமாம். ஆகையால் நாம் பிறரைச் சிநேகிக்கவேண்டிய அளவு



வேறே, அவர்களைச் சிநேகிக்கவேண்டியவிதம் வேறே.

சிநேகத்தின் அளவைப்பற்றி.

(௧) சர்வேசுரனை எல்லாத்தையும் பார்க்கச் சிநேகிக்கிறது நமது கடமையானதினாலே, நமந்து மேலாக அவரைச் சிநேகிக்கவேணுமென்பதற்கு ஆட்சேபனையில்லை.

(௨) ஆனால் ஞான விஷயத்தில் பிறரைப் பார்க்க நம்மைத்தாமே அதிகமாய்ச் சிநேகித்து, பிறருடைய இரட்சணியத்துக்குமுன் நம்முடைய இரட்சணியத்தைத் தேடவேணும். அப்படியே மற்றொருவன் நரகத்திலே விழாதபடி தடுக்க, நாம் ஒரு அற்பப்பாவமு[illegible] கட்டிக்கொள்ளக் கூடாது.

(௩) எந்த அளவாக நாம் பிறரைச் சிநேகிக்கவேணுமென்று கேட்டால், நாம் பிறரைச் சிநேகிக்க வேண்டியது சர்வேசுரனுக்காக என்று கவனிக்கவேண்டும். சர்வேசுரன்பேரி[illegible] நமக்கிருக்கத்தக்க சிநேகத்துக்கு மட்டு அளவு [illegible]ன்பது கிடையாததினாலே, அவரைக்குறித்து [illegible] பிறருக்கு நம்மால் கூடுமான எவ்வித நன்மையும் செய்து, அவர்களுக்காக வருந்தி உழைத்து, உயிரைமுதலாய்க் கொடுக்கிறதற்கு சர்வேசுரன்பேரி

னுள்ள சிநேகம் நம்மைத் தூண்டுமென்பது நிச்சயம். ஆனால் இந்த அறிவு எல்லாரிடத்திலும் அவசியமாய் இருக்கவேண்டியதில்லை. பிறர் சிநேகத்துக்கு விரோதமான சாவான[illegible] பற்றுதல் யாவும் இருதயத்திலிருந்து களைந்து நீக்குவதே கட்டாயம். ஆகையால் பிறருக்குப் பொல்லாங்கு வரவேணுமென்று ஆசிப்பதும், செய்வதும், அவர்களோடே பகையாயிருப்பதும், இவை முதலியவைகள் பாவமாயிருக்கிறபடியால், இவைகளை முழுதும் விலக்கவேண்டியது.

4. நாம் பிறனை எவ்விதமாகச் சிநேகிக்கவேணும்?

(க) நம்மை நாம் சிநேகிக்கிற விதமாகவே, பிறனையும் சிநேகிக்கவேணும். அதாவது: நமக்காக நாம் ஆசிக்கிற நன்மையைப் பிறருக்குப் பெறுவிக்கவும், நமக்கு விக்கினமில்லாத பக்ஷத்தில் அவர்கள் விரும்புகிற காரியத்தை அடைவதற்கு உதவி செய்யவும், பொல்லாப்பினின்று அவர்களைக் காப்பாற்றவும், தயாராயிருக்கவேணுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது.

(உ) ஆஸ்திபாஸ்தியைவிட கீர்த்தியும், கீர்த்தியைவிட ஞான நன்மைகளும் மேலானவைகளாயிருக்கிறபடியால், இவைகளுக்குள்ளே மே



லான நன்மையொன்று பிறருக்கு அவசரமாயிருக்கும்போது நாம் கீழான நன்மையை இழக்கவேண்டியிருந்தால், இழப்பது தேவ ஒழுங்கு. ஆகையாலே பிறருடைய ஆத்தும ஈடேற்றத்துக்கு வேறேயாதொரு வழியுமில்லையானால், நமக்குள்ள இலௌகீக நன்மைகளையெல்லாம் கொடுப்பது கடமை.

(௩) ஆனால் யாதோரு இலௌகீக நன்மை பிறருக்கு எவ்வளவு அவசரமோ, அவ்வளவு நமக்கும் அவசரமாயிருக்கும்போது, நமது வருத்தத்தை முந்திக் கவனிக்கிறதில் ஒரு குற்றங்குறையுமில்லையென்றாலும், இப்பேர்ப்பட்ட சமயத்தில் நம்மை மறந்து பிறருடைய அவசரத்தைக் கவனிக்கிறது பிறர்சிநேகக் கிரியையாயிருக்கிறதுமன்றி, தேவசிநேகத்துக்கான உத்தமமுயற்சியாகிறது.

(ச) ஆகிலும், அவசரமாயிருக்கும்போது, பிறர் இரட்சணியத்துக்காக நம்முடைய சொத்துக்களை இழக்கமாத்திரமல்ல, உயிரை முதலாய்க் கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டியது.

5. நமது உயிர்ச்சேதத்தைக் கவனியாது ஞானஸ்நானம் முதலிய ஞான நன்மைகளைப் பிறருக்குக் கொடுக்க எப்போது கடனுண்டு?

க-வது. இந்தத் தேவதிரவிய அருமையாம் ஒருவனுடைய ஆத்தும ஈடேற்றத்துக்கு அவசரமாயிருக்க, நாம் அதைச் சரியாய் நிறைவேற்றக்கூடுமென்று நம்பிக்கை இருக்கவேண்டியது.

உ-வது. அதைச் செய்யாததினாலே, ஞானப் பொல்லாப்பு நமக்காவது வேறொருவனுக்காவது வருமென்று நிச்சயமாய் இருக்கவேண்டியது.

ங-வது. இந்த உதவி செய்யக்கூடியவன் நம்மைத்தவிர வேறொருவருமில்லாதிருக்கவேண்டியது.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் தன் உயிரைக் கொடுத்து, ஒத்தாசை செய்பவன் மகா உத்தமமான பிறர்சிநேகக் கிரியையை நிறைவேற்றுவதால், இவன் மோட்சத்துக்கு நேரே செல்லுவானென்பதற்குச் சந்தேகமில்லை.

6. பிறர் சிநேகத்தின் குணநலங்களேவை ?

(க) முதலாவது.—பிறர் சிநேகம் மனதுக்குள்ளே யிருக்கவேண்டியது. அப்படி யில்லாவிட்டால் அது வெளிப்பார்வைக்கு மாத்திரம் பிறர் சிநேகமாயிருக்குமே யல்லாமல் மெய்யான பிறர்



சிநேகமாகாது.—ஆனால் இந்தச் சிநேகத்தை இருதயத்தில் உருக்கமாய் உணரவேண்டுமென்பது அவசியமல்ல. இன்னமும் சுபாவ அருவருப்பிருந்துகூட முதலாய், பிறர்சிநேகம் மனதில் குடிகொண்டிருக்கலாம். ஆகிலும் மனதானது சுபாவ அருவருப்பை அடக்கி ஆளும்படி பிரயாசப்படவேண்டியது.

(உ) இரண்டாவது.—நமது சிநேகம் சுபாவத்தைக் கடந்து மேற்பட்டிருக்கவேணும். பிறர் மோட்சம் அடையும்பொருட்டு, வேண்டிய ஞானநன்மைகளையும், இலௌகீக நன்மைகளையும், கூடுமான அளவு நாம் அவர்களுக்குச் சேகரித்து, பட்சத்துடன் கொடுக்கவும். அவர்களுடைய ஆத்துமத்துக்குக் கெடுதல் வருவிக்காமல், எப்போதும் நல்ல மாதிரி காண்பித்து, அவர்கள் ஒரு பாவமுஞ் செய்யாதபடி கூடிய பிரயாசப்பட்டு, அவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டியது.

மூன்றாவது.—சிநேகத்தைக் கிரியையினால் காண்பிக்கவேண்டும். வார்த்தையினாலல்லாமல் கிரியையினாலும் தக்க சமயத்தில் பிறருக்கு நன்மை செய்யும்படி தயாராயிருக்க வேண்டுமென்று அர்ச். அருளப்பர் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

நான்காவது.—பொதுவானதாயிருக்கவேண்டும். சர்வேசுரனிடமிருந்து பிறர்சிநேகம் வருகிறதினாலேயும், சர்வேசுரனைக்குறித்துப் பிறரைச் சிநேகிக்கவேண்டியிருக்கிறதினாலேயும், ஒவ்வாத பாரபட்சமில்லாமல் எல்லாரையும் சாதாரணமான நேசத்துடன் சிநேகிக்கிறது கடமை. ஆனபோதிலும், தேவ கற்பனைப்படி நமது தாய் தந்தையரையும், சகோதரர், உறவின்முறையார், உபகாரிகள் முதலியவர்களையும் விசேஷ சிநேகத்தோடு சிநேகிக்கவேண்டியது. இப்படியே யாதொரு பெரும் அபாயம் நேரிடும்போது, எல்லாருக்குமுன் நமது பெற்றோரையும், பிறகு சிநேகிதரையும், அதற்குப்பின் நாட்டாரையும், கடைசியாய் அன்னியரையும் மதித்து, அதற்குத்தக்கதுபோல, அவரவர்களுக்கு உதவி செய்யத்தகும். யாதொருவன் தன் அசட்டைத்தனத்தால் பெற்றோர் உறவின்முறையார் தக்க சமயத்தில் கடைசித் தேவதிரவிய அநுமானங்கள் பெறாமல் சாகும்படி விட்டால், அவன் கட்டிக்கொள்ளுகிற பிறசிநேகத்துக்கு விரோதமான பாவத்தின் கனம் எப்பேர்ப்பட்டதென்று மேலே சொன்னதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

(உ) பிறர்சிநேகத்தின் கற்பனையை அநுசரிப்பது அவ்வளவு சுலபமல்லவென்பது மெய்தான். நாம்



படவேண்டிய பிரயாசையும் கொஞ்சமல்ல. ஆனால் நாம் படுகிற அவ்வருத்தம் பிறர் குற்றங்களிலிருந்து அவ்வளவாய் வராமல், நமது விசுவாசக் குறைச்சலினால்தான் முக்கியமாய் உண்டாகிறது.

அவர்கள் குணங்களைப்பற்றியும், அவர்கள் உபகாரங்களைப்பற்றியும் நாம் சிநேகிக்கிறது சுபாவத்துக்குரிய நேசம். சுய சிநேகம் நம்மிடம் பூரணமாய்க் குடிகொண்டிருப்பதால், நமது நலம் எதுவோ, அதை மாத்திரம் தேடி, சர்வேசுரனுக்காக — சிநேகிக்கவேண்டுமென்பதை மறந்துபோகிறோம். ஆகையினாலே பிறர் சிநேகத்தின் கற்பனை நமது மனதில் ஊன்றி நிலை பெறவேணுமென்று நமக்கு ஆசை இருந்தால், அச்சத்தியத்தை நன்றாய்த் தியானித்து, இருதயத்தில் ஆழமாய்ப் பதியும்படி செய்து, சுய சிநேகத்தை வேர்ப்பிடுங்கப் பிடுங்கக் கடவோம்.

7. பகைவரைச் சிநேகித்தலின் பேரில்.

பிறர்சிநேகக் கற்பனைப்பிரகாரம் சகலரையும் சிநேகிக்கவேண்டுமென்பது நிச்சயம். ஆகையினாலே பகைவரையும் சிநேகிக்கிறது அவசரமே. ஆனால் அவர்களை விசேஷவிதமாய்ச் சிநேகிக்க

வேணுமென்று கட்டளை நமக்குக் கிடையாது. அப்பேர்ப்பட்ட கட்டளை இல்லாவிட்டாலும், அப்படிச் செய்வது உத்தமமான பிறர்சிநேகமாகும்.

முதலாவது.—சர்வேசுரனுக்காகப் பகைவனைச் சிநேகிக்கவேண்டியது.—சர்வேசுரன் நமது சிநேகத்துக்குக் காரணமானதால், நமது சிநேகத்துக்குப் பாத்திரமில்லாதவர்களை முதலாய் அவரைக்குறித்து சிநேகிக்கவேண்டியிருக்கிறது. பிறரைச் சிநேகியாதிருக்க, சர்வேசுரனைச் சிநேகிக்கிறதாக எண்ணுகிறவன் மோசம் போகிறான். தேவசிநேகமும் பிறர்சிநேகமும் ஒன்றாயிருக்கிறதினாலே, பிறரைப் பகைக்கிறவன் சர்வேசுரனையும் பகைக்கிறான் என்பதற்குச் சந்தேகமில்லை.

சேசுநாதர்சுவாமிதாமே அவருக்கு எதிராளிகளாயிருந்த நமக்காக மரித்து, தம்மைக் கொலைப்படுத்தினவர்களுக்காகப் பொறுத்தல் கேட்டு, நமக்கு நன்மாதிரி காட்டியிருக்கிறார். "எங்கள் கடன்காரர்களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே, எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்," என்று முழுமனதோடே நாம் சொல்லும்போது உத்தமபிறர்சிநேக முயற்சி செய்கிறோம். இருதயத்தில் தானாய் எழும்புகிற



சுபாவமான அருவருப்பு, காய்மகாரம் முதலிய பிறசிநேகத்துக்கு விரோதமான நினைவுகள் பாவமல்ல என்று கவனிக்கவேண்டியது. பாவமாகிறதற்குச் சம்மதம் அவசரம். பிறருக்குச் சாவு கேடு வரவேண்டுமென்று நினைவு வந்தால், இதைத் தள்ளிப்போடுகிறது புண்ணியமாகும். இந்த நினைவுகளுக்கு மனம்பொருந்தி வெளி அடையாளம் காட்டக்கூடாது.

இரண்டாவது.—முழுமனதோடே எதிரிகளுக்குப் பொறுத்தல் கொடுக்கவேண்டுமென்பது தேவசிநேகத்தின் கற்பனை. ஆகையால் அவர்கள்மேல் சந்தேகங்கொள்வதும், அவர்களைப் பழிவாங்க ஆசிப்பதும், செபங்களில் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளமாட்டேனென்று தள்ளி வைப்பதும், தேவசிநேகத்துக்குப் பொருந்தாது. அன்றியும் அவர்களுக்கு யாதொரு அவசரமான சமயம் நேரிட்டால், அந்தருணத்தில் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராயிருக்கவேணும்.

ஆயினும், பிறர் நமக்கு ஏதேனும் [illegible]சாந்து கடன் முதலியவை கொடுக்கவேண்டியிருந்தால், மனதிலே கொஞ்சமும் பகை வையாமல், நியாயம் கிடைக்கும்படி, பிரியாது முதலிய தக்க முயற்சிகள்

நீதிப்பிரகாரம் செய்கிறது பிறர்சிநேகத்துக்கு விரோதமல்ல.— என் பகையாளிக்கு நான் யாதொரு பொல்லாங்கு நினைக்கிறதில்லை, நன்மையும் நினைக்கிறதில்லையென்று சிலர் சொல்லுவார்களாக்கும். இது அஞ்ஞானிகளுக்குப் போதுமாயினும், சுவிசேஷக் கற்பனை அநுசரிக்கிற நமக்குப் போதாது. பொல்லாங்கு நினைக்காதிருக்கிறதுமன்றி, தன்னைச்சிநேகிக்குமாப்போலே, மற்றவர்களையும் சிநேகிக்கவேண்டியது.

மூன்றவது.-பகைவர்களென்று அவர்களுக்கு அவசங்கை செய்யாமலிருக்கிறதுந்தவிர, எல்லருக்கும் செய்கிற சாதாரண சங்கை அவர்களுக்குஞ் செய்து, அவர்களுடன் பேசவும் வேண்டியது.— பிறரோடு சகவாசஞ் செய்தால், பிறர்சிநேகத்துக்கு விரோதமான குற்றம் நேரிடுமென்று நினைப்பதற்கான முகாந்திரம் இருக்கும்போது மாத்திரம் பேசாமலிருக்கலாம். வருத்தத்தினாலே வேண்டிய மரியாதை எப்போதெப்போது செய்யத் தவறுவோமோ அப்போதெல்லாம் பாவங் கட்டிக்கொள்ளுகிறோமென்பது தப்பாது. காரிய விசேஷத்துக்குத் தக்கது போல, பாவத்தின் கனமும் ஒருவேளை குறையும், ஒருவேளை அதிகரிக்கும். ஆனால் அதிக



பட்சமுள்ள சிலபேருக்குச் செய்யும் விசேஷ சங்கை ஆசாரம் எதிரிக்குஞ் செய்யச் சொல்லுகிறதாக எண்ணவேண்டாம். இப்படிச் செய்தால், மகா புண்ணியமாகும்; ஆனால் அது அவசரமில்லை.

நான்காவது.—பகைவரோடு சமாதானமாயிருக்க வேண்டுமென்பது பிறர்சிநேகக் கற்பனை.—பகைவர் நம்மோடு சமாதானம் பண்ணிக்கொள்ள வருகிறதாகக் கேட்டு, அதை வேண்டாமென்று தள்ளினால், பாவங் கட்டிக்கொள்ளுகிறோம். மேலும் நாமே அவர்களோடு சமாதானமாயிருப்பதற்கான முயற்சி செய்யவேண்டுமென்பதும் தேவ கற்பனை. பிறர் நமக்குச்செய்த குற்றங்களை நாம் பொறுக்காவிட்டால், சர்வேசுரன் நமது பாவங்களைப் பொறுக்கமாட்டார்.

8. பிறர்சிநேகத்துக்கு விரோதமான பாவங்களின் பேரில்.—சண்டை, சச்சரவு, பகை, பழி வாங்குதல், அநியாய நஷ்டம் வருவித்தல், கோள் குண்டணி, காய்மகாரம், துர்மாதிரிகை முதலியவைகள் பிறர்சிநேகத்துக்கு விரோதமான பாவங்கள்.

9. தர்மக்கிரியைகளின் பேரில்.

வார்த்தையினால் மாத்திரமல்ல, கிரியையினா

லேயும் பிறர்சிநேகத்தைக் காட்டவேண்டியது. "என் பிள்ளைகளே, நம்முடைய சிநேகம் வார்த்தையிலும் நாவிலும் இராமல், கிரியையிலும் உண்மையிலும் இருக்கவேண்டியது" அர்ச். அருளப்பர் எழுதியிருக்கிறார். (1. அரு. III. 18.) நாம் புறத்தியார் சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் செய்யக்கூடிய தர்மக்கிரியைகளைப்பற்றி சர்வேசுரன் நடுத்தீர்வையில் விசேஷ கணக்குக் கேட்பார்:—இந்தத் தர்மக் கிரியைகளைச் செய்தவர்களைப் பார்த்து: "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! வாருங்கள். உலகமுண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் பசியாயிருந்தபோது, எனக்குப் போசனம் கொடுத்தீர்கள். தாகமாயிருந்தபோது, எனக்குப் பானங் கொடுத்தீர்கள். பரதேசியாயிருந்தபோது, எனக்கு விடுதி கொடுத்தீர்கள்..." என்று திருவுளம்பற்றுவார். தர்மக்கிரியைகளை அநுசரியாதவர்களுக்கோவெனில் கண்டிப்பான தீர்வையிட்டு, "சபிக்கப்பட்டவர்களே! என்னை விட்டு அகன்று, பசாசுக்கும் அதன் தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.



ஏனெனில், நான் பசியாயிருந்தபோது, நீங்கள் எனக்குப் போசனம் கொடுக்கவில்லை. தாகமாயிருந்தபோது, எனக்குப் பானங் கொடுக்கவி[illegible] பரதேசியாயிருந்தபோது, நீங்கள் எனக்கு விடுதி கொடுக்கவில்லை" என்பார். (மத். XXV. 34-45.)

ஆத்துமத்துக்கடுத்த தர்மக்கிரியைகள், சரீரத்துக்கடுத்த தர்மக்கிரியைகள் ஆக இருவகை உண்டு.

### சரீரத்துக்கடுத்த தர்மக்கிரியைகள் ஏழு.

க-வது. பசித்திருக்கிறவர்களுக்குப் போசனம் கொடுக்கிறது.

உ-வது. தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறது.

ங-வது. வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கிறது.

ச-வது. பரதேசிகளுக்குத் தன் வீட்டில் இடங் கொடுக்கிறது.

ரு-வது. காவலிலே இருக்கிறவர்களையும், வியாதிக்காரரையும் சந்திக்கிறது.

சா-வது. அடிமைப்பட்டவர்களை மீட்கிறது.

எ-வது. மரித்தவர்களை எடுத்து அடக்கம் பண்ணுகிறது.

ஆத்துமத்துக்கடுத்த தர்மக்கிரியைகள் ஏழு.

க-வது. சந்தேகப்படுகிறவர்களுக்குப் புத்தி சொல்லுகிறது.

உ-வது. வேதசத்தியங்களை அறியாதவர்களுக்குப் படிப்பிக்கிறது.

ந-வது. பாவிகளை மனந்திருப்புகிறது.

ச-வது. கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறது.

ரு-வது. நிந்தைகளை மன்னிக்கிறது.

சா-வது. பொல்லாப்புகளைப் பொறுமையோடு அநுபவிக்கிறது.

எ-வது. சீவியர்களுக்காகவும் மரித்தவர்களுக்காகவும் சர்வேசுரனை மன்றாடுகிறது.

## 10. பிறனைத் திருத்துகிறதின் பேரில்.

பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காக நாம் வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், அவர்கள் குற்றங்களைத் திருத்தவும், பாவங்களை விட்டு அவர்களை மனந்திருப்பவும் நம்மாலான பிரயாசப்படக்கடவோம். ஆனால் புறத்தியாரைத் திருத்துகிறதற்குத் தக்க திறமை இல்லாதவனும், அதில் தான் படும் பிரயாசை முழுதும் வீணாய்ப்போகுமென்றும், அதினால் கேடு நஷ்டம் நேரிடுமென்றும் அறிகிறவனும், இந்தக்



கடமையைச் செலுத்தாமல் விட்டுவிட்டால் பாவமில்லை. தாய் தகப்பன் முதலிய பெரியோர்கள் எப்போதும் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் திருத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## 11. தர்மத்தின் பேரில்.

பிறருடைய ஆத்துமத்துக்கு மாத்திரமல்ல, சரீரத்துக்கும் உதவி செய்ய நமதுமேல் கடனுண்டு.

(க) தான தர்மஞ் செய்யவேணுமென்கிற கட்டளையை மீறுவது சில சமயங்களில் சாவானபாவமாயுமிருக்கலாம். மிகவும் வருந்துகிற ஏழைகளுக்கு உதவி செய்யாதவர்கள் நரகத்துக்குப் போவார்களென்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருப்பதே அதற்கு அத்தாட்சி.

(உ) கொடுக்கவேண்டியதென்ன? பிறர் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு அவசரமான பணம், ஆகாரம் முதலியது கொடுத்து உதவவேணும். சில சமயங்களில் ஏழைகளை ஆதரிக்கும்படி தக்க வழிப்பாடுகளைக் காட்டவும், ஆலோசனை சொல்லவும், பற்பல வேலைகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவும் கடனுண்டு. அப்படியே வைத்தியன் இக்கட்டுப்படு

கிற ஏழை வியாதியஸ்தருக்குத் தர்மமாய் மரு ந்து கொடுக்கவேண்டும்.

(௩) தர்மமாகக் கொடுக்கக்கூடிய பொருட்கள் எத்தனை வகைப்படும்?—மூன்று வகைப்படும். சில பொருட்கள் தன் உயிரையும், தன் குடும் பத்தின் உயிரையும் காப்பாற்ற முழுதும் அவ சரமாகும்.—வேறு சில, தன் அந்தஸ்துக்குத் தக்கதுபோல ஊரோடு ஒத்து வாழும்படிக்கும், ஊழியக்காரரை வைத்துச் சவரட்சணை செய் யும்படிக்கும் அவசரம்.—அதற்கு மேற்பட்ட பொருளானது அவசரமில்லாததினால், மிஞ்சின பொருள் என்று சொல்லத்தகும்.

(௪) கடின வறுமைப்பட்டு, உயிரைக் காப்பாற்ற மிகவும் வருந்துகிற ஏழைகளுக்கு மிதமிஞ்சின பொருள் உள்ளவர்கள் உதவி செய்யக் கட மைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்பேர்ப் பட்ட நிர்ப்பாக்கியமான ஏழைகளுக்கு உதவி செய்யும்படி, வீண் செலவுகளையெல்லாம் ஒடு க்கி, தங்கள் அந்தஸ்துக்கு யோக்கியமான செ லவு மாத்திரம் செய்யவேண்டியது. முக்கிய மாய் தேசமெங்கும் பஞ்சம் படை நோய் முத லிய பெரும் பொல்லாங்குகளிருக்கும்போது, இந்தக் கட்டளையை நிறைவேற்றுகிறது ஓர் விசேஷ கடமை.



(௫) பிச்சைக்காரர், வேலை சம்பாதிக்கக்கூடா வர்கள், வியாதிக்காரர் முதலியவர்கள் பிழைப்புக் குக் கொஞ்சம் வருத்தப்பட்டாலும், அவ்வளவு கடின வறுமைப்படுகிறதில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். தங்கள் அந்தஸ்துக்குவேண் டிய பொருளுக்குமேல் மிஞ்சின சொத்துள்ள வர்கள் மாத்திரம் இப்பேர்ப்பட்டவர்களுக்குத் தர்மஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மிதமிஞ்சின பொருள்களையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று எண்ணவேண்டாம். தன் குடும்பத்தின் அந்தஸ்தை மேன்மைப்படுத் தவும், இனி வரக்கூடும் பொல்லாங்கை நிவ ர்த்திபண்ணவும், வேண்டியவைகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் எந்தப் பிச்சைக்காரன் வந்தாலும் சரிதான், ஒருவனுக்கும் தர்மங்கொ டுக்கமாட்டேனென்று மிதமிஞ்சின பொருளு ள்ள ஐசுவரியவான் ஒருவன் தீர்மானம்பண்ணி, எல்லாம் தனக்காக வைத்துக்கொண்டால், அவன் பாவப்பொருத்தல் அடையப் பாத்திர வானல்ல.

(௬) தகப்பனுடைய அதிகாரத்துக்குள்ளிருக்கும் பிள்ளைகளுக்குச் சொந்தப்பொருள் கிடையாது. ஆகையினாலே அவர்கள் தங்கள் இஷ்டப்பிரியம்போல

தர்மஞ்செய்யலாகாது. அவ்வித அந்தஸ்திலேயே சன்னியாசிமாரும் கன்னியாஸ்திரிமாரும் இருக்கிறதினாலே, அவர்களும் ஒன்றும் கொடுக்கமுடியாது. ஆனால் சிரேஷ்டர்கள் தங்கள் மனதுப்படி செலவுபண்ணக்கூடாதானாலும், தர்மம் கொஞ்சமாவது செய்யாதிருக்கப்படாது.

(எ) யாராவது மிகத் தரித்திரவான்களாகி சாகிறதறுவாயில் இருப்பார்களானால், அவர்களுக்கு உதவிசெய்வது ஒவ்வொருவர்பேரிலும் சுமந்த கனமான கடன். நம்மைவிட அதிகமாய் உதவிசெய்யக்கூடியவர்கள் தர்மம் செய்யாதபட்சத்தில், மிதமிஞ்சினபொருள் நமது கைவசம் இல்லாதேபோனாலும், நமது அந்தஸ்துக்கு வேண்டிய பொருளைக்கொண்டு அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும். அவர்கள் நம்மிடம் பிச்சை இரந்து கேட்காவிட்டாலும், நமது பொருளைப்பார்க்க அவர்கள் உயிர் மேலானதாயிருப்பதால், அவர்களுக்கு உதவிசெய்து உயிரைக் காப்பாற்றவேண்டும்.

(அ) அவசியமானவைகள் நமக்கும் பிறருக்கும் ஓரே அளவாய் வேண்டியிருந்தால், பிறருக்கு நமது பொருளைக் கொடுப்பது கடனல்லவென்றாலும், பிறர்சிநேகத்துக்காகத் தன் உயிரைக்கொடுப்



பது மேலான தர்மம் என்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறதினால், அப்போது உதவிசெய்வது மகா பெரிய புண்ணியமாகும்.

12. தர்மத்தினால் வரும் நன்மைகளென்ன?

(க) ஞானநன்மைகள்.—பிறர் சிநேகத்துக்கு விரோதமான குற்றங்களை நீக்குவதுமாத்திரம் போதாது. இந்தப் புண்ணியம் சேசுநாதர் சுவாமிக்கு வெகு பிரியமாயிருக்கிறபடியால், இதற்குரிய நற்கிருத்தியங்களை அடிக்கடி நிறைவேற்றவேண்டும். இப்படிச் செய்தால், சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களும் தேவ ஆசீர்வாதமும் நமக்கு ஏராளமாய்க் கிடைக்கும். தர்மக்கிரியைகளைச் செய்வதினால், நமது பாவங்களின்மேல் மெய்யான மனஸ்தாபமும் பாவப் பொறுத்தலும் [illegible]டையலாம். சம்மனசானவர் தோபியாசைப்பார்த்து, தர்மம் "ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சிக்கும், பாவங்களை நிவர்த்திபண்ணும், தேவ கிருபையையும், நித்திய சீவியத்தையும் வருவிக்கும்" என்று சொன்னார். (தோபி. XII. 9.)

(உ) லௌகீக நன்மைகள்.—அர்ச். கிறீசோஸ்தமுஸ் வசனித்ததாவது: "ஆஸ்திக்காரனாவதற்கு உத்தம வழி, தர்மம் செய்வதே. என்

வளவுக்கு நாம் சர்வேசுரனுக்குக் கொடுப்போமோ, அவ்வளவுக்கு அவரும் நமக்குக் கொடுத்தருளுவார்." தர்மம் கொடுப்பதைப்பற்றி வேதபாரகர் ஒருவர், "கை நீட்டுகிறது ஏழைகள், அதை வாங்குவதோ சர்வேசுரன்" என்று உரைத்தார்.

(ங) ஆனபடியால் தோபியாசு தன் மகனுக்குச் சொன்னதுபோல, நம்மாலானமட்டும் தர்மம் பண்ணுவோமாக. "உன் அந்தஸ்துக்குத் தக்காப்போல், நீ எவர்கள்மேலும் இரங்கிக் கிருபையாயிருக்கவேண்டும். உனக்கு மிகுதியான சொத்து இருக்கையில் ஏராளமாய்க் கொடு; கொஞ்ச மாத்திரம் உனக்கு இருந்தால் கொஞ்சம் கொடு. ஆனால் கொடுப்பதை நன் மனதோடு [illegible] கவனித்துக்கொள்." (தோபியாஸ் IV. 8, 9.)

---

## VI. நன்னடக்கைக்குரிய புண்ணியங்களின் பேரில்.

1. நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்களாவதென்ன?

நாம் கிரமமாய் ஜீவிக்கும்படி நமது கிரியைகளைச் சீர்ப்படுத்துகிற புண்ணியங்கள் நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்களாகும். சுபாவத்துக்கடுத்த ஒழுங்கென்றும் சுபாவத்துக்கு மேற்பட்ட ஒழுங்கென்றும், இரண்டு ஒழுங்குகளிருப்பதால், நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்கள் சுபாவ புண்ணியங்களென்றும் மேலான புண்ணியங்களென்றும் இரண்டுவகைப்படும்.



(க) நன்னடக்கைக்கடுத்த சுபாவ புண்ணியங்கள். மனிதனைத் தன் புத்திக்கொத்தபிரகாரம் கிரமமாய் ஜீவிக்கும்படி ஏகித்து ஆண்டுவருகிற சர்வேசுரன் சகல மனிதருக்கும் அளித்திருக்கிற இயல்பான புத்தியையும் தத்துவத்தையுங் கொண்டு, இப்புண்ணியங்களைச் சம்பாதிக்கவும் அதிகரிக்கச்செய்யவும் நம்மால் கூடும். ஆதலால் இந்தப் புண்ணியங்கள் அஞ்ஞானிகளிடத்திலும் பாவிகளிடத்திலும் இருக்கலாமென்பது தெளிவாய் விளங்குகிறது.

நன்னடக்கைக்கடுத்த மேலான புண்ணியங்கள் விசுவாசத்தினால் பிரகாசிக்கப்பட்ட புத்தியைக் கொண்டு மனிதனை நடப்பித்து வருகின்றன. இவைகளின் வழியாக உலோக காரியங்கள் எல்லாம் மோக்ஷத்தை அடைவதற்கு உதவக் கூடும்.

(உ) நன்னடக்கைக்குரிய புண்ணியங்களைக்கொண்டு நாம் மோக்ஷ கதி பெறுவதற்கு, அவைகள் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்படவேண்டும்.

சுபாவ புண்ணிய முயற்சிகளால் மோக்ஷத்தை அடையக்கூடாததினால், சர்வேசுரன் நமக்கு இஷ்டப்பிரசாதத்தை அளிக்கையில் தேவசம்பந்தமான புண்ணியங்களைக் கொடுக்கிறதுமன்றி, நன்னடக்கைக்கு அடுத்த புண்ணியங்களையெல்லாம் சுபாவத்துக்கு மேலான அந்தஸ்தில் அளித்தருளுகிறார். அப்படியே ஓர் பிரிவியானவன் பாவப்பொறுத்தல் அடைந்தவுடனே, அவனிடத்திலிருந்த சுபாவமான புண்ணியங்கள் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவதோடுகூட, மற்றனேகவேறான புண்ணியங்கள் யாவும் கைக்கொள்ளுகிறான்.

(கூ) நன்னடக்கைக்கடுத்த சுபாவ புண்ணியத்திற்கும் மேலான புண்ணியத்திற்கும் வித்தியாசமுண்டோ? நன்னடக்கைக்கடுத்த புண்ணியம் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்படுமுன்னும், உயர்த்தப்பட்டபின்னும், அதே நன்மையை நாடி, கைக்கொண்டு, தன் கிரியையைச் செய்துவருகிறது. அப்படியே மட்டசனமென்னப்படும் புண்ணியம் சுபாவ அந்தஸ்திலும் மேலான அந்தஸ்திலும் சரீர ஆசாபாசங்களைப் புத்திக்குக் கீழ்ப்படியச் செய்து, சாப்பாட்டிலும் சுக சந்தோஷத்திலும், மிதமிஞ்சாதபடி காக்கிறது.



ஆயினும் நன்னடக்கைக்கடுத்த சுபாவ புண்ணியத்துக்கும் மேலான புண்ணியத்துக்கும் வேறு விஷயங்களில் வெகு வித்தியாசமுண்டு. ஒன்று சுபாவ சக்தியைக்கொண்டும், மற்றொன்று தேவ இஷ்டப்பிரசாதத்தால் வரும் மேலான சக்தியைக்கொண்டும் தனக்குரிய நற்கிரியைகளைச் செய்கிறது. ஒன்று உலக நன்மைகளையும் மற்றொன்று மோக்ஷபாக்கியத்தையும் கருதுகிறது. ஒன்று மனிதபுத்தியின் வெளிச்சத்தாலும், மற்றொன்று தேவ விசுவாசத்தின் பிரகாசத்தாலும் எல்லாம் நடப்பித்துவருகிறது. ஒன்று நமது சொந்தப் பிரயாசத்தினாலும், மற்றொன்று சர்வேசுரனுடைய செயலினாலும் நமது ஆத்துமத்தில் நிலைமையான நற்குணமாகக் குடிகொண்டிருக்கிறது.

2. மூல நன்னடக்கைக்குரிய புண்ணியங்களு
நம் மூலகாரணமான புண்ணியங்களேத்தனை?
நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்கள் அநேக
மாயினும், இவைகள் நாலு பிரதான புண்ணிய
ங்களில் அடங்கும். இவையாவன: விவேகம்,
மனத்திடம், நீதி, மட்டசன மென்பனவாம்.
நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்கள் யாவற்
றுக்கும் இந்நான்குமே ஊற்றுப்போலிருக்கின்
றன. அதெப்படியென்றால், இப்புண்ணியங்

கள் புத்தியிலே வெளிச்சத்தையும், மனதிலே நேர்மையையும் பிறப்பித்து, கோபத்தையும் ஆசாபாசங்களையும் அடக்கி, நமது ஆத்தும சரீரக் கிரியைகளைச் செவ்வையாய் சீர்படுத்தும். புண்ணிய முயற்சிகள் செய்வதற்குள்ள விக்கினம் யாவையும் விலக்குவதுமன்றி, அவைகளைச் செய்வதற்கும் ஏதுகரமாயிருப்பதால், நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்கள் யாவும் இந்நான்கில் அடங்கியிருக்கிறதென்றோம்.

---

## VII. விவேகத்தின்பேரில்.

1. விவேகமாகிறதென்ன?—நம்முடைய கிரியைகள் உத்தமமானவைகளாயிருக்கும்படி, நாம் செய்யவேண்டியது யாதென்றும், அவைகளை எப்படிச் செய்யவேண்டுமென்றும், எக்கிரியைகளைச் செய்யப்படாதென்றும், நமக்கு வெளிப்படுத்துவதே, நன்னடக்கைக்கடுத்த புண்ணியமாகிற விவேகமென்னப்படும். கண்ணானது சரீரத்துக்கும், சூரியன் உலகத்துக்கும் பிரகாசந் தருவதுபோல, இப்புண்ணியமும் நமது புத்தியின் அந்தகாரத்தை நீக்கி, நல்வழியைக் காண்பிப்பதுடன், நன்னடக்கைக்கடுத்த புண்ணியங்கள் யாவற்றுக்கும் பிரகாசந்தரும்.



நற்கிரியை செய்வதற்கான நேரம், இடம், ஒழுங்கு முதலியவற்றை நமது புத்திக்குக்காட்டும். மெய்யான விவேகம் கிறீஸ்துவர்களுக்குரிய விவேகமே. அது விசுவாசத்துக்கும் சுவிசேஷ சத்தியங்களுக்கும் ஒத்தவண்ணம் நமது கிரியைகளைச் செவ்வே நடப்பித்து, சர்வேசுரனையும் நமது கடைசி முடிவையும் நோக்கிச் செல்லும்படி செய்கிறது.—பொய்யான விவேகமோ வெனில் இதர மனிதர்களுக்குரியது. அது தப்பறையான உலக ஆசாரப்படி அவர்களை நடப்பித்து, அழிந்துபோகிற பிரபஞ்ச நன்மைகளைத் தேடுவிக்கிறது.

2. விவேகத்தைச் சார்ந்த புண்ணியங்களாவன: ஞானமுடையோர்களின் புத்திமதிக்கு அமைதல், முன்பின் யோசனை, ஜாக்கிரதை, பேச்சில் எச்சரிக்கை, அடக்கவொடுக்கம், இரகசியம் காத்தலில் பிரமாணிக்கம் முதலியன.

3. விவேகத்துக்கு விரோதமான துற்குணங்களாவன:—தன் கிரியைகளில் கிரமம், மட்டுத்திட்டம், ஒழுபாடு முதலியவைகளைக் கவனியாதிருத்தலும், இலௌகீக காரியங்களை நாடி ஞானகாரியங்களைச் சற்றேனும் சட்டைபண்ணாதிருத்தலுமாம்.

---

# VIII. நீதியின்பேரில்.

கிறீஸ்துவ புண்ணியங்கள் சகலமும் அடங்கிய அர்ச்சியசிஷ்டதனத்தைப் பலமுறை நீதியென்று சொல்லுகிறதுண்டு. இங்கே நீதி [illegible]கிற வார்த்தைக்கு இந்தப் பொது அர்த்தமில்லை. அதற்குரிய விசேஷ அர்த்தத்தில் மாத்திரம் உபயோகிக்கிறோம்.

1. நன்னடக்கைக்கடுத்த நீதி என்கிற புண்ணியமாவதேன்ன? ஒவ்வொருவனுக்குச் சேரவேண்டியதை அவனவனுக்குச் செலுத்துவது நீதி என்னப்படும். அப்படியே:

(க) சர்வேசுரன்மட்டில்; சிருஷ்டிக்கப்பட்டவன் சிருஷ்டிகருக்குரிய தேவ ஆராதனை செலுத்தி அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது அவசரம்.

(உ) பெரியோர்கள்மட்டில், வணக்கம், மனக்கீழ்ப்படிதல், வெளிக்கீழ்ப்படிதல் காட்டுகிறதுமன்றி, பெற்றோர்மட்டில் விசேஷ சிநேகத்தையும் மனதிலே கொண்டிருக்கவேண்டியது.

(௩) தனக்குச் சரிசமானமானவர்களுக்கு, பிறர் சிநேகக் கடன்களைச் செலுத்தி, அவர்களுக்



குத் தக்ககாலத்தில் புத்திமதிசொல்லி உதவி புரியவேண்டும்.

(௪) தனக்குக் கீழ்ப்பட்டவர்களைப் பராமரித்து பிறர்சிநேகத்துடன் கண்டித்து, பக்ஷம் காண்பிக்க[illegible]வேண்டியது.

(௫) தன்னிடமிருந்து, மனிதனுடைய மகிமையோடு ஒவ்வாதவைகள் [illegible]ம் தள்ளி, த[illegible] அந்தஸ்துக்குரிய புண்ணியங்களைச் செய்து தன்னிரட்சணியத்துக்கு வேண்டிய முயற்சி பண்ணவேண்டியது.

(௬) நீதியென்னும் புண்ணியத்தினிமித்தம், சில சமயத்தில் பொதுநன்மைக்காக நமது சுய நன்மையை இழந்துவிடவேண்டியிருக்கலாம்.

மேலும், இப்புண்[illegible] பிறத்தியாருடைய சரீரத்துக்கும், கீர்த்தி, ஆஸ்தி, பொருள் முதலியவைகளுக்கும் சேதம் வருவிக்காமலிருப்பதுடன், வாங்கின கடனை உத்தரிக்கவும், செய்த ஒப்பந்தங்களை அநுசரிக்கவும் பண்ணும்.

2. நீதியைச் சார்ந்த புண்ணியங்களாவன:— சிநேகபந்தனம், கீழ்ப்படிதல், நன்றியறிதல், தபசு, உண்மை, தேவ பக்தி முதலியவைகள். தேவ [illegible]ராதனைக்கடுத்த தேவபக்தி, அ[illegible] இது [illegible]லத்துக்கும் ஆதி காரண புண்ணியம்.

ராகிய சர்வேசுரனுக்குச் சேரவேண்டிய ஊழியம், வணக்கம், சிரவணம், முதலியவற்றை செலுத்தும்படி செய்கிறது. ஆதலால், இது நீதியென்கிற புண்ணியத்தைச் சார்ந்தது. கடவுளை ஆராதிக்கிறது நீதி நியாயமும், சுமந்த கடமையுமாயிருக்கிறதென்று நமது சுபாவ புத்தியே தெளிவாய்க் காட்டுகிறது. ஆகையால், சர்வேசுரன் தேவ சம்பந்தமான புண்ணியங்களை அறிவிக்கவேண்டியிருந்தது போல், தேவ பக்தியென்கிற புண்ணியத்தை விசேஷ விதமாய் வெளிப்படுத்த அவசரமில்லை. இதினிமித்தம் தேவ பக்தி தேவசம்பந்தமான புண்ணியமல்ல, ஆனால் நன்னடக்கைக்கடுத்த புண்ணியமே. ஆயினும், இப்புண்ணியத்துக்குரிய நற்கிரியைகளினால் யாதொரு இலௌகிக நன்மையைத் தேடாமல், சர்வேசுரனுடைய மகிமையை மாத்திரம் நாம் தேடுகிறதினால், நல்ல ஒழுக்கத்துக்கடுத்த புண்ணியங்களுக்குள்ளே இது அதியுத்தம புண்ணியமாகும்.

3. நீதிக்கு விரோதமான துர்க்குணங்களாவன:— அநியாயம், களவு, தேவதுரோகம், தூஷணம் முதலியவைகளும், புறத்தியார் பொருளுக்கு ஆசைப்படுவதும், காய்மகாரம், சண்டை, சச்சரவு, வர்மம் முதலியவைகளுமே. ஆதலால்



நீதியென்கிற புண்ணியம் அமரிக்கைக்கும் சமாதானத்துக்கும் அஸ்திவாரம். நீதியற்ற ஊரும் இராட்சியமும் அழிந்துபோகுமென்பது வேத வாக்கியம்.

## IX. திடத்தின்பேரில்.

**1. நன்னடக்கைக்கடுத்த திடமென்கிற புண்ணியமாவதென்ன?**

நாம் நன்மை செய்கிறதற்கு விக்கினமாக நேரிடும் கஸ்தி துன்ப வருத்தங்களை மேற்கொள்ளப்பண்ணுகிற புண்ணியமே திடமென்னப்படும். இத்திடமானது நமது ஆத்தும ஈடேற்றத்துக்கு அவசியமான சமயத்தில், வேத சாட்சிகளைப்போலே நமது உயிரை முதலாய்க் கொடுக்கத் துணிவு தரும். நிந்தை, அவமானம், கோள் குண்டணி, வியாதி, வருத்தங்கள், நோக்காடுகளெல்லாம் சர்வேசுரனுக்காகச் சந்தோஷமாய் அநுபவிக்கச் செய்கிறது, இத் திடமென்கிற புண்ணியந்தான்.

**2. திடத்தைச் சார்ந்த புண்ணியங்களாவன:—**

மேன்மையான கிரியைகளைச் செய்வதில் உண்டாகும் துணிவு, தைரியம், பொறுமை, நிலைமை, ஊக்கம் முதலியவைகளாம்.

3. திடத்துக்கு விரோதமான துற்குணங்கள் :— மிஞ்சின பயமும் மிஞ்சின துணிகரமுமாம். மிஞ்சின பயமுள்ளவன் தன் மனக் கோழைத்தனத்தால் தான் செய்யவேண்டியிருக்கிறதை அதன் வருத்தத்துக்கு பயந்து விட்டுவிடுகிறான். மிஞ்சின துணிகரமுள்ளவனோவெனில் தனக்கு மோசம் வருமென்று நன்றாய் அறிந்திருந்தும், தக்க முகாந்தரமின்றி தன்னை அதற்கு ஆளாக்கிக்கொள்வான்.

---

## X. மட்டசனத்தின்பேரில்.

1. நன்னடக்கைக்கடுத்த மட்டசனமென்கிற புண்ணியமாவதேதென்ன?

சரீர இன்பங்க சந்தோஷமெல்லாம் புத்தி நியாயத்துக்கொத்த பிரகாரம் அநுபவிக்கச் செய்கிறதே மட்டசனமென்னப்படும். இதைக் கொண்டுதான் நமது கீழாங்கிஷத்தை மேலாங்கிஷத்துக்குக் கீழ்ப்படுத்தி, சாப்பிடுகிறதிலும், குடிக்கிறதிலும், இன்னும் மற்றக் கிரியைகளிலும், நமது சீவியத்துக்கு அவசரமானவைகளை மாத்திரம் உபயோகிக்கிறோம். மேலும் நமது அந்தஸ்துக்கும் பிரயோசனமும் யோக்கியமுமானவைகளை கட்டுக்குள் அடக்குகிறது இந்தப் புண்ணியத்தின் வேலையாகிறது.



2. மட்டசனத்தைச்சார்ந்த புண்ணியங்களாவன :— நிதானம், கற்பு, மரியாதை, அடக்க ஒடுக்கம், தாழ்ச்சி, சாந்தம், தயவு முதலியவைகள்.

3. மட்டசனத்துக்கு விரோதமானவைகள் :— போசனப்பிரியம், குடி, ஆங்காரம், கோபமுதலியவைகள். போசனப்பிரியமாகிய பாவத்தின் வழியாக கணக்கற்ற பொல்லாப்புகள் நேரிடுவதினிமித்தம், கிறீஸ்துவர்கள் யாவரும் சரீர ஒறுத்தல் செய்யவேணுமென்று மகாத்துமாக்கள் யாவரும் ஒருவாய்ப்பட உரைத்திருக்கிறார்கள்.

---

ஞானசீவியமே மெய்யான சீவியம்; உலோக சீவியம் புகைபோலும் மின்னல்போலும் நிலையின்றி ஒரு நொடிப்பொழுதில் அழிந்துபோம். உலோக செல்வ சுக பாக்கியங்களெல்லாம் சுகித்து அநுபவித்தாலும், ஞான உயிர் இல்லாவிடின், நாம் நடைப்பிணங்களே.

ஆதலால், ஞான உயிரை நமது ஆத்துமத்திலிருந்து உரிந்து உண்ணும் சாவான பாவத்துக்கே, கரடி, புலி முதலிய காட்டு மிருகங்களுக்கு அஞ்சுவதைவிட அதிசயமாய் அஞ்சி நடக்கவேண்டும். மோக்ஷ சம்பாவனை ஒவ்

வொருவனுடைய ஆத்துமத்தை அலங்கரித்துச் சிறப்பிக்கும் புண்ணியங்களுக்கும் ஒவ்வொருவனுடைய பேறுபலன்களுக்கும் ஒத்தாப்போலிருக்குமாதலின், உயிருள்ள அளவும் சகலவித குற்றங்குறைகளையும் ஒழித்து நீக்கி, நாம் செய்யும் கிரியைகளையெல்லாம் உத்தம விதமாயும் சுத்த கருத்துடனும் நிறைவேற்ற வருந்துவோமாக.

# பொருள் அட்டவணை.



| | பொருள். | பக்கம். |
|---|---|---|
| I. | பாவத்தின்பேரில் ... ... ... | 1 |
| II. | தேவப்பிரசாதத்தின்பேரில் ... ... | 53 |
| | தேவ அநுக்கிரகப்பிரசாதம் ... | 62 |
| | தேவ இஷ்டப்பிரசாதம் ... ... | 73 |
| | பேறுபலன்கள் ... ... ... | 105 |
| III. | தேவதிரவிய அநுமானங்களின்பேரில்... | 120 |
| IV. | ஞானஸ்நானம் ... ... ... | 161 |
| V. | உறுதிபூசுதல் ... ... ... | 183 |
| VI. | தேவநற்கருணை ... ... ... | 191 |
| VII. | திவ்விய பூசை ... ... ... | 223 |
| VIII. | பச்சாத்தாபம் ... ... ... | 253 |
| | திருச்சபைப் பலன்கள் ... ... | 314 |
| IX. | அவஸ்தைபூசுதல் ... ... ... | 322 |
| X. | குருத்துவம் ... ... ... | 333 |
| XI. | மெய்விவாகம் ... ... ... | 364 |
| XII. | தேவதிரவிய அநுமானங்களுக்கடுத்த தலைவகள் ... | 388 |
| XIII. | செபத்தின்பேரில் ... ... ... | 415 |
| XIV. | புண்ணியங்களின்பேரில் ... ... | 422 |
| | தேவ சம்பந்தமான புண்ணியங்கள்... | 438 |
| | நன்னடக்கைக்குரிய புண்ணியங்கள். | 504 |

# திருத்தல்.

| பக்கம். | வரி. | திருத்தல். |
|---|---|---|
| 49 | 14 | மட்டசனத்தூக்கு. |
| 50 | 19 | ஆகையால் வேறே மருந்து தேடவேண்டியது, |
| 76 | 17 | அநுக்கிரகப்பிரசாதமானது பாவம் கட்டிக்கொள்ளுவதற்கு ஒத்தாசையாயிருக்கக் கூடாததினாலே, பாவமான கிரியைகளெல்லாம் சுபாவ ஒழுங்கைச் சேர்ந்தவைகளாகும். |
| 83 | 18 | தமது சுபாவத்துக்கும் உட்சீவியத்துக்கும். |
| 90 | 7 | இஷ்டப்பிரசாதமுள்ள |
| 139 | 7 | உண்டாகிறதில்லை. |
| 281 | 2 | பாவசங்கீர்த்தனம். |
| 344 | 15 | பே[illegible]தித்திருக்கிறார். |
| 378 | 16 | பிரியாமையுமாம். |

| பக்கம். | வரி. | திருத்தல். |
| --- | --- | --- |
| 383 | 17 | "இரண்டு தடவை" என்பதற்குப் பதிலாய், பின்வருமாறு வாசிக்கவும்: திருச்சபையின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு, இந்தக் கேள்விகளைப் பிரமாணிக்கமுள்ள ஓர் மனிதனைக் கொண்டு ஒரேவிசை கேட்கிறது போதும். ஆனால் பலதடவை விசாரிக்க விக்கினம் இல்லாவிட்டால், மேற்றிராணியார் பிறர்சிநேகத்தைக் கருதி, இரண்டு மூன்று தடவை கேட்கவேண்டுமென்று தீர்மானிக்கலாம். ஓர் அஞ்ஞானி புருஷன் அநேகம் பெண்பிள்ளைகளைக் கலியாணம் பண்ணியிருப்பானானால், அவர்களுக்குள் ஒருத்தி இவனோடே மனந்திரும்ப ஆசைப்படும்போது, தன் முதல் பெண்சாதியை மாத்திரம் பார்த்து "நீ ஞானஸ்நானம் பெற மனதாயிருக்கிறாயா?" என்று கேட்பது போதும். பெண்சாதி மனந்திரும்பும்போதும், அஞ்ஞானி புருஷன் விஷயத்தில் இப்படியே நடக்கவேண்டியது. இந்தக் கேள்விகள் கேட்கக்கூடாத சமயத்திலே, மேற்றிராணியாரிடத்திலிருந்து உத்தரவு பெறுவது முழுதும் அவசரம். |
| 385 | 4 | குருவிடம். |